உ. Short u, the third vowel, ஒருயிரெழுத்து. 2. One of the demonstrative prefixes, (see அ, and இ) that, this, intermediate, not distant, சுட்டெழுத்திலொன்று—as உக்கொற்றன், that Kotton (who is at a short distance, or is in the middle between two others of the same name). 3. A particle used (1.) in forming the dative case, சாரியை—as அவனுக்கு, to or for him—for அவற்கு (2.) Joined to short monosyllabic verbs ending in mutes—as சொல்லு from சொல், speak—வாரு from வார், gather up. 4. A numeral indicating two, இரண்டெனுமெண்ணின்குறி. 5. A termination of the verbal participle, வினையெச்சவிகுதி—as செய்து, doing.

உக்குறுமை, s. [in grammar.] Abbreviated உ, உகரக்குறுக்கம்.

உங்கு—உங்கே. There, not very distant, the middle between two places.

உங்ஙனம். In this or that place, in this or that manner. (p.)

உது—உஃது, pron. That, this.

உவன், pron. That man, the one who stands near.

உக, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, v. n. [more prop. உவ.] To be glad, to delight, மகிழ. 2. To accept with pleasure, மகிழ்வோடுகொள்ள. 3. To desire, lust for, hanker after, expect, விரும்ப. 4. To be pleased, to get satisfaction, திருத்தியடைய.

உகந்தாவளிக்கும். Who cheerfully tends the cows. (மறைசை.)

உரையாயடியெற்குகந்து. Please to tell me. (தி. 503.)

கைமாறுகவாமல். Not desiring a recompense. (நன்னெறி.)

உகந்தசெய்தி, s. Pleasing intelligence, glad tidings, news.

உகந்தது, s. An acceptable or delightful thing.

உகந்தவன், s. One who is pleased or satisfied. 2. A favorite, one of congenial sentiments.

உகப்பு—உகவை, v. noun. Pleasure, joy, மகிழ்ச்சி.

உகட்டு, s. [improp. for உவட்டு.] Nauseating.

உகப்பு, s. Height, elevation, உயர்ச்சி. (p.)

*உகம், s. Any one of the four Yugas, an age of the world. (See யுகம்.) 2. (p.) End, முடிவு. 3. A pair, a couple, இரண்டு.

உகமுடிந்தாற்போலேபேசுகிறாய். Thou speakest as if the world were at an end.

உகசந்தி, s. The meeting of two Yugas—the end of the preceding and beginning of the following.

உகாந்தம், s. The end of an age, உகமுடிவு. 2. The final deluge, உகப்பிரளயம். 3. (fig.) Excessive rain, wind, sunshine, &c.

உகாந்தகாலம், s. The time when the universal destruction takes place, or the end of a quadruple age.

உகாந்தகாலன்—உகாந்தநாதன், s. Siva, சிவன். 2. Vishnu, விட்டுணு. (p.)

உகாந்தபிரளயம், s. The final destruction at the end of a kalpa.

உகாந்தப்பெருவெள்ளம், s. The final deluge.

உகம், s. The earth, பூமி. 2. (திவா.) Snake, பாம்பு. 3. Day. நாள். (p.)

உகரம், s. The letter உ, ஐந்தாமுயிர். (p.)

உகரக்குறுக்கம், s. The letter உ shortened in sound, குற்றியலுகரம். (p.)

*உகளம், s. A pair, a brace, a couple, இரண்டு. See யுகளம். Wils. p. 686. Yugala. (p.) 2. (Rott.) Friendship, இஷ்டம்.

உகளி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To leap, குதிக்க. 2. To overflow, பரவ. (p.)

திசைநான்குமுகளித்தேறி. (The sea) overflowing its bounds on all sides. (பாரதம்.)

உகளு—உகள், கிறது, உகண்டது, உகளும், உகள. *v. n.* To leap, jump. bound, spring forward, gallop, leap over, frisk, gambol, குதிக்க. 2. To leap—as a frog, பாய. 3. To pass, கடக்க. (*p.*)

வாளைபகட்டினமுகளுந்தண்பனை. The cool (flooded) fields where the varly fish sport. (சைடதம்.)

உகா, *s.* A tree, உகாமரம், Salvadara persica, *L.*

உகாதி, *s.* Argha, அருகன்; [*ex* யுக, *et* ஆதி.] (*p.*)

உகிரம், *s.* The இலாமிச்சை grass, Andropogon muricatum, *L.*

உகிர், *s.* A finger or toe-nail; a talon, a claw, நகம். (*p.*)

உகிர்ச்சுற்று, *s.* A whitlow, felon. See நகச்சுற்று. (*c.*)

உகு, கிறது, ந்தது, ம், உக, *v. n.* To be shaken off, to fall or drop off—as fruits, &c.; to shed feathers, hair; to become separated; to cast off as the nails, &c., உதிர. 2. To be strewed, scattered, poured out, &c., சிந்த. 3. To trickle or fall down—as rain or tears, சொரிய. 4. To be divested of, liberated from, கழல. (*p.*)

நெஞ்சகவாம்மலரன்னகண்ணீர்மல்க. The heart fainting and the lotus-flower like eyes shedding tears.

மஞ்சகவார்ந்தன. The (bells) sounded so load as to cause the clouds to fall.

உள்ளமுடைந்துக்கக்கால். If the heart be broken and utterly fail. (குறள்.)

உயிருக. The soul departing.

உடுத்திரளுதிர்ந்தெனவுகுவதந்தமே. Teeth scattered as if multitudes of stars had fallen.

அங்கணத்துளுக்கவமிழ்து. Delicious food scattered in the mud. (குறள்.)

உகு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To spill, sprinkle, pour down, சிந்த. 2. To discharge, pour out, விட. 3. To shed, cause to fall, drop, உதிர்க்க. (*p.*)

கன்றுகுணிலாக்கனியுகுத்தமாயவன். The mighty Vishnu who beat off wood-apples (from the tree) with a calf, using it as a cudgel.

கண்ணீருகுத்தான். He shed tears.

உகுணம், *s.* A bug, முகட்டுப்பூச்சி. (*p.*)

உகை, கிறது, ந்தது, யும்; ய, *v. n.* To move—as a beast or vehicle with a rider, to be ridden or driven, செல்ல. (*p.*)

உகையுஞ்சிவிகை, *s.* The passing palankeen.

உகை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To drive a carriage, &c., to ride, go on a horse, in a palankeen, &c., to put in motion, செலுத்த. 2. To discharge—as arrows, &c., to cast, throw, அம்புமுதலியவற்றை விட. 3. To urge forward, to incite, எழுப்ப. (*p.*)

உங்கம், *s.* The waist, the middle of the body, மருங்கு. 2. A bull, a bullock, an ox, எருது. 3. A cow, பசு. 4. A large kind of circular fan to grace processions, ஆலவட்டம். 5. Fire, heat, நெருப்பு. 6. A fowl, கோழி. 7. A ball, பந்து. (*p.*)

உக்கம், *s.* (*Tel.* ఉగ్గము.) A rope by which any thing is suspended or carried in the hand, தூக்குக்கயிறு.

உக்கலை, *s.* [*vul.* உக்களை.] The hips, மருங்கின்பக்கம். (சிகண்டு-பிங்.) (*p.*)

உக்கல், *s.* Side, பக்கம். (*p.*)

உக்களம், *s.* Night-watch, சாமக்காவல். 2. Entrenchment about a camp, பாளையஞ்சூழ்கிடங்கு. 3. Advanced guard, தலைக்காவல்.

உக்களம்வைக்க, *inf.* To set a guard.

உக்களவர், *s.* [*prov.*] Those that watch by night.

உக்கா, *s.* (*Hin.*) A Turkish pipe used for smoking கஞ்சா, &c., a hookah, கஞ்சாமுதலியபுகைகுடிக்குங்கருவி.

உக்காரம், *s.* [*improp.* முக்காரம்.] Vomiting, vomition, சத்திபண்ணுகை. 2. Bellowing—as an ox, தொனிப்போடல். (*p.*)

உக்கரிக்க, *inf.* To vomit, வாந்திக்க. 2. To bellow—as an ox, உக்காரம்போட.

உக்காரி, *s.* A species of meal-cake, பிட்டு. (*p.*)

உக்கிடர், *s.* A spider, சிலந்திப்பூச்சி.

*உக்கிரமம், *s.* Anger, wrath, மூர்க்கம். Wils. p. 137. UGRAMA.

நாசியுக்கிரமம், *s.* A disease of the nose.

*உக்கிரம், *s.* Vehemence, ardor, intensity, severity, fervency, fierceness, pungency (of spices, &c.), asperity, harshness, impetuosity, கொடுமை. 2. Wrath, rage, கோபம். 3. The height of a disease, மும்முரம். 4. Ferocity, savageness, மூர்க்கம். Wils. p. 137. UGRA. 5. (*p.*) The front guard, தலைக்காவல்.

உக்கிரகந்தம்—உக்கிரகந்தி, *s.* Garlic, வெள்ளுள்ளி, Allium sativum. Wils. p. 137. UGRAGAND'HA and UGRAGANDIN. 2. Assafœtida, பெருங்காயம். 3. Acorus calamus, வசம்பு. 4. The வேம்பு tree. Azadirachta Indica, *L.* 5. Sugar-cane, கரும்பு, Saccharum officinarum.

உக்கிரகுணம், *s.* Fierceness of disposition.

உக்கிரமது, *s.* Ardent spirits.

உக்கிரமானமருந்து, *s.* Pungent and stimulating medicine.

உக்கிரமானவார்த்தை, *s.* Asperity of language, a harsh expression.

உக்கிரன், *s.* Siva, சிவன். Wils. p. 137. UGRA. 2. Veerapattra, வீரபத்திரன். (*p.*)

உக்கிராணம், *s.* (*Tel.*) A storehouse, a granary, பண்டகசாலை. (*c.*)

உக்கிராணக்காரன், *s.* A steward.

உக்கிராணவிசாரணை, *s.* The management of provisions, stewardship.

*உக்கிருட்டம்—உக்கிருஷ்டம், *s.* [*prop.* உத்கிருஷ்டம்.] Excellence, greatness, மேன்மை. 2. Excessiveness, மிகுதி. Wils. p. 140. UTKRUSHTA.

உக்கு, கிறது, உக்கினது, உக்கும், உக்க, *v. n.* To rot, decay, moulder, perish, உக்கிப்போக. 2. To dread, fear, பயப்பட.

உக்கதலமணியுரகராசநகெடில். If the king of serpents which inhabits the abyss be shocked——

துக்கத்தி னுக்கிப்போனான். He is wasted with grief, he is pining away.

உக்கினமரம், *s.* A worm-eaten tree, or rotten timber.

உக்கல், *s.* [*vul.*] Rottenness, putridity, பதனழிவு. 2. Any thing rotten or perished, உளுத்தது.

உக்குளான், *s* A kind of hare which lives on dried leaves, சருகுமுயல்.

*உங்காரம், *s.* The utterance of the particle உம், in token of displeasure, or to intimidate another, உம்மெனவெகுளல். 2. Menace, reproof, reprehension, roaring, bellowing, அதட்டுகை. Wils. p. 977. HUMKARA. 3. The buzzing of bees, வண்டினொலி. (*p.*)

உங்காரந்திறப்பமேனையாள். She who thundered out the menacing உம். (பாரதம்.)

உங்காரமுதகரைக்கள். The humming, buzzing bees. (பாரதம்.)

உங்கரிக்க—உங்காரிக்க, *inf.* To reprove, menace, scold, reprehend, அதட்ட. 2. To utter a kind of grunt in token of disapprobation, உம்மெனவெகுள. (*p.*)

உங்கை, *s.* Your younger sister, உன்றங்கை. (ஸ்காந்தம்.) See தங்கை. (*p.*)

உசரம், *s.* [*prop.* உயரம்.] Height.

உசர்—உசரு. See உயர்.

*உசற்காலம், *s.* [*prop.* உஷற்காலம்.] Day-break, வைகறை; [*ex* உஷஸ், dawn.]

*உசனம், *s.* One of the eighteen உபபுராணம். 2. One of the eighteen ஸ்மிருதிகள்.

*உசனன், *s.* The planet Venus, சுக்கிரன். Wils. p. 167. USHANAS.

*உசா—உசாதேவி, *s.* [*prop.* உஷாதேவி.] One of the consorts of the sun, சூரியன்மனைவி—the other is சாயாதேவி.

உசார், *s.* (*Hin.*) Watchfulness, விழிப்பு.

உசாவு, கிறேன், உசாவினேன், வேன், உசாவ, *v a.* To consult, inquire, ponder, consider, ஆராய. 2. To deliberate mentally, எண்ண. 3. To deliberate in an assembly, take counsel, யோசனைகேட்க. 4. To spy, reconnoiter, ஒற்ற. (*p.*)

உசாவிச்சொல்லு. Speak considerately.

உசாவிச்செய்ய, *inf.* To act after deliberation with others. 2. To act cautiously.

உசாவிப்பார்க்க, *inf.* To look or inquire into, examine by inquiry of others.

உசா—உசாவு, *v. noun.* Consultation, inquiry, examination, espionage, ஆராய்வு. 2. *s.* Searchers, examiners, spies, ஒற்றர். (*p.*)

உசாக்கேட்க, *inf.* To ask counsel, to consult, ஆலோசனைகேட்க. (*p.*)

உசாத்துணை—உசாவுதுணை, *s.* An adviser, a counseller, a faithful companion, ஆலோசனைத்துணைவன்.

*உசி, *s.* Wish, விருப்பம். Wils. p. 164. USHI. 2. (*p.*) Sharpness, கூர்மை.

*உசிதம், *s.* Propriety, suitableness, convenience, fitness, தகுதி. Wils. p. 177. UCHITA. 2. Excellence, niceness, நன்மை.

உசிதசமயம், *s.* Opportunity, season, a fit occasion.

உசிதமானஆசனம், *s.* An appropriate seat in an assembly.

உசிதவசனம், *s.* Excellent speech, language.

உசிதன், *s.* A king of the Pandian dynasty, பாண்டியன். (சூ.) (*p.*)

உசிரம், *s.* The pepper plant, செவ்வியம், Piper nigrum. 2. (*p.*) A bull, இடபம். 3. A ray of light, கிரணம்.

*உசிரம்—உசீரம், *s.* The root of a fragrant grass, இலாமிச்சைவேர், Andropogon muricatum. Wils. p. 164. USHIRA.

உசிலம்—உசிலை—உசில், *s.* A fine timber tree, a kind of ebony with yellow veins, சீக்கிரிமர, Acacia pennata.

உசு, *s.* A wood-worm, உரு. (பாரதி.) See the examples given under the ரூ. நிரம், "உசு . . . . மதிக்காரிக்கந்தே" in மொழிமரபு a chapter in தொல்காப்பியம்.

உசுப்பு, கிறேன், உசுப்பினேன், வேன், உசுப்ப, *v. a.* [*vul.*] To excite, rouse, wake up, incite dogs—to scare, fray, drive away—as birds, &c., எழுப்ப.

உசும்பு, கிறேன், உசும்பினேன், வேன், உசும்ப, *v. n.* To move, stir—as from a state of rest or sleep, to be in motion—as wind; to show signs of life, to be just moveable, அசைய.

*உசுவாசம், *s.* [*com.* உச்சுவாசம்.] Inhaling, inspiration—the opposite of நிசுவாசம்.

உச்சட்டம், *s.* [*prov.*] Mark, butt, இலக்கு. 2. Straightness, நேர்.

உச்சந்தம், *s.* [*prov.*] Declension, having past the height, crisis, தணிவு. 2. Being at the highest price, விலையுயர்ச்சி.

உச்சந்தமாக, *inf.* To be past the height, to be softening, allaying, &c.—as rain, disease, &c.

*உச்சம், *s.* Height, elevation, altitude, greatness, dignity, உயர்ச்சி. 2. Zenith, meridian, being right over the head, தலைக்குநேர்—ம். Wils. p. 137. UCCHA. 3. The treble in music, வல்லிசை. 4. [*in astrology.*] One of the five situations of a planet, the most influential, auspicious and benign. (See கிரகநிலை.) 5. The top, tip, the extreme point, நுனி.

உச்சமாய்ப்பாடுகிறான். He sings treble.

தோணியுச்சவோட்டோடிற்று. The dhony sailed at the top of its speed.

உச்சக்கிரகம்—உச்சத்தானம், *s.* One of the five situations of a planet, being the most auspicious. See கிரகநிலை.

உச்சமானவன், *s.* A tall person.

உச்சவீடு, *s.* The position of the sun, or any planet in its most auspicious sign, உச்சவீரசி. See கிரகநிலை.

உச்சயனி—உச்சயினி, *s.* The city Ougein, formerly the capital of Vikramaditya, நிநகரம். Wils. p. 139. UJJAYANI.

உச்சரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To pronounce, enunciate, utter, articulate, உரைக்க.

உச்சரிப்பு—உச்சாரணம்—உச்சாரணை, *v. noun.* Pronunciation, utterance, articulation, உச்சரிக்கை. (*p.*) 2. Uttering or reciting incantations, மந்திரோச்சாரணை.

உச்சாரம், *s.* Pronunciation.

*உச்சலம், *s.* The mind, மனம். Wils. p. 137. UCHHALA.

*உச்சவம், *s.* A feast, festival, holiday. See உற்சவம். Wils. p. 144. UTSAVA.

*உச்சாகம், *s.* Perseverance, willingness, happiness. See உற்சாகம். Wils. p. 145. UTSAGA.

*உச்சாடனம், *s.* Expelling a demon from a person or place, exorcism—one of the eight magical arts, அட்டகருமம். 2. Exciting a demon to injure or destroy some one by magical incantations, uprooting, பேய்முதலியவைகளையேவுகை. (See சாடனம்.) Wils. p. 137. UCHCHADANA. 3. The science which treats of exorcism, கலைஞானமறுபத்துநான்கினொன்று.

உச்சாணி, *s.* [*vul.*] Elevation, height, உச்சி.

உச்சாணிக்கொப்பு, *s.* The highest branch of a lofty tree.

உச்சாரம், *s.* [*a corruption of* உச்சம்.] Height, elevation.

உச்சி, *s.* The crown of the head, உச்சந்தலை. 2. (*fig.*) Head, தலை. 3. Zenith, meridian, தலைக்குநேரிடம். 4. Mid-day, noon, when the sun is in the zenith, நடுப்பகல். 5. Top, apex, summit of a mountain, நுனி. (*c.*) 6. (*p.*) A knot of hair, மயிர்முடி. 7. Men's hair, ஆண்மயிர். 8. A dog, நாய.

உச்சந்தலை, *s.* The crown of the head.

உச்சிக்கரண்டி, *s.* A small spoon to pour oil on the heads of infants, சிறுகரண்டி.

உச்சிக்கலயம், *s.* The uppermost earthen vessel of a number placed one above another. 2. A small earthen pot.

உச்சிக்கிழான், *s.* The sun, (*lit.*) the ruler of the zenith, சூரியன். (கிலப்பதி.) (*p.*)

உச்சிக்குடுமி, *s.* A tuft of hair on the crown of the head of boys and men. (*c.*)

உச்சிக்குழி, *s.* Dimple in a child's cranium, the fontanel, தலையுச்சிப்பள்ளம். (*c.*)

உச்சிக்கொம்பன், *s.* A beast with perpendicular horns near together, உச்சியிற்கொம்புள்ளமாடு. 2. Rhinoceros, an animal with one straight horn, காண்டாமிருகம்.

உச்சிச்செடி, *s.* The புல்லுருவி, a parasitical plant, Loranthus, *L.*

உச்சித்திலகம், *s.* A flowering shrub with red blossoms, நீர்முள்ளிச்செடி.

உச்சிப்பிளவை, *s.* An ulcerous scab or sore on the crown of the head, உச்சந்தலையிலுண்டாகுமோர்புண்.

உச்சிப்பொழுது. *s.* Noon-day, நடுப்பகல்.

உச்சிமலை, *s.* A steep hill, a precipitous height.

உச்சிமோக்க, *inf.* To smell the crown of the head of young children—as parents often do through fondness, சிரத்தலையைமோக்க.

உச்சிவிடுதி, *s.* Cessation of rain at noon, மத்தியானநேரத்தில்மழைவிடுகை. 2. Recess at noon of laborers, or of boys at school.

உச்சிவேர், *s.* The main root of a tree, மூலவேர்.

உச்சுகாட்டல், *v. noun.* [*prop.* உச்சிகாட்டல்.] Setting dogs, directing a dog to an object of attack, &c., நாயையேவல்.

உச்சுச்சொனல், *v. noun.* Calling a dog, நாயைக்கூப்பிடல்.

மலையுச்சி, *s.* The top of a hill, the peak.

*உச்சிட்டம்—உச்சிஷ்டம், *s.* Refuse of food, regarded as impure, எச்சில். Wils. p. 138. UCHCHISHTA.

உச்சிட்டசாங்கரியம், *s.* Eating or drinking from the same vessel in common, ஒருபாத்திரத்திற்பலர்கூடியுண்கை.

உச்சிதம், *s.* [*prop.* உசிதம்.] Excellence, rareness, niceness, valuableness, choiceness, அருமை. 2. Fitness. (See உசிதம்.) 3. The நெருஞ்சில் plant, Tribulus lanuginosus, *L.* 4. (*Rott.*) A present, a gift, கொடை.

உச்சிதமாகக்கொடுக்க, *inf.* To give as a present.

உச்சிதமாய்ப்பண்ண, *inf.* To do a thing pleasingly. 2. To do a thing on a new plan.

உச்சிரதம், *s.* A creeper, பிரண்டை, Vitis quadrangularis.

*உச்சிரயம், *s.* Height, உயரம். 2. Upright side of a triangle, முக்கோணநிமிர்ந்தபட்டவசி. Wils. p. 138. UCHCHRAYA.

உச்சினி—உச்சினிமாகாளி, *s.* The city Ougein, நிப்பட்டணம்.

உச்சு, கிறேன், உச்சினேன், வேன், உச்ச, *v. a.* To pitch at a mark, cast a game with betel nuts, shells, money, &c., கழற்காய்முதலியவைகளையெறிய. 2. [*prov.*] To conquer in a game or controversy, to win, surpass, get the advantage of by subtilty or artifice, வெல்ல. 3. [*vul.*] To get another's property by artifice, to defraud, trick, பிறர்பொருளைக்கவர.

உடைதாமுழுந்தகமெல்லாமுச்சிக்கொண்டேனென்றுமெச்சிக்கொண்டேன். Having robbed her of her clothes, mantle and all, I exulted in the exploit. (திருச்செந்தூர்கோவை.)

உச்சன், *s.* [*prov.*] A shell, arecanut, tamarind seed, &c. used for pitching in a game.

*உச்சைச்சிரவம், *s.* The horse of Indra, இந்திரன்குதிரை. Wils. p. 138. UCHCHAISHRAVAS. (*p.*)

உஸ், *s.* A hiss, a sound for setting on or inciting dogs, for scaring away birds, &c.

உஸ்ஸென்றேட்ட, *inf.* To scare, scare away by hissing.

உஞற்று, கிறேன், உஞற்றினேன், வேன், உஞற்ற, *v. a.* To enterprise, act with energy, attend to with energy and perseverance, to perform, execute, முயற்சிசெய்ய. 2. To institute a lawsuit, prosecute, வழக்கோத. (*p.*)

உலைவின்றித்தாழாதுஞற்றுபவர். Those who persevere with untiring energy.

பலதருமம்பதியைமதமற்றஞற்றினள். She performed various charitable acts without her husband's consent. (பாரதம்.)

உஞற்று, *v. noun.* Energy, enterprise, exertion, ஊக்கம். 2. Unfailing application, untiring perseverance, முயற்சி. 3. Prosecution at law, institution of a lawsuit, வழக்கோறுகை. (*p.*)

உஞ்சட்டை, *s.* Thinness, slenderness (in person), மெலிவு. (colloquially, ஒஞ்சட்டை.) (*c.*)

உஞ்ஞல், *s.* [*prop.* ஊஞ்சல்.] A swing.

உஞ்சு, *s.* [*vul. prov.*] [*prop.* உச்சி.] A term for calling dogs, நாயைக்கூப்பிடுமொலிக்குறி.

உஞ்சுகாட்ட, *inf.* To set on dogs. See உச்சி.

உஞ்ஞை, *s.* The city of modern Ougein, அவந்திநகரம். (*p.*)

உடக்கு, *s.* [*vul.*] The spiral winding of the nut of a screw, திருகாணிசசுரை பிணுட்சுற்று. (*p.*)

உடங்கு, *s.* Union, association, combination, கூடிநிற்கை. 2. [*adverbially.*] Together, together with, கூட. (*p.*)

அடைந்தார்ப்பிரிவுமரும்பிணியுங்கேடுமுடங்குடம்புகொண்டார்க்குறலால். Forasmuch as separation from friends, disease and death are incident to those who are in the body—

*உடசம், *s.* A hut made of leaves, straw, &c., the residence of hermits, பன்னசாலை. (சேதுப்புராணம்.) Wils. p. 139. UDAJA. (*p.*)

உடந்தை, *s.* Fellowship, companionship, confederacy, partnership, proprietorship, heirship, கூட்டுறவு. 2. Connexion, concert, union, combination, participation, சேர்க்கை. (*c.*)

ஒல்லைபிற்றருமங்களுக்குடந்தையாய். Uniting at once in fellowship with every virtue. (பாரதம்.)

அவனிதற்குடந்தையாளி. He is a partner. 2. He is a joint-heir. 3. He is accessary to it.

அவனுக்குமெனக்குமுடந்தையில்லை. I have no connexion with him. 2. I am not related to him. 3. I have no business with him. 4. I disown him.

உடந்தைப்பட, *inf.* To consent, become accessary, to have a hand in, be engaged in, ஒருமிக்க.

உடப்பு, *s.* A tree, தொரட்டுமுள்மரம், Pisonia georgina, *L.*

உடம்படுமெய்--உடன்படுமெய், *s.* [*in grammar.*] The consonants ய் and வ், as serviles or connecting letters. இரண்டுயிர்களையொற்றுமைப்படுத்துமெய்யெழுத்து. (*p.*)

உடம்பிடி, *s.* A lance or dart, வேல். (*p.*)

உடம்பு, *s.* Body, உடல். 2. The body as assumed by the soul in its transmigrations according to the deeds of former births, உ[illegible]ப்பிடம். 3. (*p.*) A consonant, மெய்யெழுத்து.

உடம்பைத்தே[illegible]க்கொண்டன்றே யோக நிலைபோகவேண்டும். To engage in the austerities of a Yogi, one must strengthen himself by medicine.

உடம்புதேற, *inf.* To be strengthened, to grow strong—as a convalescent person from food, exercise, &c.

உடம்புநன்றாயிருக்க, *inf.* To be well, to be in health.

உடம்பெடுக்க, *inf.* To take a body, to be born, சரீரமெடுக்க.

பரிகாசம்பண்ணவும் நிந்திக்கவுமுடம்பெடுத்தான்.. He is born to be mocked and despised.

கள்ளனென்றுடம்பெடுத்தவன். One who is born a rogue.

உடம்புபுரட்டல், *v. noun.* [*prov.*] Rolling or turning about—as infants before they begin to creep. 2. Rubbing off dirt or dust from the body.

ஆணுடம்பு, *s.* The penis.

பெண்ணுடம்பு, *s.* [*vul.*] Pudendum muliebra.

உடம்பை, *s.* Troubled or turbid water, கலங்கனீர். (சது.) (*p.*)

உடம்பையிறுகளுங்கயலினம். Fishes leaping in agitated water.

உடலம், *s.* Body common to man and brute, உடம்பு. (*p.*)

உடலு—உடல், கிறேன், உடன்றேன், வேன், உடல, *v. n.* To fight, be enraged, கோபித்துப்போர்செய்ய. 2. To exhibit signs of fierce anger, சினக்குறிப்புக்காட்ட. (*p.*)

உடல்சினவரவம். The furious serpent. (ஸ்காந்தம்.)

அவருடனுடன்றுபொரவுன்னினும். Should one be enraged and attack them in battle. (பாரதம்.)

உடலல், *v. noun.* Rage, being enraged, சினத்தல். 2. Exhibiting signs of fierceness, சினக்குறிப்பு.

உடல், *s.* Body—human or brute, bodily constitution—one of the three obstacles to piety, சரீரம். 2. (*p.*) A consonant, மெய்யெழுத்து. 3. Gold, பொன்.

மறுப்படாவுடலேழுபொதிதந்துநீவாழியே. Do thou prosper giving (me) seven bags of gold.

உடலிரண்டுயிரொன்று. A shell-fish, இளிஞ்சில். 2. Intimate friendship—two bodies but one life, சிநேகம்.

உடலிலான், *s.* Kama, the Hindu cupid, காமன். (*p.*)

உடலெடுக்க, *inf.* To take a body, to be born. 2. [*prov.*] To fatten, become fat or fleshy—as cows.

உடலெரிவு, *s.* Smarting or burning sensation all over the body.

உடலெழுத்து, *s.* An inanimate letter, a consonant.

உடல்வாசகம், *s.* The body of a writing in bonds, &c., exclusive of signatures and of a letter exclusive of salutation, &c., நெட்டெழுத்துவாசகம்.

உடல்வேலை, *s.* Body of a work, chiefly applied to painting or other ornamental work, பரும்படியானவேலை.

உடற்கருவி, *s.* Body armor.

உடற்குறை, *s.* A headless body, முண்டம். 2. Any blemish in the body, உறுப்புக்குறை.

உடற்கூறு, *s.* Anatomy, the component parts of the human system, சரீரக்கூறு.

உடற்கூற்றுத்தத்துவம், *s.* The principles of anatomy or the description of the component parts of the body.

உடற்கொழுப்பு, *s.* A disease which creates a dislike to food.

உடற்றழும்பு, *s.* A scar, a cicatrice, the mark of a stroke or blow, உடலின்மறு.

குதிரையுடலன், *s.* [*prov.*] A bull having his belly straight and narrow as that of a horse.

உடறல், *v. noun.* [*a change of* உடலுதல்.] Raging. See உடலல்.

உடற்று, கிறேன், உடற்றினேன், வேன், உடற்ற, *v. a.* To attack furiously in battle, to charge or rush on with fury, போர்செய்ய. 2. To vex, afflict, torment, வருத்த. 3. To drive back, beat away, &c., துரத்த. 4. To frustrate, thwart, scatter, disperse—as an opposing army, &c., சிதறவடிக்க. 5. To kill, destroy, exterminate, அழிக்க. 6. To discharge an arrow or other missile, பிரயோகிக்க. (*p.*)

ஆசுகமுடற்றினரே. They discharged arrows in rage. (பாரதம்.)

வெஞ்சமமுடற்றினரே. They carried on a destructive war.

ஒல்லும்கருமமுடற்றுபவர்கேண்மை. The friendship of those who frustrate one's designs when they are about to be accomplished. (குறள்.)

உலகத்துண்ணின்றுடற்றும்பசி. Hunger will afflict the world.

உடற்றல், *v. noun.* Attacking with fury. 2. *s.* Great fury, பெருங்கோபம். (*p.*)

உடன், *s.* A particle of time and place used in combination with other words and expressing co-existence, accompaniment—a form of the third case or the social ablative, மூன்றும்வேற்றுமையின்சொல்லுருபு. 2. Instantly, immediately, at once, அப்பொழுதே.

உடனாளி, *appel. noun.* Companion, co-partner, கூட்டாளி. 2. (*Rott.*) A man of property.

உடனிகழ்ச்சி—உடனிகழ்தல்—உடனிகழ்வு, *v. noun.* Co-existing, happening simultaneously. 2. A term in grammar implying co-existence, concomitancy. உடனிகழ்ச்சிப்பொருள்.

ஒடுவென்பதுடனிகழ்வைக்காட்டும். The particle ஒடு shows accompaniment.

உடனிலைமயக்கம்—உடனிலைமெய்மயக்கம், *s.* [*in orthography.*] The combination of two consonants of the same kind—as அக்கம், அச்சம், opp. to வேற்றுநிலைமெய்மயக்கம்.

உடனுக்குடனே. The very instant, at the very juncture, immediately succeeding another event.

பாம்புகடித்தவுடனுக்குடனேபிரயோகம்பண்ணிக்கொண்டான். He applied the remedy as soon as the snake bit him.

உடனுற்றவன், *s.* A servant of the same class with another.

உடனே, *adv.* Immediately. 2. *prep.* With, together with.

ஒருசாமமானவுடனே. Immediately after the first watch.

அவனதைச்சொன்னவுடனே. As soon as he had said it.

என்னுடனேவா. Come along with me.

உடனொத்தபங்காளி, *s.* An equal sharer.

உடனொத்தவன், *s.* An equal, a fellow, an acquaintance, a compeer.

உடன்கட்டையேற, *inf.* To ascend the funeral pile—as a Hindu widow with her deceased husband, அநுமரணமடைய; [*ex* கட்டை, log of wood.]

உடன்கூட்டு, *s.* Co-partnership, fellowship, உடன்சேர்க்கை.

உடன்கூட்டாளி, *s.* Co-partner, participator.

உடன்கை. [*prop.* உடனே.] Immediately succeeding, just after, as soon as.

வேலைசெய்துமுடிந்தவுடன்கையிலேசம்பளங்கிடைக்கும். The wages will be paid as soon as the work is done.

உடன்பங்காளி, *s.* A joint-sharer or participator, a co-partner, கூட்டுப்பங்காளி. 2. A co-heir, joint-heir, a brother's sons having a right to share in the family property, உடன்சுதந்தரவாளி.

உடன்பங்கு, *s.* A joint-share, equal share (whether in trade, inheritance, land or otherwise), participation, joint-heirship, கூட்டுப்பங்கு.

உடன்பட, *inf.* [*com.* உடம்பட.] To agree, assent, consent, acquiesce, harmonize with, சம்மதிப்பட. 2. To engage, contract, form a compact, பொருந்த. 3. To undertake, enter upon, உடம்படிக்கைசெய்ய. 4. To answer in the affirmative, மறுக்க. 5. To be privy to, to have a hand in, சேர. 6. To yield, submit, comply, இசைய.

உடன்படிக்கை, *s.* [*com.* உடம்படிக்கை.] A contract, agreement, compact, covenant, engagement, &c., written or verbal, சம்மதிப்பத்திரம். 2. A promise, assurance, உறுதிப்பாடு.

உடன்படுத்த, *inf.* To induce consent, to make willing, சம்மதிப்படுத்த. 2. To unite, reconcile, இசைவிக்க.

உடன்படுவிலக்கு, *s.* A figure of speech by which a negation is couched in affirmative words—as அப்போதப்ப தறியேனாற்செய்ய இப்போதிவருமிசைகின்றுள—தப்பின், பொருளோபுகழோதரப்போவீர்மாலை இருளோதிலவோவெலும். (அலங்காரம்.)

உடன்பட்டகடமை, *s.* A covenanted obligation.

உடன்பாடு—உடம்பாடு, *s.* Harmony, concord, union, fellowship, agreement, பொருந்தம். 2. Compact, covenant, engagement, உடம்படிக்கை. 3. Consent, assent, compliance, acquiescence, சம்மதிக்கை. 4. Being concerned in, complicity, உடந்தை. 5. Affirmation, மறுமை. 6. [*in grammar.*] Positive or affirmative—as opposed to negative terms, or negative forms of expression, விதி.

உடம்பாடிலாதவர்வாழ்க்கைகுடக்கருட்பாம்போடுடனுறைந்தற்று. Those who live in discord are as if enclosed in a vessel with a live snake.

உடன்பாட்டுவினை, *s.* A verb in the affirmative form, விதிவினை.

உடன்பிறந்தவர்கள்—உடன்பிறந்தார், *s.* Own full brothers or sisters.

உடன்பிறந்தார்சுற்றத்தாரென்றிருக்கவேண்டாம். Because born with you, do not imagine them to be your friends.

உடன்பிறப்பு, *s.* [*impr.* உடப்பிறப்பு.] Connascence, கூடப்பிறக்கை. 2. Offspring of the same parents, an own brother or sister.

உடன்றல், *v. noun.* [*as* உடலல்.] Raging.

உடு, *s.* A goat, sheep, ஆடு. 2. A star, விண்மீன். 3. An arrow, அம்பு. 4. The feathers of an arrow, அம்பிலிறகு. 5. The point and barb of an arrow, அம்புத்தலை. 6. A boatman's pole, ஓடக்கோல். 7. A fort-ditch, அகழி. 8. A tree, சீக்கிரிமரம். (*p.*)

உடுகாட்டி, *s.* The பொன்னாங்காணி.

உடுநீர், *s.* A fort-ditch, அகழி. (*p.*)

உடுபதி—உடுவின்காந்தன்—உடுவின்வேந்தன், *s.* The moon, சந்திரன்; [*ex* காந்தன், a lover or husband]—he who took as his wives the constellations.

உடு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To dress, attire, put on clothes, வஸ்திரந்தரிக்க. 2. To dress another, ஒருவருக்குடுக்க. 3. (*fig.*) (*p.*) To surround, encircle, சூழ.

பிள்ளைக்குச்சீலையுடுத்தாள். She dressed the child.

பூசலார்விழிக்குச்சந்தப்பூந்தழையுடுத்து. Adorning the attractive eyed body with boughs of the sandal tree. (திருச்செந்திற்புராணம்.)

உடுகூறை, *s.* Clothes—in colloquial use, chiefly women's.

உடுத்தவாடை, *s.* Home-dress or dishabille, under-clothes.

உடுத்தவாடையில்லாதாணிராட்டும். A woman's bathing without her under-garments (is improper). (நீதிவெண்.)

உடுத்துக்கொள்ள, *inf.* To dress one's self.

உடுத்துவிட, *inf.* To dress another.

உடுபாவனை, *s.* Mode or style of dress. 2. [*prov.*] A suit of clothes. 3. (*Rott.*) Clean clothes.

உடுபுடவை, *s.* Garments.

உடுமானம், *s.* A dress befitting a person's station in life.

நகருடுத்த, *rel. part.* Surrounding the city.

கடலுடுத்தபார், *s.* The sea-girt earth.

உடுக்கை, *v. noun.* Dressing. 2. *s.* Raiment, clothing, உடை.

உடுக்கையிழந்தவன்கைபோலவாங்கேயிடுக்கண்களைவதாநட்பு. (Real) friendship to one removes his distress with that promptitude with which the hands of him whose garments are loosened (while before an assembly) adjust them. (குறள்.)

உடுப்பு, *s.* Clothes, garments, clothing, vesture, dress, வஸ்திரம்.

உடுப்புடுக்க, *inf.* To dress, clothe (one's self or another).

உடுக்கை, *s.* A small kind of drum, tapering in the middle, இடைசுருங்குபறை. 2. Tambourine, தூக்கப்பறை.

உடுத்து, கிறேன், உடுத்தினேன், வேன், உடுத்த, *v. a.* To dress another, clothe, பிறனுக்குடுத்த.

உடுபதி, *s.* A tree and its root very bitter and medicinal, மரமஞ்சள், Menispermum fenestratum.

*உடுபம், *s.* A raft, float, தெப்பம். Wils. p. 139. Udupa.

உடுப்பை, *s.* The சீக்கிரி tree. (See உசிலம்.) 2. The name of a town near Tellicherry where the priest of the Madduvar resides, மத்துவாசாரிபர்வசிக்குமிடம்.

உடும்பு, *s.* The double-tongued lizard, the guana, கோதா, Lacerta iguana.

உடும்புநாக்கு, *s.* It's bifid tongue.

உடும்புநாக்கன், *s.* A double-tongued or deceitful man.

உடுவை, *s.* A fort-ditch, அகழி. (*p.*)

உடை, *s.* A species of thorny tree, குடைவேல், Acacia—in the adjective and genitive forms, ஐ is changed into அம், as—உடமுள், the thorn of the உடை tree.

உடை, *s.* Wealth, செல்வம். 2. Owning, belonging to, being owned, possessed, உடைமை. This word is conjugated as a symbolic verb, in the various inflections of which, or in the abstract form உடைமை, it chiefly obtains; when used as a qualifying prefix in its simple form, except as a participle, it requires the reduplication of the hard letters.

பாட்டுடைத்தலைவன், *s.* The patron of a poem to whom it is addressed. 2. The hero of a poem.

உடைப்பெருஞ்செல்வர், *s.* Those possessed of great wealth.

உடைத்து. Third person sing. neut. of a symbolic verb often used appellatively with ஆகுதல். It has, possesses, belongs to, is subject to.

இது அவற்குடைத்து. This belongs to him.

மகிமையுடைத்தானமோட்சம். Glorious bliss.

அச்சாணியன்னருடைத்து. (The world) possessing persons as important (to society) as the linch pin is to a chariot. (குறள்.)

யாக்கைஅழிவுடைத்தாயிருக்கின்றது. The body is perishable.

உடைத்தானவன், *s.* A proprietor, possessor, one subject to.—*Note.* This form, though a solecism, is allowed.

உடைய. The participle of the verb, (1) used as a form of the sixth or possessive case, ஆறாம்வேற்றுமைச்சொல்லுருபு—as என்னுடையபொருள், my property. 2. Affixed to nouns it governs the accusative case expressed or understood—as மரத்தையுடையவன், the owner of the tree. Sometimes it is annexed to the dative—as பொருளுக்குடையவன், an heir.

எனக்குடையது. It is mine.

மணமுடையபூ, *s.* A fragrant flower.

மரத்தினுடையகொம்பு, *s.* The branch of a tree.

உடையவன்—உடையான், (*third pers. masc. sing.*) He has, he possesses, (often used appellatively). 2. *appel. n.* He who has, he who possesses. (*a*) the owner, the possessor, (*b*) the Supreme Being, (*c*) a rich man, (*d*) a king, a lord, (*e*) the master of the house.

உடையார், *s.* The rich, the wealthy, the opulent. 2. [*prov.*] A district officer. 3. A title among some tribes of Hindus.

உடையார்முன்னில்லார்போல். Like the poor in the presence of the wealthy.

ஆஸ்திக்குடையவன், *s.* An heir.

மண்ணுடையான், s. A potter, குயவன்.

ஆஸ்தியுடையவன், s. A proprietor.

ஊருடையார், s. A district officer, a registrar of land, &c.

வீட்டுடையான், s. The master of a house, the husband.

உடைமை, s. Property, possessing, having, owning, உரிமை. 2. The thing possessed, property, possessions, movable property, உடைமை. 3. Jewels, ornaments, ஆபரணம். 4. Wealth, riches, opulence, செல்வம். In the first meaning it is often in classical language affixed to other words.

உடைமையுள்இன்மைவிருந்தோம்பலோம்புமடமை.... Poor in the midst of wealth are they who ignorantly neglect the duties of hospitality. (குறள்.)

கல்விபுடைமைபொருளுடைமையென்றிரண்டுசெலவமுஞ்செல்வமெனப்படும். The two possessions, viz.: knowledge and wealth are possessions indeed. (நீதிநெ.)

உடைமைக்காரன்—உடைமையாளன், s. A proprietor, possessor, an owner. 2. An opulent person.

அன்புடைமை, s. Love, affection, kind-heartedness.

அறிவுடைமை, s. The possession of knowledge, knowledge.

அருளுடைமை, s. Grace, benevolence.

உடை, கிறது, ந்தது, யும், ய, v. n. To become broken—as a vessel; to crack, burst, break in pieces, split, to be fractured—as the skull, &c.; to break with force suddenly, to break or burst open—as a bank or shore; to break open—as a letter or seal, &c.; to be broken—as the skin, to be hurt—as by a wound, தகர். 2. To become broken—as the ranks of an army, to be discomfited, to retreat before the foe, இரிய. 3. To become broken—as the heart with grief, to be disheartened, dispirited, dejected, alienated, &c., to be in despair. மனம்சோர. 4. To fall below in competition, rivalry or comparison, தாழ. 5. To be reduced in circumstances, to become poor, குறைய. 6. To effloresce, open, burst—as a flower, to blossom, மலர. 7. To become untwisted, முறுக்கவிழ. 8. To be reduced in strength, to be debilitated, to be subdued or overcome by any thing, பலமுடைய. (குறள். 109. அதி. 8.) 9. To be divulged or become known as a secret, வெளிப்பட. 10. To be ruined, கெட.

நெஞ்சுடைந்தவனாய்ப்போனான். He is dispirited, dejected, &c.; he is in despair.

கொப்புளமுடைந்தது. The blister is broken.

ஒன்னலருடைந்தபோனார். The enemy was discomfited.

உடை, s. Clothes, garments, vesture, dress, வஸ்திரம்.

உடைநடைபாவனை, s. The mode of dress, the gait, the manner, external appearance.

உடையல், s. Any thing broken, a breach, a fracture.

உடையல்நெரியல், s. Things cracked and broken.

உடைவாள், s. A short scimiter, an accoutrement or article of equipage, சரிகை.

உடைவு, v. noun. A breach, disruption, eruption, infraction, crack, fracture, தகர்வு. 2. Being routed, a discomfiture, defeat, இரிவு. 3. Debility, brokenness of constitution, தளர்வு. 4. [*with appropriate words prefixed.*] Dispiritedness, dejection, broken-heartedness, despair, மனநெகிழ்ச்சி. 5. Reduction of circumstances from wealth to poverty, கேடு.

மனமுடைவானவன், s. A dejected or broken-hearted person.

உடை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To break a vessel, &c.; to burst, break open, break a bank, &c.; to break lumps, clods, &c.; to break a boil, a blister, the skull or any other flat, solid or massive substance; to split, fracture, தகர்க்க. 2. To break the ranks of an enemy, to defeat, discomfit, disperse, rout, put to flight, இரிக்க. 3. To ruin, impoverish one, கெடுக்க. 4. To untwist, untwine, முறுக்கவிழ்க்க. 5. v. n. To break—as a boil, கட்டியுடைக்க.—*Note.* உடைய and உடைக்க are not applicable to the breaking of a tree, a branch, an arm or any other long and cylindrical body that is broken off short or asunder. For this meaning see முறிக்க, ஒடிக்க, &c.

தண்ணீருடைத்தப்பாய்கிறது. The water has broken (the dam) and flows out.

பல்லுடைப்பேனென்றான். He said, I will break your teeth.

கட்டுடைக்க, inf. To burst an embankment—as water.

பெண்மையுடைக்கும்படை, s. The weapon that dissolves female continency.

தலையுடைக்க, inf. To take much pains, mentally—as in abstruse calculations, intricate business.

உடைப்பு, v. noun. A breaking, a breach, the bursting of a bank, உடைக்கை. 2. s. A channel cut or broken through a dam in a field, disruption, உடைத்தஅறுவாய். 3. Weakness, தளர்ச்சி.

தலையுடைப்பு, v. noun. A trouble, some intricate employment.

உடைகுளம், s. The twentieth lunar asterism, பூராடம். (p.)

உடையார்பாளயம், s. The name of a country, ஒரூர்.

உட்கட்டு, s. Private apartments of a house, அந்தப்புரம். 2. A woman's necklace tied close to the neck, மார்பு நிற்கட்டு மோர்மணிவடம்; [*ex* உள், the inside.] All words from உள் having the ள் changed into ட் or ண will be found under உள்.

உட்கார்—உட்காரு, கிறேன், ந்தேன், வேன், உட்கார, v. n. [*vul.*] To sit, sit down, (not classical) also written உக்காரு.

உட்காருவிக்க, inf. To seat, provide with a seat, cause to sit, உட்காரச்செய்ய.

உட்கு, s. Fear, dread, terror, signs or expression of fear, அச்சம். 2. Shame, bashfulness, modesty, நாணம். (p.)

உட்குவரத்தோன்றமீரேழ்தறைத்தே. It consists of fourteen fearful modes. (புறப்பொருள், தொல்காப்பியம்.)

உட்கு, கிறது, உட்கினது, ம், உட்க, v. n. To fear, dread, stand in awe of, அஞ்ச. 2. To betray signs of fear, அச்சக்குறிப்புக்காட்ட. 3. To be ashamed, be bashful, to retire, shrink back with shame, to be modest, நாண. 4. To rot, decay, perish, moulder, கெட. (p.)

உட்குடையாரெல்லாரணிபல்லினன். Who excites the fears of all the matrons of the land and puts them to shame. (நாலடி. அதி. கற்புடைமகளிர்.)

உட்கை, v. noun. Fearing, dreading, &c.

**உட்டணம்—உஷ்ணம்*, s. Vehement or intense heat of fire, of the sun, of the weather, or of the body, வெப்பம். Wils. p. 165. Ushn'a.

உட்டணகாசம், s. A disease, வெப்பக்காசம்.

உட்டணகாலம், s. The hot season, hot weather.

உட்டணங்கொண்டிருக்கிறவன், s. One affected with excessive heat in the body.

உட்டணசஞ்சீவி, s. The பிரண்டை plant. Vitis quadrangularis.

உட்டணசிகை, s. The sign in which either the planet mars, saturn or the sun is situated.

உட்டணசைத்தியம், s. The use of hot or pungent things to cool the system—as pepper, hot water, &c.

உட்டணபூமி, s. A hot country or the torrid zone. 2. Heat and cold.

உட்டணாதிக்கம், s. The prevalence of heat in the body, weather, or climate.

உட்டணவாயு, s. Hot humors in the body.

உட்டணவியாதி, s. A disease—the whites—supposed to be caused by heat in the system.

உட்டணி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To be hot—as weather—as fire—as heat in the system, &c., வெப்புற.

உணக்கு, கிறேன், உணக்கினேன், வேன், உணக்க, v. a. To cause to wither or to fade; to dry with fire, in the sun, &c., உலர்த்த. 2. To grieve one, to wound the feelings, வருத்த. (p.)

பாலாற்கழீஇப்பலநாளுணக்கினும்வாலிதாம்பக்கமிருந்தைக்கிருந்தன்று. Though you wash charcoal in milk and dry it ever so long, it will not become white. (நாலடி.)

மீனுணக்கல், v. noun. Drying fish. (அகப்பொருள்விளக்கம்.)

உணங்கு, கிறது, உணங்கினது, ம், உணங்க, v. n. To fade, wither, dry, droop—as a vegetable or animal, உலர. 2. To be grieved, to be sorry, to be dejected in mind or countenance, வருந்த. (p.) 3. To pine away, to wither—as the body, by abstinence, &c.; to be emaciated, reduced, &c.; to languish, வாட.

உணங்குசிந்தையாய். O thou afflicted in mind. (ஸ்காந்தம்.)

நீணதசெம்முகமுணங்குதென்சொலாய்? Why is your blooming countenance so cast down? (ஸ்காந்தம்.)

கூடலுணங்கவிடாரோடி. With him who has the resolution to desert me whilst languishing from separation—— (குறள்.)

உணங்குமீன், *s.* Drying fish.

உணக்கம், *v. noun.* A dry or withered state, உலர்ந்தன்மை. 2. Dejection of countenance, drooping, வாட்டம்.

உணந்து, கிறேன், உணத்தினேன், வேன், உணந்த, *v. a.* [*vul. improp. for* உணக்கு.] To dry in the sun, wind, &c.

உணர்—உணரு, கிறேன், உணர்ந்தேன், வேன், உணர, *v. a.* To be conscious, to feel mentally, to perceive, understand, comprehend, arrive at, or possess full and perfect knowledge, அறிய. 2. To discern, distinguish, பகுத்தறிய. 3. To think, reflect or consider, meditate, contemplate, நினைக்க. 4. To feel, perceive by the touch, பரிசித்தறிய. 5. To learn, acquire knowledge, கற்றறிய. 6. To become reconciled—as man and wife, be reunited after a love quarrel, ஊடறீர. 7. To become free from delusion, doubt, error, &c.—as in waking from sleep; recovering from languor; acquiring spiritual perception, &c., தெளிய. (*p.*)

தெய்வப்புலவனுக்குநாவுணருஞ்சித்திரவோடாவிக்குக்கையுணரும். The tongue of the inspired poet and the hand of the painter perform their functions intuitively. [*prov.*]

உற்றுணரெங்களிலொருவன். One of us who have been initiated. (பாரதம்.)

உணராமை, *neg. v. noun.* Stupor, want of perception, knowledge, feeling, &c., அறியாமை. 2. Insanity, intoxication, infatuation, bewilderment, உன்மத்தம்.

உணருமறிவு, *s.* Instinct, intuition. 2. Ready apprehension, cleverness.

உணர்ந்தோர்—கற்றுணர்ந்தோர், *s.* The learned, persons of profound erudition, men of ability.

உணர், *v. noun.* Feeling, perception, knowledge, intellect, உணர்வு.

உணர்ச்சி, *v. noun.* Consciousness, feeling, intuition, perception, discernment, understanding, sensibility, knowledge, wisdom, judgment, experience, reason, learning, &c., acquiring knowledge, உணர்வு.

என்காலிலேயுணர்ச்சியில்லை. My leg is devoid of feeling, affected by paralysis, &c.

உணர்தல், *v. noun.* Being reconciled—as man and wife after a love-quarrel.

ஊடலுணர்தல்புணர்தலிவைகாமங்கூடியார்பெற்றபயன். Disunion, reconciliation and the pleasures of love, these are the fruits of matrimony. (குறள்.)

உணர்த்தி, *s.* [*vul. prop.* உணர்ச்சி.] Feeling.

உணர்த்தியற்றவன், *s.* A man past feeling, one devoid of sensibility.

உணர்த்தியுள்ளவன், *s.* A man of sensibility, one who is affected by the wants of others.

உணர்வு, *v. noun.* Feeling, consciousness, intuition, perception, understanding, knowledge by means of the senses, உணர்கை. 2. Clear discernment, intellect, reason, தெளிவு. 3. Cessation from sleep, love quarrels, &c., ஊடலுந்தீர்க்கல். 4. Acquiring of knowledge, learning, experience, acquaintance with science, &c., கற்றுணர்கை. 5. A sense, புலன். 6. Separation, நீக்கல்.

உணர்வுணருமுணர்வுடையாரைப்புணருமாயின்பம். To be united in friendship with the prudent who think of what they ought to think is productive of the highest felicity. (நாலடி.)

உள்ளத்தணர்வுடையான். A man of great wisdom.

உணர்வுகேடு, *s.* Forgetfulness, listlessness, inattention, உணர்ச்சியின்மை. 2. Want of understanding, அறிவீனம்.

நுண்ணுணர்வு, *s.* An acute perception.

தேர்ந்தவுணர்வினன், *s.* A man of improved understanding.

தளர்ந்தவுணர்வினன், *s.* A dull man, one slow of understanding.

உணர்த்து, கிறேன், உணர்த்தினேன், வேன், உணர்த்த, *v. a.* To teach, instruct, explain, cause to feel, perceive, understand, to enlighten, impart knowledge, to convince, கற்பிக்க. 2. To declare, treat of a subject—as a speaker or author, அறிவிக்க. 3. To conciliate the other party—as man or wife, to recover the affections—as lovers after love quarrels, ஊடறீர்க்க; [*ex* உணர். *v.*] (*p.*)

கலந்துணர்த்துங்காதலர்க்கண்டாற்புலந்துணராய்பொய்க்காய்வுகாய்தியென்னெஞ்சு. O my heart, if thou once again behold thy husband, who by love can conciliate thee, thou wilt no longer maintain thy feigned opposition. (குறள்.)

பரத்தையுணர்த்தாமை. Not conciliating your concubine. (குறள்.)

உணவு, *s.* Food, sustenance, eatables, chiefly applicable to substantial food—as wheaten bread, rice, animal food, &c., ஆகாரம்.

உணவின்மை, *s.* Fast, abstinence from food.

உணா, *s.* Food, sustenance, போசனம். 2. Cooked rice, சோறு. (*p.*)

உணாமிசைந்தனர். They took food. (ஸ்காந்தம்.)

உணி, *s.* [*a contraction of* உண்ணி.] A tick, &c.

உண்—உண்ணு, கிறேன், உண்டேன், உண்பேன் or உண்ணுவேன், உண்ண, *v. a.* To eat, drink, suck—as a child; to take food, whether solids, liquids or other kinds, to taste, அருந்த. 2. To feed, make a full meal—as a dinner, &c., புசிக்க. 3. To enjoy, suffer, experience, or receive the fruits of actions performed in former births, or in future the actions of the present, அநுபவிக்க. 4. To imbibe, absorb, விழுங்க.—*Note.* With verbal roots and sometimes with verbal nouns it forms a passive—as அடியுண்ண, to be beaten; அலையுண்ண, to be distressed.

உண்டசுற்றமுருகும். Relations or friends who have eaten together will cherish towards each other kindly feelings.

உண்டசோற்றுக்கிரண்டகம்பண்ணப்படாது. One ought not to be ungrateful to his benefactor.

உண்டாரைமேனிகண்டாற்றெரியும். A person's diet may be known by his appearance.

உண்டுசலிக்க. To be so delicate as to tire by eating—as a dainty child, &c. 2. To be wearied, cloyed, sated, &c. by too profuse a supply of food.

உழ்வினையுண்ணுங்காலை. While experiencing the inevitable fruits of former births.

உண்கலம், *s.* A plate or dish to eat from, a porringer, commonly brass, தாலம்.

உண்டாட்டு, *s.* Play of females, மகளிர்விளையாட்டு. 2. Play, sport, விளையாட்டு. 3. Festivity, drinking, joviality, மதவுண்டாகை.

உண்ணி, *s.* An appellative termination often contracted to உணி—as தூக்குணி, &c., one who eats, an eater.

உண்ணீர், *s.* Water to drink.

உண்பிக்க, *inf.* To cause to eat, drink, &c., feed one, உண்ணுவிக்க.

தூக்குணி, *s.* One so vile and daring as not to fear hanging. 2. A malefactor who is hanged. 3. One who hangs about to get food.

அழுகுணி, *s.* One who is always weeping; also one who is disposed to weep.

அடியுணி—குட்டுணி, *s.* One who is beaten.

குத்துணி, *s.* One who is stabbed. 2. A dastard, mean spirited person.

இரப்புணி, *s.* A beggar, one who eats what he begs.

அடையுணி, *s.* One dependent for food.

கட்டுண்ண, *inf.* To be tied up.

வெட்டுண்ண, *inf.* To be cut down.

தடையுண்ண, *inf.* To be hindered.

மையுண்கண்ணி, *s.* A woman with painted eyes, (*lit.*) she whose eyes have absorbed paint.

முலையுண்ணுங்குழந்தை, *s.* An infant at the breast.

நீலமுண்டதுகிலிகை. The pencil which has imbibed blue paint. (நன்னூலுரை.)

கள்ளுண்ணி, *s.* A drunkard.

தள்ளுண்ண, *inf.* To be rejected.

வீண்சோறுண்ணி, *s.* A rice consumer, a worthless person.

உண்டல். A past verbal form of உண்ணல், eating.

உண்டா, கிறது, னது, கும், க, *v. n.* To come into existence, to rise into being, happen, occur, take place, become, to be formed, to form, to concrete, உளதாக. 2. To become, to be made or created, தோன்ற. 3. To be conceived, to have origin, கருவுண்டாக. 4. To grow as vegetables, thrive, flourish, to be produced, be productive, &c., முளைக்க. 5. To become rich, wealthy, opulent, to prosper, செல்வமுண்டாக; [*ex* உள்.] (*c.*)

உண்டாயபோழ்திலுடைத்தூதிக்காகம்போற்றொண்டாயிரவர்தொகுபவே. Thousands crowd about the wealthy as crows about a corpse. (நாலடி.)

எனக்குண்டானவுடைமை. My property.

உலகமுண்டானமுதல். From the creation of the world.

பிள்ளையுண்டாயிருக்கிறவள். A pregnant woman.

சதுரக்கள்ளிபிலகிலுண்டாகும். In the prickly pear grows the (fragrant) agillochum.

உண்டாயிருக்க, *inf.* To have, belong to, exist.

அவளுக்குநாலுமாதமுண்டாயிருக்கிறது. She is advanced four months in pregnancy

உண்டானவன், *appel. n.* One who has wealth—as உள்ளவன்.

உண்டாக்கு, கிறேன், உண்டாக்கினேன், வேன், உண்டாக்க, *v. a.* To make, cause to exist, create, effect, occasion, generate, படைக்க. 2. To raise crops, trees, &c., to propagate, cultivate, விளைவிக்க. 3. To raise to affluence, enrich, விருத்திக்கப்பண்ண. 4. To produce, form, உண்பெண்ண; [*ex* உள்.] (*c.*)

உண்டாக்கிவைக்க, *inf.* To raise one, to establish in life.

அவரனேகரையுண்டாக்கிவைத்தார். He has been the making of many.

கதையுண்டாக்க, *inf.* To fabricate a story. 2. To spread a rumor.

உண்டி, *s.* Food, sustenance, eatables, உணவு. 2. Boiled rice, சோறு. 3. The food of carnivorous animals, இரை. (சேந்தன்திவாகரம் and திவாகரம்.) 4. (பாரதிநிகண்டு.) The food of birds and beasts in general, பறவைவிலங்கிவற்றினுணவு. Four kinds of eating are enumerated, viz.: 1. உண்டல், eating without mastication—as boiled rice, &c. 2. தின்றல், masticating, chewing—as meat, curries, &c. 3. நக்கல், licking—as honey, molasses, lapping. 4. பருகல், drinking, sucking—as a child. Sometimes a fifth is added, viz.: மென்றல், chewing—as spices, pungents, leaves, &c. kept in the mouth.

உண்டிசுருங்குதல்பெண்டிர்க்கழகு. It is becoming in a woman to eat little.

பேருண்டி, *s.* A principal meal—as dinner, &c., போசனம். 2. Eating to excess, gluttony, gormandizing, பெருந்தீன்.

சிற்றுண்டி, *s.* A light meal—as luncheon, tiffin, பலகாரம். 2. Eating sparingly, சிறுதீன். 3. A kind of small cake, அப்பவருக்கத்தொன்று.

உண்டி—உண்டிகை, *s.* A bill of exchange, உண்டியற்சீட்டு. 2. A treasury box, an alms box, பொக்கசப்பெட்டி. 3. A box in which the tax money is deposited.

உண்டிகைச்சீட்டு—உண்டியற்சீட்டு, *s.* A bill of exchange, உண்டிப்பத்திரம்.

உண்டியல், *s.* A bill of exchange, a draft, உண்டிச்சீட்டு. 2. A treasury box, an alms box, உண்டிகை. (continental usage). 3. That part of the offering which is reserved for the use of the temple, கோயிற்குச்சேர்க்கும்பணம் [*ex* உண்டி, existing].

உண்டு, [*ex* உள்.] Third pers. neut. sing. of the symbolic verb உள், but now used with all persons, in both numbers and in both திணை, it is, it exists, there is, there was, there are, there may be, there might be, &c. In some connexions, it implies a degree of uncertainty, குறிப்புவினைமுற்று. 2. Existing, existence, a thing that exists, உள்ளது. This and the participle உள்ள, (with its appellative) are the only parts of the verb, generally brought into colloquial use.

எனக்குத்தெய்வமுண்டு. God is my help, (எனக்கு is often omitted)—spoken of one when deserted, ill-treated, &c.

அதற்குநானுண்டவனுண்டு. This concerns him and me exclusively (you need not meddle with it). 2. He and I are responsible for that.

உண்டில்லையெனல். Either affirming or denying.

உண்டுபட, *inf.* [*prop.* உண்டாக.] To come into existence, to become formed or produced by natural process evident to the senses, to happen, occur, நேர்ந்த. 2. To have origin, உண்டாக. 3. To grow, thrive, flourish, முளைக்க.

உண்டுபட்டனவெல்லாமழியும். All that is created will perish, or be reduced to its primeval elements.

இதிலுப்புண்டுபட்டது. Salt is formed here.

அங்கேயொருகலகமுண்டுபட்டிருக்கிறது. An insurrection is sprung up there.

உண்டுபடுத்த, *inf.* [*prov. prop.* உண்டுபண்ண.] To make, create, &c.—as உண்டாக்க. 2. To fabricate, make a false story, எற்படுத்த.

வேதம்உண்டுபடுத்தியசேர்த்திவியாதமுனி. Vedaviasar renowned as the compiler of the Vedas. (திருச்.)

உண்டுபண்ண, *inf.* To make, bring into existence.

உண்டுபண்ணிவைக்க, *inf.* To make, to establish, render permanent. 2. To rear plants, &c. 3. To establish one in life.

உண்டென, *inf.* To say it is. 2. [*vul. adverbially.*] Much, exceedingly, more, நிரம்ப.

உண்டெனத்தரவேண்டும். Give me more, give me liberally.

உண்டுகம், *s.* The பெருவாகை tree, Mimosa, *L.*

உண்டை, *s.* A ball, bowl, a globe, a sphere, a bullet, any thing round or globular, commonly rather small, உருண்டை. 2. A bolus, a pill, magical pill, குளிகை. 3. A cake—as சிற்றுண்டி. 4. A weaver's woof, weft, உண்டைநூல். (probably a contraction of உருண்டை) 5. (*p.*) A division of an army, படைவகுப்பு.

உண்டைநூல், *s.* Woof, weft.

உண்டையாய்ச்சுற்ற, *inf.* To wind bobbins or balls.

உண்டையும்பாவும். The woof and warp.

நூலுண்டை, *s.* A ball or clew of thread, cotton, &c. 2. A weaver's bobbin or quill.

உண்ணா—உண்ணாக்கு, *s.* The uvula, அண்ணம்; [*ex* உள்.] (*c.*)

உண்ணி, *s.* The acarus or tick on sheep, dogs, cows, &c., ஒருசெந்து. 2. A kind of wart or mole on the body, பாலுண்ணி.

சருகுண்ணி, *s.* A tick frequenting woody places.

தவிட்டுண்ணி, *s.* Sheep or cow-tick.

நாயுண்ணி, *s.* A dog-louse.

குடவுண்ணி, *s.* A larger kind of tick.

உரியர்—உரியார்—உரியோர், *s.* Proprietors, உடையவர்கள். 2. Heirs, சுதந்திரர். 3. Near or responsible relations, சம்பந்தமுடையார். 4. The learned, அறிஞர்.

அன்பிலாரெல்லாந்தமக்குரியர்அன்புடையர்என்புமுரியர்பிறர்க்கு. Those destitute of love live only to themselves, whereas they who possess it are ready to give up their lives (*lit.* bones) for others. (குறள்.)

உரியவன்—உரியன்—உரியோன், *s.* Proprietor, owner, உடையவன். 2. Heir, சுதந்திரன். 3. A near relation, இனத்தான். 4. One worthy of, deserving of, தக்கவன். 5. (*p.*) Husband, கணவன்.

கொலைக்குரியவன், *s.* One who is worthy of death.

இழவுக்குரியவன், *s.* One whose duty it is to perform funeral rites.

எனக்குரியவன், *s.* One near to me by the ties of consanguinity, friendship, relation, caste, country, &c.

உரியள்—உரியாள், *s.* A wife, மனையாள். (*p.*)

உரிவை, *s.* Skin, hide, leather, தோல். 2. Peel, rind, bark, மரவுரி; [from உரி, to strip.] (*p.*)

[illegible] [illegible] the skin of an elephant. ([illegible])

உரு, *s.* Form, appearance, shape, figure, fashion, வடிவு. 2. Beauty, அழகு. 3. Body, உடல். 4. Appearance, an indistinct object, தோற்றம். 5. Image, idol, statue, விக்கிரகம். 6. A vessel, a dhoney, a ship, &c., கப்பல். 7. An article, a piece, different things counted, உருப்படி. 8. A course of recitation of prayers, incantations, &c., செபர்திரு. 9. Divinity, divine influence, power, grace, &c. brought in to a person or idol by the repetition of incantations, சன்னதம். (ஜ. 297.) 10. Bigness, பருமை. 11. (*p.*) Color, நிறம். 12. A leech, அட்டை. 13. Inner part, interior, centre, உள். 14. (சது.) Disease, வியாதி. 15. Anger, signs of anger, கோபம். 16. Heat, வெப்பம். 17. The embryo, கரு.

ஐந்துருவருகிறது. Five vessels are coming.

தூரத்திற்காண்கிறவுருவென்ன? What is that form or object seen in the distance?

உருக்குலைய, *inf.* To become dismembered, to be disunited—as the parts of a dead body—as a lock, parts of a house, &c., to become loose, deranged, disorganized, வடிவக்குலைய. 2. To be emaciated—as one in disease, வடிவக்கெட.

உருக்கொள்ள, *inf.* To become formed, or conceived in the womb, கருக்கொள்ள. 2. To assume shape, வடிவமெடுக்க. 3. [*prov.*] To possess a person—as a demon for the sake of uttering oracles, ஆவேசக்கொள்ள.

உருச்செபிக்க—உருப்போட, *inf.* To repeat a course of prayers, &c., மந்திரமுருப்போட.

உருத்தரிக்க, *inf.* To become shaped, &c.—as the fetus when advancing towards maturity, வடிவங்கொள்ள.

உருநாட்டு, *s.* [*prov.*] An idol, statue, விக்கிரகம்; [*ex* நாட்டு.]

உருப்பட, *inf.* To be formed, shaped, உருவாக. 2. To prosper, rise to eminence, சீர்ப்பட.

உருப்படி, *s.* A piece, any article counted.

இக்கோற்பதுஉருப்படிசீலையிருக்கிறது. Here are forty pieces of cloth.

பத்துருப்படி. Ten things, articles, utensils.

உருப்படுத்த, *inf.* To form in the womb, கருவிலுருவாக்க. 2. To mould, shape, to form—as the work of a smith, a mason, &c., உருவாக்க.

உருப்போட, *inf.* To reiterate incantations for expelling a disease, poison, &c. 2. To repeat or rehearse a lesson frequently, in order to learn it by heart.

உருமாற, *s.* To change one's shape, metamorphose one's self as the Rishis are reputed to do, வேற்றுருக்கொள்ள. 2. To become changed in countenance—as by disease, &c., சரீரம்வேறுபட.

உருவழிய, *inf.* To become disfigured by disease, to become deformed.

உருவாக, *inf.* To obtain form, shape, &c., வடிவமாக.

உருவாக்க, *inf.* To form, shape, fashion, make, mould—as the work of a smith or mason, உருச்செய்ய. 2. To repair, complete, சீர்ப்படுத்த.

உருவிலி, *s.* Kama, காமன். (*p.*)

உருவில்லாதது, *s.* A thing without form or shape, without beauty.

உருவிழக்க, *inf.* To lose one's proper appearance, become changed in shape, color, &c., வடிவமிழக்க.

உருவுவமம், *s.* [*in rhetoric.*] A kind of comparison from analogy—as when a ship at sea is compared to an elephant in an army, வடிவுவமை.

உருவெடுக்க, *inf.* To become formed, conceived in the womb, (*lit.*) to take a body or form—as the soul according to the deeds of former births, வடிவெடுக்க. 2. To assume a shape—as in transmigrations, incarnations, and transient appearances of a deity, &c., வேஷங்கொள்ள.

உருவெளி, *s.* An imaginary appearance of a person, or other objects, a visionary object, an illusion, chiefly applied to the supposed sight of an absent lover, உருவெளித்தோற்றம். (*p.*)

உருவெளிக்காட்சி—உருவெளித்தோற்றம்—உருவெளிப்பாடு, *s.* The imaginary appearance of an absent lover. See above.

உருவெளிப்பட, *inf.* To appear—as a visionary object, உருவம்வெள்ளிடையிற்றோன்ற.

உருவேற, *inf.* To rise or increase in numbers—as the repetition of prayers or incantations, மந்திரவுருவதிகரிக்க. 2. To be possessed of a demon for the utterance of oracles, ஆவேசமேற. 3. (*fig.*) To become furious, to fall into a fit, மூர்க்கமதிகரிக்க.

உருவேறத்திருவேறும். Divine power will be acquired in proportion to the reiteration of the incantations.

உருவேற்படுத்த, *inf.* To form, to fashion, உருவமுண்டாக்க.

உருவேற்ற, *inf.* To reiterate incantations for expelling a disease, poison from the bite of a snake, &c., மந்திரத்தையதிகமாய்ச்செபிக்க. 2. To cause a demon to possess some one for the purpose of uttering oracles, ascertaining future events—as that a sick friend can be restored to health, ஆவேசமேற்ற. 3. To instigate one for the performance of an evil action, துர்ப்போதனைசெய்ய.

மனுவுரு, *s.* The form of a man.

சிற்றுரு, *s.* Any thing small. 2. A small vessel, a bark.

*உரு, *adj.* Much, excessive, அதிகமான. 2. Large, great, பெரிய. 3. Long, நீண்ட. 4. Valuable, precious, விலையுயர்ந்த. Wils. p. 163. Uru.

உரு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To be angry, be provoked, be fierce, to rage, கோபிக்க. 2. To exhibit signs of anger, சினக்குறிப்புக்காட்ட. 3. To be abundant, copious, மிக. 4. To be intense, அதிகரிக்க. 5. To be great, பெரிதாக. 6. To sprout, shoot, முளைக்க. 7. To have an origin, come into existence, to be evolved, வெளிப்பட. 8. To appear, assume form, தோற்ற. 9. To result in effects—as the deeds of former births, to grow mature, கன்மம்விளைய. (*p.*)

சல்லறமேயுருத்தெழுந்திடுமௌவைசுந்தாய். Oh! venerated mother, virtue personified.

வெவ்வினையுருத்தகாலை. When the vile deeds (the fruits of them) appeared. (சிலப்பதிகாரம்.)

ஊழ்வினையுருத்தெண. As soon as the deeds connected with former births had become matured. (சிலப்பதி.)

உருத்தல், *v. noun.* Being angry, கோபித்தல். 2. Appearing, தோற்றல். 3. Abundance, மிகுதி. 4. Sprouting, shooting, முளைத்தல். (*p.*)

உருப்பு, *v. noun.* Abundance, copiousness, intenseness, மிகுதி. (பாரதி.)

*உருகம், *s.* Origin as from seeds, &c., growth, production, birth, பிறப்பு; [*ex* ரு, to grow, arise.] See பங்கேருகம், அம்போருகம், சரோருகம். Wils. p. 708. Ruha.

உருகு, கிறேன், உருகினேன், வேன், உருக, *v. n.* To dissolve with heat, to melt, liquify, to be fused, கரைய. 2. (*fig.*) To become tender, to melt as the heart, to be kind, be appeased, to sympathize, commiserate, pity, இரங்க. 3. To glow with love, மனங்கரைய.

உருகோட்டன்பொடு. With melting love. (சித்தியார்.)

நெருப்பினுலுருக்கப்பட்டவரக்குப்போலவுள்ளமுருகி. His heart melting like wax before the fire—

அரக்குப்பாவைபோலத்தேவர்களுடலுருகின. The gods whose bodies melted, through want of air, like wax statues.

மனமுருக, *inf.* To be kind, to pity, sympathize.

உருக்கம், *v. noun.* Melting (of heart), tenderness, pity, compassion, commiseration, sympathy, இரக்கம். 2. Tender or ardent love to a deity, or a dear friend, அன்பு. 3. Melting, உருகுகை.

உருக்கங்காட்ட, *s.* To show kindness, to relent, &c.

மனவுருக்கம், *s.* Tenderness of mind.

உருக்கம், *s.* The thighs, தொடை. (சது.) (*p.*)

உருக்கு, *s.* Steel, எஃகு. (*c.*)

உருக்குமணல்—உருக்குமண், *s.* Iron-ore, iron-sand.

உருக்கு, கிறேன், உருக்கினேன், வேன், உருக்க, *v. a.* To melt with heat—as metals, or other congealed substances, to dissolve, liquify, fuse, run, தீயிற்கரைக்க. 2. To reduce one as a disease, to emaciate, வாட்ட. 3, To afflict, distress, வருத்த. (சது. 21.)

இன்சொல்லிறைநெஞ்சுருக்கினன். By sweet speech, he melted the heart of the divinity. (சிவசிவ.)

வியாதிசரீரத்தையுருக்கிப்போட்டது. The disease has emaciated him.

எத்தனையுருக்கிலேயுருக்கினன்? How many times did it take to melt it?

நன்னாளிற்பொன்னுருக்கு. Melt gold on an auspicious day.

உருக்கிச்சாய்க்க, *inf.* To cast or run metals in bars, in mass, &c. for further use.

உருக்கிவார்க்க, *inf.* To cast, found, to run metals.

உருக்குகாரம், *s.* Borax, வெண்காரம்.

உருக்குப்பிரமியம், *s.* Gonorrhæa with a discharge of blood, இரத்தப்பிரமியம்.

உருக்குமணி, *s.* Solid globules of gold soldered together around a ring and worn by women as an ear-pendent, ஓராபரணம்.

எலும்புருக்கி, *s.* An emaciating disease, ஓர்வியாதி.

உருக்கு, *v. noun.* Fusion, melting, liquifaction, உருக்குகை.

உருக்கன், *s.* [*prov.*] An emaciating or stinting disease—as of men or plantains, &c., ஓர்நோய்.

உருக்கனடித்தல், *v. noun.* Stinting or blighting—as disease especially in plantains.

உருக்கினம், *s.* A kind of arsenic, அஞ்சனபாஷாணம். 2. Any thing that facilitates the fusion of metals—as borax.

புத்துருக்குநெய், *s.* New-made ghee.

*உருக்குமணி, *s.* One of the wives of Krishna, கிருஷ்ணன்றேவி.

*உருக்குமம், *s.* Gold, பொன், Wils. p. 706. Rukma. (*p.*)

*உருசி, *s.* Taste, good taste, relish, gustation, flavor, சுவை. 2. Being pleasant to the ear, that which is delicious, exquisite, சந்தவின்பம். 3. Attraction, taking, allurement, enticement, இன்பம். 4. Best relish, மிகுசுவை. Wils. p. 707. Ruchi.

உருசிகரம், *s.* Pleasantness, tastefulness, deliciousness, மதுரம். 2. Dainties, இனிப்புள்ளவை. Wils. p. 707. Ruchikara.

உருசிகரமாயிருக்க, *inf.* To be well-seasoned.

உருசிகாட்ட, *inf.* To allure by baits, dainties, shows, &c.; to cause one to engage in, or relish a pursuit, by giving a gratifying fore-taste, இனிப்புக்காட்ட. 3. To attract, entice, decoy, ஆசைபதக்காட்ட.

உருசிகாண, *inf.* To be attracted, allured, decoyed by bait, a taste, experience, profit, &c., உருசியறிய.

உருசிதட்ட, *inf.* To be sweet, pleasant, சுவைதோன்ற.

உருசிபார்க்க, *inf.* To taste, prove, examine, or ascertain by tasting, சுவையறிய.

உருசிப்பட, *inf.* [*with dative.*] To relish, be sweet, taste well, உருசியாயிருக்க. 2. [*with dative of pers. or thing.*] To like, be taken with, to have relish for, or to be fond of pursuit, employment, &c., பிரியமாயிருக்க.

நாவுக்குஉருசிப்பட, *inf.* To have a special liking for any kind of food.

நாவுக்குருசிபாவுக்குருசி. That which is agreeable to the tongue will be so to poetry.

உருசிப்படுத்த, *inf.* To cause one to relish, like, &c.; to excite desires, உருசிக்கச்செய்ய. 2. To impart flavor, make relishable, to season, சுவைப்படுத்த.

உருசிப்பேச்சு, *s.* An alluring discourse.

உருசியறிந்தவன், *s.* One who has tasted any thing.

உருசியானபாடல், *s.* A euphonious poem.

உருசியானவுணவு, *s.* Delicious food.

உருசிவருக்கங்கள், *s.* Dainties, delicacies.

அதிகவுருசி, *s.* Daintiness, delicacy.

உருசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To experience, enjoy, or suffer the fruits of actions, அனுபவிக்க. 2. [*prov.*] To taste, prove by the taste, சுவைபார்க்க.

உருசி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To relish, to be tasteful, be pleasant to the senses, சுவைதோன்ற.

அதனைக்குருசிக்கிறது. I like that.

வேம்புருசிக்குமோ? Can one relish, or like the taste of the margosa tree?

உண்ணமுதினுருசிக்குமுருவசி. Urvasi, delectable as ambrosia to the taste—

உருசு, *s.* (*Hin.*) Proof, திருஷ்டாந்தம்.

உருசுப்படுத்த—உருசுவாக்க, *inf.* To prove, verify, மெய்ப்பிக்க.

உருசை, *s.* impr. for உருசி; which see.

உருட்டு, கிறேன், உருட்டினேன், வேன், உருட்ட, *v. a.* To roll a ball, or wheel, trundle a hoop, &c., to wheel a barrow, to bowl, turn about, revolve a thing on a plane, to whirl, (a discus, &c.), passing through the air at right angles with the horizon, உருளச்செய்ய. 2. [*prov.*] To defeat a rival by arguments, sophistry, &c., to overcome in athletic exercises, games, to overmatch, வெல்ல. 3. To beat a drum rapidly, to beat a ruffle, மத்தளம்விரைவாயடிக்க. 4. [*in architecture.*] To form a moulding, திரட்ட. 5. To form clay or other substances into balls or globules by rolling, working in the hand, &c; குண்டுருட்ட; [*ex* உருள், *v.*]

உலகுக்குநாயகனுயோராழிதனியுருட்டி. Guiding the wheel of power as the sovereign of the universe.

அவனைப்புடையனுருட்டும். The beaver snake will bite, will tumble him over (and bite him). (A curse.)

உருட்டித்தைக்க, *inf.* To roll and sew a border—a kind of hemming.

உருட்டிப்பார்க்க—உருட்டிவிழிக்க, *inf.* To roll the eyes and look intently with signs of anger or intimidation.

உருட்டிப்போட, *inf.* To roll a ball, &c. 2. To defeat by arguments, by a display of skill, or by sophistry, to overcome in games, &c., புரட்டிவிட, 3. To be the cause of ruin to a family, &c., அழித்துப்போட.

அசத்தியமக்குடியையுருட்டிபோட்டது. Perjury has ruined the family.

ஆனையவனையுருட்டிப்போட்டது. The elephant rolled him over and over.

உருட்டுதிரைக்கடல், *s.* The sea with rolling billows.

குளிகையுருட்ட—மாத்திரையுருட்ட, *inf.* To form or make pills. (*Med.*)

நாயுருட்ட, *inf.* To tumble down and bite—said of a dog.

வாயாலுருட்ட, *inf.* To use sophistry, to dispute clamorously.

கவறுருட்ட, *inf.* To throw dice.

உருட்டு, *v. noun.* Rolling, revolving on a plane, the revolution or turning of a wheel, whirling, உருட்டுகை. 2. Fraud, artifice, trick, sophistry in overcoming an antagonist, புரட்டு. 3. [*in architecture.*] Roundness, globosity, moulding. திரட்சி. 4. Terrifying, frightening, driving away, வெருட்டு.

உருட்டும்புரட்டுஞ்சிரட்டையுங்கையும். Prevarication and lying lead to begging. [*prov.*]

உன்னுடையவுருட்டுக்குப்பயப்படேன். I fear not your sophistry.

உருட்டுப்புரட்டுள்ளவன், *s.* A man of tricks and frauds.

உருட்டுவண்ணம், *s.* A poem, or song composed of syllables occurring in rapid succession.

குண்டுருட்டு, *s.* The roundness of a bullet or ball.

குண்டுருட்டாய்க்கட்ட, *inf.* To tie up a person head to heels.

பொன்னுருட்டு, *s.* A gold ring without seal or stone.

உருண்டை, *s.* A ball, a bowl, a globe, any thing round, உண்டை. 2. Roundness, globularness, திரட்சி.

உருண்டைப்பலகாரம், *s.* Balls of cake, rounds of cake.

உருண்டையுருட்ட, *inf.* To form balls of clay, boiled rice, &c., to make pills.

*உருத்திதம், *s.* Property, உரியபொருள். 2. Profit obtained by a trade or work, தொழிலிலாபம். 3. Interest for money, வட்டி. 4. Increase, வளர்தல். Wils. p. 160. Ridit'hi. (*p.*)

*உருத்திரம், *s.* Fury, violent anger, rage, பெருங்கோபம்—as இரௌத்திரம்; which see. 2. [*in rhetoric.*] Warlike rage as one of the nine emotions of the mind expressed by poetry, நவரசத்திலொன்று. (*p.*) 3. Turmeric, Curcuma longa, மஞ்சள்.

உருத்திராகாரமாய்வந்தான். He came in a furious attitude.

உருத்திரபஞ்சமம், *s.* One of the musical modes, ஓர்பண்.

உருத்திரரோகம், *s.* Asthma, மாரடைப்பு.

உருத்திரன், *s.* A furious person, பெருங்கோபி.

உருத்திரன், *s.* The god Siva who disperses the tears of mortals and demigods, சிவன்; [*ex* ருத், to weep.] Wils. p 707. Rudra.

உருத்திரகணிகை, *s.* A courtezan of Siva, a dancing girl of one of his temples.

உருத்திரசடை, *s.* A plant, சிவதுளசி, Ocimum basilicum.

உருத்திரர், *s.* A class of demigods, inferior manifestations of Siva being eleven in number, viz: மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன். Wils. p. 707. RUDRA.

உருத்திரவீணை, *s.* A species of guitar, ஓர்வகையாழ்.

உருத்திராக்கம்—உருத்திராட்சம், *s.* The nuts of the Elæocarpus ganitrus, worn as beads by religious mendicants of the Siva sect, உருத்திராட்சமணி; [*ex* அட்சம், eye.] Wils. p. 708. RUDRAKSHA.

உருத்திராட்சதாழ்வடம், *s.* A large garland or necklace of the sacred beads or the nuts of the Elæocarpus.

உருத்திராட்சமணி, *s.* A bead as worn by mendicants' widows.

உருத்திராட்சமுகம், *s.* The figures or lines on religious beads.

உருத்திராணி—உருத்திரை, *s.* Parvati, பார்ப்பதி. Wils. p. 708. RUDRAN'EE.

உருத்திராபிஷேகம், *s.* A libation performed by pronouncing the incantation called Rudramantra.

*உருந்திரோற்காரி, *s.* The fifty-seventh year of the sixty which form the Hindu cycle. See வருடம்.

உருபு, *s.* Form, shape, வடிவம். 2. [*in grammar.*] A class of particles comprising four kinds, viz.: 1. வேற்றுமையுருபு, the particles which form the declensions. 2. வினையுருபு, those that form the inflections of verbs including three species, (*a*) விகுதி, verbal terminations. (*b*) இடைநிலை, characteristics of tense and several other intervening particles in the formation of verbs, derivative nouns, &c. 3. சாரியை, auxiliary, component particles employed in the formation of the two classes of verbs. 4. ஒப்புருபு, particles of terms of comparison. 5. The relative participles, ஆகிய, ஆன, &c., affixed to nouns to make adjectives of them.

உருபுத்தொகை, *s.* The suppression of the characteristics of the cases —as மாறனி.

உருபுப்புணர்ச்சி, *s.* Sand'hi—the union of the particles of inflections with nouns and pronouns, வேற்றுமையுருபுமுதலிய புணர்ச்சி.

உருபுமயக்கம், *s.* The use of one case for another—as the dative for the local ablative, &c., வேற்றுமையுருபுமாறுகை.

அமுதம்பூவையைக்கிள்ளையையருந்தி. Feeding the minor and parrot with milk—here the objectives are used for the dative. (நைட.)

உருபுமாலை, *s.* Declension of nouns.

உருபுவிரி, *s.* The expression of the case—as மரத்தினுனி.

உவமையுருபு, *s.* A particle of comparison—as மதிபோலுமுகம், face like the moon.

சொல்லுருபு, *s.* The use of a word for a particle representing the case—as, தடிகொண்டடித்தான், He beat with a stick—here கொண்டு is used for ஆல்; அவனேக்காட்டிலும்வலியன். This person is more powerful than the other.

*உருப்பசி, *s.* One of the courtezans of *Swerga*, தேவதாசிகளிலொருத்தி. See உருவசி. (*p.*)

உருப்பசிவெள்ளடையுதவ. Urvasi presenting betel.

உருப்பம், *s.* Heat of the sun, or temperature of the atmosphere, உஷ்ணம். 2. Abundance, copiousness, greatness, intenseness, மிகுதி. 3. Millet flour, தினைமா. 4. Anger, கோபம். (*p.*)

உருப்பிரமம், *s.* A sheep's horn, ஆட்டுக்கொம்பு.

உருமம், *s.* Heat of the sun, the heat of the atmosphere, sultriness, closeness, உஷ்ணம். 2. Noon, noon-day, மத்தியானம்.

விட்டபாம்புசெத்துப்போமுருமத்திலேன்போறீர்?... Why do you go out in the middle of the day when it is so hot, that a snake let loose would die?

உருமகாலம், *s.* The hot season.

உருமத்துக்குவிட, *inf.* [*prov.*] To cease at noon, as from learning, labor, &c., மத்தியானநேரத்தில்விட.

உருமவிடுதி, *s.* [*prov.*] The midday release, cessation, &c.

உருமவேளை, *s.* Noon, mid-day.

உருமிக்க, *inf.* To be hot, sultry, close—as weather, உஷ்ணிக்க.

உருமலைவாரி, *s.* Sand containing metal, உலோகமணல்.

உருமு—உருமேறு, *s.* A thunderbolt, இடி. (*p.*)

உருகெழுகணையொலியுருமு. Very loud thundering of the tremendous arrows.

உருமுக்குரல், *s.* A terrific, thundering noise.

உருமுக்குரனாய், *s.* A dog whose bark alarms

உருமு—உரும், *s.* A thunder-bolt, இடி. 2. Fear, dread, alarm, அச்சம். (*p.*)

உரும்பரம், *s.* Copper, செம்பு. 2. Assafœtida, Narthe assafœtida, பெருங்காயம். 3. A serpent, சர்ப்பம். (*p.*)

உருவகம்—உருவகவணி, *s.* [*in rhetoric.*] Identification of the objects of comparison, metaphor in general, comprising many species, உவமானஉவமேயங்களையொற்றுமைப்படக்கூறுகை. See உருபகம்.

உருவகப்படுத்த, *inf.* To speak metaphorically.

உருவகவுருவகம், *s.* A double metaphor—as, கன்னிதன்கொங்கைக்குவடாக்க டாக்களிற்றை, the elephant-mountain-breast of the damsel.

உருவகி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To metaphorize, உருவகப்படுத்த.

*உருவசி, *s.* A courtezan of Swerga, உருப்பசி. Wils. p. 163. URVASHEE.

உருவம், *s.* Shape, form, figure, likeness, features, gestures, &c., வடிவம். 2. Beauty, symmetry, அழகு. 3. Image, idol, statue, சொரூபம். 4. Body, human or other, உடல். 5. (*p.*) Color, good color, நிறம்.

உருவத்தார்புனைவளைத்தவெண்டொடி. Adorned with bracelets, the damsel came to invest her lover with a beautiful garland. (நைட.)

உருவங்காட்டி, *s.* A glass, mirror, looking glass.

உருவசாத்திரம், *s.* The knowledge of the shape, feature, lines, &c., of the human body, including palmistry and physiognomy, considered as indicating the moral and mental characteristics of the individual. See லக்ஷணம்.

உருவமாற, *inf.* To be transformed.

உருவமெடுக்க, *inf.* To assume a form—as a deity, வடிவமெடுக்க.

உருவல், *s.* A kind of pendent or ear-drop, ஓர்காதணி.

உருவாணி, *s.* [*prov.*] An emaciated body, barebones, மெலிந்தவுடல்.

உருவாணிபற்ற, *inf.* To grow lean, to be emaciated.

உருவாரம், *s.* A kind of cucumber, வெள்ளரி, Cucumis utilissimus, *L.*

உருவி, *s.* A plant, நாயுருவி, Achyranthes aspera, *L.* 2. A parasite, புல்லுருவி. 3. Solanum Indicum, முள்ளி.

உருவியுப்பு, *s.* A kind of medicinal salt, சுவுருவியுப்பு.

உருவு, *s.* Fear, dread, alarm, அச்சம். (*p.*) 2. Form, shape, வடிவம்.

உருவு, கிறேன், உருவினேன், வேன், உருவ, *v. a.* To unsheath, draw out of a case or sheath, வாள்முதலியவற்றையுருவ. 2. To draw between the finger and the thumb—as a hair, thread, straw, &c., to free it from oil, moisture, &c.: or a necklace, to remove the beads; or a tamarind twig, to remove the leaves, &c., தழைமுதலியவுருவ. 3. To draw the hand with pressure down a limb, or any part of the body, to allay pain, inflammation, &c., also down a pole, or other cylindrical body, சளுக்குமுதலியவற்றிற்குஉருவ. 4. To loosen or tighten a noose, சுயிற்றையுருவ. 5. To pierce through, penetrate, pass through, enter, or transfix, —as an arrow, a needle, &c., ஊடுருவ.

உருவினவாளுடனேவந்தான். He came with a drawn sword.

நெஞ்சிலம்புபட்டுருவிற்று. The arrow reached the heart and pierced it.

மெல்லெனப்பாயுந்தண்ணீர்கல்லையுமுருவப்பாயும். Gently flowing water will wear away even a rock.

அவன்மார்பையுருவிப்புறப்பட்டது. (The dart) entered his breast and passed through him.

கத்தியையுருவினன். He drew his sword.

கீரையையுருவிப்போடு. Strip off the pot-herbs or greens.

ஆற்றையுருவநடக்க. To ford, or wade through a river.

உருவக்குத்த, *inf.* To stab, pierce, transpierce, transfix.

உருவத்துளைக்க, *inf.* To bore through, or into, as with an instrument, or as beetles and other insects.

உருவத்தைக்க, *inf.* To stitch through. 2. To nail through, transfix. 3. To pierce, or pass through—as a thorn, a weapon, a nail, &c.; *ex.* ஆணியுருவத்தைத்தது, the nail is gone through.

உருவுண்டுபோக, *inf.* To slip off—as beads from a string, to become loose, or to slip through, or become tight as a noose.

உருவுதடம், *s.* [*prov.*] A noose, சுருக்கு.

உருவொளி, *s.* Transparency, translucency.

உருவுள்ளு, *s.* Gram, கொள், Dolichos uniflorus. (பிங்.) (*p.*)

உருளி, *s.* Diathrasis, or socket and ball in a joint, பாகிகையின்மூட்டு. (*Anat.*)

உருளிபுரள—உருளிபெயர, *inf.* To be dislocated, &c.—as a joint.

உருளிப்பெயர்வு, *v. noun.* A dislocation, எலும்புப்புரட்சி.

உருளியெடுக்க, *inf.* To set a dislocated joint.

உருளை, *s.* Any thing that rolls, or turns as a ball, a bowl, a wheel, &c., உருண்டை. 2. The wheel of a carriage, தேருருள். 3. A kind of arsenic, வெள்ளைப்பாஷாணம்.

உருளைக்காந்தம், *s.* A kind of loadstone.

உருள்—உருளை, *s.* A carriage-wheel, தேருருள். 2. (*p.*) The fourth lunar mansion, உரோகணி. 3. A wheeled carriage, பண்டி. 4. A circle, வட்டம்.

உருளரிசி, *s.* A spice, coriander seed, கொத்துமல்லி, Coriandrum sativum.

உருள்—உருளு, கிறது, உருண்டது, உருளும், உருள, *v. n.* To turn about as a wheel, or dice, to roll, bowl, trundle, tumble over and over, revolve on a plane, spin or whirl—as a thrown discus, at right angles with the horizon, புரள. 2. To become round, grow globular, திரள. 3. (*c.*) To perish, die in numbers—as in battle, by an epidemic, &c.; to waste—as wealth, &c.; to become extinct, be exterminated, அழிய.

உருண்டுபோவாய். May you die. (An imprecation.)

அவன்கூட்டமெல்லாமுருண்டுபோயிற்று. His whole circle is extinguished.

காணுப்பிணமாயுருண்டுபோகிறது. To die unnoticed.

கொள்ளைநோயிலநேகருருண்டுபோனார்கள். [*vul.*] Many were carried off by the pestilence.

உருண்மணி, *s.* The polished or rounded gem. (பா.)

உருளாதவிழுநிதியம், *s.* Inexhaustible splendid wealth. (அறநெறி.)

மணிமணியாயுருளல், *v. noun.* Becoming round globules or grains.

உருளுநேமி, *s.* The whirling discus.

உருள்தடந்தேர், *s.* A large rolling car. (குறள்.)

உருட்சி, *v. noun.* Rotundity, globosity, globularness, திரட்சி. 2. Revolving as a wheel, சில்லுருட்சி.

உருட்சியானமுகம், *s.* A round face.

முத்துருட்சிமணி—முத்துருளைமணி, *s.* Pearl-like gold beads.

*உரூடம், *s.* A word of unknown origin, இடுகுறி. 2. Fame, notoriety, familiarity, பிரசித்தம். Wils. p. 708. Rud'ha.

உரூடபதம், *s.* A word underived.

*உரூடி, *s.* The Sanscrit name for words whose etymology is unknown; simple or primitive names of things, இடுகுறி. (in நன்னூலுரை by சங்கரநமச்சிவாயர்.) 2. What is famous or notorious, பிரசித்தமானது. Wils. p. 708. Rud'hi.

*உரூபகம், *s.* One of the seven modes of marking time in music, உரூபகதாளம். 2. Identification of the object of comparison, metaphor in general, comprising many species, உரூபகவணி. Wils. p. 709. Rupaka.

உரூபகாலங்காரம், *s.* Metaphor, metaphoric language, உரூபகவணி.

*உரூபகாரம், *s.* Proof, demonstration, திருஷ்டாந்தம்.

உரூபகாரப்பட, *inf.* To be proved or shown, மெய்ப்பட.

உரூபகாரப்படுத்த, *inf.* To prove, demonstrate, adduce evidence, மெய்ப்பிக்க.

*உரூபதன்மாத்திரை, *s.* The primitive element of sight, &c., பஞ்சதன்மாத்திரையிலொன்று.

*உரூபம், *s.* Form, shape, object of vision, appearance, image in the mind, வடிவம். 2. Image, idol, விக்கிரகம். 3. Beauty, அழகு. 4. Color, நிறம். 5. Posture, attitude, நிலை. 6. Features, lineament, சாயை. Wils. p. 709. Rupa.

எந்தரூபத்திலுந்தருவேன். I will give it in some shape or other.

உரூபசொரூபம், *s.* Object of sight, vision.

உரூபாரூபம், *s.* Form and formlessness—an attribute of சதாசிவம், as the fifth of the nine forms, or transmutations of deity. See நவபேதம்.

உரூபி, *s.* One that has shape, a person, a visible object, the opposite to அரூபி. 2. A fair, beautiful, or well-formed person. Wils. p. 709. Rupi.

*உரூபாய், *s.* A rupee, வெள்ளிநாணயம்; [*ex* ரூபயம், silver.]

உரூபி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To prove, evidence, demonstrate, identify, மெய்ப்பிக்க.

உரூபிகரம், *s.* A clear or visible manifestation, or appearance as of the deity, &c., உருப்சரிக்கை.

உரூபிகரி, க்கிறேன், த்தேன, ப்பேன், க்க, *v. n.* To appear as a deity, become manifested, assume a shape, visible or invisible—as the inferior gods, உருவப்பட. 2. To assume shape—as an embryo, to be formed in the womb—as the fœtus, கருவுருப்பட.

*உரூப்பியம், *s.* That which is handsome, beautiful, அழகுள்ளது. 2. Silver, வெள்ளி. 3. Wrought silver, வெள்ளிநகை. 4. Wrought gold, பொன்னகை. Wils. p. 709. Rupya.

உரை, *s.* Utterance, speaking, speech, பேச்சு. 2. A word, an expression, a sentence, a declaration, a saying, மொழி. 3. Explanation, interpretation, commentary, exposition, gloss, verbal renderings, &c., வியாக்கியானம். 4. Gold, பொன். 5. [*In native lexicons.*] The words for which synonymes or meanings are given, also the generic term of which the species are given, சொற்பயன. 6. Sound, ஒலி. 7. Eminence, உயர்ச்சி. 8. The written word, sacred writings, holy writ, as one of the three means of attaining knowledge, வேதமொழி; several kinds of உரை, or modes of explanation are given by Tamil Grammarians. The author of காரிகை has given four, viz.: 1. கருத்துரை, the main sentiment or scope of the text explained, also called தாற்பரியவுரை. 2. பதவுரை, verbal explanation, or interpretation, word by word, or clause by clause, also called கண்ணழிவுரை. 3. பொழிப்புரை, the substance of the text omitting rhetorical ornament, and adjuncts, or a free rendering of the text without interruption, also called பொழிப்புத்திரட்டுரை and பிண்டவுரை.—*Note.* The latter is the same as பதவுரை would be without the words of the text interspersed. 4. விரித்துரை, explanation at large, comment or exposition with proofs, illustrations, &c., also called அகலவுரை and விரியுரை; any of the preceding three, or any other kind of explanation may be included in this last. According to நன்னூல், உரை is divided into two general classes, viz.: காண்டிகையுரை and விருத்தியுரை. 1. காண்டிகையுரை, brief exposition, or explanation of the text embracing five sub-divisions. (*a*) கருத்துரை, the scope of the text. (*b*) பதப்பொருள், verbal rendering being either as பதவுரை or as the scope and definition of பொழிப்புரை, given above. (*c*) உதாரணம், example for illustration. (*d*) வினா, anticipating objections, (*lit.*) proposing questions. (*e*) விடை, answering such objections or questions as may possibly occur. 2. விருத்தியுரை, copious or complete explanation embracing fourteen sub-divisions. 1. பாடம், giving the text or verse to be explained with different readings and choice exposition. 2. கருத்துரை, the general scope, or import of the text, as in காண்டிகை. 3. சொல்வகை, giving the parts of speech, or showing the grammatical connection when necessary to clear away obscurities. 4. சொற்பொருள், giving equivalent, literal words, or clauses as பதப்பொருள், in காண்டிகை, verbal renderings, &c. 5. தொகுத்துரை, a free rendering of the text as பொழிப்புரை, above. 6. உதாரணம், illustration by examples, as above. 7. வினா, anticipating objections, or raising questions as before. 8. விடை, answering such objections or giving reasons in support of the statements in the text. 9. விசேடம், special explanation, particular remarks. 10. விரிவு, supplying ellipses as of cases or otherwise. 11. அதிகாரம், determining the meaning of doubtful terms by reference to the subjects under discussion, as belonging to such a head, &c., or according to another exposition pointing out the beginning and ending of the discussion of the different subjects respectively, the opinions of different commentators. 12. துணிவு, deciding the meaning of terms concerning which there may be diversity of opinion. 13. பயன், inference, applications or recapitulation to show what is to be learnt by the text. 14. ஆசிரியவசனம், quotations, or textuary proofs from other authors. (*p.*)

உரைகட்ட, *inf.* To comment on a work.

உரைகாரன், *s.* A commentator, expositor, உரையாசிரியன்.

உரைக்கோள், *s.* The construction given by the commentator to the text, உரைகாரன்கருத்து.

உரைசெய்ய, *inf.* To speak, declare, பேச. 2. To make a commentary, வியாக்கியானம்பண்ண.

உரைநூல், *s.* A work on which a commentary has been written, உரைபெற்றநூல்.

உரைபாடம்—உரையேடு, *s.* A work with its commentary.

உரையாசிரியன், *s.* [*used honorifically*] A commentator, உரைகாரன்.

உரையாட, *inf.* To say, speak, tell, சொல்ல. 2. To converse, dispute, பேச. (*p*)

என்றுரையாடிநெடுங்கடல்வண்ணனெழுந்தருள. Having said thus, Vishnu who wears the color of the broad sea condescended to start— (பார.)

உரையாயிருக்க, *inf.* To be in prose.

உரையிலக்கணம், *s.* Rules for making commentaries. There are five according to சதாசிவாதி, viz.: 1. பதம். 2. பதப்பொருள். 3. வாக்கியம். 4. வினா. 5. விடை.

உரையிற்கோடல், *v. noun.* Additions to a text by a commentator—one of the உத்தி.

உரையெழுத, *inf.* To write a commentary.

உரைவன்மை, *s.* Eloquence, oratorical power, சாதுரியப்பேச்சு. 2. Forcible language that cannot be controverted, சொற்றிட்பம்.

உரைவாசகம், *s.* Prose composition, discourse, language.

பாட்டுமுரையும், *s.* A poem with commentary.

திருவள்ளுவருரை, *s.* The explanation of Tiruvalluvar's book.

உரை, கிறது, ந்தது, யும், ய, *v. n.* [*vul.* உரைஞ்சு.] To be rubbed into a powder or paste, to wear away by attrition, to be indented, or effaced by rubbing, தேய.

காரியமெல்லாமுரைந்துபோயிற்று. The whole affair has proved abortive, it has come to nothing.

உரை, *v. noun.* Rubbing, friction, attrition, தேய்வு. 2. Touch of gold, or silver on the stone, assay, மாற்றறியுமுரை. 3. Gold for touching, பொன்.

உரைநயம், *s.* Superiority of gold or silver shown by the touch.

உரையறிகருவி, *s.* A touch-stone, உரையாணி. 2. A touch-needle, மாற்றறிவிக்குமாணி.

உரையாணி, *s.* A touch-needle.

உரையுண்ண, *inf.* To be rubbed.

உரைதல்—உரையல்—உரைவு, *v. noun.* Rubbing, உரிஞ்சுகை. 2. Waste by rubbing, friction, &c., தேய்வு.

உரை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To rub a substance held in the hand into a powder or paste, to wear away by rubbing, to grate, தேய்க்க. 2. To try by a touch-stone, to test, மாற்றறியவுரைக்க. 3. (*p.*) To speak, tell, say, declare, articulate, பேச. 4. To explain, teach, கற்பிக்க. 5. To sound, ஒலிக்க.

கீழோரானாலுந்தாழவுரை. Speak modestly even to your inferiors. (ஔவை.)

உரைகல், *s.* A touch-stone, பொன்வெள்ளியுரைக்குங்கல்.

உரைத்தசொல், *s.* A spoken word.

விரித்துரைக்க, *inf.* To explain at large, expatiate upon, amplify, dilate.

சந்தனமுரைக்க, *inf.* To rub down sandal wood into a paste.

குளிகையுரைக்க, *inf.* To reduce pills to a powder.

நூலுரைக்க, *inf.* To write a book.

மஞ்சளுரைக்க, *inf.* To rub down saffron into a paste.

பொன்னுரைக்க, *inf.* To try gold on a touch-stone.

முன்னுரைக்க, *inf.* To foretell, predict.

உரைப்பு, *v. noun.* Rubbing, wearing away, தேய்ப்பு. 2. Assaying, testing metals, &c., உரைக்கை. 3. Telling, சொல்லுகை.

உரைசு, கிறேன், உரைசினேன், வேன், உரைச, *v. n.* [*a change of* உரைதல்.] To rub, உரைய.

உரைசு—உரைஞ்சு, கிறேன், உரைசினேன்—உரைஞ்சினேன், வேன், உரைச—உரைஞ்ச, (உரைஞ்சு, is a cor. of உரிஞ்சு,) *v. n.* To rub one's self against a thing, to rub as beasts against a post, &c., to chafe, உரிஞ. 2. To wear away by use—as the feet by walking, as a seat by sitting, &c., தேய. 3. *v. a.* To rub hard, scour, scrape, or scratch—as with the back of a nail, to brush, clean off, or waste away by rubbing, தேய்க்க. 4. To graze, gall, bruise by grazing, சீக்க. (பிங்.)

ஆனையுமானையுமுதுகுரைஞ்சஇடையிலிருந்தகொசுகுநசுங்குகிறது. When elephants rub against each other, gnats are crushed.

*உரொக்கம், *s.* Ready money, cash in hand, கையிருப்புப்பணம். Wils. p. 710. ROKA.

உரொக்கக்காரன், *s.* A man with cash in hand, a capitalist, பணமிருப்புள்ளவன்.

உரொக்கத்துக்கு, *adv.* For cash, ready money.

உரொக்கமாய், *adv.* In ready money.

உரொக்கப்பெட்டி, *s.* A cash-box, a money-box.

உரொக்கவீடு, *s.* A treasury.

உரொட்டி, *s.* (*Tel.* రొట్టె.) Bread, a loaf, உறட்டி.

உரொட்டிக்கிடங்கு, *s.* A bake-house.

உரொட்டிச்சதை, *s.* Crumb, the soft part of bread, not the crust.

*உரோககம், *s.* A name of Adam's peak, a mountain in Ceylon, சிவனடிபாதம். Wils. p. 712. ROHAGA.

*உரோகணி, *s.* The fourteenth lunar mansion represented by a wheeled carriage and containing five stars of the bull, உரோணிநாள். 2. (*p.*) The mother of Baladeva, பலதேவன்றாய்.

*உரோகதி, *s.* Dog, நாய். (*p.*)

*உரோகம், *s.* Disease, distemper, வியாதி. Wils. p. 710. ROGA. 2. A bud, a blossom, அரும்பு. 3. Mounting, ascending, ஏறுகை. Wils. p. 712. ROHA.

உரோகநிவாரணம், *s.* Removal or cure of disease.

உரோகஸ்தன்—உரோகி, *s.* A diseased person, வியாதிஸ்தன். Wils. p. 711. ROGIN.

இச்சாரோகம், *s.* Disease arising from the lust of concupiscence.

*உரோகிணி, *s.* The fourth lunar asterism, உரோகணிநாள். 2. (*p.*) Mother of Balarama, பலராமன்றாய். Wils. p. 712. ROHIN or ROHIN'EE. 3. The கடுகுரோகணி plant, Helleborus niger, *L.* 4. The பீதரோகணி plant, a medicinal and exotic plant used in diseases of the eye. 5. The nutgall, கடுக்காய், Terminalia chebula, *L.* 6. A girl nine years old, ஒன்பதாண்டுப்பெண்.

உரோகிணிதநயன், *s.* Balarama, பலபத்திரன். (*p.*)

உரோங்கல், *s.* A pestle, உலக்கை. (சது.) (*p.*)

உரோசம், *s.* A high sense of honor, keen sensibility, quick perception of an indignity, delicacy, jealousy, மானம். (*c.*)

ஆசைக்குரோசமில்லை. Lust (or intense desire) knows no shame.

உரோசங்கெட்டவன், *s.* A man destitute of spirit, honor, a dastard, a poltroon, மானமீனன்.

உரோசநாகரீகமில்லாதவன், *s.* One without honor or credit.

உரோசப்பட, *inf.* To feel a sense of honor, delicacy.

உரோசப்படுத்த, *inf.* To hurt another's feelings, to excite shame.

உரோசிக்க, *inf.* To exhibit feelings of shame, honor, sensibility, delicacy, நாண. 2. To be spirited, sensitive to an indignity, சவாலேகொள்ள.

உரோசல், *v. noun.* Rubbing, friction—as உராய்தல்.

*உரோசனி, *s.* Mustard, கடுகு, Sinapis nigra. Wils. p. 711. ROCHANEE in ROCHANIKA.

*உரோசனை, *s.* The bezoar supposed to be the concrete bile of a cow. (See கோரோசனை.) 2. (*St.*) Red lotus, செந்தாமரை, Nymphæa rubra. Wils. p. 711. ROCHANA. 3. Mustard, கடுகு.

*உரோணி, *s.* The fourth lunar mansion—a contraction of உரோகணி.

*உரோதனம், *s.* Weeping, crying, அழுகை; [*ex* ருத, to weep.] Wils. p. 711. RODANA. (*p.*)

*உரோமம், *s.* The hair of the body, thick, or close hair, மயிர்ப்பொதுப்பு. Wils. p. 711. ROMAN.

உரோமக்கட்டு, s. Hair thick-set on the body.

உரோமசன்—உரோமமுனி—உரோமரிஷி. A celebrated Rishi reputed to be covered with hair and of immense age, still living—one of the eighteen சித்தர்; [ex உரோமம், the hair.]

உரோமத்துவாரம், s. The pores of the skin through which the hairs shoot, மயிர்த்துவாரம்.

உரோமபுளகம்—உரோமபுளகிதம்—உரோமப்பொடிப்பு, s. The rising of small pimples upon the body at the root of the hairs, from fear, extatic joy, &c., உரோமஞ்சிலிர்க்கை.

உரோமமுனி—உரோமரிஷி, s. A sage who composed a treatise on medicine and morals.

உரோமரேகை—உரோமாவலி, s. The line of hair in females, reaching to the navel, மயிரொழுக்கு. Wils. p. 712. Romavalee

உரோமாஞ்சலி—உரோமாஞ்சிதம், s. Having the hairs of the body erect from exquisite joy either natural or religious, extatic horipilation, குதுகலிப்பு. (சூ. 66.)

உல, க்கிறது, ந்தது, க்கும், க்க, v. n. To become reduced, wasted, lavished, spent in vain, கெட. 2. To perish, be ruined, injured, அழிய. 3. To die, pass away, சாக. 4. To terminate, or expire, as the enjoyments or sufferings resulting from the actions incident to prior existence, வினைபுலக்க. (p.)

திட்பநாளுலந்ததன்றே. The day of power has expired.

நாளுலந்தனன். He has passed (his) days.

துப்புரவுசென்றுலந்தக்கால். If the enjoyment go on and termiuate— (நாலடி.)

உலவாக்கிழி, s. Undiminishing (golden) treasure.

உலக்கை—உலப்பு, v. noun. Injury, ruin, waste, கேடு. 2. Death, சாவு.

உலப்பருமதத்தயானை. An undying elephant full of rut or fierceness.

உலப்புற்றோர்காடதே. That is a desert where the dead are burnt.

உலகம்—உலகு, (Sans. லோக.) World, universe, உலோகம். 2. The earth, பூமி. 3. Country, territory, நாடு. 4. Region, திசை. 5. (fig.) The inhabitants of the world, உலகத்தார். 6. The sky, etherial regions, ஆகாயம். 7. The learned, the good, சான்றோர். 8. (fig.) Created beings or existences, every thing except the Supreme, சிருட்டிப்பொருள்கள். (தத். 37.) 9. Enjoyments, or sufferings apportioned to the soul in the present birth, உலோகானுபவம். (ஞா. 779.) 10. Earthliness, worldliness, secularity, உலகத்தன்மை. 11. A word auspicious to begin a poem, மங்கலச்சொற்களிலொன்று.

உலகஞ்சொல்லுகிறது. The country says so, such is the public opinion.

உலகந்தோன்றிநின்றழிய. To appear, abide and perish periodically—as the universe—

உலகசஞ்சாரம், s. Inhabiting the world, பூமியிற்சஞ்சரிக்கை.

உலகசயன், s. Buddha, புத்தன். (p.)

உலகநடை—உலகவழக்கம்—உலகவழக்கு, s. Fashion, custom, usage, உலகொழுக்கம். 2. Secularity, conformity to custom—as marrying, &c., உலகாசாரம். 3. [in grammar.] Colloquial language—as opposed to இயற்சொன்னடை, செய்யுள்வழக்கு, &c.

உலகநாதன், s. The Supreme Being—as Lord of the world, கடவுள். 2. Bramah the creator of the world, பிரமன். (p.)

உலகநீதி, s. Morality, நன்னெறி. 2. The rules, or customs of the world—as distinguished from those of religion, or of ascetic life, உலகநடை. 3. Natural law, இயல்பானநீதி. 4. The existing laws of the country, தேசவியற்கைநீதி. 5. Name of a work on morality, ஓர்நூல்.

உலகநேத்திரன், s. The sun, சூரியன். (p.)

உலகபயித்தியம், s. Worldly pomp, vanity, secularity—as opposed to the feelings and practice of the ascetic, உலகமயக்கம்.

உலகபாந்தவன், s. The sun, சூரியன். (p.)

உலகப்பரப்பு, s. The world considered in its expanse, உலகவிரிவு.

உலகப்பற்று, s. Attachment to the world, mundane, or sensual attachments, உலகபந்தம்.

உலகப்புரட்டன், s. One who holds opinions and acts contrary to the sentiments of the wise.

உலகமலையாமை, s. One of the ten அழகு or beauties of language, classical usage, &c. See அழகு.

உலகமலைவு, s. [in rhetoric.] Incongruity, impossibility, absurdity—as அலைகடல்களேழுந்தூர்த்தந்தரத்தினூடே—மலையனையமால்யானையோட்டிக்—கலவரை—நீறுசெய்தவையநெடுங்குடைக்கீழ்வாழ்வித்தான்—மாறுச்சீர்வையையார்கோன், the Pandian king of Madura of endless fame filled the seven seas with sand, drove his elephant through the sky, reduced his enemies to ashes, and brought the whole world under his sway. (அலங்.)

உலகமாதா, s. The mother of the world—applied to Sarasvati, சரசுவதி. 2. Lukshmi, இலக்குமி. 3. Parvati, பார்ப்பதி. (p.)

உலகமீன்றாள், s. Parvati the wife of Siva, the mother of the world, பார்ப்பதி. (p.)

உலகமுண்டோன், s. Vishnu the world-eater, விட்டுணு. (p.)

உலகரட்சகன், s. The saviour or protector of the world.

உலகரட்சணியம்—உலகரட்சை, s. Protection, or salvation of the world.

உலகர், s. Worldlings, those engrossed by worldly pursuits. (தி. 335.) (p.)

உலகவழக்கம், s. The customs of the world.

உலகவாசை—உலகவாஞ்சை, s. Ardent love of worldly, or sensual enjoyments, உலகவிருப்பம்.

உலகவாழ்வு, s. Temporal prosperity.

உலகளந்தோன், s. Vishnu the measurer of the world, விட்டுணு. (p.)

உலகாசாரம், s. Relative duties, the customs, rites or duties to be performed according to the country, caste, rank, relation, &c., of persons respectively.

உலகாயிதம், s. A system of materialism, or atheistical epicurianism, அறுசமயங்களிலொன்று. See சமயம். (p.)

உலகாள—உலகோம்ப, inf. To govern, protect his country—as one of the duties of a king.

உலகாள்வோன், s. A monarch, உலோகாதிபன்.

உலகியல், s. The customs of the world, உலகநடை.

உலகோம்பல், v. noun. Preserving the world—one of the six occupations of kings. See தொழில்.

உலகோற்பத்தி, s. The origin, or development of worlds.

மேலுலகு, s. The upper worlds, which are seven in number, viz.: பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகாலோகம, சனலோகம், தபோலோகம், சத்தியலோகம்.

கீழுலகு, s. The lower worlds or regions; which are also seven, அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம்.

மூவுலகம், s. The three worlds, viz.: சொர்க்கம், மர்த்தியம், பாதாளம்.

மூவுலகாளி, s. God, (lit.) the sovereign of the three worlds, கடவுள். (p.)

மூவுலகுணர்ந்தோன், s. He who comprehends the three worlds, God, கடவுள். 2. Argha, அருகன். (p.)

மூவுலகேந்தி, s. God as the supporter of the three worlds, கடவுள். (p.)

உலகுலம், s. Long pepper, திப்பிலி, Piper longum.

உலக்கை, s. A pestle, a rice-pounder, a rice stamper, உரோங்கல். 2. (p.) The twenty-second lunar asterism, திருவோணம்.

உலக்கைக்கணை—உலக்கைப்பிடங்கு, s. [prov.] A pestle without a ferrule.

உலக்கைக்கொழுந்து, s. (fig.) A stupid fellow who thinks a pestle may sprout, முசலகிசலம்.

உலக்கைசார்த்த, inf. To ruin, destroy.

உலக்கைப்பாட்டு, s. Songs sung by women while pounding grain; a species of poetry in which the poet feigns females pounding grain and extolling a hero, வள்ளை.

உலக்கைப்பூண், s. The iron ring of a pestle.

உலக்கையாணி, s. The pin of a lock which passes into the hole of the key, பூட்டினவொணி.

உலங்கு, s. A gnat, a mosquito, கொசுகு. (in usage, ஒலுங்கு.) (p.)

உலண்டு, s. A kind of worm which becomes a chrysalis, a case-worm, &c., கோற்புழு. (p.)

அறிவுபுறம்போயவுலண்டதுபோல. As the case-worm destitute of intelligence.

உலமரு, கிறேன், உலமந்தேன், வேன, உலமர, *v. n.* To manifest symptoms of fear, to be afraid, அஞ்ச. 2. To suffer, to be distressed, துன்புற. (*p.*)

உலமரல், *v. noun.* Fearing, அச்சக்குறிப்பு. 2. Affliction, துன்பம்.

உலம், *s.* A round stone, a large pebble, a cylindrical stone, திரண்டகல். 2. A heap of stones, கற்றிரள். (*p.*)

உலம்பு, கிறேன், உலம்பினேன், வேன், உலம்ப, *v. n.* To sound, exclaim, roar, cry out, முழக்க. 2. To blab, chatter, boast, அலப்ப. (*p.*)

அட்டுலம்பினன். Slaying (his foes) he proclaimed aloud his bravery. (ஸ்கார்.)

ஒல்காதார் வாய்விட்டுலம்புப. They who restrain not themselves give utterance to their thoughts and boast aloud. (நீதிநெ.)

உலம்பல், *v. noun.* The act of sounding, ஒலித்தல்.

உலரு—உலர், கிறது, உலர்ந்தது, உலரும், உலர, *v. n.* To become dry, to desiccate, wither, be dry, or parched as the mouth, tongue, &c., காய. 2. To pine away, to be withered with grief, disease, hunger, journeying, &c., to flag, droop, வாட.

மரமுலர்ந்தது. The tree is dead.

சரீரமுலர்ந்தது. The body is reduced, emaciated, &c.

புடவையையுலரப்போடு. Put the cloth to dry.

நாவுலர்ந்துபோயிற்று. My tongue is parched with thirst.

உலரவைக்க, *inf.* To dry, make dry—wood, &c., by exposure to the heat of the sun.

உலர்ந்ததரை, *s.* Dry land.

உலர்ந்ததேங்காய், *s.* A dried cocoanut—as கொப்பரை.

உலர்ந்துபோக, *inf.* To dry up, to grow dry—as wood, fish, &c., to wither, to pine away.

உலர்ச்சி, *v. noun.* A dry or withered state, siccity, dryness, aridity, desiccation, காய்வு. 2. A withered or emaciated state of the system occasioned by travel, hunger, disease, &c., வாட்டம்.

உலர்த்து, கிறேன், உலர்த்தினேன், வேன், உலர்த்த, *v. a.* To dry, cause to dry, siccate, desiccate, புலர்த்த.

உலர்த்தப்பட்டநெல், *s.* Dried paddy.

நிழலிலுலர்த்த, *inf.* To dry a thing in the shade.

உலவம், *s.* [*prop.* உலோபம்.] Reluctance, bashfulness, diffidence, &c. in eating with a stranger or in receiving favors. See உலவி for other meanings.

கடன்கேட்கவுலவமாயிருக்கிறது. To be diffident in asking a loan.

உலவக்காரன், *s.* [*prop.* உலோபக்காரன்.] A guest who is backward in eating, &c., பிறனில்லிற்கொஞ்சமாயுண்பவன்.

உலவி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a. and n.* To be sparing in order to leave a supply for others, to forbear, or be reluctant, &c., be bashful in eating, &c., உலோபமாயிருக்க. 2. To evince diffidence in accepting favors, gifts, &c.; to be diffident, or backward in coming into company, கூசியொழுக. 3. To restrain one's self, forbear, ஒழுக்க.—*Note.* This word seems to be a causative of உலவு in a contracted form.

உலவியமறத் தப்பிடு. Eat without restraint, take as much as you like.

சாப்பாட்டையுலவிக்க. To eat food sparingly.

அவருடைய முகத்துக்காகவுலவித்துவிட்டுவிட்டேன். On his account I forbore (to act as otherwise I would have done).

இங்கேசாப்பிடவுலவிப்பானேன்? Why should you be unwilling to eat here?

தன்வயிறுநிறைத்தானுலவிக்கலாமா? Ought one to deprive himself of necessary food?

உலவு, கிறேன், உலவினேன், வேன், உலவ, *v. n.* To be modest, reluctant, sparing, parsimonious, கூசிக்குறைக்க. 2. [*a contraction of* உலாவு.] To move about, walk, or ride about for recreation, or exercise.

உலவலிரெனவோதுகின்றார்சிலர். Some said, Don't be afraid to eat. (ஸ்கார்.)

உலவாவுலவாருமோதம். Waves which undulate without cessation. (அலங்காரம்.)

உலவைவைகலுமூசலினீர்மையார். Their daily going and coming resembles the vibrations of a swing.

உலவை, *s.* Wind, காற்று. 2. The branches of a tree, boughs, மரக்கொம்பு. 3. Sprouts, twigs, leaves, தழை. 4. Jungle-rivers, முல்லைநிலக்கானயாறு. (பிங்.) 5. A horn. a tusk, விலங்கின்கொம்பு. 6. Fire-wood, விறகு. 7. Village, ஊர். 8. Family, relationship, lineage, குடி. 9. A creeper, வள்ளிக்கொடி, Batatasedulis, *L.* 10. Caste, rank, tribe, குலம். 11. The hollow of a tree, மரப்பொந்து. 12. The name of a tree, ஒடைமரம். (*p.*) 13. The கிலுகிலுப்பை plant.

உலறு, கிறது, உலறினது, ம், உலற, *v. n.* To be worn out, as clothes, &c., சிதைய. 2. To become dry, to wither, காய. 3. To become rough, shaggy, loose, brushy—as hair, to bristle up, சிலும்ப. 4. To show signs of anger, be incensed, சினக்குறிப்புக்காண்பிக்க. (*p.*)

உலறுபன்மயிர். Rough hair. (காசி.)

உலறும்வெஞ்சுரம். The arid desert. (இராம.)

உடுக்கையுலறியுடம்பழிக்கண்ணும். Though the clothes become tattered and the body emaciated— (நாலடி.)

உலா. See under உலாவு.

உலாகுமம், *s.* A kind of arsenic—the மனோசிலை.

உலாங்கிலி—உலாங்கு, *s.* A grass—the காவட்டம்புல், Andropogon, *L.*

உலாஞ்சு, கிறது, உலாஞ்சினது, ம், உலாஞ்ச, *v. n.* [*prov.*] To move, or work out—as the head, அசைவாட. 2. To be giddy, dizzy, swimming in the head, தலைசுற்ற.

உலாத்து, கிறேன், உலாத்தினேன், வேன், உலாத்த, *v. a.* To lead about (a person, a horse, &c.), உலாவப்பண்ண. 2. *v. n.* To go and come, move, or ride about for pleasure, pastime, recreation, or exercise, to go in procession, &c., சரிவர.—*Note.* This seems to be a corruption of உலாவுவிக்க, and in the second meaning, to be used for உலாவ.

உலாத்திக்கொண்டிருக்க. To be walking about.

துலாத்தில்வெள்ளியுலாத்திற்பெய்யும். When Venus is in libra it will rain every where.

தெருவுலாத்த, *inf.* To take a walk in the street. 2. To parade the streets—as marriage processions, &c.

உலாத்து, *v. noun.* [*prop.* உலா.] Walking, moving to and fro, going and coming, a short journey, a jaunt, ramble, stroll, excursion.

உலாத்துக்கட்டை, *s.* The pivot upon which a door or shutter turns.

உலாவு, கிறேன், உலாவினேன், வேன், உலாவ, *v. n.* To move about, walk or ride for recreation, exercise, &c., to pass to and fro, walk at leisure, take a jaunt, an excursion, a stroll, a ramble, சரிபோக. 2. To go in procession, to parade the streets—as festal processions, ஊர்வலம்வர.

உலாயதுகலாபமஞ்ஞை. The long tailed peacock gently moved along.

காருலாவுசோலை. A forest of trees so lofty that the passing clouds move in their tops.

நின்கோலுலாவுநிலத்து. In the country over which thy sceptre is wielded— (தண்டி.)

திரைசென்றுலாஞ்சேர்ப்ப. O! ruler of the coasts on which the waves sport. (உலாம் for உலாவும்.)

காதலவுசென்றுலாவுங்கண். An eye that looks every where, (*lit.*) the eye that passes to the car.

உலாவித்திரிய, *inf.* To walk about idly, or at leisure.

உலா, *v. noun.* Procession, moving about for recreation or exercise, a ramble, a jaunt, an excursion, a stroll, an airing, சரிவருதல். 2. A species of poem in the கேரிசைக்கலிவெண்பா, in which the praises of a hero are sung by women of the seven different ages, ஓர்பிரபந்தம்.

உலாப்போதல், *v. noun.* Rambling, strolling, taking an excursion, a jaunt.

உலிற்கள், *s.* White copper, queen's metal, bell metal, any amalgam of zinc and copper, வெண்கலம்

உலு, *s.* [*prov.*] The chaff of meslin and other inferior grains, பதர்.

உலுக்கு, கிறேன், உலுக்கினேன், வேன், உலுக்க, *v. a.* [*vul. prop.* குலுக்கு] To shake, move, agitate—as with a lever, அசைக்க. 2. *v. n.* To tremble—as in an earthquake, நடுங்க.

உலுக்குமரம், *s.* A lever, மிண்டி.

*உலுத்தம், *s.* Niggardliness, penuriousness, avarice, உலோபம். Wils. p. 722. Lubth'a.

உலுத்தத்தனம், *s.* Niggardliness, உலோபத்தனம்.

உலுத்தத்தனம்பண்ண, *inf.* To act niggardly, to be penurious.

உலுத்தன், *s.* A niggard, a close-fisted person, a miser, உலோபி. Wils. p. 722. Lubth'a. 2. A person who is not prompt in paying his debts, வாங்கினகடனைக்கொடாதவன்.

உலுத்து, கிறேன, உலுத்தினேன், வேன், உலுத்த, *v. a.* [*prov. prop.* உதிர்.] To shake off, shed as fruits, leaves, &c.

உலுப்பை, *s.* (*For.*) Presents of fruits, grain, &c., made to a temple, a wedding house, &c., கோவில்முதலியவற்றிற்கனுப்புங்காணிக்கை. 2. Supplies of fruits, rice, &c., furnished to a great person on his journey, பெரியவர்களுக்குமுண்பண்டம். 3. Supplies of vegetables, &c. to a dependant, அடைக்கேர்க்களிக்குமுண்பண்டம்.

உம்பர்கோனுவைத்தவுலுப்பையென. As the present of fruits offered by the king of the Devas— (அருணகுல.)

எச்சிலார், *s.* Low-caste people, இழிஞர். (*p.*)

எச்சிலிலை—எச்சிற்கல்லை, *s.* The leaf on which one has eaten.

எச்சிலுமிய—எச்சிலுமிழ—எச்சில்துப்ப, *inf.* To spit. (*c.*)

எச்சில்வாய், *s.* Mouth unwashed after eating, கழுவாதவாய்.

எச்சிற்கலக்க, *inf.* To eat the food left by the bridegroom—as a Hindu bride does on the occasion of her marriage. 2. To eat the food left by others—as friends.

எச்சிற்கலப்பு, *s.* The above ceremony.

எச்சிற்காறியுமிழ், *inf.* To force up the phlegm and spit it out.

எச்சிற்கிதம்பாட, *inf.* To assent to what is wrong from an unworthy motive.

எச்சிற்குழி, *s.* A cavity in a court-yard, used as a spittoon, எச்சில்போடுகுழி.

எச்சிற்பட, *inf.* To become defiled—as food, &c., by saliva, or contact with the mouth.

எச்சிற்பருக்கை, *s.* Grains of rice fallen while eating, சிந்திக்கிடக்குஞ்சோறு.

எச்சிற்பேய், *s.* A diminutive demon exceedingly voracious, ஓர்பிசாசம். 2. A person very fond of dainties, பெருந்தீனிக்காரன்.

எச்சிற்றழும்பு—எச்சிற்றேமல், *s.* A kind of ring-worm supposed to be induced by contact with the saliva of others, தழுதணை.

எச்சின்மாற்ற, *inf.* To purify a place after eating by smearing it anew with cowdung.

கண்ணெச்சில், *s.* Evil imagined to be caused by other people's eyes.

கண்ணெச்சிற்கழிக்க, *inf.* To perform a ceremony for the removal of the imagined inauspicious effect of evil eyes. (நடை.)

எச்சு, *s.* (*Tel.*) Much, excess, increase, உயர்வு. 2. A high [illegible]y in music. See தக்கு.

அவன்பாடுகிறதிலேயெச்சமெத்த. He sings too high.

எஞ்சு, கிறது, எஞ்சினது, ம், எஞ்ச, *v. n.* To diminish, decrease, shorten, lessen, grow small, few, &c., சுருங்க. 2. To be deficient, be defective, to lack, want, குறைய. 3. To remain, be left as a surplus, மேல்மிஞ்சியிருக்க. 4. To be elliptical—as words, or clauses, சொல்லெஞ்சிநிற்க. (*p.*)

பின்பவ்வெஞ்சியவிருவரும். Afterwards the remaining two persons—

எஞ்சணி, *s.* An ellipsis.

எஞ்சிநிற்க, *inf.* To be wanting or elliptical—as language; to be understood, குறைந்திருக்க.

எஞ்சியசொல்லினெய்தக்கூறல், *v. noun.* [*in grammar.*] Expressing in a few words, or an author's not mentioning things explicitly, but leaving them to be inferred by the reader—one of the thirty-two உத்தி.

எஞ்சல், *v. noun.* Wanting, deficient, being implied.

எஞ்ஞான்றும், *adv.* Always. See ஞான்று; [*ex* எ.]

எடு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To take up, lift up, raise, தூக்க. 2. To take off, take away, extract, take out, remove a stain, dirt, humor, &c., or one body from another, chemically, or otherwise combined, ஒன்றிலிருந்தெடுக்க. 3. To undertake, take in hand, enter upon, தொடங்க. 4. To adopt—as a sentiment, &c., receive, take—as one's own, அங்கீகரிக்க. 5. To take a subject, to discourse, write, think on, look out, find a place in a book, &c., ஆராய்ந்தெடுக்க. 6. To adduce (an argument), ஒன்றைஎடுத்துப்பேச. 7. To strike (a sound), pitch the key-note, to try the lightness of a bow-string by striking it, இசையெடுக்க. 8. To select, choose, (as a spot, for a house, a well, &c.), தெரிந்துகொள்ள. 9. To buy, purchase (chiefly applicable to cloth), வாங்க. 10. To bear, carry, sustain, சுமக்க. 11. To weigh in a balance, நிறுக்க. 12. *v. n.* [*in combination.*] To rise, extend itself, become spread, or diffused, to be attacked with pain, &c., மயக்கமெடுக்க. 13. To swell, heave, rise in billows, எழும்ப. 14. To keck, puke, vomit, வாந்தியெடுக்க.

எடுக்கத்தொடுக்கவிடான். He will not let me begin; spoken figuratively in allusion to the discharge of arrows.

எடுப்பாரும் பிடிப்பாருமுண்டானாலிளைப்புந்தவிப்பும் மெத்தத்தோன்றும். Where there are many attendants much trouble is experienced.

பிள்ளைக்குமூக்கெடுக்க. To raise or force out the upper part of the nose of an infant—as a nurse by pressing with two fingers.

அரசனாலயமெடுத்தான். The king has built a temple.

இந்தப்பாரமெடுக்கமாட்டேன். I am unable to carry this load.

அதையெடுத்துப்பேசினான். He took up the subject.

யானைதம்பிக்கையினாலேபணத்தையெடுக்கும். The elephant will take up a small coin with his proboscis.

ஏரியெடுத்துப்போகிறது. The water of the lake has carried away its embankment.

இதினாலிலாகிரியெடுக்கும். This will cause intoxication.

சோற்றிலிருக்கிறகல்லையெடுக்கமாட்டாதவன்மோகனக்கல்லெடுத்தாற்றுவானா. Will he who cannot pick out a stone from rice be able to lift the stone architrave of a temple vestibule? i. e. he who is incapable of little matters must be incapable of great ones.

விழுந்தவனையெடாமலுதைக்கலாமா. Is it proper to kick, instead of raising, a fallen man?

இந்தச்சீலையையெந்தக்கடையிலெடுத்தாய். In what bazaar did you buy this cloth?

புல்லெடுக்கிறதரை. Ground covered with an exuberant growth of grass.

எடாதஎடுப்பு, *s.* Living above one's rank, circumstances, means, &c., engaging in an enterprise, beyond one's powers, &c.

எடாதஎடுப்பெடுக்கலாகாது. It is improper to engage in an enterprise above one's circumstances.

எடுகூலி, *s.* Porterage, hire for carrying burdens, சுமைக்கூலி.

எடுத்தடிமடக்கு, *s.* Retort, turning a person's reasons or remarks against himself, confuting one by his own arguments, anticipating a person in word, or action, in order to check, or thwart him in his object; interrupting one in speaking, &c. 2. Temerity, rashness; speaking, answering, or acting rashly, துணிவு.

எடுத்தடிவைக்க, *inf.* To begin to step—as a child, காலைப்பெயர்த்துவைக்க.

எடுத்தபடி, *adv.* Suddenly, at once, promptly, extemporaneously.

எடுத்தமொழியினெய்தவைத்தல், *v. noun.* An author's forming rules applicable to the examples he finds—one of the உத்தி.

எடுத்தலளவையாகுபெயர், *s.* One of the four kinds of அளவையாகுபெயர், according to which, the weight of the article weighed is used for the scale.

எடுத்தாட்சி, *s.* A thing much in use, வழக்கம்.

எடுத்தார்கைப்பிள்ளை, *s.* A docile, tractable, yielding person; one who has no opinion of his own.

எடுத்துக்கட்ட, *inf.* To fabricate, invent.

எடுத்துக்கட்டு, *v. noun.* Fabrication, கட்டுக்கதை. 2. Invention—as of a word.

எடுத்துக்காட்டல், *v. noun.* An author's adducing examples, illustrations, &c. (See உத்தி.) 2. Citing, quoting, &c.

எடுத்துக்காட்டு, *s.* An example, illustration, உதாரணம்.

எடுத்துக்கைநீட்ட, *inf.* To help one—as a waiter, or attendant.

எடுத்துக்கொள்ள, *inf.* To take to one's self, தனக்காகக்கொள்ள. 2. To accept, admit, approve, ஏற்றுக்கொள்ள.

எடுத்துக்கொண்டுபோக, *inf.* To take, to carry away.

எடுத்துச்சொல்ல, *inf.* To quote, cite, பிறர்கருத்தையெடுத்துக்கூற. 2. To give one's own opinion, தன்கருத்தையெடுத்துக்கூற.

எடுத்துத்தொடுக்க, *inf.* To fabricate, invent, எடுத்துக்கட்ட. 2. To pick quarrels, institute a lawsuit, commonly on frivolous grounds, வழக்குப்பிணைக்க.

எடுத்துப்பிடிக்க, *inf.* To hold up and expose little faults to view, தூக்கிக்காட்ட. 2. To encourage, strengthen, establish, நிலைப்படுத்த.

எடுத்துப்பேச, *inf.* To speak as an advocate, plead for a client, பரிந்துபேச. 2. To offer arguments, treat on, நியாயம்பேச. 3. [*with accus. of person.*] To praise, commonly one absent, [illegible]

எடுத்துப்போட, *inf.* To deprive a person of office, situation, &c., to turn out, displace, dislodge, தள்ளிப்போட.

எடுத்தேற்றம், *s.* Random.

எடுத்தேற்றமானவேலை, *s.* A thing done at random.

எடுத்தேற்றியாயிருக்க, *inf.* To be unequal, uneven, discrepant in size, character, rank, &c.; to be irregular, இணக்கமின்றியிருக்க.

எடுபட, *inf.* To be taken up, out, away, &c., நீக்கப்பட. 2. To rise, part, to be detached, displaced, dislodged, எழும்ப. 3. To be abolished, terminated, அழிந்துபோக. 4. To be led away by evil, ill-advice, நியாயந்தவற. 5. To leave one's station, place of residence, &c., to leave and be no more heard of (used in an ill sense), காணமற்போக. 6. To be overcome in argument—as a party in controversy, &c., to be confuted, தோற்றுப்போக.

அவள்பேச்சினலயலெல்லாமெடுபெடுகின்றது... The whole neighborhood is raised by her clamor.

எடுபட்டவள், *s.* A lewd woman, குடும்பத்தைவிட்டுவெளிப்பட்டவள்.

எடுபட்டுப்போக, *inf.* To be raised—as a siege. 2. To be abolished. 3. To be defeated.

அவ்விருந்தபள்ளிக்கூடமெடுபெட்டுப்போயிற்று..... The school which existed there formerly has been abolished.

உன்னாலநானெடுபெட்டுப்போவேனு. Am I to be defeated by you?

எடுபாடு, *s.* Celebrity, a high style of living, notoriety in a good or bad sense, உயர்ச்சி. 2. Abolition, அழிகை. 3. Gaiety, in dress, in a woman, a lax, or lascivious disposition, மேட்டிமை.

எடுப்பிக்க, *inf.* To cause to raise, or lift up.

மனிதவதாரமெடுக்க, *inf.* To assume the human form, to become incarnate.

வெறியெடுக்க, *inf.* To be intoxicated.

வெறியெடுத்தவன், *s.* One who is intoxicated.

பெயரெடுக்க, *inf.* To assume an appearance, a name, a character, &c.; to acquire a name, celebrity.

நூலெடுக்க, *inf.* To disentangle thread.

வாயாலெடுக்க—வாயிலெடுக்க, *inf.* To vomit.

தொழிலெடுக்க, *inf.* To enter upon an occupation. 2. To suspend one from office.

பூவெடுக்க, *inf.* To gather flowers.

கிணறெடுக்க, *inf.* To dig a well. 2. [*prov.*] To select a spot for a well in reference to the situation of the house and other surrounding objects that ill luck may not result, as also to the nature of a soil or the depth at which water may be found, judged of by the produce of the land, &c.

வயிறெடுக்க—வயிறுகடுப்பெடுக்க, *inf.* To have a looseness.

தானெடுத்துமொழிதல், *v. noun.* [*in works of science.*] The adoption of rules, or language from other authors. See உத்தி.

எடுப்பு, *v. noun.* The act of taking off, taking up, தூக்குகை. 2. Elevation, உயரம். 3. Taking in hand, undertaking, attempt, engagement, தொடக்குகை. 4. Insolence, arrogance, pride, haughtiness, superciliousness, இறுமாப்பு. 5. Elation, a style of living above one's rank, circumstances, மேட்டிமை. 6. Abusive words, நிந்தை.

எடுத்தஎடுப்புவிடான். He will not desist from his purpose.

வாயெடுப்பாய்ப்பேசுகிறவன். One who talks arrogantly.

ஒருவன்மேலெடுப்பெடுத்தல். Publishing the faults of another.

எடுப்பாயிருக்க, *inf.* To be high.

எடுப்பானவன், *s.* A haughty person, an upstart, one who lives above his rank or circumstances, மேட்டிமைக்காரன்.

எடுப்புச்சாய்ப்பு, Gentility, genteel and obliging behavior, united with display, pomp, grandeur, &c., உயர்வுதாழ்வு.

எடுப்புண்டது, *appel. n.* That which is taken and carried away.

எடுப்புத்தேர், *s.* A small portable shrine for the conveyance of an idol on men's shoulders—opp. to இழுப்புத்தேர்.

கல்லெடுப்பு, *s.* A funeral rite.

எடை, *v. noun.* Taking up, தூக்குகை. 2. Weighing, நிறுக்குந்தொழில். 3. A weight, நிறையளவு. 4. Assumption, adoption, ஏற்றுக்கொள்கை. 5. [*ex* எடுப்பு, to rouse.] Rousing from sleep, &c., எழுப்புகை. See அலபெடை, துயிலெடை, &c.

எடுத்துக்காரர், *s.* [*prov.*] Those who drive loaded bullocks or buffaloes.

எடுப்பு, கிறேன், எடுப்பினேன், வேன, எடுப்ப, *v. a.* To wake, or rouse one from sleep, எழுப்ப. (*p.*)

துயிலெடுப்பியநிலை, *s.* The act of waking one who is asleep.

எடுப்பல், *v. noun.* The act of awaking any one. 2. Lifting up.

*எட்சிணி, *s.* A sort of demoness attached to the service of Durga and frequently holding, like a sylph or fairy, intercourse with mortals, ஓர்பெண்பிசாசு. Wils. p. 678. YAKSHIN'EE.

எட்டர், *s.* Panegyrists whose duty it is to proclaim the titles of a great man, encomiasts, மங்கலபாடகர். (*p.*)

எட்டி, *s.* A poisonous and very bitter tree; poison-nut, Strychnos nux-vomica, *L.*

எட்டிக்காய்போலக்கசக்கின்றது. It is as bitter as the fruit of the எட்டி.

எட்டிபழுத்தென்னஈயாதார்வாழ்ந்தென்ன. What avails the fruitfulness of the எட்டி tree, and what avails the prosperity of the miser?

எட்டிக்கொட்டை, *s.* The poisonous nut of எட்டி, used medicinally.

எட்டிவேர், *s.* Its root.

எட்டிகுடி, *s.* A place sacred to Soobramania, ஓர்ஸ்தலம்.

எட்டியர், *s.* The merchants or first division of the third caste, செட்டிகள். 2. The Vysiar caste in general, வசியர்ப்பொது.

எட்டு, *s.* The number eight denoted by அ, தமிழெண். 2. The eighth day funeral ceremony when food is presented to the manes of a deceased person, இறந்தவெட்டாம் நாட்சடங்கு; it is often contracted to எண். 3. Desire, ஆசை, impr. for எட்டை.

எட்டிலேபத்திலே. Seldom, now and then.

எட்டுக்குச்சோறிட்டுவைக்க. [*prov.*] To set rice, curry and other eatables for the deceased in the eighth day ceremony—as எட்டாந்துக்கங்கொண்டாட.

எட்டுமிரண்டுமறியாதவன். A very dolt, an ignoramus.

எட்டடிவிரியன், *s.* A kind of viper.

எட்டனுருபு, *s.* The form of the eighth or vocative case.

எட்டிலொன்று, *s.* One ⅛ eight things, one-eighth.

எட்டுச்சார், *s.* [*prov.*] Two four square houses connected together.

எட்டுத்திக்கு—எண்டிசை, *s.* The eight cardinal points or regions protected by as many supernal regents the supposed guardians of the earth.

எட்டெட்டு—எவ்வெட்டு. Eight by eight—eight to each, eight of each. When used adjectively, எட்டு becomes எண்—as எண்ணெட்டு, eight times eight.

எண்கணன், *s.* Brahma the eight-eyed, பிரமன்.

எண்காற்புள், *s.* [*in mythology.*] The eight-footed bird. See சரபம், சம்பரம் and சிம்புள்.

எண்குணம், *s.* The eight divine attributes. See குணம்.

எண்குணத்தான்—எண்குணன், *s.* He who possesses the eight attributes—the perfect one—a term applied in நிகண்டு, to Siva, சிவன், Argha, அருகன்.

எண்கோணம், *s.* An octagon, eight-sided figure, அஷ்டகோணம்.

எண்சாண், *s.* Eight spans.

எண்சாணுடம்பு, *s.* The human body, eight spans high, each person according to his own span.

எண்சாணுடம்புக்குஞ்சிரசேபிரதானம். The head is the chief of the eight span-body; i. e. in cases of difficulty apply to the chief.

எண்சிறப்புள்ளோன், *s.* Argha, அருகன்.

எண்சுவை, *s.* The eight poetic expressions of passion. See இரசம்.

எண்டோளன், *s.* Siva, சிவன்—the eight shouldered. (*p.*)

எண்டோளி, *s.* Kali, காளி. 2. Durga, துர்க்கை. (*p.*)

எண்ணாயிரம், *s.* Eight thousand.

எண்ணாயிரவர், *s.* A class of smartha brahmans consisting of eight-thousand individuals. 2. A body of eight-thousand jainas.

எண்ணான்கு, *s.* Eight times four.

எண்ணூறு, *s.* Eight hundred.

எண்ணெட்டு, *s.* [*prov.*] Eight times eight.

எண்பது, *s.* Eighty, எண்ணெருபது.

எண்மடங்கு, *s.* Eight fold.

எண்மர், *s.* Eight persons, எட்டுப்பேர். (*p.*)

எண்வகைத்துணைவர், *s.* The eight classes composing the escort of a king; i. e. மந்திரியர், கருமாதிகாரர், சுற்றம், கடைகாப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், இவுளிமறவர், யானைவீரர்.

எட்டு, கிறேன், எட்டினேன், வேன், எட்ட, *v. a.* To stretch forth, to reach after, தாவ. 2. [*with the dative.*] To be obtained, be got, to be caught, அகப்பட.

எட்டாதபூதேவனுக்கு. The flower that is out of reach is dedicated to God. [*prov.*]

மனோவாக்குக்கெட்டாதது. What is incomprehensible or unutterable.

கைக்கெட்டினதுவாய்க்கெட்டாமற்போயிற்று. The mouth did not get what the hand had reached—I almost got it, but it escaped my grasp. The fates were against me, &c.—spoken in cases of disappointment, &c.

கண்ணுக்கெட்டினமட்டும். As far as the eye can see.

எனக்கெட்டாது. I cannot reach it. 2. I cannot get it. 3. I cannot comprehend it.

கிணற்றுக்கிந்தக்கயிறெட்டாது. This rope is not long enough for the well.

எட்ட, *inf.* [*used adverbially.*] Far, far off, further, away, aloof. தூரமாக.

எட்டநட. Step on, step out.

எட்டப்போ—எட்டிப்போ. Go further.

எட்டக்கட்ட, *inf.* To keep away, தூரமாக.

மழையெட்டக்கட்டிவிட்டது. The rain has kept off a long time.

எட்டவிட, *inf.* To communicate, inform.

அவனுக்கிந்தச்சொல்லையெட்டவிடு. Communicate this news to him.

எட்டாக்கை, *s.* A very distant place, not near enough to be serviceable.

எட்டாதபொருள், *s.* Things incomprehensible—as the Divine Being, mysteries, &c.

எட்டுமெட்டும்பார்க்க, *inf.* To endeavor as much as one can; to reach or attain a thing.

எட்டிப்பறிக்க, *inf.* To reach and pluck.

எட்டிப்பார்க்க, *inf.* To peep, look over a wall, &c. 2. To make an effort, to reach a point or thing.

எட்டினர், *s.* Friends, adherents, partisans, சிநேகிதர். (*p.*)

எண், *s.* Thought, imagination, conjecture, intention, எண்ணிக்கை. 2. Deliberation, counsel, care, விசாரம். 3. Number, enumeration, calculation, computation, இலக்கம். 4. Astronomical computation, astronomy, சோதிடநூல். 5. Estimation, esteem, honor respect, worthiness, மதிப்பு. 6. Strength, வலி. 7. Total measure, வரையறை.—*Note.* Seven is regarded as the most lucky number, after which five and the other odd numbers have precedence. 8. Lowness in state or rank, inferiority, pitiableness, or despicableness, எளிமை. 9. Easiness of accomplishment, acquisition, access, &c.; what is not difficult, இலேசு. 10. A kind of rape, the plant or seed, எள்ளு. (*p.*)

எண்ணுக்குள்ளடங்காதது. That which is innumerable. 2. That which is incomprehensible.

எண்ணுமெழுத்துங்கண்ணெனத்தகும். Arithmetic and grammar may be regarded as eyes.

எண்ணெழுத்திகழேல். Think not lightly of numbers and letters, do not neglect reading and cyphering.

எண்பொருளவாகச்செலச்சொல்லி. Communicating your thoughts in language easy to be understood—

எண்சாத்திரம், *s.* The science of numbers, arithmetic, mathematics, கணிதம்.

எண்கூட்டல், *s.* Addition.

எண்சுவடி, *s.* The multiplication table either of whole numbers, or fractions, ஓர்சவடி. 2. An account book, கணக்குப்புஸ்தகம்.

எண்செய்யுள், *s.* A poem celebrating the country, town, names, titles, &c. of a hero. It consists of any number of verses from ten to one-thousand inclusive. and is named from the number of verses it contains, ஓர்பிரபந்தம். See பிரபந்தம்.

எண்ணர், *s.* Astronomers, கணிதர்.

எணணங்காணெனபரெண்ணர். Astronomers will call this a treatise of arithmetic. (கோவை.)

எண்ணிட, *inf.* To count, reckon, calculate.

எண்ணிடவிடமொன்றின்றியெள்ளனும்நிறைந்ததன்றே. (The army) crowded the whole field so that there was hardly any room left—not so much as even to hold a rape seed.

எண்ணில்கண்ணுடையோன், *s.* God, கடவுள். 2. Budha, புத்தன். (*p.*)

எண்ணில்காலம், *s.* Incalculable time, அளவில்லாதகாலம். (சத.)

எண்ணிறக்க, *inf.* To exceed computation, conception, அளவிறக்க.

எண்ணின்வகுப்பு, *s.* The Tamil enumeration table which consists of thirty-six digits; viz.: 1. ஏகம், units. 2. தசம், tens. 3. சதம், hundreds. 4. சகஸ்திரம், thousands. 5. அயுதம், ten thousands. 6. நியுதம், hundred thousands, &c.

எண்ணும்மை, *s.* A numerical connective. See உம்.

எண்ணுறுத்த, *inf.* To prove, establish, உறுதிப்படுத்த.

எண்கு, *s.* A bear, கரடி. (*p.*)

எண்ணம், *s.* Thought, opinion, supposition, imagination, conception, &c., நினைப்பு. 2. Purpose, intention, design, object, determination, நோக்கம். 3. Estimation, estimate, conjecture, guess, surmise, மதிப்பு. 4. Arrogance, presumption, elation, இறுமாப்பு. 5. Hope, expectation, indulging fancy; fancied or prospective happiness, reverie, speculation, musing chimera, conceit, நம்பிக்கை. 6. Esteem, regard, deference, respect, credit, courtesy, decorum, awe, reverence, கனம். 7. Care, caution, vigilance, anxiety, solicitude, concern, விசாரம். 8. Deliberation, counsel, ஆலோசனை. 9. Judgment, conviction, கருத்து.

எண்ணமுற்றுரைக்கின். Were I to reckon and declare the number— (நைட.)

எண்ணியாரெண்ணமிழப்பர். The enemy who expected to conquer us will be disappointed. (குறள்.)

தானென்கிறவெண்ணம்—நானென்கிறவெண்ணம், *s.* Self-conceit, self-importance.

இன்னானென்கிறவெண்ணமவனுக்கில்லை. Rank or station with him is a matter of no consideration.

எண்ணக்குறிப்பு, *s.* Motive, object, intention, design, நோக்கம்.

எண்ணங்குலைய, *inf.* To be perplexed in mind, மனக்கலக்க. 2. To be disconcerted in a plan, to be thwarted in one's expectation, எண்ணம்வீணாக. 3. To lose reputation, மதிப்புக்கெட.

எண்ணங்கொண்டிருக்க, *inf.* To entertain hope. 2, To be anxious, to be in deep concern. 3. To intend, purpose. 4. To muse on, ponder. 5. To build castles in the air.

எண்ணந்தப்ப, *inf.* To be disappointed, to prove incorrect—as an opinion, மதிப்புத்தவற.

எண்ணத்தப்பு—எண்ணத்தவறு, *s.* Disrespect to a superior, அவமதிப்பு. 2. Disappointment, நம்பிக்கைக்கேடு.

எண்ணப்பிசகு, *s.* Misapprehension, எண்ணத்தவறு.

எண்ணமிட, *inf.* To think, reflect, consider.

எண்ணர், *s.* The king's ministers or counsellors, மந்திரிகள். (*p.*)

எண்ணு, கிறேன், எண்ணினேன், வேன், எண்ண, *v. a.* To think, consider, imagine, suppose, நினைக்க. 2. To intend, resolve, determine, குறிக்க. 3. To count, reckon, compute, கணிக்க. 4. To guess, conjecture, estimate, surmise, உத்தேசிக்க. 5. To esteem, appreciate, respect, honor, &c., மதிக்க. 6. To deliberate, take counsel, ஆலோசிக்க. 7. To hope, expect, நம்ப. 8. To care, to be anxious, to be perplexed with thoughts, கவலைப்பட. 9. To be elated, to be self-conceited, இறுமாக்க. 10. To consider seriously, weigh consequences, யோசிக்க.

எண்ணாதவெல்லாமெண்ணினன். He was musing and perplexed with many thoughts.

உனக்குநாசகாலத்தையெண்ணியிருக்கிறார்கள். They are meditating thy destruction.

இதையொருகுற்றமாயெண்ணுவார்களா. Will they regard this as a fault?

எண்ணப்பட, *inf.* To be counted, reckoned. 2. To be esteemed, respected.

எண்ணத்தொலையாதது—எண்ணப்படாதது, *appel. n.* That which cannot be counted.

எண்ணாதகண்டன்—எண்ணாதநெஞ்சன், *s.* A very bold man, destitute of fear; a rash, or heedless man.

எண்ணாதவன், *s.* A reckless person, a desperate man.

பாவபுண்ணியங்களையெண்ணாதவன். One who has no regard either for virtue or vice.

எண்ணாமற்பேச, *inf.* To speak without due regard to rank, station, &c., மதியாமற்பேச. 2. To speak without thought, யோசியாமற்பேச.

எண்ணர், *s.* Enemies, பகைவர். (*p.*)

எண்ணிப்பார்க்க, *inf.* To count, number. 2. To consider maturely, deliberate, to weigh in the mind.

எண்ணிப்பேச, *inf.* To speak considerately or deliberately.

எண்பட, *inf.* [*prov.*] To be discovered, to be caught, to be found out, அகப்பட.

எண்ணல், *v. noun.* Calculation, reckoning, கணக்குச்செய்தல். 2. Astronomical calculation, கணித்தல். 3. Counting with the fingers in astronomical calculations, &c. See கைத்தொழில்.

எண்ணலர், *s.* Foes, enemies, பகைவர். (*p.*)

எண்ணலளவை, *s.* Computation.

எண்ணலளவையாகுபெயர், *s.* One of the four kinds of அளவையாகுபெயர், according to which a number is put for the thing numbered—as காலாலேநடந்தான், he walked on one-fourth (of his length); i. e. his leg, which is so called because it bears that proportion to individual stature.

எண்ணிக்கை, *v. noun.* Regard, esteem, honor, estimation, reverence, மதிப்பு. 2. Number, numbering, கணிப்பு. —*Note.* This word is irregular in its formation.

எண்ணிக்கைக்குப்பிறந்தபிள்ளைகள். Children who seem born only to make up a number, being of no estimation.

எண்ணிக்கைக்குள்ளடங்காதது. That which is innumerable.

சேவகரையெண்ணிக்கைசெய்கிறது. To muster soldiers.

எண்ணிக்கைகொடுக்க, *inf.* To deliver an account of things, to give in the number.

எண்பி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*vul. prop.* எண்பி.] To prove, show, மெய்ப்படுத்த.

எண்மை, *s.* [*a contr. of* எளிமை.] Lowness of rank, inferiority, despicableness, poverty. 2. Pitiableness, a state deserving of, or calling forth pity, பரிதாபநிலை. 3. Easiness of acquisition, access, accomplishment, facility, இலேசு. (*p.*)

உவனைப்பொருவதுவுமெண்மையதுவோ. Is it easy to contend with him in battle? (ஸ்காந்.)

எண்மையன், *s.* An easy, or docile person, one easy to manage, இலேசானவன். 2. One of no importance, or weight of character, of no ability, &c., எளியவன்.

*எதாப்பிரகாரம், *s.* In like manner, as it is, as it was—in statu quo, இருந்தபடியே—as யதாப்பிரகாரம்.

*எதார்த்தம், *s.* Right, propriety, suitableness, உண்மை. 2. Actuality, certainty, நிச்சயம்—as யதார்த்தம். Wils. p. 680. YATHARTA.

எதிர், *s.* That which is opposite, in front, before, in presence of, over against, முன். 2. That which is opposed, is adverse, hostile, முரண். 3. Similitude, comparison, ஒப்பு. 4. Futurity, வருங்காலம். 5. Rivalry, competition, எதிரிடை.

எதிரதுபோற்றல், *v. noun.* An author's adopting what is authorized by good usage though modern. See உத்தி.

எதிரறை, *s.* An opposite room.

எதிராக—எதிரே, *adv.* Before, opposite to, in front, &c.

எனக்கெதிரே. Before me.

சத்துருவிற்கெதிராகப்போதல். Encountering or meeting an enemy.

எதிராளி—எதிரி, *s.* Opponent, adversary, antagonist, பகைஞன். 2. The defendant in a lawsuit, எதிர்வழக்காளி. 3. A rival, a competitor, எதிரிடைக்காரன்.

எதிரிட, *s.* To meet, எதிர்ப்பட. 2. To oppose in battle, எதிர்க்க.

எதிரிடை, *v. noun.* Opposition, encounter, counteraction, எதிர்க்கை. 2. Contrariety, விரோதம். 3. Rivalry, competition, எதிரித்தனம். 4. That which is equivalent, சமமாயிருப்பது.

எதிரிடைகட்ட, *inf.* To rival, to vie with, compete with, எதிர்க்க. 2. [*prov.*] To act in opposition, விரோதிக்க.

எதிரிடைகாரன், *s.* Competitor, rival, antagonist, விரோதஞ்செய்வோன்.

எதிரிடைச்சீட்டு—எதிரிடைமுறி, *s.* A counter bond.

எதிரிடையாய்ப்பேச, *inf.* To dispute or contradict.

எதிருத்தரம்—எதிர்மொழி, *s.* An answer, a reply, a rejoinder, a retort, பிரதியுத்தரம்.

எதிருரை, *s.* Answer, retort, எதிர்மொழி. 2. Cavil, dispute, வாது.

எதிருரைக்க, *inf.* To oppose, to disobey, to be contumacious, எதிர்த்துப்பேச. 2. To answer, retort, மறுமொழிசொல்ல. 3. To cavil, dispute, to be petulant, morose, cross, வாதுசெய்ய.

எதிரூன்ற, *inf.* To take a firm position—as an army, உறுதியாய்நிற்க. 2. To resist, oppose, withstand, எதிர்த்துநிற்க.

எதிரெடுக்க, *inf.* To vomit, eject from the stomach, சத்திசெய்ய.

எதிரேற்றல், *v. noun.* Counteracting a magical evil, எதிரேவல். 2. Counteracting evil in general, தடுத்தல். 3. Attacking, opposing or resisting—as an enemy, எதிர்த்தல். 4. Receiving in one's own person the weapons discharged by a foe out of bravery, or to save a friend, பிறன்மேல்வருவதைத்தானேற்றல்.

எதிரேற்று, *v. noun.* Counter magic, magic resorted to in retaliation, sorcery, &c., எதிரேவல்.

எதிரொலி, *s.* Echo, reverberation of sound, பிரதித்தொனி.

எதிரொலித்தல், *v. noun.* Echoing, resounding.

எதிர்கொள்ள—எதிர்கொண்டழைக்க, *inf.* To meet and receive a guest, a great person, a wedding party, &c., coming to one's house, சந்திக்க.

எதிர்கோள், *v. noun.* Meeting in the way, meeting or receiving a person, எதிர்கொள்ளுகை.

விருந்தெதிர்கோடல், *v. noun.* Inviting guests, or devotees, religious mendicants, &c.—one of the duties enjoined on a householder as the condition of his own participation of the good things of providence. See இல், house. (சிலப்பதிகாரம்.)

எதிர்க்கடை, *s.* An opposition bazaar.

கீரைக்கடைக்குமெதிர்க்கடைவேண்டும். An opposition stall is necessary even among green grocers. [*prov.*]

எதிர்க்கட்சி, *s.* An opposite party, எதிரானகூட்டம்.

எதிர்க்காற்று, *s.* Contrary wind.

எதிர்க்கை, *s.* A slanting timber forming a continued line with the ridge and uniting in an angle formed by the slanting hip-rafters on either end of a hipped or bungalo roof.

எதிர்ச்சாட்சி, *s.* Counter testimony; a witness brought to disprove previous testimony, மாறானசாட்சி.

எதிர்ச்செட்டு, *s.* Competition in trade, ஒருவன்விற்பதற்குமாறாகவிற்கை. 2. [*prov.*] Trading at second hand, buying and selling again directly at a small profit.

எதிர்நடை, *s.* The act of doing perversely. 2. Opposite course.

எதிர்நடைக்கணக்கு, *s.* A register or account kept by each partner in a concern, that one may be examined by the other.

எதிர்நிரைநிறை—எதிர்நிரனிறை, *s.* An arrangement of a series of verbs, &c. in the contrary order to that in which their nouns occur. See முறைநிரனிறை.

எதிர்நிலை, *s.* Resistance, opposition, எதிர்நிற்கை.

எதிர்நிலையகத்திணை, *s.* [*in amatory verse.*] The rule for elucidating a circumstance by the opposite case, contrast.

எதிர்நிற்க, *inf.* To stand before one, முன்னிற்க. 2. To oppose, to be perverse, or contumacious, மாறுபட்டுநிற்க. 3. To stand against, withstand, cope with, போர்செய்ய.

எதிர்நோக்குநட்சத்திரம், *s.* A nutchattra whose influence has respect to movements and interests in the different points of the compass, not an astrological, but a common phrase; the same as எதிர்நாள், or more properly, பக்கநாள்.

எதிர்பார்க்க, *inf.* To wait for an expected person, வரவுபார்த்திருக்க. 2. To expect, to look forward, காத்திருக்க.

ஒருகாரியத்திற்கெதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. To hope for a thing, to be in expectation of it.

எதிர்போக, *inf.* To go against, oppose, meet as an army, assail, எதிராகப்போக.

எதிர்ப்பட, *inf.* To meet as in the way, சந்திக்க. 2. To happen, occur, தோன்ற.

எதிர்ப்படுத்த, *inf.* To confront, எதிர்க்க. 2. To stir up strife, cause opposition, பகையாக்க.

எதிர்ப்பாடு, *v. noun.* Meeting, எதிர்ப்படுகை.

எதிர்ப்பாய்ச்சல், *s.* A contrary current; leaping in a contrary direction.

எதிர்மறை, *s.* [*in grammar.*] The negative forms of expression, மறை—அ, அந், ந், நி, நு, வி, &c. are Sanscrit prefixes expressing negation.

எதிர்மறைவினை, *s.* [*in grammar.*] The negative verb, மறைவினை.

எதிர்முகம், *s.* Face to face, முகாமுகம். 2. Presence, சன்னிதி. 3. Front, முன்.

அதற்கெதிர்முகமாக. Opposite to it.

எதிர்வர, *inf.* To come against, to oppose, விரோதமாகவர. 2. To meet as one on leaving home meets a person (considered ominous), எதிராகவர.

எதிர்வழக்கு, *inf.* A counter lawsuit, instituted out of revenge, எதிர்வியாச்சியம்.

எதிர்வாதம், *s.* reply, a dispute.

எதிர்வாதி, *s.* Defendant in law, repliant, respondent, பிரதிவாதி.

எதிர்வினை, *s.* [*not com.*] Negative verbs, மறைவினை. 2. Effects of the deeds of former births to be experienced, வருவினை.

எதிர்வினைவிலக்கு, *v. noun.* [*in rhetoric.*] Preventing a person doing a thing by pointing out its evil consequences, ஒரலங்காரம்.

எதிர், கிறேன், ந்தேன், வேன், எதிர, *v. n.* To come in front, meet, appear in front, எதிர்ப்பட. 2. To happen, occur—as a future event, தோன்ற. 3. *v. a.* To oppose, to make an onset, cope with, எதிர்க்க.

எதிர்ந்தோர், *s.* Opponents, foes, enemies, பகைவர். 2. Those who encounter, combatants, &c. (*p.*)

எதிர. The infinitive of the above verb—used as a particle of comparison, உவமையுருபு. (*p.*)

எதிர்வு, *v. noun.* Meeting, fronting, எதிர்ப்படுகை. 2. Opposition, rivalry, எதிர்க்கை. 3. Futurity, வருங்காலம். 4. Happening, சம்பவிக்கை. (*p.*)

எதிர், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To meet, face, to front, சந்திக்க. 2. To meet as a foe, oppose, withstand, resist, encounter, force an enemy, attack, fall upon, மாறுபட. 3. To counteract, contravene, தடுக்க. 4. To vex, trouble, harass, அலைக்க. 5. To meet a future event, receive, obtain, எதிர்பார்க்க.

தெய்வமெதிர்ப்பின். If destiny be adverse—(இராமா. உரை).

எதிர்காலம், *s.* Future time, future tense, வருங்காலம்.

எதிர்காலவுணர்ச்சி, *s.* Prescience, foreknowledge.

எதிர்த்தவன், *s.* A kind of arsenic.

எதிர்த்துநிற்க, *inf.* To resist, to withstand.

எதிர்த்துப்பேச, *inf.* To contradict, dispute, controvert, retort. 2. To remonstrate, or expostulate with. 3. To object, plead against in law, &c.

எதிர்த்துப்பொர, *inf.* To combat.

எதிர்க்கை, *v. noun.* [*prov.*] Opposition, resistance, விரோதிக்கை.

எதிர்ப்பு, *v. noun.* Meeting, சந்திப்பு. 2. Encounter, attack, resistance, assault, onset, எதிர்க்கை. 3. Counteraction, contravention, தடுப்பு. 4. Harassing, vexing, அலைப்பு. 5. Motive, object, இலக்கு. 6. Futurity, future time, வருங்காலம். 7. A word in reply, an answer, எதிர்மொழி. (நிகண்டு.) 8. A forfeit for breach of contract, சண்டிவாளம்.

எதிர்ப்பை, *s.* Something given in order to obtain a benefit afterwards, கைம்மாறு; [*ex* எதிர்.]

குறியெதிர்ப்பைநீரதுடைத்து. With the hope of getting a return, anticipating a recompense— (குறள்.)

எது, *inter. pron.* Which, what, யாது.

எதற்காக. On what account, wherefore.

எதற்கெதையொப்பிடுகிறாய். Your comparison is quite below the point.

எதாகிலும். Anything whatever.

எதகாரியத்திலும். In whatever thing, in every thing.

எத்தால்வாழலாம்? ஒத்தால்வாழலாம். Who live happily together? A. Those who are unanimous.

எதுகை, *s.* Initial rhyme, commonly occurring in the second letter of every line in the stanza. (See தொடை.) 2. [*vul.*] (*fig.*) Agreement, union, consonance, similarity, பொருத்தம். (*p.*)

தலையாகெதுகை, *s.* In rhyme, similarity of the first class in which all the letters except the initial of the first foot in each line through the stanza are the same—as சொற்போர்புரிவர்நான்மறையாறங்கமுணர்ந்த தொழுகுலத்தோர், விற்போர்புரிவர் நெடியசிலைமிராமனனையவிறல்வேந்தர், பொற்போர்புரிவர் பிறர்பொருளுந்தம்பேற் பேணிப்புரிவணிகர், நெற்போர்புரிவாக்கரில்வேளாண்குலத்து நெறியினரே.

இடையாகெதுகை, *s.* Consonance of a medial kind in which the second letter only ryhmes—as அகரமுதலவெழுத்தெல்லாமாதி, பகவனமுதற்றேயுலகு.

கடையாகெதுகை, *s.* Consonance of an inferior order including every kind except the two given above.

ஆசெதுகை, *s.* An exception to the general rule of எதுகை; i. e. when the second letter of the first line is ய, ர, ல, or ழ, it may be omitted in the following lines when necessary.

வழியெதுகை, *s.* The agreement of the second and third letters in the first, second, and sometimes the third feet in every line through the stanza.

நெடிலெதுகை, *s.* The rhyming of the long consonants in a poem—as ஆவாவென்றேயஞ்சினராழ்ந்தாரொருசாரார், கூகூவென்றேகூவிளிகொண்டாரொருசாரார், மாமாவென்றேமாய்ந்தனர்நீந்தாரொருசாரார், ஏகீர்நாகீரென்செய்தமென்றாரொருசாரார்.

இனவெதுகை, *s.* The rhyming of the same class of consonants in a poem. It consists of three kinds: 1. வல்லினவெதுகை, the consonance which occurs when the second letter of each line of a stanza is any one of the வல்லினம் consonants, உ-ம். தக்கார்தகவிலரென்பதவரவரெச்சத்தாற்காணப்படும். 2. மெல்லினவெதுகை, the consonance which occurs when the second letter of each line of a stanza is any one of the மெல்லினம் consonants, உ-ம். அன்பீனுமார்வமுடைமையதுவீனுநண்பென்னுநாடாச்சிறப்பு. 3. இடையினவெதுகை, the consonance which occurs when the second letter of each line of a stanza is any one of the இடையினம் consonants, உ-ம். எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யாவிளக்கேவிளக்கு.

*எதேச்சை, *s.* One's own wish, choice, fancy, சுவேச்சை. 2. Satisfaction, திருத்தி.

எதேச்சையாக, *inf.* [*used adverbially.*] According to one's own wish, desire, choice, option, fancy, மனதின்படி.

*எதேட்டம்—எதேஷ்டம், *s.* As யதேஷ்டம்; which see.

எதோத்தேசபட்சம், *s.* One of the two systematic methods of treating a subject—opposed to காரியகாலபட்சம். See நன்னூல்.

எத்தனம்—எத்தினம், *s.* Effort, attempt, exertion, பிரயத்தனம். 2. Means, expedient, implement, instrument, utensil, tools, கருவி. 3. Preparation, promptitude, ஆயத்தம். See யத்தினம்.

எத்தனி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To prepare, set about, attempt, aim at, venture, devise, endeavor, எத்தனப்பட.

எத்தனை—எத்துணை, *inter. pron.* How many, how much, what measure, degrees, &c., எவ்வளவு; [*ex* எ, *et* தனை, துணை.]

எத்தனைதூரம். How far?

எத்தனைபெரியது. How great?

எத்தனைமனிதர். How many men?

எத்து, கிறேன், எத்தினேன், வேன், எத்த, *v. a.* To inveigle, cheat, seduce, entrap, defraud, entangle by specious appearances, வஞ்சிக்க. 2. To coax, wheedle a child, &c., இதஞ்சொல்ல.

என்னையெத்தியதைவாங்கிக்கொண்டான். Having deceived me, he obtained the thing.

எத்தப்பார்க்க, *inf.* To intend deceiving.

எத்திப்பறிக்க, *inf.* To obtain by deceit.

எத்து, *v. noun.* Inveigling, seduction, cheating, deception by fair appearances, circumvention, வஞ்சகம்.

எத்துக்குட்பட்டவன், *s.* One who has been deceived.

எத்தன், *s.* [*vul.*] An inveigler, a cheat, an impostor, வஞ்சகன்.

எத்துப்புத்தி, *s.* Deceptive advice, suggestions, &c.

எத்துவாதம், *s.* Contradiction, அகடவிகடம்.

எத்துவாதம்பண்ண, *inf.* To contradict.

எத்துவார்த்தை, *s.* Enticing words.

எத்தேசகாலமும், *adv.* Always, perpetually, in whatever time and place எப்பொழுதும்; [*ex* எ, what, தேசம், region, *et* காலம், time.]

எந்த, *adj. prefix.* Which, what, வினா.—*Note.* எந்த is sometimes doubled—as எந்தெந்த, and used before a word ending with an உம் which is called முற்றும்மை, or with ஆனாலும், and then it signifies whosoever, whatsoever—as எந்தெந்தச்சமயத்திலும், at any time whatsoever; எந்தெந்தவார்த்தையானாலும்எண்ணாமலுச்சரிக்கவேண்டாம், Utter no word whatever before you have considered it.

எந்தவூரிலும்செல்லும். It will pass in any country.

எந்தக்கை. Which hand?

எந்தச்சுமை. Which burden?

எந்தத்தொழில். What business?

எந்தப்பாண்டம். Which vessel?

எந்தமட்டும். How far? how great? how long? how much?

எந்திரம், *s.* Engine, machine in general, சூத்திரம். 2. A hand-mill, திரிகை. 3. Sugar-cane press, ஆலை. 4. A kind of machine for separating the seeds from cotton, பஞ்சுகொட்டுமெந்திரம். 5. Sticks for producing fire by attrition, தீக்கடைகோல். 6. A potter's wheel, குலாலச்சக்கரம். 7. A car, carriage, chariot, தேர். 8. A conveyance artificially managed, ஊர்தி. 9. A mystical diagram in magic or astrology, written on metal or ola and worn on the arm or other part of the body—as a charm or amulet, மந்திரச்சக்கரம். 10. Engines, or other contrivances connected with a fortification to repel or exclude an enemy, மதிலுறுப்பு. See இயந்திரம் and யந்திரம்.

எந்திரகாரன், *s.* A machinist, சூத்திரகாரன்.

எந்திரமெழுதிக்கட்ட, *inf.* To write or engrave a diagram and fasten it on.

எந்திரவாவி, *s.* A machine for drawing water, இலவந்திகை.

எந்தை, *s.* My father, our father, எமதுதந்தை. See also நுந்தை.

எப்படி. How, in what way, or manner, எவ்வண்ணம்; [*ex* எ, *et* படி.]

எப்படிக்கூடுமோஅப்படிச்செய். Do as you can.

எப்படியாகிலும்—எப்படியானாலும்—எப்படியாவது. Howsoever it be, nevertheless.

எப்படியும். However, at any rate, at all events.

அதற்கெப்படி. What shall we do?

வழியெப்படிப்போகிறது. Which is the way? which way must we go?

எப்பொருட்குமிறைவன, *s.* The Deity, the Supreme Being, கடவுள்; [*ex* எ.]

எப்பொழுது—எப்போது—எப்போழ்து. When, at what time, எக்காலம்; [*ex* எ.]

எப்பொழுதும். Always, at all times, continually.

எப்போதாகிலும். Whensoever, at any time.

எப்போதுமுள்ளது. That which is eternal.

எப்போதுவந்தாலும். Whenever he comes.

எப்போதைக்கும். Forever.

எமநாகம், *s.* The ஓமம் plant, அசமதாகம், Anethum sowa. 2. The ஊமத்தை plant.

எமநாமம், *s.* The ஊமத்தை plant, Datura alba.

எமர்—எமார், *s.* Our people, எம்முடையவர்.

எமன், *s.* (*fem.* எமள்.) Our man, friend, relative, &c., எம்முடையவன்.

*எமன், *s.* The deity of *Naraca* or hell, where his capital is placed, in which he sits in judgment on the dead, and distributes rewards and punishments, sending the good to *Swerga*, and the wicked to the division of *Naraca* or *Tartarus* appropriated to their crimes: he corresponds with the *Grecian* god Pluto, and the judge of hell Minos, and in *Hindu* mythology is often identified with death and time; he is the son of Surya, or the sun, and brother of the personified Yamuna or *Jumna* river, நமன். Wils. p. 681. YAMA. (இயமன் and யமன்.) 2. The third fang of the cobra, நாகபாம்பின்பற்களிலொன்று. (*p.*)

எமகணம்—எமகிங்கிரர்—எமதூதர், *s.* The messengers of Yama employed to execute his behests, apprehending souls and conveying them to Tartarus, நமன்றூதர்.

எமதூதன், *s.* The fourth fang of the cobra, நாகபாம்பின்பற்களிலொன்று.

எமலோகம், *s.* The place of the deceased; the purgatory of the Hindus, the kingdom of எமன்.

எமாஸ்திரம், *s.* His weapons of which there are three kinds, viz:. 1. கணிச்சி, a trident. 2. தண்டு, a club. 3. பாசம், a rope.

எமி, *s.* Society, fellowship—the opposite of தமி, solitude. (திவா.) (In சூ, erroneously எமி, companion, உடனிகழ்வான்.)

எம், *pos. pron.* [*from* யாம்.] Our—as எங்குலம், our caste; எம, our things. Also the ending of verbs of different persons, உளப்பாட்டுத்தன்மைப்பன்மை விகுதி—as உண்டனெம்யானுமவனும், I and he ate.

எமக்கு. To us, நமக்கு.

எம்மனோர். Like us, such as we are, persons of our rank, state, circumstances.

எம்முடையது—எமது, *pron.* Ours.

எம்பி, *s.* Our or my younger brother, என்தம்பி. (*p.*)

எம்பியும்யானுமுற்றெதிர்ந்தபோரினில். In the fight in which my brother and I engaged. (இராம.)

எம்பிராட்டி, *s.* Our lady, our mistress, எம்மிறைவி. (*p.*)

எம்பிரான்—எம்பெருமான், *s.* Our lord, god, or chief, எம்மிறைவன். 2. The name of a Vishnu devotee, நர்விட்டுணு பத்தன்.

எம்பெருமான்சதகம், *s.* A celebrated devotional book, containing one hundred stanzas, addressed to Vishnu.

எம்மான், *s.* Our God, எம்மிறைவன். (*p.*)

எம்பர். Which place, எவ்விடம்.

எம்புகம், *s.* The நிலக்கடம்பு plant.

எம்மட்டு—எம்மாத்திரம். How much, what extent, how far, how long, எவ்வளவு; [*ex* எ.]

எம்மாத்திரத்திற்குவாங்கினும். For how much did you obtain it?

அதற்குநானெம்மாத்திரம். Who am I to do such a thing?—implying unfitness.

எம்மை, *inter. n.* Which birth, or transmigration, எப்பிறப்பு. (*p.*)

எம்மையும். In which birth soever past, present, or future. 2. In every kind of birth from those of the gods down to vegetables, referring to the metempsychosis, according to which, the same soul or life assumes different bodies according to its actions in previous births. See பிறப்பு.

எம்மையுலகத்தும். In which world soever, in any or every world. (நாலடி.)

எயில், *s.* A fortress, wall, a fortification, மதில். 2. City, town, புரம். (*p.*)

எயிலொருமூன்றுஞ்செற்றோன். Siva who destroyed the three aerial cities.

எயில்காக்க, *inf.* To guard one's fort, &c.

எயில்வளைக்க, *inf.* To besiege a fort, to surround a fort.

எயிற்புறம், *s.* The parts outside of a fort.

மூவெயில், *s.* [*in mythology.*] The three cities of the Asoors, built in the air one above another, of gold, silver and iron respectively, and destroyed by Siva, because ey had abandoned his worship; on which occasion, he made Maha Meru his bow, and Vishnu his arrow for the execution of his purpose. திரிபுரம். (*p.*)

எயிறு, *s.* A tooth, பல். 2. The tusk of an elephant, or wild hog, யானை, பன்றிமிவற்றின்கோடு. (*p.*)

எயிறலைக்க—எயிறுதின்ன, *inf.* To gnash the teeth—expressive of anger.

எயிறலைப்பு, *v. noun.* Gnashing the teeth.

எயிறிலி, *s.* The sun whose teeth Siva is said to have broken to pieces, சூரியன். (*p.*)

எயின், *s.* A desert tribe, எயினச்சாதி. (*p.*)

எயினர், *s.* (*fem.* எயிற்றியர்.) A cast of foresters who live by plunder and who formerly were much employed as soldiers, மறவர்.

எயினக்குடி—எயின்குடி, *s.* A family of foresters.

எயினச்சேரி—எயின்சேரி, *s.* A village of foresters.

எய், *s.* Porcupine, முட்பன்றி. (*p.*)

எய், கிறேன், தேன், வேன், ய, *v. a.* To cast, to throw, to fling stones, &c.; to discharge arrows, அம்புமுதலியனவெய்ய.

எய்தவனிருக்கவம்பைநோவதேன். Why be offended with the arrow seeing that he is present who discharged it? [*prov.*]

எய்வு, *v. noun.* Shooting with a bow, எய்கை.

எய், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To grow weary by exertion, fail in strength—as in battle; to flag through want of food, &c., இளைக்க. 2. To be reduced in circumstances, grow poor, தரித்திரமடைய. 3. *v. a.* To know, understand, comprehend, அறிய. (*p.*)

அனிச்சம்படிலும்பொறுமையையெய்த்தும். Though he (Siva) knew that the feet of his consort could not endure the failing of the (delicate) *anicah* flower— (பிரபுலிங்க.)

எய்ப்பு, *v. noun.* Weariness, languor, &c., இளைப்பு.

எய்ப்பில்வைப்பு, *s.* That which is laid up for a time of adversity, வறுமையி லுதவதற்குவைக்குநிரவியம்.

எய்து, கிறேன், எய்தினேன், வேன், எயத, *v. a.* To approach, come upon, அணுக. 2. To obtain, acquire, attain, பெற்றுக்கொள்ள. 3. To experience, enjoy, or suffer, பயனனுபவிக்க. 4. *v. n.* To arrive at, come, சேர. 5. To happen, occur, சம்பவிக்க. (*p.*)

மெய்ஞ்ஞானநெறியெய்துகிறது. To obtain true wisdom.

என்பாவத்திற்குப்பயனென்னையெய்திற்று. The consequence of my sin came upon me.

எய்தாமை, *neg. v. noun.* The state of not possessing.

எய்யாமை, *s.* Ignorance, அறியாமை. (*p.*)

எரல், *s.* [*as* சமுத்திரசுண்டி.] A sea-shell.

எரி, *s.* Fire, burning flame, நெருப்பு. 2. Hell, or one of the hells of Hindu mythology, நரகம். 3. Glowing, light, brightness, பிரகாசம். 4. The eighteenth lunar mansion, கேட்டை. 5. The seventh asterism, புனர்பூசம். (*p.*)

எரிகுஞ்சி, *s.* Red, or fiery hair—spoken of the Ratchatas, &c., செம்மயிர். (*p.*)

எரிசனம், *s.* The inhabitants of hell, நரகர். (*p.*)

எரிநாள், *s.* The third lunar mansion, கார்த்திகைநாள். (*p.*)

எரிபொழுது, *s.* The setting sun with a red appearance, செவ்வானப்பொழுது. (*p.*)

எரிப்புறம், *s.* Hell, நரகம். (*p.*)

எரியிட, *inf.* To set on fire, நெருப்புப்போட. (*p.*) 2. To calcine medicine, மருந்தெரிக்க.

எரிவட்டம், *s.* One of the Hindu hells, ஓர்நரகம். (*p.*)

எரி, கிறது, ந்தது, யும், எரிய, *v. n.* To glow, shine, give light, பிரகாசிக்க. 2. To burn, ignite; to be injured, or consumed by fire, to be scorched, to flame, அழல. 3. To burn—as a sore, or fever; to smart, to be inflamed, புண்முதலியவெரிய. 4. To be envious, jealous, to fret, be peevish, பொறாமைகொள்ள. 5. To be enraged, indignant, கோபங்கொள்ள. 6. To burn as the stomach with hunger, வயிறெரிய. 7. To suffer pain—as from a heavy load on the head, &c., தலைமுதலியனவெரிய. (*c.*)

அடுப்பெரிகிறது. The fire upon the hearth burns.

மந்தமெரிந்துபோனது. The indigestion has ceased, *lit.* is burnt up.

நட்சத்திரமெரிந்துவிழுகின்றது. A star glows and falls.

நான்தின்றதெல்லாமெரிந்துபோயிற்று. The food I took has digested. 2. I am so pained by what you said that the food I have eaten seems as nothing. 3. The food I took has digested by means of enchantment, medicines, &c.

வயிறெரிகின்றது. My bowels are inflamed for food. 2. I am in distress, yearning, &c.

அவன்பட்டதைநினைக்கிறபொழுது என்வயிறெரிகிறது. My bowels are inflamed when I think of what he suffered.

கணகணவென்றெரிகிறது. It burns with excessive heat.

அவனெரிபொரியென்றுவிழுகிறான். He breaks out with rage and fury, *lit.* saying, Burn him, fry him.

எரிகரும்பு, *s.* Fagots, விறகு. (*c.*)

எரிகுடல், *s.* A canine appetite, எரிவயிறு. (*c.*)

எரிகுடலன், *s.* One who is always craving for food, தீனமுள்ளவன்.

எரிகுன்மம், *s.* A stomachic disease, excessive heat, head-ache, &c., ஓர்நோய்.

எரிகொள்ளி, *s.* A fire-brand, கொள்ளிக்கட்டை.

எரிசினம், *s.* Burning anger, சகிங் கோபம்.

எரிநரகம், *s.* The burning hell, ஓர்நரகம்—in distinction from others.

எரிபடுவன், *s.* A burning ulcer or cancer, பிளவை.

எரிபந்தம், *s.* A burning torch, a flambeau, தீவர்த்தி. 2. A kind of burning sensation all over the system from disease, எரிச்சல்.

எரிபிடாரி, *s.* An enraged or furious demoness, எரிதூர்க்கை. 2. A peevish, or fretful person—spoken disparagingly, எரிச்சலுடையவள்.

எரிபுழு, *s.* A kind of brownish, yellow caterpillar, the sight of which on leaving home, &c., is regarded as propitious, கம்பளிப்பூச்சியிலோர்வகை.

எரிபூச்சி, *s.* A flying insect which, on contact, emits moisture that causes a burning smart and a discoloring of the skin, ஓர்பூச்சி.

எரிமணி, *s.* Sparkling jewels, bright gems, பிரகாசமுள்ளமணி.

எரிமுகி, *s.* A tree, the milk of whose seeds is pungent and caustic, and being indelible, is used in marking, செங்கொட்டைமரம், Semicarpus anacardium.

எரியவிழிக்க, *inf.* To look fiercely having the eyes flaming with rage, கோபத்தோடேபார்க்க.

எரிவண்டு, *s.* The Mylabris or blistering beetle, ஓர்வகைவண்டு. 2. An insect which strikes against the eye-ball inducing severe smarting, கண்ணிலடிக்கும் வண்டு.

எரிவந்தம், *s.* A burning sensation in the body, எரிபந்தம். 2. (*Met.*) Anger, wrath, எரிச்சல்.

எரிவனம், *s.* A burning place for the dead, சுடுகாடு.

எரிவரியன், *s.* A snake of the viper kind.

பற்றியெரிய, *inf.* To take fire.

எரிப்பு, *v. noun.* Burning, ignition, எரிவு. 2. *s.* Envy, jealousy, peevishness, malice, rancor, பொறாமை. 3. Satiety, nausea, நெஞ்செரிப்பு.

எரிப்புக்காரன்—எரிப்புள்ளவன், *s.* An envious, impatient, peevish, or irritable person, பொறாமையுடையவன்.

எரிப்பெடுக்க, *inf.* To be peevish, cynical, querulous, எரிப்புண்டாக.

ஓரெரிப்பாயெரிக்க, *inf.* To keep a fire burning, to heat continually—as in preparing medicines.

ஓரெரிப்பாயெரித்துப்போட்டான். He consumed it at one burning. 2. He has utterly destroyed (the family, town, &c., by injustice, oppression, &c.).

எரியல், *v. noun.* Burning, எரிவு. 2. [*prov.*] That which is burnt—as food, at the bottom of a vessel in cooking, எரிந்தது.

எரிவு, *v. noun.* Burning, ignition, எரிகை. 2. *s.* Heat in the system, smarting, pungency, inflammation, உடலெரிவு. 3. Envy, jealousy, resentment, பொறாமை. 4. Fretting, displeasure, anger, irritation of body and mind, கோபம்.

கண்ணெரிவு, *s.* Burning of the eyes.

கையெரிவு, *s.* Burning of the hands.

காலெரிவு, *s.* Burning of the feet.

உடலெரிவு, *s.* Burning of the whole body.

குடலெரிவு, *s.* Burning of the bowels.

எரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To burn, consume by fire, scorch, எரியச்செய்ய. 2. To keep (a lamp) burning, விளக்கெரிக்க. 3. To cause digestion by extraordinary means—as by incantations, medicines, சீரணிப்பிக்க. 4. To sublimate, calcine metals, reduce to powder by fire for medicines, மருந்தெரிக்க.

தான்தின்றநஞ்சுதன்னையெரிக்கும். The poison he takes will consume himself; i. e. evil deeds bring their own retribution.

எரிதைலம், *s.* Medicinal oil prepared by burning, காய்ச்சியதைலம். See எண்ணெயெரித்தல்.

எரிமருந்து—எரியவிட்டமருந்து, *s.* Calcined medicinal powder, எரித்தமருந்து.

பேயையெரிக்க, *inf.* To consume a demon by magic.

பேயையெரித்துமாரணம்பண்ண. To burn and kill a demon by magic.

எரிகாசு, *s.* One of the five ingredients for perfuming the hair, காசுக்கட்டி. See அகிற்கூட்டு.

எரிக்கலகாம்போதி, *s.* A tune, ஓர்இராகம்.

எரிச்சல், *s.* A burning sensation in the stomach from hunger, &c., எரிவு. 2. Envy, jealousy, unkindness, spitefulness, பொறாமை. 3. Anger, fury, indignation, moroseness, கோபம். 4. Acerbity, pungency—as of some kinds of fruits, உறைப்பு. 5. Chagrin, மனவெரிவு; [*ex* எரி.]

என்மேலவன்மிகவுமெரிச்சலாயிருக்கிறான். He is very jealous of me; he is very angry with me.

எரிச்சலாக்க, *inf.* To nettle, to irritate, exasperate, கோபமுண்டாக்க.

எரிச்சற்பட, *inf.* To be envious, irritable, எரிவடைய.

எரு, *s.* Manure of cows, sheep, &c., வயலுக்கிடுமெரு. 2. Cowdung, சாணி.

எருக்கட்ட, *inf.* To fold sheep, or tie cows on land by night, for manure. கிடைவைக்க. 2. (*Rott.*) To collect dung.

எருக்கட்டு, *v. noun* The folding of sheep, or tying of cows for manure, கிடைவைக்கை 2. *s.* A spot of land thus manured, கிடைவைத்தசெல்லை.

எருக்களம், *s.* The site of a dunghill, எருவிருக்குமிடம்.

எருச்சாட்டி, *s.* A land not manured for the present year, having been manured previously, எருவிட்டநிலம்.

எருப்போட—எருவிட, *inf.* To manure land, வயலுக்கெருப்பெய்ய. 2. To pass excrement—as cows, &c., சாணியிட.

எருமணம், *s.* The smell of dung, சாணிநாற்றம்.

எருமுட்டை, *s.* Cowdung dried in the sun and used for fuel, வறட்டி

காட்டெருமுட்டை, *s.* Cowdung found dry in pasture grounds.

எருமுட்டைப்பீநாறி, *s.* A plant, பெருப்படக்கி.

எருவடைக்க, *inf.* To fold sheep, or tie cows for manure, எருப்பெய்ய.

எருவறட்டி, *s.* Cowdung made in cakes and stuck against a wall to dry, or as found dry in jungles—used as fuel. எருமுட்டை.

எருவாரம், *s.* Share of the produce assigned to those who furnish manure for the land, எருவுக்குக்கொடுக்கும்வாரம்.

எருவிடுவாயில், *s.* The anus, குதம்.

எருக்கு, *s.* A coarse, milky shrub, the charcoal of which is used in making gun-powder, ஓர்செடி, Calotropis gigantea.

எருக்கமாலை, *s.* A garland of the flowers of the aforesaid shrub: 1. Worn by Siva. 2. Upon the neck of a malefactor before he is executed. 3. Used in adorning the corpse of a bachelor.

எருக்கம்பால், *s.* Milk of the எருக்கு, useful in leprous and other cutaneous diseases, எருக்கினுதிரபால்.

எருக்கம்வேர், *s.* Root of the எருக்கு, employed medicinally for various purposes, எருக்கினதுவேர்.

ஏறுபடி, *s.* An extra batta or allowance above the stated proportion, to a servant, for expenditure in the temple, for an entertainment, &c., அதிகப்படி.

ஏறுபெட்டி, *s.* [*prov.*] A toddy-drawer's basket for carrying toddy, கள் ளேறுபெட்டி.

ஏறுபொழுது, *s.* The sun as it rises toward the meridian.

ஏறுமிராசி, *s.* The constellation in the sun's path from the equator to the northern solstitial point, உச்சந்திற்கேறு மிராசி. See இறங்குமிராசி.

ஏறுவட்டம், *s.* The difference, less or more than sixty Indian hours, in the passage of the moon through any of the asterisms, also the difference in the கரணம் and யோகம் as affected thereby, நட் சத்திரமுதலியனகாழிகையேறுமுறை. 2. In the division of the inheritance of lands, trades, &c., the excess above or the deficiency in equal shares, பங்கினளவுக்கதிகமா னதிலமுதலியன.

ஏறுவால், *s.* A long tail—a good sign in certain animals, நீண்டவால்.

பசுவேறுவாலுமெருது குறைவாலும். A long tail for a cow and a short one for a bull are desirable.

ஏறுவெய்யில். Increasing heat or sunshine as the sun rises towards the meridian, காலைவெய்யில்—opp. இறங்குவெய் யில்.

ஏறெடுக்க, *inf.* To lift up the head, eyes, &c., மேலெடுக்க.

ஏற்படு, கிறேன், ஏற்பட்டேன், வேன், ஏற்பட. *v. n.* To be engaged in, to enter upon a business, &c., தலைப்பட. 2. To be persuaded, to become a party in a contract, &c., to agree, consent, சம்மதிக்க.

ஏற்படுத்து, கிறேன், ஏற்படுத்தினேன், வேன், ஏற்படுத்த, *v. a.* To ordain, establish, appoint, assign, to set on foot, institute, to put into office, நியமிக்க. 2. To persuade, to prevail on by persuasion, induce one to become a party in a contract or other transaction, இணக்கச்செய்ய. 3. To prove in law, நிச்சயிக்க. 4. To create, to make, form, construct, compose, உண்டுபண்ண. 5. To provide, prepare, arrange, எத்தனப்படு த்த; [*ex* ஏறு.]

அவனைக்குற்றவாளியென்றேற்படுத்தினார்கள். They have unjustly convicted him. 2. They have unjustly accused him.

ஏற்பாடு, *s.* Institution, establishment, a constituted state of things, பிரமாணம். 2. Covenant, contract, engagement, உடன்படிக்கை. 3. Established customs or rules, முறை. 4. [*With the prefix* பழைய or புதிய] The Testament, among Christians.

ஏற்றம், *s.* Rise, ascent, acclivity, உயர்வு. 2. Superiority, excellence, pre-eminence, மேன்மை. 3. Fame, புகழ். 4. Excess, preponderance, மிகுதி. 5. Increase, பெருக்கம். 6. The flow of the tide, நீரேற்றம். 7. A lever or shaft for drawing water for irrigation, ஏற்றமரம்.

ஏற்றக்கால், *s.* The supporters of a beam for irrigation, துலாவைத்தாங்குங்கால்.

ஏற்றக்குறைச்சல் — ஏற்றத்தாழ்ச்சி, ஏற்றத்தாழ்வு, *s.* Superiority and inferiority, highness and lowness, உயர்வு தாழ்வு. 2. Disparity, difference, disagreement, that which is greater or smaller, &c., வேற்றுமை.

ஏற்றக்கோல், *s.* A bamboo pole with which water is drawn from a well, ஏற்றக்கழி.

ஏற்றச்சால், *s.* A bucket used for irrigation, நீரிறைக்குஞ்சால்.

ஏற்றமடல், *s.* The supporting timbers on which the well-sweep oscillates, being generally attached to a pillar which is fixed in the ground.

ஏற்றமரம், *s.* The well-sweep, the picotta.

ஏற்று, கிறேன், ஏற்றினேன், வேன், ஏற்ற, *v. a.* To raise, hoist, lift up, எழுப்ப. 2. To load a cart, &c.; to ship; to put upon a shelf, &c., set a load on one's head, set up, pile up, stow, பாரமேற்ற. 3. To put in, cause to enter, insert, drive in—as a nail, உள்ளேற்ற. 4. (*p.*) To teach, instruct, உணர்த்த.

மச்சிலேற்றியேணியைவாங்கிவிட்டான். He has put me in the loft, and taken away the ladder; i. e. be bas induced me to engage in the business and then deserted me.

நிறைந்ததண்ணளியினனென்பாரதனைக்குடைமேலேற்றிமுழுமதிமுக்குடையென்றார். He said, the triple, full-moon-like umbrellas—thus transferring the benignant qualities of the possessor to the umbrella.

இதையதின்மேலேற்றிச்சொல்லலாம். This is applicable to that.

தன்வருத்தத்தைமாலைப்பொழுதின்மேலேற்றி. Ascribing her sufferings to the evening twilight.

குற்றத்தையென்மேலேற்றப்பார்த்தான். He sought to fix the blame on me.

ஏற்றிப்போட — ஏற்றிவிட, *inf.* To transport, to export goods.

ஏற்றுதுறை, *s.* Place of exportation or embarkation, துறைமுகம்.

ஏற்றுமதி, *s.* Export. 2. Cargo.

ஏற்றுமதிச்செலவு, *s.* Shipping expenses.

ஏற்றுமதிபண்ண, *inf.* To export a cargo.

விளக்கேற்ற, *inf.* To set up, to place a lamp, to light a candle.

குடியேற்ற, *inf.* To people, to populate.

ஏற்றம், *v. noun.* Hoisting, raising up, ஏற்றுகை.

ஏன, *s.* Others, the rest, ஏனைய or ஏனை. (*p.*)

சார்பெழுத்தேனவுந்தம்முதலனைய. The other derivative letters are formed in the same way—as their originals.

ஏனக்கோடு, *s.* The வெதுப்படக்கி plant, Bollata, *L.*

ஏனம், *s.* [*vul.*] A vessel, பாத்திரம். 2. An utensil, a tool, கருவி. 3. (*p.*) A hog, பன்றி. 4. Wild hog, காட்டுப்பன்றி. 5. An auxiliary particle for sounding the letter ஃ, எழுத்தின்சாரியை. 6. A palm-leaf umbrella, ஓலைக்குடை.

*ஏனம், *s.* Sin, fault, offence, பாவம். Wils. p. 173. Enas.

ஏனல், *s.* Millet of several species, தினை, Panicum miliaceum, *L.* 2. An ear of corn, கதிர். 3. Millet field, தினைப்புனம். (*p.*)

ஏனவாயன், *s.* [*vul.*] A simpleton, a fool, பேதை.

ஏனாதி, *s.* A general, தளகர்த்தன். 2. A king's minister, statesman, மந்திரி. 3. A barber, நாவிதன். 4. A man of the மறவன் caste, a soldier, போர்வீரன். (*p.*) 5. An electuary, ஓரிலேகியம்.

ஏனாதிநாயனார், *s.* One of the sixty-three devotees of Siva, சிவனடியாரறுபத்துமூவரிலொருவர்.

ஏனும். A particle affixed to finite verbs, gerunds, nouns, &c., and meaning although, even if, also, at least, &c., ஓர்வினையெச்சவிகுதி.

செத்தேனுமினிப்பிறப்பேன்தேவர்தேவே. Oh! God of gods. I shall be born again even after the death of this body.

ஏனை, *adj.* Other, the rest, &c., ஏனைய.—*Note.* In some connections, it appears to be an expletive. (*p.*)

ஏனையர் — ஏனையவர் — ஏனையோர், ஏனோர், *s.* The others, the rest.

ஏனைய, *s.* (*sing.* ஏனையது.) Other things.

ஏனை, *s.* An eel, மலங்குமீன். (*p.*)

ஏன். Why? what? wherefore? a change of என். 2. An affix of entreaty, இரக்கப்பொருளைத்தருமிடைச்சொல். 3. The common termination of the first person sing. in verbs and appellatives, தன்மையொருமைவிகுதி.—*Note.* ஏன is the common form of answering to a call. It is also in some places used as a sign affixed to the name of the contracting party in the introduction of bonds.

ஏனென்பாரில்லை. No one cares (for him); i. e. to afford him relief. 2. There is no one to defend him.

ஏனென்றால். For, because, if it be asked why.

ஏனையா. What, sir?

ஏனோதானோவென்றிருக்க. To be careless.

ஏன்வந்தாய். Why did you come?

வாருமேன். [*vul.*] Do come, I pray you—probably a corruption of வாருமே.

அதையேன் இதையேனென்கிறான். He will have nothing to do with the matter. 2. He rejects both. 3. He has a dislike to every thing worldly, being disposed to become an ascetic.

கூப்பிட்டாலேனென்றுசொல்லு. If you are called, answer—*lit.* say ஏன்.

நான்வருவானேன். Why should I come?

அவர்கள்போவானேன். Why should they go? In the last two examples, the verb is in the gerundial form—a finite verb being understood.

ஏன்றல். A past verbal form of ஏல்.

ஏன்றுகொள்ள, *inf.* To defend, to plead the cause of another.

ஐ

ஐ. The diphthong *ai*, the ninth vowel, ஒன்பதாமுயிர். It may be written for அய் or vice versa. In the beginning and middle of a word, when followed by ச, ஞ, or ய, ஐ is sometimes substituted for அ—as அரைசன் for அரசன்; மைஞ்ச for மஞ்ச; ஆலையம் for ஆலயம்; மையல் for மயல். Words beginning with ஐ often take அய் instead—as அய்யன் for ஐயன்; அய்யோ for ஐயோ, &c. 2. The form of the second or accusative case, இரண்டனுருபு—as அவனை, him. 3. A termination of the second pers. sing. முன்னிலையொருமைவிகுதி—as பெரியை, thou art great; வந்தனை, thou art come. 4. A terminaton of nouns chiefly feminine, பெயர்விகுதி—as தெரிவை, a woman; தந்தை, a father. 5. An expletive particle, சாரியை—as ஏற்றைசெல்லும், the bull walks. 6. A change of Sanscrit termination ஆ, வடமொழியீறுகாரமைகாரமாதல்—as தயை for தயா, favor; மகிமை for மகிமா, glory. 7. The termination of a class of verbals, தொழிற்பெயர்விகுதி—as நடை, walking. 8. A letter used to give some words in உ the force of adjectives—as பண்டு, antiquity—பண்டைச்சான்றோர், the learned of antiquity; அன்று, that day; அற்றைக்கூலி, daily wages. (*p.*) 9. A sound made to urge forward elephants, யானையைப்பாகரதட்டுமோசை.

ஐ, *s.* God, கடவுள். 2. Lord, master யசமானன். 3. A king, அரசன். 4. A guru, a priest, a teacher, ஆசான். 5. A father, தந்தை. 6. Beauty, அழகு. 7. Phlegm—one of the three humors or fluids of the body, கோழை. (See பிணி.) 8. Cough, coughing, catarrh, இருமல். 9. Minuteness, நுண்மை. 10. [*contraction of* ஐந்து,] Five. (*p.*)

ஐமுதற்பிணிகளாலழுந்தி. Being afflicted with phlegm and other kindred diseases—

ஐயபூங்கொடி. O beautiful flower-shrub (metaph. for lady). (வாணன்கோவை.)

ஐயெனத்தாம்பெருகுவதும். To become so great as to be called Lord (ஆறெறிந்.)

என்னைவானமேற. My father departing this life, *lit.* ascending to heaven.

ஐது, *appel. noun.* That which is beautiful.

ஐதனையாநின்றவணிந்துரை. The preface which is an embellishment. (நன்னூல்.)

ஐயபூழி, *s.* Fine dust.

ஐகான்—ஐகாரம், *s.* The letter ஐ. (*p.*)

ஐகாரக்குறுக்கம், *s.* The letter ஐ shortened in sound, சார்பெழுத்துகளிலொன்று. (*p.*)

*ஐக்கம்—ஐக்கியம், *s.* Oneness, union, combination, communion, fellowship; an aggregate, a whole of various parts, ஒன்றுபடுகை. Wils. p. 173. AYKYA. (உப. 404.)

ஐக்கியப்பட—ஐக்கியமாக, *inf.* To become united.

*ஐசுவரியம்—ஐச்சுவரியம், *s.* Riches, wealth, felicity, prosperity, செல்வம். Eight species of ஐசுவரியம் are named. (அட்டைசுவரியம்.) 1. Royalty, dominion, இராசாங்கம். 2 Offspring மக்கள். 3. Relations, சுற்றம். 4. Gold and other precious metals, பொன். 5. Gems, மணி. 6. Rice and other grain, நெல். 7. Conveyances, வாகனம். 8. Attendants, அடிமை. Some authorities give wives, cows, and long life instead of some of the above. See நிகண்டு.

ஐசுவரியமடைய, *inf.* To attain temporal felicity as above.

ஐசுவரியமுள்ளவன்—ஐசுவரியவான், *s.* A rich man.

*ஐதிகம், *s.* Knowledge, opinions, belief, &c., derived from tradition or universal consent, அளவைப்பிரமாணத்திலொன்று. Wils. p. 174. AITIHYA. (*p.*)

ஐதிகப்பிரமாணம்—ஐதிகவளவை, The law of inference from oral tradition, popular belief, &c. See அளவை.

ஐது. Being separated by spaces, standing close but not in contact, செறிவின்மை. 2. Fineness, minuteness, subtleness, permeableness, நுண்மை. (இ. 436.)

ஐதுநெல்அடர்ந்ததுசுற்றம். Let the rice-crop be thin, but relations thick, numerous. [*prov.*]

வரிச்சலையைதாகப்போட்டுத்தை. Put the laths rather wide apart.

ஐதபயிர், *s.* A thin crop of growing corn.

ஐதாகவிதைத்தல், *v. noun.* Sowing thinly, sparsely.

ஐந்தார், *s.* The palmyra palm tree, பனை, Borassus flabelliformis, *L.*

*ஐந்திரம், *s.* A Sanscrit grammar so called, இந்திரவியாகரணம். 2. One of the twenty-seven Yogas, நித்தியயோகத்தொன்று. 3. A work on architecture, சிற்பநூலிலொன்று. Wils. p. 174. AYNDRA. (*p.*)

*ஐந்திரி, *s.* The east—from இந்திரன், the regent of that quarter, கிழக்கு. Wils. p. 174. AYNDRI.

ஐந்து, *adj. or noun.* Five, ஓரெண்.

ஐங்கணை, *s.* Five flowers feigned to be the arrows of Hindu cupid. (*p.*)

ஐங்கணைக்கிழவன், Kama, the Hindu cupid, *lit.* lord of the five arrows, மன்மதன். (*p.*)

ஐங்கரன், *s.* Ganesa, the five-handed. He is represented with an elephant's head, the proboscis or trunk is figuratively reckoned as a hand, விநாயகன். (*p.*)

ஐங்கரற்கிளையோன், *s.* A name of Skanda, முருகன். 2. Verapattra, வீரபத்திரன். (*p.*)

ஐங்கலம், *s.* Sixty marcals.

ஐங்காதம், *s.* Five leagues.

ஐங்காயம், *s.* The five kinds of காயம். (See காயம்.) 2. Other five kinds are used in witchcraft, viz.: 1. மிளகு, pepper. 2. வெந்தயம், dill. 3. ஏலம், cardamom. 4. வெள்ளுள்ளி, garlic. 5. பெருங்காயம், assafœtida.

ஐங்காயத்தூள்—ஐங்காயவுண்டை, *s.* Powders of five ingredients given to women after child-birth, ஓர்மருந்து.

ஐங்குரவர், *s.* The five superiors, ஐம்பெரியோர், viz.: King, அரசன்; guru, குரு; father, பிதா; mother, மாதா and elder brother, தமயன். In some classifications, உபாத்தியாயன் is placed instead of மாதா.

ஐங்குழு, *s.* The five confidential servants of a king, அரசர்க்குக்குழு, viz.: 1. மந்திரியர், ministers. 2. புரோகிதர், priests. 3. சேனைபதியர், generals. 4. தூதர், ambassadors. 5. சாரணர், spies.

ஐங்கோணம், *s.* A pentagon, quinquangular figure, பஞ்சகோணம்.

ஐஞ்ஞூறு, *s.* Five-hundred, ஐந்நூறு.

ஐந்தரு, *s.* The five trees in the world of Indra, பஞ்சதரு, viz.: 1. அரிச்சந்தனம். 2. கற்பகம். 3. சந்தானம். 4. பாரிசாதம். 5. மந்தாரம்.

ஐந்தருநாதன், *s.* Indra, lord of the five trees in the celestial world, which yield whatever is asked or desired of them, இந்திரன். (*p.*)

ஐந்தலைநாகம், *s.* A fabulous five-headed cobra, of which each head is supposed to contain a very precious gem. It is said to be found in mountainous districts and to have the power of flying.

ஐந்தவித்தல், *s.* The control of the senses, ஐம்பொறியடக்கல்.

ஐந்தவித்தானாற்றலகல்விசும்புளார்கோமானிந்திரனேசாலுங்கரி. Indra, the god of the celestials, is a living monument of the wonderful power of those who control the five senses. (குறள்.)

ஐந்தனுருபு, *s.* The fifth case (இன்) —one of the ablatives denoting procession, similitude, limit, and means, ஐந்தாம்வேற்றுமையுருபு.

மலையின்வீழருவி. Torrents rushing from the mountains.

காக்கையிற்கரிதுகளம்பழம். The களா berry is as black as a crow.

மதுரையின்வடக்குச்சிதம்பரம். Sethamparam is situated to the north of Madura.

கல்வியிற்பெரியன்கம்பன். Kampan made himself great by learning.

ஐந்தாங்கால், *s.* The first post of the marriage shed when planted on the fifth day before the marriage, the third, fifth, or seventh day being chosen, as it may be lucky or otherwise, according to astrological calculation, மணப்பந்தரின் ஐந்தாங்கால்.

ஐந்தானம், *s.* The fifth lunar asterism, மிருகசீரிடம். (*p.*)

ஐந்திணை, *s.* The five kinds of land, &c., ஐவகைநிலம். (See திணை.) 2. The closest friendship or love between husbands and wives, அன்புடைக்காமம். (*p.*)

ஐந்திணைச்செய்யுள், *s.* A poem in which the five different kinds of soil are described and illustrated—one of the ninety-six பிரபந்தம், ஓர்பிரபந்தம். (*p.*)

ஐந்துருவாணி, *s.* A shaft connecting the floors or stages of a car. See அஞ்சுருவாணி.

ஐந்துறுப்படக்கி *s.* The tortoise, ஆமை. (*p.*)

ஐந்தொகைவினா, *s.* [*in arithmetic.*] The rule of five or double rule of three, ஓர்வகைவெண்வினா.

ஐந்தொழில், *s.* The five divine operations, பஞ்சகிருத்தியம், viz.: 1. சிருஷ்டி, creation or reproduction. 2. ஸ்திதி, preservation. 3. சங்காரம், destruction, reduction of things to their primitive elements. 4. திரோபவம், that act of the deity by which he conceals from the sentient soul its future destiny for purposes of moral discipline; concealing, obscuring; i. e. involving the soul in ignorance or illusion by means of magic. 5. அநுக்கிரகம், grace, the various means adopted for the deliverance of the soul from the power of illusion and consequent transmigrations. See கிருத்தியம்.

ஐமீன், *s.* The thirteenth lunar asterism, அத்தநாள். (*p.*)

ஐமுகன்—ஐயானனன், *s.* Siva, the five-faced, சிவன். (*p.*)

ஐமுகாஸ்திரம், *s.* A five-pointed arrow, பஞ்சமுகாஸ்திரம். (*p.*)

ஐம்பது, *s.* Fifty.

ஐம்பத்தொன்று, *s.* Fifty-one.

ஐம்பால், *s.* [*in grammar.*] The five பால், or the genders and numbers, ஐந்துபால். 2. The five modes of dressing a woman's hair, ஐவகையாகமயிர்முடிக்கை. 3. The hair of a female, மகளிர்கூந்தல். See பால். (*p.*)

ஐம்புலம்—ஐம்புலன், *s.* The five senses, பஞ்சவிஷயம்.

ஐம்புலத்தடங்கான், *s.* He who is not comprehensible by the five senses—God, கடவுள். (*p.*)

ஐம்புலம்வென்றோர், *s.* Ascetics, holy persons, முனிவர். (*p.*)

ஐம்புலனடக்கல். Subjugation of the five senses.

ஐம்புலனுகர்ச்சியினிறப்பன, *s.* The five kinds of creatures which perish by means of the senses, viz.: 1. சுவையால்-மீன், fish, by the taste in catching at the bait. 2. நாற்றத்தால்-வண்டு, beetles, by the smell. 3. ஊற்றினால்-யானை, elephants, by copulation. 4. ஓசையால்-அசுணம், a species of bird by harsh sounds. 5. ஒளியால்-விட்டில், a species of insect, attracted by the light.

ஐம்புலன்விழையான், *s.* An ascetic, முனிவன். (*p.*)

ஐம்புலாதி, *s.* [*prov.*] Anxiousness, being full of cares.

ஐம்பூதம், *s.* The five elements, பஞ்சபூதம்.

ஐம்பொறி, *s.* The five organs of sense, பஞ்சேந்திரியம்.

ஐம்பொறிநுகர்ச்சி, *s.* Enjoyment of the senses, பொறிபுலனைக்கொள்ளுகை.

ஐம்பொன், *s.* The five kinds of metals, பஞ்சலோகம்.

ஐயாயிரம், *s.* Five-thousand, ஐந்தாயிரம்.

ஐயைந்து, *s.* Five times five.

ஐவகைப்பொழுது, *s.* Five divisions of the day, சிறுபொழுது, viz.: மாலை, யாமம், வைகறை, எற்பாடு, நண்பகல்.

ஐவகைப்பொன், *s.* See பஞ்சலோகம்.

ஐவகைமயிர்முடி, *s.* The five methods of dressing women's hair. See ஐம்பால்.

ஐவகைவினா, *s.* Five modes of interrogation for the solution of doubtful subjects. See வினா.

ஐவர், *s.* The five பாண்டவர், or sons of பாண்டு, viz.: 1. தருமன். 2. வீமன். 3. அருச்சுனன். 4. நகுலன். 5. சகாதேவன். 2. (*fig.*) The five senses in the language of ascetics, ஐம்புலன்.

ஐவரையடக்கி. Subjugating. the five senses—

ஐவருக்குந்தேவி, *s.* Dropada the wife of the Pandavas, தரோபதை.

ஐவாய்மான், *s.* A cow, பசு. (திருவிளை.) (*p.*)

ஐவாய்மிருகம், *s.* A bear—so called from the prehensile power of his four feet and mouth, கரடி. (*p.*)

ஐவிரலி, *s.* [*commonly* ஐவேலி] A creeping plant whose leaf is supposed to resemble the fingers, a pentadactyle, ஓர்கொடி, Bryonia laciniosa, *L.*—*Note.* In this plant the god Siva is said to have concealed himself when pursued by பஸ்மாசுரன், who had, by penance, obtained from him, as a boon, power to destroy all on whose head he should place his hand.

ஐவிரல், *s.* The thirteenth lunar mansion, அத்தநாள். (*p.*)

ஐவேலி, *s.* A place sacred to Siva, ஓர்சிவஸ்தலம். 2. A creeper. See ஐவிரலி.

ஐவைந்து, *s.* Five of each, &c., ஐந்தைந்து.

ஐந்தை, *s.* Small mustard, சிறுகடுகு. (நாலடி.) (*p.*)

ஐப்பசி, *s.* The first lunar asterism, அச்சுவினிநாள். (*p.*) 2. The month of October, ஓர்மாதம்.

ஐமிச்சம், *s.* [*prov.*] Doubt, suspicion, suspense in small degree, ஐயம். 2. Fear, apprehension, அச்சம்.

அங்கேபோக எனக்கு ஐமிச்சமாயிருக்கிறது. I am afraid to go there.

ஐமுகி, *s.* The ஆமணக்கு plant.

ஐமை, *s.* Closeness, crowdedness, நெருக்கம். 2. Assembly, கூட்டம். 3. Thinness, flatness—as of a plate, தகட்டுவடிவு. (*p.*)

ஐயங்கவீனம், *s.* Butter, புதுவெண்ணெய். (நிகண்டு.) (*p.*)

ஐயங்கன், *s.* A demon, ஓர்பேய்.

ஐயங்காய்ச்சி, *s.* [*prov*] A demoness, a vampire, ஓர்பெண்பேய்.

உன்னை ஐயங்காய்ச்சியடிக்க. Be thou slain by ஐயங்காய்ச்சி—a curse.

ஐயங்கார், *s.* [*prop.* ஐயர்.] Learned brahmans of the Vishnu sect, வைணவப்பிராமணர்.

ஐயஞ்சு, *s.* A plant, நிலப்பனைக்கிழங்கு, Curculigo orchioides, *L.*

ஐயம், *s.* Doubt, hesitation, uncertainty, indecision, suspense, scepticism, terms of probability, possibility, and any thing short of positive certainty are included, சந்தேகம். 2. (*p.*) Alms, charity, பிச்சை. 3. A beggar's vessel or shell, இரப்போர்கலம். 4. Phlegm—one of the humors of the body, சிலேட்டுமம். 5. Doubt, surprise, &c.—as one of the துறை, அகப்பொருட்டுறையினொன்று—as, போதோவிசும்போபுனலோபணிகளதுபதியோயாதோவறிகுவதேதுமரிது, whether the place the damsel occupies is a lotus flower, the world of the gods, water, or the world of serpents, it is difficult to determine.

ஐயம்புகினுஞ்செய்வினைசெய். Though you go abegging, perform your duties. (ஔவை.)

ஐயகணசூலை, *s.* An arthritic disease arising from phlegm and heat, ஆறுசூலையிலொன்று.

ஐயக்காட்சி, *s.* An object or subject exciting doubt, indistinct perception, problematical or hypothetical terms, அதுவோவிதுவோவெனக்காண்கை. (See காட்சி.) 2. Doubt, சந்தேகம்.

ஐயக்காரன், *s.* A beggar, a mendicant, பிச்சைக்காரன்.

ஐயக்கிளவி, *s.* Terms or particles of doubt or uncertainty, commonly found in interrogative expressions, ஐயமொழி—such as ஆ, ஏ, ஓ, கொல், யா, &c.

ஐயநாடி, *s.* One of the three states of the pulse—that in which the phlegmatic humor is supposed to be prevalent in the system, சிலேட்டுமநாடி. See நாடி.

ஐயப்பட, *inf.* To doubt, hesitate.

ஐயப்படாமை, *neg. v. noun.* Freedom from doubt and fear, certainty, undauntedness, சந்தேகங்கொள்ளாமை. 2. One of the eight அறத்துறுப்பு. See உறுப்பு.

ஐயப்பாடு, *s.* Doubt, uncertainty, indecision, apprehension, suspense, சந்தேகம்.

ஐயமறுக்க, *inf.* One of the five kinds of questions which are proposed to remove doubt from the mind, சந்தேகநிவர்த்திசெய்ய.

ஐயமிட, *inf.* To give alms, பிச்சையிட.

ஐயமிட்டுண். Give alms before you eat.

ஐயமுற, *inf.* To doubt, சந்தேகமடைய.

ஐயமேலிட, *inf.* To be in a great doubt, சந்தேகமிகரிக்க. 2. To have the rattles in the throat—as a dying person, சிலேட்டுமமேலிட.

ஐயவணி, *s.* A figure in rhetoric—as where doubt is entertained as to whether a thing which bears analogy to another is identical with or distinct from it—as தாதளவிவண்டுமொழுந்தாமரைகொல் மாதர்விழிபுலவும் வாண்முகங்கொல். I doubt whether it is the face of a woman or a lotus flower, since it resembles so much the latter.

ஐயவதிசயம், *s.* A figure in rhetoric, ஓரலங்காரம்.

ஐயவிலக்கு, *s.* A figure in rhetoric, ஓரலங்காரம்.

ஐயவும்மை, *s.* A particle showing uncertainty, doubt. See உம்.

ஐயவுவமை, *s.* A figure in rhetoric, ஓரலங்காரம்.

ஐயுற, *inf.* To doubt, hesitate, to be undecided, to suspect, to be in suspense, சந்தேகமடைய.

சக்கரஞ்சுற்றுகின்றமைகண்டையுற்று. Wondering at the sight of the whirling discus.

பக்கத்தாரையாரையுமையுறுதல். Suspecting all neighbors. (நீதிநெறி.)

ஐயுறல்—ஐயுறவு, *v. noun.* Doubting, apprehension, suspicion, சந்தேகம்.

ஐயுறுத்த, *inf.* To cause or excite doubt, to induce apprehension, ஐயமுறுத்த.

ஐயர், *s.* Brahmans, பார்ப்பார். This is the common term of address to brahmans. It is also affixed to nouns as an honorific particle—as சப்பையர் instead of சப்பர், the latter being a common name for others. 2. (*p.*) Sages, முனிவர். 3. Superiors, உயர்ந்தோர். 4. The gods, வானோர்.

ஐயவி, *s.* Mustard, கடுகு. (*p*)

ஐயனார், *s.* A mythologic person said to have sprung from Vishnu and Siva, அரியபுத்திரன்.

ஐயன், *s.* [*voc.* ஐயா, ஐய, ஐயனே, &c., *pl.* ஐயன்மார், ஐயமார்.] Father, பிதா. 2. Elder brother, மூத்தோன். 3. Guru, குரு. 4. An elder, a superior, a person of dignity, respectability, master, &c., உயர்ந்தோன். 5. A king, அரசன். 6. A teacher, preceptor, உபாத்தியாயன். 7. The god Eyanar, ஐயனார். 8. Argha, அருகன். (*p.*) ஐயர் is sometimes used in the nominative case for ஐயன்—as ஐயர்வந்தபின்புனக்குத்தருவேன். I will give it to you after my father, master, &c., is come.

ஐயா. The vocative of ஐயன் is often used as an interjection.

ஐயா பணமிருந்தாலுங் கொள்ளக்கிடையாதே.... Strange indeed, though one has money, the thing is not to be bought.

வாருமையா. Come, sir—a common term of salutation among persons of respectability.

அரிவையைக்கோடியையா. Take a wife, sir, I beseech you—addressed by a father to his son. (ஸ்காந்.)

அறைந்தாயையா. You say, sir. (பாரத.)

ஐயகோ. Poetic interjection expressive of grief, alas, alas, O lord, இரக்கச்சொல்.

ஐயானனம், *s.* A lion, சிங்கம். (*p.*)

ஐயெனல். A particle denoting speed, urgency, விரைவுக்குறிப்பு.

ஐயெனத்தொழுதுவீரனந்தணனுயிரைமீட்டு. The valiant (Arjuna) speedily prostrating himself before him, saved the life of the brahman. (பாரத.)

ஐயே. Word of calling—used by the females of the குறவர் caste, விளிக்குறிப்பு.

ஐயை, *s.* A lady, a wife, a mistress, தலைவி. 2. A daughter, மகள். 3. A nun, a female ascetic, தவப்பெண். 4. Parvati, பார்பதி. 5. Kali, காளி. 6. Durga, துர்க்கை. (*p.*)

ஐயோ. An exclamation of wonder, pity, grief, pain, &c., அதிசயவிரக்கச்சொல்.

ஐயையோ. Alas, alas.

ஐயோபாவமே. Ah! no, that would be sin.

இப்படியேமுடிந்ததையோ. Alas, is it come to such an end as this? (ஸ்காந்.)

கெட்டேனையையோ. Alas, alas, I am ruined.

*ஐராணி, s. The wife of Indra, இந்திராணி. 2. Parvati, பார்ப்பதி. See அயிராணி.

*ஐராவணம்—ஐராவதம், s. The elephant of Indra, இந்திரனுடையயானை. 2. Male elephant of the east, கீழ்த்திசையானை.

ஐராவணன்—ஐராவதப்பாகன், s. Indra, இந்திரன். (p.)

ஐவணம்—ஐவணி, s. The name of a bush bearing fragrant flowers—the ஈர தோன்றி shrub. (p.)

ஐவனம், s. Mountain paddy, மலைநெல். (p.)

ஐவேசு, s. (ar.) Equivalent, recompense, substitute—commonly in money concerns, ஈடிருப்பு.

ஒ

ஒ. The tenth vowel. When joined to a consonant it is written ெ—ா with the consonant between, with the exception of ஞொ, ஙொ and ணொ, ஒருயிரெழுத்து.

ஒ, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To resemble, to equal, to be like, to match, நிகர்க்க. 2. v. n. To be fit, be suitable, to consist with, be adapted to, தகுதியாயிருக்க. 3. To be equal, be parallel, alike, to match, to tally, correspond, சமமாயிருக்க. 4. To agree, consent to, allow, yield in argument, பொருந்த.

ஒக்கும். It will agree, be proper, suitable, fit, like the same.

ஒக்கும்வகையினால். By mutual agreement. (El. 291.) (p.)

ஒத்தகுடிப்பிறந்தோர். Those born in families of equal rank that may inter-marry.

எத்தால்வாழலாம்—ஒத்தால்வாழலாம். [vul.] How may we prosper? we may prosper by promoting concord.

அதனோடொக்கும்—அதற்கொக்கும்—அதையொக்கும். It equals or is like that.

—விதியெனினும் விகாரமெனினுஞ் செயற்கையெனினு மொக்கும். In grammar, விதி, விகாரம் and செயற்கை are synonymes.

விலலொக்கும்புருவம். Eye-brows resembling a bow.

மக்களேபோல்வர்கயவரவரன்னவொப்பாரியாங்கண்டதில். The base among men are formed like others. We see no other two classes of beings that do so resemble each other.

ஒக்க, inf. [used adverbially.] Together with, in company with, கூட. 2. Plentifully, bountifully, numerously.

ஒக்கக்கிடக்கிறது. There is abundance.

ஒக்கப்படித்தவர். One who has learned much—commonly in sarcasm.

ஒக்கப்பிறந்தவர்கள். Children of the same mother.

ஒக்கவில்லை. There is not much.

ஊரொக்கக்கொள்ளைகொண்டுண்டவன்சுற்றம் போல் வேரொக்கக்கெடுமூலவியாதியே. The hemorrhoids will be as thoroughly extirpated (by this specific) as the posterity of one who plundered the whole village.

ஒக்கப்போக, inf. To join in company with.

ஒத்த, rel. part. Conformable, suitable, consistent, equal.

அப்படிக்கொத்தது. Such.

பிறனைவருத்துவதற்கொத்தபாவமில்லை. There is no sin equal to that of afflicting others.

ஒத்தசனம்—ஒத்தசாதி, s. Tribes, confederate castes linked together, securing general resentment of an injury done to any member of the respective communities.

ஒத்தத்தரை, s. Level ground.

ஒத்தபடி, adv. Agreeably, suitably, alike, equally.

நாலுபெயருக்குமொத்தபடி. In common with others—the public being the judge.

ஒத்தபண்புரைப்போர், s. Messengers delivering communications of the same import.

ஒத்தலாபம், s. Equal shares of profit or money lent—as divided between the borrower and lender.

ஒத்தவழி, s. The proper way, the right method, the appropriate means.

ஒத்தவாக்கியம், s. Parallel passages. (Christ. usage.)

ஒத்திட, inf. To compare, ஒப்பிட. 2. To be alike, equal, ஒத்திருக்க.

ஒத்திராமை, neg. v. noun. Inequality, non-conformity, inconsistency, incongruity, ஒப்பாயிராமை.

ஒத்திருக்க, inf. To live in harmony, concord, friendship, இசைந்திருக்க. 2. To correspond, resemble, conform, to be equivalent.

ஒத்திருக்கிறசாட்சி, s. A concurring witness, a consistent evidence in the view of the world.

காரியமெல்லாமொத்திருக்கிறது. All things lead to the same conclusion. 2. The affairs are all successful, favorable, satisfactory. 3. The matters suit in all points—as in a marriage, &c.

ஒத்துக்கொடுக்க—ஒத்துத்தர, inf. To give in lieu of a loss sustained, gain derived, &c.; to allow, to concede, to make an abatement or recompense, to relinquish a claim. 2. To allow in whole or in part sums due on another's account, to appropriate.

ஒத்துக்கொள்ள, inf. To assent, admit, accede to, allow, grant, concede, yield, acknowledge, சம்மதிக்க. 2. To fit, to be suitable, be convenient, comport with, தகுதியாக. 3. To take to account, credit, கணக்கிலேற்றுக்கொள்ள.

காலமுநேரமுமொத்துக்கொள்ளவில்லை. The time and the season are not propitious according to the nativity which prognosticates evil, &c. 2. It is not a convenient time.

இருவருமொத்துக்கொண்டுபொய்ச்சாட்சிசொன்னார்கள். They both gave false depositions by previous agreement.

ஒத்துநடக்க, inf. To walk in the same manner, to march—as soldiers, சேர்ந்துநடக்க. 2. To walk agreeably to the wishes of another, இணங்கிநடக்க. 3. To act in concert, to live in harmony, இசைந்திருக்க.

ஒத்துப்பாட, inf. To sing in unison.

ஒத்துப்பார்க்க, inf. To compare (persons or things), to collate.

ஒத்துவர, inf. To correspond, to resemble, to agree, to be fit, suitable, ஒப்பாகவர.

ஒத்துவாழ, inf. To live in harmony—as a family, relations, fellow servants, இசைந்துவாழ.

ஒகரம், s. The letter ஒ, ஒரெழுத்து. 2. A peacock, மயில். (p.)

ஒக்கம், s. A town, a village, ஊர். (பிங்கலந்தை.) (p.)

ஒக்கலை, s. The hip-bone, மருங்கின் பக்கம்.

ஒசியொக்கலைவைத்தேமும். We who bore you on our trembling hips. (பன்னூ.)

ஒக்கல், s. Equality, reconcilement, agreement, ஒத்தல். 2. Kinsfolk, relations, friends, சுற்றம். 3. Family, household, குடும்பம். 4. [as உக்கல்.] Side. 5. The act of sewing two pieces into one, மூட்டுகை. For the verbal meanings, see ஒ, v. (p.)

இறைநிரியாசேரொக்கல்வேண்டும். The acts of a king should be those of unswerving rectitude.

ஒக்கல்போற்றல், v. noun. Maintaining relations—one of the ten வேளாண்மைமாந்தரியல்பு. (p.)

ஒக்கலிக்க—ஒக்கலிட, inf. To collect one's relations, maintain them, give them medical aid, &c., இனத்தைப்பாலிக்க. 2. To meet, converse, to hold friendly intercourse, உறவினரோடுகலந்துபேச. 3. To become reconciled—as discordant parties, ஒப்புரவாக.

ஒக்குதல், v. noun. The act of gargling, கொப்பளித்தல். 2. The act of leaving behind, பிற்படவிடல். (சது.) 3. [ex ஒ.] Similarity, ஒத்திருக்கை.

ஒக்கோலை, s. Amber—one of the five கடல்படுதிரவியம்—கடல்படுதிரவியமைந்திலொன்று.

ஒசி, கிறது, ந்தது, யும், ய, v. n. To be twisted, முறுக. 2. To become broken—as a stick, &c., ஒடிய. 3. To vacillate under a weight—as a tender branch—(fig.) the waist of a lady, &c., அசைய. (p.)

சிறுமருங்கொசிய. Whose waist trembles (as if ready to break)—

ஒசிவு, v. noun. Breaking, a break, முரிவு. 2. Shaking, moving, அசைவு.

ஒசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To break a stick, a lash, &c., ஒடிக்க. 2. To move, to shake, to waver, அசைக்க. (p.) 3. (Rott.) To twist, முறுக்க.

குருந்தொசித்த மாயவன். The mighty Krisna who snapped off the குருந்து tree.

குருவிபறந்தந்திற்குரலெசித்தேநாதல்போலே.... Like a bird soaring aloft, warbling in the sky.

ஒசிப்பு, v. noun. Breaking, shaking, முாசனை.

ஒச்சந்தம், [prov. prop. உச்சந்தம்.] Being past the height, crisis, &c., declining, a being reduced, குறைந்திருக்கை.

[illegible] உச்சந்தமயிருக்கின்றது. The price of rice has attained its highest figure.

ஒச்சம், s. Bashfulness, diffidence, shyness, sheepishness, shame, கூச்சம்.

ஒச்சித்தல். Impr. used for ஒஞ்சித்தல்; which see.

ஒச்சியம், s. Bashfulness, shyness, shame, கூச்சம். 2. A wanton joke, a lewd expression, பரிகாசம். 3. Contempt, நிந்தை.

ஒச்சியஞ்சொல்ல, inf. To speak wantonly.

ஒச்சை, s. [colloquial.] Parched food, காந்தற்சோறு. 2. Close attention to a distant sound, &c., உற்றுக்கேட்கை.

ஒச்சைகொடுத்துக்கேள். Listen closely, hearken.

ஒஞ்சட்டை, s. Tallness, thinness, lankness, gauntness, ஒல்லி.

ஒஞ்சட்டையன், s. [vul.] A tall, thin person, a slim man.

ஒஞ்சரிக்க, inf. To leave a thing—as a door, &c., half open or inclined, சிறிதுசாத்த. 2. To go sideways, ஒருபக்கமாய்ப்போக. See ஒருசரிக்க. (c.)

கதவையொஞ்சரித்துவிடு. Leave the door half open.

ஒஞ்சரிதீர்ப்பு—ஒஞ்சரிவழக்கு, s. A partial decision, ஓரவஞ்சகமானதீர்ப்பு.

ஒஞ்சரித்துப்படுக்க, inf. To lie sideways.

ஒஞ்சி, s. The breasts, the teats of a woman—applicable to those sucked by a baby. See மொஞ்சி, which is used in the south.

ஒஞ்சிகொடுக்க, inf. To give suck.

ஒஞ்சியுண்ண, inf. To suck, draw the breast.

ஒஞ்சி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. [vul.] To be abashed, to be shy, timid, diffident, sheepish, வெட்கப்பட.

ஒஞ்சித்தசாப்பிடாமல்விட்டுவிட்டான். He was so bashful that he could not eat.

ஒஞ்சு, கிறேன், ஒஞ்சினேன், வேன், ஒஞ்ச, v. n. As ஒஞ்சி.

ஒடி, கிறது, ந்தது, யும், ய, v. a. To break—as a stick, a branch, a bone, &c., break off short, snap off, முறிய.

இந்த எழுத்தாணிக்கூரொடிந்துபோயிற்று. The point of this style is broken off.

ஒடிகை, v. noun. Breaking, a snapping off.

ஒடியல், v. noun. Breaking, முறியல். 2. s. [prov.] Young palmyra roots split and dried for food, divested of their fibrous coating, பனங்கிழங்கின்பிளவு.

ஒடியல்மா, s. Flour of the palmyra root.

ஒடியல்வாலொடிக்க, inf. To break off the [illegible] of the palmyra roots after they [illegible] dry.

ஒடியற்றோணி—வு, s. A boat broken on the edge or gunwale.

புழுக்கொடியல், s. Palmyra roots boiled and dried.

ஒடிவு, v. noun. Breaking, முறிவு.

ஒடி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To break off short, snap off—as a branch, a stick, an arm, முறிக்க. 2. v. n. (p.) To shine, ஒளிசெய்ய.

ஒடிசில், s. A sling, கவண். (p.)

ஒடு, s. The name of a tree, ஒர்மரம். 2. [as ஒடுக்கட்டி.] Concealed matter in a boil or imposthume after the surface is healed, an abscess imperfectly healed, the core, புரைகொண்டபுண்.

ஒடுக்கட்டி, s. A boil under the armpit, ஒர்பரு.

ஒடுத்தங்க—ஒடுநிற்க, inf. To remain as concealed, unremoved, insidious matter in a boil, causing a new eruption, பருவிறசெத்தக்க

ஒடுநின்றுற்பின்புக்கட்டும். If matter remain, new eruptions will form.

ஒடுவடக்கி, s. A plant used for curing new ulcerations, caused by matter remaining in a boil—commonly called குப்பைமேனி. 2. A tree, திராய்மரம்.

ஒடுவெண்ணெய், s. Oil applied to cause absorption of matter in a boil, or to cure new eruptions, ஒர்தைலம்.

ஒடு. A poetic form of the third case or social ablative, sometimes also used as an instrumental—meaning with, or by, மூன்றாம்வேற்றுமையுருபு. 2. A poetic expletive, ஒரிடைச்சொல்.

போதொடுபொதுள. The flowers being close.

ஊசியொடுநூலொடுதுசப்பட்டும். Cotton and silk sewed with a needle.

கொடியொடுதெவக்குண்டான். He became entangled in a creeper.

அவனொடுவந்தான். He came with him.

ஒடுக்கு, கிறேன், ஒடுக்கினேன், வேன், ஒடுக்க, v. a. To [illegible], compress, bring into a narrower compass, condense, to lessen, bring down—as another's pride, to keep down, keep [illegible], அடக்க. 2. To press, oppress, tyrannize, vex, வருத்த. 3. To reduce the system by medicine or a sparing diet, [illegible]. 4. To involve one in another—as the elements, cause to disappear—as the worlds, &c., at the close of an age, [illegible]செய்ய. 5. To close, to finish as a work, the harvest, &c., முடிக்க. 6. To pack, to put in, to put things close in a bag, a box or other receptacle, செறிக்க.

உலகப்பற்றைப்பொல்லொன்றாயொடுக்க. To relinquish worldly attachments one by one.

ஒடுக்கிக்கட்ட, inf. To compress and tie a thing close. 2. To tuck up the skirts and fasten the end behind—as in wet weather. 3. To [illegible] an old basket, fan, &c.

ஒடுக்கித்தட்ட, inf. To make a metal utensil thicker and narrower by beating.

ஒடுக்கித்தைக்க, inf. To make a garment smaller.

ஒடுக்கிவெட்ட, inf. To hew timber reducing the breadth.

ஒடுக்குவாய், s. Distorted mouth, கோணல்வாய்.

வீட்டையொடுக்கிக்கட்ட, inf. To build a house narrow.

உடம்பையொடுக்க, inf. To reduce the body by eating sparingly. 2. To contract the body—as a tiger, a cat, &c., to reduce the body to a smaller compass—as in a leaping, sneaking, or creeping posture.

செலவையொடுக்க—செலவையொடுக்கிப்பிடிக்க, inf. To retrench expenses. 2. To live frugally, sparingly, &c.

வயிற்றையொடுக்க, inf. To restrain the appetite, to reduce the quantity of food in order to save money.

புலனையொடுக்க, inf. To restrain the senses—as ascetics or otherwise; to mortify the senses, passions, &c. 2 To call home the thoughts and fix them on divine things.

ஒடுக்கு, v. noun. Contracting, closing, compression, narrowness, அடக்கம். 2. s. A corner to creep into, இடுக்கு.

ஒடுக்கிடம், s. A corner, a narrow or confined place, மூலை. 2. A recess, a hiding place, மறைவிடம்.

ஒடுக்குச்சீட்டு—ஒடுக்குத்துண்டு, s. A receipt given by government for money, வரிச்சீட்டு.

பணவொடுக்கு, v. noun. [prov.] A remittance of money.

ஒடுங்கு, கிறேன், ஒடுங்கினேன், வேன், ஒடுங்க, v. n. To shrink, become reduced, compressed, closed, contracted, narrow, to lessen, to abate, crouch, lie within a small compass, diminish, grow less—as a globe from the centre to the poles, அடங்க. 2. To be restrained—as the senses, desires, &c., புலனொடுங்க. 3. To give place, recede, pass on one side—as in meeting a superior; to shrink within one's self, showing reverence, taking off the mantle, turban, sandals, &c.; to creep along sideways, ஒதுங்க. 4. To be reduced in circumstances, power, prosperity, in show, in expenditure, in the mental or bodily faculties, energies, &c., to grow lean, be reduced in size, whether by disease, want of food, or otherwise, குறைய. 5. To cease—as noise, bustle, stir, &c., அமைய. 6. To sink or retire—as the soul in sleep, fainting, or through the different stages at death, சோர. 7. To become dissolved or involved one within another—as the elements, worlds, &c., till all is absorbed in the deity, பூரக்கனொடுங்க. 8. To end, terminate, cease, முடிய. 9. To obey, submit, கீழ்ப்பட. 10. To be concealed, பதுக்க. 11 To be packed, stowed away, செறிய. 12. To be retrenched, சுருக்க. 13. To disappear, become absorbed, dissolved—as salt in water, &c., கரைய. 14 To grow dim—as a light, a heavenly body, &c., to become extinct—as light by passing into its [illegible] ஒளிமட்க.

[illegible] at the sight [illegible]

[illegible] reduced, his dissipat[illegible]

உலகுதோன்றினமுறையேயொடுங்கும். The world will be reduced to its primeval elements in the order in which it was educed.

ஆளொடுங்கினவேளைபார்த்துவந்தான். He watched for an opportunity and came when all was still (for plunder, &c.).

கலியுகமுதிரமுதிரப்பெரியவர்களொடுங்கிவிட்டார்கள்... As the iron age advances, the great are reduced.

ஒடுங்கவில்லபல்கலை. The various sciences which are unlimited.

குளிராலொடுங்க, *inf.* To shrink with cold.

ஒடுங்கி, *s.* A tortoise, ஆமை.

ஒடுக்கம், *v. noun.* Narrowness, straitness, closeness, வழியொடுக்கம். 2. Contraction into itself—as the tortoise, an elastic substance, &c., சுருக்குகை. 3. Retirement within doors, abatement, concealment by stooping and creeping along—as a man to shoot, or a tiger to spring on its prey, &c., பதுக்குகை. 4. Suppression, contraction, reduction, நெருக்கம். 5. Reverence, self-restraint, modesty, அடக்கம். 6. Involution—as of the elements one into another, absorption, dissolution, disappearance—as of salt in water, ஒன்றிலொன்றடங்குகை. 7. Cessation (of noise, bustle, stir—as by night in time of epidemics, &c.), quietude, calmness, stillness, அமைவு. 8. Sinking as the soul through its different stages at death, gradual reduction—as of circumstances, the powers of the body by age, &c., பலமுதலியவொடுங்குகை. 9. *s.* End, close, termination, முடிவு.

ஒடுக்கத்திலேயொன்றுமில்லை. At the end nothing (of earth) will accompany us, remain, avail, &c.

அவனுக்குச்சாப்பாடொடுக்கமாய்ப்போயிற்று. His food is diminished in quantity.

காரியமொடுக்கத்தில்வந்தது. The matter has resolved itself into a narrow compass.

காரியமொடுக்கமாயிருக்கின்றது. The business, provision, ceremony, &c., is on a small scale.

ஒடுக்கநாள், *s.* A day of distress.

ஒடுக்கமில்லாதவன், *s.* One who does not restrain himself, his passions, desires, &c. 2. One who does not pay proper respect to his superiors.

ஒடுக்கம்பார்த்துவர, *inf.* To attack a house, a city, when in a defenceless state, or by night when all are asleep.

ஒடுக்கவணக்கம், *s.* Modest deportment, reverence, veneration.

பனியொடுக்கம், *s.* The fall of heavy dew when all is still.

காற்றொடுக்கம், *s.* A calm, a lull, absence of wind.

புலனொடுக்கம், *s.* Restraint of the senses. 2. Absorption of the senses by sleep, syncope, the approach of death, &c., unconsciousness, stupor.

ஒடுதடங்கல், *s.* Crook, bent, flexure, elbow, கோணிவு.

ஒடை, *s.* A tree, ஓர்மரம்.

ஒட்டகப்பாரை, *s.* A sea-fish, also called ஒட்டாம்பாரை, Scomber aculeatus.

ஒட்டகம், *s.* A camel, a dromedary, ஒட்டை.

ஒட்டகக்கல்லணை, *s.* A camel's furniture.

ஒட்டகவிலத்தி, *s.* Camel's dung.

ஒட்டச்சி, *s.* Washerman's earth, பூவழலை.

ஒட்டத்தி, *s.* A plant, ஒட்டுத்துத்தி, Urena sinuata, *L.*

ஒட்டடை—ஒட்டறை, *s.* Soot, புகையூரல். 2. (*Rott.*) Cob-webs, dust, &c. —as hanging about buildings, சிலம்பிக்கூடு; [*ex* ஒட்டு, *et* அடை.]

ஒட்டம், *s.* A conical mass left uncut by well or tank-diggers to show the depth excavated, தோண்டலளவைத்திடர். (இராமா.) 2. Agreement, stipulation, contract—as in wagers, rivalry, சபதம். 3. A wager, forfeit, பந்தயம். 4. Emulation, rivalry, vieing, opposition—as at an auction, &c., இகலாட்டம். 5. A tile, ஓடு. 6. A country, ஓர்தேசம்.

ஒட்டமொட்ட—ஒட்டம்வைக்க, *inf.* To lay a wager.

ஒட்டர், *s.* The inhabitants of the ஒட்டம் country. 2. (*fem.* ஒட்டத்தி or ஒட்டச்சி.) A caste of well-diggers, diggers of tanks, rivers, ditches, &c., sappers and miners, மண்வேலைசெய்வோர்.

மண்ணொட்டர், *s.* Men who build mud walls.

கல்லொட்டர், *s.* Men who build stone walls.

ஒட்டவர், *s.* Tank-diggers, ஒட்டர். (*p.*)

ஒட்டாம்பாரை, *s.* A fish, ஓர்மீன்.

ஒட்டாரம், *s.* Obstinacy, stubbornness, a disposition to dispute, சலஞ்சாதிப்பு.

ஒட்டாரக்காரன், *s.* An obstinate fellow.

ஒட்டாரஞ்செய்ய, *inf.* To be obstinate, to adhere stubbornly to an opinion, &c.

ஒட்டி, *s.* A kind of plant, &c., whose seeds stick to the clothes, ஓர்பூடு—commonly called ஒட்டொட்டி, Desmochæta atropurpurea. 2. [*prov.*] A species of fish, ஓர்மீன்.

ஒட்டிக்கிரட்டி, *s.* [*vul. prop.* ஒற்றைக்கிரட்டை.] Two for one in trade, double profit.

ஒட்டியம், *s.* The name of a country north of Madras, ஓர்தேசம். 2. A kind of witchcraft, மாந்திரிகவித்தை. 3. Treatise descriptive of the art, அஷ்டகருமநூலினொன்று.

ஒட்டியக்கரு, *s.* Medical drugs, &c. used in witchcraft, ஓர்வித்தைக்குரியகரு.

ஒட்டியக்காளி—ஒட்டியாதேவி, *s.* The goddess invoked in the ஒட்டியம் art, குளிபக்காரர்பூசிக்குந்தேவி.

ஒட்டியர், *s.* The inabitants of the ஒட்டியம் country.

ஒட்டியாணம், *s.* (*Tel.*) A girdle of platted hair or thread worn by ascetics in a sitting posture, passing round the waist and knees, the latter being raised, யோகப்பட்டை. 2. A gold or silver girdle worn by Hindu women, மாதரிடையணியினொன்று.

ஒட்டு, *s.* Patch, a piece stuck or fastened on, whether of cloth, board, or metals, இணைக்கப்பட்டது. 2. Birdlime or a noose connected with it, to ensnare birds, a snare, gin, &c., புட்படுக்குங்கண்ணி. 3. A small earring, sticking close to the ear, also called ஒட்டுக்கடுக்கன். 4. A narrow outer verandah, ஒட்டுத்திண்ணை. 5. The divisions of an army, battle array, படைவகுப்பு. 6. A favorable opportunity for securing some advantage in an affair, சந்தம். 7. Wager, stake, agreement, vow, சபதம். 8. Rivalry, emulation, இகலாட்டம். 9. Allegory—as when it is said the axletree of a cart will break though loaded with peacock's feathers, if the quantity be sufficiently great; i. e. a great hero will be subdued by weaker persons if the number be great, ஓரலங்காரம். 10. Success, வாய்ப்பு. 11. [*prov.*] Stubble, தாளடி.

ஒட்டிலேபட்டசிறுபட்சிபோலாகவேயுழல்கின்ற பேதைமனமே. Oh! my inconsiderate mind struggling for relief as a little bird entangled in a net. (சசி.)

ஒட்டுப்பார்க்க, *inf.* To peep, to watch, to pry (hiding behind something), ஒளித்திருந்துபார்க்க. 2. To watch an opportunity, சமயம்பார்க்க.

ஒட்டிட்டுக்கொள்ள, *inf.* To lay a wager, to lay down stakes, to make trial by.

ஒட்டுக்கடுக்கன், *s.* A peculiar kind of earring worn alike by both sexes in some parts of the country, சிறுகடுக்கன்.

ஒட்டுச்செடி, *s.* A kind of amaranth whose seeds stick to the clothes, ஓர்செடி.

ஒட்டுத்திண்ணை, *s.* A kind of step used for sitting on at the margin of the verandah running the whole length, seats running cross-wise at the ends of the verandah, சிறுதிண்ணை.

ஒரொட்டு, *adv.* Altogether, by the lump. 2. On an average, in general.

ஒரொட்டுக்குவாங்க, *inf.* To buy commodities by wholesale.

ஒட்டு, கிறேன், ஒட்டினேன், வேன், ஒட்ட, *v. a. and v. n.* To stick on, to stick up, to glue on, cause to cleave or adhere, பொருத்த. 2. To apply, resort, betake one's self to a person for support, protection, to come or be near, or in contact with, to lean on or join one's self to a thing, சார. 3. To use qualifying terms, phrases, adjuncts, &c., அடைகொடுக்க. 4. To lay a wager, to gamble, பந்தயம்வைக்க. 5. To permit, suffer, allow, let, இடங்கொடுக்க. 6. To increase length or breath by addition, to add to, சேர்க்க. 7. To grow lean, be withered, shrunk, &c., to have the skin stick to the bones, be shrivelled as a fruit, &c., சுருங்க. 8. To stand near a wall, a pillar, &c., in order to over-hear, to way-lay, &c., விசேஷங்கேட்கவொளிந்துநிற்க.

சுட்டமண்ணுப்பசைமண்ணுமொட்டாது. Burnt earth will not adhere to that which is fresh.

ஒட்டி புலர்வாருறவு. That is friendship which adheres to and suffers with one, *lit.* which dries with one as the flowers in the tank.

இதனைக்கொட்டுமோ. Will this unjust gain, &c., abide with you?

உலகத்தோடொட்டவொழுகல். Acting conformably to the world. (குறள்.)

மரத்தோடொட்ட. To hide one's self behind a tree.

தோலெல்லாமெலும்போடொட்டிப்போயிற்று...... The skin cleaves to the bones.

ஒருவனையொட்டிப்பிழைக்க. To subsist by means of another.

அவனைவரவொட்டும். [*Contracted in colloquial use to* அவன்வரட்டும்.] Let him come.

சொல்லவொட்டான். He will not permit me to speak.

ஒட்டஅறுக்க, *inf.* To cut off short or level with the ground—as corn; to cut off altogether, to sever—as an ear, a tail, &c.

ஒட்டஇணைக்க, *inf.* To nail in close.

ஒட்டக்கட்ட, *inf.* To tie short. 2. To tuck or gather up the clothes well so that no part may hang down. 3. To tie a necklace close to the neck.

ஒட்டப்பட்டினிபோட—ஒட்டப்போட, *inf.* To make a patient fast in order to cure his disease, or to put on short commons a disobedient person for disciplinary purposes.

ஒட்டவடிக்க, *inf.* To drain quite off.

ஒட்டவிட, *inf.* To let one join or have access to one. 2. To set cocks together preparatory for fighting.

ஒட்டாக்கொற்றி, *s.* A cow cruel to its calf. 2. A woman unkind to her child or inattentive, unyielding, &c., to her husband.

ஒட்டாமலடிக்க, *inf.* To neglect one who has sought protection.

ஒட்டார்—ஒட்டலர், *s.* Foes, persons that will not unite, பகைவர். (*p.*)

ஒட்டிக்கொள்ள, *inf.* To cleave, to adhere, &c. 2. To supply a word, &c., understood or wanting to complete the sense.

இதனையெல்லாவிடங்களிலுமொட்டிக்கொள்க.... Apply this word in every similar instance.

ஒட்டித்தப்பியிருக்க, *inf.* To survive, be left, &c., after a general destruction, sacking, clearing, to be out of sight, unnoticed.

ஒட்டிப்போக, *inf.* To go jointly or together. 2. To wax lean, pine.

ஒட்டியபுண், *s.* A contagious eruption.

ஒட்டியமேளம், *s.* A kind of drum.

ஒட்டுவியாதி, *s.* An infectious disease, தொத்துவியாதி.

ஒட்டுறவு, *s.* Near relationship, great friendship.

அறுந்தகாதொட்ட, *inf.* To join an ear that has been torn or cut.

பந்தயமொட்ட, *inf.* To lay a wager.

ஒட்டல், *v. noun.* Sticking, adhering, pasting, &c. 2. *s.* Shortness.

ஒட்டல்வயிறு, *s.* A shrunk belly.

ஒட்டற்காது, *s.* Short ears or ears with the lobes not hanging.

ஒட்டு, *v. noun.* Adhesion, contact, attachment, conjunction, friendship, cement, சேர்கை. 2. Being close to a wall, tree, &c., generally for some bad purpose, lurking to over-hear, to ensnare birds, &c., பதிவிருக்கை. 3. Bidding more—as at a sale, விலையுயர்த்திக்கேட்கை

ஒட்டுக்கண், *s.* Inflamed eyes with the lids adhering.

ஒட்டுக்காய்ச்சல், *s.* A contagious fever, தொத்துக்காய்ச்சல்.

ஒட்டுக்காய்ச்சலாக்காய, *inf.* To have a contagious fever.

ஒட்டுக்குஞ்சு, *s.* A small young one of birds, சிறுகுஞ்சு. 2. [*prov.*] A small white louse, பேன்குஞ்சு.

ஒட்டுக்குடி, *s.* A family or person, lodging or dwelling in another's house, garden, &c.

ஒட்டுக்கும், *adv.* Wholly, entirely, முழுதும்.

ஒட்டுக்கேட்க, *inf.* [*prop.* ஒற்றுக்கேட்க.] To over-hear by listening in a hiding place, &c.

ஒட்டுக்கொடுக்க, *s. inf.* To allow access, to be accessible. 2. To comply with, to yield, grant one's request, இடங்கொடுக்க.

ஒட்டுடந்தை—ஒட்டுப்பற்று—ஒட்டுரிமை, *s.* A slight participation in an act, ஒட்டுடன்பாடு. 2. Distant relationship—as regards title to inheritance, சொற்பசம்பந்தம்.

ஒட்டுப்பற்றில்லாமற்போயிற்று. All friendship has ceased between us.

ஒட்டுப்பற்றற, *inf.* [*used adverbially.*] Totally extinct, quite out, utterly exhausted.

ஒட்டுத்தையல், *s.* Botching, mending, patching.

ஒட்டுநர்—ஒட்டினர், *s.* Relations, friends, those connected with one, adherents, சினேகர். (*p.*)

ஒட்டுநிற்க, *inf.* To lurk, wait in secret in order to over-hear.

ஒட்டுப்புல், *s.* A kind of grass, ஓர்புல், Panicum verticillatum, *L.*

ஒட்டுப்போட, *inf.* To stick on—as a piece, to insert by sticking, வட்டம்போட. 2. To lie in wait, சமயம்பார்க்க.

ஒட்டுமயிர், *s.* Short hair in the margin, not gathered into the tie, குறுமயிர். 2. Hair stuck together, or pasted—as by dancers, ஒட்டப்படுமயிர்.

ஒட்டுவிசேஷம், *s.* An ingrafted, patched up story, கட்டுக்கதை. 2. A story learned by stealth, ஒளித்துக்கேட்கும்வார்த்தை.

ஒட்டுவிட, *inf.* To become loose, to separate as boards, &c., glued together, பொருத்தநீக்க.

ஒட்டுவித்தை, *s.* The art of sticking persons together to the ground or otherwise by magical drugs, incantations, &c., துர்வித்தை.

ஒட்டுவேலை, *s.* Joining, veneering, sticking on, patching, இணைக்கும்வேலை. 2. Deceptive work, போலிவேலை.

ஒட்டுவைக்க, *inf.* To swear, to take an oath, ஆணையிட. 2. To set birdlime to ensnare birds, ஒட்டுகண்ணிவைக்க. 3. (*Rott.*) To encompass a city with trenches.

ஒட்டுத்துத்தி, *s.* A plant, ஓர்பூடு, Urena sinuata, *L.* See துத்தி.

ஒட்டை, *s.* A camel, a dromedary, ஒட்டகம். 2. A span—as measured with thumb and forefinger, ஒட்டைச்சாண்.

ஒட்டைக்கன்று, *s.* A young camel.

ஒட்டைக்காரன், *s.* A camel-keeper or driver.

ஒட்டொட்டி, *s.* [*prov.*] A grass whose seeds stick to the clothes, ஒட்டங்காய்ப்புல்.

ஒட்டோலக்கம், *s.* [*prov.* அட்டோலக்கம்.] Pomp, splendor, magnificence, இடம்பம். 2. A great assembly, சனத்திரள்.

ஒட்டோலக்கம்பண்ண, *inf.* To collect an assembly.

ஒட்பம், *s.* Discretion, prudence, wisdom, முதற்குறைவு, [*ex* ஒள்.]

ஒண்டன், *s.* A jackal, a male jacka , ஆண்நரி.

ஒண்டி, *s.* That which is single, solitary, alone.

ஒண்டிக்காரன், *s.* A single, unmarried person.

ஒண்டியாயிருக்க, *inf.* To be alone, to live a single life.

ஒண்டுதல். Impr. for ஒன்றுதல்; which see.

ஒண்டிப்பிழைக்க, *inf.* To resort to a person in order to obtain a livelihood.

ஒண்ணல், (*v. noun of an impersonal verb seldom used in the past tense.*) Being able, competent for, being possible, தகுதல். 2. Being fit, proper, decorous, பொருந்தல்.

விலக்கொண்ணாதே. It is inevitable. (வாசிட்டம்.)

கையொண்ணாது. My hand is ailing.

ஒண்ணாதது, *appel. n.* That which is unfit, improper, unable, பொருந்தாதது.

ஒண்ணாதகாரியம், *s.* An improper, indecent, or unbecoming thing. 2. An impracticable, or impossible thing.

ஒண்ணாமை, *neg. v. noun.* Inability, incompetency, impracticability, தகாமை. 2. Ailment, illness, இயலாமை. 3. Unfitness, indecorum, impropriety, inadmissibility, பொருந்தாமை.

ஒறு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To reduce, suppress, subject, restrain the senses, desires, &c., to mortify the body, curb the appetites, to pinch, stint or deny one's self, to suppress the passions, அடக்க. 2. To afflict, distress, cause pain to one's self or others, அலைக்க. 3. To punish, chastise, தண்டிக்க. (கு. 964.) 4. To rebuke, reprove, கடிந்துகொள்ள. 5. To dislike, to be disgusted with, வெறுக்க. (p.) 6. v. n. To become scarce and dear, to fail or be scanty—as crops, rain, &c., to be sparing, குறைய.

கொலையிற்கொடியாரைவேந்தொறுத்தல். Punishing the guilty by death—the prerogative of a prince. (குறள்.)

அகமொறுக்கும். Corn will be scarce.

அவனொருத்தருக்குமொறுக்கிறதில்லை. He submits to no one's reproof; he does not brook censure.

கையொறுமற்கொடுக்கிறான். He gives liberally.

அன்னத்தைபொறு. Abstain from taking food.

சற்றும்வாயொறுக்கிறானில்லை. He does not at all restrain himself (in speaking). 2. He does not conform to the prescribed diet.

உடம்பினையொறுத்துநோற்பார். Those who mortify their bodies and do penance. (ஸ்காந்.)

கொடுஞ்சொற்றாயொறுப்பவும். When the mother rebukes with sharp language—

ஒறுத்துக்கொண்டிருக்க, inf. To be afflicted.

விலையொறுக்க, inf. [prov.] To become dear.

மழையொறுத்தகாலம், s. A drought.

வயிற்றையொறுக்க, inf. To pinch one's self.

ஒறுப்பு, v. noun. Scarcity, dearness, ஒறுக்கை. 2. Restraint of the passions, self-mortification, self-denial, உடல்வருத்துகை. 3. Chastisement, punishment, correction, தண்டிப்பு. 4. Rebuke, reproof, கடிவு. 5. Dislike, disgust, வெறுப்பு. 6. Privation, deprivation, குறைவு.

ஒறுவாய், [prop. அறுவாய்.] Being broken in the edge, chipped off, a breach in an embankment, &c.

ஒறுவாயன், s. A hare-lipped man.

ஒறுவாய்ப்பல், s. Wanting a tooth or more.

ஒறுவாய்ப்பானை, s. A pot chipped in the edge.

ஒற்கம், s. Poverty, indigence, destitution, want, adversity, வறுமை. 2. Diminution, failure, குறைவு. 3. Forbearance, restraint, refraining from, அடக்கம். (நீதிநெறி) (p.)

ஒற்கத்திலூற்றாந்துணை. It would prove a support in adversity. (குறள். 325. 1.)

ஒற்கமின்றியுறவியொனருடக்கற்குமித்துநெறிசெய்க்காட்கியே. As if an emmet could by undiminished perseverance work itself a path-way in Meru the golden mountain—(சேதுப்.)

ஒற்கமில்வளம், s. Undiminishing wealth. (ஸ்காந்.)

ஒற்றி, s. Lease, a leasehold, a kind of mortgage of land, trees or cattle, அடைமானம்.

ஒற்றியுஞ்சீதனமும்பற்றியாளவேண்டும். Property received under mortgage or as a dowry must be taken immediate possession of.

ஒற்றிக்காணி, s. Mortgaged land.

ஒற்றிச்சீட்டு—ஒற்றிநறுக்கு, s. A mortgage bond, a lease.

ஒற்றிமீட்க, inf. To redeem a mortgage.

ஒற்றியாட்சி, s. A tenure by mortgage, ஒற்றிநிலத்தையாளுகை.

ஒற்றிவைக்க, inf. To mortgage land, trees, &c., அடைமானம்வைக்க.

ஒற்றியூர், s. A sacred place near Madras, திருவொற்றியூர்.

ஒற்றியூரன், s. Siva, சிவன்.

ஒற்று, s. A mute consonant, மெய்யெழுத்து. 2. Spying, espionage, searching, agency, வேவு. 3. A messenger, an agent or emissary, தூதன். 4. A spy, வேவுகாரன்.

ஒற்றர், s. Spies, searchers, emissaries, வேவுகாரர். 2. The confidential agents or messengers of a prince whether employed in his own dominion or another's, for a good or bad purpose, தூதர்.

ஒற்றராலக்கணத்தேயுணர்ந்து. Being acquainted (with the counsels of the enemy) at that time through the spies. (...)

...ளவொன்றளவைதன்னிற்சந்தவேளொற்றன்யாக்கை சின்னபின்னக்களாகசெய்குவன். I would tear to pieces the body of Veeravagu, Skandar's emissary, in the space of an hour. (ஸ்காந்.)

ஒற்றளபு—ஒற்றளபெடை, s. The insertion of a consonant in verse to lengthen the sound. See அளபெடை.

ஒற்றாடல், v. noun. The act of directing spies.

ஒற்றாளுதல், v. noun. Employing spies or secret messengers, தூதரையாளுதல்.

ஒற்றுக்கேடு, s. The elision of a consonant.

ஒற்றுக்கேட்டல், v. noun. Overhearing.

ஒற்றுப்பெயர்த்தல், v. noun. [in மிறைக்கவி.] Constructing a species of verse so artfully that, independent of the main sense, other meanings may be contained in it, மிறைக்கவியினேருறுப்பு—as அம்புத்தலை, the head of an arrow is அப்புத்தலை, when the mute is hardened—which means the new head—besides the original meaning.

ஒற்றெழுத்து, s. An inanimate consonant, மெய்யெழுத்து.

ஒற்றொழிபாட்டு, s. A verse that contains no mute consonants, மெய்யெழுத்தில்லாப்பாட்டு.

ஒற்று, கிறேன், ஒற்றினேன், வேன், ஒற்ற, v. a. To bring into contact, join, unite, bring faces together in kissing, அணைக்க. 2. To touch, ply, apply—as clothes, with slight pressure and repetition, to foment, ஒற்றிடம்போட. 3. (p) To dress another, to put on clothes, உடுத்த. (நிகண்டு.) 4. v. n. (c.) To give place to another (in sitting, meeting in the road, &c.), to recede, விலக. 5. [prov.] To move by leaps as a beast with its forelegs tied together, தத்த. 6. To tug as a beast in order to break its rope, தும்பையிழுக்க.

ஒற்றிநட. Walk aside

மாடொற்றியொற்றிப்போகின்றது. The cow goes by leaps.

எருதுகயிற்றையொற்றியிழுக்கின்றது. The ox tugs and pulls its rope.

அவர்சென்றநாளொற்றித்தேய்ந்தவிரல். My finger is worn away by touching (on the wall) the delineated days of his absence. (குறள்.)

ஒற்றிக்கொள்ள, inf. To encroach on another's land. 2. To apply to, or bring in contact with one's person—as medicaments, flowers, &c. 3. To give way, to recede.

ஒற்றிப்போக, inf. To give way, recede, give place to another, விலகிப்போக.

ஒற்றியிருக்க, inf. To give place in sitting, to sit further, விலகியிருக்க.

ஒற்றியெடுக்க, inf. To absorb or extract moisture by touching it with an absorbent.

ஒற்றியொற்றிக்கூட்ட, inf. To encroach by little and litte on another's land.

ஒற்றிவைக்க, inf. To set one aside, further off, out of the way, தூரவைக்க.

பொட்டணமொற்ற, inf. To apply cloths—as in fomentations, &c.

ஒற்று, v. noun. Application, touching repeatedly with cloths, the surface of the body with slight pressure—a kind of fomentation, ஒற்றல்.

ஒற்றிட—ஒற்றுப்பிடிக்க, inf. To apply cloths—as in fomentations.

திருவொற்றாடை, s. Cloth for absorbing water from the body of an idol after bathing or anointing.

ஒற்றுமை, s. Union, coalescence, concord, contact, agreement, unison, ஒருமை. 2. Oneness, sameness, participation of the same qualities, வேறன்மை. 3. Peculiarity, peculiar rights, relation, propriety, உரிமை. 4. Application of mind to one object, close attention, marking with the mind, மனமொன்றுகை. 5. Compound, mixture, கலப்பு.

ஒற்றுமைகொள்ளுநெஞ்சுஞ். Having the powers of mind concentrated in divine meditation— (சேதுப்.)

எல்லாருமொற்றுமைப்பட்டிருக்கிறார்கள். They are all closely united.

தெய்வவொற்றுமையிருந்தால் If providence favor—

ஒற்றுமைகோடல், v. noun. Living in peace with others—one of the ten வேளாண்மைமாந்தரியல்பு.

ஒற்றுமைநயம், s. Combination, intimate connection, mutual agreement, close union—opp. to வேற்றுமைநயம். (சன்னூல்.)

ஒற்றை, s. One of a pair, ஒன்று. 2. Odd numbers—as 1, 3, 5, &c., odd, ஒற்றையெண். 3. Singleness, தனிமை. 4. Soleness, uniqueness, absoluteness, தன்னந்தனி. 5. A leaf in a book, தனியேடு. 6. A row of small patches of ground in a corn-field, adjoining one side of a cross channel.

ஒற்றையோஇரட்டையோ. Is it even or odd?

ஒற்றிக்க, inf. v. n. To be odd as numbers—as 1, 3, 5, ஒற்றைப்பட. 2. To be unwavering, be settled in mind or purpose, to be decided, ஒன்றுபட.

ஒற்றித்தமனம், *s.* A single mind, sincerity. 2. Freedom from doubt, decision of mind.

ஒற்றித்தவெண், *s.* Odd numbers, ஒற்றைப்பட்டவெண்.

ஒற்றைக்கண்ணன், *s.* Venus, சுக்கிரன். 2. Kuvera, குபேரன். (*p.*)

ஒற்றைக்குடை, *s.* An unique umbrella—an emblem of independent sovereignty.

ஒற்றைக்குடையினுளுதல், *v. noun.* Exercising absolute sovereignty.

ஒற்றைக்கொம்பன், *s.* Ganesa, the single-tusked—as an elephant, the other tusk having been broken off, விநாயகன்.

ஒற்றைச்சார், *s.* [*prov.*] A house without an area in the centre.

ஒற்றைத்தாலி, *s.* A single wedding ornament without the accompaniments which are sometimes added on a future day. See சங்குத்தாலியும்.

ஒற்றைத்தாழ்ப்பூட்டு, *s.* A lock with a single bolt or a single lock.

ஒற்றைத்துலா, *s.* A well-lever formed of one solid timber, ஒற்றைப்... See முட்டுத்துலா or செம்புத்துலா.

ஒற்றைநூல், *s.* A three-twined sacred thread—as worn by a bachelor.

ஒற்றைநூற்புடவை, *s.* Single threaded cloth, தனியிழை.

ஒற்றைப்படவெண்ணுதல், *v. noun.* Counting by odd numbers. 2. Counting things one by one.

ஒற்றைப்பட்டு, *s.* One of several strings of a necklace, folds, strands.

ஒற்றைப்பட்டுமணி, *s.* A single necklace.

ஒற்றைப்பார்ப்பான், *s.* A single brahman, whose sight is deemed inauspicious whether as the first object in the morning, or at any time on leaving home for some special purpose

ஒற்றைப்புரிக்கயிறு, *s.* A rope formed of a single strand, ஒருபுரிக்கயிறு.

ஒற்றையாழித்தேர், *s.* The chariot of the sun being single-wheeled, சூரியனுடையதேர்.

ஒற்றையாழித்தேரோன், *s.* The sun —he whose chariot has but one wheel, சூரியன். (*p.*)

ஒற்றையாள், *s.* A single person—as a traveller, an inhabitant or as one having no relations, ஒருஆள்.

ஒற்றையிதழ்ப்பூ, *s.* A monopetalous flower, ஓரிதழ்ப்பூ.

ஒற்றையிரட்டைபிடித்தல், *v. noun.* Playing at odd and even.

ஒற்றையோலைப்பாய், *s.* Mats braided with single olas.

ஒற்றையோலைப்பெட்டி, *s.* Baskets made of single olas.

ஒற்றைவாய்க்கணக்கு, *s.* A calculation made by a single operation, whether once adding, subtracting, multiplying or dividing.

கடுக்கனொற்றை, *s.* One of a pair of ear-rings.

ஒன்பது—ஒன்பான், *s.* Nine, ஒன்பது.

ஒன்றி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To unite, combine, become one, பொருந்த; [*ex* ஒன்று.]

ஒன்றித்துவாழ, *inf* To live in union, harmony.

ஒன்றிப்பு, *v. noun.* Union, harmony, concord, unity.

ஒன்று, *s.* One (the numeral), ஒன்றென்னுமெண். 2. One thing. அஃறிணையொருமை. 3. Union, coalescence, ஐக்கம். 4. In construction, it means either, or—as ஒன்றுதீவினையைவிடு, ஒன்றுஅதின்பயனைநுகர், either abandon your evil deeds, or take the consequences.

ஒன்றத்தனைகொடுத்தால்ரண்டத்தனைகொடுப்பேன். If he has given once as much, I will give twice.

ஒன்றுமறிகிறதில்லை. He so wonders that he knows not when to cease extolling. 2. His sorrow, regret, &c. is unremitted.

ஒன்றிலிருந்தொன்றிலேபாய்தல். Talking loosely, incoherently, jumping from one thing to another.

ஒன்றினொன்று. One among another, reciprocally, mutually.

ஒன்றுகேள். Listen to a word of advice, hear what I have to say.

ஒன்றுக்குமசையான். He is moved by nothing.

ஒன்றுமொன்றுமிரண்டென்றுதெரியாதவன். A person so ignorant that he cannot tell that one and one make two.

ஒன்றுவிட்டொருநாள். Every other day, alternate days.

ஒன்றேயொன்று. One only.

ஒன்றேஅவனாலேசேதம். Have I sustained but one loss by him?

நான்சொன்னதொன்று, அவன்செய்ததொன்று. I told him one thing and he did another.

மனமொன்றுவாக்கொன்று. His profession is one thing and intention another.

ஒன்றரை, *s.* One and a half.

ஒன்றன்கூட்டம், *s.* A collection of similar things, ஒருபொருட்கூட்டம். (*p.*)

ஒன்றன்பால், *s.* [*in grammar.*] Neuter singular of the irrational class, அஃறிணையொருமைப்பால்.

ஒன்றாய், *adv.* Together, altogether, ஒன்றாக.

ஒன்றாவொன்றும். By any means, யாதொன்றிலும்.

ஒன்றாலொன்றுங்குறையில்லை. There is no lack at all—commonly applied to provisions, the country produce, &c.

ஒன்றி, *s.* [*vul.* ஒண்டி.] One, alone, solitary, lonely (spoken of persons), தனி.

ஒன்றிக்காரன்—ஒன்றியாள், *s.* A bachelor, a widower, a single or lonely person, தனியவன்.

ஒன்றினமுடித்தறன்னினமுடித்தல், *v. noun.* [*in grammar.*] Forming a rule or definition so as to include others, தந்திரம்.

ஒன்றுக்கு. For one thing, viz.: to make water—the common expression among school boys when asking to go out for this purpose.

ஒன்றுக்கிருக்க, *inf.* To sit or squat down or go for one thing, viz.: to make water, சிறுநீர்விட.

ஒன்றுக்குப்போக, *inf.* To make water.

ஒன்றுக்கொன்று. To or for each other.

ஒன்றுக்கொன்றுசரி. They are equal, alike, &c.

ஒன்றுக்கொன்றுபேசிக்கொண்டார்கள். [*vul.*] They have called each other by hard names.

ஒன்றுக்கொன்றுவித்தியாசம். Different one from another.

ஒன்றுபட, *inf.* To become reconciled, ஒப்புரவாக. 2. To be united, to coalesce, பொருந்த.

ஒன்றுபடுத்த, *inf.* To bring about a union or acquaintance between persons, ஒருமைப்படுத்த. 2. To reconcile, ஒப்புரவாக்க.

ஒன்றுபாதி, *s.* [*prov.*] A moiety, a half—commonly of land, அரை. 2. Midnight, நடுச்சாமம்.

அவன்தன்சரக்கையொன்றுபாதியாகவிற்றுப்போட்டான். He sold his goods at half price.

ஒன்றுமண்டடி—ஒன்றுமன்றடி, *s.* Concord, union, harmony, intimate familiarity. 2. Confusion, want of order or system.

ஒன்றுமறியாதவன், *s.* One who knows nothing.

ஒன்றுமறியாதவனுமில்லைஎல்லாமறிந்தவனுமில்லை. None is so ignorant as to know nothing—none so wise as to know every thing.

ஒன்றுமற்றவன், *s.* A useless person, உபயோகமற்றவன். 2. A very poor person, தரித்திரன்.

ஒன்றுமில்லாமை—ஒன்றுமின்மை, *s.* Utter destitution, the relinquishing of every thing—as an act of devotion. (ஆறுநெறி.)

ஒன்றேகால், *s.* One and a quarter.

ஒன்றொழிபொதுச்சொல், *s.* [*in grammar.*] Terms common to both genders, one only of which is understood, the other being excluded by the connexion, இருதிணையாண்பெண்ணுளொன்றொழிக்கும்பொதுச்சொல்—as ஆயிரமக்கள்பொருதார், a thousand persons fought; i. e. men.

ஒன்று, கிறேன், ஒன்றினேன், வேன், ஒன்ற. *v. n.* To unite, coalesce, knit or grow together—as broken parts, two trees, &c.; to become one, to join, combine, இசைய. 2. To be engaged, be intent, &c. on an object, ஒன்றுபட. 3. To agree, suit, be agreeable, பொருந்த. 4. To copulate, புணர.

ஒன்றவில்லை. It is not convenient. 2. They are not fit. 3. (They) (the things or parts) are not united, not joined well, &c.

தேகதோஷ்ன்றநோய். I ...ease which befalls the body. (வைராக்கி...

ஊழொன்றியிருப்பின். If destiny favor—

ஒன்றப்பார்க்க, *inf.* To unite severed parts—as a magician by looking at them, *lit.* to look them into one, பொருந்தப்பார்க்க 2. To join things to see if they fit or agree—as machinery, இசைக்க.

ஒன்றாதவஞ்சித்தளை, *s.* See தளை.

ஒன்றார்—ஒன்றாதார்—ஒன்னார், *s.* Foes, unfriendly persons. (*p.*)

ஒன்றுகுடி, *s.* A family or person living in another's house, garden, &c. See ஒட்டுக்குடி and ஒதுக்குக்குடி.

ஒன்றுகூட்டு, *s.* Concord, harmony, living on terms of friendship, ஒருகட்டு.

ஒன்றுகூட்டாயிருக்க, *inf.* To be closely united, be in harmony, &c.

ஒன்றுநர், *s.* Friends, relations, நண்பர். (*p.*)

ஒன்றுகை, *v. noun.* Uniting, union, ஒன்றுதல்.

ஒன்றோ. An exclamation of wonder, pity, regret, &c., அதிசயவிரக்கச்சொல். (சது.) 2. A copulative particle to connect nouns and sometimes verbs, இடைச்சொல்—as பொய்படுமொன்றோபுனைபூணுங்கையறியாப் பேதைவினைமேற்கொளின், if an untaught simpleton undertake it, will it be spoiled merely? He will also wear chains. (குறள்.) (*p.*)

பிறன்மனைநோக்காதபேராண்மைசான்றோர்க்கறனொன்றோவான்றவொழுக்கு. The magnanimity which disdains to look on another's wife, is it an act of propriety merely? It is exalted virtue. (குறள்.)

ஒன்னப்பூ, *s.* A female ear-ornament, காதணியிலொன்று.

ஒன்னலன், *s.* Enemy, foe, பகைவன். (*p.*)

ஒன்னுதார்—ஒன்னார், *s.* Foes, enemies. See ஒன்றார் under ஒன்று, *v.* (*p.*)

ஒன்னாரைச்சேரேல். Associate not with enemies. (ஔவை.)

ஓ

ஓ. The eleventh vowel, ஓகாரம். 2. A particle, இடைச்சொல். It has various uses; in நன்னூல், eight different meanings are given to it. (*a*) ஒழியிசை, a mark of ellipsis denoting the omission of a counter-part to what is expressed—as கொளலோகொண்டான், true he has obtained his object (but he will not prosper by it). (*b*) வினா, interrogatives—as சாத்தனோவந்தான், is it Sattan that came? (*c*) சிறப்பு, speciality, particularity, &c., an interjection of surprise. This is two-fold. 1. உயர்வுசிறப்பு, relating to objects of superiority, pre-eminence, &c.—as ஓஓ பெரியன், heigh day! he is an illustrious person. 2. இழிவுசிறப்பு, relating to objects of inferiority, baseness, &c.—as ஓஓ கொடியன், Oh! he is a cruel wretch. (*d*) எதிர்மறை, negation—as யானோசெய்வேன், will I do it? implying I will not. (*e*) தெரிநிலை, ascertainment, clear perception, appeal to the hearer, &c.—as ஆணோஅதுவுமன்றுபெண்ணோஅதுவுமன்று, it is neither male nor female. (*f*) கழிவு, bereavement, an interjection of pity—as ஓஓ தமக்கோருறுதியுணா[illegible], alas, alas, they have found no w[illegible] of salvation. (*g*) அசைநிலை, expletive—a[illegible] காணியவம்மினோ, come let us see. (*h*) பிரிநிலை, distinguishing, marking—as அவனோகொண்டான், it was he who bought it. In addition to these it also serves to express doubt—as நீலிமுகிலோபசியசைவலமோகெங்குந்திரைகொழித்ததென்னறலோ, is the hair of the damsel analogous to the blue clouds, to the green moss, or the black sand on the shore drifted by the billows (நைடு); அதென்னவோதெரியாது, what that can be I know not.

ஓ, *s.* A floodgate, or other means to stop a sluice or water-course, மதகுநீர்தாங்கும்பலகை. (*p.*)

ஓகை, *s.* [*a contr. of* உவகை.] Delight, joy, gratification. (*p.*)

ஓகோ. An interjection of surprise, concern, pity, regret, bravado, oh! oh! behold, அதிசயவிரக்கச்சொல்.

ஓக்கம், *s.* Height, elevation, உயர்ச்சி. 2. Rising, எழுச்சி. 3. Eminence, dignity, greatness, பெருமை. 4. Bigness, largeness, பருமை. (*p.*)

ஓக்கமிரட்டி, *s.* The major class of கலித்தாழிசை verse, the other being double to this (in the number of lines). (காரிகை.)

ஓக்காளம், *s.* [*prov.* ஓங்காளம்.] Retching, heaving, the involuntary effort of the stomach in nausea, வாந்தி.

வெள்ளோக்காளம், *s.* Nausea when water alone is emitted.

வெள்ளோக்காளமெடுக்க, *inf.* To be sick in the stomach.

ஓக்காளி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* [*prov.* ஓங்காளி.] To heave or retch from sickness, to vomit, சத்திசெய்ய.

ஓக்காளிப்பு, *v. noun.* Retching, incipient sickness, வாந்திசெய்கை.

ஓக்காளிப்பாயிருக்க, *inf.* To be squeamish.

ஓங்கல், *s.* Mountain, மலை. 2. An elephant, யானை. 3. Bamboo, மூங்கில். 4. A vessel—as a boat, &c., மரக்கலம். 5. A king, அரசன். 6. A hill, மேடு. (*p.*)

*ஓங்காரம், *s.* The mysterious syllable ஓம், the silent recitation of the ஓம், the letter with which each mantra begins and ends, பிரணவம். Wils. p. 175. OṄKARA.

ஓங்காரவுரு, *s.* The syllable ஓம் personified as the deity.

ஓங்காரிக்க, *inf.* To repeat the sacred syllable ஓம், ஓங்காரமுச்சரிக்க.

ஓங்காரவுரு, *s.* A kind of arsenic, கௌரிபாஷாணம்.

ஓங்கில், *s.* A species of large fish, ஓர்மீன், Toninha thynnus. (*Rott.*)

ஓங்கு, கிறேன், ஓங்கினேன், வேன், ஓங்க, *v. a.* To lift up, raise the arm, a weapon, a pestle. கையோங்க. 2. *v. n.* To grow high, rise above others, above the level; to be lofty—as a building, a mountain, a tree; to shoot forth, rise—as a flame, உயர. 3. To mount, soar, எழும்ப. 4. To rise to the surface—as planted rice when flooded, எழ. 5. To be exalted, dignified, eminent, பெருமையுற. 6. To improve, increase in wealth, renown, learning, &c.; to flourish, prosper, increase in size, &c., அதிகரிக்க.

ஓங்கியவொள்வாள். The up-lifted glittering sword.

நெஞ்சோங்குபரத்துற்றோர். Those whose hearts are placed on the Supreme God. (நன்னெறி.)

துக்கசமுத்திரத்திலேயோங்குகிறான். He rises above the waves in the sea of sorrow.

ஓங்கிப்பார்க்க, *inf.* To stand on tip-toe and look.

ஓங்கிப்பிடிக்க, *inf.* To rise and catch, either by becoming erect, or standing on tip-toe, or jumping.

ஓங்கியசெல்வம், *s.* Abounding wealth.

ஓங்கியடிக்க, *inf.* To raise the hand, a weapon, &c., and strike.

ஓங்கியறைய, *inf.* To slap.

ஓங்கியபுகழ்—ஓங்குபுகழ், *s.* High praise. 2. Exalted renown.

ஓங்கியிருக்க, *inf.* To be high. 2. To be eminent, illustrious.

ஓங்கிவளர, *inf.* To grow high. 2. To advance, to increase in wealth.

ஓங்கிவெட்ட, *inf.* To cut, having up-lifted the hand to do so.

ஓங்குவிக்க, *inf.* To cause to rise.

கையோங்கியடிக்க, *inf.* To lift up the hand to strike.

ஓங்கல், *v. noun.* Height, elevation, உயர்ச்சி. 2. Rising, எழுச்சி. 3. Vomiting, சத்திசெய்தல்.

*ஓசம், *s.* Light, splendor, பிரகாசம். Wils. p. 175. OJAS. (*p.*)

ஓசவன்றிகிரியோச்சி. Swaying the bright discus; i.e. holding the reins of Government. (பார.)

ஓசம்—ஓசரம், *s.* [*vul. corruption of the Telugu word* கோசம் *and* கோசரம்.] For the sake of, on account of (with the dative), நிமித்தம்.

எனக்கோசம். For my sake.

அதற்கோசம்—அதற்கோசரம். On account of that.

என்முட்டினோசரம். On account of my necessity.

ஓசரி, *inter.* Wonderful, fine, அதிசயக்குறிப்பு. 2. *s.* Misfortune, fatality, கேடு.

இதென்னவோசரி. What wonderful thing is this!

ஓசனி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. a.* To flap the wings—as birds or fowls—as cocks before they crow, பறவைசிறகடிக்க (*p.*)

ஓசன், *s.* A priest who officiates in the temple of the goddess பிடாரி. (பிங்.)

ஓசீவனம், *s.* [*prov. impr.*] Support, livelihood, சீவனம்.

ஓசு, *s.* Fame, renown, கீர்த்தி. (*p.*)

ஓசனமைந்தரோசொலி. Consulting persons of celebrity— (பார)

ஓசை, *s.* Sound, vocal sound, ஒலி. 2. Musical sound, இசை. 3. (*p.*) Fame, renown, reputation, கீர்த்தி. 4. Utterance, pronunciation, எழுத்தோசை. 5. Plantain, வாழை.

ஓசைபெற்றுயர்பாற்கடல். The far-famed milky ocean. (இராமா.)

ஓசையாயிருக்க, *inf.* To yield a sound or noise. 2. (*fig.*) To be melodious.

ஓசையுடைமை, *s.* One of the ten beauties of style, பத்தழகிலொன்று.

ஓசையூட்டுதல், *v. noun.* Reading poetry by substituting the names of the feet for the word of the poetry, செய்யுளோசையைவிசையச்செய்தல்.

பேரோசை, *s.* A great sound.

உள்ளோசை, *s.* A sound from within.

ஓச்சம், *s.* [*prov.*] Notoriety, celebrity, கீர்த்தி.

ஊரோச்சம்வீட்டுபட்டினி. Famous abroad and starving at home. [*prov.*]

ஓச்சர், *s.* A caste of drummers at temples, those who officiate in temples sacred to பிடாரி, &c.—one of the eighteen dependent castes, பதினெண்குடிமக்களிலொருவர்.

ஓச்சு, கிறேன், ஓச்சினேன், வேன், ஓச்ச, *v. a.* To cast away, throw, discharge a weapon, bow, &c., எறிய. 2. To cause to go, to ride, govern, செலுத்த. 3. To drive away, chase, scare away, ஓட்ட. 4. To raise the arm, a weapon, &c., in order to strike or throw, ஓங்க. 5. To excite, spur on, incite, தூண்டிவிட. (த. 502. 418.)

தண்டோச்சிப்பின்செல்லுங்கூற்று. Death follows with up-lifted club. (அறநெறி.)

வண்டோச்ச, *inf.* To drive away flies.

வண்டோச்சிமருங்கணைதல், *v. noun.* Driving away flies from the tresses of a damsel—indicating the approaches of a lover.

செங்கோலோச்ச, *inf.* To sway the septre, administer justice.

கோலோச்சுமாநிலமன்னன். Monarch of the broad earth who administers justice. (குறள்.)

ஓச்சல், *v. noun.* Throwing, killing. 2. Chasing, driving. 3. Passing an order, governing.

*ஓடதி—ஓஷதி, *s.* An annual plant, a deciduous herb or tree that dies after once bearing fruit, ஒருகாற்காய்த்தழியுமரம். Wils. p. 175. OSHATHI. 2. A creeping plant in general, பூங்கொடி. 3. A general term for different surgical medicaments including சல்லியகரணி—சந்தானகரணி—சமானகரணி—சஞ்சீவகரணி.

ஓடம், *s.* A boat, a ferry-boat, படகு. 2. A raft, a float, a vessel of any kind, மிதவை.

ஓடங்கடந்தாலோடக்காரனுக்கோர்சொட்டு. A cuff to the boatman for having ferried one over the river.

ஓடத்தவக்கமாயிருக்கிறார்கள். They are retarded by not getting a boat.

ஓடம்வண்டியிலேறும் வண்டியோடத்திலேறும்... A carriage may be conveyed in a boat, and a boat may be conveyed in a carriage; i. e. prosperity is not permanent.

இரண்டோடத்திற்கால்வைத்தவனைப்போலிருக்கிறான். He is like one who stands on two boats; i. e. one attached to two interests.

ஓடக்காரன், *s.* A boat-man, a ferry-man, நாவாயோட்டுவோன்.

ஓடக்கூலி, *s.* Ferriage, the fare paid for conveyance at a ferry.

ஓடக்கோல், *s.* A boatman's pole.

ஓடம்விட, *inf.* To propel a boat, to boat, pole or ply a ferry-boat.

ஓடாவி, *s.* A ship-wright, a boat-builder, நாவாய்செய்வோன். 2. A carpenter, தச்சன். (*Rott.*)

சிற்றோடம், *s.* A small boat.

ஓடல், *v. noun.* A sign of fear, அச்சக்குறிப்பு. (*p.*)

ஓடியம், *s.* Ribaldry, obscenity, பரிகாசம்—as ஓடியம்பேச, to talk obscenity. (*p.*)

ஓடியவோடம், *s.* Conch, கிளிஞ்சில். (*M. Dic.*)

ஓடு, *s.* The shell of an animal, ஆமைமுதலியவற்றினோடு. 2. The shell of a nut, a pod, an egg, வித்துமுதலியவற்றினோடு. 3. A tile, தட்டோடு. 4. A piece of broken earthen ware, உடைந்தபானையோடு. 5. A skull, மண்டையோடு. 6. A mendicant's vessel for receiving alms, being commonly a shell or sherd, இரப்போர்கலம். 7. (*fig.*) Length, extension, நீளம்.

கேடுகாலத்துக்கு ஓடுசெப்பறை. In time of distress a sherd may serve for an eating vessel; i.e. in time of need any thing will do.

ஓடன், *s.* A tortoise, ஆமை. (*M. Dic.*)

ஓடுபரப்ப—ஓடுமூட—ஓடுவேய, *inf.* To tile, cover with tiles.

ஓடுபிரிக்க, *inf.* To take the tiles from a house.

ஓடுமாற்ற—ஓடுதிருப்ப, *inf.* To turn the tiles of a house.

ஓட்டடை—ஓட்டப்பம், *s.* A pan-cake.

ஓட்டடைசுடுதல், *v. noun.* Frying a pan-cake.

ஓட்டாங்கிளிஞ்சில், *s.* Broken oyster-shells.

ஓட்டாம்பாரை, *s.* A fish, Scomber aculeatus, *Klein.*

ஓட்டுத்தடுக்கு, *s.* A tiled roof.

ஓட்டுத்தடுக்குவீடு, *s.* A house that has a tiled roof.

ஓட்டுமுத்து, *s.* Pearls of inferior quality found adhering to the oyster, முத்து.

ஓட்டுவீடு, *s.* A house covered with tiles.

தட்டோடு, *s.* A flat tile.

சதுரவோடு, *s.* A quadrangular tile.

நாழியோடு, *s.* A water-spout for the conveyance of water from the roof of a house.

வறையோடு, *s.* A frying pan.

ஓடு. A form of the third case or social ablative; i.e. with, together with—having sometimes an instrumental application, மூன்றனுருபு.

வீட்டோடிருக்கிறான். He is at home. 2. He is unemployed.

வில்லோடுபொருதான். He fought with a bow.

என்னோடுவியாபாரஞ்செய். Be partner with me in merchandise.

ஓடு, கிறேன், ஓடினேன், வேன், ஓட, *v. n.* To run, flee, flee away, pass quickly, விரைந்துசெல்ல. 2. [*used with the impers. terminations.*] To grow long, extend, be long, go far, நீள. 3. To divide, split, crack, வெடிக்க.

ஓடவுமாட்டான் பிடிபடக்கொடான். He will neither run, nor suffer himself to be caught.

அவனுக்கெழுத்தோடாது. He cannot read freely.

ஊரோடொக்கவோடு. Run when your fellow-countrymen do; i. e. do as others do.

வேரோடுகிறது. The root runs (into the ground).

கப்பலோடுகிறது. The ship is sailing, is under sail.

ஓடவைத்தல், *v. noun.* Refining metals, புடம்வைத்தல்.

இழிவிலேயொன்றின்றவோடசத்தையோடவைக்குமாறுபோல். As refining gold spoiled by mixture with the same metal of inferior quality. (பார.)

ஓடவைத்தபொன், *s.* Refined gold.

ஓடாணி, *s.* [*in jewelry.*] A pin or bolt passed into an ornament as a fastening, ஆபரணக்கடைப்பூட்டு.

ஓடித்திரிய, *inf.* To run about. 2. To assume airs. 3. To take great pains, &c., to attain an object.

ஓடிப்படர, *inf.* To run and spread as a creeper.

ஓடிப்பிடிக்க, *inf.* To overtake in running.

ஓடிப்போக, *inf.* To run away.

ஓடியாடிப்பார்க்க, *inf.* To go about, to endeavor.

அவனொருஉத்தியோகத்திற்கோடியாடிப்பார்க்கிறான். He goes about in pursuit of a situation.

ஓடியுறைய, *inf.* To congeal gradually, இறுக—chiefly used in the past.

கஷாயமெல்லாமோடியுறைந்தது. The decoction is all congealed.

ஓடிவர, *inf.* To approach at a running pace.

ஓடிவிறைக்க, *inf.* To extend—as stiffness over the body through cold, முழுதும்விறைக்க.

ஓடிவெளிக்க, *inf.* [*prov.*] To be dispelled—as clouds; to clear—as the sky, முகில்பரந்தொழிய. 2. To be discovered—as fraud, theft, &c., களவுவெளிப்பட.

அவர்வஞ்சகமெல்லாமோடிவெளித்துப்போயிற்று. He has discovered the imposition, &c.

மழையோடிவெளித்துப்போயிற்று. The appearance of rain is past away, the sky is become clear.

ஓடுதாவடி, *s.* Bustle and confusion in preparing—as for a journey, &c., going abroad—as for business, &c., in a time of bustle, &c., கலக்கம்.

ஓடுதாவடிப்படுதல், *v. noun.* Being in a bustle—as in preparing for a journey, &c.

ஓடுபந்தல், *s.* [*prov.*] A moveable canopy supported on cords, &c., கடைக்காவணம்.

ஓடுவிப்புருதி, *s.* A running cancer, ஓர்புண்.

ஓட்டம், *v. noun.* Running, flight, galloping, speeding, ஓடுமோட்டம். 2. Current, flowing, course, pace, drift, நீரோட்டம். 3. Defeat, rout, retreat, flight, தோல்வி.

அங்கேயொடுத்தஓட்டமிங்கேவந்தோய்ந்தது... I ran all the way hither.

அவனுக்கெழுத்தோட்டமில்லை. He does not read fluently.

ஓரோட்டமாய்வா. Come at once, come without halting, do not stay on the way.

ஓட்டங்காட்ட, *inf.* To lead the way, to precede inducing others to follow.

ஓட்டமாகவோட, *inf.* To run with great speed.

ஓட்டமெடுக்க-ஓட்டம்பிடிக்க, *inf.* To set out running, start out with speed, to flee; to begin to run.

நீரோட்டம், *s.* A current, a stream.

ஓடை, *s.* A large water-course, a channel for the conveyance of water, a rivulet, a dyke, நீரோடை. 2. (*p.*) A tank in general, குளம். 3. A ditch round a fortification, அகழி. 4. The name of a creeper, ஓர்கொடி, Combretum laxum. (*Rott.*) 5. The கிலுகிலுப்பை plant, Crotalaria, *L.* 6. The name of a tree, உலவைமரம், Combustura. 7. A mountain path, மலைவழி. (பிங்.) 8. A metal plate or a badge for the forehead, நெற்றிப்பட்டம். 9. A frontlet for elephants, யானைநெற்றிப்பட்டம். 10. [*prov.*] A narrow slip of ground, ஒடுக்கநிலம்.

*ஓட்டம்—ஓஷ்டம், *s.* The upper lip, மேலுதடு. 2. Lip in common, உதடு Wils. p. 175. Oshda. (*p.*)

ஓட்டு, கிறேன், ஓட்டினேன், வேன், ஓட்ட, *v. a.* To cause to run, to drive, propel, despatch, steer a vessel, செலுத்த. 2. To drive away, put to flight, chase, expel, exile, to disperse ignorance, darkness, ஓடச்செய்ய. (நீ. 110.) 3. To pass in, insert, உட்செலுத்த.

அந்தமாட்டையோட்டிக்கொண்டுபோய்விட்டான். He has driven away that cow.

அந்தப்பேயையோட்டிப்போட்டான். He has expelled that demon.

அவர்களைக்காட்டிலோட்டிவிட்டான். He has forced them into the jungle.

ஓட்டி, *s.* A driver—used in combination—as ஈயோட்டி, fly-flapper; பேயோட்டி, an enchanter; படவோட்டி—சம்பானோட்டி, a boatman; ஆளோட்டி, a superintendent of laborers.

ஓட்டு, *v. noun.* Sailing of a vessel, கப்பலோட்டம். 2. An assuming course of conduct.

அந்தவோட்டிங்கேசெல்லாது. That course of conduct will not be tolerated here.

எல்லாவோட்டுங்குல்லாவிலே. The value of the canoe is in the outrigger; i. e. all the matter hangs on him. [*prov.*]

இந்தக்காற்றாலின்றுசென்னபட்டணத்திற்கு எத்தனைநாளோட்டிப்போகலாம். In how many days' sail may we reach Madras with this wind?

ஓட்டுத்துத்தி, *s.* A plant, ஓர்பூண்டு.

ஓட்டை, *s.* A crack, a hole in a vessel, a flaw, a leak, a cracked or defective vessel, bell, tile, shell, &c., a fissure, உடையல்.

ஓட்டைத்தோணி, *s.* A crazy, broken dhony.

ஓட்டைப்பானை, *s.* A cracked vessel.

ஓட்டைமணி, *s.* A cracked bell.

ஓட்டையுடையல், *s.* Cracked and broken things.

ஓட்டைவாயன், *s.* A babbler, one who keeps no secret, வெள்ளைவாயன்.

ஓணம், *s.* A river, ஆறு. 2. The twenty-second lunar mansion, திருவோணநாள். (*p.*)

ஓணான், *s.* [*vul.*] Lizard, including several species, ஓந்தி, Lacerta cristata.

ஓணான்குத்தி—ஓணான்கொத்தி, *s.* A kind of hawk that kills and eats the ஓணான்.

பச்சோணான், *s.* A chameleon.

கரட்டோணான், *s.* A kind of small lizard.

சிவப்போணான்—சீத்தியோணான், *s.* The smallest kind of lizard. Arab. Hhalca.

ஓதம், *s.* A rupture, அண்டவாதம், Hernia hydrocele, or sarcocele. 2. A flood, inundation, deluge, வெள்ளம். 3. A wave, a billow, கடற்றிரை. 4. The sea, கடல். 5. Moisture, dampness—as of a floor, ஈரம். (பிங்.)

ஓதக்காரன், *s.* A person with rupture, அண்டவாதக்காரன்.

ஓதக்கால், *s.* A disease, the elephantiasis or large leg, வாதக்கால்.

ஓதமிறங்குதல், *v. noun.* Having rupture, வாதமிறங்குதல்.

ஓதமேறுதல், *v. noun.* Becoming damp.

*ஓதனம், *s.* Boiled rice, சோறு. 2. Food in general, உண்டி. Wils. p. 175. Odana. 3. Greatness, பெருமை. 4. [*ex* யுத. to fight.] Battle, war, போர். (பார.) (*p.*)

ஓதன்மை, *s.* See ஓது, *v.*

ஓதி, *s.* A kind of lizard. (See ஓந்தி.) 2. Women's hair, பெண்மயிர். 3. Knowledge, wisdom, ஞானம். 4. Literature, erudition, கல்வி. 5. A cat, பூனை. 6. A mountain, மலை. 7. Close attack (in battle, &c.), இடங்கழிமை. (சது.) 8. [*ex* ஓது.] A learned person, ஓதுவான். (பிங்.) (*p.*)

கோதையோதிமாதர். Women having their heads adorned with garlands.

வேதினவெரிநோதி. A lizard with a serrated back.

ஓதிமம், *s.* A swan, அன்னம். 2. A hill or mountain, மலை. 3. The bos grunniens, கவரிமா. 4. A tamarind tree, புளியமரம். (*p.*)

ஓதிமமுயர்த்தோன், *s.* Brahma whose banner is the swan, பிரமன். (*p.*)

ஓது, கிறேன், ஓதினேன், வேன், ஓத, *v. a.* To recite the vedas with appropriate intonations, aspirations, &c.—being one of the six duties of the brahman; to chant a sacred eulogy in the temple, வேதமோத. 2. To read, learn, recite audibly in order to commit to memory, படிக்க. 3 To speak, say, declare, சொல்ல. 4. To repeat prayers—as the Romanists and Mahomedans, செபமுச்சரிக்க. 5. To give advice, persuade clandestinely, to teach one to act with duplicity, புத்திசொல்ல. 6. To utter incantations, to consecrate, மந்திரமுரைக்க.

ஓதாதார்க்கில்லையுணர்வுடனொழுக்கம். Knowledge and good manners are not to be found in unlearned men.

ஓதாமலொருநாளுமிருக்கவேண்டாம். Employ your whole time in the pursuit of knowledge.

ஓதுவதொழியேல். Cease not to learn. (ஔவை.)

எண்ணெயோதிக்கொடுக்கிறது. To administer holy oil to women in labor.

காதிலேயோதிவிட்டான். He has given him secret advice, he has prevailed on him by underhand or secret means.

நூறுநாளோதியாறுநாள்விடநூறும். The traces of learning made in a hundred days will be effaced by indolence in six.

ஓதியிறைக்க, *inf.* To sprinkle holy water.

ஓதியுடைக்க, *inf.* To break a cocoanut with appropriate incantations.

ஓதிவிட, *inf.* To cease reading.

ஓதிநீர், *s.* Holy water, consecrated water.

ஓதுவான், *s.* A teacher of the vedas, and other sacred literature, ஆசான். 2. A learner, a scholar, a student, படிப்பவன். 3. The eulogist of the god of the temple whose duty it is to chant the verses directed by the attending priest, திருப்பாட்டுப்பாடுவோன்.

ஓதுவானெல்லாமுழுவான்றலைக்கடையில். The scholar must wait at the backdoor of the ploughman; i.e. learning is dependent on the plough.

ஓதுவிக்க, *inf.* To teach the vedas, வேதங்கற்பிக்க. 2. To teach science, instruct, படிப்பிக்க.

ஓதல், *v. noun.* Reciting the vedas, &c. 2. Reading. 3. Learning, speaking.

ஓதலினன்றேவேதியர்க்கொழுக்கம். Good manners in a brahman are preferable to the recitation of the vedas.

ஓதற்றொழிலுரித்துயர்ந்தோர்மூவர்க்கும். The right of reciting the vedas belongs to the three superior classes; i. e. brahmans, kings, and merchants. (அகப்.)

ஓதன்மை, *v. noun.* The act of reading, ஓதற்றன்மை. 2. Chanting, பாடல். (*p.*)

ஓதை, *s.* Sound, noise, ஒலி. 2. A great noise, clamor, din, பேரொலி. 3. A surrounding wall, a fortification, மதில். 4. A mount or area within a fortification, மதிலுண்மேடை. (பிங்.) (*p.*)

ஓத்தி, *s.* [*prop.* ஓந்தி.] Lizards of different species. (*p.*)

ஓத்து, *s.* The vedas, the sacred writings, வேதம். 2. A section or chapter of a book treating of one and the same thing, in contradistinction to படலம் in narrative writings, which may consist of a variety, இயல். (*p.*)

மறப்பினு[illegible]ரக்கொளலாகும்பார்ப்பான்பிறப்பொழுக்கங்குன்றக்கெ[illegible]ம். A brahman, though he should forget the vedas, may recover his knowledge by reading; but if he fail in propriety of conduct, even his high birth will be destroyed.

ஓத்துப்புறனடை, *s.* Notes, explanatory remarks, or exceptions following a section or chapter in a scientific or literary work, இயற்புறனடை.

ஓத்துமுறைவைப்பு, *s.* One of the thirty-two உத்தி.

ஓத்துரைப்போர், *s.* Teachers of the vedas, வேதம்படிப்பிப்போர். 2. Teachers in general, உவாத்தியாயர். (*p.*)

ஓநாய், *s.* A wolf, கோநாய்.

ஓந்தி, *s.* A lizard, embracing several species, ஓணன்.

பச்சோந்தி, *s.* A chameleon—as கோம்பி.

வெள்ளோந்தி, *s.* A white species of chameleon.

ஓமம், *s.* Sison or Bishop's weed, a species of cumin, the seed of which is distilled for medicinal use, also given in decoction to children, அசமதாகம், Sison ammi, *L.*

ஓமப்பொடி, *s.* A medicinal powder made of sison. 2. A cake made of it.

*ஓமம், *s.* A burnt offering, the casting of clarified butter, the nine kinds of grain, &c., into the sacred fire, accompanied with prayers, &c. It forms an essential part of the marriage ceremony and is performed at the அந்தியேட்டி, a chief ceremony for deceased persons and in the worship of the temple, &c. In poetry the burnt sacrifice of animals, யாகம். Wils. p. 980. Homa.

ஓமகுண்டம், *s.* A hole made in the ground for sacrificial fire. Wils. p. 780. Homakunda.

ஓமசாந்தி, *s.* Mitigating, propitiating by fire, அக்கினிசாந்தி. 2. Burnt offering at a marriage to propitiate the god of fire who is thus invoked as a witness of the transaction, விவாகத்திற்செய்யுமோமசாந்தி. 3. Any additional sacrifice performed to obtain pardon for having omitted certain ceremonies in a sacrifice, யாகசாந்தி.

ஓமஞ்செய்ய, *inf.* To perform a burnt sacrifice, அக்கினிகாரியஞ்செய்ய.

ஓமதிரவியம், *s.* The requisites for a sacrifice including the firewood, &c., யாகவுபகரணம்.

ஓமப்பொடி, *s.* The ashes of the ஓமம்—deemed sacred, and used for smearing the person, யாகசிது.

ஓமமண்டபம், *s.* A sacrificial hall, யாகசாலை.

ஓமம்வளர்க்க, *inf.* To kindle and feed the sacrificial fire which should never be suffered to go out; to attend to this is the special duty of the student or பிரமசாரி.

ஓமவிறகு, *s.* Sacrificial fire-wood of different kinds. See சமித்து.

ஓமாக்கினி, *s.* Sacrificial fire, ஓமத்தழல். Wils. p. 180. Homagni.

ஓமல், *s.* [*vul.*] A rumor, report, spreading as a rumor, ஊர்ப்பேச்சு.

ஊருக்கோமல்வீட்டுக்கெருவறிந்தெரிச்சல். He has the name of being a rich man, but in his house there is want and misery.

ஓமற்படுதல்—ஊரோமல், *v. noun.* Spreading as a rumor, being rumored.

உன்னாலிந்தரகசியம்ஊரோமலாச்சுதே. The secret has been bruited throughout the town by you.

ஓமான், *s.* A lizard, a chameleon, a blood-sucker, ஓந்தி. (*p.*)

ஓமிடி, *inter.* O ruin! O destruction!—an imprecation, a curse, கேடு.

ஓமிடி, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* [*prop.* ஓமுடி.] To be ruined, destroyed, கேடுற—as ஓமிடிக்கப்போவாய், perish thou.

ஓமை, *s.* The mango tree, மாமரம். (*p.*)

*ஓம், *s.* The mystic name of the deity, prefacing and concluding all the prayers or incantations of the daily worship, commencing books, &c., from அ, a name of Vishnu; உ, of Siva, and ம் of Brahma, embracing therefore the Indian Triad, and expressing the three in one, பிரணவம். 2. An expression of assent, a term used in bonds, agreements, &c., as showing the assent of the contracting party, ஒருடன்பாட்டுச்சொல். 3. A termination of the first person plural of verbs, தன்மைப்பன்மைவிகுதி—as வருவோம், we shall come.

ஓமென்றான். He has consented.

ஓம்பட, *inf.* [*prov.*] To express assent, consent, உடன்பட.

ஓம்படை, *s.* Protection, safeguard, security, காவல்; [*ex* ஓம்பு, *et* அடை.] (*p.*)

ஓம்படைக்கிளவி, *s.* [*in* அகப்பொருள்.] Committing a lady to the care of her attendants by a gentleman, during his absence, கைபடைகொடுக்கை. 2. Advice given to princes by sages, பெரியோர்சொல்லும்புத்தி.

ஓம்பு, கிறேன், ஓம்பினேன், வேன், ஓம்ப, *v. a.* To protect, guard, defend, save, காக்க. 2. To preserve, keep, take care of, பாதுகாக்க. 3. To keep off, ward off, dispel, cease from, ஒழிய. 4. To cherish, nourish, maintain, support, to cause to increase, வளர்க்க

பரிந்தோம்பிக்காக்கவொழுக்கந்தெரிந்தோம்பித்தேரினுமஃதேதுணை. Desire and maintain with great care the conduct proper to your caste, which, how much soever the virtues are examined and understood, and how much soever the senses are guarded, is alone the convoy of the soul. (குறள்.)

அஞ்சலோம்பென்றார். He said, away with your fears. (குறள்.)

வலியார்மேன்மாறேற்றலோம்புக. Let opposition to those more powerful than yourself cease. (குறள்.)

விலக்கியவோம்பி. Avoiding whatever is prohibited by the shasters— (நீதிநெறி.)

தாங்கற்றனவோம்பாது. Not retaining in memory what they have learnt—(நீதிநெறி.)

விருந்தோம்ப, *inf.* To entertain (guests), religious mendicants, &c.—as one of the duties of the householder. See இல்வாழ்வான்.

தீயோம்பி, *verb. part.* Cherishing the sacred fire. (நீதிநெறி.)

வேள்வியோம்ப, *inf.* To offer burnt sacrifices.

ஓம்பல், *v. noun.* Taking care of, &c., பாதுகாத்தல்.

ஓய். A particle of calling, applied to nouns of the masculine and feminine gender, ஓர்விளிஇடைச்சொல்.

ஓய், கிறேன், ந்தேன், வேன், ஓய, *v. a.* To cease, leave off, to desist from action, &c., to rest, விட. 2. *v. n.* To become tired, become weary, to fail, become weak or infirm—as a member of the body, தளர. 3. To cease, end, முடிய.

ஓயாமலிருக்க, *inf.* To be incessant, continual.

ஓயாமல்வருகிறான். He comes incessantly

மரங்காய்த்தோய்தல், *v. noun.* Ceasing to bear fruit for the season.

ஆய்ந்தோய்ந்துபார்த்தல், *v. noun* Considering maturely, deliberating.

எல்லாமோய்ந்தனகாய்ப்போயிற்று. His wealth, influence, &c. are all reduced.

கைஓயாமல்வேலைசெய்கிறான். He labors incessantly.

எழுதிஎழுதிக்கைஓய்ந்துபோயிற்று. My arm is weary with continual writing

ஆடியோய்ந்தபம்பரம். A top that has ceased to spin; i. e. an ascetic, so called because he has renounced worldly cares, and is henceforth exempt from transmigrations. 2. An old man whose active days are past. 3. A person dismissed from office.

காலோய்ந்தகையோய்ந்துபோகுதல். Feeling weak in the legs and arms—as after fever, &c.

ஓயாக்கவலை, *s.* Incessant troubles, anxiety.

ஓயாமாரி, *s.* Incessant rain, ஓயாமழை. 2. Unceasing liberality, பெருங்கொடை.

ஓய்ந்தமனம், *s.* A mind that has ceased to be affected by secular objects

ஓய்ந்துபோக, *inf.* To become weary.

அடித்தோய, *inf.* To desist from beating.

ஓயல்—ஓய்வு, *v. noun.* Cessation, ceasing, relinquishment, rest, ஒழிவு. 2. Slackness, தளர்வு. 3. End, termination, முடிவு.

ஓய்வுகளையில்லாமற்கொடுக்கிறான். He bestows without limit or cessation.

ஓய்வுநாள், *s.* A day of rest; [*in Christ. usage.*] the sabbath.

ஓய்ப்பிடியாள், *s.* The wife of the husband's brother, ஓரகத்தி.

ஓரம், *s.* Side, edge, border, margin, brim, brink, bank, shore, விளிம்பு. 2. Partiality in speaking, pleading, &c., பட்சவாதம். 3. A kind of salt of burning and acrid taste, சத்திசாரம்.

ஓரக்கண், *s.* A squint, சாய்வான பார்வை.

ஓரக்கணணன், *s.* A squint-eyed person. 2. (*fig.*) A partial man.

ஓரக்கண்ணாய்ப்பார்த்தல், *v. noun.* Squinting. 2. Looking partially.

ஓரக்காரன், *s.* A biased, partial person.

ஓரம்பேசுதல், *v. noun.* Speaking so as to please, speaking with partiality.

ஓரஞ்சொல்லேல். Speak not partially.

வழக்கோரம்பேசேல். Pass not partial judgment.

மண்ணிலிருந்தவழக்கோரஞ்சொல்லாதே.... Whilst on earth incline not to partiality in judgment.

ஓரவஞ்சனை, *s.* Great or criminal partiality.

ஓரவஞ்சனைபண்ண, *inf.* To act with partiality.

ஓரவாரம், *s.* Partial love, favo

கடலோரம், s. Sea-shore.

ஆற்றோரம், s. The bank of a river.

ஓரா—ஓராமீன், s. A kind of fish, ஓர்மீன், Dioden hystrix, L.

ஓராட்டு, s. [prov. prop. ஓலாட்டு.] Lulling a child, lullaby, தாலாட்டு.

ஓராயம், s. [prov.] Obliqueness, slantingness, சாய்வு. 2. The leeward or leaning side of a boat or other vessel, தோணியினசாய்ந்தவோர்புறம். 3. The close joining of two boards, இணைப்பு.

ஓராய்த்தோணி, s. A boat, the seams of which are formed by the boards lapping one over another before calking. See கலப்பற்று.

ஓராயமாய்ப்படுத்தல், v. noun. Lying on one side, or edgewise.

ஓராயமானவேலை, s. A slanting work—as a desk, &c.

ஓராயம்பார்த்தல், v. noun. Joining boards closely.

ஓரி, s. An old jackal, கிழநரி. 2. A male jackal, ஆண்நரி. 3. The male of the red monkey, ஆண்முசு. 4. The male of beasts in general, விலங்கினாண்பொது. 5. A man's knot of hair, ஆண்மயிர். 6. Hair on the body, பூமயிர். 7. The conveyance of Kali, காளிவாகனம். 8. One of the seven liberal kings of the lowest order, கடைவெழுவள்ளலிலொருவன். (p.)

ஓரிபோலழுதல், v. noun. Howling, as a jackal.

ஓரிசு—ஓர்சல், s. [vul.] An arrangement, settlement of a business, amicable settlement, தீர்மானம்.

ஓரிசுபண்ணுதல், v. noun. Settling a business.

ஓர்சலாக்குதல்—ஓர்சல்பண்ணுதல், v. noun. Deciding or settling a quarrel.

ஓரும், s. A poetic expletive, அசைச்சொல்.

செயற்பாலதோருமறனேயொருவற்குயற்பாலதோருமம்பழி. Whatever is fit to be performed is virtue, and whatever ought to be abandoned is vice. (குறள்.)

*ஓரை, s. A sign of the zodiac equal to thirty degrees, இராசி. 2. A period of five நாழிகை, or two hours commencing with the rising of a zodiacal sign. 3. The rising of a sign, இலக்கினம். Wils. p. 980. HORA. 4. Opportunity, சமயம். 5. A lady's female attendant, தோழி. 6. Female toys, play-things, &c., மாதர்விளையாடுங்கருவிகள். 7. A play ground for females, மாதர்விளையாடுங்களம். 8. A species of owl—the கூகை. 9. Rice and other edibles mixed and boiled, சித்திரான்னம். 11. A concourse of women, மாதர்கூட்டம். 12. Play, விளையாட்டு. (p.)

ஓரைபோடுமிவளாடுகின்றமலை. A mountain on which she plays with her female attendants.

ஏற்றநல்லோரைமினெழுந்ததாலன்றேஆற்றெதிர்ப்பட்டனம். It was because we started in an auspicious hour that we have now met in the way.

புளியோரை, s. Rice qualified by the addition of acid and other ingredients.

எள்ளோரை, s. Rice and sesamum mixed and boiled, சித்திரான்னம்.

ஓர், adj. For ஒன்று, one—prefixed to vowels. See under ஒன்று.

ஓரகத்தி, s. The wife of the husband's brother.

ஓரடிமடக்கு, s. Repetition of a line once in a verse, அடிமடக்கு.

ஓராசிடைவெண்பா, s. A species of ஆசிடைவெண்பா, having only one ஆசு.

ஓரிதழ்த்தாமரை, s. A little herb with a monopetalous flower, ஓர்பூ, Viola suffruticosa, L.

ஓரிலைத்துத்தி, s. A shrub, ஓர்வகைத்துத்தி.

ஓருள்ளிப்பூடு, s. A solid root of garlic not divided into cloves.

ஓரெழுத்துமடக்கு, s. Repetition of a letter in a verse.

ஓரொரு—ஓரோர், s. Each one, one of each, one at a time, one for each.

ஓர்குடிமணாளன் — ஓர்குடியிற்கொண்டோன், s. The husband of the wife's sister, சகலன். (p.)

ஓர்குண்டலன், s. Balabhadra, பலபத்திரன். (p.)

ஓர், கிறேன், ந்தேன், வேன், ஓர, v. a. To consider attentively, examine, investigate mentally, to ponder, ஆராய. 2. To understand, find out, தெளிய. (p.)

ஓரால். Mayest thou ponder or consider.

ஓர்ந்துபார்த்தல், v. noun. Examining mentally, considering attentively.

ஓர்ச்சி, v. noun. Deliberation, counsel, investigation, research, ஆராய்ச்சி.

ஓர்வு—ஓர்பு, v. noun. Consideration, pondering, reflecting.

ஓர்க்கோலை, s. Amber, அம்பர்.

ஓர்சல்பண்ணுகிறது, [prop. ஒழிதல் பண்ணுகிறது.] To decide or settle a quarrel.

ஓர்ப்பு, s. Firm determination, perseverance, கருமமுடிக்குந்துணிவு. 2. Patience, பொறுமை. 3. Fortitude, firmness, decision—one of the four qualities of men, ஆடவர்க்குணம்நான்கிலொன்று.

ஓர்மம், s. [prov.] Fortitude, courage, bravery, rashness, திடன்.

ஓர்மக்காரன், s. A daring or courageous person.

மனவோர்மம், s. Daring, courage

ஓர்மிக்க, inf. To be courageous, daring, brave, valiant, adventurous, presuming, rash.

ஓர்மிப்பு, v. noun. Courageousness, boldness, venturesomeness.

ஓர்மை, s. Fortitude, bravery, intrepidity, துணிவு. 2. The pomp, parade, &c., of a festival.

ஓலக்கம், s. An assembly of state, சபை. 2. A hall of audience, சபைகூடுமிடம். 3. A room in form of the sacred shrine of a temple, a place for an assembly, சபாமண்டபம். (p.)

ஓலக்கமண்டபம், s. A place for an assembly in a temple.

ஓலக்கம்பண்ண, inf. To assemble publicly.

திருவோலக்கம், s. (fig.) The assembly at a public festival.

திருவோலக்கவாயில், s. The gate of a temple, the place of assembly.

ஓலம், s. Sound, noise, roar, சத்தம். 2. A cry of lamentation, appeal to, or invocation of the deity, அபயக்குரல். 3. Snake, பாம்பு. (Rott.) 4. The sea, கடல். (p.)

மூர்த்தியே—ஓலம்—ஓலம். Swamy, help, help (I cry to thee for aid).

ஓலமிடுதல், v. noun. Calling on a deity, or superior for help, invoking audibly, அபயமிடுதல். 2. Calling or weeping aloud.

ஓலமிட்டழுகிறாள். She weeps with a loud voice.

ஒருத்தனேயுன்னையோலமிட்டலறியுலகெலாந்தேடியுங்காணேன். O thou the only God, I invoked thy aid in a weeping tone and sought for thee in vain the whole world over. (திருவா.)

ஓலாட்டுதல், v. noun. Lulling a child.

ஓலாட்டு, v. noun. Lulling a child to sleep. 2. s. A nurse's lullaby.

ஓலை, s. A palm leaf of any species, an ola, பனை, தெங்குமுதலியவற்றினோலை. 2. The leaf of the தாழை or wild pine-apple tree, தாழையோலை. 3. An ola letter, a written ola, a writing or document, எழுதமோலை. 4. The summons of Yama, நமனோலை. 5. (p.) (சது.) Sound, ஒலி.

நாளையேயோலையுந்தூதரும்வரின். If to-morrow the messengers of Yama come with the summons. (வைரா.)

ஓலைக்கட்டு, s. A bundle of palmyra leaves.

ஓலைக்கணக்கர், s. Learners at school, பள்ளியிற்படிப்போர்

ஓலைக்கணக்கரொலியடங்கும்புன்மாலை. The evening when the noise of learners at school ceases. (நாலடி.)

ஓலைக்கணுட்டு, s. A chip or small piece of ola.

ஓலைக்கண், s. Scallop or indentation of a palmyra leaf.

ஓலைக்காந்தல், s. Cinder of the ola—as burning, floating flakes, dry pieces of ola.

ஓலைக்குடை, s. An umbrella made of palm leaves.

ஓலைக்கொடி, s. [prov.] An ola kite.

ஓலைச்சிறகு, s. The half of a palmyra leaf.

ஓலைச்சுருள், s. An ola letter inclosed in a செந்திரிக்கம்.

ஓலைதீட்ட, inf. To write on the ola, ஓலையிலெழுத.

ஓலைதீட்டும்படை, s. A style, an iron pen, எழுத்தாணி.

ஓலைபோக்க—ஓலைவிட, inf. To send a note.

கூற்றைவெல்குவம்வருகவென்னவோலைவிட்டு. Despatching a challenge to the regent of the dead—

ஓலைப்பூ, s. [vul.] The flower of the wild pine-apple tree, தாழம்பூ.

ஓலைமுத்திரை, *s.* A stamp imprinted on a palmyra leaf.

ஓலைமுரி, *s.* Unevenness of a palm leaf.

ஓலையாள், *s.* A carrier of palm leaf letters.

ஓலையெழுத, *inf.* To write a letter on a palmyra leaf.

ஓலைவாங்க, *inf.* To receive an ola; i. e. the summons of death; to die.

ஓலைவீடு, *s.* A house thatched with palmyra leaves.

ஓலைவேலி, *s.* A hedge platted with palm leaves.

பட்டோலை, *s.* A written order, royal edicts. 2. A writing from dictation.

காதோலை, *s.* Ear-hoop of palm leaf. 2. (*fig.*) Ear-hoop made of gold, worn by women.

குருத்தோலை, *s.* A young shoot of palm leaf.

படியோலை, *s.* The duplicate of a document. (பெரியபு.)

படையோலை—பாரோலை, *s.* A palmyra leaf or leaves on which the fruit of the palmyra are kept when they are unhusked, preparatory to their being inspissated.

பிணியோலை, *s.* An amulet made of palmyra leaf, tied as a remedy to the waist of children supposed to be possessed of a demon.

விரியோலை, *s.* The leaves of a palmyra, &c., when they begin to expand and mature. 2. A cadjan made of cocoanut leaves.

பனையோலை, *s.* Leaf of a palmyra tree.

முகவோலை, *s.* A letter.

முகவோலையினிதிறேக்கி. Reading a letter with delight—

மூலவோலை, *s.* An original deed. (பெரிய.)

நாளோலை, *s.* An ola fastened on a house in an auspicious hour preparatory to its being thatched.

வெள்ளோலை, *s.* A blank ola.

தென்னோலை, *s.* Leaf of a cocoanut tree.

ஓலைவாளை, *s.* A species of வாளைமீன்; which see.

ஓல், *s.* [*a contraction of* ஓலம்.] Sound, buzz, &c. (*p.*)

ஓலிட, *inf.* To call on a deity, &c., with wailing; to cry out for aid, அபயமிட. 2. To sound, make a noise, சத்தமிட.

சங்கோலிடும்பழனம். Rice-fields in which the (living) chanks resound—(ஸ்காந்.)

ஓவர், *s.* Mechanics, artisans, smiths, கம்மாளர். 2. Painters, sculptors, workers in the fine arts, சித்திரகாரர். 3. Bards, eulogists employed by princes, in their processions to repeat their titles, praises, &c., பாடற்கிழ்மக்கள். (*p.*)

ஓவியம், *s.* A picture, a portrait, சித்திரம். 2. A statue, a puppet, பிரதிமை. (*p.*)

ஓவியத்துறைகைபோயவொருவன். One practised in painting— (நைட.)

ஓவியமானபிள்ளை, *s.* A very dear and beloved child.

ஓவியர், *s.* Painters, sculptors, artists, சித்திரகாரர். 2. Mechanics, artificers, smiths, கம்மாளர். (*p.*)

ஓவு, கிறேன், ஓவினேன், வேன், ஓவ, *v. n.* To cease, desist, terminate, become extinct, ஒழிய. 2. To suffer, be afflicted, வருந்த.

கன்மம்பிடிக்க, inf. To attend, follow, or pursue—as the guilt of crimes personified.

கன்மம்புசிக்க, inf. To experience the good or evil of former actions.

கன்மவலை, s. The net of moral actions, கன்மபாசம்; i. e. the entanglements of births, or actions and their result, in subsequent transmigrations.

கன்மவாதனை, s. See கருமவேதனை.

கன்மரோகம்—கன்மவியாதி, s. See கருமவியாதி.

கன்மவுடம்பு, s. Bodies assumed, as a result of former deeds, கன்மசரீரம்.

கன்மாதி, s. Funeral rites, &c., for deceased ancestors, கர்மாதி.

கன்மி, s. A heinous sinner, a perpetrator of crimes, கருமி.

கன்மேந்திரியம், s. The five organs of action, தொழிற்கருவி. See இந்திரியம்.

கன்று, s. A calf, colt, &c., the young of the buffalo, cow, mare, camel, bos graven, bos grunniens, elk, deer, and elephant, எருமை, ஒட்டை, கடமை, கவரி, காட்டா, குதிரை, பசு, மரை, மான், யானைமுதலியவற்றின்குட்டி. 2. Sapling, a young tree in general, இளமரம் (c.) 3. (p.) A small thing, a trifle, a particle, அற்பம். 4. A bracelet, கைவளை.

கன்றுந்தாயும், s. A cow and calf.

இளமையிற்பயிராக்கப்பட்டவிருக்ஷத்தின்கன்றுகள். Plants grown up in their youth.

கன்றுகாலி, s. Cattle, old and young, of the bovine species.

கன்றுகொல்லி, s. A disease in cows causing the death of their calves, மாடுகளுக்குவரும்ஓர்நோய்.

கன்றுக்குட்டி, s. [vul.] A calf.

கன்றுதாய்ச்சி, s. A cow great with young, சூற்பசு.

கன்றுபட, inf. To be in calf.

கன்றுபோட—கன்றீன, inf. To calve.

கன்றூட்ட, inf. [prov. கன்றுக்கூட்ட.] To suck, as calves.

கன்றூட்டவிட, *inf.* To let the calf suck after milking, in order to get an increased supply, which otherwise is retained. 2. To allow the calf to suck—the act of the cow.

கடாரிக்கன்று, *s.* A cow-calf.

வாழைக்கன்று, *s.* Plantains, the sucker or shoot, Musa paradisiaca.

சேங்கன்று, *s.* A bull-calf.

மாங்கன்று, *s.* A shoot of the mango tree.

இளங்கன்று, *s.* A young calf.

ஊட்டுகன்று, *s.* A sucking calf.

ஊட்டுமறந்தகன்று, *s.* A weaned calf.

முதுகன்று, *s.* A grown calf.

மான்கன்று, *s.* A fawn.

கன்று, கிறேன், கன்றினேன், வேன், கன்ற, *v. a.* To become sore—as with a blow; as the feet with walking; the hands with first using a tool, &c., காயத்தினுற்கன்ற 2. To be burnt with the sun, வெயிலினுல்கன்ற. 3. To grow hard and unfit for use—as fruits by injury in their growth—as plantains by the application of too much heat, in smoking or forcing them, சைய. 4 To grow hard and unrelishable—as vegetable curries, through failure of heat in cooking, பதனழிய (*c.*) 5. (*p.*) To have the feelings wounded, to be aggrieved, விசனப்பட. 6. To be violent, enraged, சினக்கோபங்கொள்ள.—*Note.* போதல் is commonly joined with the gerund of this verb.

கன்றியவேந்தர். Violent kings that are enraged.

அவன்கைகன்றிப்போயிற்று. His hand is hurt, bruised, &c.

கன்றினகுரல், *s.* Harshness of voice, deep or guttural voice.

கன்றுகாமம், *s.* Headstrong lusts.

கன்றுசினம், *s.* Violent anger.

கன்றல், *s.* Anger, கடுப்பு. 2. Sign of anger, சினக்குறிப்பு. (*p.*)

கன்றுதல், *v. noun.* The state of being over-ripe, சைதல். 2. Pitying, இரங்கல். 3. Rottenness, பதனழிவு.

கன்றுபுக்கான், *s.* An herb, Commelina communis, *L.* (*Rott.*)

கன்னகம், *s.* An instrument for housebreaking, கன்னக்கோல். (*p.*)

கன்னங்கரியது, *s.* A thing very black, மிகக்கரியது. (*c.*)

கன்னங்கரியர், *appel. n.* Very black people, மிகக்கரியர்.

கன்னங்கரேரென்றிருக்க, *inf.* [*vul.*] To be excessively dark or black, மிகக்கருமையாயிருக்க.

கன்னங்கரேரென்றிருக்கிறவிருள். Pitch darkness.

கன்னங்கரேரென்றிருக்கிறன். He is very dark.

*கன்னடம், *s.* [*impr.* கன்னுடம்.] The Canarese country, ஓர்தேயம். 2. The Canarese language, ஓர்பாஷை. 3. One of the forty-two new Hindu tunes, an evening melody, ஓர்ராகம். Wils. p. 196. KARN'ADA.

கன்னடகவுளம், *s.* A kind of tune, ஓர்ராகம்.

கன்னடியம், *s.* [*prop.* கன்னடம்.] The Canarese language and country.

கன்னடியர், *s.* [*prop.* கன்னடர்.] The Canarese people.

*கன்னம், *s.* Cheeks, கதுப்பு. 2. An instrument for breaking into houses, கன்னக்கோல். (*c.*) 3. (*p.*) Ear, காது. Wils. p. 195. KARN'A. 4. An elephant's ears, யானைச்செவி. 5. Nerves, நரம்பு. 6. Hypothenuse of a right angled triangle, or the diagonal of a tetragon, ஆகூடிகன்னம். 7. True distance of a planet from the earth, கிரகமார்க்கவளவு. 8 A goldsmith, பொற்கொல்லன். (சது.) 9. The scale or dish of a balance, தராசுத்தட்டு.

கன்னகடூரம், *s.* Harsh, grating, dissonant sound, uncouth to the ear.

கன்னக்காரன், *s.* A burglar, கன்னமிடுபவன்.

கன்னக்கிரந்தி—கன்னப்புற்று, *s.* A swelling in the cheek from the venereal disease, கன்னத்தில்வருமோர்நோய்.

கன்னக்கோல், *s.* An implement for breaking through the walls of houses, கன்னகம்.

கன்னக்கோல்வைக்க—கன்னமிட, *inf.* To commit burglary by breaking through a wall.

கன்னசூலை, *s.* A tumor in the region of the cheek, one of the arthritic class of diseases. See சூலை.

கன்னத்தட்டு, *s.* [*as* கன்னம்.] The dish of a balance, நிறைகோற்றட்டு.

கன்னத்திலேயடிக்க—கன்னத்திலேயறைய—கன்னத்திற்போட, *inf.* To slap the face, to box the ears.

கன்னபரம்பரைஞானம்—கன்னபாரம்பரியம், *s.* Tradition, oral transmission of intelligence, history, news, meanings, &c., பரம்பரைக்கேள்விபால்வந்தஞானம்.

கன்னபாகம், *s.* The ear, காது.

கன்னபூரம், *s.* A kind of ear-ornament, காதணியிலொன்று. 2. The ear, காது.

கன்னபூஷணம், *s.* Ear-ornaments, காதணி.

கன்னப்பரிசை, *s.* The whiskers or beard on the cheek.

கன்னப்பள்ளம், *s.* The hollow of the cheek.

கன்னப்பிளவை, *s.* A cancer or scirrous affection in the cheek—as கபோலப்பிளவை

கன்னப்பூ, *s.* A kind of female ear-ornament, காதணியிலொன்று.

கன்னப்பொறி, *s.* The temples, the upper part of the side of the head, காதினருகானபொறி.

கன்னமதம், *s.* Secretion from the temples of the elephant, யானைமும்மதத்திலொன்று.

கன்னமீசை, *s.* [*prov.*] The whiskers.

கன்னமூலம், *s.* The interior or root of the ear, காதினடி.

கன்னவேதம்—கன்னவேதை, *s.* [*as* காதுகுத்தகை.] Perforating the ear, for ear-rings with appropriate ceremonies. Wils. p. 195. KARN'AVEDA.

கன்னுவதங்கம், *s.* An ear-ornament, காதணிவருப்பு.

கசகன்னம், *s.* Voluntary motion of the ear. 2. A kind of magical trick.

கன்னல், *s.* Sugar-cane, கரும்பு. 2. Sugar-candy, jaggary, sugar, &c., சருக்கரை. 3. A water-pot with a spout, கரகம். 4. An Indian hour of twenty-four minutes, நாழிகை. 5. A perforated hour-vessel that fills and sinks at the expiration of the hour, நாழிகைவட்டில். (*p.*)

கன்னற்கட்டி, *s.* Sugar-candy, சற்கண்டு.

*கன்னன், *s.* Karna, an ancient prince, sovereign of Angadesa and an elder brother of the Pandu princes, being the son of Surya by Kunti, before her marriage with Pandu, described in the B'harata, ஓராசன். Wils. p. 195. KARN'A. He is one of the seven famous liberal princes of the medium class.

கன்னனூர், *s.* Cannanore, a town built by king Kannen.

கன்னு, *s.* See கருணை.

கன்னுபின்னுவெனல், *v. noun.* Chattering inarticulately, உருத்தெரியாமற்சொல்லல். 2. Pretending to teach and talk of things beyond one's ability, குளறல்.

கன்னுபின்னை, *s.* The same as கன்னுபின்னு.

*கன்னி, *s.* A virgin, a maiden, a young unmarried woman, குமரி. 2. Virgo, a sign of the zodiac, ஓரிராசி. Wils. p. 187. KANYA. 3. [*in mythology.*] A river that flows into the sea at Cape Comorin, regarded as a sacred virgin, ஓராறு. (*c.*) 4. (*p.*) Youthfulness, tenderness, juvenility, இளமை. 5. Virginity, கற்புக்கெடாமை. 6. A woman, பெண். 7. The thirteenth lunar asterism, அத்தநாள். 8. The wild or Socotrine aloe, an evergreen, கற்றாழை, Aloe perfoliata. 9. A wild creeper, the காக்கணம். 10. Unfading, imperishable, eternal youth, freshness, vigor, evergreen, அழிவில்லாமை. 11. A female ascetic, தவப்பெண். 12. A female possessing eternal youth—spoken of the goddesses or celestial females, தெய்வப்பெண். 13. Durga, துர்க்கை. 14. A plant, கரவீரை. (*Rott.*)

கன்னிகழியாதஆண்பிள்ளை, *s.* A chaste youth.

கன்னிக்கால், *s.* The first post set up in the wall of a new house facing south, decked with cloth, in imitation of a female, முதல்நாட்டுக்கம்பம். See கலியாணம்.

கன்னிக்கால்நாட்ட, *inf.* To set up the first post in a large building. 2. To plant the first marriage post.

கன்னிக்குட்டி, *s.* [*prov.*] The first kid or lamb.

கன்னிக்கோழி, *s.* A pullet nearly arrived at maturity.

கன்னிச்சவ்வு—கன்னிமுத்திரை, *s.* The hymen.

கன்னித்திங்கள் — கன்னிமாதம், *s.* The month of September when the sun is in the sign virgo, புரட்டாசிமாதம்.

கன்னித்தீட்டு, *s.* The catamenia of a young woman, deemed impure in a higher degree than afterward.

கன்னித்துவம்-கன்னிமை, *s.* Virginity, virgin age, கன்னித்தன்மை.

கன்னிபுதன், *s.* Mercury in the sign virgo, indicating learning in one born under its influence.

கன்னிப்பருவம், *s.* The age of mature virginity.

கன்னிப்பிள்ளைத்தாய்ச்சி, *s.* [*prov.*] A woman in her first pregnancy.

கன்னிமதில், *s.* Imperishable fortress walls.

கன்னிமார், *s.* Virgins, deified females who were pious virgins on earth, afterward born in deified forms, in the supernal worlds in some one of the three lower states of bliss, கன்னியர்.

கன்னிமையழித்தல் — கன்னியழித்தல், *s.* The crime of deflouring a virgin. 2. The guilt of suffering a virgin to be defloured.

கன்னிமையழிய—கன்னியழிய, *inf.* To lose virginity, to be be deflouređ, கன்னிமைகெட.

கன்னியழியாதபெண், *s.* A girl that has not lost her virginity.

கன்னியாகுமரி, *s.* The கன்னி river. 2. Cape Comorin, the southern point of India.

கன்னியாஸ்திரி, *s.* A girl arrived at maturity, a virgin, கன்னிப்பெண்.

கன்னியிற்பெறும்புதல்வன், *s.* The son of a young unmarried woman.

கன்னியீற்று, *s.* The first calving of a cow.

கன்னிகாரம், *s.* A kind of cotton tree, கோங்குமரம், Petrospermum acerifolium.

*கன்னிகை, *s.* A virgin undeflourred, a girl unmarried, கன்னிமையழிவில்லாள். 2. The five கன்னிகை, viz.: அகலிகை, the wife of கௌதமன்; துரோபதை, the wife of the பஞ்ச பாண்டவர் or five brothers, sons of the king பாண்டு; சீதை, the wife of இராமன்; தாரை the wife of வாலி; and மண்டோதரி, the wife of இராவணன். 3. (*p.*) The pericarp of a lotus, தாமரைப்பூக்கொட்டை. Wils. p. 196. KARNIKA. 4. A flower-bud, பூவரும்பு. (*p.*)

கன்னிகாதானம்—கன்னியாதானம், *s.* Giving a virgin in marriage—one of the thirty-two meritorious acts. See அறம்.

கன்னிகாரத்தினம், *s.* An illustrious virgin.

கன்னிறம், *s.* A kind of shrub, ஓர்செடி, Monetia. (*Phy. Dic.*)

கன்னுவர், *s.* Braziers, bell-founders, கன்னர்.

கன்னுறுகம், *s.* An herb, சிறுகீரை, Amaranthus campestris. (*Phy. Dic.*)

கன்னை, *s.* [*prov.*] A party, a side, party in games, wrestling, fighting, &c., கட்சி.

கன்னைக்கொற்றி, *s.* One who joins with each of the two parties, generally in playing, இருகட்சிக்குமுதவிசெய்வோன்.

கன்னைபிரிக்க, *inf.* To divide a company into two parties for a game

கன்னைமாற, *inf.* To change sides for a new game.

கா

கா. A syllabic letter, the consonant க and long vowel ஆ, ஓரெழுத்து. 2. *s.* A pole with ropes attached on the shoulder, for carrying common burdens, or gifts to a temple, &c., காவடி. (*c.*) 3. (*p.*) A lever or beam for a well-sweep, also the lever of steel yards, scales, &c, துலாக்கோல். 4. A grove, சோலை. 5. A flower garden, பூந்தோட்டம். 6. A poetic expletive, அசைச்சொல்.

இவளிவட்காண்டிகா. See her here. (நன்னூல்.)

காக்காரர், *s.* [*prop.* காவுவோர்.] Bearers of palankeens, pole-burdens, &c., persons who carry burdens suspended from a pole on the shoulders.

காத்தடி — காத்தண்டு, *s.* A pole for carrying burdens, காவடித்தண்டு.

காமரம், *s.* [*prov.*] A pole for carrying on the shoulder, the one used for heavy timber, காவடித்தண்டு.

கற்பகக்கா, *s.* Indra's paradise.

திருவானைக்கா, *s* The name of a celebrated pagoda on the island of Sreerungam near Trichinopoly, *lit.* the grove of the holy elephant.

கா, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To keep, preserve, take care of, பாதுகாக்க. 2. To defend, guard, protect, shelter, save, காப்பாற்ற. 3. To watch, to be vigilant, careful, cautious, விழிப்பாயிருக்க. 4. To keep off, ward off, guard against, காவல்செய்ய. 5. To cherish, வளர்க்க. 6. To expect, wait for, wait in attendance, எதிர்பார்க்க. 7. To keep, observe a fast, a vow, &c., விரதங்காக்க.

வெகுநாளிங்கேகாத்திருக்கிறேன். I have been waiting here many days.

யாகாவாராயினுநாகாக்ககாவாக்காற்சோகாப்பர்சொல்லிழுக்குப்பட்டு. Whatever besides you leave unguarded, guard your tongue; otherwise errors of speech and consequent misery will ensue. (திருவள்.)

பொன்காத்தபூதம்போலே. As a demon watching gold; i. e. an act of no value to any one.

காத்திருக்க, *inf.* To wait, wait for, expect, watch for, look for.

காத்துக்கொள்ள, *inf.* To keep, preserve.

மானங்காத்துக்கொள்ள, *inf.* To preserve one's self-respect, character, dignity.

காவாமல், *neg. ver. part.* [*vul.* காக்காமல்.] Not keeping.

தன்னைக்காக்க—தற்காக்க, *inf.* To keep one's self, to act so as to avoid blame, scandal, &c.

காத்தல், *v. noun.* Defending, guarding, &c.

காப்பு, *v. noun.* Preservation, defence, guard, protection, cherishing, பாதுகாப்பு. 2. Watching, caution, vigilance, காவல். 3. Warding off, guarding against, இரட்சிப்பு. 4. *s.* An amulet, இரட்சாபந்தனம். 5. A bangle or bracelet, கைக்காப்பு 6. A bandage tied round the arm, in token of a vow for hearing a sacred book read at a temple, keeping a feast, &c.—serving also as an amulet for the time, and as a monitory to practise abstinence and other required duties, to abstain from ceremonial pollutions, &c.—also tied on the arms of a newly-married couple for four days, who are to keep apart for this time—also on the candidates for initiation by the Guru, மஞ்சனநூற்காப்பு. 7. The invocation at the commencement of all poems, imploring the protection, aid, blessing of the god worshipped by the author, and often of others, தெய்வவணக்கங்கூறுங்காப்பு. 8. The arm-ring of the Guru, worn on the right arm as an amulet on special occasions, சோமிற்குருவணியுங்காப்பு. 9. A string tied round medical plants with incantations to avert evil effects in their use, மூலிகைக்குக்கட்டுங்காப்பு. 10. (*p.*) A surrounding wall, a fortification, a fence, a hedge, &c., மதில். 11. A door, கதவு. 12. Sacred ashes worn as an amulet, திருநீறு. 13. Clothes, ஆடை.

காப்புக்கட்டில்லாமலெல்லாருமுள்ளேவரலாமா. Is it proper for all to come in without restraint?

அவனுக்குக்காப்புக்கட்டில்லை. He is under no restraint.

உபாத்தியாயரில்லாததனாற்பள்ளியிலேயொருகாப்புக்கட்டில்லை. The master being absent, there is an absence of all restraint in the school.

காப்பரிசி, *s.* The rice held in the hands of a bride and bridegroom.

காப்பவிழ்க்க, *inf.* To loose the string from the arm. In all cases this is done with appropriate ceremonies, and the string is sunk in water representing the Ganges.

காப்பாற்ற, *inf.* To preserve, keep, guard, sustain, காக்க. 2. To defend, save, இரட்சிக்க.

காப்பிட, *inf.* To put arm-rings on children when five days old.

காப்புக்கட்ட, *inf.* To tie a string on the arm in token of a vow, and as a pledge for its performance. 2. To tie on an amulet. 3. To engage in with earnestness, applied chiefly to improper, or unimportant pursuits, and only in colloquial usage. 4. [*in medicine.*] To tie a string to certain herbs, &c., that are to be plucked up in order to dispel a curse pronounced on them. 5. To begin to read a purana at a temple.

காப்புக்கட்டிப்போடுதல், *v. noun.* Making an end of, or dismissing any business, leaving off intermediately.

காப்புக்கரப்பறிதல், *v. noun.* Discrimination in reading, *lit.* ability to understand by the connexion the difference between காப்பு and கரப்பு.

காப்புக்கரப்பறியாமல்வாசிக்கிறான். He reads at random, without discrimination, dividing words wrong, &c.

காப்புச்சொல்லுதல், *v. noun.* Reciting the invocation of a purana at the beginning and end of every day's reading. 2. Reciting the invocation in the last day's reading with special ceremonies. 3. Repeating the recitation of the invocation extempore for such as come late.

காப்புமாலை, s. A poem of three, five. or seven verses in which the protection of the deity is implored, ஓர்பிரபந்தம். See பிரபந்தம்.

சிங்கமுகக்காப்பு, s An arm-ring with a lion's face on the clasp.

மாக்காப்பு, s. Flour water with perfumes, &c., for bathing an idol.

மைக்காப்பு, s. Coloring the writing of an ola book.

எண்ணெய்க்காப்பு, s. Oil for anointing an idol.

மஞ்சட்காப்பு, s. Saffron powder mixed in the water in which an idol is bathed. 2. Coloring the first lesson of a child's book with saffron.

*காகதுண்டம், s. Aloe wood, அகில், Aquilaria agallocha. Wils. p. 206. KAKATUNDA. (p.)

காகநேத்திரி, s. A plant, மணித்தக்காளி, Solanum rubrum.

காகந்துரந்தி, s. A prickly shrub, ஆதொண்டை, Capparis horrida.

காகநதி, s. The Cauvery river. (See காவேரி.) 2. The city called காவிரிப்பூம்பட்டினம். (p.)

*காகபட்சம், s. The side locks of the hair of the head of males, பக்கக்குடுமிகள். Wils. p. 206. KAKAPAKSHA.

காகபதம், s. A portion of time in music equal to two குரு, ஓர்காலவளவு.

காகபாஷாணம், s. A kind of arsenic, ஓர்பாஷாணம்.

*காகம், s. A crow, காக்கை. 2. The sign of the guardian of the north-east, வடகீழ்த்திசைப்பாலன்குறி. Wils. p. 205. KAKA. 3. Mongoose, கீரி. (M. Dic.)

காகங்கரைய, inf. [in augury.] To caw as a crow, prognosticating fortune to the person according to the length of his shadow at the time, காகங்கூவ. See சகுனம்.

காகச்சிலை, s. A load stone, being black, கருமுகிற்சிலை.

காகச்சுக்கான், s. A black marble, கருஞ்சுக்கான்.

காகதாளியம்—காகதாளிநியாயம், s. An unforeseen occurrence, accident; [ex காகம், crow, et தாளி, palmyra fruit, et நியாயம், law.]—a crow lights upon the fruit of the palmyra tree and the fruit falls—a chance, coincidence. Wils. p. 206. KAKATALEEYA.

காகத்துவசத்தாள், s. The goddess of misfortune, மூதேவி, whose banner is the ill-omened crow.

காகநிமிளை, s. Black bismuth, antimony, கருநிமிளை.

காகபலி, s. Food given to crows before eating—being a lump of rice and curry, &c., காகத்துக்கிடுமுணவு.

காகப்புள், s. A crow, காக்கை. 2. The twenty-third lunar asterism, அவிட்டநாள்.

காகவாகனன், s. Saturn the planet, சனி.

காகளம், s. A low and sweet tone, the song of a bird, &c., புள்ளோசை. 2. A trumpet, காளம். (p.)

காகாபிசாசு — காகாவிரிச்சி, s. [prov.] A kind of vampire of black color and dishevelled hair, இரத்தமுண்ணும்வலைப்புநலை.

காகிதம், s. A letter, an epistle, கடிதம். 2. Paper, கடிதத்தாள்.

காகித்தம்—காகித்திரம், s. A medicinal plant, குறிஞ்சா, Tylophora asthmatica.

*காகுத்தன், s. The name of a sovereign, also Puranjaya. 2. Rama in the seventh incarnation of Vishnu, இராமன். Wils. p. 207. KAKUTTHA.

காகுராசி, s. A plant, புடோல். (M. Dic.)

காகுளி, s. Guttural sound, மிடற்றெழுமோசை. 2. The bass in music, மந்தவிசை. 3. Tune, melody, இசை. 4. Cushion, mattress, mat, bed, மெத்தை. 5. Seat, ஆசனம். (p.)

காகூவெனல், v. noun. Weeping aloud, uttering lamentations, crying—as children, ஒலிக்குறிப்பு.

காகொடி, s. A tree, எட்டிமரம், Strychnos nux vomica, L. (M. Dic.)

காகோடகி, s. A medicinal seed, வாலுளுவை. (M. Dic)

காகோடியர், s. Strolling dancers, கூத்தர். (p.)

*காகோதரம், s. A snake, பாம்பு. Wils. p. 207. KAKODARA.

*காகோலம், s. A raven, அண்டங்காக்கை. (M. Dic.). Wils. p. 207. KAKOLA.

காகோளி, s. The Asoka tree, அசோகு. (சது) 2. A tree, கொடிபாசு. 3. A plant, தேட்கொடுக்கி, Heliotropium, L. (M. Dic.)

காக்கட்டான்—காக்கணம், s. A species of creeping plant, கருவிளை, Clitoria ternatea.

காக்கணங்கொடி – காக்கணஞ்செடி —நீலக்காக்கணம், s. A wild creeper with deep blue flowers.

காக்கணங்கொவ்வை, s. A species of creeper. See காக்குறட்டை.

வெள்ளைக்காக்கணம், s. A species of the plant with white flowers.

கருங்காக்கணம், s. A species of the same with dark flowers.

காக்கம், s. The same as குறட்டை plant, Trichosanthes palmata, L. (M. Dic.) 2. The name of a plant, கோவை, Coccinia Indica, L.

காக்கன்போக்கன், s. [vul.] An idle vagrant, தன்மார்க்கன்.

காக்கன்போக்கனாய்த்திரிய, inf. To lead an idle life.

காக்காச்சி, s. [used among fishermen.] A kind of cockle found in tanks, ஓருமச்சி.

காக்காய், s. [prov. காக்கை.] A crow, (c.) 2. (p.) The twenty-third constellation of the Hindus, அவிட்டம்.

காக்காயிலைகண்ணுக்குப்பீர்க்கம்பூப்பொன்னிறம். . The yellow flower of a cucumber plant appears gold to a crow; i. e. trifles are of value in the eyes of a fool.

காக்காய்க்குந்தன்குஞ்சுபொன்குஞ்சு. Even to a crow its young one is regarded as a golden one; i. e. the best.

காக்காய்க்கொல்லி, s. A plant, ஓர்செடி, Anamirta cocculus, or Cocculus Indicus. 2. Jagged moon seed, Menispermum cocculus, L.

காக்காய்ச்சோளம், s. A small kind of grain, ஓர்சோளம்.

காக்காய்ப்பாலை, s. A kind of tree, ஓர்பாலை.

காக்காய்ப்பூ, s. A plant, ஓர்பூடு, smooth torenia, Torenia asiatica. L.

காக்காய்ப்பொன், s. A kind of gold leaf tinsel, cut in small pieces and scattered at weddings and other festivals, போலிப்பொன்.

காக்காய்மீன், s. A kind of fish, ஓர்மீன்.

காக்காய்மூக்கன், s. A man with a sharp aquiline nose.

காக்காய்மூக்கி, s. A kind of arsenic, கருமுகிற்பாஷாணம், lit. crow-beak (nursery usage).

காக்காய்வலி, s. Epilepsy, falling sickness, ஓர்நோய்.

நீர்க்காக்காய், s. A water crow.

அண்டங்காக்காய், s. A raven.

மணியங்காக்காய், s. Royston crow, Cornus cornix, L.

காக்காவெனல், v. noun. Cawing as a crow, ஒலிக்குறிப்பு.

காக்குறட்டை, s. A kind of creeper with large black fruit that becomes red when ripe, காக்கணங்கொவ்வை, Palmated gourd.

காக்கை—காக்காய், s. A crow, காகம். (c.) 2. The twenty-third lunar asterism, அவிட்டநாள். (p.)

காக்கைக்கொடியாள், s. The goddess மூதேவி, whose banner is a crow.

காக்கைபாடினியம், s. A work on grammar, ஓரியாப்பிலக்கணம்.

பெருங்காக்கைபாடினியம்—சிறுகாக்கைபாடினியம், s. Two kinds of the above

காங்கு, s. [vul.] Coarse, blue cloth, நீலப்புடவை. 2. A large earthen pot, பெருமிடா.

*காங்கேயம், s. Gold, பொன். Wils p. 287. GANGEYA. (p.) 2. The name of a country in the west, ஓர்தேசம்.

காங்கேயன், s. A name of Skanda குமரன். 2. Bishma, வீட்டுமாசாரி. (p.)

காங்கை, s. [prop. காய்கை.] Heat (c.)

காங்கையானசரீரம், s. A warm body, sickly body.

காங்கையானபூமி, s. A hot climate

பித்தகாங்கை, s. The predominance of bile in the system.

காங்கையன், s. The name of prepared arsenic, வைப்புநீலப்பாஷாணம்.

*காசம், s. Phthisis, asthma, pulmonic affections, ஈளைநோய். 2. Phlegm, கோழை. Wils. p. 218. KASHA, or 22 KASA. 3. A disease of the eyes, a cataract, affection of the optic nerve, or gutta serena, கண்ணினோய். Wils. p. 207. KACH 4. A country, ஓர்தேசம். 5. Gold, பொன். An arsenic in its natural state, கற்பாஷாணம்.

காசசுவாசம், s. The asthma, சுவாசகாசம்.

காசநீர், s. The humor in the head that causes the disease (See காசம்.) The following are the principal kinds of காசம்—சீர்க்காசம், சுவாசகாசம், கண்கட்டிகாசம், விரணகாசம், பித்தகாசம், இரத்தகாசம், வாதகாசம், சர்ப்பகாசம், சிலேட்டுமகாசம், மந்தாரகாசம், நீலகாசம், பாலகாசம்.

கனகாசம், s. Inflammation of the eyes attended with great swellings.

காசறை, s. Hair ointment, மயிர்ச்சாந்து. 2. Gems, precious stones, மணி. 3. The musk deer, கஸ்தூரிமிருகம். (p.)

காசனம், s. Killing, slaying, கொலை. (p.)

காசனன், s. A killer, கொலைசெய்வோன்.

*காசா, s. The name of a shrub, Memecylon tinctorium.

கண்ணோவுக்குக்காசாம்பூ-றப்போடுகிறது. Applying an embrocation prepared from the above shrub for sore eyes.

காசாம்பாளை, s. A fish, ஓர்மீன்.

காசாம்பூமேனியன், s. Vishnu, விட்டுணு.

காசாம்பூவண்ணன், s. Vishnu, விட்டுணு. 2. Vitriol, துரிசி. 3. A kind of native arsenic, கச்சாலம், காய்ச்சற்பாஷாணம்.

வெண்காசா, s. The name of a shrub bearing white flowers.

காசாண்டி—காசாண்டிச்செம்பு, s. A kind of brass pot with a large mouth, ஓர்வகைச்செம்பு.

*காசி, s. Casi, a celebrated city and place of pilgrimage, the modern Benares, being the most meritorious place for bathing in sacred water, as Ramisseram is for the south of India, ஓர்நகரம். Wils. p. 219. Kashi. 2. The cumin seed, சீரகம்.

காசிகாண்டம், s. One of the sixteen books of கந்தபுராணம்.

காசிக்கங்கை, s. The Ganges at Benares, being more sacred than in other places.

காசிக்கல், s. A loadstone, காகச்சிலை.

காசிச்சாரம், s. A mineral salt, ஓருப்பு.

காசித்தீர்த்தம், s. The water of the Ganges, obtained at Benares and carried about the country by religious mendicants.

காசித்தும்பை, s. A kind of தும்பை plant.

காசிலவணம், s. A kind of salt, ஓருப்பு.

காசிலிங்கம், s. The linga worshipped at Benares.

காசிவாசி, s. A dweller or inhabitant of the city of Benares.

காசிபம், s. A work of காசிபன், one of the eighteen Dharmashasters, தருமநூல்பதினெட்டினொன்று.

*காசிபன—நாசிபப்பிரமா, s. A muni or deified sage; one of the seven transformed into the seven stars or great bear. He was the son of Marichi and father of the Devas by அதிதி and of the Asoors by திதி, ஓர்ருடி. Wils p. 204. Kasyapa.

காசிரம், s. A circle, வட்டம். (p.)

காசிரோர்த்தம், s. A plant, வறட்சுண்டி, Mimosa, L.

காசினி, s. The earth, பூமி. (p.)

காசு, s. Several kinds of coin, cash, money, specie, பணம். 2. Twelfth part of an anna, சிறுகாசு. (c.) 3. (p.) Gold, பொன். 4. Gems, precious stones, மணிப்பொது. 5. Necklaces of gems, மாதரணிவடம். 6. Phlegm, கோழை. 7. Defect, fault, குற்றம். 8. A term in prosody applied to a foot ending in two short syllables, வெண்பாவீற்றிசைசீரொன்று.

காசடிக்க, inf. To coin, mint.

காசுகட்டுதல், v. noun. Playing a game with copper coins.

காசுக்கடை, s. A money-changer's shop.

காசுக்கடைக்காரன், s. One who changes money, a money-changer.

காசுக்கட்டி, s. [prop. காய்ச்சுக்கட்டி.] The juice of young cocoanuts inspissated.

காசுக்காரன், s. A money-changer. 2. A rich man.

காசுமண், s. Red ochre, so called by fishermen.

காசுமாற, inf. To be current—as coin.

காசுமாற்ற, inf. To change money, &c.,

காசுமுத்திரை, s. The impression on a piece of money.

பொடிக்காசு, s. Small pieces of copper coin.

செம்புக்காசு, s. Copper coin.

சல்லிக்காசு, s. Small pieces of copper coin

வெள்ளிக்காசு, s. Silver coin. 2. Several kinds of silver coin.

ஆட்காசு—ஆனைக்காசு—குதிரைக்காசு, s. Names of different kinds of coin, so called from severally bearing the impression of a man, an elephant, and a horse.

பொற்காசு, s. Small kinds of gold coin.

சான்றான்காசு—சாணரக்காசு, s A name of the பொற்காசு, said to have been invented or coined by one of the சான்றார் caste.

*காசுமீரம்—காஸ்மீரம், s. The Cashmere country, ஓர்தேயம். Wils. p. 219. Kashmeera.

காசை, s. A species of grass or rushes, நாணற்புல். 2. A flowering shrub, the காயா. 3. Consumption, க்ஷயரோகம். (p.)

காச்சக்கீரை—காச்சாக்கு—காச்சிரக்கு—காச்சுரை, s. The same as காய்ச்சறுக்குக்கீரை.

காச்சுப்பீச்செனல்—காச்சுமூச்செனல், v. noun. Being noisy, as a family of children and women, ஒலிக்குறிப்பு.

காச்சுமூச்சென்றழ, inf. To cry or weep—as a distressed woman.

காஞ்சம், s. Blue vitriol, துருசி.

*காஞ்சனம், s. Gold, பொன். 2. A tree, புன்கமரம், Pongamia glabra. Wils. p. 208. Kanchana. (p.)

காஞ்சனத்தூள், s. Gold dust, பொன்மணல்.

*காஞ்சனி, s. Turmeric or Indian saffron, மஞ்சள். Wils. p. 208. Kanchanee, or Kanchana. (p.)

காஞ்சா, s. [vul. prop. கஞ்சா.] A plant, Cannabis Indica.

*காஞ்சி, s. The town of Conjeveram, one of the seven sacred cities, ஓரூர். 2. Hasp, hook, காதாங்கி. (c.) (Rott.) 3. (p.) A woman's waist-gridle, consisting of eight strings of beads or bells, எண்கோவைமணி. Wils. p. 208. Kangee. 4. A kind of tree, ஓர்மரம். 5. A garland of the காஞ்சி tree, worn by soldiers in taking up a position. (See வெற்றி.) 6. A mode of singing, ஓர்பண். 7. Unsteadiness, transientness, நிலையின்மை

காஞ்சிமாலை, s. The garland of flowers of the காஞ்சி tree, a poem describing the occupying of a post on the frontiers of an enemy's territory, the soldiers wearing these garlands, ஓர்பிரபந்தம். See பிரபந்தம்.

காஞ்சிகா—காஞ்சிரம்—காஞ்சிரை, s. A very poisonous tree, the எட்டிமரம், Strychnos nux vomica, L. (p.)

காஞ்சினி, s. A plant, மஞ்சிட்டி, Rubia munjista.

காஞ்சுகம்—காஞ்சுகி, s. [as கஞ்சுகம்.] A jacket, சட்டை. (p.)

காஞ்சொறி, s. A kind of nettle, ஓர்செடி, Tragia involucrata, L.

காஞ்சொறிஅப்பிக்கொண்டது. I have been stung with a nettle.

காஞ்சொறிவேர், s. The root of the காஞ்சொறி plant from which a drug is made.

கறுப்புக்காஞ்சொறி—பூனைக்காஞ்சொறி—பெருங்காஞ்சொறி—சிறுகாஞ்சொறி, s. Different kinds of nettle.

*காஷாயம், s. Cloth tinged with red ochre, worn by ascetics and religious mendicants, காவிச்சீலை. Wils. p. 220. Kashaya.

காடகம், s. Cloth, சீலை. (p.)

காடவிளக்கு, s. Lamps formed by putting oil and wicks in large vessels for illumination on great occasions, பெருவிளக்கு. (c.)

காடன், s. A fish, ஓர்மீன்.

*காடாக்கினி, s. A great fire, conflagration, பெருநெருப்பு.

காடாந்தகாரம், s. Thick darkness, கனவிருள்.

காடி, s. Vinegar, புளித்தநீர். 2. Liquids soured by keeping, புளித்தகள். 3. Rice gruel, கஞ்சி. 4. (For.) A trench, ditch, தோண்டுசால். 5. (For.) A cart with a pyramidal top, ஓர்வகைவண்டி. 6. (p.) Ghee, நெய். 7. Pickle, ஊறுகாய். (சது.)

காடியாகப்புளித்துப்போயிற்று. The congee, whey, &c., is become as sour as vinegar.

காடிக்கூழ், s. Sour pap.

காடிச்சோறு, s. Rice taken out of the sour கஞ்சி.

காடியாய்த்தோண்ட—காடிவெட்ட, inf. To scoop, to cut into hollowness or depth.

ஆறுமாதக்காடி, s. Water in which rice has been washed and various ingredients mixed with it, kept six months, to be used medicinally for jaundice, incipient dropsy, &c.

கள்ளுக்காடி, s. Toddy vinegar, sour toddy.

பனங்காடி, s. [prov.] The water in which palmyra stones are steeped and left to become sour, for fermenting the pulp of the fruit next day.

சாராடி, s. [prov. சர்வகாடி] Very strong vinegar.

காடகம், s. Cloth, சீலை. (p.)

காடிக்காரம், s. Lapis infernalis, lunar caustic or nitrate of silver, செய்புக் கல். (M Dic.)

*காடின்யம், s. Great difficulty or hardship, அதிகஷ்டம். Wils. p. 208. KATTINYA. (c.)

காடு, s. An uncultivated tract of land covered with forest-trees, thick, impenetrable brush wood, creeping plants and coarse, rank, reedy vegetation, a waste, a thicket, வனம். 2. Deserts, forest tracts, ஆரணியம். 3. A desert place for burning the dead, சுடுகாடு. 4. (fig.) Excessiveness much, closeness, &c., மிகுதி. 5. Wild, rough, uncultivated, unpolished, &c., used as a prefix—as காட்டுப்பசு. 6. A nominal termination to some words of verbal derivation, தொழிற்பெயர்விகுதி—as சாக்காடு. (c.) 7. (p.) A place, இடம். 8. A border, a limit, எல்லை. 9. A town, ஊர். 10. The second lunar asterism, பரணிநாள். 11. Chaff, straw, &c., செத்தை.

காடுவா வா என்கிறது வீடு போ போ என்கிறது. The time has arrived when the desert says, come, and the house says, go.

இந்த ஊர் காடு குறைந்தது. This village has but little arable land.

காடாய்க்கிடக்க, inf. To be covered with jungle or wood.

நிலம் காடாய்க்கிடக்கிறது. The ground is uncultivated.

காடாய்ப்போக, inf. To become waste, to grow woody.

காடாரம்பட்டு, s. A village situated in a wild tract of land near Vedarniam.

காடாற்ற, inf. To perform the ceremony of quenching the fire where a corpse has been burnt, gathering the remains and taking them in a new pot to some water representing the Ganges, பாற்தெளிக்கடக்குவேபர.

காடுகாட்ட, inf. To deceive, disappoint, lit. to show the place of burning the dead.

காடுபடுதிரவியம், s. The productions of the desert, காட்டிலுண்டாகுந்திரவி யம். See under திரவியம்.

காடுபலியூட்ட, inf. To sacrifice to the sylvan nymphs before hunting, காட்டிலுள்ள தேவர்களுக்குப்பலியிட.

காடுவசாதி, s. [prov. prop. காடுவாழ் சாதி] Savage tribe.

காடுவசாதியாய்த்திரிய, inf. To be slovenly, sluttish, &c., to be careless, negligent of one's dress, &c. 2. To be vagrant, idle, &c., as a child for whom no one cares.

காடுவாரி, s. [prov.] A rake, ஓர் கருவி. 2. One who scrapes up all he can, சேர்ப்பவன். 3. One who resorts to any kind of labor for support.

காடுவாழ்த்து, s. A section of a war poem, extolling the jungle of the sylvan goddess, &c., where the battle occurred, வனதேவதையைவாழ்த்தும்பிரபந்தம்.

காடுவெட்டி, s. A wood-cutter, a savage, an untaught man.

காட்டகத்தி, s. A shrub, வீழி, Cadaba Indica.

காட்டத்தி, s. A species of the அத்தி tree, downy mountain ebony, Bauhinia tomentosa. (Mat. Ind.)

காட்டழல், s. Jungle fire, kindled by the friction of trees, &c., காட்டுத்தீ.

காட்டாள், s. A rustic, rural person, நாகரீகமில்லாதவன்.

காட்டான், s. The wild cow, காட் டுப்பசு. 2. [prov.] Stranger, பிறன்.

காட்டிலேபோக, inf. To be lost, to waste.

காட்டுக்கடலை, s. A small tree or plant, ஓர்செடி, Rough melastoma, (Melastoma aspera) or Indian currant bush. (Mat. Ind.)

காட்டுக்கல், s. A rough hard kind of stone, ஓர்வகைமரக்கல்.

காட்டுக்கீரை, s. Different kinds of wild greens mixed together.

காட்டுச்சீரகம், s. A wild cumin, purple fleabane, ஓர்பூண்டு, Vernonia anthelmintica.

காட்டுச்சீரகவள்ளி, s. An esculent creeper—as காட்டுக்கொடிவள்ளி.

காட்டுச்சேவல், s. The jungle-cock, somewhat different from a woodcock.

காட்டுத்தகரை, s. The wild தகரை plant.

காட்டுத்தனம், s. Rusticity, uncultivated manners.

காட்டுத்தாரா, s. A wild duck. See தாரா.

காட்டுத்தாளி, s. A twining plant, Convolvulus muricatus. See தாளி.

காட்டுத்தினை, s. Wild millet.

காட்டுத்துத்தி, s. A kind of plant, Sida hirta. See துத்தி.

காட்டுத்துவரை, s. A kind of துவரை plant, Glycine parviflora.

காட்டுத்துளசி, s. A wild species of துளசி; which see.

காட்டுநாரத்தை, s. A kind of நாரத்தை tree, பெருங்குருந்து.

காட்டுநெல்லி, s. A kind of நெல்லி tree, Emblica officinalis.

காட்டுப்பயிர், s. Vegetables that grow of themselves, தானாகவிளையும்பயிர்.

காட்டுப்பருத்தி, s. Wild cotton of spontaneous growth.

காட்டுப்பன்றி, s. A wild hog.

காட்டுப்பாகல், s. A kind of பாகல் creeper. See பழுபாகல்.

காட்டுப்பிள்ளை, s. [metap.] A foundling. (Besch.)

காட்டுப்பீ, s. First black excrement of a new-born child, or calf, meconium.

காட்டுப்புத்தி, s. Stupidity, senseless conduct, மூடபுத்தி.

காட்டுப்புளிச்சை, s. Wild sour greens, காட்டுக்கோங்கரை, Hibiscus cannabinus.

காட்டுப்புறா, s. A dove, a turtle-dove, கபோதம்.

காட்டுப்பூனை, s. A species of wild cat, காட்டிற்வாழும்பூனை.

காட்டுமந்தாரை, s. A tree, ஓர்மரம், Bauhinia acuminata, L.

காட்டுமரம், s. Any wild or useless tree, plant, &c.

காட்டுமர், s. A shrub, ஓர்பூடு. See உமர்.

காட்டுமருக்கொழுந்து, s. A wild species of மருக்கொழுந்து, not fragrant.

காட்டுமல்லிகை, s. A kind of wild jasmine, with red blossoms, வனமல்லிகை. 2. Narrow-leaved jasmine, Jasminum angustifolium.

காட்டுமனுஷன், s. A wild man. 2. An uncivilized man.

காட்டுமா, s. The wild mango, வனமாமரம், Carbera manghos. 2. Another wild mango, Spondias mangifera.

காட்டுமாமரம், s. The wild mango tree.

காட்டுமாவிரை, s. The same as காப்பருப்பு.

காட்டுமிருகம், s. A wild beast, வனமிருகம். 2. A wild horse, காட்டுக்குதிரை.

காட்டுமிருகாண்டி, s. [vul. காட்டு மிரண்டி.] A clown, rustic, an awkward ill-bred person, முரடன்.

காட்டுமுருக்கு, s. A thorny wild tree, Erythrina Indica. See முருக்கு.

காட்டுமுருங்கை, s. A small-leaved shrub, வனமுருங்கை, Ormicarpum sennoides. (M Dic.)

காட்டுமுன்னை, s. A shrub, Croton repandum. (Rott.) See முன்னை.

காட்டுவள்ளி, s. A plant with a bulbous root, Discorea bulbifera. See வள்ளி.

காட்டுவாகை, s. A Mimosa tree. See வாகை.

காட்டெருமை, s. A wild buffalo.

காட்டெருமைப்பால். Its milk. 2. The milky juice of the Asclepias gigantea, or gigantic swallow-wort, எருக்கம்பால். 3. The same as கள்ளிப்பால், the milky juice of the Euphorbia tirucalli. 4. The same as கூவைநீறு, the flour of the root of the Curcuma angustifolia, அகருசோசனம்.

காட்டேரி — இரத்தக்காட்டேரி, s. [prop. காடேறி.] A jungle imp, a sylvan nymph, a demoness.

புகைக்காடு, s. A great smoke.

குடிக்காடு, s. Many houses together, a village, town.

பிணக்காடு, s. A field covered with corpses.

பருத்திக்காடு, s. A cotton field.
நெருப்புக்காடு, s. A large fire.
புன்செய்க்காடு, s. High dry land.
புல்லுக்காடு, s. Pasture land.
வெள்ளக்காடு, s. A general flood.
பெருங்காடு, s. Large jungle.
பனங்காடு, s. A thick palmyra grove.
இடுகாடு—சுடுகாடு, s. A place for burying, burning the dead.
சுடுகாட்டுக்குப்போனபிணந்திரும்புமோ. Will the corpse which has been carried to the cemetery ever come back again?
சுடுகாட்டுவைராக்கியம். A good resolution formed on the occasion of a funeral is soon forgotten.
சுடுகாட்டுமணிபொறுக்கி, s. A wild dove. 2. A kind of bird.
சிறுகாடு, s. A low jungle.
கப்பற்காடு, s. A large number of ships, a fleet.
வயற்காடு, s. Paddy field.

காடுகாள், s. A goddess, or the mother of the god Veirava, வைரவன்றாய். (p.)

காடை, s. A quail, Tetrao coturnix. (Ains. Mat. Ind.) the Francoline partridge, குறும்பூழ்.
காடைக்கண்ணி, s. A sort of millet, Indian oats, ஓர்தினை.
காடைக்கழுத்தன், s. A kind of rice, நெல்வகை.
காடைமயிறகு, s. A crest of various colored feathers worn by stage-players.
கட்டுக்காடை, s. A bird resembling a glede.

காட்சி, s. Sight, view, பார்வை. 2. An object of sight, visible appearance, தோற்றம். 3. The manifestation of a deity or the sight of a great personage, தரிசனம். 4. (p.) [in logic.] Perception, evidence of the senses, பிரத்தியட்சப்பிரமாணம். 5. Knowledge, intelligence, ascertainment, அறிவு. 6. [in erotics.] One of the ten அவத்தை, the first view which a bridegroom has of his bride, கைவல்லைநைகாட்சி. 7. (c.) Anomaly, a strange event, அதிசயக்காட்சி.—Note. In the agama logic, seven species of perception are given, viz.: 1 ஐயக்காட்சி, indistinct apprehension, doubt, uncertainty, hesitation. 2. திரிபுக்காட்சி, misapprehension, misconception, optical or mental illusion. 3. விகற்பக்காட்சி, discrimination or knowledge to distinguish things one from another in five particulars, viz.: in name, kind, quality, action, and substance. or matter. 4. பொறிவாயிற்காட்சி, perception of the senses, with the aid of the mental faculties. 5. மனக்காட்சி, or மானதக்காட்சி, ideas formed in the mind of things perceived by the senses. 6. அநுபவக்காட்சி, perception by actual experience or the exercise of the affections towards objects perceived. 7. யோகக்காட்சி, the spiritual perception of the Yoga, or knowledge of events past, present or future, by abstract devotion.—Note 2d. Each of the above has two divisions, one, புறம்—abroad, relating to external or secular affairs; the other, அகம்—at home, to religious affairs.

கண்ணுக்குக்காட்சிகடவுளுக்குங்காட்சி. What is pleasing to the sight is pleasing to the deity—referring to the ornaments of the temple, rich offerings, &c.
கண்ணுள்ளபோதேகாட்சி. Gratify your sight while you can.
காட்சிகொடுக்க, inf. To manifest himself—as a deity.
காட்சிப்பிரமாணம், s. [in logic.] One of the eight modes of ascertaining truth. See பிரத்தியட்சப்பிரமாணம்.
காட்சிப்பொருள், s. Things seen, objects of sight or sense—as distinguished from கருத்துப்பொருள் or mental objects.
காட்சிமறைத்தல், v. noun. Hinderance in seeing or observing any thing. See அஷ்டகுற்றம்.
காட்சியர்—காட்சியவர்—காட்சியார், s. The wise, அறிஞர்.
காட்சியாக, inf. To appear in a vision.
காட்சியுணர்வு, s. The sense of sight, காட்சியறிவு.
காணுக்காட்சி, s. An extraordinary sight, a wonderful occurrence. 2. An ill omen.
திருக்காட்சி, s. A divine meditation.
காரணக்காட்சி, s. A great sight or event which may be the cause of future effects.

*காட்டம்—காஷ்டம், s. Fuel, fire-wood, விறகு. Wils. p. 220. Kashta. 2. The same as வெண்கலம். (M. Dic.) (Rott.)
காட்டாசாரி—காஷ்டாசாரி, s. A carpenter.

காட்டிலுமிழி, s. A kind of large beetle, நாகவண்டு.

காட்டு, கிறேன், காட்டினேன், வேன், காட்ட, v. a. To show, exhibit, display, adduce, manifest, reveal, evince, disclose, set forth, காண்பிக்க. 2. To designate, suggest, சுட்டிக்காட்ட. 3. To describe, define, தெரிவிக்க. 4. To demonstrate, prove, உருபிக்க. 5. To present to an idol, &c., to offer, நிவேதனஞ்செய்ய. 6. To make a display of jewels, &c., தெரியக்காட்ட. 7. To put forth, develop, வெளிப்படுத்த. 8. To reflect an object—as a mirror, water, &c., சாயைகாட்ட. 9. To remind, நினைப்பூட்ட.
காட்டிக்கொடுக்க, inf. To betray, discover a person to his enemies. 2. To accuse one. 3. To teach or shew a person the method of doing any thing.
காட்டிமறைக்க, inf. To tantalize a person, by offering something to him, and snatching it away at the moment he is about to take it.
புகைகாட்ட, inf. To smoke any thing—as plantains, in order to ripen them the sooner.
தெரியக்காட்ட, inf. To show plainly, to demonstrate.
வரக்காட்ட, inf. To send off, despatch.
தேவரீர்வரக்காட்டினதிருபம். The letter which you have despatched. (Besch.)
சொல்லிக்காட்ட, inf. To explain, relate.
தன்னைக்காட்ட, inf. To make one's self known, to make one's character, ability, &c., appear where he is unknown, &c. 2. To make a display. 3. To show one's character, &c., by outward conduct.
சத்தங்காட்ட, inf. To cry aloud.
தூபங்காட்ட, inf. To burn incense.
தண்ணீர்காட்ட, inf. To water sheep, horses, &c.
காட்டல், v. noun. Manifestation. 2. Act of showing or pointing, சுட்டல்.
காட்டில்—காட்டிலும். (with a noun.) Than. 2. (with an infinitive.) As soon as, the moment before, the very instant.
பொழுது போகுங் காட்டிலுமித்திரை யென்ன.... Why do you go to sleep as soon as the sun sets?
அதைக்காட்டிலுமிதுசிறப்பு. This is more beautiful than that.
நான்கொடுக்குங்காட்டிலுமெடுத்தெறிந்துபோட்டுவிட்டான். [vul.] No sooner had I given it to him than he took and threw it away.
அவன்போகக்காட்டில். [in கோயிற்புராணம்.] As soon as he had gone.
விடியுங்காட்டிலும். No sooner had the day broken, than, &c.—
காட்டு, v. noun. Showing, exhibition, presentation, காண்பிக்கை. 2. Example, instance, illustration, demonstration, evidence, உதாரணம். (p.)

*காட்டை, s. A region, a point of the compass, திசை. 2. Time, காலம். 3. A minute portion of time—in tables of time the thirtieth part of a kula or eighteen twinklings of the eye, கலைநுட்பம். 4 Limit, boundary, எல்லை. 5. Point, extremity, top, tip, apex, நுனி. Wils. p. 220. Kashta. (p.)

காணம், s. Horse gram, கொள், Dolichos uniflorus. 2. An oil press, செக்கு. 3. (p.) A measure, as much as will fill the press at once, ஆலை. 4. Gold, பொன். 5. Several kinds of gold coin, பொற்காசு.
காணமாட, inf. To make oil, to work an oil press, செக்காட.

காணி, s. Propriety, right of possession, hereditary right, உரிமை. 2. (c.) Land, நிலம். 3 Landed property, estate, possession, காணியாட்சி. 4. A fractional part, the eightieth part, ஒரெண். 5. [in land measure.] Twenty-four grounds, ஓர்நிலவளவு. See மனை.
காணிமந்தஞ்சேரடுதக்கம். The least delay may occasion the greatest sorrow.
கைலாயங்காணியாகும். He will obtain Kaylasa as his inheritance.
காணிக்காரன்—காணியாளன், s. A landlord, an owner or proprietor of land, காணியாட்சிக்காரன்.
காணித்தாயம்—காணித்தாயவழக்கு, [prov.] A quarrel between relations about land.
காணித்துண்டு, s. A piece or strip of land.
காணிபூமி, s. One's own land.
காணியாட்சி, s. Hereditary right to land, an estate, a kingdom, &c., hereditary land, one's own possession, காணிபூமி.
காணியாட்சியூர், s. An hereditary village or town.

பங்குக்காணி, s. Land shared with others.

செய்கைக்காணி, s. Made land, from tanks, &c., land newly broken up, &c. 2. Well-tilled ground.

நன்கொடைக்காணி, s. Donated land.

பிதிரார்ச்சிதக்காணி, s. Ancestral land, patrimonial estate, all the property acquired before marriage—as முதசொம்.

சிந்துக்காணி, s. Goods and chattels.

முக்காணி, s. A fraction, the three-fifths of a மாகாணி.

உரிமைக்காணி, s. Hereditary land obtained from a near relation.

மானியக்காணி, s. Land granted by government.

அரைக்காணி, s. A half காணி, the one-hundred and sixtieth part.

காணியரைக்காணி, s. A காணி and a half.

பாரம்பரைக்காணி, s. Land possessed from ancestors.

சீதனக்காணி, s. Dowry land.

மாகாணி, s. One-sixteenth.

காணிக்கை, s. A voluntary oblation, commonly in money, gold, fruits, &c. set before an idol to obtain favor, a sacrifice, தட்சிணை. 2. A present to a guru or other great person, பாதகாணிக்கை.

காணிக்கைகொடுக்க, inf. To present an oblation.

காணிக்கைத்தட்டு, s. A salver for receiving gifts.

காணிக்கைப்பொருள், s. A thing presented as an oblation or gift.

காணிக்கைகொண்டுவர — காணிக்கைவைக்க, inf. To place a gift in a salver before an idol.

முடிக்காணிக்கை, s. An offering of the hair of a person's head which has been allowed to grow for a certain time and then shaved off and presented to an idol in fulfillment of a vow.

இராசகாணிக்கை, s. A present to a king.

பாதகாணிக்கை, s. Offerings laid at one's feet.

குருகாணிக்கை, s. A present to a guru.

காண், கிறேன், கண்டேன், பேன், காண, v. a. To see, perceive, behold, view, descry, பார்க்க. 2. To gain sight of a deity, or a great person, the new moon, &c., தரிசிக்க. 3. To find, meet with, ascertain, gain the knowledge of, be aware of, recognize, அறிய. 4. To experience, know, feel, அனுபவிக்க. 5. To discover, invent, originate, சிருட்டிக்க. 6. To think, consider, investigate, ஆராய. 7. To obtain, get, secure, have, derive, பெற. 8. To know the truth, perceive the deity in the vedas and other sacred writings, உண்மையுணர. 9. (p.) To worship, venerate, reverence, honor, do obeisance, வணங்க. 10. To cause, do, effect, செய்ய. 11. To understand fully or perfectly, to have clear perceptions, தெளிய. 12. To perceive by any of the senses, see, hear, feel, &c., பொறியுணர. 13. v. n. To seem, prove, to be, to be found, to appear, தோன்ற. 14. To be sufficient, to amount to—as profit, &c., போதும். 15. To appear, become visible, evident, &c., வெளிப்பட. 16. To accrue, result—as profit, &c., பலன்பட. 17. (p.) To exist, subsist—as a quality, &c., உண்டாக.

கண்டதுகாணப்பண்ணாதே வெட்டு. Strike the bushel as it comes, don't be exact.

கண்டதைக்கொண்டு போதும். Be content with what you get as profit, produce, &c.

கண்முன்னொருசொல்லும் பின்னொருசொல்லும் சொல்லுவான். One thing before the face and another behind the back.

குளிர்ந்த கதிரவன் கண்ட இருள்போல். Like darkness at the approach of the sun.

பகுத்துக்கண்டு. Distributing it into parts.

சூடுகண்டால் உருகும். It will melt if it feel the heat.

துலக்கிய விளக்குபோல ஒளிகண்டார். Behold! a light as bright as a fresh trimmed lamp.

அதொன்றுமில்லை கண்டாயா. I have none, did you not see.

முன்னோர்கண்டது முதனூலாகும். What the first author made is original.

காணக்கொடுத்து — காணக்கொண்டு கொடுத்தல். Giving and taking in sufficient quantity.

காணாதபடிக்குக்கொடுத்தார். He gave hardly enough. The gerund corresponds with the word "seeing," அவர்குருவானபடியினாலே அவர்சொற்கேட்கவேண்டும். Seeing he is a Guru, we must pay deference to his words.

காண்பேடி. Hear, my female friend—spoken by a lady.

அதுசெலவுக்குக்காணும். That will be sufficient for the expense.

சோற்றைக்காணக்காண அவனுக்குத்திமிர் கொள்ளுது. The more rice he gets, the more proud and insolent he becomes.

தொகையைக்காணல். Squaring a number.

புன்செய்நன்செய்காணல். Distinguishing the difference between the soils nanja and punja.

காட்டைநாடாக்காணல். Transforming a forest to a city.

கண்டபடியெல்லாந்திரிய, inf. To wander about, to rove.

கண்டபடிசெய்ய, inf. To act at random, rashly, &c.

கண்டபலன், s. The profit realized.

கண்டுகொள்ள, inf. To meet, visit.

கண்டுங்காணாமை, s. Connivance.

கண்டுசந்திக்க, inf. To visit.

கண்டுசாய்ப்பாய்விட்டுவிட, inf. To connive at, wink at a thing.

கண்டுசெய்ய, inf. To imitate.

கண்டுதரிசிக்க, inf. To view, discern by the sight.

கண்டுபாவிக்க, inf. To imitate, copy, imagine.

கண்டுபாவனை, s. Acting by mere imitation.

கண்டுபிடிக்க, inf. To find, discover, detect, explore.

கண்டுமுதல், s. Produce in kind —as பத்துமரக்கால்விதை பத்துமரக்கால் நூறுமரக்கால் கண்டுமுதல், ten maracals of seed will yield one-hundred maracals.

கண்டுமுதல்பண்ண, inf. To collect revenue personally.

கண்டெடுக்க, inf. To pick up, find and pick up.

கைகண்டது, s. That which was experienced, ascertained by practice, tested, proved—as கைகண்டமருந்து, கைகண்டபரிகாரம், கைகண்டதிலை.

காணப்பட, inf. To appear, to be perceived, seen.

காணப்படாத, rel. part. Invisible.

காணப்படாதது, appel. n. That which is invisible.

காணப்பட்டது, appel. n. That which is visible.

காணப்போக, inf. To visit one.

காணாக்கடி, s. An unseen bite, sting, &c., the bite, &c., of a reptile, in the dark, அறியாக்கடி.

காணாக்கிரகம் — காணாக்கோள், s. Rare phenomena in nature, unseen planets, real, or imaginary, &c., சாக்ஷாத்தோசம்.

காணாத்தானம்—காணாத்தலம், s. The privities, genitals, உறுப்பு.

காணாமற்போக—காணாமற்போக, inf. To be lost.

காணாமற்றிருடினவன், appel. n. One who has taken a thing slyly, clandestinely.

காணாமை, s. Invisibility.

காணார், appel. n. Enemies—those who will not bow, பகைவர்.

செய்கைகாண, inf. To be newly cultivated, or cultivated anew, as land.

உண்மையைக்காண, inf. To discover, perceive, or understand the truth, especially divine truth.

ஈரங்காண, inf. To become moist —as a floor, land, &c.

ஈரங்கண்டால்முளைக்கும். If it feel the moisture, the seed will sprout.

ஈரங்கண்டபூமியில் நடக்கப்படாது. If the ground becomes wet, one cannot walk well.

காணும், (the future of காண் in the third pers. neuter.) This form, in colloquial use, is equivalent to sir. 2. In poetry, it is often expletive.

போங்காணும். Go, sir.

செல்வநில்லாதுகாணும். Wealth is unstable. (நாலடி.)

அப்படியில்லைகாணும். It is not so.

காண். An expletive of the second person, முன்னிலையசை.

காண்டக்க, rel. part. Beautiful, graceful, as காணத்தக்க.

காணல்—காண்டல், v. noun. Seeing, காட்சி. 2. Appearance, தோற்றம். 3. Reverence, வணக்கம். 4. The act of obtaining, பெறுதல்.

காண்பிக்க, inf. To cause to see, to convince, காட்ட. 2. To show, exhibit, evidence, display, represent, தெரிவிக்க. 3. To point, direct, சுட்டிக்காட்ட.

காண்பித்துக்கொள்ள, inf. To chide, reprimand, blame, reprove.

காண்பித்தல், v. noun. Showing, காட்டல்.

காண்டகம், s. Jungle, desert, woods, காடு. 2. A town, village, &c., ஊர். 3. Sickness, malady, disease, நோய். 4. A pot with a spout, ewer, கெண்டிகை. 5. A medicinal plant, நிலவேம்பு, Justicia, *L.* (*M. Dic.*) (*p.*)

காண்டம், s. Boundary, limit, எல்லை. 2. End, extremity, முடிவு. 3. A water-pot, கமண்டலம். 4. Jungle; a desert, a wild, காடு. 5. Cloth, சீலை. 6. Curtains, திரைச்சீலை. 7. Musical instrument, வாச்சியம். 8. Instruments in general, கருவி. 9. A hill or mountain, மலை. 10. A jewel-box, ஆபரணச்செப்பு.

*காண்டம், s. Chapter; a large division of a subject in epic poems, the Vedas, &c., நூலின் ஓர் பிரிவு. 2. Water, நீர். 3. An arrow, அம்பு. 4. A horse, குதிரை. 5. Opportunity, season, சமயம். 6. A stem, stalk, தாள். 7 Sacred water, தீர்த்தம். 8. A weapon in general, படைக்கலம். 9. A staff, a rod, கோல். 10. A collection, multitude, an assemblage, திரள். 11. A medicinal plant, நிலவேம்பு Justicia, *L.* 12. A kind of arsenic in its natural state, சாகாண்டபாஷாணம்.

புராதனகாண்டம், s. [*in Roman Catholic usage.*] Old Testament.

பச்சிமகாண்டம், s. [*in Roman Catholic usage.*] New Testament.

காண்டல், v. noun. [*in logic.*] Sensation, perception, observation. It is divided into வாயிற்காண்டல், மானதக்காண்டல், வேதனைக்காண்டல் and யோகக்காண்டல். (சிவ. சி.) See under காண்.

*காண்டவம்—காண்டாவனம், s. A forest sacred to Indra, இந்திரன்வனம். Wils. p. 273. Khandava.

காண்டவதகனம், s. Conflagration of the காண்டவம் forest.

காண்டாவனமெரித்தோன், s. Arjuna, as the burner of the காண்டாவனம் forest, அருச்சுனன்.

காண்டவனன்—காண்டாவனன், s. Indra, as the owner of காண்டவம் forest.

காண்டாவனாரி, s. Arjuna, as the destroyer of காண்டாவனம், அருச்சுனன்.

காண்டாமிருகம், s. (*Sans. Ganda.*) The rhinoceros, unicorn, ஓர்மிருகம்.

காண்டாமிருகரத்தம், s. Dragon's blood, a resin of Calam Draco, *L.*

காண்டிகை, s. A compendious commentary, ஒருரை. See உரை.

கூம்பு, கிறது, கூம்பினது, ம், கூம்ப, v. n. To close conically, to close—as a flower, குவிய. 2. To contract itself, to shrink, ஒடுங்க. (Compare the verb கும்பு.) 3. To close—as the mind, excluding worldly things, மனமடங்க.

கூம்பிக்கொண்டிருக்க, inf To sit down close and motionless—as a bird at roost.

கூம்பல், v. noun. Closing up, &c., குவிதல். 2. Shrinking, &c., ஒடுங்குதல்.

கூரணம், s. A plant—as கூரம், கோடகசாலை. (M Dic.)

கூரம், s. A winding plant whose bitter fruit is used in cookery, பாகல். Momordica charantia, L.—as கூலம். (சது.) 2. A town, ஓரூர். 3. The கோடகசாலை plant.

கூரத்தாழ்வார், s. One of the Vaishnava disciples of Ramanujachariar.

*கூரம், s. Envy, jealousy, பொறாமை. 2. Cruelty, severity, கொடுமை. Wils. p. 258. Kroora.

கூரல், s. A woman's hair, பெண்மயிர். 2. Feathers, புள்ளிறகு. [an elongation of குரல்.] 3. A large fish, from whose intestines a glue, called பசை, is made, தூமை மீன். (Beschi.)

கூரன், s. A dog, நாய் (from Sans. Kukura.) 2. A kind of paddy. See under கூர்.

கூரிலவணம், s. Salt produced from urine, மூத்திரவுப்பு.

கூரை, s. A sloping roof, commonly thatched or covered with olas, வீட்டின்கூரை. 2. (சிக.) A hut, a shed, சிறுகுடில்.

கூரைக்கட்டு—கூரைவீடு, s. A thatched building.

கூரைதட்ட, inf. [prov.] To tap the roof in joy—as the uncle or other friends when a male child is born.

முன்கூரை, s. The front slope of a roof.

மேற்கூரை, s. The roof of a house.

கூர், s. Point, sharp point; tip, apex. 2. [prov.] The fibre or rib of the leaf of the margosa, tamarind, and some other trees, இலைக்காம்பு. 3. Awn or beard, நெல்முதலியவற்றின்கூர். 4. Pungency, காரம். 5. Sharpness of edge—as கூர்மை. 6. (fig.) The quality of being pointed; cutting or sarcastic discourse; keenness, குத்தலானபேச்சு.

கூராக, inf. To become sharp.

அவனுக்குப்புத்திகூராயிருக்கவில்லை. His intellect is not sharp.

கூர்மழுங்கிப்போயிற்று. The point or edge is blunted.

கூராக்க, inf. To whet, to sharpen.

கூராம்பாய்ச்சி—கூராம்பிளாச்சு, s. [prov.] A kind of pointed wooden shovel or stick for digging and loosening the earth; also, for other uses.

கூர்சீவ, inf. To make pointed, to sharpen, கூராக்க. 2. [local.] To provoke, exasperate, மூட்டிவிட.

கூர்சீவினபாக்கு, s. [local.] A scraped betel-nut.

கூர்வாங்க, inf. To sharpen. (Rott.) 2. To hew or forge into a point.

முட்கூர், s. The prong, tine or tooth of a fork, trident, &c.

இரட்டைக்கூர், s. A double or split point.

கூரன், s. A bearded kind of rice.

கூர்க்கறுப்பன், s. A bearded kind of rice of a superior quality.

கூருரை, s. Sarcastic expressions.

கூர், adj. Intense, excessive, abundant, copious, மிகு.

கூரிருள், s. Intense darkness.

கூரொளி, s. Intense light.

கூர்—கூர்ந்து, கூரும், கூர்க்க, கூர. v. n. To be sharp—as the edge or point of an instrument, ஆயுதமுதலியனகூர்மையாக. 2. To become keen, acute, brilliant—as the intellect; to be sagacious, clever, penetrating, புத்திகூர்மையாக; [ex கூர், sharpness.] 3. To be abundant, copious, excessive, மிக; [ex கூர், abundant.]

கூர்ந்தபுத்தி, s. Sharp wit, quick perception.

கூர்ந்துபார்க்க, inf. To look with a sharp eye, to look intently.

கூர்ப்பு, v. noun. Intenseness of passion; keenness of the faculties or senses; copiousness, abundance, excessiveness; greatness, eminence, உள்ளதுசிறக்கை.

நினைவுகூர, inf. To remember.

கூர், க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To be salt, brackish, harsh, உவர்க்க. 2. (சங்கடி) To be enraged, to become furious, சினக்க. Compare the verb குரு.

கூர்ப்பு, v. noun. Brackishness, saltness; astringency.

கூர்கேவு, s. White mustard, வெண்கடுகு. (M. Dic.)

கூர்ச்சம், s. [local.] A small-sized post, used in building, கால்.

* கூர்ச்சம், s. Sacrificial grass, தருப்பை. (சது.) 2. Sacrificial grass, tied together for an offering, தருப்பைக்குச்சம். Wils. p. 239. KOORCHCHA.

* கூர்ச்சரம், s. The Guzerat country—as குச்சரம், ஓர்தேசம். Wils. p. 294. GURJJARA.

* கூர்ச்சரி, s. A tune, personified as one of the consorts of the masculine tune மாளவி. Wils. p. 294. GURJJAREE.

* கூர்ச்சு, s. [improp. கூச்சு.] A sharp pointed stick, a stake—as குச்சு. Wils. p. 239. KOORCHCHA.

கூர்ச்சுக்கட்டையாய்ப்போயிற்று. [local.] The pointed stick is become blunt.

கூர்த்திகை, s. Arms or instruments in general, ஆயுதப்பொது. (சது.)

* கூர்ப்பரம், s. Elbow, முழங்கை. Wils. p. 239. KOORPPARA.

* கூர்மம், s. A tortoise, a turtle, ஆமை. 2. The second incarnation of Vishnu, as a tortoise, ஆமையவதாரம். Wils. p. 239. KOORMMA. 3. One of the ten Puranas in honor of Siva, ஓர்புராணம்.

கூர்மராசன், s. The king of turtles, fabled as supporting the earth, ஆதிகூர்மம். Wils. p. 239. KOORMMARAJA.

* கூர்மன், s. One of the ten vital airs; that which causes horripilation, and winking, தசவாயுவிலொன்று. (சது.)—Note. According to some, it produces bending, stretching, gaping, &c.

* கூர்மாண்டர், s. A Rudra or manifestation of Siva, being the chief of a class of Rudras in one of the lower regions. The name is sometimes applied to the whole class, நரகவுருத்திரர். (from Sans. Kushmanda.) (கந்.)

கூர்மை, s. [adjectively கூர், by elision.] Keenness, sharpness, point, கூர். 2. Sharpness of sight or intellect, penetration, acuteness, subtility, wisdom, நுண்மை.

கூருகிர், s. A sharp nail, pin, &c.

கூரியது, s. That which is sharp.

கூர்க்கொம்பு—கூர்ங்கொம்பு, s. A sharp-pointed horn.

கூர்ங்கணை—கூரம்பு, s. A sharp arrow.

கூர்ங்கண், s. Sharp, piercing eyes.

கூர்மூக்கு, s. A sharp-pointed nose

கூரெயிறு, s. A sharp tooth. (p.)

கூரியபுத்தி, s. Sharp intellect, penetration.

கூரியன், s. A sharp, clever person, கூர்மையுள்ளவன்.

கூர்மைகாட்ட, inf. To show acuteness of intellect.

கூர்மைபார்க்க, inf. To try the sharpness of an instrument. 2. To try one's ability.

கூர்மைமழுங்க—கூர்மழுங்க. inf. To be blunted—as a point, or an edge. 2. To be blunted—as the intellect; to become obtuse.

கூர்மையாய்ப்பார்க்க — கூர்ந்துபார்க்க, inf. To look intently. 2. To look or examine carefully.

கூர்மையில்லோன். s. A stupid person; one of obtuse intellect.

கூர்மையின்மை, s. Dullness of intellect.

கூர்மையானபேச்சு, s. Subtle, accurate language, not easily controverted; wise discourse.

கூர்மைக்கரிவாள், s. Soap, சவர்க்காரம்.

கூலம், s. Stores, goods, பலபண்டம். 2. Street of shops and stalls; bazaar, கடைவீதி. 3. A kind of pulse, the காராமணி. 4. (சிக.) The பாகல் creeper. 5. The tail of a quadruped, விலங்கின்வால். 6. A monkey, குரங்கு. 7. The red monkey, முசு. 8. An elk மரை. (சூ.) 9. Cow, பசு.—Note. In நெடுந்தொகை are given ten kinds of கூலம், stores, grain. (p.)

* கூலம், s. A bank of a river, tank, &c., புனற்கரை. 2. The sea-shore, கடற்கரை. 3. An embankment, a mound, bank, dike; the ridges in rice-fields, வரம்பு. Wils. p. 239. KOOLA.

கூலி, s. Hire, wages, pay; daily pay, சம்பளம். 2. Fare, freight, வண்டிமுதலியவற்றின்கூலி. 3. Rent, commonly in composition—as குடிக்கூலி. 4. A hired servant; a cooly, கூலிக்காரன்.

கூலிக்காரன்—கூலியாள், s. A day-laborer, a hired man, a cooly.

கூலிக்குப்பிடிக்க, inf. To hire.

கூலிக்குமாரடிக்க, inf. To beat the breasts for pay—as women at a funeral; i. e. to do a thing for form's sake, insincerely.

கூலிப்பாடு—கூலிப்பிழைப்பு, v. noun. Hired labor; maintenance by day-labor.

* கூவம், s. A well, கிணறு. Wils. p. 239. KOOPA. 2. The name of a place, sacred to Siva, சிவஸ்தலங்களிலொன்று.

கூவநூல், s. The science of determining by astrology, or otherwise, the proper places for digging wells, கிணறுதோண்டுஞ்சாஸ்திரம்.

கூவநூலோர், s. Persons, acquainted with the above science. See உவ்வியர்.

கூவலர், s. [in இவர், கூவர்.] The learned, the literati, நூல்வல்லோர். (p.)

* கூவல், s. A well, கிணறு. Wils. p. 239. KOOPA. 2. A hollow, a hole, a pit, குழி. See under கூவு.

கூவியர், s. Cooks, மடையர். (சிக.)

கூவிரம், s. [as கூவிளம்.] The வில்வம tree.

•கூவிரம், *s.* [*prop.* கூவரம்.] A chariot or car, தேர். 2. The hemispherical top or upper part of a car, தேர்க்கொடிஞ்சி. 3. The streamers or banners of a car, தேர்ச்சீலை. Wils. p. 240. KOOVARA.

•கூவிரி, *s.* [*prop.* கூவரி.] A car, a chariot, தேர். Wils. p. 240. KOOVAREE.

கூவிளம், *s.* The வில்வம் flower tree. 2. [*in prosody.*] A term for a certain metrical foot. See சீர்.

கூவிளம்பத்திரி, *s.* The leaf of the கூவிளம் tree.

கூவிளி, *s.* Cry, whooping, கூவுகை; [*ex* கூ, *et* விளி.] (*p.*)

கூவிளிகொள்ள, *inf.* To cry, to whoop, to halloo. 2. To call aloud for aid. 3. To call one out, to challenge.

கூவிளை, *s.* The வில்வம் tree, yielding a good fruit.

கூவு, கிறது, கூவினது—கூயிற்று, ம், கூவ, *v. n.* [*in the gerund, it is sometimes* கூய் *instead of* கூவி.] To crow—as a cock, சேவல் முதலியனகூவ. 2. To coo, to sing, to warble—as birds; to scream—as a peacock, பறவை யொலிக்க. 3. *v. a.* To call, to whoop, to halloo, கூப்பிட. 4. (*p.*) To utter, proclaim, சொல்ல. 5. *v. n.* To scold at, to brawl, அதட்ட. 6. To cry—as a child; to bawl, அழ. In poetry, like other similar words, it makes the past in கூவியது, கூவினது and கூயது.

குயிலகூவினாற்போல். Like the warbling of the குயில் bird.

இமெபியைக்கூவிக்கொண்டுசென்றான். He repaired to the place, calling இமெபி. (பார.)

கூவுவான், *s.* The cock; *lit.* the crower.

கூவல்—கூப்பு, *v. noun.* Crying aloud, bawling, crowing, calling, &c.

கூழம், *s.* The எள்ளு grain. (*M. Dic.*)

கூழன்—கூழன்பலா, *s.* [*prov.*] A kind of jack-tree with pulpy fruit, ஒர்பலா; [*ex* கூழ், pap.]

கூழா, *s.* [*prov.*] A kind of fruit-tree with leaves like those of the oak, ஈருவிலிமரம்; [*ex* கூழ்.]

கூழாங்கல், *s.* A small pebble, a gravel-stone, சோளக்கல்.

கூழாமணி, *s.* A shrub—as கூழ்முன்னை.

கூழான். *s.* The sálagráma-stone, கண்டகிக்கல். See சாலக்கிராமம்.

கூழை, *adj.* Bob-tailed; shortened, or naturally defective; truncated, கடையின்மையான. 2. (*fig.*) Dull, stupid, shallow, weak in intellect, புத்திக்குறைவான. Compare குள்ளம்.

புத்தியிலேஅவன்மெத்தக்கூழை. He is very shallow in wit.

கூழைக்கடா, *s.* A large kind of water bird; the pelican, சீவாழ்பறவையிலொன்று. 2. A he-buffalo without a tail.

கூழைக்கை—கூழங்கை, *s.* Maimed hand, குறைக்கை.

கூழைக்கொம்பன், *s.* An ox with blunt horns.

கூழைநரி, *s.* A short-tailed fox.

கூழையன், *s.* A short, stinted, shabby person. 2. A logger-head, a booby, மடையன்பிரமாணி.

கூழைமுட்டை, *s.* Rotten eggs. (*Rott.*) Compare கூழ்முட்டை.

கூழைவால், *s.* A bob tail.

கூழை, *s.* [*the proper spelling would be* கூலை; *from Sans. Koola.* Wils. p. 239.] The rear of an army, படையின்பின்னணி. 2 Division of an army, படைவகுப்பு. 3. Feathers, plumage, இறகு (Compare கூரல்.) 4. Women's hair, பெண்மயிர். 5. Peacock's tail, மயிற்றோகை. [*ex* கூலம், tail.] 6. [*an elongation of* குழை, *mire.*] Mud, mire, சேறு. 7. [*ex* கூழ், gold.] Gold, பொன். 8. (*சது.*) Middle, centre, நடு. 9. A kind of snake, ஓர்பாம்பு 10. Deficiency, that which is cut short, a stump, கடையின்மை. 11. [*in prosody.*] A kind of rhyme, தொடை, occurring in every foot except the last of a line; in the இயைபு rhyme, in every foot except the first; comprising five species, viz.: கூழைமோனை, கூழையியைபு, கூழையெதுகை, கூழைமுரண், கூழையளபெடை. See under தொடை.

காற்றாடிக்குவால்கூழையாய்ப்போயிற்று. The tail of the paper kite is too short.

கூழையாய்ப்போக, *inf.* To grow blunt.

கூழைத்தொடை, *s.* The கூழை class of rhyme.

கூழைப்படை, *s.* The rear of an army.

கூழ், *s.* Thick gruel, porridge, pap, or any food of similar consistency, மாவிலாக்கமைத்தவுணவு. 2. Boiled rice, சோறு. Wils. p. 239 KOORA. 3. Grain in the field, commonly the green growing crop, பயிர். 4 Gold, பொன். 5. *adj.* Wils. p. 310. GHOORA. Rotten, decayed, கூழை.

கூழ்குடிக்கிறதிலுங்கூட்டாகாது. Partnership is undesirable even in drinking gruel.

பைங்கூழ்களைகட்டதனொடுநேர் Resembling the weeding of green corn.

கூழ்காடிபேறுபெற்றிடினும். Though கூழ் and காடி be obtained.

கூழுக்குப்பாடி. The authoress ஔவை, because she once sung her verses for a cup of pap. 2. One who flatters, or dances attendance for a little food; a mean, cringing person, இச்சகம்பேசுகிறவன்.

கூழாமட்டி, *s.* A dull, cowardly man.

கூழாம்பாணி, *s.* [*prov.*] Treacle, molasses, dissolved sugar, &c., கூழ்போல்வது; [*ex* கூழ், pap, *et* பாணி.]

கூழாய்ப்போக, *inf.* To be boiled too much—as rice. 2. To become pulpy. 3. To become addle—as eggs.

கூழ்ப்பசை, *s.* Rice-congee for starching clothes, for paste, &c.

கூழ்ப்பானை, *s.* A pap-pot.

கூழ்முட்டை, *s.* Addle eggs.

கூழ்முன்னை, *s.* A shrub whose leaves are used for greens, ஓர்கீரை, Premna cordifolia, *L.*

கூழ்வரகு, *s.* A kind of grain, கேழ்வரகு, Cynosurus, *L.*

கூளம், *s.* Flakes or broken pieces of straw, hemp, &c., chaff; rubbish of straw, &c., குப்பை. 2. [*prov.*] Grounds, settling, sediment, lees, dregs, chips, சிப்பி.

குப்பையுங்கூளமும், *s.* Sweepings and chips.

வைக்கோற்கூளம், *s.* Broken pieces of straw.

கூளி, *s.* A devil, an imp, பேய். 2. A dwarfish, ill-formed race of imaginary beings; the hordes that form the armies of Siva. (Compare குள்ளம்.) 3. Strength, force, வலிமை. 4. A covering bull, பொலியெருது. 5. Ox, எருது. 6. A large species of eagle, பெருங்கழுகு. 7. Relationship, connexion, சுற்றம். 8. Company, multitude, தொகுதி. 9. (பல.) Fault, defect, குற்றம். 10. [*prov.*] Dwarfishness, shortness—as குள்ளம்.

கூளியர், *s.* Soldiers, warriors, படைவீரர். 2. Hunters, barbarous tribes, வேடர்; [*ex* கூளி, strength.]

கூறு, *s.* Part, portion, share, subdivision, பங்கு 2. The natural, chemical, or anatomical parts of a man or other animal; component, original parts, or principles of material existences, இயற்கைக்கூறு 3. Modification and diversities in the forms of bodies; varied evolutions of primitive matter, விகாரத்தன்மை. 4. Section, division, department, பகுதி. 5. The properties, qualities or nature of a thing; characteristic symptoms of a disease, கூறுபாடு. 6. Effect, result, product, காரணகாரியங்களின்வகை; [*ex* கூறு, to shorten by division, &c.] 7. *v. noun.* Proclamation, publication, அறிவிக்கை; [*ex* கூறு to proclaim.] 8. *s.* Oily grain, எள்ளு. (*M. Dic.*)

முழுக்கூறும்வேண்டும். I want it all.

கூறிட—கூறுசெய்ய, *inf.* To cut in two, bisect, subdivide. 2. To set in portions or small quantities.

கூறுகூறாக்க, *inf.* To cut or separate into portions; to apportion.

கூறுவைக்க, *inf.* To set in portions or separate quantities, to distribute and set in small heaps—as a retailer for sale.

கூறுகொள்ள, *inf.* To stuff, cram, press any thing down with a stick, the feet or the hands.

குழந்தை மண்ணைக் கூறுகொள்ளுகிறது. The child eats sand.

சோற்றைக்கூறுகொள்ளுகிறான். [*prov.*] He thrusts rice into his mouth.

கூறுபட, *inf.* To be divided or resolved into its primitive elements.

கூறுபடுத்த, *inf.* To analyze, to distribute. 2. To resolve or reduce bodies into their original parts or primitive elements; to produce the varied transformations of nature.

கூறோலை—கூற்றோலை, *s.* An ola-writing for the division of property among heirs

தையிற்கூறு, *s.* The latter part of January.

நடுக்கூற்றிலே. In the middle; in the middle part.

மாசிமுற்கூறு, *s.* The first part of February.

அக்கினியின்கூறு, *s.* The effects of heat in the system, &c. 2. Heat, caloric.

சரீரக்கூறு, *s.* The temperament of the body. 2. The component anatomical parts of the body.

நேர்கூறு, *s.* A proper quantity in composition, mixture, &c.

மூலக்கூறு, *s.* The radical parts of a substance. See மூலம்.

வாயுவின்கூறு, *s.* The component parts of atmospheric air. 2. The effects of the vital airs on the system, or the powers derived from them, viz. walking, running, standing, sitting, &c.

வியாதியின்கூறு. On account of, or occasioned by, the disease.

கூறு, கிறேன், கூறினேன், வேன், கூற, *v. a.* To cry aloud, publish, promulgate, proclaim. பிரசித்தஞ்செய்ய. 2. To cry—as an auctioneer, a herald, a crier of goods, &c., விலைகூவிக்கூற 3. To speak, say; to declare, assert; to answer, சொல்ல. 4. (*சது.*) To sell by auction. விற்க.

பழிகூற, *inf.* To blame, censure, scold, abuse, reproach.

கூறியதுகூறல், *v. noun.* Tautology—one of the ten faults in a literary composition. See குற்றம் under குற்றம்.

கூறியான், *s.* [*prov.*] The headman of the Chiviar caste or palankeen bearers. —*Note.* The name may be derived from his proclaiming before the palankeen the titles of the great person whom he carries.

கூறுபாடு, *v. noun.* Portion, division, share, section, பங்கு. 2. Subdivision, classification, பிரிவு. 3. Diversified forms of matter. 4. Results, effects. 5. Constituents or component parts; quality or nature, தன்மை; [*ex* கூறு, portion.]

உடற்கூறுபாடு, *s.* The temperament of the body. See under உடல்.

கூறை, *s.* Cloth, clothes, garments, சீலை. 2. The cloth given by the bridegroom to the bride, commonly on the day of marriage, கூறைச்சேலை.

கூறைகொடுக்க, *inf.* To give the wedding cloth, as part of the marriage ceremony.

மந்திரக்கூறை, *s.* A consecrated garment.

முக்காட்டுக்கூறை, *s.* A garment which the parents give to the bride to cover her head.

கூறைப்பாய், *s.* A canvas-sail.

கூற்றம்—கூற்றன்—கூற்றுவன், *s.* A name of Yama, யமன். 2. A deadly foe, a fierce enemy, கொடியசத்துரு; [*ex* கூறு, division.] (*p.*)

கூற்று, *v. noun.* Declaration, proclamation, கூறல். 2. Word, speech, சொல்; [*ex* கூறு, say.] 3. *s.* A name of Yama; *lit.* the separator of soul and body; the arbiter, யமன். 4 The minister and attendant of Yama, காலன்; [*ex* கூறு, division.] (*p*)

கூற்றையுதைத்தோன், *s.* Siva, who kicked Yama, சிவன்.

கூனல், *v. noun.* (*substantively; from Sans. Koona.*) Crookedness, curvature, வளைவு. 2. A hump-back, கூனல்முதுகு 3. A chank, a conch, சங்கு. 4. A snail, நத்தை. 5. The crescent moon, பிறைச்சந்திரன்.

கூனற்கிழவன், *s.* A bent old man.

கூனற்சங்கு, *s.* A curved chank.

கூனற்பிறை, *s.* The crescent moon.

கூனு, கிறேன், கூனினேன், வேன், கூன, *v n.* (*from Sans. Koona.*) To curve, to become crooked, to bend down, கோண. 2. To be hump-backed, முதுகுவளைய. 3. To contract, close—as the tortoise, the snail, &c., ஒடுங்க.

கூனிப்போக, *inf.* To become hump-backed. 2. To be bent, by age.

கழுத்துக்கூன, *inf.* To bend—as the neck, to stoop.

கூனை, *s.* An oblong, earthen sugar-boiler. கருப்பஞ்சாறுகாய்ச்சி. 2. A hole for the sacrificial fire, வேள்விக்குண்டம். (*சது.*) 3. [*local.*] A watering basket, கொடிப்பட்டை.

கூன், *s.* (*from Sans. Koona.*) A bend, a curve, a flexure, கோணல். 2. Crookedness, a humped-back; one of the eight defects of the body. முதுகுக்கூனல். 3. A hump-backed or crooked person, கூனன். 4. A snail. நத்தை. 5. The screech owl, the கூகை. 6. [*in poetry.*] An extra, detached foot, commonly at the beginning of a verse, செய்யுட்கூன்—as in அவற்றுள்—முதற்பிற அது ஆக்கப்படுமைய. 7. (*சது.*) A vessel, a caldron —as in கருப்பஞ்சாறுகூன்.

கூனன், *s.* A hump-backed man, கூனுள்ளவன். 2. A snail, நத்தை. 3. A conch, சங்கு. 4. A tortoise. ஆமை.

கூனி, *s.* A hump-backed or crooked woman. 2. A dwarfish shrew, வசவி. 3. [*as* மந்தரை.] The maid-servant of கைகேசி.

கூனிக்குயம்—கூனிரும்பு, *s.* A sickle, அரிவாள்.

கூனிமிறால்—கூனிப்பொடி, *s.* A small shrimp.

கூன்கிடை, *v. noun.* Lying in a crooked posture; one of the five படுக்கைக்குற்றம். See under குற்றம்.

கூன்பாண்டியன்—கூனபாண்டியன், *s.* One of the Pándia kings with a hump-back.

கூன்மதி, *s.* The crescent moon.

கூன்முதுகு, *s.* A tortoise shell, ஆமை யோடு. (*M. Dic.*)

கெ

கெ. A compound letter of க் and எ.

*கெக்கட்டம்—கெக்கட, *s.* Giggling, hearty laughter, மிகச்சிரிக்கை. (*from Sans. Gaggha*, laughter, and *At'ta*, excessive.) Compare அட்டகாசம்.

கெக்கட்டமிட்டுச்சிரிக்க, *inf.* To laugh boisterously; to giggle, crackle.

கெக்கரி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* [*prov.*] To taste very sweet, மிகஇனிக்க. 2. [*local.*] To cackle, cluck, &c.—as a hen. See கொக்கரி.

*கெக்கலி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v n.* To giggle, to shout with laughter, கைகொட்டியொலிக்க. (*Sans. Gaggha.*)

கெக்கலிகொட்ட, *inf.* To shout, clap the hands and laugh. (இரா. பத.)

கெக்களி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* [*prov.*] To bend, writhe; to be twisted out of place; to be distorted—as the body of a wrestler, the feet being fixed, கெளிய. 2. To be pushed out, to be protuberant—as a bone when carrying a heavy load, வளைய. 4. To be defeated in controversy; to yield, தோல்விகாட்ட.

கெசமாமுட்டி, *s.* The எட்டி tree. (*M. Dic.*)

*கெசம், *s.* An elephant, யானை. 2. A measure of two cubits, a yard. இரண்டுமுழங் கொண்டஅளவு. See கசம் and கஜம், and their compounds.

கெசகன்னி, *s.* [*prop.* கசகர்ணி.] The வெருகு shrub. See கசகன்னி.

*கெசாசனை, *s.* The sacred fig tree. See கசாசனை, under கசம்.

கெசாசைநா, *s.* The கையாந்தகரை plant. (*M. Dic.*)

கெச்சம், *s.* The முல்லை shrub. (*M. Dic.*) See கெச்சை.

கெச்சங்கெட்டவன், *s.* [*local.* and *vul.*] A poor, mean person, கணமில்லோன்.

கெச்சுக்கெச்செனல், *v. noun.* Chirping—as a lizard, பல்லியோசை. 2. Teasing, harassing, வருத்தல்.

கெச்சை—கெச்சம், *s.* (*Tel.*) Tinkling rings for the legs of players, dancers, &c., காற்சதங்கை.

கெச்சைகட்ட, *inf.* To tie tinkling rings to the leg. 2. (*fig.*) To prepare for war.

கெச்சைக்குதிரை, *s.* A horse with little bells attached to its legs.

கெச்சைக்கொலுசு, *s.* (*Tel.*) A chain with tinkling rings or bells for the feet of women.

கெச்சைநடை, *s.* An affected, pompous gait, பெருமிதநடை.

கெச்சைமிதி, *s.* A kind of step in dancing, கூத்தில்மிதிக்குநடை.

கெச்சைமிதியிலேபோக, *inf.* To go with a rapid pace without agitating the body—as horses. 2. To go with a stiff, affected pace.

கெஞ்சு, கிறேன், கெஞ்சினேன், வேன், கெஞ்ச, *v. a.* and *v. n.* To beg humbly, to entreat, crave, beseech with supplicating gestures, வருந்திமிரக்க.

கெஞ்சவடிக்க, *inf.* [*local.*] To cause one to beg.

கெஞ்சவைக்க, *inf.* To detain a beggar before giving. 2. To cause one to crave.

கெஞ்சிக்கேட்க, *inf.* Te beg, entreat, beseech.

கெஞ்சிக்கொண்டுதிரிய, *inf.* To go a-begging.

கெஞ்சிவாங்க, *inf.* To receive by begging.

கெஞ்சல்—கெஞ்சுதல், *v. noun.* Supplication, entreaty.

கெடலணங்கு, *s.* [*impr.* கெடலணங்கு.] The goddess மூதேவி; [*ex* கெடல், ruin, *et* அணங்கு.]

கெடவரல், *s.* A kind of play, especially among females. மகளிர்விளையாட்டு. (சே)

கெடாரம், *s.* [*impr. for* கடிகாரம்.] A clock. 2. (*for* கடாரம்.) A copper boiler—*rarely used.*

கெடி, *s.* Fame, greatness, glory. கீர்த்தி. 2. Terror, fright, alarm, dread, பயம். 3. Jurisdiction, province, the limits of a ruler's authority, அதிகாரம். 4 (*Rott.*) A hill-fort, துருக்கம்.

கெடிபடிபட, *inf.* To be famed—as a great man. 2. To be dreaded.

கெடியன், *s.* A bold, undaunted person, அஞ்சாதவன். 2. A man of valor, who spreads terror, கெடிவீரன். 3. A clever, skilful, competent person; a powerful speaker, திறமுள்ளோன்.

கெடிகொள்ள, *inf.* To be overwhelmed with fear.

கெடிபண்ண, *inf.* To menace, threaten, frighten.

கெடிமண்ட, *inf.* To be frightened, terrified; to be overwhelmed with fear.

கெடிகலங்க, *inf.* To be agitated with fear.

கெடிஸ்தலம், *s.* A notorious place or town.

மரணக்கெடி, *s.* Dread of death.

கெடிலணங்கு, *s.* The goddess of destruction. See கெடலணங்கு.

கெடிலம், *s.* The name of a river near Cuddalore, ஓர்நதி. 2. Abyss, a deep gulf, ஆழமானஓடை. 3. A den, கெபி. 4. A narrow passage, ஒடுக்கவழி.

கெடு, கிறேன், கெட்டேன், வேன், கெட, *v. n.* To perish; to be destroyed, annihilated, அழிய. 2. To putrefy, rot, decay; to become tarnished, damaged, marred, blighted, கேடுற. 3. To be ruined in circumstances, வறுமையுற. 4. To be violated in chastity, கற்பழிய. 5. To degenerate, deteriorate; to change for the worse, morally or physically, நிலைகெட. 6. To be emaciated, reduced; to be deformed, disfigured, உருவழிய. 7. To be defeated, overcome, தோற்க. 8. To be intrinsically bad, evil or wrong, குணங்கெட. 9. To fall into ruin; to be demolished, destroyed, நாசமுற. 10. To be lost—as an article of property, &c., dropped, stolen or otherwise, காணாமற்போக. 11. To be squandered, spent, wasted, பொருளழிய. 12. To be worn out, சிதைய. 13. To expire, to terminate—as the retribution of former deeds, வினைகெட. 14. [*in gram.*] To be elided, dropped, விகாரத்தாறகெட.

கெடுவாய். May you perish—a form of imprecation.

கெட்டார்க்குற்றாரிளைவிதுமில்லை. In poverty, friends are not found even among relations.

கெட்டேனே. Ah! I am lost, ruined; I am undone.

கெட்டுப்போனபார்ப்பானுக்குச் செத்தப்போனபசுவைத்தானங்கொடுத்தாற்போல. As if a dead cow be presented to a ruined brahman; said of an unprofitable pursuit by an incompetent person.

கெட்டும்பட்டணஞ்சேர். Though to be ruined, go to the town.

தீத்திடைகெடவேண்டும். That the misery of poverty may cease.

சார்பெழுத்துக்கெடும். The final compound letter is dropped.

கெடுங்குடிசொற்கேளாது. A family given up to ruin will never listen to advice.

கெட்டகுடியேகெடும். A ruined family will sink more and more.

கெடுகாலம், *s.* A time of ruin, evil, drought, &c.; also used in reference to retribution of evil deeds which is to come immediately.

கெடுமதி, *s.* Wicked devices. 2. Folly, rashness, presumption. 3. Loss, ruin, waste.

கெடுமதி கண்தெரியாது. Folly is blind.

கெடுவான், *appel. n.* He who will perish—the wretch; commonly used abusively.

கெட்டதனம், *s.* Bad disposition; badness. 2. Indecorum, incivility.

கெட்டநடத்தை, *s.* Immoral or vile conduct.

கெட்டநிலை, *s.* A bad state, a woful plight. 2. A dangerous profession. 3. A dangerous way or system—as of religion.

கெட்டபுத்தி, *s.* Perverted understanding. 2. Bad counsel, &c.

கெட்டமணம், *s.* An offensive smell.

கெட்டரூபம், *s.* A deformed, monstrous or horrid shape.

கெட்டவியாதி, *s.* A bad, malignant, dangerous disease. 2. The venereal or other filthy disease.

கெட்டகேடு, *s.* Utter ruin, uselessness, unworthiness, &c.—*usually as an exclamation.*

கெட்டுப்போனவள், *s.* A seduced woman, a bad woman.

கெடுதலை, *v. noun.* Ruin, அழிவு. 2. Damage, loss, detriment, injury, நஷ்டம். 3. Disaster, calamity, இடையூறு. 4. Degeneracy, vileness, evil, இழிவு.

கெடுதல், *v. noun.* Perishing; being ruined, spoiled, defeated, &c. 2. Damage, injury, calamity, &c. 3. [*in gram.*] Elision, omission.

கெடுதி, *s.* Loss of any thing dropped, stolen, or strayed, &c., இழப்பு. 2. Loss—opposed to gain, in astrological calculations, augural divinations, &c., நஷ்டம். (See கிலாபநஷ்டம்.) 3. Emergency, hazard, extremity, ஆபத்து. 4. Ruin, அழிவு. 5. Evil, disaster, கேடு. 6. (*fig.*) The thing lost, இழந்தபொருள்.

ஒருகெடுதிசொல்லவேண்டும். Please to divine for me about what I have lost.

கெடு, *v. noun.* Ruin, destruction; decay, கேடு. 2. Expiration of a limited time; a term or limit of time, தவணை.

கெடுவோகவையாதுலகம். The world will not consider it a ruin. (குற.)

கெடுத்தப்பிப்போயிற்று. The time set, is passed.

கெடுப்படிக்கு. According to the time agreed upon.

பத்துநாட்கெடுவிலே. At the expiration of the term of ten days.

கெடுச்சொல்ல—கெடுவைக்க, *inf.* To fix a term of time, a day, &c. 2. To postpone.

கெடு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To destroy, annihilate, abolish; to squander, அழிக்க. 2. To damage, tarnish, blast, கேடுசெய்ய. 3. To debauch, corrupt, demoralize, violate, கற்பழிக்க. 4. To render nugatory—as religious rites, austerities, &c., அழிக்க. 5. To frustrate, defeat an object; to disappoint, தடுக்க. 6. To neutralize the noxious qualities of poisonous drugs; to temper, சுத்திசெய்ய. 7. To counteract poison received into the system, விஷமிறக்க. 8. To defeat, வெல்ல. 9. To reduce, to emaciate, சுருக்க. 10. [*in gram.*] To drop, omit; to cut off letters or a letter, ஒழிக்க.

கெடுப்பாய். May you do injury.

கெடுப்பினை, — கெடுபுத்தி, *s.* Malevolence, malice, an evil mind.

கெடுப்பான், *appel. n.* A destroyer, a depraver; a scoundrel.

கெட்டம், *s.* The beard, தாடி.

கெட்டாரகெட்டி—கெட்டாரகெட்டி, *s.* Good management, energy and ability; energetic and successful proceedings, மிகுசாமர்த்தியம். It is also applied to the person.

கெட்டி, *s.* (*Tel.*) Firmness, robustness, strength, உறுதி. 2. Cleverness, expertness, ingenuity, skilfulness, சாமர்த்தியம். 3. Close-fistedness, உலோபகுணம்.

கெட்டி—கெட்டிதான். Well done, bravo!

கெட்டிக்காரன், *s.* A clever, capable person; a smart, active man, &c.

கெட்டிக்காப்பு, *s.* A bracelet not hollow but solid.

கெட்டிச்சரீரம், *s.* A robust body.

கெட்டித்தனம், *s.* Cleverness, dexterity, capableness. 2. (*little used.*) Parsimony, close-fistedness.

கெட்டிபண்ண, *inf.* To make firm, to harden. 2. To sublimate. 3. To strengthen medicines, liquors, &c. 4. To transact an affair, or conclude a business advantageously.

கெட்டிபத்திரம், *adv.* Very secure, under lock and key, &c. 2. [*as an order.*] Be very careful, take great care.

கெட்டிப்பாகு, *s.* Thick syrup.

கெட்டியாய்ச்சோதிக்க, *inf.* To search or examine strictly.

கெட்டியாயுச்சரிக்க, *inf.* To articulate distinctly, to pronounce correctly and loudly; to enunciate with proper inflection, emphasis and modulation.

கெட்டியானவேலை, *s.* Skilful, nice work; nice workmanship.

கெட்டி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To harden, strengthen; to make firm or compact—as by ramming the load of a gun, உரமாக்க.

கெட்டு, *s.* [*prov.*] A small side-shoot, twig or branch from a parent stock, or a main branch, பக்கக்கிளை.

கெட்டுமுறிக்க, *inf.* To break off the side-shoots.

கெட்டுவிட—கெட்டுவைக்க, *inf.* To send out shoots, side-twigs. 2. To ramify, to branch out.

கெண்டன், *s.* A robust, stout man, மிண்டன். (c)

கெண்டி—கெண்டிகை, *s.* A brass pot with a nozzle. ஓர்செம்பு. Compare குண்டிகை

கெண்டிபால்வார்க்க, *inf.* To pour out through the nose of a vessel.

கெண்டிவாய், *s.* The nose of a கெண்டி. 2. An incision, the gash in which the axe works in cutting a tree.

கெண்டை, *s.* A kind of fish—the carp, Cyprinus fimbriatus, கயல். 2 The leg from the ankle to the knee, கெண்டைக்கால். 3. Gold or silver thread; lace. (See கண்டை.) 4. [*local*] Enlargement of the spleen.—*Note* கருகெண்டை, கல்லக்கெண்டை, சாணிக்கெண்டை, சாம்பகெண்டை, சேறுகெண்டை, தேட்கெண்டை, மடவைகெண்டை, மருக்கெண்டை, ரோதகெண்டை, வெண்கெண்டை, வெள்ளிமட்டக்கெண்டை, are different kinds of கெண்டை fish. See these.

கெண்டைவிழியாள், *s.* A woman whose eyes resemble the கெண்டை fish.

கெண்டைப்பீலி, *s.* A jewel fashioned like the கெண்டை fish, and worn by women on their toes.

கெண்டைக்கால், *s.* The leg; also, the calf of the leg.

கெண்டைவாதம், *s.* Rheumatic pains or spasms in the arms or legs; cramp.

சூரத்துக்கெண்டை, *s.* Golden or silver thread from Surat.

கெண்டைவியாதி — கெண்டைவிழுந்தநோவு, *s.* A disease in the hypochondria. (*Rott*)

கெதக்கெதவெனல், *v. noun.* [*local.*] Palpitation of the heart; being full of fear.

•கெதம், *adj.* Past, gone. See கதம்.

கெதபரிவிருத்தி, *s.* [*in astron.*] The number of synodic revolutions of a planet, rejected as the first step in the use of the பரிவிருத்தி tables. It indicates which of the tables is to be employed in the calculation.

கெதவாக்கியம், *s.* See கதவாக்கியம்.

•கெதி, *s.* For கதி; which see.

கெத்து, *s.* (*Hind.*) Wiles, tricks, தந்த. 2. Evasion, shift, equivocation, உபாயம்.

கெத்து, கிறேன், கெத்தினேன், வேன், கெத்த, *v. a.* [*prov.*] To rive by inserting and turning the instrument—as in splitting a stick. 2. To chop, mince, cut across and athwart in chopping. 3. To make incisions—as in fish; to hack. 4 To chuckle—as a hen, calling her chickens.

கெத்துக்கெத்தெனல், *v. noun.* Moving pit-a-pat, palpitating of the heart by fright, &c., அச்சக்குறிப்பு. 2 Sounding ket-ket; chirping, &c., ஒலிக்குறிப்பு.

கெந்தகம், *s.* The நாய்வேளை plant.

•கெந்தகம், *s.* [*prop.* கந்தகம்.] Brimstone.

•கெந்தம், *s.* [*prop.* கந்தம்.] Odor, fragrance, &c., வாசனை.

கெந்தவடி, *s.* Any odoriferous, essential unguent—as attar, &c.

கெந்தனம், *s.* The கோடகசாலை plant.

கெந்திகம், *s.* A plant, பாம்புகொல்லி.

கெந்திபாரம், *s.* A plant, ஆடுதின்னாப்பாளை; which see under ஆடு. (*M. Dic*)

கெந்திவாருணி, *s.* A plant, பேய்த்தும்மட்டி (*M. Dic.*)

கெந்து, கிறது, கெந்தினது, ம், கெந்த, *v. n.* [*prov.*] To crawl—as grubs, animalcula, &c., in a sore; to writhe or wriggle, either as seen or felt, நெளிய.

கெந்திக்கெந்திநடக்கிறான். He struts, he walks with an affected spring.

நரகத்திலேகிடந்துகெந்துவான். He will writhe in hell—*an imprecation.*

மனங்கெந்த, *inf.* To be perturbed through envy, rage, &c.

கெபி, *s.* (*Tel.* గుహ) A cave, cavern; den, grotto, மலைக்குகை.

•கெமனம், *s.* [*prop.* கமனம்.] Walking, &c.

கெம்பத்து, *s.* (*Hind.*) Pomp, splendor, இடம்பம்.

•கெம்பீரம், *s.* [*prop.* கம்பீரம்.] Exultation, &c., பரிசிப்பு.

கெம்பு—கெம்புக்கல், *s.* (*Tel.* కెంపు.) A ruby, பதுமராகம்.

கெம்பு, கிறேன், கெம்பினேன், வேன், கெம்ப, *v. n.* To rise, to be boisterous—as wind, waves, &c.; to swell, to heave—as the sea, பொங்கித்ததும்ப. 2. To rise up—as the blood in a rage, இரத்தங்கொதிக்க. 3. To cry, clamor, make a noise; to bustle, to make tumult—as persons in quarrels; to rise with indignation—as a warrior to the attack, ஆரவாரிக்க.

கெம்பியெழும்ப, *inf.* To rise up—as persons in quarrelling, &c. 2. To be boisterous.

கெம்பிக்கொண்டுபோக, *inf.* To go on roaring and raging.

கெம்பல், *v. noun.* Bustle, clamor; a great noise, ஆரவாரம். 2. Rising, swelling, &c., எழும்பல்.

கெம்பளிப்பு, *v. noun.* Exultation, mirth, சந்தோஷம்.

கெய்—கெய்மீன், *s.* [*prov.*] A small kind of fish, ஜிலேபி.

கெரடி, *s.* The art of fencing, சிலம்பம். See கரடி and கரடு.

கெரட்டுக்கெரட்டெனல், *v. noun.* Being hoarse and stertorous—as the breath in the struggles of death.

•கெருடன், *s.* As கருடன்.

கெருடாழ்வார், *s.* The கருடன்—as a devotee of Vishnu

•கெர்வம், *s* See கர்வம்.

கெலி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To win, conquer, overcome, வெல்ல. 2. *v. n.* [*prov.*] To desire eagerly, to crave, ஆசைப்பட. 3. To be full of terror, to start with fear, அஞ்ச.

கெலி, *v. noun.* [*prov.*] Eagerness; greediness; an insatiable desire for food, ஆசை. 2. *s.* [*for* கிலி.] Terror, fear, பயம்.

கெலிப்பு, *v. noun.* Winning; victory, conquest, வெற்றி—opposed to தோற்பு.

கெலிப்பாயிருக்க, *inf.* To be successful. 2. To be full of joy.

கெல்லு, கிறேன், கெல்லினேன், வேன், கெல்ல, *v. a* [*prop.* கல்லு.] To dig round the roots of plants, to grub up; to wash or wear away gradually; to eat—as a cancer, or caustic. 2. [*prov.*] To irritate or corrode, and waste the stomach—as excessive stimulus, &c.

கெல்லுகம்பு, *s.* [*prop.* கல்லுகோம்பு.] A stick for grubbing up the earth.

கெவரி, *s.* A species of the காக்கணம் plant with white flowers, வெள்ளைக்காக்கணம். See காக்கணம். (*M. Dic.*)

கெவுடு, *s.* Sacred beads imbedded in gold or silver, and tied on the arms or neck—as a badge, amulet, or charm, அட்சபந்தனம்.

கெவுடுகட்ட, *inf.* To fasten an amulet, a charm, &c.

கெவுரா, *s.* A sacred plant among the Hindus, துளசி, Ocymum sanctum, *L.*

கெவுரிசங்கம் — கௌரிசங்கம் — கௌரிசங்குமணி, *s.* An eleocarpus with a double seed, supposed to bear the image of Siva and Parvati, இரட்டைபுருத்திராட்சம்.

கெவுளி, *s.* A red species of cocoanut. (See கேளி.) 2 [*prop.* கௌளி.] A wall lizard.

கெவுளிச்செவ்விளநீர். The unripe fruit of the கெவுளி tree.—*Note.* The water of this nut is much esteemed for bathing an idol, and for medicinal use.

கெவுளிசொல்லுகிறது. The lizard chirps—regarded as an omen.

கெவுளிபாத்திரம், *s.* A large reddish shell used by religious mendicants for receiving alms, eating, &c.

கெவுளிசாஸ்திரம், *s.* The art or science of divining by the chirp of lizards.

கெவுனி, *s.* (*for.*) Gate of a fortification, fort or city, நகரவாயில். See கவுனி.

கெழு, *adj.* [*from* கெழுமை *and* கேழ்.] Superior in color, endued with pleasing colors நிறம்பொருந்திய. 2. Bright, luminous, brilliant, பிரகாசமான 3. *part.* (சு.) A connective expletive in poetry—as in வேல்கெழுதடக்கை. The strong hand armed with a lance.

கெழுதகை—கெழுதகைமை, *s.* Intimate connexion, attachment, close friendship, நட்பு. (*p.*) 2. Proprietorship, right of possession, உரிமை.

கெழுமு, கிறது, கெழுமினது, ம், கெழும, *v. n.* To be connected or combined, &c., பொருந்த. 2. To be full, abundant, &c., நிறைய. (See கழுமு.) 3. To spring up, to shoot forth, to be produced, முளைக்க. 4. *v. a.* (சு.) To learn, கற்க.

கெழுமை, *v. noun.* Combination, fulness, abundance, germination—as கெழுமு 1, 2, 3, above.

கெழுமை, *s.* Color, hue, நிறம். 2. Brilliancy, splendor, பிரகாசம். Compare கேழ். See under கெழுமு.

கெழுவு, கிறது, கெழுவினது, ம், கெழுவ, *v. n.* To belong to, to be combined or connected with, பொருந்த. 2. To be full, நிறைய. Compare கெழுமு, and கழுமு —*Note.* The gerund of the verb is கெழீஇ, in poetry.

என்னேகெழீஇயினர்கொல்லோ. How are they made social and free! (நாலடி.)

கெளிசு—கெளிசு, *s.* [*prov.*] Bloatedness—as of the face or stomach from eating irregularly and in too large quantities—as after a fever, உடல்வீக்கம்.

கெளிதம், *s.* A large stone, பெருங்கல். (சது.)

கெளிர்ச்சல்லியம், *s.* [*ex* சல்லியம், bone.] A fish-bone, மீனெலும்பு. (*Rott.*)

கெளிறு, *s.* A kind of fish, ஓர்மீன், Silurus vittales.

கெறுவம், *s.* See கர்வம்.

* கெற்சி, [*prop.* கர்ச்சி,] *which see.*

* கெற்பாதானம், *s.* [*prop.* கர்ப்பாதானம்] A ceremony prior to conception.

கெற்பு, *s.* [*local.*] Power, ability, talent, திராணி.

கே

கே. A syllabic letter compounded of க and ஏ.

* கேகம், *s.* House, dwelling, home, வீடு. Wils. p. 297. Geha. (பஞ்சத)

* கேகயம், *s.* A peacock, மயில். 2. A bird charmed by music. (See அசுணமா.) (*from Sans. Keka, cry.*) 3. The name of a country, ஓர்தேசம். (*Sans. Kekaya.*)

கேகயன், *s.* A king of the கேகயம் country.

கேசதம், *s.* The கையாந்தகரை plant. (*M. Dic.*)

* கேசம், *s.* Hair in general, மயிர்ப்பொது. Wils. p. 248. Kes'a. 2. Horse hair, குதிரைமயிர்.

கேசாதிபாதம். From the hair of the head down to the foot. 2. *s.* The name of a species of poem describing a female from head to foot, ஓர்பிரபந்தம்.

கேசபங்தி, *s.* A tuft or quantity of hair. Wils. p. 248. Kes'apankti.

* கேசகன், *s.* A barber skilful in dressing hair, நாவிதன். Wils. p. 248. Kes'aka.

* கேசரம், *s.* The farina or pollen of flowers, பூந்தாது. 2. The filaments of a flower; also the stamens, பூங்கேசரம். 3. A fragrant flower tree, the மகிழ், Mimusops elengi, *L.* Wils. p. 249. Kesara. 4. Beetles, வண்டு. (*Sans. Khecharu, moving in the air.*)

* கேசரர், *s.* A class of demigods fabled to have ascended to heaven, or to have sailed in the air by the aid of a magical bolus in the mouth, வித்தியாதரர். Wils. p. 274. Khechara.

* கேசரி, *s.* A lion, சிங்கம். Wils. p. 249. Kesaree. 2. One of the postures of the Yogi, sitting with the ankle under the posteriors, &c. (See அஷ்டாங்கயோகம்) 3. Wils. p. 274. Khecharee. Moving through mid air, ஆகாயகமனம். (*p.*)

கேசரிபாசனம், *s.* See கேசரி, 2.

கேசரியோகம், *s.* [*in astrol.*] The situation of the moon in conjunction with Jupiter, also in the first, fourth, seventh, or tenth sign; being very auspicious to a child born at that time.

கேசரிமார்க்கம், *s.* The way or passage through mid-air. (*p.*)

கேசரிகம், *s.* The plant, நாயுருவி, Achyranthes aspera, *L.*

* கேசவம், *s.* One of the eighteen treatises on ethics or jurisprudence. (See தருமநூல்.) 2. (சது.) A beetle, வண்டு. 3. (நிக.) A female beetle, பெண்வண்டு. Compare கேசரம்.

* கேசவன், *s.* One who has a fine head of hair, நிறைமயிருள்ளோன். 2. A name of Vishnu or Krishna, விஷ்ணு. Wils. p. 249. Kesava. 3. A name of the kings of the Chola dynasty, சோழன்.

கேசவற்குத்தோழன்—கேசவற்றோழன், *s.* A name of Arjuna—as companion of Krishna.

* கேசி, *s.* As கேசவன் 1, and 2. Wils. p. 249. Kesi.

* கேசிகன், *s.* A person with abundant hair. Wils. p. 249. Kesika.

கேசியா, *s.* The tree தாழை, Fragrant screw-pine. (*M. Dic.*)

கேசினி, *s.* The சங்கங்குப்பி shrub.

* கேடகம், *s.* A shield, a buckler, பரிசை. 2. A kind of portable tower for carrying idols, borne on the shoulders in procession, ஓர்விமானம். 3. Villages or towns in hilly districts, மலைசெறிநகரூர். Wils. p. 274. Khet'aka. 4. The tent or dwelling of an army, பாசறை. (சது.)

கேடம், *s.* The name of a river, ஓர்யாறு. (சது.) Compare கெடிலம்.

கேடயம்—கேடையம், *s.* A kind of portable tower for an idol. 2. A shield. See கேடகம்.

கேடிலுவகை, *s.* Heaven; imperishable, unchanging, eternal felicity, மோட்சம். (*p.*) [*ex* கேடு, *et* இல், and உவகை.]

கேடு, *v. noun.* Ruin, destruction, annihilation, அழிவு. 2. Loss, waste, damage, சிதைவு. 3. Degeneracy, depravity, கெடுதி. 4. Vice, debauchery, wickedness, corruption, துரோகம். 5. Injury, mischief, தீமை. 6. Adversity, indigence, wretchedness, வறுமை. 7. Ugliness, deformity, அலங்கக்கேடு. 8. Want, destitution, குறைவு. 9. [*in gram.*] Elision, omission, கெடுதல்விகாரம்; [*ex* கெடு, *v.*]

கேடுவரும்போது மதிகெட்டுவரும். Folly precedes destruction.

கேடுகாலம், *s.* A time of ruin from drought or other causes—often used as an imprecation. See கெடுகாலம்.

கேடுகெட்டவன், *s.* A ruined, miserable person. 2. Slovenly, dirty wretch.

கேடுபாடு, *v. noun.* Loss, damage, injury, detriment; ruin. 2. Adverse circumstances.

கேட்டி—கேட்டிக்கம்பு—கேட்டிக்தடி, *s.* [*prov.*] A staff or rod for driving oxen; an ox goad.

கேட்டை, *s.* The eighteenth nacshatra comprising four stars, of which one is in the scorpion; also, that and the day when the moon is in this nacshatra, சேட்டைநட்சத்திரம். 2. A name of the goddess of misfortune, மூதேவி; [*ex* கேடு.] Compare சேட்டை.

கேணி, *s.* A square or oblong walled tank, தடாகம். 2. A public well, கிணறு. 3. A well; in some places an unwalled reservoir of water, நூவு. 4. A ditch, a trench, அகழ். (*from Sans. Khana, to dig.*)

மணற்கேணி, *s.* A well sunk in a sandy soil.

கேணிக்கரை, *s.* The place near a tank or well. 2. The bank of a tank.

கேணித்துறை, *s.* The descent of a well or tank.

கேண்மை, *s.* Friendship, intimacy, intercourse, சிநேகம். 2. (நிக.) Kindness, favor, a beneficent look, கண்ணோட்டம். 3. Relationship, consanguinity, உறவு; [*ex* கேள், *s.*]

ஊதியமென்ப தொருவற்குப் பேதையார் கேண்மை யொரீஇவிடல். It is good for a man not to associate with fools.

* கேதகை—கேதகி, *s.* The tree தாழை, Wils. p. 247. Ketaka, Ketakee.

* கேதம், *s.* Distress, affliction of mind or body, துன்பம். Wils. p. 275. Kheda. 2. Mourning, sorrowing, துக்கம். Wils. p. 267. Ksheda.

கேதகாரியம், *s.* A case of mourning, or affliction, இழவு.

கேதம்விசாரிக்க, *inf.* To condole with mourners, &c., இழவுவிசாரிக்க.

* கேதனம், *s.* A large flag, a banner, பெருங்கொடி. 2. A standard or ensign of distinction, victory, honor, &c., விருதுக்கொடி. Wils. p. 247. Ketana. 3. A creeper, any creeping plant, படர்கொடி. (*p.*) Wils. p. 275. Khetana.

* கேதாரகௌளம், *s.* A tune, ஓர்இராகம்.

* கேதாரம், *s.* A place, the modern Kedar, sacred to Siva, in the Himalaya range, ஓர்தலம். Wils. p. 247. Kedara. 2. (சது.) A peacock, மயில். probably கேகயம் from *Sans. Keka.*

* கேது, *s.* [*in mythol.*] Cauda draconis (dragon's tail) or the red serpent into which the trunk of the Asura *Sanhikeya*, severed from the head (Rahu) by Vishnu, at the churning of the sea of milk, was changed; and which, with Caput draconis, is said to swallow the sun and moon for betraying them. This causes eclipses. 2. [*in astron.*] The descending node, supposed by most of the Hindu astronomers

to be one of those heavenly bodies rarely visible. 3. A mark, a sign, a symbol, அடையாளம். 4. A banner, a flag; a standard of distinction, கொடி. 5. A comet, a meteor—as in தூமகேது. Wils. p. 247. Ketu.

* கேது, கேதேன், கேதினேன், வேன், கேத, v. a. To call, to invite, அழைக்க (நிக.) Wils. p. 247. Keta. (obsol.)

கேதல், v. noun. Calling, inviting. (நிக.)

* கேதுமாலம், s. One of the nine great divisions or varshas of Jambu Dwipa, being the western portion between the மேருநாம் range and the western sea, given to the prince கேதுமாலன். Wils. p. 247. Ketumala. (அபி.)

* கேதுமாலன், s. One of the nine sons of அங்கிரன், and the first monarch of கேதுமால division, அங்கிரான்புதல்வரிலொருவன்.

கேதாரு, s. (for.) The Cedar tree, ஓர்மரம்.

* கேத்திரம்—க்ஷேத்திரம், s. A sacred place, a shrine, any place of pilgrimage—as Benares &c., விசேஷித்தஸ்தலம். 2. Land, country, field—as in குருக்ஷேத்திரம், நிலம். Wils. p. 264. Kshetra.

கேத்திரபாலன், s. Bhairava—as protector of sacred places, வயிரவன்; [க்ஷேத்ர பாலன், protector.] (நிக)

கேத்திரகணிதம், s. Geometry, இரேகாகணிதம். (Sans. Kshetraganita.)

* கேந்திரம், s. The centre of a circle, வட்டத்தின்நடுவம். 2. Argument of an equation. 3. [in astron.] Anomaly. 4. The distance of a planet from the first point of its orbit in the fourth, seventh, or tenth degree. Wils. p. 247. Kendra. 5. [in astrol.] The rising sign; also, the fourth, seventh, or tenth sign from it.—Note. இலக்கினகேந்திரம், சதுர்கேந்திரம், சப்தமகேந்திரம், தசமகேந்திரம், மகரகேந்திரம், as different கேந்திரம், see these words.

கேந்திரம்பெற்றிருக்க, inf. [in astrol.] To be in either of the கேந்திர signs.

கேந்துமூலியம், s. The நாய்வேளை plant. (M. Dic.)

கேப்பை, s. [vul.] A kind of millet, raggy, கேழ்வரகு.

கேமாச்சி, s. A plant, வெள்ளைக்காக்கணம். (M. Dic.)

* கேயம், s. A song, hymn or chant, இசைப்பாட்டு. Wils. p. 297. Geya. 2. A ditch, a moat, அகழ். Wils. p. 275. Kheya.

கேயிகம், s. Bricks, செங்கல். (Rott.)

* கேயூரம், s. A bracelet for the upper arm; a kind of epaulet, தோளணி. Wils. p. 248. Keyoora.

கேரண்டம், s. A crow, காக்கை. (சது.) Compare கரண்டம் and காரண்டம்.

* கேரளம், s. The Malabar or Malayalim country, ஓர்தேசம். 2. The language of that country, ஓர்பாஷை. 3. The astronomy and astrology of Malayalim, சோதிடசாஸ்திரத்தினொன்று. Wils. p. 248. Kerala.

கேரளன், s. Any king of the Seran race on the Malabar coast, சேரன்.

கேரனை, s. [incorrectly for கொனை.] Song, singing, இசைப்பாட்டு. (சூ.)

கேரு, கிறது, கேரினது, ம், கேர, v. n. To cackle—as a hen, பெண்கோழிகேர. 2. To speak in a low and tremulous voice, குரல்கேரிப்பேச. 3. To be bashful and diffident; to be confused, திகைத்துப்பேச.

* கேலம், s. Female sports; play, pastime, மகளிர்விளையாட்டு. Wils. p. 275. Khela.

* கேலி, s. [vul.] Fun, jesting, joking, pleasantry, பரிகாசம். 2. Buffoonery, mimicry, விகடம். 3. Ridicule, derision, mockery, நிந்தை. (Sans. Keli.)

கேலிக்கதை, s. An amusing story, a piece of fun. 2. Ridicule, derision. 3. Low ribaldry: foul language.

கேலிக்காரன், s. A jester, a buffoon, a mimic. 2. A derider, a mocker.

கேலிபண்ண, inf. To deride, to mock, to ridicule. 2. To joke, to jest. 3. To play the buffoon, to mimic. 4. To confound, shame, baffle, asperse, defame.

கேலித்தனம், s. Meanness of character or conduct, ridiculousness, censoriousness; jesting.

கேவணம், s. The bed or socket for a gem, மணிபதிக்குங்குழி.

* கேவலம், s. Singleness; what is simple or alone, தனிமை. 2. Uniqueness, entireness, the only one of its kind, exclusiveness, ஒருங்கு. 3. Freedom, liberation from births, supreme bliss, மோக்ஷம். Wils. p. 248. Kevala. 4. Destitution, extreme indigence, இன்மை. 5. Emaciation, மெலிவு. 6. Danger, criticalness, crisis, மோசம், ஆக்கிரமம். 7. Unconsciousness, either absolute or transient; one of the three degrees of consciousness of the soul, the other two being சகலம் and சுத்தம். (See காரணகேவலம் and காரியகேவலம்.)—Note. The five காரியகேவலம் states (momentary, transient unconsciousness of the living soul) are, 1. கேவலசாக்கிரம். 2. கேவலசொப்பனம். 3. கேவலசுழுத்தி. 4. கேவலதுரியம். 5. கேவலதுரியாதீதம்.

கேவலங்கீர்வலி பகை. Absolute, deep-rooted hostility. (பழ.)

கேவலஞ்சோறுபட்டதில்லை. There is no food at all. (c.)

கேவலமாய்க்கிடக்கிறான். He is dangerously ill. (c.)

கேவலசினேகிதம், s. Tender love.

கேவலமானசரீரம், s. A feeble or emaciated body.

கேவலப்படுத்த, inf. To detract, derogate, disparage.

கேவலஸ்தன், s. A poor, indigent person. 2. An emaciated person; one prostrated in health.

கேவலாவத்தை, s. One of the three states of the soul—as கேவலம், 7.

கேவலான்வுவயானுமானம், s. [in logic.] An argument in which the affirmative is demonstrated both syllogistically and inductively. (சிவஞானபோ.)

கேவலவெதிரேகானுமானம், s. [in logic.] An argument in which the negative is proved by both the syllogistic and inductive processes. (சிவஞானபோ.)

கேவு, கிறேன், கேவினேன், வேன், கேவ, v. n. To breathe with difficulty, to catch breath with labor; to gasp—as a dying person, மூச்சுத்திணற.

கேழல், s. A hog, a boar, a swine, பன்றி.

கேழ், s. Color, hue, நிறம். 2. Light, lustre; brilliance, splendor; ஒளி. 3. Comparison, similitude, உவமை.

கேழ்வரகு, s. [com. கேவுரு.] A kind of millet, raggy, கேப்பை.

கேளன், s. A companion. See under கேள் s.

கேளா, adv. In silence, silently; negligently, vainly, வீண். (நிக.)

கேளார், s. See under கேள், v.

* கேளி, s. Female sports, play, pastime, மகளிர்விளையாட்டு. Wils. p. 248. Keli. 2. The cocoanut-tree, தெங்கு—as கெவுளி.

கேளிவிலாசம்—கேளியுல்லாசம், s. A stroll, jaunt, ramble in company with females, ஸ்திரீலோலவிநோதம். 2. The joviality of a company, amusement, விநோதம்.

* கேளிக்கை, s. Dancing; play, sport, pastime, amusement, விநோதாடம்பரம். Wils. p. 248. Kelika.

கேளிக்கைபாட, inf. To dance, sing and play for amusement, &c.

கேள், s. Regard, love, friendship, சினேகம். 2. Kindred, relationship, consanguinity, உறவு.

கேளன், s. A friend, companion, தோழன்.

கேள்வன், s. A lover, a suitor; a bridegroom or husband; the master or lord of the house, தலைவன்.

கேளிர், s. (pl.) Choice friends, தோழர். (நாலடி.) 2. Relations, உறவினர். (குற.) 3. (sing.) Husband, the master of the house, தலைவன்.

நச்சார்கேளிர். The relations consent not. (தொல்.)

கேள், கேட்கிறேன், கேட்டேன், கேட்பேன், கேட்க, v. a. To hear, hearken, give ear, listen; to over-hear, செவியாற்கேட்க. 2. To attend to, regard, mind; to be tractable, docile; to obey, புத்திகேட்க. 3. (from Sans. Gesha.) To ask, inquire, question; catechise, வினவ. 4. To request, solicit, crave, இரக்க. 5. To investigate, examine, call to account, ஆராய. 6. To require, demand, insist on, to claim, கொடுக்கச்சொல்ல. 7. To requite, recompense, avenge, தண்டிக்க. 8. To learn, to be instructed in, நூன்முதலியகேட்க. 9. To bid, ask at a price, offer, விலைகேட்க. 10. To operate upon, உறுத்த. 11. v. n. To be heard, to reach—as a sound, a call, &c.

சொன்னபடிகேளாதகுதிரை. An intractable horse.

இந்தவியாதியைமருந்துகேட்கும். This disease will yield to medicine.

எளியாரை வலியார் கேட்டால் வலியாரைத்தெய்வம் கேட்கும். If the powerful oppress the poor, God will hear them.

பொல்லாதமனங்கேளாது. The wicked heart will not obey.

கேட்டுங்கேளாதிருக்க, inf. To pretend not to hear. 2. To slight, disregard; not to mind.

கேட்டுநிற்க, inf. To beg, pray, solicit, ask favors. 2. To require, demand.

கேட்டுவிசாரிக்க, inf. To make inquiry about, inquire into, to examine.

கேட்பார்பேச்சுக்கேட்க, *inf.* To listen to every one's advice; to be duped.

கேளாச்செவி, *s.* Neglect, disregard, inattention to worldly pleasures; *lit.* an unlistening ear, உலக காரியங்களைக்கேளாத செவி.

காணாக்கண்ணாய்க் கேளாச்செவியாய்ப் போய்விட்டான். He has gone away unseen and unheard.

கேளாதகேள்வி, *s.* A question not to be asked; indecent, unbecoming language.

சொற்கேட்க, *inf.* To obey one's word; to be obedient.

நூல்கேட்க, *inf.* To read a book, or learn a science under a teacher.

புராணங்கேட்க, *inf.* To hear the Puranas—as at a temple.

பெண்கேட்க, *inf.* To solicit a girl of her friends in marriage.

பொருள்கேட்க, *inf.* To ask for a thing. 2. To inquire after the meaning of a passage, &c.

வழக்குக்கேட்க, *inf.* To inquire into or try a cause.

திரும்பவா—திரும்பிவா. Come again.

திரும்பத்திரும்ப. Again and again.

திரும்பத்திரும்பச்சொல்லவேண்டுமோ. Must I tell you again and again?

திரும்பவும், *adv.* Furthermore, moreover.

திரும்பவுமென்ன. What more, what else?

திரும்பிப்பார்க்க, *inf.* To cast a favorable look, to attend kindly to one's application.

சித்தந்திரும்ப, *inf.* To incline favorably, as the mind of a deity or great person. (*Sometimes used ironically.*)

திருவடி, *s.* [*prov. in combin.*] Tricks of a buffoon, திருவன்தந்திரம். 2. An indolent sore, ஆறாப்புண். 3. See திரு.

திருவடிராச்சியம், *s.* Anarchy, want of government; a society without law or justice, முறைகெட்டஇராச்சியம்.

திருவட்டி, *s.* A shrub, கள்ளி.

திருவன், *s.* [*prov.*] A buffoon, a jester of a king, விகடக்காரன். 2. A rogue, கள்வன்.

திருவாத்தான்—திருவாழ்த்தான், *s.* A buffoon—as திருவன். (*c.*)

திருவாளி, *s.* [*prop.*] A rogue, a knave, வஞ்சகன். 2. A trickish person, a rogue, புரட்டன். (*c.*)

திருவாளித்தனம், *s.* Roguishness, roguery.

*திரேக்காணம், *s.* [*in astrol.*] A division of the rising sign into three parts, in forming a horoscope, உதயராசியை மூன்றாய்ப்பகுத்தல். W. p. 430. Drek'kan'a.

திரேக்காணாதிபன், *s.* The ruling planet or regent of the திரேக்காணம்.

*திரேகம், *s.* [*improp. for* தேகம்.] Body, சரீரம். (*c.*)

திரேசந்தி, *s.* The திராய் plant, Pharnaceum, *L.*

*திரேதம் — திரேதாயுகம், *s.* The second or silver age, or Yuga, of the Hindus, consisting of 1,296,000 years, இரண்டாம் யுகம். W. p. 392. Treta, Tretayuga.

*திரேதாக்கினி, *s.* The three-fold class of sacred or brahmanical fire, முத்தீ. See W. p. 392. Treta.

திரை, *s.* Wrinkle in the skin by age, உடற்றிரை. 2. A rope or twist of straw, வைக்கோற்புரி. (*c.*) 3. A roll of cotton prepared for spinning, கொட்டைப்பஞ்சு. 4. Wave, billow, surge, breaker, ripple, அலை. 5. Sea, கடல். 6. River, brook, ஆறு; [*ex* திரை, *v.*]

திரைகடலோடியுந்திரவியந்தேடு. Obtain riches even by going on the tossing sea.

நரைதிரையில்லை, மரணம் அதிலில்லை. There is no wrinkle nor gray hair, no death—said of some ascetics called சித்தர், who are supposed to have found the elixir of immortality.

திரையடிக்க, *inf.* To beat as waves on the shore.

திரையன், *s.* A ruler or chief in a maritime district, நெய்தனிலத்தலைவன். 2. A chief of a district near Trichinopoly, தொண்டைமான்.

திரையெறிய—திரைவீச, *inf.* To toss up waves, as the sea. (*p.*)

திரைவிழ, *inf.* To become wrinkled by age.

*திரை, *s.* Curtain, திரைச்சீலை; [*ex Sa. Tiras*, concealing.]

திரைகட்ட — திரைபோட, *inf.* To put up or hang up a curtain.

திரைச்சீலை, *s.* A curtain.

திரை, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To wrinkle by age, திரங்க. 2. To roll as waves, to ripple, to heave up as the sea, அலைய. 3. To curdle as milk, உறைய. 4. To wrinkle up as a cloth or flag by the wind, சுருங்க. 5. To be drifted by the wind on water into heaps, as weeds, &c., திரள. 6. To become smooth, as an earthen vessel turned by a potter. (*c.*)

நரைத்துத்திரைந்தவன். One who is gray and wrinkled.

திரைந்தபால், *s.* Turned milk.

திரையல், *v. noun.* Wrinkling, சுருங்கல்.

திரைவு, *v. noun.* Wrinkling by age. 2. Rolling—as waves, &c.; *used in all the meanings of the verb.*

திரை, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. a.* sometimes *n.* To shrivel up a cloth, flag, &c., as the wind, to gather up moss, scum, &c., on the water, as the wind or current, ஒதுக்க. 2. To gather up the folds of a garment in the hand, கொய்சகமாக்க. 3. To gather up the mouth of a sack, &c., சுருக்க. (*c.*)

நீர்திரைக்கிறது. The water ripples.

திரைத்தசாலிகை. A wrinkled jacket. (*p.*)

திரைப்பு, *v. noun.* Rolling, wrinkling, &c., *used in all the meanings of the verb.*

திரையல், *s.* Betel-leaf, or plant, வெற்றிலை. 2. See திரை, *v. n.*

*திரைராசிகம், *s.* Rule of three, முத்தொகைவினா. W. p. 392. Trairasika.

*திரோதம்—திரோதயம், *s.* Obscuration or darkening of the understanding, &c., as திரோதானம்.

திரோதசத்தி — திரோதாயி — திரோதாயிசத்தி—திரோதானசத்தி, *s.* The female energy of the deity, which is operative in veiling the understanding, and leading the soul to the performance of various actions; and thus enabling it to work itself clear from moral evil, and effect its salvation.

*திரோதாயி, *s.* See திரோதசத்தி.

*திரோதானம், *s.* W. p. 377. Tirodhana. Cover, covering, veil, any thing that hides from sight, மறைப்பு. 2. Disappearance, removal from sight, அந்தர்த்தானம். 3. Hiding spiritual things from view, &c., as one of the divine operations embracing five particulars; 1. Obscuring the internal vacuum or spiritual faculty. 2. Causing the illusions of the world to appear as realities, and the deity, and spiritual things as illusions. 3. Inducing the belief that the mental and bodily faculties are the agents in the actions performed, instead of the soul, or the deity operating through the soul. 4. Depriving the soul of spiritual comprehension, reflection, &c. 5. Inducing desires after the pleasures of sense.

திரோதானசத்தி, *s.* See திரோதசத்தி.

*திரோபவம்—திரோபாவம், *s.* The darkening of the soul, as one of the operations of the deity. See பஞ்சகிருத்தியம், under கிருத்தியம்.

திரோபவி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To cover, darken, conceal, obscure, மறைக்க. 2. To darken the understanding, hide spiritual things from view. See திரோதானம்.

*திர்ப்தி, *s.* See திருத்தி.

*திலகம், *s.* Vermilion, or red paint, for marking the forehead, சிந்தூரம். 2. A mark or spot on the forehead, by the Saivas, பொட்டு. 3. An ornament for the forehead, நெற்றிச்சுட்டி. (*c.*) 4. A tree, as திலம். 5. (*fig.*) Excellence, eminence, மேன்மை. W. p. 377. Tilaka. 6. (சது.) The கலித்துறை verse.

திலகப்பொட்டு, *s.* A spot of sandal and vermilion on the forehead.

வீரதிலகம், *s.* A distinguished hero.

*திலதம், *s.* (*a change of* திலகம்.) The sectarian spot on the forehead, பொட்டு. 2. An ornament for the forehead, நெற்றித்திலகம். 3. Another forehead-jewel, சுட்டி. (*c.*)

நெட்டித்திலதப்பொட்டுக்கொண்டார்கள். They greatly admired it, and every one got a little.

திலதமிட—திலதம்போட, *inf.* To put a spot on the forehead.

*திலம், *s.* Rape seed, or the plant, Sesamum, எள். W. p. 377. Tila. 2. A tree, மஞ்சாடிமரம், Adanantheira, *L.*

திலதர்ப்பணம், *s.* An annual ceremony, as திலோதகம்.

திலமளவு, *s.* The amount of a rape seed.

திலாட்சாரம்—திலட்சாரம், *s.* The salt extracted from rape seed, எள்ளின்வெடிக்குட்லவணம்.

திலோதகம், *s.* Libations of water poured on rape seed. See under உதகம்.

*தில்வகம், *s.* The bark of the Feronia, விளாம்பட்டை. (*R.*)

திலாசா, *s.* (*Pers.*) Encouragement, தைரியப்படுத்தல்.

திலு, *s.* [*prov.*] (*in cant numbers.*) Three, மூன்றின்குழூஉக்குறி.

திலுப்புலு, *s.* Thirty, முப்பது.

*திலோத்தமை, *s.* One of the courtezans of Swerga.

தில். A particle found in ancient poetry expressing. 1. Desire, as பெறுகதில், to obtain. 2. Time, as பெற்றாங்கறிகதில்லம்மவிவ்வூரே, when (you) reach the country, enjoy it. 3. Implied ellipsis, ஒழியிசை, as வருகதில் லம்ம வெருவேமீசேர, let us go to our village, and then—we will see. 4. An expletive, அசைச்சொல்.

தில்லம், *s.* Jungle, forest, காடு.

தில்லானா, *s.* Syllables used in humming tunes, தாளக்குறிப்பு. 2. A song of two stanzas, in the interlude of which, these syllables occur, ஓர்சந்தக்குறிப்பு.

தில்லி, *s.* Delhi. See டில்லி.

தில்லுமுல்லு, *s.* [*prov.* தில்லுப்பில்லு.] Lies and nonsense, மாறுபாடு. (*Colloq.*)

தில்லுமுல்லுந்திரிசமரமும். Lies, tricks, &c.

தில்லுமுல்லுக்காரன், *s.* A deceptive fellow, a liar.

தில்லை, *s.* A tree, the milky juice of which from the bark affords a gum, ஓர்மரம், Excoecaria Agallocha, *L.* 2. The town of சிதம்பரம். 3. A grove of தில்லை, formerly growing there.

தில்லைக்கோவிந்தர்—தில்லைக்கோவிந்தராஜர், *s.* Vishnu at Chillumbrum.

தில்லைத்திருச்சித்திரகூடம், *s.* A fane of Vishnu at Chillumbrum.

தில்லைநாயகம், *s.* [*prov.*] A kind of rice, ஓர்நெல். (*c.*)

தில்லைநாயகன், *s.* Siva as worshipped at சிதம்பரம், சிவன்.

தில்லைமூவாயிரவர், *s.* (*pl.*) The three thousand brahmans formerly at சிதம்பரம், all of the same tribe.

தில்லையம்பலம், *s.* The chief of the five sacred halls in the temple at Chillumbrum, also the temple itself, சிற்றம்பலம்.

தில்லையம்பலவாணன், *s.* Siva, சிவன்.

தில்லையெண்ணெய், *s.* (*sometimes* தில்லமெண்ணெய்.) The black oil or tar of the தில்லை.

தில்லைவனம், *s.* The town of சிதம்பரம்.

•**திவசம்**, *s.* Day, நாள். W. p. 409. DIVASA. 2. (*c.*) The anniversary of a relative's death, when alms are given to the brahmans for the benefit of the deceased. See சிராத்தம்.

திவசாவசானம், *s.* (*St.*) Afternoon, close of the day, பகலின்முடிவு.

திவடல், *v. noun.* As திவளல். (*R.*)

•**திவம்**, *s.* Appearance, visibility, manifestation of a deity, &c., தோற்றம். 2. Day, day-time, பகல். (*Sa. Diva.*)

திவரம், *s.* Country, as distinguished from town, நாடு. (சது.)

திவலை, *s.* A small drop, watery particle or globule, சிதறுந்துளி. 2. Rain-drop, மழைத்துளி. 3. Rain, மழை.

திவவு, *s.* Frets of a guitar, or places where the wires are struck with the fingers, வீணைவலிக்கட்டு. 2. Steps made for ascending a mountain, படிக்கட்டு.

திவள், கிறேன், திவண்டேன், வேன், திவள, *v. n.* To slacken, relax, stagger, bend as unable to support a weight, தவள. (*p.*)

திவளல், *v. noun.* Staggering, bending, &c.

திவறு, கிறேன், திவறினேன், வேன், திவற, *v. n.* To die, சாவ. (சது.)

•**திவா**, *s.* Day-time, as distinguished from night—as திவம், பகல்.

திவாகரம், *s.* An ancient poetic lexicon, still in use, ஓர்நூல்.

திவாகரன், *s.* The author of this book, திவாகரஞ்செய்தவன். 2. The sun, being of the day, சூரியன்.

திவாகீர்த்தி, *s.* A barber, அம்பட்டன். 2. One of an impure caste, சண்டாளன்.

திவாந்தம், *s.* An owl, that which is blind by day, கூகை.

திவாமானம், *s.* Day-time, length of the day from sunrise to sunset.

திவார்த்தம், *s.* Half of the day-time, பகலிற்பாதி. 2. Noon or mid-day, மத்தியானம்.

திவாராத்திரம்—திவாராத்திரி, *s.* Day and night, இரவும்பகலும்.

திவேச்சுரன், *s.* One of the twelve suns, so called, துவாதசாதித்தரிலொருவன்.

•**திவோதாசன்—திவோதாதன்**, *s.* A king of Benares, and founder of the Indian school of medicine, காசியரசன்; [*cx Sa. Diva,* heaven.]

திவானி, *s.* (*Arab.*) A place of justice, நியாயஸ்தலம்.

திவான்ஜி, *s.* (*Pers.*) A minister of state, மந்திரி.

•**திவ்வியம்**, *s.* Divinity, any thing celestial or god-like, தெய்வீகம். 2. Pre-eminence, super-excellence, மேன்மை. W. p. 409. DIVYA.

திவ்வியகவி, *s.* A poet divinely inspired, தெய்வப்புலவன்.

திவ்வியக்கியானம், *s.* Divine knowledge.

திவ்வியசட்சு, *s.* As திவ்வியதிருஷ்டி, 1. 2. The office of a seer.

திவ்வியதிருஷ்டி, *s.* The gracious look of a deity or guru, by which sin is dispelled, and grace conferred. 2. Supernatural vision, spiritual sight, as enjoyed at pleasure by the exalted devotee. 3. A prophet.

திவ்வியதேகம், *s.* A divine body.

திவ்வியதேசம், *s.* A place esteemed sacred by Vaishnuvas.

திவ்வியபஞ்சாமிர்தம், *s.* (*St.*) Five delicacies with which the idols are anointed. See பஞ்சாமிர்தம்.

திவ்வியபுதுமை, *s.* A miracle, அற்புதம்.

திவ்வியபூமி, *s.* Holy land, central India, where religious rites are specially meritorious. 2. Places of pilgrimage. See புண்ணியபூமி.

திவ்வியபோதனை, *s.* Divine teaching.

திவ்வியவாக்கு, *s.* A declaration, or oracle of a deity, or saint.

திவ்வியவாசனை—திவ்வியமணம், *s.* Sweet odors.

திவ்வியரசம், *s.* Quicksilver. (*R.*)

திவ்வியரதம், *s.* A celestial car.

திவ்வியரத்தினம், *s.* An excellent, precious jewel, a fabulous gem.

திவ்வியவருஷம், *s.* A year of the gods, supposed to be equal to three-hundred and sixty-five years of men.

திவ்வியாதிவ்வியம், *s.* Partaking of both natures human and divine.

திவ்வியாத்திரம் — திவ்வியாஸ்திரம், *s.* Weapon received from the gods.

திவ்வியாபரணம், *s.* Superior ornaments. 2. Ornaments worn by a sacred or royal personage.

திவ்வியோதகம், *s.* Sacred waters; rain; [*cx* உதகம்.]

திளை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To be thick, close, crowded, நெருங்க. 2. To be full, to abound—as water in a river, பூரிக்க. 3. To have sensual enjoyment, to copulate, போகிக்க. 4. To increase, பெருக. (சது.)

திற, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To grow well, to thrive, to become strong, stout, robust, திறப்பட. 2. To become opulent, to be in good circumstances, விதிவுண்டாக; [*cx* திறம்.]

திறத்தகை, *s.* [*prov.*] A strong hand. 2. (*fig.*) A strong person. (*c.*)

திறத்தவன், *appel. n.* (*also* திறத்தினன்.) A stout, hardy person. 2. An opulent or thriving person.

திறந்தவேலை, *s.* Strong work. 2. Elegant or good work.

திற, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, *v. a.* To open, to make an opening, an avenue or passage, &c., வழியுண்டாக்க. 2 To unclose, lay open, to disclose, reveal, வெளிப்படுத்த. 3. To unlock, unbar, unbolt, தாழ்திறக்க. 4. To open, as the eyes, a book, a letter, விரிக்க. 5. To open the mouth in speaking or singing; to emit a loud sound, ஆர்க்க. 6. To broach, to tap, துளைக்க. 7 (*Beschi.*) To form a precedent—as இதற்கு வழிதிறவாதே, of this do not set an example. 8. *v. n.* (கிறது, ந்தது, க்கும், க்க.) To form as a gap, chasm, passage, breach, பிளவுபட. 9. To become distended, விரிய. 10. To become loud, as the voice. ஒலிமிக்க (*c.*)

காரியங்களைத்திறந்துகாட்டினான். He has divulged the affair.

திறந்தமனம், *s.* A candid mind.

திறந்தறை, *s.* [*prop.* திறந்தஅறை.] An open desolate house or barren country, காவலில்லாஇடம். 2 [*vul.*] A divulger of secrets, அந்தரங்கத்தைவெளிவிடுவோன்.

திறந்தவாய், *s.* Gaping, open mouthed, as an idler. 2. Broaching secrets, disclosure of private matters. 3. Gap, aperture—as of a wound, or abscess.

திறந்துகாட்ட, *inf.* To lay open, to present or expose fully. 2. To explain, to illustrate. 3. To expose one's person.

திறந்துசொல்ல, *inf.* (*sometimes* வெளிவிட்டுச்சொல்ல.) To disclose, to reveal, to divulge.

திறந்தவெளி, *s.* An open place, a plain.

திறந்துவிட, *inf.* To open, to disclose, to show defects.

திறபட—திறவுண்டுபோக, *inf.* [*prov.*] To be opened. 2. To be disclosed, revealed. வெளியாக.

கண்டந்திறக்க, *inf.* To become open, as the throat of a person just before death. 2. To become clear or shrill, as the voice. 3. To glut, to eat to excess. (*Said in contempt.*)

கண்திறக்க, *inf.* To open the eyes. 2. To open the eyes of an idol, giving it the appearance of sight. 3. To cut open the three eyes of the cocoa-nut.

மனந்திறந்துசொல்ல, *inf.* To unbosom one's self, tell one's mind freely.

வாய்திறக்க, *inf.* To lower one's self by asking favors of a mean person.

திறவு—திறப்பு, *v. noun.* An opening, aperture 2. Way, means. வழி.

திறவறிய, *inf.* To know how to reveal secret things. 2. (*R.*) To be experienced, அனுபவப்பட.

திறவுகோல், *s.* [*prov.* திறப்பு.] A key, சாவி.

திறக்கு, *s.* [*prov. vul.*] One's concerns, affairs, side, காரியம்.

அவன்திறக்கிலேபோகப்படாது. It is not proper to meddle with him.

திறத்தி, *s.* [*prov.*] A midwife, மருத்துவப்பெண்; [*cx* திறம்.]

திறப்பணம், *s.* [*prop.* துரப்பணம்.] A kind of gimblet, a drill, an auger, தமருசி.

திறப்பு, *s.* See திறவுகோல்.

திறமை, *s.* Goodness, excellence, richness, மேன்மை. 2. Ability, cleverness, competence, சாமர்த்தியம். 3. Strength, vigor, power. வலிமை. 4. Good circumstances, wealth, ஐசுவரியம். 5. Bravery, courage, manliness, தைரியம். (*c.*)

திறமைகாட்ட, *inf.* As திறங்காட்ட.

திறம், *s.* (*a change of* திரம்.) A kind, class, sort, division, வகை. 2. Quality, state, nature, தன்மை. 3. Party, side in a law-suit or combat, பக்கம். 4. Strength, vigor, power, force, வலிமை. 5. Robustness, hardiness, compactness, soundness, உறுதி. 6. Ability, competence, cleverness, dexterity, சாமர்த்தியம். 7. Goodness, excellence, eminence, richness, superfineness, மேன்மை. 8. Opulence, wealth, good circumstances, ஐசுவரியம். (*c.*) 9. Largeness of wages, dowry, &c., அதிகம். 10. A kind of guitar with less than seven strings, குறைநரம்புள்ளவீணை 11. Cause, as distinguished from effect, காரணம். 12. [*prov.*] Midwifery, மருத்துவம்.

இதற்கதுதிறம். This is preferable to that.
பலதிறமுஞ்சொன்னார்கள். They advised him many times
எத்திறத்து. In what respect? (நீதிநெறி.)

திறங்காட்ட, *inf.* To display ability, powers, &c.

திறங்கெட்டவன், *appel. n.* A stupid, lazy fellow, an incompetent man.

திறத்தார், *s.* Party, as opposed to or distinguished from another party, பகுதியார்.
இருதிறத்தாரும். Both parties.

திறப்பட, *inf.* To improve, as soil, health, strength, &c., சீர்ப்பட.

திறப்படுத்த, *inf.* [*prov. v. noun.* திறப்பாடு.] To improve soil, circumstances, &c.; to strengthen, &c., to enrich.

திறப்பிக்க, *inf.* [*prov. com.* ஸ்திரப்பிக்க.] To make firm, solid, to harden, consolidate, உறுதிப்படுத்த.

திறமானசம்பளம், *s.* Good wages.

திறவாளி—திறவான், *s.* An able man, a knowing man.

சரீரத்திறம், *s.* Constitution or state of body to be known by a doctor in prescribing medicine, &c., சரீரக்கூறு. 2. Bodily vigor, தேகபலம்.

கல்வித்திறம், *s.* Great learning.

திறனில்யாழ், *s.* A lute or fiddle used in maritime districts, செய்தல்யாழ்த்திறம்.

திறம்பு, கிறேன், திறம்பினேன், வேன், திறம்ப, *v. n.* To fail, to vary, to swerve, to deviate, தவற. 2. To be changed, to come into different circumstances, மாறுபட. (*p.*)
திறம்பாவொழுக்கம். An undeviating course of good conduct.

திறல், *s.* Strength, vigor, வலி. 2. Fighting, warfare, battle, போர். 3. Hostility, பகை. (சது) 4. Bravery, courage, valor, தைரியம். (*p.*)
திறலோன், *s.* A stout, valiant man.

திறன், *s.* (*poetical use for* திறம்.) Cause, good disposition, a part, &c.

திறுங்கு, *s.* [*prov.*] A bolt, கதவடைதாழ். See திரங்கு.

•திறுணி, *s.* Ability. See திராணி.

•திறி, *s.* Three. See திரி. (*R*)

திறுதிட்டம்—திறுதட்டம், *s.* [*prov. for* நிறுதிட்டம்.] Straightness, a perpendicular position, erectness as of a person through fear, surprize, &c., சேர்நிற்கை.

திறுதிறுக்க—திறுதிறெனெ, *inf.* [*used adverbially.*] To stare, to look wild as one in fear, &c., அருண்டிருக்க. (*c.*)

திறை, *s.* Tribute, as paid by inferior states, அரசிறை. (*c.*) For the compounds, see இறை.

திற்றி, *s.* [*prov.*] Eatables, a relish with food, தின்னத்தகுந்தவை; [*ex* தின்.]

•தினம், *s.* Day of twenty-four hours, நாள். W. p. 408. Dina. 2. Day-time, from sun to sun, பகல். 3. A great day, a holiday, திருநாள். 4. *adv.* Daily, as தினந்தோறும். (*c.*)

தினகரன், *s.* The sun, as திவாகரன், ஆதித்தன்; [*ex* கரன், maker.]

தினகவி, *s.* A poem in praise of a king, on his rising up and sitting down. 2. The poet who composed it. தற்புலவன்.

தினகாலம். Always, எப்போதும்.

தினக்காய்ச்சல், *s.* Quotidian fever.

தினசாரிக்காரன், *s.* One who always rides, &c. See சாரி.

தினசேரி. [*prov.*] Daily, நித்தம். (*c.*)

தினசேஷம், *s.* [*in astron.*] The difference between the வருடசேஷம் and the next less number of days in பக்கிரதி.

தினச்சரி, *s.* Occupations of a complete day, முழுநாள்வேலை. (*R.*)

தினச்சரிதை, *s.* The history of one's life.

தினத்திரயம், *s.* Occurrence of three lunar asterisms in one day.

தினந்தினம். Day after day.

தினந்தோறும் — தினமும், *adv.* (*sometimes* தினமானம்.) Every day, daily.

தினபலன், *s.* Daily fortune, daily results of astrological configurations at the birth as written in some nativities.

தினப்படி, *s.* Daily allowance.

தினப்பாடு, *adv.* Every day.

தினப்பிரளயம், *s.* The flood recurring at the close of each day of Brahma.

தினமணி, *s.* (*St.*) The sun, as the pearl of the day.

தினமயக்கம், *s.* Every day's illusion. (சிவவாக்.)

தினம்பார்க்க, *inf.* To distinguish lucky from unlucky days.

தினவர்த்தமானம், *s.* Daily news.
இன்றைத்தினம். To-day; நாளைத்தினம், to-morrow; நேற்றைத்தினம், yesterday; சுதினம், a good day—*in salutation*; துர்த்தினம், an unlucky day.

தினுதினம், *s.* Various days. 2. A great or special day, (*plural for sing. by way of eminence.*)

தினாந்தம், *s.* Evening, sunset, close of the day; [*ex* அந்தம், end.]

தினாந்தரம், *adv.* Daily. 2. *s.* Intervening day or days, இடையாந்தரம்.

தினாம்சம், *s.* Part of a day; [*ex* அமிசம்.]

தினாரம்பம், *s.* Beginning of a day, morning; [*ex* ஆரம்பம்.]

தினார்த்தம், *s.* [*in astron.*] Half of the day-time, of the time from sun to sun.

தினாவசானம், *s.* (*St.*) End of a day, evening, as திவசாவசானம்.

தினவு, *v. noun.* Itching, prurience, சொறி; [*ex* தின்.] (*c.*)
தினவுதின்ன — தினவெடுக்க, *inf.* To itch.

தினிசு—தினிசுவாரி, *s.* (*a change of* ஜினிசு.) Kind, sort, வகை. (*c.*)
தினிசுவாரிபாரவை. Put the things with their kind.
தினிசுவாரிச்சரக்குகள், *s.* Different kinds of goods.

தினை, *s.* Millet, a kind of grain, ஓர்தானியம், Panicum italicum, *L.* 2. (*fig.*) Smallness, a trifle, சிறுமை.—There are different kinds of millet, வெண்டினை, white; அச்சித்தினை, another small kind (probably from Acheen); காட்டுத்தினை, wild; செந்தினை, red; கருந்தினை, dark; அணில்வாற்றினை, a kind of white millet with ears supposed to resemble the tail of the squirrel.
தினைவிதைத்தவர்தினையறுப்பார்வினைவிதைத்தவர்வினையறுப்பார். They that sow millet shall reap millet; they that do evil, will get evil.

தினைக்கஞ்சி, *s.* Millet gruel, for sick persons.

தினைக்குருவி, *s.* A small kind of bird, தர்சிறுகுருவி.

தினைச்சாமை, *s.* [*prov.*] The தினை grain, as a species of சாமை.

தினைத்தாள், *s.* Millet stalks or straw.

தினைப்புனம்—தினைப்புலம், *s.* A millet field.

தினைமா, *s.* Millet-flour.

தினையரிசி, *s.* Husked millet.

தினையளவு, *s.* As much as a grain of millet; i. e. a small matter.
தினையளவுமுதவான். He will not help in the least.

தின், கிறேன், றேன், பேன், ன, *v. a.* To eat, to feed, to take a meal, உண்ண. 2. [*in poetry.*] To eat light food, pastries and relishes, &c., சிற்றுண்டிபுசிக்க. 3. To chew, to masticate, மெல்ல. 4. To devour—said of an animal, பட்சிக்க. 5. To eat away, consume, corrode—as white ants, iron-mould, rust, &c., அரிக்க. (*c.*)
தின்றதெல்லாஞ்சமித்துப்போயிற்று. What he has eaten is digested; i. e. he has forgotten the benefits I have done him.
தின்றுகொழுத்துப்போனான். By eating (of my food) he is become fat and saucy. (*In abuse.*)
செல்லுதின்றுவிடும். The white ants will eat away.
தின்னுவீட்டில்தின்னி. One who eats with low families. [*prov.*]
மண்தின்றுவிடும். The earth will corrode it.
இந்தஎருதுஅந்தஎருதைத்தின்றுவிடும். This ox will surpass that.
நேற்றுத்தின்றதின்அல்லவோ. Is not this (work, &c.) for what I ate yesterday; i. e. I want food to-day.
புலியைத்தின்னும்நாயுழுகிறதுபோலப்புல்லைத்தின்னுஞ்சென்னுழவுதவுமோ. Will a wild dog which kills the tiger be as useful as an ox that eats grass; i. e. will any one who lives luxuriously labor like one who takes plain food?
யானைதின்றவிளாங்கனிபோலே. Like the wood-apple which the elephant had eaten (swallowed); i. e. hollow, the substance being absorbed through the unbroken shell.

தின்பண்டம், *s.* (*com.* தின்பண்டம்.) Eatables, including pastry and fruits.

தின்பண்டநல்கல், *v. noun.* One of the thirty-two acts of charity. See அறம்.

தின்றல்—தின்னல்—தின்னுதல், *v. noun.* An eating.

தின்றி, *s.* Eatables, தின்.

தின்றிப்போத்து, *s.* (*Tel.* తిండిపోతు.) A glutton; (*lit.*) a well-fed bull.

தின்றுகழிக்க, *inf.* To loathe food from satiety.

தின்னுஞ்சாதி, *s.* Low castes, with whom it is disgraceful to eat. See சாதி.

தின்மை, *s.* [*prop.* தீமை.] An evil, a misfortune—oppos. to நன்மை.

தின்னி, *appel. n.* [*in combin.*] An eater, பிறன்கிழவன்—as பலவீடுதின்னி, one who disgraces himself by getting his food from others; தாய்தகப்பனைத்தின்னி, an orphan—*spoken in pity*; வீண்சோறுதின்னி, one who eats the bread of idleness, &c.

தீ

தீ. A letter compounded of த் and ஈ.

தீ, *s.* Fire, நெருப்பு. 2. Elementary principle of fire and heat, caloric, பஞ்சபூதத்தொன்று. 3. Hell, நரகம். (சது.) 4. As தீக்கனம்.—*Note.* A three-fold class of elementary fire is given in சதுராகரதி. 1. உயிரினுள்ளதீ, principle of fire in the sentient soul, and animal body, being a source of warmth and energy in the system. 2. உதரத்துள்ளதீ, caloric or principle of fire in the stomach, assisting digestion, causing appetite and hunger. It is seated in the peritoneum. 3. சினத்தினெழுந்தீ, fiery principle developing itself in anger. Instead of the first, other authorities give காமத்தீ, the heat or fire of venereal appetite.—*Note* 2. A three-fold class of sacred fire, வேதாக்கினி, is also given. 1. காருகபத்தியம், the sacrificial fire of the Brahmanical householder, received from his ancestors, and kept alive. 2. தட்சிணாக்கினியம், a fire kindled from the standing fire on the southern side of the house, &c. 3. ஆகவனீயம், consecrated fire, taken from the standing fire, for sacrificial purposes.

தீக்கஞ்சி, *s.* A kind of camphor. See தீபக்கொடிச்சி.

தீக்கடன், *s.* (*sometimes* தீக்கருமம்.) The duties of the son or heir to one deceased, such as cremation and other funeral rites performed with fire.

தீக்கடைகோல், *s.* Sticks for producing fire by friction. See கடைகோல்.

தீக்கதிக்கும்பச்சை, *s.* A precious stone, as நாகப்பச்சை.

தீக்கதிர், *s.* A smith's poker, உலையாணிக்கோல். (*R.*)

தீக்கரண்டி, *s.* A little cup or bowl for taking up fire, தீயெடுக்குங்கருவி.

தீக்கல், *s.* Flint, தீத்தட்டிக்கல்.

தீக்காய, *inf.* (*com.* குளிர்காய.) To warm one's self at the fire.

தீக்குடுக்கை, *s.* See குடுக்கை.

தீக்குதிக்க, *inf.* To leap into a pit of fire for self-destruction, as தீக்குளிக்க.

தீக்குருவி, *s.* The Ostrich. See தழல்விழுங்கி.

தீக்குவெறுங்குகை, *s.* Soap, சவுக்காரம். (*R.*)

தீக்குழி, *s.* A pit with coals of fire on which persons walk

தீக்குழிபாய, *inf.* As தீக்குளிக்க. 2. To pass through burning coals, as a ceremony.

தீக்குளிக்க, *inf.* To plunge into fire, for self-destruction. See குளி, *v.*

தீக்கூர்மை, *s.* Rock-salt, இந்துப்பு. 2. Salt extracted from sesamum, as திலாசாரம். (*R.*)

தீக்கையோன், *s.* Siva, as holding fire in his hand. 2. See தீக்கை.

தீக்கொளுத்த, *inf.* To kindle a fire &c., to set fire to any thing.

தீச்சட்டி, *s.* A vessel of coals, for warming one's self, or heating any thing; a chafing dish, கும்பிச்சட்டி. 2. A vessel for fire carried on one's head in performance of a vow.

தீத்தட்டிக்கல், *s.* [*prov.*] (*sometimes* தீத்தட்டி.) A flint.

தீத்தாங்கி, *appel. n.* A fire-fender, தீமறைக்கும்பலகை.

தீத்திரள், *s.* The deluge of fire, வடவாமுகாக்கினி.

தீத்தீண்டல், *v. noun. s.* A marriage ceremony, ஒருசடங்கு.

தீத்தெய்வம், *s.* The god of fire.

தீநா, *s.* [*in seamen's language.*] A lighted torch held up in a vessel, or on shore, as a signal, அடையாளப்பந்தம்.

தீப்பறக்க, *inf.* To flash as fire, to be red hot. (*c.*)

தீப்பற்ற, *inf.* To kindle, as fire.

தீப்பொறி, *s.* A spark of fire.

தீப்போட, *inf.* To set fire to any thing.

தீமுறுகல், *s.* A kind of prepared arsenic, ஓர்பாஷாணம்.

தீயிறைக்க, *inf.* To belch fire. 2. To persecute with wrath.

தீயெச்சம், *s.* See எச்சம்.

தீவட்டி—தீவத்தி, *s.* [*prop.* தீவர்த்தி.] A torch, a flambeau. (*c.*)

தீவட்டிக்காரன், *s.* Torch-bearer.

தீவட்டிக்கொள்ளை, *s.* Plundering one's house, as robbers with torches.

தீவட்டிபிடிக்க, *inf.* To carry a torch.

தீவலஞ்செய்தல், *v. noun.* Worshipping fire, as in the marriage ceremonies, by passing around it to the right, அக்கினிப்பிரதட்சணஞ்செய்தல்.

தீவளர்க்க, *inf.* To kindle or augment a fire, more especially the sacred fire as one of the duties of the Brahmanical house-holder, or a fire for a widow to plunge into.

தீவளர்ப்போர், *appel. n.* Brahmans.

தீவறை, *s.* [*prov.*] A hole dug in the ground for a fire, குழியடுப்பு.

தீவிழ, *inf.* To be consumed by fire, as from heaven; *used in cursing, or lively description.*

தீவிளங்கும்வயிரம், *s.* Ambergris, மீனம்பர். (*R.*)

தீவேட்க, *inf.* To perform a sacrifice, யாகஞ்செய்ய. 2. To marry a wife, கலியாணஞ்செய்ய; [*ex* வேட்க, to sacrifice, &c.]

தீவேள்வி, *s.* A wedding, கலியாணம். (சது.)

தீக்காலி, *s.* A hag, a mischievous woman. See தடைகாலி.

தீ, *adj.* Evil, wicked, sinful.

தீக்குணம், *s.* Evil disposition or practice; vice, evil, துர்க்குணம். Vices are of three classes, of மனம், வாக்கு, and காயம். 1. மனத்தீக்குணம், sins of the mind, as (*a*) கொலைநினைக்கை, murderous intention; (*b*) சமைப்பற்று, libidinous desire; (*c*) ஆசை, avarice, ambition. 2. வாக்கின்தீக்குணம், sins of the mouth—as (*a*) பொய்சொல்லல், lying; (*b*) கோள்சொல்லல், tale-bearing; (*c*) கோபித்துச்சொல்லல், angry speaking; (*d*) பயனில்சொல்லல், trifling or vain discourse. 3 காயத்தீக்குணம், sins of the body—as (*a*) களவாடப்போதல், thievish practices; (*b*) வறிதேதொழில்செயல், idleness; (*c.*) கொலைசெயல், killing, murder

தீக்குணர், *s.* (*plu.*) The vile, the wicked. 2. The base, the low. (*p*)

தீக்குறி—தீச்சகுனம், *s.* A bad sign, symptom or omen, துன்னிமித்தம்.

தீக்கோள், *s.* A malignant planet, an evil portent, துர்க்கிரகம். See கோள்.

தீச்சொல் — தீமொழி, *s.* Slander, evil speaking, பழிச்சொல். (சது.) 2. Inauspicious or evil words; a curse, சாபம்.

தீத்தொழில், *s.* Evil practice, evil deeds. (நாலடி.)

தீயது, *appel. n.* A bad or evil thing.

தீயர், *s.* (*Malayalim.*) A low caste or tribe—oppos. to நாயர், high caste.

தீயொழுக்கம், *s.* Evil conduct, a vicious course of life—oppos. to நல்லொழுக்கம்.

தீயோர்—தீயர், *s.* (*plu.*) The base, the vulgar, தீமக்கள். 2. Savages, barbarians, மூடர். 3. Hunters, those that live by the chase, வேடர்.

தீவினை, *s.* Evil deeds, vile conduct, wickedness, பாவம்; [*ex* வினை.]

தீ, *adj.* (*with an incremental letter.*) Palatable, sweet, delicious, luscious, இனிமையுள்ள. 2. Agreeable, gratifying, pleasant to the ear or mind, உவப்பான. (*p.*)

தீங்கனி—தீங்காய், *s.* Sweet fruit.

தீஞ்சுவை, *s.* Delicious taste.

தீஞ்சொல், *s.* Pleasant expression, harmonious speech.

தீந்தமிழ், *s.* Polished or elegant Tamil.

தீம்பால், *s.* Sweet milk.

தீம்புகை, *s.* Fragrant smoke, odorous incense, வாசனைப்புகை.

•தீ, *s.* Knowledge, understanding, intellect, அறிவு. W. p. 444. Dhee.

தீ—தீய், கிறது, ந்தது, யும், தீய, *v. n.* To be slightly scorched, or burnt—as food in cooking, கருக. 2. To be scorched—as growing crops, in time of drought, காய.—*Note.* In combination with குடல், நால், மனம், &c., it is used to express envy, deep grief, pity, fear, &c., according to the connection.

அவன்பட்டபாட்டைக்கேட்டால்குடல்தீய்க்குமே. If one hears of his afflictions, his bowels will burn.

தீந்தகறி, s. Burnt curry.

தீந்தசோறு, s. (com. தீஞ்சசோறு.) Burnt rice.

தீந்தமனம், s. An envious mind.

தீபச்சுண்ட, inf. To seethe or boil away.

தீபல், v. noun. (com. தீசல்.) That which is burnt in cooking. 2. Thick, dry curry, பொரிக்கறி.

தீபல்வழிக்க, inf. To scrape off and eat the burnt food that adheres to the chatty; *an act of meanness or poverty.*

தீயவு—தீவு, v. noun. Burning, consumption by fire, தீய்தல்.

தீ—தீய், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To scorch slightly in cooking; to burn or singe, காந்துவிக்க. 2. To dry up water, as the sun, or the fire in cooking, காயச்செய்ய. 3. To boil fish, &c., and dry away the water, that it may keep, மீன்முதலியவதீய்க்க. 4. To scorch, burn, or singe growing crops, பயிரைத்தீய்க்க. 5. To dry up or absorb humors in the body; commonly by external applications, வாட்ட. 6. To sear, to cauterize, சுட. (c.)

தீக்கணம், s. One of the three kinds of ominous feet for the beginning of a poem. See அட்டகணம், under கணம்.

*தீக்கை, s. Initiation by a Guru, &c., See தீட்சை. (p.)

தீக்கையோன், s. A guru, a spiritual teacher, குரு. 2. A disciple who has received தீட்சை from a guru, தீட்சைபெற்றவன். 3. Siva. See under தீ.

தீங்கு, s. Evil, vice, wickedness, crime, பொல்லாங்கு. 2. Misfortune, calamity, adversity, ruin, கேடு. 3. Fault, defect, blemish, தவறு. (c.)

தீங்கினர், s. (plu.) The vicious, the wicked, தீயோர். (p.)

தீங்குசெய்ய, inf. To injure, hurt, harm.

தீங்குநினைக்க, inf. To intend mischief, to design evil against one.

தீங்குசம்பவிட, inf. To come upon or befall one, as misfortune, evil, &c.

தீச்சலம், s. Sea-shell eaten by age, the cuttle bone, கடல்நுரை. (R.)

*தீட்சணம்—தீக்ஷணம்—தீட்சணியம், s. Heat, warmth, வெப்பம். 2. Keenness, sharpness, acuteness, penetration, as of the intellect, கூர்மை. 3. Powerfulness, fierceness, ardor—as of the sun, உக்கிரம். (c.) W. p. 378. TEEKSHN'A.

தீட்சணபுத்தி, s. An acute intellect.

தீட்சணமானவெயில், s. A scorching and piercing sun. (Colloq.)

*தீட்சதர், s. See தீட்சை.

தீட்சி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, a. v. To give the தீட்சை, as a guru, by communicating the initiatory mantra, தீட்சைகொடுக்க. 2. To impart spiritual illumination to a soul, by look, touch, or teaching—as done by a guru.

தீட்சித்துக்கொள்ள, inf. To receive initiation. 2. To perform all the prescribed exercises for initiation.

*தீட்சை—தீக்ஷை—தீக்கை, s. Initiation of a disciple into the Saiva religion by a Guru, who with appropriate ceremonies communicates the appointed mantras; also his introduction to any higher stage or degree in the system, குருபதேசம். 2. Special means employed by a Guru for the instruction and mental illumination of a disciple; intended for the removal of his sins, and the ripening of his soul for emancipation, ஞானபோதனை. 3. The imparting of spiritual illumination to a soul ripening for absorption; its accumulated stock of merit and demerit—the results of former actions—together with its original மலம்—the source of these actions—being nearly exhausted by the joys and sufferings experienced in its former transmigrations, பக்குவானமாவைகசமாயேற்றல். 4. Performance of a course of austerities, விரதம்பமம். 5. Performance of vows, சங்கற்பம். W. p. 410. DEEKSHA. —Note. There are seven kinds of தீட்சை. 1. சட்சுதீட்சை, நயனதீட்சை, by the eye or by looking on the disciple for the dispersion of his mental darkness and moral evils, and the communication of spiritual light. 2. பரிசதீட்சை, by the touch, or placing the right hand on the disciple's head, and touching five principal parts of his body, thus conferring on him the virtue of the five lettered incantations. 3. வாசகதீட்சை, வாசகதீட்சை, oral instruction, and illumination. 4. மானசதீட்சை, by the mind or intense interest felt for the disciple, leading to the enlightening of his mind, &c. 5. சாஸ்திரதீட்சை, நூற்தீட்சை, spiritual illumination by means of the shastras. 6. யோகதீட்சை, பாவ. தீட்சை, instruction by example, in character of the silent, motionless ascetic, in the eight postures prescribed. (See யோகம்.) 7. அவுத்திரிதீட்சை, imparting instruction by symbolic figures, made on the ground, &c. This last is two-fold, ஞானவுத்திரி, and கிரியாவுத்திரி.—Note. There are two other kinds of தீட்சை. 1. சவீசதீட்சை, instruction that has reference to future rites to make them complete; 2. நிர்ப்பீசதீட்சை, instruction complete in itself.

சைவதீட்சை—சைவதீட்சை, s. The three stated introductory rites of the Saiva system. 1. சமயதீட்சை, the initiatory rite of discipleship. 2. விசேஷதீட்சை, special rite confirming the disciple, after which he eats in private, or unseen by those of lower degree, and is eligible to read, and receive instruction in the Agama mysteries. It is administered only to சைவர், who eat no flesh or fish. 3. நிருவாணதீட்சை, the highest rite entitling the disciple to perform *puja*, to sit and eat with his Guru, and to enjoy all the privileges of the system.

தீட்சதர், s. (plu.) Persons who have received the initiatory, or any succeeding rite of the Saiva religion, தீட்சைபெற்றோர். 2. The brahmans of சிதம்பரம், formerly said to have been three-thousand, தில்லைமூவாயிரவர்.

தீட்சதன், s. A disciple who has received the தீட்சை.

தீட்சைகேட்க—தீட்சைபெற, inf. To receive தீட்சை of the guru.

தீட்சைகொடுக்க—தீட்சைபண்ண—தீட்சைவைக்க, inf. To administer தீட்சை.

தீட்சைபெற்றவன், appel. n. (neg. தீட்சையில்லாதவன்.) One who has received தீட்சை, to whom the secrets of religion may be communicated.

தீட்டம்—தீட்டு, s. Ceremonial impurity from catamenia, child-birth, contact with a dead body, having a death in the house, &c., ஆசூசம். 2. Women's monthly course, catamenia, மகளிர்தொடக்கு. (c.)

தீட்டுக்கழிக்க, inf. To perform ceremonial purification, especially after child-birth.

தீட்டுக்காரி—தீட்டக்காரி, s. A woman in her monthly course. 2. A woman ceremonially impure.

தீட்டுச்சீலை—தீட்டச்சீலை, s. Menstruous cloths. 2. Cloths impure from child-birth.

தீட்டுத்தொடக்கு, s. Ceremonial uncleanness; commonly of child-birth or the menses.

தீட்டுப்பட, inf. To be ceremonially polluted. 2. (fig.) To be defiled—said of a female.

தீட்டுவீடு, s. A house ceremonially impure, from child-birth, &c.

தீட்டு, கிறேன், தீட்டினேன், வேன், தீட்ட, v. a. To whet, hone, sharpen, or rub knives, on a board, கூராக்க. 2. To clean rice, &c., by pounding, அரிசிதீட்ட. 3. (fig.) To beat, strike, அடிக்க. 4. To improve or sharpen the intellects, மனதைத்தீட்ட. 5. (for தீற்று.) To clean the teeth, பல்துலக்க. 6. To write, inscribe, delineate, எழுத. 7. To paint, draw pictures, &c., சித்திரிக்க. 8. To bind, tie, fasten, கட்ட. (திருக்குற்றாலப்புராணம்.)

தீட்டத்தீட்டக்கூராகிறது. It becomes sharpened the more it is whetted; (fig.) the mental powers improve by exercise, application and study.

தீட்டிப்பார்க்க, inf. To try a knife by a hone. 2. To try one's learning by questions.

நாக்குத்தீட்ட, inf. [prov. in cant usage.] To praise one's self.

தீட்டல், v. noun. Writing, sharpening, cleansing, &c., as the verb.

தீட்டலரிசி—தீட்டரிசி, s. [prov.] Rice sifted and cleansed. (c.)

தீட்டு, v. noun. Whetting, honing, கூர்மையாக்குதல்.

தீட்டுக்கல்—தீட்டுகல், s. A whet-stone, a hone, &c., சாணைக்கல்.

தீட்டுக்கோல்—தீட்டுகோல், s. A paint brush, எழுதுகோல். (p.)

தீட்டுப்பலகை—தீட்டுமரம், s. A board or slab for sharpening or cleaning knives or other instruments.

தீட்பு, s. (also தீழ்ப்பு. vul. in cant.) Baseness, meanness, degradation, inferiority, இழிவு. 2. A stigma on one's character, குலவடு.

தீட்பாய்ப்பேச, inf. To speak of one ignominiously.

தீட்பானவன், appel. n. A low, degraded person, one who has disgraced himself.

தீண்டியம், *s.* A shrub, a variety of Lawsonia spinosa with red flowers, பவளக்குறிஞ்சி.

தீண்டு, கிறேன், தீண்டினேன், வேன், தீண்ட, *v. a.* To touch, feel, come in contact with, தொட. 2. To infect or infuse poison, by contact; to defile, contaminate by touching, தொற்ற. 3. To envenom, as a snake, by biting, விஷந்தீண்ட. 4 To deflour, ravish, கற்பழிக்க. 5. To grasp, take hold of, to appropriate, பற்ற. (*c.*)

சர்ப்பந்தீண்டியிறந்தான். He was bitten by a serpent and died.

இருசுடரை இராகுகேதுதீண்டின. Rahù and Kéthù seized the two lights of the sun and moon.

ஆத்துமா அந்தக்கரணத்தைத் தீண்டிக்கொண்டறியும். The soul understands by the comprehension of the mental faculties.

கிராணந்தீண்டுதல், *v. noun.* The occurring (touching) of an eclipse. (*c.*)

தீண்டாச்சாதி, *s.* Low castes that are not to be touched.

தீண்டாநெருப்பு, *s.* An untouchable fire; i. e. a matron of unapproachable chastity, பதிவிரதை.

பிறர்தாரத்தைத்தீண்ட, *inf.* To defile another's wife.

தீண்டுகை, *v. noun.* Touching, feeling.

தீது, *s.* Evil, vice, mischief, தீமை. 2. Fault, blemish, defect, குற்றம். 3. (*neut. sing. sym. verb.*) It is evil, தீமையாயிருக்கிறது.

•தீத்தம—தீப்தம், *s.* Splendor, brightness, பிரகாசம். W. p. 411. DEEPTA. 2. One of the twenty-eight Agamas, சிவாகமத்தொன்று. 3. Assafœtida, பெருங்காயம். 4. (*c.*) Sacred water, as தீர்த்தம்.

•தீபகம், *s.* A lamp light, விளக்கு. 2. A figure in Rhetoric. (See தீவகம்.) W. p. 411. DEEPAKA. 3. A decoy bird or beast, பார்வைவிலங்கு.

•தீபம், *s.* A lamp, commonly one lighted, விளக்கு. W. p. 411. DEEPA. (*c.*) 2. A figure in Rhetoric, as தீபகம். 3. The fifteenth lunar asterism, சோதிநாள். 4. (*Sa. Dwipa.*) Island, continent, தீவு.

தீபக்கம்பம்—தீபமத்திகை, *s.* Lamp-stand, விளக்குத்தண்டு.

தீபகாந்தி, *s.* A diamond, வைரக்கல்.

தீபக்கால், *s.* [*prov.*] A lamp-stand used in temples, a candelabrum, விளக்கேந்துகருவி. 2. A candlestick, விளக்குத்தண்டு.

தீபக்கிட்டம், *s.* Lamp-black.

தீபக்கொடிச்சி, *s.* A kind of camphor, ஆரதிகருப்பூரம்.

தீபதூபம், *s.* Lamps and incense—spoken of as presented before an idol, or great person, விளக்குந்நறும்புகையும்.

தீபதூபங்காட்ட, *inf.* To present lights and frankincense.

தீபாக்கினி, *s.* Lighted lamps before an idol, &c. 2. One of the three kinds of medicinal fires. See அக்கினி.

தீபாராதனை, *s.* Waving lamps before the idol; lamp-worship.

•தீபவதி, *s.* A river, ஆறு. (சது.)

•தீபவராடி, *s.* A subdivision of the வராடி melody, வராடித்திறத்தினொன்று.

•தீபனம், *s.* (*sometimes* தீவனம்.) Appetite, பசி. 2. [*prov.*] Eatables, food, provision, ஆகாரம். (*c.*)—*Note.* The Sanscrit and Tamil words have the same meaning.

எனக்குப்பசித்தீபனமில்லை. I am not hungry.

அதிகதீபனம், *s.* Great hunger.

தீபாவலி, *s.* Lamp-lighting in October. See தீபாவளி.

•தீபாவளி — தீபாளி — தீவாளி, *s.* The lighting of lamps early in the morning on the fourth day of the decreasing moon in October, each one doing it, first putting a little oil on the head, to commemorate the killing of Naracasura by Krishna, ஓர்பெருநாள். W. p. 411. DEEPALEE.

•தீபிகை—தீவிகை, *s.* A lamp, விளக்கு. (சது.)

கணிததீபிகை, *s.* A treatise on arithmetic.

•தீப்தம்—தீத்தம், *s.* Splendor, பிரகாசம். W. p. 411. DEEPTA. 2. One of the twenty-eight Agamas. See சிவாகமம், உ-அ.

தீப்பி, *s.* Fire, நெருப்பு. (பிங்.)—In திவாகரம், it is தீபி.

தீமை, *s.* Evil, wickedness, vice, sin, turpitude, depravity, பொல்லாங்கு. 2. Mischief, injury, harm, hurt, கேடு. (*c.*)

தீமைசெய்ய, *inf.* To practice vice, to be vicious. 2. To do evil, injury, mischief.

தீம், *s.* Sweetness, agreeableness. See தீ, *adj.*

தீம்பு, *s.* Wickedness, vileness, vice, பொல்லாங்கு. 2. Baseness, vulgarity, தீழ்மை. (*p.*)

தீம்பன், *s.* (*plu.* தீம்பர், *fem. sing.* தீம்பி.) The base, the wicked.

தீயகம், *s.* Hell, நரகம்; [*ex* தீ, fire *et* அகம்.]

தீயம், *s.* (*Tel.*) Sweetness, lusciousness, deliciousness, தித்திப்பு.

தீயர், *s.* A caste. See தீ, evil.

தீயல், *v. noun.* See தீ, *v.*

தீயளி, *s.* Immature fruit, காய். (சது.)—In நிகண்டு, தீவிளி.

தீயாக்கீரை, *s.* A medicinal plant, the பொன்னாங்காணி.

•தீரம், *s.* Strength, vigor, power, வலி. 2. Courage, bravery, valor, தைரியம். W. p. 444. DHEERA. 3. Shore, bank, border, edge, கரை. 4 Ridge, dam in rice-fields, சிறுவரம்பு. (*Sa. Teera.*)

தீரத்துவம், *s.* Strength, courage, வலியுடைமை.

தீரவாசம், *s.* Dwelling on the shore of a river.

தீரன், *s.* A brave or valiant man, a hero.

தீராந்தி, *s.* (*for.*) Beam of a building, or cross beam, விட்டம்.

தீராமை, *s.* [*prov.*] A heinous crime, great injustice, கடுந்துரோகம். 2. False accusation, பொய்க்குற்றச்சாட்டு. 3. Malicious slander of a virtuous person, வன்மத்தாற்சொல்லுங்கோள். 4. See தீர், *v. n.*

தீரிக்கை, *s.* (*Tel.*) Leisure time, ஒழிந்தவேளை. (*R.*)

தீர், கிறது, ந்தது, தீரும், தீர, *v. n.* To end, terminate, be consummated, completed, முடிய. 2. To cease as pain or disease; terminate as a curse, or its effects, நீங்க. 3. To be determined, decided, settled, as a law-suit or quarrel; to be passed as a sentence, தீர்மானமாக. 4. To be performed or completed as a duty; to be perfected, finished, நிறைவேற. 5. To leave, quit, cease, pass way, நீங்க. 6. To be long, remote, to extend, நீள. 7. To be exhausted, used up, consumed, அற. 8. To expire as the allotted punishment for past deeds by the suffering and enjoyment of the soul; to be expiated as sin; to end as transmigration by absorption in the deity, ஊழொழிய. 9. *v. a.* (கிறேன், ந்தேன், வேன், தீர.) To polish or grind gems, clean gems, சாணைதீர. 10. To fire off a cannon or musket, வெடிதீர. 11. To dye, stain, tinge, imbue with color, சாயந்தீர. 12. To finish, as the interlude between the stanzas in singing, playing, dancing, beating time, &c., தாளந்தீர. 13. To levy duty, assess a tax, &c. சுங்கந்தீர. 14. To solve a problem or make any mathematical calculation, கணக்குத்தீர. (*c.*) 15. (*R.*) To draw out in a line, as பார்தீர, to draw out troops in ranks.

எனக்குவரத்தீராது. I cannot come.

அவர்கள் பலவந்தம்செய்ததனால் தீராதென்று கொடுக்கவேண்டியிருந்தது. By their pressing (he said) it will not cease; it is necessary to give.—*Note* தீராது, in such cases has a peculiar meaning.

தாளந்தீர்த்தான். He finished a tune.

அதற்குவர்ணந்தீர்த்தான். He painted it.

இவன்தீர்ந்தசாமி. He is a brave fellow; (*lit.*) a brave god. (*In irony*)

தீர்கடை, *s.* The last end of a thing, termination, conclusion, முடிவு. 2. Absoluteness, entireness, முழுமை.

தீர்ந்தகணக்கு, *s.* A settled account.

தீர்ந்தகள்ளன், *s.* A finished rogue, a thorough villain, desperate thief.

தீர்ந்தசரக்கு, *s.* (*neg.* தீராதசரக்கு.) Goods on which duty is paid. 2. Goods bargained for.

தீர்ந்தபட்சம் *s.* The final settlement of accounts, disputes, &c.

தீர்ந்தவன், *s.* A skilful, experienced man; an adept. (*Commonly in a bad sense.*)

தீர்ந்தவேலை, *s.* A finished work.

பட்டைதீர, *inf.* To give sides to a gem, to a piece of timber, or to a stone, in cutting or polishing.

சாயந்தீர்கிறவன், *s.* A dyer.

நவைதீருமாகமம், *s.* The faultless Agamas. (*p.*)

தீர, *inf.* [*used adv.*] Altogether, entirely, perfectly, absolutely, thoroughly, completely, முழுவதும்.

தீரப்படித்தவனொருவனுமில்லை. There is none perfect in his studies.

தீரமறக்க, *inf.* To forget entirely, altogether.

தீராமை, *v. noun.* (*neg.*) That which cannot be obviated.

தீராநோய்—தீராவியாதி, *s.* An incurable disease.

தீராப்பழி, *s.* An unpardonable injury. 2. Implacable enmity.

தீராவழக்கு, *s.* A law-suit or dispute which cannot be settled easily.

தீராவழக்குக்குத்தெய்வமேசாட்சி. God only understands an intricate law-suit.

தீர்வு, *v. noun.* Settlement, close, finish, termination.

*தீர்க்கம், *s.* That which is long, either in space or time; extension, நீட்சி. 2. Long vowel, நெட்டெழுத்து. W. p. 411. DEERGHA. 3. Distance, remoteness, தூரம். 4. Perfection, completeness, accurateness, thoroughness, பூரணம். 5. Distinctness in utterance, good articulation, உச்சரிப்பின்திறம். 6. (*Beschi*) Decision, positiveness, certainty, திட்டம். (c.)

தீர்க்கசதுரம், *s.* An oblong square, a parallellogram, நீண்டசதுரம்.

தீர்க்கசத்திரம், *s.* (*St.*) A sacrifice for twelve years, யாகவிசேஷம்.

தீர்க்கசந்தி, *s.* [*in gram.*] Changes in Sanscrit words, of two similar vowels, whether long or short, when they coalesce in one long vowel, வடவெழுத்துப்புணர்ச்சியுளொன்று.

தீர்க்கசிநேகம், *s.* Long continued friendship.

தீர்க்கசுமங்கலி, *s.* A woman blessed with long enjoyment of the marriage state, &c.; *used in congratulation.*

தீர்க்கதண்டம், *s.* The most submissive obeisance, or homage; prostration at full length with the arms extended, சாஷ்டாங்கதண்டம்.

தீர்க்கதரிசனம், *s.* (*Chris. usage.*) Distant sight, remote vision, foresight, prophesy.

தீர்க்கதரிசனஞ்சொல்ல, *inf.* To prophesy.

தீர்க்கதரிசனி, *s.* A prophetess.

தீர்க்கதரிசி, *s.* A seer, a prophet. W. p. 412. DEERGHADARSIN.

தீர்க்கதிருஷ்டி, *s.* A long sight.

தீர்க்கநித்திரை, *s.* Long sleep, நெடுந்துக்கம். 2. (*fig.*) Death, மரணம்.

தீர்க்கபாகு, *s.* A long arm, (*fig.*) a long armed man.

தீர்க்கம்போட, *inf.* To put the dash over a long vowel

தீர்க்கயோசனை, *s.* A careful consideration.

தீர்க்கவசனம், *s.* Decisive language.

தீர்க்கவைரம், *s.* Continued, cherished hatred.

தீர்க்காயுசு, *s.* Long life, longevity. (*c.*)

தீர்க்காயுஷியம், *s.* Length of days; *a salutation.*

தீர்க்காயுதம், *s.* A spear or lance.

தீர்க்காலோசனை, *s.* Mature consideration.

தீர், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To finish, complete, conclude, முடிக்க. 2. To settle, decide, determine, predestinate, தீர்மானிக்க. 3. To adjust a quarrel, bargain, marriage contract, &c., திட்டஞ்செய்ய. 4 To arbitrate, decide a law-suit, pass sentence as a judge, தீர்ப்புச்செய்ய. 5. To remove moral or ceremonial defilement, to expiate, நீக்க. 6. To remove affliction, sorrow, pain; to terminate births, as the Deity, விலக்க. 7. To satisfy hunger, desire, revenge, lust, &c., திருத்தியாக்க. 8. To accomplish, effect, fulfil, consummate, perfect, பூர்த்தியாக்க. (c.)

தீர்த்தறுத்துக்கொள்ள, *inf.* To drop acquaintance, terminate intercourse or dealings.

தீர்த்துக்கொடுக்க, *inf.* To settle the price and give up the commodity.

தீர்த்துக்கொள்ள, *inf.* To settle an account.

தீர்த்துப்போட—தீர்த்துவிட, *inf.* To settle a difference between parties. 2. To pay off.

தீர்த்தல், *v. noun.* A causing to leave or to quit, போக்குதல். (நீதிநெறிவிள.)

தீர்ப்பு, *v. noun.* Settlement, conclusion, completion, termination, consummation, முடிப்பு. 2. Decision, award, judgment, decree, sentence, நியமம். 3. Determination, resolution, தீர்மானம். 4. Clearance, removal, liquidation, remission, நிவிர்த்தி. 5. Antidote, atonement, expiation, பரிகரிப்பு.

தீர்ப்பானபேச்சு, *s.* A decision, conclusion.

தீர்ப்பானவிலை, *s.* A settled price—as தீர்மானமானவிலை.

தீர்ப்புக்கட்ட, *inf.* To make a decision, settle a business, to finish, decide, fix. 2. To form an opinion, judgment, &c.

தீர்ப்புக்காண, *inf.* To find out the result of a law-suit, &c. 2. To terminate, come to an issue—as a law-suit.

தீர்ப்புச்சொல்ல, *inf.* To speak decidedly. 2. To pass sentence, pronounce judgment. 3. To suggest a remedy, antidote, &c., or counteraction of a curse.

தீர்ப்புநகல், *s.* Copy of a decision.

தீர்ப்பெழுத, *inf.* To record a sentence, award, &c., as a judge.

*தீர்த்தகர் — தீர்த்தகரர், *s.* Rishis among the Jainas, சமணமுனிவர். W. p. 379. TEERTHAKARA.

*தீர்த்தம், *s.* (*Sa. Teertha.*) Ceremonial purity, சுத்தம். 2. Sacred rivers, or waters at a place of pilgrimage, or as brought from such place, புண்ணியதீர்த்தம். 3. Consecrated water used for washing an idol, which is afterward brought out and given to the people, especially on the last day of the festival, either to be drunk by them, or taken home for the sick to dispel diseases, திருமஞ்சனநீர். 4. Water consecrated for the sick, ஒதியிறைக்குமீர். 5. The merit of bathing on an auspicious day, புண்ணியகாலஸ்நானத்தம். 6. A temple festival or procession, திருவிழா. 7. Water in common, நீர். 8. Water given by the brahman in court, in administering an oath, தனசிதீர்த்தம். (c.)—*Note.* The seven sacred rivers are the following, 1. கங்கை, Ganges; 2. யமுனை, Jumna; 3. சரச்சுவதி, Sarasvati which is northward of Delhi; 4. நருமதை, Nurbudha; 5. காவேரி Kavery; 6. குமரி, Kumari at Cape Comorin; 7. கோதாவரி, Godavery.

தீர்த்தங்கொடுக்க, *inf.* To distribute water, in which the idol has been washed.

தீர்த்தசேவை, *s.* Pilgrimage to holy bathing places.

தீர்த்தமாட, *inf.* To bathe in sacred waters. 2. To bathe as a part of the daily religious duties.

தீர்த்தயாத்திரை, *s.* Pilgrimage to a holy place for the purpose of bathing.

தீர்த்தர், *s.* (*plu.*) Devas, celestials, inhabitants of Swerga, கடவுளர். (சது)

தீர்த்தவாசி, *appel. n.* A pilgrim.

தீர்த்தன், *s.* Argha of the Jainas, அருகன். 2. Siva, சிவன். 3. Guru, குரு. 4. A teacher, especially of the Vedas, உபாத்தியாயன்.

*தீர்த்திகை, *s.* A river, ஆறு; [*ex* தீர்த்தம்.]

தீர்ப்பு, *v. noun.* See தீர், *v. a.*

துரவு, *s.* An unwalled well or reservoir, a hole or excavation to get water, கூவம். 2. A large or deep well, கிணறு. (c.)

துரவுச்சட்டம், *s.* A wicker-work—curb at the bottom of a well.

துரவுமுழுக, *inf.* [*loc.*] To sink a well by gradually lowering a curb.

•துராகதம் — துராகிருதம், *s.* Misconduct, misbehaviour, irregular or wicked action. தீத்தொழில்; [*ex* துர், evil.] (c.)

துராகிருதஞ்செய்கிறவன். One who misconducts himself.

துராலேபம், *s.* A medicinal plant, நிலப்பஞ்சோதி, Fragia, *L.*

துரால், *s.* A chip, a straw, a blade of grass, a trifle, செத்தை. 2. Affliction, distress, sorrow, துன்பம். (சது.)

துரிசு, *s.* Sorrow, affliction, distress, துன்பம். (சது.) 2. Fault, defect. குற்றம். 3. [*improp. for* துருசு.] Verdigris, &c.

துரிஞ்சில், *s.* A bat. வெளவால். (c.) 2. The உசிலமரம். (சது.)

•துரிதம் — துருதம், *s.* Haste, speed, quickness, swiftness, velocity, expedition, சீக்கிரம். W. p. 394. TVARITA. 2. The quickest movement, in music, or dancing, துரிதலயம். 3. Vice, wickedness, sin, turpitude, பாவம். (*Sa. Durita.*) 4. Destruction, ruin, annihilation, கேடு. 5. Agitation of mind, perturbation, confusion, கலக்கம். 6. Affliction, sorrow, distress, துன்பம்.

துரிதமடிக்க, *inf.* [*prov.*] To beat drums to the quickest movement.

துரிதம்பண்ண, *inf.* To hasten, hurry, move or act with expedition.

துரிதம்போட, *inf.* To dance with a quick step. 2. [*prov.*] To persist in an improper request.

•துரியம், *s.* Bearing, carrying, being fit or able to bear, சுமத்தல். 2 A beast of burden, பொதிமாடு. W. p. 445. DHUREEJA, DHURYYA. 3. The fourth of the five அவத்தை, or stations of the soul. (See அவத்தை) 4. The highest degree of the சுத்தம் state, that in which the ascetic attains entire quiescence, &c. (See சுத்தாவத்தை.) 5. The Divine Being or universal spirit, பரமாத்துமா.

துரியர், *s.* (*plu.*) Souls in the highest degree of the சுத்தம் state, சுத்தாத்துமாக்கள்.

துரியாதீதம், *s.* The fifth and last state of the soul. (See அவத்தை.) 2. The highest state of souls when superior to, or completely free from corporeal entanglements. ஆன்மாக்கள்மிகத்தூய்மையாய்நிற்குநிலை; [*ex* அதீதம்.]

•துரியோதனன், *s.* Dury'od'hana the eldest of the hundred sons of திருதராட்டிரன், a king famous in the wars of Mahabharata, சுயோதனன்.

•துரீ, *s.* A brush or fibrous stick used by weavers to clean and separate the threads of the woof, பாவாற்றி. W. p. 381. TUREE.

துரீல், *s.* Suddenness, சடிதி. (*R.*)

துரீலென்றுவந்தான். He came suddenly.

துரு, *s.* Rust, இருப்புக்கறை 2. Verdigris, களிம்பு. (c.)

துருப்பிடிக்க, *inf.* To rust, gather rust. 2 [*for* துருவிப்பிடிக்க.] To search out. See தப்புத்துருப்பிடிக்க.

•துருக்ஷம், *s.* As துருக்கம், *Sa.* (*R.*)

துருக்கம், *s.* Musk-cat, கஸ்தூரிமிருகம். 2. The குக்குமரம், an aromatic tree. 3. Perturbation, confusion of mind, கலக்கம். (*in* நிகர். தருமம்.) 4. Desert, forest, காடு. (சது.)

•துருக்கம், *s.* A mountain fortress, stronghold, fastness. மலைமின்மேற்கோட்டை. (சது.) W. p. 415. DURGA.

துருக்கல், *s.* A kind of red stone, Laterite, செம்புறைக்கல். See கல்.

•துருக்கு, *s.* (*St.* துருஷ்கம்.) Turkisthan, the original country of the Turks, துருக்கர்தேசம். W. p. 381. TURUSHKA. 2. The caste or race of Moors, or Mohammedans, மிலேச்சசாதி. 3. Language of the Moors, ஒர்பாஷை.

துருக்கர், *s.* (*com.* துலுக்கர்.) (*pl.*) Turks, one of the classes of Mohammedans of Hindustan.

துருக்கி, *s.* A large Turkish horse, துருக்கதேசத்துக்குதிரை. 2. (*modern.*) As துருக்கு.

துருசி — துரிசு, *s.* Verdigris, copperas, sulphate of copper or blue vitriol, மயிற்றுத்தம். 2. Spot, dirt, blemish, stain, defect, மாசு.

துருசுபட, *inf.* To become spotted, stained, defective.

துருசு, *s.* Haste, speed, சீக்கிரம். 2. See துரிசு. (*c.*)

துருசுபண்ண, *inf.* To hasten, hurry.

துருஸ்து, *s.* (*Pers.*) Repair, mending, பழுதுபார்த்தல். (*c.*)

துருஸ்தாக்க — துருஸ்துசெய்ய — துருஸ்துபண்ண, *inf.* To repair, amend.

•துருதம், *s.* Quickness, &c. See துரிதம்.

துருதுரு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To be fidgety, restless, to make idle motions or gestures, குமுகுமெக்க 2. To quiver, as the lips or tongue through desire to speak, or the hand itching to strike, துடிதுடிக்க. 3. To be in too great haste, ஆத்திரப்பட. (*c.*) [*ex Su. Dru*, to move, to hurt.]

துருதுருத்தகை, *s.* An itching hand, ready for mischief.

துருதுருத்தபிள்ளை, *s.* A fidgety child.

துருதுருத்தவாய், *s.* Pertness, impertinence, an unrestrained tongue.

துருதுருபாவை, *s.* [*prov.*] A restless, fidgety girl. See சுதுருபாவை.

துருதுருப்பு, *v. noun.* Restlessness, impatience, அமைவின்மை.

துருதுறெனல், *v. noun.* Being restless, impatient, uneasy, always in motion.

துருதுரும்பை, *s.* A child's play, ஓர் பிள்ளைகள்விளையாட்டு. (*R.*)

•துருதை, *s.* Itching, தினவு. 2. (*fig.*) An itching desire, eagerness, சுறுசுறுப்பு.

•துருத்தி, *s.* A bellows, உலைத்துருத்தி. 2. A leathern bag or bottle for carrying water, &c., சித்துருத்தி. 3. A kind of leather squirt for sprinkling perfumed water, &c. (See மட்டித்துருத்தி) (*c.*) W. p. 420. DRUTI. 4 (சது.) Islet, spots of dry land in a river, ஆற்றிடைக்குறை.

துருத்திக்கழுத்து—துருத்திக்குழற்பன்னை—துருத்திக்குழாய்—துருத்திமூக்கு, *s.* The nose of a bellows made of a sheep skin, being the neck of the skin

துருத்திப்பாணம், *s.* A leathern bag filled with gun powder used as a rocket, or to blow open a gate, &c.

துருத்தியூத, *inf.* To blow a bellows.

•துருத்தூரம், *s.* The ஊமத்தை or thorn apple-plant. Datura, *L.* called also Stramonium. See தத்தூரம்.

துருந்து, கிறேன், துருந்தினேன், வேன், துருந்த, *v. a.* To enlarge a hole or cavity, துளைபெருக்கப்பண்ண. 2. To explore, examine, ஆராய.

•துருபதன், *s.* King of Panchala and father of Dropadi, திரௌபதைதந்தை.

துருபவருணி, *s.* A shrub, காட்டாமணக்கு, Jatropha. *L.*

துருப்பணம், *s.* (*com.* தரப்பணம்.) The carpenter's bit or drill, தச்சர்துருவியெஃகு.

துருப்பிடிக்க, *inf.* [*improp. for* துருவிப்பிடிக்க.] To trace out a thief, to search for a thing stolen, &c., தேடிப்பிடிக்க. (*c.*) See under துரு.

•துருமம், *s.* Tree in general, மரப்பொது. (சது.) W. p. 430. DRUMA. 2. Perturbation of mind, மனக்கலக்கம். (நிகர்.)

•துருமோற்பலம், *s.* The கோங்கு tree. (சது.) W. p. 430. DRUMOTPALA.

துரும்பு, *s.* A straw, rush, splinter, sliver, திரணம். 2. [*in card play.*] The *trump.* (*c*) 3. [*loc.*] A token of divorce.

துரும்புபோலேபோனான். He is greatly emaciated.

துரும்பைத்தூணாக்குகிறான். He exaggerates the fault; (*lit.*) he makes a pillar of straw.

துரும்பன், *s.* [*prov.*] A man of the lowest caste, formerly required to wear a rattling ola to give notice of his approach, and to hide himself on meeting a person of good caste; he is the washerman of other low castes, ஈனன்.

துரும்பாட்டம், *s.* Meagerness, thinness, like a rush; [*ex* ஆட்டம், likeness.] 2. *v. noun.* Playing with the *trump* in cards. 3. A play of girls in sand, with a splinter.

துரும்புகொடுக்க, *inf.* To give a straw to a wife in token of divorce. (*Beschi*)

துரும்புவாங்க, *inf.* To take the straw; i. e. accept the divorce.

•துருவண்ணம், *s.* Silver, வெள்ளி. W. p. 417. DURVVARNA. (சது.)

•துருவம், *s.* Immutability, steadiness, stability, அசைவாமை. 2. The north polestar, துருவநட்சத்திரம். 3. The pole of any great circle of the sphere, particularly either of the celestial poles, பூசக்கரத்தின் முனை. 4. A measure in music. (See சத்ததாளம்.) 5. Distance of a planet from the beginning of the siderial Zodiac, கிரகபுடம். 6. One of the twenty-seven astrological yogas, நித்தியயோகத்தொன்று. W. p. 448. D'HRUVA. 7. Longitude of aphelion or apogee 8. Epoch longitude of a planet, especially in combination with மூலம், as மூலத்துருவம். 9. The fraction of the week remaining at the commencement of the year, which is to be added to the numbers in சக்கிரமவாக்கியம் for the beginning of the months 10. [*improp. for* துருக்கம்.] A hill fort 11. [*prov.*] Dexterity in accomplishing a thing, a stratagem, device, உபாயம்.

துருவங்கட்ட, *inf.* To invent a method for finding out an eclipse, or other astronomical phenomenon, கிரகணமுதலியவற்றிற்குத்துருவமிடாக்க. 2 To form a rule for any mathematical calculation, &c.. குட்சமவழிபண்டாக்க. 3. To construct a rule for forming mystical or magical circles, &c. 4 (*fig.*) To devise means or expedients, உபாயந்தேட.

துருவாக்ஷரம் — துருவாட்சரம், *s.* [*in Hindu astron.*] The longitudinal distance of the sun, or a planet, from the first of Aries, at the end of synodic periods, as found in சோதிடவாக்கியம்.

துருவன், *s.* [*in mythol.*] Dhruva the grandson of மநு and son of உத்தானபாதன். 2 The pole star, personified by the demigod Dhruva, துருவநட்சத்திரம். 3. One of the eight demigods, அட்டவசுக்களிலொருவன். W. p. 448. D'HRUVA.

துருவச்சக்கரம், *s.* The wheel of துருவன், the pole star, with which he turns the heavens causing the diurnal motions, சிசுமாரசக்கரம்.

துருவமண்டலம்—துருவபதம், *s.* Region of Dhruva, regent of the pole star.

துருவமாய்நடப்பிக்க, *inf.* To act firmly (*R.*)

•துருவாசன், *s.* A Rishi given to anger. ஒருரிஷி Compare துர்வாசன்.

துருவாடு — துருவை, *s.* A sheep, செம்மறியாடு.

துருவாட்டேறு, *s.* A ram of fleecy sheep.

துருவு, கிறேன், துருவினேன், வேன், துருவ, *v. a.* To bore, drill, perforate, தொளைக்க. 2. To scrape out the interior of a cocoanut, a gourd, &c., to scoop out, scrape, தேங்காய்துருவ 3 To seek, inquire into, search out, trace, pursue, தேடிப்பிடிக்க. (*c*)

துருவலகு, *s.* A cocoa-nut scraper, as துருவுபலகை.

துருவிப்பிடிக்க, *inf.* (*com.* துருப்பிடிக்க.) To hunt out a thief or theft, or to explore any thing very difficult.

துருவுபலகை—துருவுமணை, *s.* A cocoanut scraper, தேங்காய்துருவி

துருவல், *v. noun.* A turning, hollowing, &c.—as the verb.

துருவு, *v. noun.* Scraping, scooping, boring, துருவுகை. 2. Hole, தொளை.

துருளக்கம், *s.* Frankincense, குங்கிலியம். (*R.*)

துரை, *s.* (*Tel.* దొర.) Gentleman, master, nobleman, prince, பிரபு. 2. Magistrate, governor, any officer of government, civil, military or judicial, அதிகாரி. (*c.*)

துரைசானி—துரைச்சி—துரைப்பெண்—துரைமகள், *s.* [*vul.* துரைசாணி.] A lady, princess, matron.

துரைமகன், *s.* Gentleman, prince.

துரைமக்கள், *s.* (*plu*) Gentlemen. 2. Great person's children, princes.

துரைத்தனம், *s.* Government, authority, magistracy.

துரைத்தனம்பண்ண, *inf.* To govern, reign.

துரைச்சி, *s.* A kind of ore, லோககிட்டினை. (*R*) 2. See துரை.

•துரோகம், s. Crime, wickedness, trespass, heinous offence, wrong, sin, பாதகம். 2. Perfidy, treachery, treason, rebellion, இரண்டகம். W. p. 431. DROHA. —*Note.* There are reckoned five kinds of treason, இராசதுரோகம், treason against the king; சுவாமிதுரோகம், sin against God; குருத்துரோகம், sin against a priest; இனத்துரோகம், treachery towards relatives; பிதிர்துரோகம், sin against one's ancestors.

துரோகசிந்தை — துரோகசிந்தனை, s. Malice prepense, treacherous designs.

துரோகம்நினைக்க, *inf.* To intend or design evil to one.

துரோகம்பண்ண, *inf.* To practice treachery, to betray, to act perfidiously.

துரோகி, s. (*masc. and fem.*) A betrayer, a treacherous person, a traitor, a sinner, கொடும்பாவி. 2. A merciless, cruel, hard-hearted person, இரக்கமற்றவன்.

•துரோட்டி, s. (*com.* துறட்டி.) Elephant's hook. (See தோட்டி.) 2. A gardener's crook, தொட்டிக்கோல்; [*ex Sa. Trot'i*, the beak of bird.]

•துரோணம், s. Crow, raven, காக்கை. 2. One of the seven classes of clouds. (See மேகம்.) W. p. 430. DRON'A. 3. பதக்கு, a measure equal to two marcals. 4. The feigned eight-legged bird, எண்காற்புள். 5. A bow, வில். 6. Sagittarius of the Zodiac, தனுவிராசி. 7. The தும்பை shrub. 8. An artificial channel for water, தலைவாய். (R.)

துரோணன் — துரோணாசாரி — துரோணாசாரியன், s. Teacher in archery of the Pandavas and Kurus, தர்வில்லாசிரியன். W. p. 430. DRON'ACHARIYA.

•துரோபதை, s. Wife of the five Pandava princes, பாண்டவர்மனைவி, called also பாஞ்சாலி, as daughter of Drupada king of the Panchala country. W. p. 431. DRAUPADEE.

•துர், s. A prefix used in combination signifying evil, ill, bad, deficient; it is often changed to ற், before the hard letters, to ன் before the soft, as துன்மார்க்கம். Before இடையினம், there is no change. Sometimes ர் is dropped and the relative letter takes its place—as துச்சரிதம், துருபசக்கை. (See துஷ்.) W. p. 414. DUR.

துரதிஷ்டம், s. Ill luck. (c.)

துராசாரம், s. Wickedness, depravity, perversity, a vicious life, தீயொழுக்கம். 2. Indecorum, indecency, immodesty, அவமரியாதை.

துராசாரன் — துராசாரி, s. One who violates the rules of his religion, caste, country, &c., a vicious person of vile character.

துராசை, s. Evil desires, lust, covetousness, &c.

துராத்துமா, s. An evil person, a retch, rascal, scoundrel, villain, தீயன்.

துராலோசனை, s. Bad counsel, prejudicial or evil advice.

துரிச்சை, s. Evil desire. See இச்சை.

துர்க்கதி, s. A wicked life, bad course, கெட்டநடை. 2. (*also* துற்கதி.) Hell, நரகம்.

துர்க்கந்தம், s. (*also* துற்கந்தம்.) Offensive smell, stink, கெட்டநாற்றம்.

துர்க்கருமம் - துர்க்கன்மம் - துஷ்கருமம், s. Evil actions either in performance, or as accumulated and attaching to the soul.

துர்க்கன்மபரிபாகம் — துஷ்கன்மபரிபாகம், s. Ripening or exhaustion of the evil actions of former births.

துர்க்கீர்த்தி, s. Ill fame, infamy.

துர்க்குணம், s. (*also* துற்குணம்.) Bad disposition, ill humor, a vicious course, தீக்குணம்.

துர்க்குணன், s. A vicious, wicked man, தீயன்.

துர்க்குறி, s. Evil omen, bad sign, unfavorable symptom, ominous gesture.

துர்ச்சரிதம், s. (*more properly*, துச்சரிதம்.) Evil practice, evil courses.

துர்ச்சனம், s. Badness, viciousness, maliciousness, mischief, வன்மம். 2. Lewdness, lasciviousness, wantonness, மோகலீலை. 3. Insubordination, refractoriness; rebellion of a youth or dependant, &c., செருக்கு.

துர்ச்சனநடத்தை — துர்ச்சனவியோகம், s. Vicious conduct, a vicious course.

துர்ச்சனன், s. A petulant or insolent man.

துர்ச்சனனைக்கண்டால்தூரவிலகு.......Abstain from an insolent person.

துர்ச்செய்கை, s. Evil action.

துர்ச்சொப்பனம், s. [*also* துச்சொப்பனம்.] A bad or ominous dream.

துர்த்தேவதை, s. A malignant demon.

துர்ப்பலம், s. Weakness, feebleness, thinness, emaciation, பலவீனம். 2. (*fig.*) The state of being reduced in circumstances, சிறுமை.

முன்னமேதுர்ப்பலஅதிலுங்கர்ப்பிணி. Before weak, and now also pregnant; or poor, and under a heavy fine.

துர்ப்பலன், s. Ill result as predicted in astrology, அமங்கலப்பயன். 2. Bad fruit, ill consequence.

துர்ப்பாக்கியம்—தௌர்ப்பாக்கியம், s. Evil, calamity, ill-luck, misery, நிர்ப்பாக்கியம்.

துர்ப்பிட்சம்—துர்ப்பிக்ஷம், s. Famine, பஞ்சம். See பிட்சம்.

துர்ப்பீசம், s. An illegitimate child, வம்புப்பிள்ளை. See பீசம்.

துர்ப்புத்தி, s. Folly, presumption, foolhardiness, infatuation, wickedness, evil propensity; கெடுமதி. 2. Ill-advice, bad counsel, துராலோசனை.

துர்ப்போதனை, s. Bad instruction, ill-advice, கெட்டஉபதேசம்.

துர்மனம், s. An evil mind.

துர்மார்க்கம், s. (*com.* துன்மார்க்கம்.) An evil life.

துர்மாமிசம், s. (*also* துன்மாமிசம்.) Proud flesh in a wound, &c.

•துர்க்கம், s. [*vul.* துற்கம்.] A hill fort. See துருக்கம். (சது.)

•துர்க்கை, s. (*also* துற்கை.) A terrific goddess, consort of Siva, கொற்றவை. 2. The eleventh Nacshatra, பூரநட்சத்திரம். W. p. 415. DURGA.

துர்க்காபூசை-துர்க்கைபூசை, s. Worship of Durga. 2. Worship of Durga on the நவராத்திரி, together with Sarasvati and Lukshmi, three days to each, but especially to Durga.

•துர்த்தூரம், s. (*also* துருத்தூரம், which see.) The plant ஊமத்தை. (சது.)

•துர்ப்பரிகம், s. A plant, சிறுகாஞ்சொறி, Tragia, *L.*

•துர்லபம், s. Rarity, dearness, excellence, as துல்லபம், அருமை. W. p. 417. DURLABHA.

துலக்கம், s. Shining, lustre, brightness, splendor, பிரகாசம். 2. Polish, finish, gloss, பளபளப்பு. 4. Clearness, limpidness, transparency, தெளிவு; [*ex* துலக்கு. *v.*] (c.)

துலக்கமானஎழுத்து. A legible and neat hand-writing.

துலக்கமானகண்ணாடி. A clear mirror.

துலக்கமானபேச்சு. Perspicuous language or style.

துலக்கம்பண்ண, *inf.* To explain, lay open. 2. To divulge secrets.

துலக்கு, கிறேன், துலக்கினேன், வேன், துலக்க, *v. a.* To polish, furbish, burnish, மினுக்க. 2. To cause to shine; to brighten, illumine, enlighten, பிரகாசிக்கப்பண்ண. 3. To explain, illustrate, clear up a thing, தெரியப்படுத்த. (c.)

காரியத்தைத்துலக்க, *inf.* To explain a thing.

துலக்கு, *v. noun.* Lustre, gloss, polish, மினுக்கு.

துலங்கு, s. [*prov. prop.* தொடங்கு.] Stocks, தொழுமரம். See விலங்கு.

துலங்கு, கிறது, துலங்கினது, ம், துலங்க, *v. n.* To shine, corruscate, glitter, radiate; to be bright, splendid, பிரகாசிக்க. 2. To be polished, burnished, furbished, துலக்கப்பட. 3. To be illustrious, conspicuous, தோன்ற. 4. To be clear, perspicuous, evident, distinct, தெரிய. 5. To be excellent, to be splendid, சிறக்க. (c.)

நீதுலங்கமாட்டாய். You will never prosper. (*a curse.*)

துலங்கியெரிய, *inf.* To burn brightly, clearly.

•துலம், s. Heaviness, gravity, ponderousness, கனம். 2. Weight of a scale, as துலாநிறை. (சது.) 3. The சிறுமுன்னை plant. 4. A grass, கோரை.

•துலவம், s. (*a contraction of* தூலம், *or Sa. Tulaka.*) A cotton, பஞ்சு. (சது.)

•துலா, s. Balance, steelyard, scales, beam of scales, நிறைகோல். W. p. 381. TULA. 2. [*vul.* தொலா.] A well-sweep, or lever for drawing water, picotta, ஏற்றமரம். (c.) (சது.) 3. Single shaft of a carriage, bullock-cart, &c., பண்டிஏர்க்கால்.

துலாகோடி, s. (*St.*) A weight.

துலாக்கட்டை, s. [*loc.* திராவி.] Cross beams used for a terraced house.

துலாக்கொடி, s. [*prov.*] A rope or pole attached to the well-beam.

துலாக்கோல், s. Balance, beam of scales.

துலாபாரம்—துலாவாரம், s. A weight in gold equal to that of a person, presented to a brahman, as an atonement for sin; or a deed of merit.

துலாபாரந்தூங்க—துலாபாரமேந்த, *inf.* To get into scales as a person to make up a weight of gold equal to himself.

துலாப்படி, s. Steelyard. 2. A large weight for a balance.

துலாப்பட்டை, s. A well-basket attached to the lever for irrigation. 2. [*loc.*] The trunk part of a split palmyra.

துலாமரம், s. A well-sweep.

துலாமிதிக்க, *inf.* To tread the well-beam in drawing water.

துலாயனம், *s.* Autumnal, equinoctial point. 2. (*R.*) The apparent course of the sun from North to South.

துலாராசி, *s.* Libra of the Zodiac.

துலாவீடு—துலாவிஷுவம்—துலாவிடுவம், *s.* Autumnal point.

அடித்துலா, *s.* The butt end of the well-beam.

•துலாகோடி, *s.* An ornament to the feet, காலணியிலொன்று. 2. A hundred millions, or ten crore, பத்துக்கோடி.

•துலாந்து, *s.* [*prov.*] A loft, rack or frame in a room for setting things on; also cross beams, ஓர்வகைப்பரண்.

•துலாம், *s.* Balance, steelyard, scales, நிறைகோல். 2. Libra of the Zodiac, துலாராசி. 3. A well-sweep, a well-beam, ஏற்றமரம். 4. A weight equal to one-hundred பலம். In some places two-hundred பலம் or five vis, ஓர்நிறை. (*c.*)

•துலாம்பரம், *s.* Clearness, limpidness, brightness as of a lamp, gem, or mirror, துலக்கம். 2. Being evident, plain, perspicuous, conspicuous, தெளிவு. 3. Publicity, coming abroad, being known, பகிரங்கம். (*c.*)

துலாம்பரமானகாரியம், *s.* A plain or evident thing known to all.

•துலிதம், *s.* Shaking, waving, vacillation, அசைவு. 2. Equality, ஒப்பு. See அதலிதம்.

துலுக்கப்பூ, *s.* A kind of flower, yellow, ஓர்பூ, Tagetes, *L.*

•துலுக்கு, *s.* (*a change of* துருக்கு.) The Moorish caste, language, custom, &c.

துலுக்கச்சி, *s.* (*masc.* துலுக்கன்.) A Moorish female.

துலுக்கச்செவ்வந்தி, *s.* A species of செவ்வந்தி; which see.

துலுக்கபாஷை, *s.* The Moor's language, Hindustani.

துலுக்கர், *s.* (*plu.*) Moors, Mohammedans, Moslems, Turks. 2. A class of Moors, the other being சோனகர்.

துலுக்காணம், *s.* The origional country of the Moors, Turkisthan, as துருக்கு. 2. Any thing Moorish, *commonly*, a kind of chess, ஓர்வகைச்சதுரங்கவிளையாட்டு.

துலுக்காணத்துச்சட்டம், *s.* The manners and customs of the Moors.

துலுக்காணியம்—துலுக்காணம், *s.* The Turkish dominions. (*R.*)

துலுக்கு, கிறேன், துலுக்கினேன், வேன், துலுக்க, *v. a.* To shake or toss the head, to make affected gestures, to affect a proud gait; also குலுக்க. 2. To wag the head in scorn, defiance or ridicule, அசைக்க. 3. To carry one's self proudly, குலுக்கிநடக்க; [*ex Sa. Dula*, to shake]

துலுக்கி, *s.* A woman giving herself airs, displaying her ornaments, &c.

துலுக்கு, *v. noun.* Shaking, gesticulation, commonly of the head or body, குலுக்கு.

•துலை, *s.* Steelyard, &c., as துலா, 1. 2. Libra of the Zodiac, துலாராசி. 3. Picotta, as துலா, 2, நீர்இறைக்குந்துலா. 4. (*c.*) Reservoir for receiving water from a well to distribute, துலைமுகம். 5. Defined weight, equilibrium, கனம். 6 Resemblance, ஒப்பு.

துலைக்கிடங்கு—துலைமுகம்—துலைவாய், *s.* Reservoir near a well. See துலை.

துலைக்குழி — துலைப்பள்ளம், *s.* The hole or pool whence the water is drawn for irrigation.

துலைத்தட்டு, *s.* A balance.

துலை, *s.* [*prop.* தொலை.] Distance, great distance, தூரம்.

துலை, கிறது, ந்தது, யும், ய, *v. n.* [*prop.* தொலை.] To be exhausted, to terminate, &c.

துலை, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* [*prop.* தொலை] To be distant. 2. *v. a.* To exhaust, kill, &c.

துலோபம், *s.* A medicinal root, கருஞ்சண்டி.

•துல்லபம், *s.* (*St.* துர்லபம்.) That which is difficult of attainment, &c., excellence, eminence, rareness, அருமை.

•துல்லம், *s.* Din, roar, great sound, பேரொலி. (சது.)

•துல்லியம், *s.* [*vul.* துல்லிபம்.] Similitude, resemblance, equality, உவமை W. p. 381. Tulya. 2. Purity, சுத்தம்.

துல்லியபக்கம், *s.* [*in log.*] Analogous doctrines suited to the subject, views agreeable to truth and reason. See பக்கம்.

துல்லியபானம், *s.* Drinking together.

துல்லியயோகிதாலங்காரம், *s.* [*in rhet.*] Enumeration or assemblage of similarities, in order to heighten description, ஒப்புமைக்கூட்ட அணி.

துவக்கம், *v. noun.* See துவங்கு.

துவக்கு, *s.* Tie, physical or mental attachment, சம்பந்தம். 2. A chain, சங்கிலி. 3. Difference, dispute, பிணக்கு. (சது) 4. [*for. prov.*] Gun, firelock, musket, துப்பாக்கி.

•துவக்கு, *s.* Skin, தோல்; also written தொக்கு. (*Sa. Tvak.*) 2. Body, உடல்.

துவக்கூசி, *s.* [*prov.*] Shoemaker's awl, செருப்புத்தைக்கும் ஊசியிலொன்று.

துவக்கு, கிறேன், துவக்கினேன், வேன், துவக்க, *v. a.* To begin, enter upon, commence, ஆரம்பிக்க. 2. To tie, bind, entangle, engross the senses or affections, கட்ட. (சது.)

•துவங்கிசம், *s.* Loss, injury, detriment. See தொங்கிசம். W. p. 449. D'hvamsa.

துவங்கு, கிறேன், துவங்கினேன், வேன், துவங்க, *v. a.* and *n.* To commence, begin, enter upon, ஆரம்பிக்க. (*c.*)

துவக்கம், *v. noun.* Beginning, commencement, ஆரம்பம்.

துவக்கமுமுடிவும். The beginning and end.

•துவசம், *s.* Banner, flag, streamer; banner in token of rank, விருதுக்கொடி. 2. Ensign, colors, flag, escutcheon, விலோதனம். 3. Sign, அடையாளம். W. p. 449. D'hvaja.

துவசங்கட்ட, *inf.* (*com.* துசங்கட்ட.) To hoist a flag. 2. To erect a banner, as a hero in challenge, defiance, or in token of what he resolves to accomplish. 3. To set about a thing with the utmost zeal, and energy.

துவசாரோகணம், *s.* Hoisting the temple flag, with prescribed ceremonies, for the annual festival; [*ex* ஆரோகணம்.]

•துவசர், *s.* Toddy sellers, dealers in spirituous liquors, கள்விற்போர். (சது.) [*ex Sa. D'hvajavat*]

துவசல், *s.* [*prov.*] Connection, mutual concern, intercourse, தொடர்பு.

துவசல்தீர்த்துக்கொண்டார். He has settled the business with us.

துவட்சி, *v. noun.* See துவள்.

துவட்சிகை, *s.* [*prop.* துவர்ச்சிகை.] The germ or very young nut of the Terminalia, கடுப்பிஞ்சு.

•துவட்டர், *s.* Carpenters, தச்சர். 2. Artificers, smiths, கம்மாளர்; [*ex* துவஷ்டா.]

துவட்டல், *v. noun.* (*substantively.*) A sort of curry without gravy, துவட்டற்கறி. 2. See துவட்டு, *v.* (*c.*)

•துவட்டன், *s.* One of the twelve suns so called, துவாதசாதித்தர்களிலொருவன்.

•துவட்டா—துவஷ்டா, *s.* A carpenter, especially Visvakarma the architect of the gods, விசுவகருமன். W. p. 394. Tvashtru.

துவட்டாநாள், *s.* The fourteenth lunar asterism, சித்திரைநட்சத்திரம்.

துவட்டு, கிறேன், துவட்டினேன், வேன், துவட்ட, *v. a.* To wipe off moisture after bathing, &c., துடைக்க. 2. To boil or stew with little water so as to make the food thick, கறிதுவட்ட. 3. To boil meat, செருப்பிற்புலர்த்த. 4. To cause to adhere, தோயச்செய்ய; [*ex* துவள், *v.*] (*c.*)

துவட்டிக்கொண்டுசாப்பிட்டுவிடலாம். The curry is so good that, to eat the rice, it is only necessary to dip into it the tip of the finger.

துவட்டல் — துவட்டுதல், *v. noun.* Wiping, stewing, &c., as the verb.

•துவந்தம், *s.* (*St. for* தொந்தம்.) Quality, closeness, &c.

•துவந்துவம், *s.* Two, a pair, a couple, a brace, இரண்டு. 2. Two united, இரட்டை. W. p. 431. Dvandva.

•துவந்தனை, *s.* Hinderance, தடை. 2. Vexation, அலைவு.

•துவம், *s.* Fixedness, immutability, immobility, permanence, அசைவாகிலை. (*a change of* தருவம்.) 2. An affix to Sanscrit words, expressive of quality, nature, character, &c., தன்மை, as தேவத்துவம், divinity; கோத்துவம், the nature of a cow.

•துவயம், *s.* Two, doubleness, duality, இரண்டு. W. p. 431. Tvaya.

துவயார்த்தம், *s.* (*St.*) Ambiguity, a double meaning, உபயார்த்தம்.

•துவரம், *s.* Astringency, துவர்ப்பு. (சது.) W. p. 382. Tuvara.

துவரி *s.* The saffron color of a Sanniyasi's dress, காவிநிறம்.

•துவரை, *s.* A species of grain or lentil, ஓர்பயறு, Cytisus cajan, *L.* (*c.*) (*Sa. Tuvara.*)

துவரமலார், *s.* A twig of the துவரை.

துவரம்பருப்பு, *s.* The pea of the துவரை, often called dholl.

கருந்துவரை, *s.* A plant, Hedysarum biflor. (*Willd.*) 2. A tree, Dalbergia latifolia.

காட்டுத்துவரை, s. A plant, Glycine parviflora, *L.*
காலியாந்துவரை, s. [*prov.*] A wild kind of துவரை.
மலைத்துவரை, s. Another variety of this plant.

•துவரை, s. (*com.* துவாரகை.) One of the seven sacred cities, ஓர்புரி. (*p.*)

துவரைமல்லி, s. (*Tel. prop.* தோரைமல்லி.) A kind of amethyst, புஷ்பராகத்தரிப்பு.

துவர், s. Enmity, hatred, hostility, பகை. 2. Red, சிவப்பு. 3. Red coral, பவளம். 4. Fire-wood, விறகு. (சது.)

•துவர், s. Astringency. See துவரம். 2. Astringents used as applications to the head before bathing, to take out oil, பேக்காய்முதலியன.—*Note.* Ten astringents are given, as used in medicine. 1. நாவல், bark of the நாவல்; 2. கடுக்காய், fruit of the கடு, Indian gall-nut; 3. நெல்லி, fruit of the நெல்லி; 4. தான்றிக்காய், fruit of the தான்றி; 5. ஆல், buds of the banyan; 6. அரசு, buds of the அரசு; 7. அத்தி, bark of the அத்தி; 8. இத்தி, bark of the இத்தி; 9. முத்தக்காசு, root of the கோரை; 10. மாந்தளிர், tender leaves of the mango tree. (சது.)
அவனுடம்பிலேதுவரேறியிருக்கிறது. He is in high spirits.
துவரெண்ணெய், s. A medicinal astringent oil used for sores.
துவர்க்கட்டி, s. Decoction of areca-nut with spices, as காய்ச்சுக்கட்டி.
துவர்க்காய், s. Areca-nut, பாக்கு.

துவர், கிறது, ந்தது, துவரும், துவர, v. n. To divide, separate as the hair, பிரிய. 2 To be separate, clear, distinct, தெரிய. (*p.*)
துவரத்தோன்றாது. It does not appear to be distinct.

துவர், கிறேன், ந்தேன், வேன், துவர, v. a. To smear, திமிர. (*p.*)

துவர், க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To be astringent. (*c.*)
துவர்த்தல், v. noun. Rubbing on, பூசுதல். 2. As துவர்ப்பு. (*R.*)
துவர்ப்பு, v. noun. Being astringent in taste or quality, astringency as one of the six flavors, அறுசுவையுளொன்று. (See சுவை) 2. (*R.*) Harshness of disposition. 3. Affections of the soul.

துவர்ச்சிகை, s. Very young gall-nuts, கடுக்காய்ப்பிஞ்சு. See துவட்சிகை.

துவலு—துவல், கிறது, துவன்றது, ம், துவல, v. n. To drop as water, to emit or scatter drops, to rain, துளிக்க. 2. To be quick, rapid, to move with celerity, தீவிரிக்க. (*p.*) 3. (*R.*) To be full, thick; to die, &c. See துவன்று, v.

துவலை, s. Watery particle, drop, திவலை. 2. Fine rain, sprinkling rain, மழைத்துவல்; [*ex* துவலு.] (சது.)

•துவல், s. Haste, celerity, rapidity, diligence, சீக்கிரம். W. p. 393. Tvara.

துவள்—துவளு, கிறது, துவண்டது, துவளும், துவள, v. n. To waver, shake, move, vacillate, to be agitated, அசைய. 2. To be flexible slender, weak, unable to sustain a weight—as a tender tree, or (*fig.*) a lady's waist, &c., மெல்லியதாயிருக்க. 3. To fail, faint, droop under a load, &c., திவள. (See சவளு.) 4. To wrap, bend, shrink, twist, as boards in the sun, &c., நெளிய. 5. To become thick and dry as curry, இறுக. 6. To become rumpled, deprived of gloss, as a new-cloth, கசங்க. 7. (*in an impersonal sense*) To stick to, adhere, as oil, thick liquid, dust, or coloring matter, to the hand or a cloth; to stain, blot, color, soil, daub, smear, ஒட்ட. 8. To become dry, as plants under a scorching sun, வாட. (*c.*)
குழந்தைஅல்லித்தண்டுபோலத்துவண்டுகிடக்கிறது. The child is weak as the stalk of a lily
துவளாமற்காரியம்பார்க்க. To manage another's business without deriving any profit to one's self. 2. To get business done without expense.
பாலைத்துவளக்காய்ச்சினேன். He boiled the milk until it was thick.
துவணீர், s. Filth, slimy matter about a new born infant; [*ex* நீர்.]
துவளச்சமைக்க, *inf.* To make curry thick.
துவட்சி—துவளல், v. noun. Being thin, slender, flexible, shaking as unable to bear a weight, &c., மெலிவு.

•துவறல், s. Raining, துவலைவிடுதல். 2. Swiftness, haste, விரைவு. (சது.) (*Sa. Tvara.*)

•துவனி, s. Sound, noise, clamor. See தொனி. W. p. 449. Dhvani.

துவன், s. A plant, வட்டத்திருப்பி, Cissampelos, *L.*

துவன்று, கிறேன், துவன்றினேன், வேன், துவன்ற, v. n. To be full, to fill up, நிறைய. 2. To be thick, close, crowded, நெருங்க. 3. To abound, increase, மிக. 4. To die, சாக. (சது.)
துவன்றல், v. noun. Being full, &c., as the verb.

•துவா, s. [*in cant numbers.*] Two, இரண்டு. See துவி.
துவாப்புலு, s. [*prov.*] Twenty, இருபது.

•துவாதசம், s. Twelve, பன்னிரண்டு; [*ex* தசம், ten.] W. p. 432. Dvadasan.
துவாதசாங்கிசம், s. [*in astrol.*] A division of the rising sign into twelve parts, for horoscopic calculations. See இலக்கினம்; [*ex* அங்கிசம்,அம்சம்.]
துவாதசாதித்தர்—துவாதசாதித்தியர், s. [*in mythol.*] The twelve suns governing the twelve months of the year, or more properly the presiding deity of the sun for each month, beginning with சித்திரை, in the sign Aries. The twelve ஆதித்தர், are: 1. தாத்துரு. 2. சக்கரன். 3. அரியமன். 4. மித்திரன். 5. வருணன். 6. அஞ்சுமான். 7 இரணியன். 8. பகவான். 9. திவாச்சுவான். 10. பூடன். 11. சவித்திரு 12. துவட்டன்.—*Note.* Each of these names is applied to the sun as he passes its sign in the Zodiac.
துவாதசாந்தம், s. The place of the twelfth and last அவஸ்தை or station of the soul in the practice of the motionless ascetic, பன்னிரண்டாமவஸ்தை; [*ex* அந்தம், end.]
துவாதசான்மா, s. The sun as having twelve names, as above; (*lit.*) the twelve-souled. (சது.)
துவாதசி, s. The twelfth phasis of the moon, either in the increase or decrease, த்திதி. W. p. 432. Dvadasa.

•துவாந்தம், s. Darkness, obscurity, gloom, இருள். 2. Hell, நரகம். (சது.)

•துவாபரம்—துவாபரயுகம், s. The third Yuga or age of the world, consisting of 864,000 years. W. p. 432. Dvapara.

•துவாரகை—துவாரகாபுரி, s. One of the seven sacred cities, சத்தபுரியிலொன்று. W. p. 432. Dvaraka.—*Note.* This city is said to be now submerged by the sea, and to be represented by a small island on the north part of the Malabar coast.
துவாரகேசன், s. (*St.*) Vishnu, விஷ்ணு; [*ex* ஈசன், lord.]

•துவாரம், s. A hole, aperture, perforation, தொளை. 2. Passage, avenue, thoroughfare, opening, outlet, வழி. 3. A gate-way, or main entrance, வாயில். 4. Any of the passages, apertures, or pores of the body. See நவத்துவாரம். W. p. 432. Dvara. (*c.*)
துவாரபாலகர், s. (*St.*) Door-keepers, warders. 2 Gigantic figures, or images placed at the gate of a heathen fane.
துவாரமடைக்க, *inf.* To stop up a hole.
துவாரம்பண்ண, *inf.* To make a hole.
துவாரம்விட, *inf.* To leave holes or openings in a building.
துவாரம்விழ, *inf.* To form an orifice of itself, as a tumor.
சிறுதுவாரம், s. [*in astron. or bot.*] Capillary tube.

துவாலை, s. Flow of blood, as in the menses or parturition, உதிரப்பெருக்கு. 2. [*prov.*] Lochial discharges, தீட்டு. 3. Anointing the whole body, as in case of a poisonous bite, பூச்சு. 4. Liniment for medical anointing, பூச்சுமருந்து. 4. (*Eng.*) Towel, தண்டுதுணி. (*c.*)
துவாலைச்சீலை—துவாலைப்புடைவை, s. Cloths worn by women in child-birth, in lochial discharges, &c.
துவாலையிட, *inf.* To rub a medical oil, or liniment, on the whole body.
துவாலையிறைக்க, *inf.* To flow excessively as lochial discharges, flooding, or excessive flow of menses.

துவாளிக்க, *inf.* v. a. [*prov. for* தவாளி, which see.] To groove, to flute, to channel, குடைய.

•துவி, *adj.* Two; double; *used only in composition with other words*, இரண்டு. W. p. 432. Dvi.
துவிசபம், s. A cloven footed creature, கவைக்குளம்புள்ளது.
துவிசன், s. A brahman, as twice-born; the investiture with the sacred thread being regarded as a second birth, இருபிறப்பாளன். W. p. 432. Dvija.
துவிசாதி, s. (*St.*) The twice-born, as முட்டைபிற்பிறப்பன. 2. A brahman, பார்ப்பான.
துவிபாதசெந்து, s. A two-footed animal, a biped, இருகாலுள்ளது.
துவிவசனம், s. (*St.*) The dual in Grammar.

துவிகபா, s. A plant, வட்டத்திருப்பி, Cissampelos, *L.*

துவிகாயாசின், s. A kind of red Murunga, செம்முருங்கை.

•துவிதம், s. Doubleness, duality, இரண்டு. 2. A sect, called also மத்தவம், at the head of which was Mad'hvacharya, who taught that the deity is distinct from the soul, and all creatures—oppos. to அத்துவிதம், the followers of Sancharacharya, who believe god and the soul to be one.

துவிதகேந்திரம் — துவிதியகேந்திரம், s. [in astron.] Twice equated argument of anomaly.

துவிதியபுடம், s. [in astron.] Twice equated longitude.

துவிதபாவனை, s. [in the mystic philos.] Making distinctions, as between the operations or works of deity and the deity himself, viewing things as distinct from the deity instead of regarding them as parts or developments of himself, இரண்டாகப்பாவிக்கை.

•துவிதாத்துமகம், s. Nutmeg, சாதிக்காய். W. p. 434. Dvidhatmaka.

துவியம், s. [Pers.] A second, a deputy, இரண்டாவது.

துவியங்கணக்கு, s. Account prepared a second time. (Govern. usage.)

•துவிருத்தி, s. Tautology, repetition, கூறியதுகூறல். W. p. 434. Dvirukti.

•துவீபம், s. An island, தீவு, as தீபம்.

•துவேஷம்—துவேசம், s. Aversion, dislike, loathing, antipathy, disgust, hatred, பகை. W. p. 435. Dvesha.

அன்னத்துவேஷம், s. Aversion to food.

துவேஷி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To dislike, be averse to, பகைக்க.

துவை, s. Flesh, meat, இறைச்சி. 2. Sound, clamor, resonance, ஒலி. 3 Food proper to be drunk, sipped or taken with a spoon, பருகுதற்குரியன. 4. Acid curry, புளிங்கறி. 5. Residuum of nuts, fruits, &c., after extracting oil, commonly eatable, பிண்ணாக்கு. (சது.)

துவை, கிறது, ந்தது, யும், ய, v. n. To be dipped as a cloth in dye, தோய. 2. To be moistened with starch, பசைதோய. 3. To be turned or curdled as milk, பால்தோய. 4. To be tempered as steel, ஆயுதந்துவையலிட. 5. To be trodden out as corn by cattle, மிதிக்கப்பட. 6. To be pounded in a mortar, as green things for their juice; to be mashed, இடிக்கப்பட. (c.)

துவையல், v. noun. Seasonings for food, commonly mashed; chopped, or pared fruits—as cocoa-nuts, onions, chillies, சண்டாங்கி. 2. Tempering, as தோய்ச்சல். 3. Washing clothes. (c.)

துவை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To dip in, soak, தோய்க்க. 2. To beat clothes, &c., in washing. 3. To curdle milk by runnet, &c., பால்தோய்க்க. 4. To temper iron, ஆயுதந்தோய்க்க. 5. To beat moist or green things in a mortar, to mash, &c., நசுக்க. 6. To beat as clay or mortar, இடிக்க. 7. To tread under foot, as when cattle tread out the corn, அரிக்கட்டுத்துவைக்க. (c.) 8. (சது.) To sound, resound, clamor, ஒலிக்க. 9. To beat a drum, sound any loud instrument, வாச்சியமுழக்க.

துவைத்துப்பிழிய, inf. To dip and wring out a cloth, in water or a dye.

துவைத்தல், v. noun. Used in all the meanings of the verb.

துவைப்பு, v. noun. Pounding or bruising moist things in a mortar, இடிப்பு.

•துவைதம், s. [as துவிதம்.] Duality, duplication. W. p. 435. Dvaita.

•துவைபாயனன், s. Vyasa, as born on an island, வேதவியாசன்; [ex தவீபம்.]

துவ்வாமை, s. Disgust, dislike, வெறுப்பு; [ex துவ்வு, v.]

துவ்வு, s. Food, உணவு. 2. Fruition, enjoyment, அநுபவம். 3. Gratification of the senses, ஐம்பொறிநுகர்ச்சி. See தப்பு. (p.)

துவ்வு, கிறேன், துவ்வினேன், வேன், துவ்வ, v. a. To take food, eat, புசிக்க. 2. To enjoy by means of the senses, ஐம்பொறியால்நுகர. 3. To suffer, enjoy the fruits of actions, experience, அநுபவிக்க. (See து, v.) —Note. This word is more properly து, it forming like a negative.

துவ்வாதார் — துவ்வார், appel. n. The poor, the indigent, தரித்திரர்.

துவ்வல், v. noun. Eating, புசித்தல்.

துழ, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, v. a. To mix, mingle, mash food with the hand, &c., குழைக்க. (p.)

துழவு, கிறேன், துழவினேன், வேன், துழவ, v. a. [contraction of துழாவு.] To mix, mingle, &c.

துழவை, s. [prov.] A split bambu used by natives to steer a small boat, மூங்கிற்பற்றை; written by Beschi, துளவை. (c.)

துழவைதொடுக்க, inf. To paddle a canoe.

துழனி, s. Sound, noise, ஒலி. (See துவனி.) 2. Chirping of flocks of birds, &c., பறவைக்கூட்டத்தொலி. (சது.) (p.)

துழாய், s. The Tulasi herb. (See துளசி.) 2. Verbal participle of துழாவு. (p.)

துழாய்மௌலி, s. Vishnu crowned with the garlands of Tulasi, விஷ்ணு.

துழாய்வனம், s. A garden where Tulasi is grown. 2. Tulasi plant.

துழாவாரம், s. [prov.] Long and useless talk about others' affairs, ஊப்பேச்சப்பேசுகை.

துழாவு, கிறேன், துழாவினேன், வேன், துழாவ, v. a. To mix, mingle, கலக்க. 2. To stir with a ladle; stir up paddy, spread in the sun, கிளற. 3. To feel, grope, search for with the hands stretched, தடவ. 4. To inquire, ஆராய. 5. To row a boat, &c., தண்டுவலிக்க (c.) 6. (சது.) To cut, வெட்ட.

துழாவிப்பிடிக்க, inf. To feel for and grasp with the hands—as the elephant with its trunk—in cropping leaves, &c.

புழுங்கல்துழாவ—நெல்துழாவ, inf. To stir boiled paddy as it dries in the sun.

துடுப்பினால்துழாவ, inf. To stir up with a ladle, &c. See துடுப்பு.

துழாவல், v. noun. Stirring up, &c., as the verb.

துளக்கம், s Brightness, splendor, shining, gloss, lustre, as துலக்கம், ஒளி. 2. Fear, dread, அச்சம். 3. The fifteenth lunar asterism, சோதிநாள். (சது.) 4. Shaking, waving motion, அசைவு. 5 Agitation of mind, perturbation, anxiety, கலக்கம்; [ex துளக்கு.] (p.)

துளக்கு, கிறேன், துளக்கினேன், வேன், துளக்க, v. a. To move, shake, agitate, அசைக்க. 2. To polish, விளக்க. See துலக்கு.

துளக்கல்—துளக்கு, v. noun. Shaking, moving, அசைவு. 2. Polishing.

துளங்கு, கிறேன், துளங்கினேன், வேன், துளங்க, v. n. To move, shake, be agitated, அசைய. 2. To be agitated as the mind, to be in perturbation, கலங்க 3. To be moved by rebuke, advice, fear, &c., அஞ்ச. 4. (சது.) To shine, be bright, luminous, to radiate, துலங்க. 5. (fig.) To appear evident, வெளிப்பட. (p)

துளங்காதமனம், s. An unshaken mind.

துளங்கொளி, s. Great splendor, மிகும் ஒளி. 2. (சது.) The eighteenth lunar asterism, கேட்டைநாள்.

துளங்கல், v. noun. Shining bright.

•துளசி, s. Tulasi, a fragrant herb held in great veneration by the Hindus; holy basil, which is said to be a female metamorphosed, துளவம். Ocymum sanctum. W. p. 381. Tulasi.—Note. There are three kinds especially sacred to Siva, viz:. வெண்டுளசி, சிறுதுளசி, சிவதுளசி, Ocymum tenuiflorum. There are others appropriated to Vishnu who claims also those of Siva, viz.: இராமதுளசி, கரியமால்துளசி, செந்துளசி, கருந்துளசி, விஷ்ணுதுளசி, பெருந்துளசி, Ocymum gratissimum. There are still other varieties, as கர்ப்பூரத்துளசி, which see; also காட்டுத்துளசி, Ocymum adscendens; நாய்த்துளசி, dog's basil, oppos. to நல்லதுளசி; நிலத்துளசி, Ocymum prostratum. (c.)

துளசிதீர்த்தம், s. Tulasi leaves and consecrated water, taken in making oath in court, or, as a token of adherence to Vishnu on entering his temples.

துளசிமணி, s. (also தாதமணி.) Beads made of the white Tulasi root or branch, worn by devotees of the Vishnu sect.

துளசிமாடம், s. A raised place for Tulasi plants, instead of a flower pot.

துளசிமாலை, s. A necklace made of Tulasi, whether leaves or beads.

துளம்பிக்கிரி, s. A shrub, as ஆதொண்டை.

•துளவம்—துளவு, s. [a change of துளசி.] The Tulasi plant. (p.)

துளவன், s. Vishnu as adorned with the Tulasi, திருமால். 2. (R.) A kind of prepared arsenic, சோரபாஷாணம்.

துளவை, s. Hole, orifice, துளை. 2. [for துழவை.] An oar of split bambu.

துளி, s. Rain-drop, globule of water, tear, &c., திவலை. (c.) 2. Rain, மழை.

துளித்துளியாய்வடிய, inf. To dribble.

துளித்துளியாய்விழ, inf. To fall in drops, flow as tears, drop as rain, honey, &c.

•துளி, s. Female tortoise, பெண்ஆமை. W. p. 417. Duli.

துளி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To drop, fall in drops, as rain, tears, or honey, to trickle down, தேன்முதலியதிவலிக்க. 2. To rain, மழைபெய்ய.

துளிமழை, s. Light rain.

துளிப்பு, v. noun. Dropping, falling in drops, dribbling, dripping.

துளிர், *s.* Bud, sprout, germ, young leaf, tender foliage, தளிர். (*c.*)
துளிர்விட, *inf.* To bud.
நாக்குத்துளிர், *s.* Tip of the tongue.

துளிர், க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* [*com.* தளுக்க.] To bud, sprout, shoot, put forth leaves, vegetate, தளிர்க்க. 2. (*fig.*) To begin to thrive as a person, செழிக்க. (*c.*)
இவன்துளிர்த்திருக்கிறான். He is flourishing.
துளிர்ப்பு, *v. noun.* Budding, sprouting.

துளும்பு, கிறது, துளும்பினது, ம், துளும்ப, *v. n.* To shake, be agitated, அசைய. 2. To rise into opposition, &c., எழும்ப. 3. To sparkle, glitter, coruscate, shine, சொலிக்க. 4. (சது.) *v. a.* To smear, திமிர.
துளும்பல், *v. noun.* Wavering, shining, &c., as the verb.

*துளுவம், *s.* The name of a country on the western coast between Canara and the Concan, ஓர்தேசம். 2. The language of the country, one of the eighteen, பதினெண்பாஷையிலொன்று.
துளுவபாஷை, *s.* The Tuluva language.
துளுவப்பிராமணர், *s.* (*plu.*) Brahmans of the Tuluva country, of whom, the head of the த்வைத sect, Mad'hvacharia, was one.
துளுவவேளாளன், *s.* An agriculturist of the country.
துளுவன், *s.* An inhabitant of the Tuluva country.

துளை, *s.* [*also written,* தொளை.] Hole, orifice, aperture, perforation, துவாரம். (*c.*) 2. Gateway, passage, thoroughfare, opening, வாயில். *3. The hollow of a tube, உட்டுளை. 4. Bambu, மூங்கில். See தூம்பு.
துளைக்கருவி, *s.* Wind instruments, one of the five kinds.
துளைக்கை, *s.* Elephant's trunk, தும்பிக்கை. 2. See துளை, *v. a.*
துளைச்செவி, *s.* Ear of an animal that has no external ear, உட்செவி. 2. An animal with the internal ear only, without any auricle; one of the two great classes of animals according to the Hindus, உட்செவியுள்ளது.
துளைபோட—துளையடிக்க—துளையிட, *inf.* To make a hole, commonly with a chisel and mallet, to punch.

துளை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* [*prov.*] To play or dive in water, to roll in the sand, &c., மூழ்க. 2. *v. a.* To enjoy, have fruition of, அனுபவிக்க.

துளை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* (*also* தொளை.) To make a hole, bore, drill, punch, துவாரஞ்செய்ய. 2. To perforate, pierce, pierce with arrows, &c., ஊடுருவ.
துளைப்பு, *v. noun.* Boaring, drilling, perforating.

துள்ளல், *s.* Dance, dancing, கூத்து. 2. Goat, sheep, ஆடு. 3. A small fly, gnat, கொசுகு. 4. Melody or movement of the கலிப்பா class of verse, கலிப்பாவிலோசை. (சது.) 5. One of the four kinds of movements in verse or singing, being lively or quick, விரைந்தபாடுமிசை. 6. See துள்ளு, *v.*

துள்ளி, *s.* [*for* துளி.] A drop. (*c.*)

துள்ளு, *s.* A leap, jump, spring, frisk, commonly without progress, குதிப்பு. (*c.*)
துள்ளடங்க, *inf.* [*in burlesque.*] To be reduced, as arrogance, &c.
துள்ளாட்டம், *v. noun.* Sprightfulness, arrogance, haughtiness, assumption, overbearing airs.
துள்ளாட்டம்பண்ண, *inf.* To be arrogant, overbearing, unruly, refractory.
துள்ளுக்காளை, *s.* An ungovernable person; (*lit.*) untamed bullock.
துள்ளுப்பூச்சி, *s.* A kind of leaping insect destructive to grain.

துள்ளு, கிறேன், துள்ளினேன், வேன், துள்ள, *v. n.* To spring up, leap up, jump up, frisk in play, commonly not proceeding forward; to leap out of water, as fishes, குதிக்க. 2. To trip along in a frolicksome way, குதித்துச்செல்ல. 3. [*in burlesque.*] To be haughty, arrogant, கருவிக்க. (*c.*)
துள்ளித்தொப்பென்றுவிழுகிறான். He is very insubordinate; (*lit.*) capers and falls.
துள்ளுகிறமாடுபொதிசுமக்கும். An unruly bullock throwing off its load will have a greater burden, *that is,* disobedient persons will not escape punishment.
துள்ளுகுட்டி, *s.* A frisking, young animal. 2. A young animal, plump, strong, and lively. 3. (*fig*) A stout, lively boy. (*c.*)
துள்ளல், *v. noun.* Frisking, leaping, குதித்தல்.

துறக்கம்—துறக்கநாடு, *s.* Swerga or the paradise of the inferior gods, சுவர்க்கம். (சது.)

துற, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, *v. a.* To leave, relinquish, desert, reject, discard, கைவிட. 2. To renounce matrimony, and secular things, for an ascetic life, இல்லறந்துறக்க. 3. To neglect, dispense with, omit, avoid, தவிர்க்க. (*p.*)
தாய்சொற்றுறந்தால்வாசகமில்லை. There is no excuse for slighting a mother's word, (*Avv.*)
அதைத்துறந்து, *v. participle.* Leaving this, besides this.
துறந்துதள்ள, *inf.* To renounce one's relations.
துறந்தார்—துறந்தோர், *s.* (*plu.*) Ascetics, recluses, those that have renounced the world for an ascetic life, sannyasis, சித்தோர்.
துறப்பு—துறவு, *v. noun.* Relinquishment, rejection, விடுகை. 2. Renunciation of matrimony and social life, for a life of austerities, of wandering and dependence on charitable gifts for support; or retirement to the desert, சன்னியாசம். 3. The principles of abstraction, or renunciation of secularities, as seated and operative in the mind of the devout ascetic, leading to corresponding actions.
துறவர் — துறவோர், *s.* [*plu.*] Munis, ascetics, recluses, முனிவர்.
துறவறம், *s.* Celibacy of the recluse, or of the strict devotee, in the வானப்பிரஸ்தம் state—oppos. to இல்லறம். (See ஆச்சிரமம்.) 2. See அறம்.
துறவி, *appel. n.* An ascetic, a recluse, சன்னியாசி.
துறவுநிலை, *s.* The standing, degree, profession or state of the ascetic.
துறவுபூண, *inf.* To become an ascetic.
துறவொழுக்கம், *s.* The proper course and rules of ascetic life.

*துறட்டி — துறடு, *s.* An iron crook, an elephant goad, அங்குசம். 2. An entanglement, சிக்கு. See துரட்டி.
துறட்டிலேமாட்டிக்கொண்டான். He entangled himself.
துறட்டிச்செடி, *s.* A shrub with crooked thorns, ஓர்முட்செடி, Pisonia, *L.*
துறட்டிப்பழம், *s.* Its fruit.
துறட்டிரும்பு — துறட்டுமுள், *s.* A crooked iron or hook fastened in the integuments of the back of those who swing in the air at the செடில் festival.
துறட்டுக்கோல், *s.* An iron crook fixed at the end of a pole to pluck fruits.
துறட்டுப்பிடி—துறட்டுவாதம், *s.* Urgency, compulsive request, pressing one, &c., obstinacy in maintaining one's opinion, பிடிவாதம்.

துறப்பணம்—திறப்பணம், *s.* [*vul.*] A drill. See தரப்பணம்.

துறவி. See துற, *v.*

துறு, *s.* Iron-stone, laterite, செம்பூரான் கல். (சது.)
துறுகல், *s.* As துறு. 2. See துறு, *v. a.*

துறு, கிறேன், துற்றேன், வேன், துற, *v. a.* To eat, take food, உண்ண. (*Sa. Truda.*)
துறு—துற்றல், *v. noun.* Eating, taking food, உண்டல்.

துறு, கிறது, துற்றது, ம், துற, *v. n.* To be thick, crowded, full, நெருங்க. 2. To be closed, குவிய. (*p.*)
துறுபடை, *s.* A squadron, or troops, in close order.
துறு, *v. noun.* Thickness, closeness, crowdedness, நெருக்கம்.
துற்றல், *v. noun.* A closing up, குவிதல். 2. Being full, நிறைதல்.

துறு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To stuff, press or crowd into a bag or box, &c., அமுக்க. 2. To cram food into the mouth, நுழைக்க. (*c.*)
என்னத்துக்குப்பிள்ளைவாயில்சோற்றைத்துறுக்கிறாள். Why does she cram the child's mouth with rice?
துறுகல், *s.* A stone to stop a sluice or channel, சலதாரையடைக்குங்கல். (சது.)
துறுத்தல் — துறுப்பு, *v. noun.* Cramming, stuffing, pressing, நெருக்குதல்.

*துறுட்டி, *s.* A plant, small Cardamum, சிற்றேலம். W. p. 392. TRUT'HI.

துறுபவம், *s.* Closeness, thickness, crowdedness, நெருக்கம். (சது.)

துறுமு, கிறேன், துறுமினேன், வேன், துறும, *v. n.* To be thick, close, crowded, நெருங்க. 2. To be or become round, திரள. 3. *v. a.* To make round, திரட்ட. (*p.*)
துறுமல், *v. noun.* Being close, making round, &c., as the verb.

துறுவு, கிறேன், துறுவினேன், வேன், துறுவ, *v. a.* To eat, take food, உண்ண. 2. *v. n.* To be crowded, close, thick, நெருங்க; [*ex* துறு, *v.*]

துறுவல் — துறுவு, *v. noun.* Eating, புசித்தல். 2. Being thronged, நெருங்கல்.

துறை, *s.* Any passage to, into, or across water—as the entrance to a tank, pond or river, a ford or ferry; a watering place for cattle; a place for bathing or for washing clothes, நீர்த்துறை. 2. A sea-port, harbor, road-stead, இறங்குதுறை. 3. Way, path, thoroughfare, passage for men or beasts, வழி. 4. Frequented place, a place of meeting, a rendezvous, சபைகூடுமிடம். 5. Place, location, situation, space, position, as ஆயத்துறை, வண்ணாத்துறை, இடம். 6. A resource, resort, shelter, place of refuge, ஒதுங்குமிடம். (c.) 7. River, ஆறு. 8. One of the three-fold subdivisions of any of the four classes of verse, கலித்துறை. (See பாவினம்.) 9. A branch, scope or extent of science, நூற்றுறை. 10. Any theme in love poetry, அகப்பொருட்டுறை. (*p.*)

துறைகாட்ட, *inf.* To show a method.

துறைகாண, *inf.* To find a port, haven, harbor. 2. To find a way, means or method to do or complete a thing.

துறைகண்டவன்விடுவானா. Will one who has discovered the way (to his master's treasure), forsake it?

துறைகாரர், *s.* [*prov.*] Agents, accountants, and other servants of a temple.

துறைக்காவல், *s.* [*prov.*] Watch or guard to a port, excise officer; military guard; a guard-ship.

துறைத்தோணி, *s.* A ferry boat.

துறைநியாயம், *s.* Laws of love poetry.

துறைநெருங்கிவர, *inf.* To direct the course to a port.

துறைபிடிக்க, *inf.* To touch at a port; to gain the haven, &c. 2. To find out means, expedients, உபாயந்தேட.

துறைபோ, *inf.* To leave port.

துறைபோக, *inf.* To acquire a thorough knowledge of a science, &c. 2. To attain one's end.

துறைப்பேச்சு, *s.* Vernacular or vulgar language, சொந்தப்பேச்சு. (*R.*)

பறையைப் பள்ளிக்குவைத்தாலுந் துறைப்பேச்சுப் போமா. Will a low man forget his vulgar language, even when placed at school?

துறைமாற, *inf.* To mistake the proper course.

துறைமுகம், *s.* The entrance to a port, haven or harbor. (*c.*) 2. A passage or thoroughfare.

துறைமுகக்குத்தகை, *s.* [*prov.*] Rent of a ferry.

துறையடுக்கப்பிடிக்க, *inf.* [*prov.*] To sail toward a port, to anchor in or near the harbor.

துறையறிந்துநிற்க, *inf.* To find a suitable place, and proper persons; to become settled. 2. To know the proper course as to one's religion, caste, profession, &c., and adhere to it.

துறைவல்லோர், *s.* (*plu.*) The learned, சான்றோர். (சது.)

துறைவன், *s.* A chief of a maritime district, நெய்தனிலத்தலைவன். (சு)

*துறோட்டி, *s.* (*for* தோட்டி.) Elephant hook, அங்குசம். See தோட்டி.

*துற். A prefix signifying ill, improperly used for துர் before some words beginning with hard letters, as துற்கந்தம், துர்க்குணம், துற்பிருத்தியம், துற்சனன், துற்செய்கை, துற்புத்தி, &c. Compare this with சற்.

*துற்கை, *s.* Durga. See துர்க்கை.

துற்காபூசை—துர்க்கைபூசை, *s.* Worship of Durga.

*துற்பரிகம், *s.* A plant. See சிறுகாஞ்சொறி. See துர்ப்பரிசம்.

துற்று, கிறேன், துற்றினேன், வேன், துற்ற, *v. a.* To eat, as தறு.

துற்று, *v. noun.* Boiled rice, சோறு. (சது.)

*பகவன், *s.* The Supreme Being, கடவுள். 2. Argha அருகன். 3. Siva, சிவன். 4. Vishnu, திருமால். 5. Brahma, பிரமன். 6. Buddha, புத்தன். 7. A Guru, குரு; [*ex* பகம்.] —*Note.* It is also applied to the regents of the planets, to the gods of the elements, and sometimes to sages, and *Rishis*.

பகவற்பத்தன், *s.* One devoted to the deity, being one of the six names given to such as are ripe for emancipation. தேவபத்தன்.

பகவற்கீதை, *s.* A section of the Mahabarata. See கீதை.

பகவான், s. The Deity, the Supreme, கடவுள். 2. As an affix to the name of any of the superior deities. (c) 3. One of the twelve supposed suns—as பகன். See துவாதசாதித்தர்; [ex பகம்.]

பகவு, s. Parting, division, separation, cleft, பிளப்பு. 2. A slice, a bit, துண்டு; [ex பகு, v.] (p.)

பகழி, s. An arrow, அம்பு. 2. Foot of an arrow, அம்பின்குதை. (சது.)

பகழிமாரி. A shower of arrows. (p.)

பகன், s. One of the twelve suns, so called, or solar deities, as பகவான். W. p. 610. B'HAGA. 2. A giant, பகாசுரன்.

பகன்றை, s. The கிலுகிலுப்பை shrub, Crotalaria verrucosa, L. 2. The சிவேதை plant, Indian jalap. See சிவதை. 3. The சீந்தில் creeper. See சீந்தில்.

குத்துப்பகன்றை, s. A plant. See குத்த.

சிறுபகன்றை, s. Ruellia balsamica. (R.)

பகாசூரவைரி, s. Bhîma, one of the Pandavas, வீமன். (சது)

பகாப்பதம்—பகாப்பொருள். See under பகு, v.

பகாலம், s. The skull, as கபாலம். W. p. 610. B'HAGALA.

பகிடி, s. [also பகடி.] Jest, joke, wit, pun, repartee, விகடம். 2. Mockery, derision, scoffing, பரிகாசம். 2. A buffoon, a jester, a punster, பகிடிக்காரன். [For the compounds, see கேலி] See B'had'i. W. p. 611.

பகிடியைப பாமபுகடித்தாற்போலிருக்கிறது. It is like a jester bitten by a snake.

பகிடிக்கதை, s. A story told to excite laughter.

பகிஷ்காரம், s. Expulsion, degradation. (R)

பகிஷ்கரிக்க — பகிஷ்காரம்பண்ண, inf. To expel from a caste or sect, to degrade.

பகிரங்கம், s. [also பயிரங்கம்.] Publicity, மறைப்பின்மை; [ex Sa. Bâhir, an indeclinable particle meaning, out, on the outside.] See W. p. 745. VAHIRANGA (c.)

பகிரண்டம், s. [com. with அண்டம்.] The surrounding universal space, firmament, heaven, அண்டத்தின்வெளி; [ex அண்டம்.]

பகிரு — பகிர், கிறேன், பகிர்ந்தேன், வேன், பகிர, v. a. To divide in shares, distribute, parcel out, apportion, பங்கிட. (c.) See வகிரு.

பகிர்ந்துகொடுக்க, inf. To distribute.

பகிர், p. noun. A piece cut off, a section, பங்கு.

பகிர்ச்சி, v. noun. Separation, division, பிரிவு.

பகினி, s. A sister, உடன்பிறந்தாள். W. p. 610. B'HAGINI.

பகீகனநேத்திரம், s. One of the thirteen kinds of apoplexy. See சன்னி.

பகீரதன், s. A king whose austerities are fabled to have brought the Ganges from heaven, சூரியகுலத்தரசரிலொருவன். W. p. 610. B'HAGIRATHA.

பகீரதி, s. (St.) The river Ganges, கங்கை.

பகீரிடுதல் — பகீரெனல், v. noun. Being greatly terrified, அச்சக்குறிப்பு.

பகீரென்றுபற்றினன். He was suddenly inflamed.

வயிறுபகீரென்ன, inf. To be moved in the entrails through sudden fear.

*பகு, adj. [Tamil வெகு.] Many. W. p. 601. BAHU.

பகுவசனம், s. [in gram.] Plural number.

பகு, கிறது, [p. பக்கது.] ந்தது, ம், பக, v. n. To part, divide, separate into branches, to ramify, as a tree or a family, கிளைக்க. (குறள்.) 2. To be at variance, to be disunited, பிரிய—as இழைபகஅம்பெய்தான், he shot an arrow so as to split a thread. (Beschi.)

பகாப்பதம், s. [neg. பகா.] A primitive, indivisible word, as வில், a bow.

பகாப்பொருள், s. [neg. பகா.] An epithet of God, the indivisible.

பகுபதம், s. A compound word or one which may be divided—oppos. to பகாப்பதம்.—Note. It is of two kinds, பெயர்ப்பகுபதம், a compound noun as பொன்னன், and வினைப்பகுதம், a compound verb, as நடந்தான்.

பகுபதவுறுப்பு, s. The six constituent parts of a word: பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம், which see.

பகுவாய், s. A large mouth, an open mouth, அகன்றவாய். 2. A large mouthed vessel, தாழி. (சது.)

பகுவாய்க்கொள்கலம். A vessel with a large mouth.

பகுவாய்ப்பறை. A large drum.

பகு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To divide, distribute, apportion, allot, destine, பகிர்க்க. 2. To give, ஈய. 3. To cut off, தறிக்க. 4. To cut in two, துண்டிக்க.

இன்னபடியென்றுபகுத்துப்போட்டான். He explained it distinctly.

பகுத்தறிய — பகுத்துணர, inf. To distinguish, discriminate.

பகுத்தறியுமறிவுடையஆத்துமா. The rational soul.

பகுத்தறிவு, v. noun. [substantively.] Reason, rationality, discriminating knowledge as possessed by men.

பகுத்தறிவுள்ளவன், appel. n. [neg. பகுத்தறிவிலான், பகுத்தறிவிலி, masc. and fem.] A judicious person.

பகுத்துப்பார்க்க, inf. To survey every part.

பகுப்பு, v. noun. Division, classification.

பகுதி, s. Portion, part, allotment, division, பங்கு. 2. Tax, tribute, திறை. 3. Division of an army, படை. (சது.)

பகுதிகட்ட, inf. To pay a tax.

பகுதிக்கால், s. The sign of உ in some characters. See கால்.

*பகுதி, s. Primitive nature, homogeneous matter, being the passive, generating cause, இயல்பு, as ஐம்பகுதி, the five genders. 2. The radical form of a word without the affixes, சொன்முதனிலை; [from Sa. Prakruti. W. p. 557.] (சது.)

*பகுவபஞ்சம், s. One of the thirty-two Upanishads. See உபநிடதம்.

பகுவாய். See பகு, v. n.

*பகுளம், s. The dark half of a lunar month, கிருஷ்ணபட்சம். W. p. 602. BAHULA.

பகுளசத்தமி, s. The seventh day after the full moon. See திதி.

பகை, s. Hatred, enmity, dislike, repugnance, abhorrence, வெறுப்பு. 2. A foe, an enemy, an opponent, a rival, a competitor, பகைஞன். 3. Disagreement, counteraction, heterogeneousness, contrariety, as of light to darkness, or of medicine to the disease, விரோதம். 5. One of the five situations of a planet. See கிரகநிலை. (c.)

முப்பகை, s. The three enemies are: பைசாச, the devil; 2. உலகு, the world; 3. உடல், the body or flesh. (சது.)

உட்பகை, கூ, s. The six internal foes attached to the soul: காமம், lust; 2. குரோதம், anger; 3. உலோபம், avarice; 4. மோகம், sensuality; 5. மதம், pride; 6. மாச்சரியம், envy or malice.

பகைமுன்னெதிரேல். Facing an enemy.

பகைமேற்செல்லல். Going against an enemy.

முற்பகைசெய்யிற்பிற்பகைவிளையும். He who hates will be hated in return. (Arc.)

இருளுக்குச்சூரியன்பகை. The sun is the foe of darkness.

பகைசாதிக்க, inf. To gratify one's anger. See சாதி, v.

பகைஞர், s. [sing. பகைஞன்.] Enemies, foes. (சது.)

பகைத்தானம், s. One of the five situations of a planet. See தானம்.

பகைத்திறந்தெரிதல், v. noun. Knowing an enemy's strength. (கு.)

பகைத்தொடை, s. [in gram.] The composition of words of opposite meaning, as முரண்டொடை.

பகைபடல், v. noun. Being displeased with, being at variance.

பகைமன்னர், s. [pl.] Hostile kings.

பகையகம், s. Battle-field, போர்க்களம்; [ex அகம், place.] (சது.)

பகையாளி, s. A foe, an enemy. (c.)

பகையாளிக்குடியைஉறவாடிக்கெடுக்கிறது. Destroying the habitation of an enemy by feigning friendship.

பகைவர், s. [sing. பகைவன்.] Enemies.

பகைவர்அரண்வளைத்தல். Besieging an enemy's fort.

பகை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To hate, oppose, விரோதிக்க. (c.)

பகைமை, s. Hatred, enmity, variance, விரோதம்.

*பகோளம், s. [also ககோளம்.] The celestial sphere, வானவட்டம்; [ex பம்.] See கோளம்.

*பக்கணம, s. A village or street of hunters, வேடர்வீதி. W. p. 490. PAKKAN'A. 2. Town, village, ஊர். (சது)

*பக்கணம் — பக்ஷணம், s. Eating, devouring, consuming. See பட்சணம். W. p. 610. B'HAKSHAN'A.

*பக்கம்—பக்ஷம்—பட்சம், *s.* Side, புறம். (See அக்கம்.) 2. Contiguity, nearness, அருகு. 3. Place, இடம். 4. Faction, interest, party, பிரிவு. 5. Affection, friendship, kindness, attachment, நட்பு. 6. The half of a lunar month or fortnight. See அபரபக்ஷம், பூர்வபக்ஷம். 7. An argument, thesis, proposition advanced, கோட்பாடு. 8. The wing or feather, புட்சிறகு. W. p. 490. PAKSHA—*Note* பக்கம், [*in logic.*] A two-fold relation:—1. புறப்பக்கம், or புறத்துப்பக்கம், an inference regarding exterior or secular matters; 2. உட்பக்கம், or அகப்பக்கம், connected with mental or religious truths. Each of these is applicable to two species of comparison: 1. நிகர்பக்கம், துல்லியபக்கம், ஒப்பாம்பக்கம், or சபக்கம், *proper comparison,* or deduction from analogy; thus for புறப்பக்கம், there is smoke, therefore there is fire; and for உட்பக்கம், regarding moral actions, originated in the mind; analogy refers them to maya, மாயை, as their basis. The agreement between this doctrine and the experience of a person, is ground of rational deduction. 2. நிகராப்பக்கம், ஒவ்வாதபக்கம், or விபக்கம், *improper comparison* involving incongruity, absurdity, impossibility; thus for புறப்பக்கம், to say "there is fire in water" is an absurdity in affairs of common life; for உட்பக்கம், to say that the basis of Siva's knowledge is மாயை, is an absurdity. In spiritual things the mental faculties, as well as the senses, are referred to மாயை as their basis, and medium of acquiring knowledge. The சூக்கும body, the immediate source of consciousness, is referred to the same principle; and when the soul is liberated from births these are resolved into their original principles.

பக்கத்திலேவாங்கிக்கொள்ளுதல். Borrowing in the neighborhood, or of others besides the persons in question.

அவர்பக்கத்துக்காரியகாரன். He is his agent.

எனக்குப்பக்கத்திலேஇரு. Sit by me.

பக்கக்கிரகணம், *s.* Eclipse of the sun and moon, or the contrary, in succeeding changes of the moon.

பக்கக்குடுமி, *s.* [*loc.* சிறுப்பா.] Men's hair-locks left growing over the ears, and tied behind.

பக்கசூலை, *s.* A pain in the side, inflammation of the liver. See சூலை.

பக்கச்செடில், *s.* A self torture, by running iron sticks, through the sides, See செடில்.

பக்கச்சொல், *s.* A word in one's favor.

பக்கச்சொல்லாளி, *s.* A spokesman, a puffer, an advocate.

பக்கத்துக்கிளி, *s.* [*prov.*] The one who passes in கிளித்தட்டு play. See கிளி.

பக்கத்துணை, *s.* An aid, a companion, a supporter.

பக்கத்தெலும்பு, *s.* A side-bone.

பக்கபாதம், *s.* Partisanship, &c. See பட்சபாதம்.

பக்கப்பவுத்திரம், *s.* A fistula on either side of the privities. See பகந்திரம்.

பக்கப்பிளவை, *s.* A cancer or carbuncle in the side.

பக்கவளை, *s.* A beam in the side of a bungalow or house, &c. See வளை.

பக்கவாட்டு, *s.* That which is aside, or beside, as an irrelevant question, or subject. 2. Sidelong.

பக்கவாதம், *s.* Partial or lateral palsy. See வாதம். 2. As பக்கபாதம்.

பக்கவாயு, *s.* Sarcocele, with swelling in the side.

பக்கவெட்டுப்போட, *inf.* To tickle one in the side.

பக்கவேர், *s.* Side root of a tree, not shooting downward.

பக்கணை, *s.* A stirrup, அங்கவடி. (திவா.)

*பக்கர், *s.* Relations, kindred, இனத்தார்; [*ex* பக்கம்.] (சது.)

பக்கல், *s.* [*a change of.* பக்கம்.] Side. 2. One's people, class, tribe, இனம். (*c.*)

எனதுபக்கலிலேவந்துசேர்ந்தான். He has come to me for support, protection.

பக்கறை, *s.* [*for* பற்கறை.] Artificial blackness of the teeth.

பக்கா, *s.* (*Hind.*) Largeness, greatness, பெரியது—oppos. to கச்சா 2. [*in combin.*] Notoriety—as பக்காத்திருடன், a great thief

பக்காச்சேர், *s.* A weight of twenty-four *palams.* See சேர்.

பக்காளி, *s.* (*Hind.*) One who carries water in a leather sack on a bullock.

பக்காளிமாடு, *s.* The bullock of பக்காளி; *also in contempt.*

*பக்கி—பக்ஷி, *s.* [*com.* பட்சி.] A bird, any winged fowl, பறவை; [*ex* பக்கம், feather.] —பக்ஷி is used to denote a particular species.

பக்கிராசன்—பக்ஷிராஜன், *s.* The Brahmany kite, as king of birds, கருடன்.

பக்கி—பக்ஷி, *v.* To feed, &c. See பட்சி.

பக்கிட, *inf.* To throb as the heart through fear, &c., திடுக்கிட. 2. To give way, to bilge, as a ship, to part, crack, split, வெடிக்க. 3. [*also* பக்குக்கட்ட.] To form a scab.

பக்கிரி—பக்கீரி, *s.* (*Pers.*) A Fakeer; *also in contempt*—as பக்கிரிப்பயல்.

பக்கு, *s.* Outer bark of a tree, மரப்பட்டை. 2. Scab of a sore, புண்ணசறு. 3. Tartar on the teeth, பற்பற்று 4 The dried mucus of the nose, சளிப்பக்கு. 5. Scum formed on a prepared dish, பொருக்கு. 6. Fracture, break, crack, பிளப்பு.

பக்குவிடுதல், *v. noun.* Gaping, parting, splitting, cracking, as the ground. 2. Breaking as the skin by a blow of a ratan.

பக்குப்பக்கெனல், *v. noun.* Throbbing rapidly, as the heart through fear, அச்சக்குறிப்பு. 2. Being in excess, abounding, மிகுதிக்குறிப்பு. (*c.*)

பக்குப்பக்கென்றுசிரித்தான். He laughed excessively.

பக்குப்பக்கென்றுவயிறுபற்றுகிறது. The belly is throbbing greatly as by hunger or sorrow.

பக்குப்பக்கென்றெரிகிறது. It burns with a blaze.

*பக்குவம், *s.* Suitability, fitness for use, the right age, stage or degree, தகுதி. 2. Maturity that which is matured by nature or art, which is come to perfection, முதிர்ச்சி. 3. Ability, cleverness, competency, திறணி. 4. Maturity of the soul for absorption, ஆத்துமபரிபாகம். 5. Puberty of a girl, தெரட்சி. 6. (*Beschi.*) An excuse, an apology, போக்கு. W. p. 490. PAKVA. (*c.*)

பக்குவமாய்ப்பார்த்துக்கொள். Take good care.

பக்குவசாலி, *s.* A competent person. 2. One mature for emancipation, பரிபாகி.

பக்குவஞ்சொல்ல, *inf.* To make an apology. 2. To give directions concerning any work or business.

பக்குவப்பட, *inf.* To become mature, as the soul. 2. To arrive at puberty, as a girl.

பக்குவமாக, *inf.* To become fit, competent or suitable. 2. As பக்குவப்பட.

பக்குவமாய்ச்சமைத்தல், *v. noun.* Cooking well, cooking to one's taste.

பக்குவம்பார்க்க, *inf.* To watch a fit time.

பக்குவர், *s.* [*pl.*] Persons devoted to sacred things, of whom are three classes: 1. கருமகாண்டிகர், those engaged in ritual observance; 2. ஞானகாண்டிகர், those occupied in meditation; 3 பத்திகாண்டிகர், those absorbed in devotion.

பக்குவவாளி — பக்குவன் — பக்குவி, *s.* A competent person, &c., as பக்குவசாலி.

பக்குவாசயம், *s.* [*in phys.*] The stomach, one of the five receptacles of the body as ஆமாசயம்.

பக்குவாத்துமா, *s.* One fit for heaven as பக்குவசாலி.

பக்கெனல், *v. noun.* Sounding as sudden laughter bursting out, ஒலிக்குறிப்பு. 2. Throbbing as பக்குப்பக்கெனல். 3. Parting, giving way, bilging, splitting, cracking, வெடித்தல். 4. Being sudden, சீக்கிரக்குறிப்பு.

*பக்தன். See பத்தன்.

*பக்தி, *s.* Faith, belief. 2. Worship, service. See பத்தி.

*பங்கஜம்—பங்கசம், *s.* See பங்கயம்.

பங்கம், *s.* [*prov.*] Wager, பந்தயம்.

*பங்கம், *s.* Diversity, division, dislodgement, வேறுபாடு. 2. Defeat, discomfiture, disappointment, தோல்வி. 3. Indecency, shame, disgrace, வெட்கம். 4. Distortion, contortion of the limbs, &c., நெளிப்பு, முடம். 5. Violation, desecration, prostitution, profanation, ஈனம். 6. Injury, detriment to one's person, reputation, &c., மானபங்கம். 7. Wave, அலை. 8. A tank, குளம். 9. A piece, துண்டு. W. p. 611. B'HANGA. 10. Mire, mud, குழைசேறு. 11. Sin, பாவம். 12. Dust, புழுதி. W. p. 491. PANKA.

அவனையக்கபங்கமழிக்கிறான். He vexes him.

என்னைப்பங்கம்பேசினான். He reproached me.

அவன்பங்கப்பட்டுப்போனான். He was ignominiously treated

பங்கக்கேடு, *s.* [*vul.*] Disgrace, ignominy.

பங்கங்கொள்ள, *inf.* To deride one. (*Beschi.*)

பங்கசாதம், *s.* The lotus, தாமரை as பங்கயம்; [*ex* சாதம், produced.]

பங்கப்பட, *inf.* To be treated disgracefully, ignominiously, &c., அவமானப்பட. 2. To fall into disgrace, சிறுமைப்பட. 3. To be violated, desecrated, ஈனப்பட.

பங்கப்படுத்த, *inf.* To treat disgracefully, put one to shame, expose one, 2. To violate, desecrate, profane.

பங்கம்அழிதல், *v. noun.* Becoming disgraceful; losing one's honor, credit, &c.

பங்கேருகம், *s.* Lotus, as பங்கசாதம்; [*ex* உருகம்.]

சமயபங்கம், *s.* An unseasonable time.

பங்கம்பாலே — பங்கம்பாளே, *s.* A kind of medicinal creeper. See ஆடுதின்னாப் பாலே, இருபீசாசம்.

*பங்கயம், *s.* (*St.* பங்கசம்.) The lotus, தாமரை; [*ex* பங்கம், mud *et* யம்=சம், produced.]

பாதபங்கயம். Lotus footed.

பங்கயத்தவன், *s.* Brahma as possessor of the lotus, பிரமன்.

பங்கயன், *s.* Brahma, as on the lotus, பிரமன. 2. The sun, which when rising, causes the lotus to bloom, சூரியன். (சது.)

பங்கயாசனன், *s.* Brahma as the lotus seated, பிரமன்.

பங்களா, *s.* (*Hind.*) Bungalow.

பங்கா, *s.* (*Hind.*) A punkah or large fan, காற்றசைக்குமோர்கருவி.

பங்காரு, *s.* [*Tel.* బంగారు.] Gold, பொன்.

*பங்காளம், *s.* Bengal. 2. A tune. See வங்காளம்.

பங்காளி, *s.* A Bengali. 2. See பங்கு.

பங்கி, *s.* A man's lock of hair, ஆண்மயிர். 2. Hair, மயிர். (சது.)

பங்கி, *s.* (*for.*) The கஞ்சா plant. [*Eng.* Bang.]

*பங்கி, *s.* A division, separation, பிரிவு, as திரிபங்கி. W. p. 611. B'HANGI.

பங்கீடு. See பங்கு.

பங்கு, *s.* Share, portion, part, dividend, parcel, பகுதி. 2. Allotment, assignment, appointment, நியமிப்பு. 3. Moiety, half, பாதி. 4. Copartnership, கூட்டு. (*c.*)

நான் உன்பங்கிலிருக்கிறேன். I am on your side.

பங்காளன் — பங்காளி, *s.* A partner, a fellow-sharer, a share-holder, a consociate, a partaker, a participator, கூட்டாளி.

பங்கிக்க, *inf.* [*prov.*] To sever, cut off, part, separate, divide, பகுக்க.

பங்கிட, *inf.* To divide, parcel out, distribute, apportion. 2. To allot, destine.

பங்கிட்டநாள், *s.* A lunar asterism belonging to two Zodiacal signs.

பங்கீடு, *v. noun.* Dividing, sharing, allotting, parcelling, பங்கிடுகை. 2. Adjustment, settlement of strife, disposal of affairs, திட்டம். 3. Measures, means, உபாயம். (*c.*)

பங்குபங்காகப்பிரிக்க, *inf.* To divide into portions.

பங்குபட்டநாள், *s.* The moon's continuing in a lunar mansion through parts of two days.

பங்குபாகம், *s.* Share, portion, பங்கு; sometimes பங்குபிரிசுவி.

பங்குபாகம்பிரித்துக்கொள்ள, *inf.* To divide an estate, as heirs. See தாயாதி.

பங்குபிரிந்தவர்கள், *appel. n.* Those who have divided an estate, as heirs.

பங்குவீதம், *s.* Equal shares.

பங்குள்ளவன், *appel. n.* [*with dative.*] Sharer with one.

*பங்கு, *s.* A lame person, a cripple, சொண்டி. 2. Saturn the planet as lame (slow in progress,) as a punishment for attempting to kick his aunt, சனி. W. p. 492. PANGU.

பங்குசம், *s.* Head-dress, தலைக்கோலம். (சது.)

*பங்குனி, *s.* The name of a month, March into April, ஓர்மாதம். See பற்குனி. 2. The twelfth lunar mansion or asterism, உத்திரநாள். (*p.*)

பங்குனிமாதம்பகல்வழிநடந்தவன்பெரும்பாவி. He who travels by day in the பங்குனி month will suffer; i. e. *from heat.*

அவன்பங்குனியென்றுபருப்பதுமில்லைசித்திரையென்றுசிறுப்பதுமில்லை. He neither increases in March, nor decreases in April; i. e. he is always uniform.

பங்குனன், *s.* Arjuna who was born in பங்குனி. the twelfth lunar mansion.

பங்குனியுத்திரம், *s.* A special festival-day occurring in பங்குனி month.

*பங்கேருகம், *s.* See பங்கம், *Sa.*

பசகள் — பசங்கள், *s.* [*vul. for* பயல்கள்.] Boys.

பச, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To become greenish, பசுமையாக. 2. To change in hue, complexion, color, as the skin through love-sickness; to turn sallow through affliction, தன்பத்தானிறம்வேறுபட. 3. To become dim, as the twilight, மங்கிப்போக.

பசப்பு, *v. noun.* Yellow or gold color, பொன்மை. 2. Greenness, &c. (சது.)

அவனிலேபசப்பில்லை. He is emaciated. 2. He is grown poor.

பசண்டை, *s.* Verdure, moisture, பசுமை. 2. [*prov.*] Easy circumstances, money at command.

பசந்து — பசுந்து, *s.* (*Hind.*) Any thing pleasing to the eye, refreshing to the sight, கண்ணுக்கழகு. 2. Elegance, beauty, attractiveness, சோர்த்தி. (*c.*)

பசந்தாயிருத்தல், *v. noun.* Being pleasing, attractive, engaging to the sight.

பசபசக்க, *inf.* To itch, தினவெடுக்க. (*c.*) 2. [*prov.*] To chatter or grumble in a suppressed tone, to mutter, முறுமுறுக்க.

பசபசத்தான், *appel. n.* A chatterer, a babbler, அலப்பன்.

பசபசெனல் — பசபசப்பு, *v. noun.* Feeling a crawling, itching, &c., *as the verb.*

பசபசென்றலட்டுதல். Teasing by continual talking.

பசபசென்றுதூறுதல். Drizzling as rain.

பசபசென்றுபேசுதல். Chattering a long story.

பசபசென்றுவிழித்தல். Staring through fear or shame.

பசபசென்றூருதல். Itching, crawling.

பசப்பு, கிறேன், பசப்பினேன், வேன், பசப்ப, *v. n.* To deceive; to allure, fascinate, gain the affections, மயக்க. 2. To chatter, to talk too much; to tell idle stories, வியாமற்பேச. (*c.*)

பசப்பு, *v. noun.* Allurement, deceitful or flattering words, மயப்பு. 2. See பச.

பசமநத்திரம், *s.* A kind of turmeric, மரமஞ்சள். (*R.*)

பசம்பை, *s.* A dove-tailing, in cabinet work. (*R.*)

பசலி, *s.* (*Arab.*) Fusly, a term designating the official revenue year of the Mohammedans, commencing on the twelfth of July. [*Govt. usage.*]

பசலை, *s.* Sallowness, greenishness of complexion, from love-sickness, or affliction, காமத்தாலுண்டாம்பசப்பு. 2. As பசளை.

பசலைநிறம், *s.* Sallow color from love-sickness.

பசளி, *s.* [*prov.*] Margin or head of a channel in irrigation, மடைமுகம். 2. See பசளை.

பசளை, *s.* [*also* பசலை, பயளை, *prov.* பசளி; *poet.* வயலை, or வயலைக்கொடி.] A class of plants, Spinage, portulaca oleracea. 2. [*fig.*] An infant. 3. Manure, compost, எரு, vulgarly, பயளை. 4. Virtue of manure, எருவின்குணம்.—Of பசளை are: கொடிப்பசளை—வெள்ளைப்பசளை, a plant, Basella alba, *L.* செவப்புப்பசளை, Basella rubra; சொத்தைப்பசளை, Basella lurida; கோழிப்பசளை, a variety of the same; பேய்ப்பசளை, a wild kind of Portulaca; வழுக்கைப்பசளை, Portulaca palmoides.

பசறு, *s.* (*Tel.*) The expressed juice of green herbs, பச்சிலைச்சாறு.

*பசனம், *s.* Cooking, சமையல்.

*பசனை — பஜனை, *s.* Worship, service. See சிவபஜனை. W. p. 611. B'HAJANA.

*பசாசு, *s.* [*prop.* பிசாசு or பிசாசம்.] A devil, vampire, goblin, demon, fiend; also பைசாசம்.

பசாசுபோலேதிரிதல், *v. noun.* Being melancholy, dejected; reckless. 2. Being avaricious. 3. Indulging vagrant habits.

பசாடு, *s.* [*prov.*] Film in the eye, speck in a gem, scums on the surface of water, &c., மாசு.

பசாடுபிடித்தல், *v. noun.* Forming as a film in the eye.

பசாடுரித்தல், *v. noun.* Taking a film from the eye.

பசாடை, *s.* [*prov.*] Scum, concretion on water, as பசாடு; *not in good use.*

பசாரி — பஜாரி, *s.* (*Hind.*) A harlot, a whore; a shrew, a scold. (*c.*)

பசாரித்தனம் — பசாரியாட்டம், *s.* The quarrelsomeness of a woman.

பசார், *s.* Native shoes, slippers; also called பைசார்.

பசார்ச்சோடு, *s.* A pair of slippers.

பசார் — பஜார், *s.* (*Pers.*) Bazaar.

பசானம், *s.* A kind of coarse paddy ripening late, ஓர்நெல்; also பிசானம். (*Beschi.*)

பசான், *s.* A kind of rice reaped in April or May as பசான்.

பசி, *s.* Hunger, appetite, craving for food, one of the twelve causes of distress; burning from want of food in the stomach. See உயிர்வேதனை. (*c.*)

பசிருசியறியாது, நித்திரைசுகமறியாது. Hunger seeks not dainties; drowsiness seeks repose.

பல்லாடப்பசியாறும். Hunger is lessened by having something between the teeth.

உம்முடையமுகத்தைப்பார்த்தாற்போலேபசிபோயிற்று. As soon as I saw your face, hunger left me, i. e. I lost all sense of trouble.

பசிகிடக்க, *inf.* [*also* பட்டினிகிடக்க.] To starve.

பசிகொள்ள, *inf.* To be hungry; to have a good appetite.

பசிக்கொடுமை, *s.* As பசிவருத்தம்.

பசிக்கொட்டாவி, s. Gnawing of hunger.
பசிச்சோர்வு, v. noun. Withering, through hunger.
பசிதாகம், s. Hunger and thirst.
பசிதணிக்க — பசிதீர்க்க — பசிமாற்ற— பசியாற்ற, inf. To appease hunger.
பசிதணியல் — பசிதீரல் — பசிமாறல்— பசியாறல், v. noun. Abating of hunger.
பசித்தாக்கம், s. As பசிவருத்தம்.
பசித்தீபனம், s. Appetite.
பசிபட்டினியாயிருத்தல், v. noun. Starving, being famished.
பசிபொறுக்க, inf. To endure hunger.
பசிபொறாதவன், appel. n. One who cannot endure hunger.
பசிமந்திக்க, inf. To lose one's appetite.
பசிமந்தித்துப்போயிற்று. The appetite is gone.
பசியறிந்துகொடுக்க, inf. To be mindful of another's hunger and feed him.
பசியினாலேசாக, inf. To starve; to perish with hunger.
பசியின்மை, s. Want of appetite.
பசியெடுக்க, inf. To be hungry.
எனக்குப்பசியெடுக்கிறது. I am hungry.
பசியெழும்புதல், v. noun. Becoming hungry.
பசிவருத்தம், s. Gnawing or distressing hunger.
சிறுபசி, s. Slight hunger.
சிறுபசியாற்ற. To take tiffin, &c.

பசி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. [impersonal.] To be hungry, to have an appetite, பசியெடு. (c.)
புலிபசித்தாலும்புல்லைத்தின்னாது. Though a tiger be ever so hungry, he will not eat grass.
எனக்குப்பசிக்கிறது. I am hungry.

*பசியாத்தாபம், s. [for பசாத்தாபம், which see.] Contrition. (R.)

பசிரி — பசிரிக்கீரை — பயிரி, s. A garden herb used for curry, Portulaca quadrifolia, L. (c.)—It is of three kinds, குறிஞ்சிப்பசிரி, Trianthema crystallini; பெரும்பசிரி, Portulaca meridiana; and வறட்பசிரி, another variety.

பசு, adj. [in combin. பசிய, பச்சு, பசசை, பசுமை.] Green, raw, &c. See பசுமை.
பசுமரம், s. Green tree.
பசுநரம்பு, s. [com. பச்சைநரம்பு.] Veins apparent in pregnant women, &c.
பசுஞ்சடை, s. Green leaf.
பசுங்கிளி, s. A green parrot.
பசுந்தார், s. A green garland.
பசுந்தினை, s. Yellow millet.

பசு, s. A cow, பெண்பசு. [the most common usage in Tamil.] 2. A bull, எருது. 3. Taurus of the Zodiac, இடபராசி. 4. A living creature, சீவனுடையது. 5. A sacrificial ram, யாகத்துக்குரியபசு. 6. Any animal, for sacrifice, மிருகம். 7. The soul, a sentient being or principle united with a body, or not; one of the three eternal uncreated principles called பசுபதிபாசம். W. p. 520. Pasu.
பசுத்தோல்போர்த்துப்புலிப்பாய்ச்சல்பாய்தல்....... Putting on a cow's skin and leaping like a tiger; i. e. assuming mildness, and using ferocity.
தன்னைக்கொல்லவருகிறபசுவைக்கொன்றால்தோஷமில்லை. It is not a sin to kill a cow in self-defence.

பசுகரணம், s. Faculties of the soul.
பசுக்காத்தல், v. noun. One of the six occupations of Vaisyas; the care of flocks. See தொழில்.
பசுக்காவலர், s. [pl.] Cowherds—the caste, இடையர். 2. Any of the three divisions of the Vaisyas.
பசுஞானம், s. Nature, capacity or faculties of the soul. 2. Spiritual knowledge of the second degree, as distinguished from பதிஞானம் and பாசஞானம்; the former only being sufficient for salvation. 3. Limited knowledge of the soul as acquired by the senses. 4. The mode of existence of the soul, being itself intelligent, but subject to non-intelligence, by its moral evil, and connexion with matter.
காவேரிக்கரைப்பசுபோல்அலைகிறான். He wanders like a cow on the banks of the Kavery—discontented.
பசுத்தக்காளி — பசுவின்தக்காளி, s. A shrub, ஒர்தக்காளி, Physalis.
பசுத்துவம், s. The nature, properties, &c., of the soul, ஆன்மாத்துவம்.
பசுநா, s. The பிரப் tree, (lit.) cow-tongue-leaved.
பசுநாகு, s. A female calf, a young cow, a heifer.
பசுபதி, s. (St.) Siva, as lord of souls, சிவன்; [ex பதி, lord.]
பசுபதிபாசம், s. The soul, deity and illusion or மாயை. See திரிபதார்த்தம்.
பசுபாசம், s. The entanglement of the soul with the body.
பசுபாவம், s. Sins against creatures, as murder and cruelty, in distinction from sins against God, பதிப்பாவம்.
பசுபுண்ணியம், s. Meritorious deeds for the benefit of creatures.
பசுப்பட்டி-பசுமாட்டுப்பட்டி, s. A cow-fold.
பசுமந்தை, s. A herd of cows, பசுக்கூட்டம்.
பசுமாடு, s. A cow.
பசுமுன்னை, s. A tree, a variety of Premna integrifolia with small leaves.
பசுமோர், s. Butter milk, whey of cow's milk.
பசுவழி, s. [prov.] A good natured person, gentle as a cow; [ex வழி.]
பசுவதை, s. (St. கோவதை.) Slaughter of a cow, regarded as a great crime.
பசுவன், s. [prov.] A rennet bag.
பசுவின்கன்று, s. A calf.
பசுவின்தயிர், s. Curds of cow's milk.
பசுவின்நெய்—பசுநெய், s. Cow's ghee.
பசுவுக்குவாயுறைகொடுத்தல், v. noun. Feeding a cow; one of the thirty-two meritorious deeds.

பசந்து, s. (Hind.) Pleasing to the eye, &c. See பசந்.

பசுமை, s. Greenness, verdure, rawness, பச்சை. 2. Coolness, moistness, freshness, செழுமை. 3. Elegance, beauty, pleasantness, குளிர்ச்சி. 4. Essence, substance, essential part of a thing, சாரம். 5. A greenish yellow, as distinguishing one of the two kinds of gold, பொன்னிறம். 6. A Cashmere shawl, also பசுமைச்சால்வை. 7. (சு.) Reality, truth, honesty, உண்மை. 8. (fig.) Easy circumstances, prosperity, செல்வம். (c.)

பசுமைபடப்பேசு. Speak to the point, de love the substance.
பசுங்கதிர், s. The moon as cool rayed, சந்திரன்கதிர். 2. See கதிர்.
பசுங்கதிர்த்தேவு. The moon, or the cool rayed deity. (சு.)
பசுங்கரந்தை, s. A plant. See கரந்தை.
பசுங்காய், s. Rice or other grain in the ear but not quite ripe. 2. An unripe fruit.
பசுங்காய்ப்பதம், s. A stage in the ripening of grain.
பசுங்கிளி, s. As பைங்கிளி, under பசு.
பசுங்குடி, s. A family of good extraction, of respectability. 2. See குடி.
பசுங்கொற்றான், s. A creeper.
பசுங்கோரை, s. A kind of grass.
பசுந்தரை, s. Grassy ground, verdant field, &c.
பசுமையுள்ளவன் — பசையுள்ளவன், appel. n. A man in good circumstances.
பசும்பயறு, s. [com. பாசிப்பயறு.] A kind of lentils, as பச்சைப்பயறு.
பசும்பிடி, s. A species of ever-green, the பச்சிலை tree. See தமாலம். (சு)
பசும்புல், s. Green grass, green sward. 2. (சு) Growing corn, விளைபயிர்.
பசும்புற்றரை, s. As பசுந்தரை.
பசும்பொன், s. Fine gold. 2. Gold of a greenish yellow, as distinguished from செம்பொன்.

பச்சடி, s. A kind of seasoning for food, like pickles, ஒர்கறி. [Tel.] 2. [prov.] Prosperity, command of money, பசுமை; [ex பசுமை.]—Of பச்சடி, are பாகற்காய்ப்பச்சடி, pickle of பாகல் fruit; மாங்காய்ப்பச்சடி, mango pickle; வாழைப்பூப்பச்சடி, pickle of plantain flowers.
பச்சடிகண்டால்ஒட்டிக்கொள்மகளே. My daughter, if you see [your lover] prosperous, cling to him. [spoken by a time-server.]
பச்சடியன், s. [prov.] A white and black bull or cow.
பச்சரிசி, s. Rice hulled without boiling; for flour, &c. See புழுங்கலரிசி.
பச்சிலை, s. A kind of ever-green, the தமாலம், Xanthocymus pictorius. 2. A green fresh leaf, பச்சையிலை. 3. A medicament consisting of leaves, பசுமருந்து.
பச்சிலைக்கிச்சிலிக்கிழங்கு. The medicament, and கிச்சிலி, an aromatic root.
பச்சிலைச்சாறுபோலே. Hue of leaf-juice, a leaf juice green.
பச்சிலைப்பாம்பு, s. [com. பச்சைப்பாம்பு] A kind of green snake.
பச்சிலைமருந்து, s. Leaves used medicinally.
பச்சிலையோணான், s. [prov. for பச்சோணான், which see] The chameleon.
பச்சிறைச்சி, s. Raw meat, flesh, &c. 2. A raw sore, பச்சைப்புண்.
பச்சுடம்பு, s. The tender body of an infant, or of a woman after child-birth. 2. One still sore from small pox, &c.
பச்செனல், v. noun. Being green, verdant, tender, or beautiful.
பச்சென்றவுடம்பு. A tender and beautiful body—said of the female sex.

பச்செனவு, *v. noun.* Greenness, verdure. பசுமை. 2. Moistness, dampness, sap, juice, சாரம். 3. Plumpness, fulness, பொலிவு.

பச்செனவான்மரம். A verdant tree.

உடம்பிலேசற்றும்பச்செனவில்லை. There is no flesh, no plumpness on him.

பச்சோணான்—பச்சோந்தி, *s.* The green lizard, the chameleon; of which the flesh is used in magic as a philter, &c.

பச்சோலை, *s.* Green olas; also பச்சை யோலை.

பசேரெனல், *v. noun.* Being quite green.

பசேரென்றிருத்தல். [*commonly* பச்சைப் பசேல்.] Being very green.

பசை, *s.* Stickiness, tenacity, ropiness, adhesiveness, பற்று. 2. Glue, paste, cement, பிசின். [*Tel.* పస.] 3. Moisture, sap, juice of meat, சாரம். 4. Animal or vegetable gluten, that which causes fulness, firmness, plumpness, &c., in animal or vegetable bodies; glutinous substance in fruits, roots, &c., சாரம். 5. Love, affection, compassion, அன்பு. 6. [*with* இரத்தம்.] Boldness, sanguineness, கொழுப்பு. 7. (சது.) Gain, profit, lucre, property, இலாபம். 8. Desire, விருப்பம். 9. Boiled rice, and other ingredients, applied to a drum-head to improve the sound, முழவின்மார்ச்சனை. (c.)

அதிலேபசையில்லை. There is no hope in the case, we shall be disappointed; There is no hope of his recovery.

உடம்பிலே பசையில்லை. He is greatly emaciated.

அவர்முகத்திலேசற்றுப்பசையில்லை. His countenance is gloomy, he looks dejected.

பசைபூசுதல், *v. noun.* Putting பசை on the right side of a drum.

பசையடி, *s.* [*prov.*] The first washing of a new cloth, without starching.

பசையற்றவன், *appel. n.* A person without kindness, or compassion, அன் பில்லாதவன். 2. One impoverished. See பசுமையுள்ளவன். 3. A man destitute of property, வறியவன்.

பசையாயிருக்க, *inf.* To be glutinous. 2. To be advantageous, profitable, lucrative, for one's interest. 3. To be kind, affectionate, compassionate.

பசையொட்டுதல், *v. noun.* Gluing or pasting any thing

பசை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* To be compassionate, kind, affectionate, அன்பு கொள்ள. 2. To be liberal, beneficent, benevolent, சாருமுள்ளதாக. 3. [*prov.*] To become glutinous, viscous, tempered — as clay, &c., இளக. 4. *v. a.* To temper clay so as to make it viscous—as done by potters, white-ants, or hornets; kneading dough, பிசைய. 5. To fill cracks in iron by beating, ஒட்ட.

பசைந்தார், *appel. n.* [*pl.*] Friends, சினேகிதர். (சது.)

பசைமட்டை, *s.* [*prov.*] A piece of palmyra stalk used by blacksmiths in tempering the heat of fire by water, இரும்பைப் பசையமட்டை.

பசைவு, *v. noun.* Compassion, kindness, affection, attachment, அன்பு.

பச்சடி, *s.* A kind of seasoning. [*See* பசு மை, *for this and other similar compounds.*]

பச்சவடம், *s.* (*Tel.* பச்சடம்.) A pair of cloths of the same kind. (c.)

•பச்சாத்தாபம், *s.* After-sorrow, repentance, regret, compunction, அநுதாபம். 2. Compassion, pity, இரக்கம்; [*ex* பச்சாத், after *et* தாபம், sorrow.] W. p. 520. PASCHATTAPA.

•பச்சிமம், *s.* The west, மேற்கு. (சது.) 2. (*St.*) Behind, afterwards, பின். W. p. 520. PASCHIMA.

பச்சிமகாண்டம், *s.* The New Testament. See காண்டம்.

பிப்பிராமபச்சிமபுத்தி. The wit of a brahman comes afterwards.

பச்சை, *adj.* Green, tender, young, unripe, raw, cool; intense; [*ex* பசுமை.]

பச்சைக்கசப்—பச்சைக்கைப்பு, *s.* [*prov.*] Extremely astringent, exceedingly bitter.

பச்சைக்கருப்பூரம், *s.* A greenish kind of drug. See கருப்பூரம்.

பச்சைக்கல், *s.* Unburnt brick, சுடாத செங்கல். 2. See கல்.

பச்சைக்கள்ளன், *s.* [*prov.*] A desperate thief, cheat, rogue; a villain.

பச்சைக்காய், *s.* Green fruit, fruit unripe or uncooked.

பச்சைக்காய்ச்சி, *appel. n.* [*prov.*] A tree with green fruit.

பச்சைக்கிளி, *s.* Green parrot. 2. Green grasshopper.

பச்சைக்குங்கிலியம், *s.* Green resin.

பச்சைக்குழந்தை, *s.* A tender new born infant.

பச்சைக்கூடு, *s.* [*prov.*] The living body, ஸ்தூலதேகம்.

பச்சைக்கூட்டோடேகயிலாயஞ்சேர்வாய். You will attain *kylaya*, the lowest heaven (of Siva,) alive, with vigorous health.

பச்சைக்கொல்லன், *s.* [*prov. in burles.*] A clumsy blacksmith; i. e. beating cold iron.

பச்சைச்சடையன், *appel. n.* An epithet of B'hairava, a form of Siva.

பச்சைத்தடி, *s.* Green sticks, used in making a bier.

விறைத்துப்பச்சைத்தடியாய்ப்போயிற்று. He is grown cold and stiff as a stick; said of one in a fit, &c.

பச்சைத்தண்ணீர், *s.* Cold water, unboiled water.

பச்சைத்தாள், *s.* Green stalks, showing immaturity in the corn.

பச்சைத்தோல், *s.* A raw, untanned skin, a felt. 2. New skin formed on a healing sore.

பச்சைநஞ்சு, *s.* Strong poison. 2. [*prov.*] An atrocious villain, தீயன்.

பச்சைநாடன்பழம், *s.* A kind of plantain with greenish streaks (*Beschi.*)

பச்சைநாபி, *s.* A strong, vegetable poison. See வச்சநாபி under நாபி.

பச்சைபழுக்காஅடைத்தல், *v. noun.* Painting green and yellow.

பச்சைப்பசேரெனல், *v. noun.* Being very green, all green, verdant, flourishing, மிகுபசுமையாயிருத்தல்.

மரகதம்பச்சைப்பசேரென்றிருக்கிறது........The emerald is very green.

தோட்டம்பச்சைப்பசேரென்றிருக்கிறது. The garden is all verdant.

பச்சைப்பட்டி, *s.* [*prov.*] Raw or undried manure, put on land shortly before sowing, எரு.

பச்சைப்பதம், *s.* Immaturity of grain, &c. 2. The state of not being well boiled.

பச்சைப்பயறு, *s.* A kind of pulse for taking the oil from the head.

பச்சைப்பாக்கு, *s.* Unripe or undried areca-nut.

பச்சைப்பாம்பு, *s.* A kind of green snake.

பச்சைப்பாலகன் — பச்சைப்பாலன்— பச்சைப்பிள்ளை, *s.* A new-born infant.

பச்சைப்பால், *s.* Raw milk.

பச்சைப்பானை, *s.* An earthen pot not burnt.

பச்சைப்பிள்ளைத்தாய்ச்சி, *s.* A woman immediately after child-birth.

பச்சைப்புண், *s.* A raw sore. 2. Sore, as the body through pain, hard labor in child-birth, &c.

சரீரமெல்லாம்பச்சைப்புண். My body is sore all over.

பச்சைப்புல், *s.* Green grass as plucked for cattle.

பச்சைப்புழு, *s.* Green caterpillars, the palmer worm.

பச்சைப்புளுகன், *s.* A great boaster. 2. A notorious liar.

பச்சைப்புளி, *s.* Exceeding sourness.

பச்சைப்புறு, *s.* A green pigeon, or dove.

பச்சைப்பெருமாள், *s.* A kind of paddy that comes to perfection in three months, ஓர்நெல். 2. Vishnu, விஷ்ணு.

பச்சைப்பொட்டு, *s.* A green spot on the forehead, made with a needle and colouring matter. 2. A green spot on the forehead, to which medical properties are ascribed. 3. [*fig. prov.*] A false show; pretension to wealth, learning, piety, &c, படாடு.

பச்சைப்பொய், *s.* A downright lie.

பச்சைமண், *s.* Moist earth. 2. Tempered clay, as in unburnt pots-oppos. to சுட்டமண். See ஒட்டு, *v.*

பச்சைமரம், *s.* A green or living tree. 2. Unseasoned timber.

பச்சைமரம்படப்பார்ப்பான். His look would blight even a green tree.

பச்சைமா, *s.* Flour not well prepared for paste, &c. 2. Raw dough, paste.

பச்சையிரும்பு, *s.* Mere iron. 2. Untempered iron. 3. Cold iron.

பச்சையீரம், *s.* Great dampness, as of soiled clothes, &c., அதிகஈரம்.

பச்சையுடம்பு—பச்சையுடல், *s.* The tender body of an infant, or woman after-child birth, மெல்லியவுடல். 2. The body of a person recovering from small pox or other disease that fills it with raw sores, புண்ணுளவுடல்.

பச்சையுப்பு, *s.* Unmixed salt.

பச்சையெண்ணெய், *s.* Oil not heated.

பச்சைவன்னம், *s.* Green color, green paint.

பச்சைவில், *s.* The rain-bow.

பச்சைவிறகு, *s.* Green or undried fire-wood.

பச்சைவெட்டு, *s.* Medicinal minerals used raw, not calcined, எரிபடாமருந்து.

பச்சைவெண்ணெய், *s.* Butter churned from unboiled milk.

பச்சை, *s.* Greenness, verdure, as பசுமை. 2. Rawness, that which is uncooked, or half cooked—as food; unseasoned—as timber, வேகாதது. 3. Unripeness, immaturity, freshness, இளமை. 4. Rawness of an ulcer, &c., உலராதது. 5. Obscurity, ribaldry, vulgar language, இடக்கர்மொழி. 6. The emerald, மரகதம். 7. Vishnu, விட்டுணு. 8. The planet Mercury, புதன். (சது.) 9. [*prov.*] Present to a friend, or a new married pair, consisting of fruits, or uncooked grain, உதுப்பை. 10. Offering of fruits to a deity, to avert disease, தெய்வமுதலியவற்றிற்குப்படைப்பது. 11. Indelible green marks in the skin, by puncturing, உடம்பிற்குத்தும்பச்சை. 12. A plant, பூண்டு. (*R*) See அறுத்துப்பச்சை, Cressa Indica. 13. [*fig. prov.*] Intensity, excessiveness, மிகுதி; [*ex* பசுமை.]

பச்சைகட்டு, *s.* [*prov.*] A trifling present of fruits, commonly to a head man, பரிதானவெகுமெக்கை. 2. (*fig*) A mitigative medicine, a lenitive, சாந்திமருந்து. 3. A mitigation, temporary relief.

பச்சைகுத்துதல், *v. noun.* Making marks on the body with a needle and green coloring matter. See குத்து, *v.*

பச்சைகொடுத்தல், *v. noun.* Sending a present of fruits to a wedding house, &c.

பச்சைபாடி, *s.* [*prov.*] A present of vegetables, as பச்சை.

பச்சைபிடித்தல், *v. noun.* [*prov.*] Seizing on some of the fruits brought to a wedding house—as the barber, washerman, &c.

பச்சைப்படிகொடுத்தல், *v. noun.* [*prov.*] Giving raw fruits as presents to Brahmans, pandarams, &c.

பச்சையனுப்புதல், *v. noun.* [*prov.*] Sending presents, of vegetables, fruits, rice, &c., to a new married pair, &c.

பச்சை, *s.* Skin, தோல். 2. Fragrance, பரிமளம். 3. A fragrant plant, புதி. (சது.)

பச்சோணன். See under பசுமை.

*பஸ்மம், *s.* [*com.* பஸ்பம், *also* பற்பம்.] Ashes, சாம்பர். W. p. 615. B'HASMAN. 2. Metal reduced to medicinal powder.

பஸ்மாசுரன், *s.* An Asura. [*For particulars see note of* ஜவிரலி.]

*பக்ஷி, *s.* A bird. See பட்சி, பக்கி.

*பஞ்ச—பஞ்சம், *adj.* Five, five-fold, ஐந்து. W. p. 493. PANCHAT OR PANCHAN.

பஞ்சகச்சஞ்சொருக, *inf.* To tuck up the cloth in five ways. See சொருகு, *v.*

பஞ்சகச்சாயம், *s.* Five kinds of cakes.

பஞ்சகதி, *s.* The five paces of the horse. See தாககதி.

பஞ்சகந்தம், *s.* The five aromatics. See கந்தம்.

பஞ்சகம், *s.* Any thing of five parts.

பஞ்சகம்மாளர், *s.* [*also* பஞ்சாளர்.] The five castes of mechanics. See கம்மாளர், under கம்.

பஞ்சகர்த்தாக்கள், *s.* The five deities, or forms of deity performing operations for the benefit of souls. 1. பிரமா, creator, or evolver of the universe; 2. விட்டுணு, preserver, who furnishes each soul with its allotted portion of joys, and sorrows, as the results of former actions; 3. உருத்திரன், destroyer, reducing souls and worlds to their primitive elements; 4. மகேசான், obscurer, darkening the understanding, that the soul may act, and work off its accumulation of moral evil, so as to become ripe for salvation; 5. சதாசிவன், enlightener or illuminator, who imparts divine grace, and prepares the soul for emancipation, and union with the deity. See பஞ்சகிருத்தியம், under கிருத்தியம்.

பஞ்சகலாத்தானங்கள், *s.* The five parts of the body touched by the gurus in giving தீட்சை.

பஞ்சகலை, *s.* The five developments of the soul in its beatification are; நிவிர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதம். (சதுவ.)

பஞ்சகல்யாணி, *s.* A horse whose feet and forehead are white. See கலியாணி.

பஞ்சகன்னியர், *s.* [*pl.*] The five famous women worshipped by females, as able to confer benefits. See கன்னிகை.

பஞ்சகாவியம், *s.* The five ancient classic poems. See காவியம்.

பஞ்சகிருத்தியம், *s.* The five operations performed by five பஞ்சகர்த்தாக்கள். See ஐந்தொழில், கிருத்தியம்.

பஞ்சகுரோசஎல்லை, *s.* The distance of five calls or குரோசம், around Benares, within which no foreign religionist, or other unclean person, should come.

பஞ்சகோசம், *s.* The five sheaths of the soul. See கோசம்.

பஞ்சகோணம், *s.* A pentagon. See ஐங்கோணம்.

பஞ்சகோலம், *s.* The mixture of five spices, சுக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், and சித்திரமூலம்; [*ex Kola*, pepper]

பஞ்சகௌடம், *s.* The five divisions of Bengal or the கௌடம் country. See கௌடம்.

பஞ்சகௌவியம், *s.* The five products of the cow, used in ceremonial purifications, viz. milk, curds, ghee, urine and dung, ஆனிடத்தைந்து.

பஞ்சகௌவியம்கூட்டித்தெளித்தல். Mixing the five ingredients and sprinkling the the floor, &c.—*Note.* The same mixture is administered to the woman after child-birth; also sprinkled on the child at the time of purification.

பஞ்சகௌவியப்பிராசினம். Eating the above compound as a purification.

பஞ்சசத்தி, *s.* The five *saktis*. See சத்தி.

பஞ்சசயனம், *s.* The five kinds of beds. See சயனம்.

பஞ்சசிகை, *s.* The five parts of the body which the Shastras forbid to be shaved; the crown of the head, the two eye-brows, and the arms from the elbow to the hand.

பஞ்சசுத்தி, *s.* The five purifications. See சுத்தி.

பஞ்சணை, *s.* [*com. for* பஞ்சசயனம்.] The five kinds of mattresses, filled with silk-cotton, red cotton, white cotton, hair, or feathers. 2. See பஞ்சு.

பஞ்சதந்திரம், *s.* [*in politics.*] The five means of accomplishing one's object; 1. மித்திரபேதம், sowing discord among friends; 2. சுகிர்லாபம், associating with equals; 3. சந்திவிக்கிரகம், associating with a foe and ruining him; 4. அர்த்தநாசம், spending one's property to gain an object; 5. அசம்பிரேட்சியம், acting without inquiry, examination, &c.

பஞ்சதந்திரக்கதை, *s.* Panchatantra.

பஞ்சதம்—பஞ்சதை, *s.* Death, dissolution of the five elements of whose aggregate the body consists, மரணம்.

பஞ்சதரு — பஞ்சதாரு, *s.* The five trees in Swerga. See ஐந்தரு, தரு.

பஞ்சதன்மாத்திரை, *s.* The five grounds of knowledge by the senses. See தன்மாத்திரை.

பஞ்சதாது, *s.* The five elements, earth, water, fire, air, ether.

பஞ்சதாரை, *s.* (*Tel* పంచదార.) Sugar, சருக்கரை.

பஞ்சதிராவிடம், *s.* The five provinces of Southern India. See திராவிடம்.

பஞ்சதிரவியம், *s.* The five productions of the cow used in purification. See கௌவியம்.

பஞ்சநகம், *s.* An elephant. 2. A tortoise, ஆமை. W. p. 493. PANCHANAKHA.

பஞ்சநகக்கூர்மையோன், *s.* A tortoise as having five divisions in its claws.

பஞ்சநதி, *s.* The Punjaub having five rivers, as famous for sacred bathing.

பஞ்சநிம்பம், *s.* The five parts of the Neem, or Margosa tree; the flowers fruit, leaves, bark and root; [*ex* நிம்பம், margosa.]

பஞ்சபட்சி, *s.* The five birds for augury. See பஞ்சபட்சிக்காதல், under காதல்.—The letters, அ, இ, உ, எ, and ஒ, are applied to the birds, and the following accidents, உண்டி, feeding, நடை, walking, அரசு, governing, துக்கம், sleeping, and சாவு, dying.

பஞ்சபட்சிக்காதல், *s.* A treatise on augury.

பஞ்சபட்சிவேளை, *s.* Augury from the eating, sleeping, walking, governing and dying of the five birds, between the full and the new moon. 2. An auspicious hour, ascertained by augury.

பஞ்சபர்வங்கள், *s.* Five religious ceremonial days in each fortnight.

பஞ்சபாணம், *s.* [*also* ஐங்கணை.] The five arrows of Kama, consisting of five kinds of flowers: வனசம், lotus; 2. சூதம், mango; 3. அசோகு, ashoka; 4. முல்லை, jasmine; 5. நீலம், blue water lily.

பஞ்சபாணன், *s.* Kama, the god of love, as armed with the five arrows, காமன்.

பஞ்சபாணாவஸ்தை, *s.* The five effects produced by the arrows of Kama; சப்பிரயோகம், thinking and talking of the person loved; 2. விப்பிரயோகம், sighing and lamenting; 3. சோகம், heat or feverishness, nausea and languishing; 4. மோகம், weeping and bewilderment of the faculties; 5, மரணம், death or suspension of the natural powers.

பஞ்சபாணி, *s.* Parvati, as armed with five arrows, பார்வதி.

பஞ்சபாண்டவர், *s.* [*pl.*] The five Pandavas. See ஐவர்.

பஞ்சபாதகம், *s.* [*also* பஞ்சமாபாதகம்.] The five heinous sins: கொலை, murder; 2. காமம், lust; 3. களவு, theft or fraud; 4. கள்ளுண்ணல், drinking intoxicating liquor; 5. குருநிந்தை, abuse of the Guru. (சது.) —*Some omit* காமம், *and others,* குருநிந்தை, *and give* பொய், *instead.*

பஞ்சபாதகன், *s.* One guilty of the five heinous sins. 2. One very oppressive, and unjust, as பஞ்சமாபாதகன்.

பஞ்சபாத்திரம், *s.* A kind of vessel of five plates collectively, or made of five metals, used by advanced religionists, to hold water for purification, பஞ்சலோக பாத்திரம். 2. (*R.*) The centre piece of this vessel.

பஞ்சபூதம், *s.* The five elements; earth, air, fire, water, and ether.

பஞ்சபூதஅணு, *s.* The five atomic bases. See பரமாணு under பரமம்.

பஞ்சப்பிராணன், *s.* The five vital airs constituting life—commonly reckoned ten. See வாயு.

பஞ்சமகதி, *s.* Final bliss, liberation from births and absorption in the deity—there being four other states, மோட்சம்.

பஞ்சமகாயக்கியம், *s.* The five special sacrifices or oblations. See யாகம்; [*ex* மகா *et* யக்கியம்.]

பஞ்சமம், *s.* One of the five musical modes, ஓர்பண். 2. One of the seven musical notes, சத்தசரத்தொன்று. W. p 493. PANCHAMA. See நிஷாதம்.

பஞ்சமலம், *s.* The five evils attaching to the soul, ஐவகைமலம்.

பஞ்சமன், *s.* A low caste man; (*lit.*) a fifth man, one not belonging to either of the first four castes, ஐந்தாஞ்சாதியான்.

பஞ்சமாசத்தம், *s.* The five kinds of musical sounds; also the sources of the sounds. See கருவி.

பஞ்சமாபாதகம், *s.* The five heinous sins, as பஞ்சபாதகம்.

பஞ்சமாபாதகன், *s.* A grievous sinner, one guilty of the five heinous crimes, பஞ்சபாதகன். 2. A very oppressive, unjust or cruel man, துஷ்டன். (*c.*)

பஞ்சமி, *s.* The fifth day of the moon, either in her increase or decrease, ஐந்தாந்திதி. 2. The last five of the lunar days; a death occurring on the first of these is portentous of death to five others in the house, or its vicinity; on the second day to four others, &c., on which account, if the death occur on the first day, the corpse is carried out through a hole made in the wall, the house is vacated for months, and various ceremonies are performed to appease the incensed goddess, அவிட்டமுதலேவதுசார், *commonly* தனிஷ்டாபஞ்சமி. 3. The goddess Durga, துர்க்கை.

அவிட்டபஞ்சமி. The last five lunar days, as பஞ்சமி, 2.

பஞ்சமிதேவதை — பஞ்சமிப்பேய், *s.* [*prov.*] The tutelary deity of the five unlucky days.

பஞ்சமியிற்செத்தவீடு, *s.* A house forsaken in consequence of a death occurring in one of the பஞ்சமி days.

பஞ்சமுகாஸ்திரம், *s.* A five pointed weapon; [*ex* முகம், *et* அஸ்திரம்.]

பஞ்சமூலம், *s.* Five kinds of medicinal roots, of which there are two classes. See மூலம்.

பஞ்சமூலகஷாயம், *s.* A decoction of five different medicinal roots. See கஷாயம்

பஞ்சயாகம் — பஞ்சவேச்சம், *s.* The five daily sacraments or oblations, as பஞ்சமாயக்கியம். See எச்சம்.

பஞ்சரத்தினம், *s.* Five precious stones. 2. The name of a treatise, ஓர்பிரபந்தம்.

பஞ்சராசிகம், *s.* Rule of five, ஐந்தொகைவினை.

பஞ்சராத்திரம், *s.* A sect of Vaishnuvas.

பஞ்சலக்கணம், *s.* The five parts of Grammar. See இலக்கணம்.

பஞ்சலிங்கம், *s.* The five kinds of Linga, represented by the five elements. See இலிங்கம்.

பஞ்சலோகம், *s.* The five simple metals. See உலோகம். 2. A mixture of the five, ஐவகைலோகக்கலப்பு.

பஞ்சவர்தூதன், *s.* Vishnu, once employed as a messenger for the five பஞ்சவர், or Pandavas, விஷ்ணு.

பஞ்சவர்னம், *s.* The five colors; white, black, red, yellow and green.

பஞ்சவர்னக்கிளி, *s.* The finest species of parrot. See கிளி.

பஞ்சவாசம், *s.* The five aromatics or spices. See பஞ்சகந்தம்.

பஞ்சவிஷயம், *s.* The object of the five senses; the whole material world. See புலன்.

பஞ்சாக்கரம் — பஞ்சாக்ஷரம், *s.* The five lettered incantation, சிவாயநம, which see.

பஞ்சாக்கினி, *s.* The five fires amidst which the devotee performs austerities, one toward each quarter and the sun over-head; or, according to others, a fire in the centre. 2. The five mystic fires in the body, given as இராகம், கோபம், காமம், சடம், தீபனம். Compare தீ.

பஞ்சாக்கினிமத்தி, *s.* The centre of an area in which are five fires, as a place for the performance of austerities.

பஞ்சாங்கம், *s.* An almanac embracing five things; lunar days or phases of the moon, திதி; solar days or week, வாரம்; periods of the asterisms, நட்சத்திரம்; the yogas, யோகம்; and karnas, கரணம்; [*ex* அங்கம், member, அ becoming ஆ *in combination.*]

பஞ்சாங்கங்கணித்தல் — பஞ்சாங்கம் எண்ணுதல், *v. noun.* Calculating an almanac.

பஞ்சாங்கஞ்சொல்லுதல், *v. noun.* Notifying special days and periods, with the ceremonies to be performed, as the household priest to princes.

பஞ்சாங்கதெண்டன் — பஞ்சாங்கநமஸ்காரம், *s.* Prostrating the five members of the body, the feet, hands and head to the earth. Compare சாஷ்டாங்கம்.

பஞ்சாங்கபலன், *s.* Astrological results for the year as given in the almanac.

பஞ்சாங்கமானியம், *s.* Land held free by such a brahman for this duty.

பஞ்சாங்கவாக்கியம், *s.* [*in Hindu astron.*] The table of the moon's given longitudes from apogee and daily motions for two hundred and forty-eight days.

பஞ்சாங்குலம், *s.* The castor-plant whose leaves resemble the five digits, ஆமணக்கு; [*ex* அங்குலம்.]

பஞ்சாசயம், *s.* The five receptacles in the body are: ஆமாசயம், the stomach; 2. இரத்தாசயம், the heart; 3. கர்ப்பாசயம், the womb; 4. சலாசயம், the bladder; 5. மலாசயம், rectum.

பஞ்சாக்ஷரம், *s.* As பஞ்சாக்கரம்.

பஞ்சாமிர்தம் — பஞ்சாமுதம், *s.* The five delicacies; milk, curds, ghee, sugar, and honey. (*in Wils.*) 2. (*R.*) A mixture of plantains, cocoa kernel, milk, sugar and honey, used in anointing an idol.

பஞ்சாமிலம், *s.* An aggregate of the five acids; jujube, இலந்தை; pomegranate, மாதளை; sorrel, புளியாரை; emblica, நெல்லி, citron, எலுமிச்சை; [*ex* ஆமிலம்.] W. p. 494. PANCHAMILA.

பஞ்சாயுதம், *s.* The five weapons of Vishnu; the discus, club, chank, bow and sword. 2. [*prov.*] A gold ornament worn by children, or women, on the neck with the *tali*, bearing in relief the five weapons of Vishnu. It is of two kinds, அரசிலைப்பஞ்சாயுதம், one made in the form of fig-leaf; வட்டப்பஞ்சாயுதம், one in a circular form, ஓராபரணம்.

பஞ்சாயுதபாணி-பஞ்சாயுதன், *s.* Vishnu, as bearing the five weapons.

பூலா—பூல், s. A tall shrub, the bark of which is used as a red dye, Many Flowered Phyllanthus, ஓர்செடி.—சீப்பூலா, வெள்ளைப்பூலா, முட்பூலா, வறட்பூலா, are different species.

பூவணம், s. A place of resort, sacred to Siva, near Madura, ஓர்சிவஸ்தலம்.

பூவந்தி, s. [com. பூந்தி.] Notch-leaved soap-nut tree. See நெய்க்கொட்டான்.

பூவந்திப்பழம், s. [*also* பூவம்பழம்.] Its fruit, used for removing spots, and the scurf of the hair.

பூவமளி — பூவரசு — பூவாளி. See பூ, flower.

பூவல், s. Red, சிவப்பு. 2. An unwalled well, or a hole for getting water, கூவல். (சது.)

பூவல்மண், s. Red earth, as செவ்வல்.

பூவை, s. The Maina bird, நாகணவாய்ப்புள். 2 A lady, a woman, பெண். 3. A tree. See காயா. (*p.*)

பூவைவண்ணன், s. Vishnu, விஷ்ணு. See காயாம்பூமேனியன்.

பூவோடு, s. A kind of arsenic, as தொட்டிப்பாஷாணம்.

பூழான், s. A partridge, கவுதாரி. 2. A turkey, or jungle-hen with long legs, காட்டுக்கோழி. (சது.)

பூழி, s. Powder, தூள். 2. Dust, புழுதி. 3. Soft mire or mud, குழைச்சேறு. 4. Bubbles in muddy water, சேற்றிற்குமிழ். (சது.) 5. One of the twelve districts around the Tamil country. See கொடுந்தமிழ்நாடு.

பூழியன், s. Sera, any prince of the Sera dynasty, சேரன். (சது.)

பூழில், s. The aquila or eagle-wood, அகில். (சது.)

பூழிவேந்தன், s. Any king of the Pandyan dynasty, பாண்டியன். (*p.*)

பொருவரியதவம்புரிந்தபூழிவேந்தன். Pandu, who performed a penance of unrivalled merit. (பார.)

பூழை, s. [*an elongation of* புழை, *which see.*] A small door in a larger one as புதவு.

பூழ், s. A kind of bird, காடைக்கோழி.

பூழ்க்கை, s. [*contrac. of* புழைக்கை.] Elephant, யானை. (*p.*)

பூழ்தி, s. [*poetic form of* புழுதி.] Dust, தூசி. 2. Powder, பராகம். 3. Flesh or fish, ஊன். (சது.)

பூளை, s. A medicinal shrub, ஓர்செடி, Illecebrum lanatum. 2. Silk-cotton, இலவம்பஞ்சு. 3. (*Beschi.*) Rheum in the eyes as பீளை. (*c.*)—அனைப்பூளை, சிறுபூளை, கொடிப்பூளை, வயற்பூளை, are species of பூளை.

பூளைப்பூ — பூளைப்பஞ்சு, s. Silk-cotton used for stuffing pillows.

பூனை, s. [*poet.* பூசை.] A cat.—For கடுவன்பூனை, காட்டுப்பூனை, புழுகுப்பூனை, பெட்டைப்பூனை, see these words. (*c.*)

பூனைசீறுதல். Hissing of a cat in anger.

பூனைகுறுக்கேபோகின்றது. The cat comes across the road, *considered a bad omen.*

பூனையழுதல். Mewing of a cat.

பூனையுறுமுதல். Growling of a cat.

பூனைபால்குடிப்பதுபோலே. As a cat [shutting its eyes] drinks the milk; i. e., one shutting his own eyes to his faults, thinks them hidden from others.

பூனைக்கச்சி, s. An herb, ஓர்செடி. (*Old Dic.*)

பூனைக்கண், s. Eyes like a cat. 2. A gem, cat's eye, பூனைக்கண்வைடூரியம்.

பூனைக்கண்ணன், s. [*fem.* பூனைக்கண்ணி.] A man with cat-like eyes.

பூனைக்கண்புருடராகம்—பூனைக்கண்வைடூரியம், s. A gem. See பூனைக்கண், 2.

பூனைக்கழற்சி, s. A species of கழற்சி, a grey colored creeper.

பூனைக்கழற்சிக்கொட்டை, s. Seeds of பூனைக்கழற்சி, used medicinally.

பூனைக்காஞ்சொறி, s. A kind of nettle, Tragia cannabina.

பூனைக்காய்ச்சி, s. An empty or blasted ear, or crop.

பூனைக்காய்வேளை, s. A shrub; Galega villosa.

பூனைக்காலி, s. A perennial climbing plant, whose root is used in cholera-morbus, ஓர்செடி, Dolichos pruriens, *L.*

பூனைக்கீரை, s. A plant, ஓர்கீரை, Ipomia pestigridis.

பூனைக்குட்டி, s. A kitten.

பூனைச்சம்பந்தம், s. The grasp of Deity on the soul. See சம்பந்தம்.

பூனைத்திசை, s. South-east, தென்கிழக்கு. See திசை.

பூனைபோலேயிருக்க, *inf.* To act with affected humility.

பூனைப்பிடுக்கன்—பூனைமடி, s. A kind of herb, ஓர்செடி, Crotalaria nummularia.

பூனைமயிர், s. Grey hair in men, like the cat. 2. As பூனைக்கழற்சி plant.

பூனைவணங்கி, *appel. n.* The குப்பைமேனி plant; (*lit.*) cat worshipped.

பெ

பெ. A syllabic letter compounded of ப் and எ.

பெங்கு. s. A kind of toddy, ஓர்வகைக் கள். (சது)

•பெடம், s. Much, abundance, மிகுதி. (சது.)

பெடை, s. [as பெட்டை.] Female of birds, a hen, பறவைப்பெண். (p.)

•பெட்டகம், s. [com. பெட்டி.] A chest or box, especially one in which presents are carried to a bride, வரிசைப்பெட்டி.

பெட்டகங்கொட்ட, inf. To clap the hands for joy, when presents are carried to a bride. (R.)

பெட்டல், v. noun. Desiring, wishing, விரும்பல். See பெள், v. (p.)

•பெட்டி, s. A chest, trunk, coffer, box, case, பேழை 2. A basket, கூடை. See பிட்டி.—Of baskets and boxes there are different varieties, especially அஞ்சாரப்பெட்டி, கட்டுப்பெட்டி, கைப்பெட்டி, கொட்டைப்பெட்டி and சவப்பெட்டி, which see. (c.)

மூத்தாம்பெட்டி, s. A bladder.

பெட்டிலிக்குழல், s. A long tube through which pellets of clay are blown—as சக்கக்குழல். (R)

பெட்டு, s. Lie, falsehood, untruth, பொய். (சது.)

பெட்டை, s. Female of birds, the hen, பறவைப்பெண். 2. The female of the lion, horse, camel, dog, cat, monkey, hog, deer, goat, &c. 3. [vul.] A woman, a girl, பெண். 4. [in some connec.] Any physical imperfection, as பொட்டை. (c.)

பெட்டைக்கடல், s. A shallow sea, சிறுகடல்.

பெட்டைக்கண், s. A defective eye, ஊனக்கண். 2. [prov.] Squint eyes, சாய்ந்தகண். 3. The two smaller of the three eyes of a cocoa-nut.

பெட்டைப்பூனை, s. A she-cat.

பெட்டைமாறி, s. [also பெடைமாறி, பெண்மாறி.] A cuckold; (lit.) wife-changer. 2. A masculine woman. (c.)

பெட்டைமுடிச்சு—பெட்டைக்கட்டு, s. [prov.] A loose knot, a knot badly tied.

பெட்டையன், s. An hermaphrodite, a eunuch, அலி. 2. An effeminate man, as பெண்ணன்.

பெட்பு, s. Desire, lust, ஆசை; [ex பெள், v.] (p.)

பெண், s. [gen. பெண்ணின்.] A female in general, பெண்பொது. 2. A female of the human species, a woman, a girl, &c., ஆடவள். 3. A bride, a wife, விவாகப்பெண். 4. The feminine gender in the animal and vegetable kingdom. விலங்குமுதலியவற்றின் பெண்.(c.)

பெண்ணென்றால்பேயுமிரங்கும். Even a fiend will pity a woman.

பெண்கரு, s. Female embryo.

பெண்கலை, s. The latter half of a verse, called வண்ணம்.

பெண்கள்சிகாமணி, s. A jewel-like woman. (in admiration.)

பெண்கள்நாயகம், s. An excellent woman, a lady.

பெண்குறி, s. Pudendum muliebre.

பெண்கேட்க, inf. To solicit a girl of her friends, in marriage.

பெண்கொடி, s. A lady; (lit.) a female vine. (p.)

பெண்கொடுக்க, inf. To give a girl in marriage.

பெண்கொடுத்தமாமன், s. A father-in-law, as distinguished from தாய்மாமன்.

பெண்கொள்ள — பெண்ணெடுக்க, inf. To take a wife, to take a woman in marriage, to marry.

பெண்கோலம்—பெண்வேஷம், s. Female attire or costume.

பெண்சகோதரம், s. A sister, உடன்பிறந்தாள். (Colloq.)

பெண்சாதி, s. A wife, மனைவி. (usage.)

பெண்சோடினை, s. Adorning a bride for marriage. 2. See சோடினை.

பெண்டகர் — பெண்டர், s. [pl.] Hermaphrodites, eunuchs, அலிகள். (சது.)

பெண்டகை—பெண்டகைமை, s. Womanhood, feminine properties, excellencies; [ex தகை, nature.] (p.)

பெண்ணரசி, s. A reigning female, a queen. 2. An opulent lady, செல்வமுடையாள்.

பெண்ணரசு, s. Female government. 2. A superior woman. 3. [met.] Domination of a woman.

பெண்ணரசநாடு, s. A country governed by a woman.

பெண்ணலம், s. Female excellency; [ex நலம்.] 2. Enjoyment with a woman, பெண்ணின்பம்.

பெண்ணன், s. A timid, effeminate, cowardly man, வீரமற்றவன்.

பெண்ணாசை, s. Desire for a woman. See ஆசை.

பெண்ணாய்ப்பிறந்தவள், appel. n. A female, a woman; (lit.) one born a female.

பெண்ணாய்ப்பிறந்தவள் வீட்டிலிருக்கவேண்டும். A woman should keep at home.

பெண்ணாள், s. [in astrol.] The female division of the lunar asterism; [ex நாள்.]

பெண்ணீலி, s. A very atrocious, wicked woman. 2. A female demon; [ex நீலி.]

பெண்ணுடம்பு, s. The body of a woman. 2. [modestè.] Verenda mulieris. (Beschi.)

பெண்ணுறுப்பு, s. Symmetry of a woman, female form, பெண்வடிவு. 2. As பெண்குறி.

பெண்ணெழுத்து, s. Long vowels, நெட்டெழுத்து.

பெண்தண்டு. s. See தண்டு.

பெண்பருவம், s. The different stages of life in the female. See பருவம்.

பெண்பழி — பெண்பாவம், s. The guilt of forcing a woman.

பெண்பனை, s. The female palmyra, useful for fruit and timber. See பனை.

பெண்பாடு, s. Women's work or affair.

பெண்பால், s. [in gram.] Feminine gender. See பால்.

பெண்பிள்ளை, s. A female infant, a girl, பெண்குழந்தை. 2. A woman, in general. 3. A bride, மணப்பெண்.

பெண்பிறப்பு, s. Female birth, commonly regarded as a misfortune.

பெண்புத்தி — பெண்மதி, s. Female indiscretion; woman's wit. [in contempt.]

பெண்புத்திபின்புத்தி. Female advice will result in disappointment.

பெண்பேதை, s. A female, as being weak and indiscreet.

பெண்போகம், s. Enjoyment with a woman. 2. One of the thirty-two acts of charity, and of the eight enjoyments. See அறம், and போகம்.

பெண்மகள், s. A woman, a lady, பெண்.

பெண்மயக்கம்—பெண்மயல், s. Fascination from love-sickness.

பெண்மயிர், s. Female locks, அளகம்.

பெண்மரம், s. A female tree or plant, &c. 2. (சது.) A tree, the outside of which is harder than the inside, புறவயிரமுள்ளமரம்.

பெண்மாயம், s. Fascinations of a women.

பெண்மாறி. See பெட்டைமாறி.

பெண்மை, s. Womanliness, nature of women, பெண்டன்மை. 2. Household dignity, domestic excellence, மனைமாட்சிமை. (சது.)

பெண்மைச்சினைப்பெயர், s. [in gram.] Nouns feminine, from any member, or part, as முடத்தி, a female cripple—also applied to the lower animals.

பெண்மைச்சினைமுதற்பெயர், s. Nouns feminine from a member but including the whole body, as முடக்கொற்றி, the lame Kotty, though lame only in a limb.

பெண்மைமுதற்பெயர், s. Nouns feminine being the name of a person, as கொற்றி, a woman.

பெண்வகை, ச. Four classes of women: 1. பதுமினி, the highest class, possessing excellence of form, and sweetness of disposition; 2. சித்திருணி or சித்தினி, a class addicted to love; 3. சங்கினி, a mediocre class, irascible and passionate; 4. அத்தினி, the lowest class libidinous and furious.

பெண்வழி, s. Family descent in the female line.

பெண்டாரி, *s.* A Pindaree. See பிண்டாரி.

பெண்டு, *s.* [*plu.* பெண்டீர், பெண்டுகள்.] A woman, பெண். 2. A wife, மனைவி.

பெண்டாட்டி, *appel. n.* A wife, a married woman; [*ex* ஆள்.] See ஆட்டி. 2. [*vul.*] A woman.

பெண்டுகேட்ட, *inf.* To reproach either sex with criminal intercourse.

பெண்டுகொள்சட்டி, *s.* One who is under his wife's management.

பெண்டுபிள்ளை, *s.* Wife and children.

பெண்ணை, *s.* The seventeenth lunar asterism, அனுடநாள். 2. The name of two rivers, the வடபெண்ணை, near Nellore, and தென்பெண்ணை, near Cuddalore. 3. A palmyra tree, பனைமரம். (சது.) 4. As பெண்மரம்.

பெதும்பை, *s.* A girl eleven years old, or from eight till eleven inclusive. See பருவகாலம். 2. A woman in general, பெணபொது (சது.)

•**பெத்தம்**, *s.* A band, a tie. See பந்தம். 2. The bondage of the soul. See பந்தம்.

பெத்தகாலம், *s.* Time during which a soul is subject to evil from births.

பெத்தநிலை, *s.* The influence on a soul from births. See நிலை.

பெத்தமுத்தி, *s.* The two states of the soul—bondage and liberation. See பந்தமும்வீடும்.

பெத்தர், *s.* [*pl. also* பத்தர்.] Persons in bondage—oppos. to முத்தர். See பந்தர்.

பெத்தரிக்கம், *s.* [*Tel.* పెద్దరికము.] Pride haughtiness, petulence, அகந்தை. (*c.*)

•**பெந்தம்**, *s.* Bond. See பந்தம்.

•**பெந்து**, *s.* Relationship. See பந்து.

பெந்தை, *s.* [*prov.*] Hugeness, monstrousness, அவலட்சணமாய்ப்பருத்தது. 2. A part of a plough-share, கலப்பையிலோருறுப்பு

பெந்தைக்கயிறு, *s.* A rope not neatly twisted, வடக்கயிறு. 2. The rope which binds the parts of a plough-share.

பெந்தைவிழி, *s.* Goggle-eyes. 2. A staring, or rolling of the eyes, as in consternation.

பெம்மான், *s.* [*contract. of* பெருமான்.] A great person, உயர்ந்தவன். (சது.)

பெயர், *s.* [*also* பேர்.] Name, appellation, designation, epithet, நாமம். 2. A person. பேர். 3. Reputation, renown, celebrity. கீர்த்தி. 4 [*in combin.*] That which is nominal, not real, உண்மையில்லாமை. (*c.*) 5. [*in gram.*] A noun, பெயர்ச்சொல்.

பெயருக்கு. To each, separately

பெயர்பாதியாகக்கொடு. Give equal shares to both.

சாலுபெயரும். Many, all See சாலு.

பெயரகராதி, *s.* A part of a dictionary. See சதுரகராதி.

பெயரடி—பெயர்ப்பகுதி, *s.* [*in gram.*] A nominal root of a word. 2. The root of a noun. (*p.*)

பெயரன், *s.* [*com.* பேரன்.] A grandson. he taking the grandfather's name, பௌத்திரன். 2. [*prov.*] Grandfather, பாட்டன்.

பெயராயிருக்க, *inf.* To be famous, celebrated. 2. To be rumored.

பெயராளி, *s.* A man of celebrity, as கீர்த்திமான், *also used in irony.*

பெயரிடுதல்—பெயர்வைத்தல், *v. noun.* Naming, giving a name.

பெயரியற்சொல், *s.* [*in gram.*] A class of substantives which occur in ordinary usage.

பெயரின்னிசை, *s.* One of the ninety-six treatises containing ninety, seventy, or fifty verses, which end always with the name of a certain person. See பிரபந்தம்.

பெயருரிச்சொல், *s.* Adjective.

பெயரூர். *s.* [*com.* பேரூர்.] One's name and country.

பெயரெச்சம், *s.* [*in gram.*] Relative participle. See எச்சம்.

பெயரெடுக்க, *inf.* [*v. noun* பெயரெடுப்பு.] To get a name. See எடு. *v.* 2. To mention one's name, பெயர்சொல்ல.

கள்ளனென்றுபெயரெடுத்தான். He is known as a rogue.

பெயரெடுத்துப்போடுதல், *v. noun.* Erasing a name from a list.

பெயர்க்கணைக்கு, *s.* Distribution of shares. 2. [*in arith.*] Division.

பெயர்ச்சொல், *s.* [*in gram.*] A noun or pronoun.

பெயர்டாப்பு, *s.* A list of names, a catalogue, a roll.

பெயர்தரித்தல், *v. noun.* Taking or bearing a name or title.

பெயர்த்தி, *s.* [*com.* பேத்தி.] Granddaughter. 2. [*prov.*] Grand-mother.

பெயர்நேரிசை, *s.* A poem in which the name of a certain person is repeated in verses of நேரிசைவெண்பா. See பிரபந்தம்.

பெயர்படைக்க, *inf.* To get a name. (*p.*)

பெயர்போக—பெயர்விளங்க, *inf.* To be renowned, celebrated, famous.

அவன்பெயர்போகவாழுகிறான். He is getting on prosperously.

பெயர்ப்பிரஸ்தாபம், *s.* The celebrity of one's name.

பெயர்மங்குதல், *v. noun.* Becoming tarnished in character, losing celebrity.

பெயர்வழி, *s.* Names in order, பெயர்முறை 2 Genealogy, தலைமுறை. 3. As பெயர்டாப்பு.

பெயர்விகுதி, *s.* The termination of compound nouns.

பெயர்வேற்றுமை, *s.* [*in gram.*] The nominative, எழுவாய்.

பெயர், கிறது, ந்தது, பெயரும், பெயர, *v. n.* [*com.* பேர், *sometimes* பெயரு] To move, leave, stir, rise, depart, போக. 2. To be removed, displaced, dislodged, இடமற. 3. To turn aside, to retire, ஒதுங்க. 4. To vary, to change, to turn about, to shift, to veer, வேறுபட. 5. To be agitated, to shake. ஆட. 6. To be rubbed, தேய. 7. To be rooted out, பிடுங்கப்பட. 8. To grow loose—as a finger-nail, நெகிழ. 9. To return, மீள. (*c.*)

தண்டுபெயர்ந்துபோயிற்று. The army has decamped.

தளம்பெயர்ந்துபோய்க்கிடக்கிறது. The pavement is in a ruined state.

எனக்குப்பெயரப்பிரியக்கூடாது. I am unable to stir, *from sickness or engagements.*

பேயர்ந்திரு. Give way, stand aside.

அதுபெயராது. It would not go off.

காற்றுப்பெயர்ந்துவிட்டது. The monsoon has set in. (*Beschi.*)

பெயரப்பெயரப்பார்த்தல், *v. noun.* [*prov.*] Looking at again and again.

பெயர்ந்து, *gerund.* [*as adv.*] Again. 2. Presently, afterwards.

பெயர்ந்துவா Come again.

பெயர்ந்துபடுக்க, *inf.* To roll or turn over, as one when lying down.

பெயர்தல், *v. noun.* [*also* பெயர்ச்சி.] Moving, shifting, being rubbed, &c.

பெயர்வு, *v. noun.* Dislocation; abstraction.

பெயர், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*com.* பேர்.] To remove, displace, dislodge, unseat, transpose, abstract, பிரிக்க. 2. To turn over, subvert, overthrow, புரட்ட. 3. To remove or agitate from the basis, or foundation. அப்புறப்படுத்த. 4. To root up, to force open, as a door, பிடுங்க. 5. To turn over with the ladle, as a cake, திருப்ப. 6. To remove cattle from one place to another, புறப்படுத்த. 7. To blow up, to blast, சிதைக்க. (*c.*) 8. To dislocate. 9. (*R.*) To redeem, to save, மீட்க.

கள்ளன் கதவைப் பெயர்த்துப்போட்டான். The thief forced open the door.

சொன்னதையேபெயர்த்துச்சொல்லுகிறார்...... He repeats what he has already said.

இந்தச்செடியைஅங்கேபெயர்த்துவை. Remove the plant to that place.

பெயர்த்துநட, *inf.* To transplant, displace.

பெயர்த்தெடுக்க, *inf.* To root up, to pull up.

பெயர்த்தெழுத, *inf.* To copy, to transcribe.

பெயர்ப்பு—பெயர்த்தல், *v. noun.* Removal, change, eradication, &c., *as the verb.*

மொழிபெயர்த்தல். Translating; a translation. See மொழி.

பெயர்த்தி, *v. noun.* [*also* பெயர்ச்சி.] Removal, movement. 2. See பெயர்.

கிரகபெயர்ச்சி. Transit of a planet from one sign to another.

பெயலை, *s.* Rain, மழை. (சது.)

பெயல், *s.* Rain, மழை. 2. Rain drops, மழைத்துளி. (சது.)

பெய், கிறேன், தேன், வேன், ய, *v. a.* [*vul.* பேய்.] To strew, scatter, தூவிக்க. 2. To pour down, வருஷிக்க. 3. To discharge, as urine, நெறிவிட. 4. To scatter or send forth, as arrows, அம்புவிட. 5. To shed, as tears, or as milk from the breasts, சொரிய 6. To put, place, lay, இட. 7. To put in or into, to stuff, to insert, புகுக்க. 8. To put on—as jewels, clothes, harness, அணியணிய. 9. *v. n* To rain, to fall, as rain, dew or hail. See பனி, மழை.

மழைபெய்கிறது. It rains.

மூத்திரம்பெய்கிறான். [*vul.*] He passes urine.

படைபெய்கூடு, *s.* The scabbard of a weapon. (*p.*)

பெய்கலம், *s.* Any vessel. (*p.*)

பெய்துரை, *s.* Preface, introduction as inserted, prefixed, &c., பாயிரம். (சது.)

பெய்வளை, *s.* A damsel, woman, பெண். (*p.*)

•பெய்விக்க, *inf.* To cause to rain.

பெய்வு, *v. noun.* Emission, discharge, &c.

பெரிது, [*contract. of* பெரியது, *improp.* பெரிச.] That which is great.

பெரிய, *adj.* Great. See பெருமை.

பெரியாணங்கை, *s.* [*com.* பெரியாநங்கை.] A medicinal plant.—oppos. to சிறியாணங்கை, நிர்பூடு, Polygala telephioidie.

பெரு, *adj.* [*in combin. with the incremental,* ம், ஞ், க or ம்.] Great. For its combinations, see பெருமை.

பெருகு, *s.* (*Tel.* పెరుగు.) Curdled milk, தயிர். (சது.)

பெருகு, கிறது, பெருகினது, ம், பெருக, *v. n.* To increase in numbers, to multiply, spread, abound—oppos. to சிறுகு, விருத்திபாக. 2. To enlarge, grow great, to branch out—as subjects of discussion, விரிக்க. 3. To rise, swell, overflow, as water, நீர்பெருக. 4. To thrive, become rich, செல்வமுண்டாக. 5. [*meton.*] To bring prosperity—as a wedding badge, as தாலிபெருக. (*c.*)

ஆசைபெருகஅலேச்சலும்பெருகும். As desires increase cares multiply.

பெருக, *inf.* [*as adv.*] Fully and abundantly.

பெருகவாழ். Live happily or prosperously.

பெருகு, கிறேன், பெருகினேன், வேன், பெருக, *v. n.* To grow larger, to increase in size; increase in length, or breath, பருமையாக. 2. To thicken; to grow bulky, plump or full; to swell, to bloat, வீம்ம. 3. To be increased, augmented—as an account, or estate, அதிகப்பட. 4. To become serious in aspect or consequences; to be aggravated, வலிமையாக. 5. To rise in dignity, honor, rank or circumstances, சிறக்க. (*p.*)

பெருக்கம், *s.* Increase, augmentation, enlargement, வளர்ச்சி. 2. Multiplicity, plentifulness, மிகுதி. 3. Prosperity, opulence, wealth, திரண்டதனம் (*c.*)

சனப்பெருக்கம், *s.* Thick population.

பெருக்கம்பண்ண, *inf.* [*prov. used at the threshing floor.*] To scrape up scattered corn with the hands.

பெருக்கன், *s.* [*as* பருக்கன், *which see.*] Coarseness, &c.

பெரு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n* [*as* பரு, *v. which see.*] To grow thick or stout, &c. (*c.*)

அவனிலும்நான்பெருத்திருக்கவில்லையா. Am I not stouter than he?

சனம்பெருத்தக்கிடக்கிறது. The people are numerous.

பெருக்கு, *v. noun.* Flooding, overflowing of a river, an inundation, வெள்ளம். 2. Rise of the tide, நீரேற்றம். 3. Height of the circulation of the blood, which is supposed to ebb and flow daily, like the tide, உதிரவோட்டம். 4. Influx of wealth, செல்வமிகுதி; [*ex* பெருகு.] 5. Multiplication, multiplying, கணக்குப்பெருக்கம்.

பெருக்காளர், *s.* [*pl.*] Grandees, noblemen, சிறப்புடையர். 2. Men of the Vellala caste.

பெருக்குக்கணக்கு, *s.* Multiplication.

பெருக்குவேளை, *s.* Time of the flow of tide. 2. The part of the day when the circulation of the blood is at its height.

பெருக்கெடுக்க, *inf.* To overflow as a river, or the sea. 2. To rise or flow as the tide. (*c.*)

பெருக்கு, கிறேன், பெருக்கினேன், வேன், க்க, *v. a.* To cause to increase, to make greater, அதிகரிப்பிக்க. 2. To cause to swell and overflow, மிகச்செய்ய. 3. To sweep, குப்பைகூட்ட. 4. [*in arith*] To multiply, as மூன்றைஆறாற்பெருக்கப்பதினெட்டாகும், three times six are eighteen. (*c.*)

கோயில்பெருக்கி, *appel, n.* One who sweeps a fane.

பெருங்காயம், *s.* Assafœtida, Ferula assafœtida. (*c.*)

கறிப்பெருங்காயம், *s.* Assafœtida, for seasoning food.

யானைப்பெருங்காயம், *s.* Assafœtida used in physic for elephants.

பெருச்சாளி, *s.* A large kind of rat, a bandycoote. (*c.*)

பெருச்சாளிவாகனம், *s.* Bandycoote as a vehicle of Ganesa.

பெருபபம், *s.* [*as* பருப்பம், *which see.*] Bigness, thickness, &c.

பெருப்பி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To magnify, to enlarge, அதிகப்படுத்த. 2. To magnify in description, to exaggerate, பருப்பிக்க. (*c*)

பெருமு, கிறேன், பெருமினேன், வேன், ம், *v. n.* [*com.* பொருமு.] To be puffed up or bloated. (*R.*)

பெருமை, *s.* Greatness, largeness—oppos. to சிறுமை, பருமை. 2. Highness, dignity, excellence, eminence, nobleness, grandeur, மாட்சிமை. 3. Abundance, excessiveness, மிகுதி. 4. Power, might, வல்லமை. 5. Celebrity, renown, கீர்த்தி. 6. (*fig*) Pride, vanity, self-consequence, haughtiness, அகந்தை. 7. [*in combin.*] Grossness, heinousness, notoriousness. (*c.*)—*Note.* For the changes in combination, see அருமை. The first letter is lengthened as பேர், in the adjective.

பெருமைபீற்றற்கோலம். Pride will end in rags.

பெருமைபெத்தரிக்கமில்லாமலிருக்கிறது. Being free from pride and arrogance.

பெருமையாய்ப்பேசுதல். Speaking arrogantly.

அதனக்குப்பெருமையல்ல. That is no honor to you.

பெரியகுடி — பெரியகுடியானவன், *s.* The chief ryot in a village.

பெரியகுணம், *s.* A noble, liberal disposition; magnanimity, பெருந்தன்மை. 2. Superiority to worldly greatness, honors or pleasure.

பெரியகுளம், *s.* A large tank. 2. A town in the Madura district, ஒரூர்.

பெரியகை, *s.* [*fig.*] A liberal or bountiful hand, தாராளமானகை. 2. An influential party.

பெரியசலவாதி. See சலபாதை.

பெரியதகப்பன், *s.* [*com.* பெரியப்பன்.] The father's elder brother, or the mother's elder sister's husband.

பெரியதம்பிரான், *s.* A god, ஓர்தேவதை; *also used in irony.* 2. See தம்பிரான்.

பெரியதனம், *s.* Dignity, honor, கனம். See தனம். 2. Pride, haughtiness, arrogance, மேட்டிமை. 3. Superintendence.

பெரியதனத்துக்கிருக்க, *inf.* To affect to be a great man; to anticipate great things. 2. To expect the office of governor, &c.

பெரியதனம்பண்ண, *inf.* To govern, to hold the office or place of a magistrate or governor.

பெரியதாய் — பெரியமாதா — பெரியாத்தாள் — பெரியாயி — பெரியாய், *s.* The wife of a father's elder brother, &c. See தாய்.

பெரியது. That which is great or large.

பெரியத்தை, *s.* [*contrac. of* பெரியஅத்தை.] The father's elder sister.

பெரியநங்கை — பெரியாநங்கை, *s.* A medicinal plant. See பெரியாணங்கை.

பெரியநடை, *s.* A noble course of conduct, nobleness, gentility, நல்லொழுக்கம்.

பெரியநாயகி, *s.* An epithet of Parvati at Vriddhachalam, பார்வதி.

பெரியநாள், *s.* A special day, holiday.

பெரியபட்டணம், *s.* A large city. 2. A town on the Malabar coast so called.

பெரியபாட்டன். *s.* Grand-father's elder brother.

பெரியபாட்டி, *s.* Grand-mother's elder-sister.

பெரியபிராட்டி, *s.* Lukshmi.

பெரியபுராணம், *s.* An ancient Purana, describing the history of the sixty-three famous devotees of Siva.

பெரியபுலு, *s.* [*in cant numbers.*] A hundred, நூறு.

பெரியபெயர், *s.* A great name, celebrity, popularity.

பெரியமனம், *s.* A noble mind, magnanimity, உதாரமனம்.

பெரியமனிதன், *s.* A great man, பாரிமனிதன். 2. An aged man.

பெரியமாமன் — பெரியம்மான், *s.* The mother's elder brother.

பெரியம்மை, *s.* [*contrac. of* பெரியஅம்மை.] Small-pox, ஓர்வைசூரி.

பெரியர் — பெரியவர் — பெரியார் — பெரியோர், *s.* [*pl.*] The aged, முதியோர். 2. The great.

பெரியவன், *s.* A grown-up man. 2. A man in authority or office, a man of wealth, or excellence, மேன்மையுள்ளோன்.

பெரியவீட்டுக்காரன், *s.* (*lit.*) One living in a large house; *ironically;* one living in a hut. 2. A Pariah.

பெரியவுழைப்பு, *v. noun.* Close application to labor or study, மிகுமுயற்சி.

பெரியவெண்ணம், *s.* High aspirations, great conceptions. 2. [*fig.*] High conceit, assumption.

பெரியோரியல்பு, *s.* Properties, qualities or characteristics of the great, of which seven are enumerated: 1. அறம், virtue, beneficence; 2. பொருள், property, wealth; 3. இன்பம், pleasure, enjoyment; 4. அன்பு, love, affection; 5. புகழ், celebrity, fame; 6. மதிப்பு, estimation, esteem; 7. பொறுமை, patience, forbearance. (சது.)

பெருங்கடல், *s.* The wide sea, the great deep.

பெருங்கணக்கு, *s.* A large amount, பெருந்தொகை. 2. On a large scale, மொத்தம்.

பெருங்கணக்கிலேபேசுகிறார். He talks arrogantly, as though he were a great man.

பெருங்கதை, *s.* A very long story. 2. A general report, a thing well known, பிரசித்தசெய்தி. 3. [*prov.*] The last reading of the பிள்ளையார்கதை, at a temple.

பெருங்காக்கைபாடினியம், *s.* A treatise. See காக்கைபாடினியம்.

பெருங்காடுதரிசு, *s.* Land left waste for upwards of fifteen years. (*Govt. usage.*)

பெருங்காப்பியம், *s.* The principal epic poems, as பாரதம் and இராமாயணம். See காப்பியம்.

பெருங்காய்ஞ்சொறி, *s.* A kind of nettle. See காய்ஞ்சொறி.

பெருங்காரை, *s.* A kind of fish. 2. A kind of shrub. See காரை.

பெருங்கால், *s.* The elephantiasis, or enlarged leg, யானைக்கால். 2. A large trench, பெருவாய்க்கால். 3. (*p.*) A strong wind, a gale—oppos. to சிறுகால், சண்டமாருதம்.

பெருங்கிரந்தி, *s.* An eruption. See கிரந்தி.

பெருங்கிராமம், *s.* A large village. See கிராமம்.

பெருங்கிழங்கு, *s.* A plant, Aristolochia, Ind. See ஈசுரமூலி.

பெருங்கிழமை, *s.* Entire or sole right. See கிழமை.

பெருங்குமிழ், *s.* A tree. See குமிழ்.

பெருங்குருகு, *s.* The ruddy goose, சக்கரவாகம், said to devour elephants. (சது.)

பெருங்குருந்து, *s.* A fragrant tree. See குருந்து.

பெருங்குழி, *s.* A large pit. 2. See குழி.

பெருங்குறட்டை, *s.* A plant. See குறட்டை.

பெருங்குறிஞ்சா, *s.* A plant. See குறிஞ்சா.

பெருங்கொடி, *s.* A large flag, பெரிய துவசம். 2. A large kite.

பெருங்கொன்றை, *s.* A flower-tree. See கொன்றை.

பெருங்கோட்டை, *s.* A kettle drum, (*lit.*) the larger noise; [*ex* கோட்டை.]

பெருஞ்சித்தனார், *s.* A professor of the Madura college, his impromptu on the Kural only is preserved, திருக்கைப்புலவன்.

பெருஞ்சீரகம், *s.* Anise seed. See சீரகம்.

பெருஞ்செருப்படி, *s.* A plant, Croton plicatum. See செருப்படி.

பெருஞ்சொல், *s.* Words of general acceptation, பலரறிசொல். (*p.*)

பெருநந்தியாவட்டம், *s.* The eye-flower-tree. See நந்தியாவட்டம்.

பெருநறளை, *s.* A plant. See நறளை.

பெருநறுவிலி, *s.* A fruit-tree. See நறுவிலி.

பெருநாரை, *s.* Stork. See நாரை.

பெருநாள், *s.* A festival, a high day, பண்டிகைநாள். 2. The last of the twenty-seven lunar mansions, இரேவதிநாள்.

பெருநீர், *s.* Sea, ocean, கடல். (*p.*)

பெருநெஞ்சு, *s.* A proud heart.

பெருநெருஞ்சி, *s.* A large thistle. See நெருஞ்சி.

பெருநெருப்பு, *s.* A conflagration.

பெருநெல், *s.* A kind of paddy longer in growing than other kinds.

பெருநோயல், *s.* A disease causing the fingers, to fall off, பெருவியாதி. 2. Small-pox, வைசூரி.

பெருந்தகை, *s.* A noble king, அரசன். 2. A noble minded man. (*R.*)

பெருந்தக்காளி, *s.* A plant. See தக்காளி.

பெருந்தலைக்கறையான், *s.* A large-headed white ant.

பெருந்தன்மை, *s.* Dignity, high rank, மேன்மை. 2. Pride, haughtiness, self-consequence, மேட்டிமை.

பெருந்தாரா, *s.* A goose.

பெருந்தாலிகட்டிவெள்ளாழர், *s.* A class of Vellalas who wear a large marriage-badge—oppos. to சிறுதாலிகட்டி.

பெருந்தாளி, *s.* A large kind of winding plant, Convolvulus maximus.

பெருந்திணை, *s.* [*in love poet.*] Lust; criminal connexion with a woman by violence. See திணை.

பெருந்தீனி, *s.* [*in a bad sense.*] Food in large quantities, more sumptuous than ordinary, பெருண்டி. 2. Gluttony, voluptuousness, luxury. See தீனி.

பெருந்துத்தி, *s.* A plant. See துத்தி.

பெருநகை, *s.* Great or intense laughter. See இரசம்.

பெருந்தொடை, *s.* The thick part of the thigh. 2. See தொடை.

பெருந்தேவனார், *s.* (*Hon.*) Names of two professors of the Madura college; one of whom wrote an imitation of the Mahabharat in வெண்பா, which is known by the name of சக்கரத்துப்பாரதம். The other was the author of a treatise on versification called கவிசாகரம்.

பெருந்தேனீ, *s.* A honey-bee.

பெருந்தேன், *s.* Honey by bees, as distinguished from கொசுத்தேன். See தேன்.

பெருமகன், *s.* [*pl.* பெருமக்கள்.] A prince, a nobleman, பிரபு. 2. A gentleman, a master, எசமானன்.

பெருமகிழ்ச்சிமாலை, *s.* A panegyric in which the character of an excellent wife is described. See பிரபந்தம்.

பெருமங்கலம், *s.* A poem describing the proceedings of a king's birth-day, ஒர்பிரபந்தம்.

பெருமந்தாரை, *s.* A tree. Bauhinia.

பெருமம்—பெருமன், *s.* [*also* பருமம், பருமன்.] A large bulky thing, பெரியது.

பெருமரம், *s.* A kind of tree, பெருங்கள்ளி, Plumosa alba. 2. A stinking tree. See பீநாறிமரம்.

பெருமரத்துப்பட்டை, *s.* Bark of the above tree.

பெருமருந்து, *s.* A twining plant, Indian Birthwort, Aristolochia Ind.

பெருமருந்துவேர், *s.* Root of the above.

பெருமலை, *s.* Mount Meru, or the golden mountain. மேருகிரி.

பெருமலைகலக்கி, *appel. n.* A plant, Adiantum caudatum.

பெருமழை, *s.* Heavy rain.

பெருமா, *s.* Any large animal as an elephant, யானை; [*ex* மா.] (சது.)

பெருமாட்டி, *s.* A lady, mistress, princess.

பெருமாந்தம், *s.* A disease in children.

பெருமல்லரி, *s.* As பெருமரம், 1. (*R.*)

பெருமான், *s.* [*a change of* பெருமான்.] A prince, a nobleman, பெருமையிற்சிறந்தோன். 2. Vishnu, திருமால்.

பெருமான், *s.* A prince, a king, அரசன். 2. A nobleman, பெருமையிற்சிறந்தோன். 3. An elder, an elder brother, முந்தோன். 4. Siva, சிவன். 5. Vishnu, விஷ்ணு. 6. A guru, குரு.

நான்தான்பெருமானென்றுவந்தான். He came calling himself a great man.

பெருமாசோதேயர், *s.* [*also called* சேரமான்பெருமான், *which see.*] A king and a poet. Of his productions, are மும்மணிக்கோவை, கைலாசவுலா, பொன்வண்ணத்தந்தாதி.

பெருமிதம், *s.* Joy, களிப்பு. [Compare பருமிதம்.] 2 Plenty, மிகுதி. (சது.) 3. Great measure, அதிகஅளவு. (*R.*)

பெருமீன், *s.* A large fish, as யானைமீன்.

பெருமுசட்டை, *s.* A plant, Convolvulus Malabaricus.

பெருமுத்தரையர், *s.* Persons of independent wealth, சுவாதீனச்செல்வர். (நாலடி.)

பெருமூச்சு, *s.* Hard breathing, sighing, panting. (*c.*)

பெருமூச்சுவிட—பெருமூச்செறிய, *inf.* To fetch a deep breath from grief, rage, &c.

பெருமைகாட்ட, *inf.* To manifest pride or arrogance.

பெரும்பசிரி, *s.* A garden herb. See பசிரி.

பெரும்படி, *s.* Coarseness, thickness, &c., as பரும்படி.

பெரும்பதி, *s.* A town surrounded by villages, மருக்கிராமத்துப்பதி.

பெரும்பயறு, *s.* A kind of pulse. See பயறு.

பெரும்பயன், *s.* Great, lasting, or eternal benefit.

பெரும்பராக்கு, *s.* Carelessness, negligence, supineness, அசட்டை.

பெரும்பறவை, *s.* The feigned bird with eight legs, எண்காற்புள்.

பெரும்பனசை — பெரும்பனையன், *s.* Small-pox, with large pustules. See பனசை.

பெரும்பாடு, *s.* Immoderate flow of the menses; (*lit.*) great suffering.

பெரும்பாடிறைக்க, *inf.* To flow excessively, as the menses.

பெரும்பாந்தள் — பெரும்பாம்பு, *s.* A large snake.

பெரும்பாலார், *s.* [*pl.*] The majority. See பால்.

பெரும்பாலும். For the most part. generally, commonly, customarily, மிகுதியும்.

பெரும்பாவி, *s.* A great sinner, கொடும்பாவி

பெரும்பாழ்-பெரும்பாழ்வெளி, *s.* The extreme point of space, as பெருவெளி.

பெரும்பாற்சொற்றி, *s.* A plant. See பாற்சொற்றி.

பெரும்பிடி, *s.* Exaction.

பெரும்பிரண்டை, *s.* A large kind of பிரண்டை creeper. See பிரண்டை.

பெரும்பிளவை, *s.* A bad ulcer.

பெரும்புலி, *s.* The royal tiger.

பெரும்புள், *s.* The large owl, கூகை. (சது.)

பெரும்பூண், *s.* A jeweled-breast-plate.

பெரும்புழை, *s.* A wicket in a large gate. (*p.*)

பெரும்பூளை, *s.* A plant, Illecebrum Javanicum.

பெரும்பெயர், *s.* A great name, great renown
பெரும்பெயர்க்கடவுள். The Supreme Being.

பெரும்பொங்கல, *v. noun.* A ceremonial boiling of rice by great numbers. See தைப்பொங்கல்.

பெரும்பொழுது, *s.* The six seasons of the year, as distinguished from சிறுபொழுது. See பொழுது, and பருவம்.

பெருவயிறு, *s.* A large belly. 2. A kind of disease. See மகோதரம், குன்மவயிறு.

பெருவயிறுபற்ற, *inf.* To swell, as the belly, in dropsy.

பெருவள்ளிக்கிழங்கு, *s.* A plant, Dioscorea sativa. (*R.*)

பெருவாகை, *s.* A tree, Mimosa flexuosa. (*Rott.*)

பெருவாரி—பெருவாரிக்காய்ச்சல், *s.* A pestilence, plague, epidemic.

பெருவாழ்வு, *s.* Great prosperity. See பதிஞை.

பெருவியாதி, *s.* A leprosy causing the dropping off of the fingers, toes, &c., குஷ்டம்.

பெருவிரியன், *s.* A poisonous serpent, great viper.

பெருவெளி, *s.* A large open plain. 2. The vast etherial expanse as the abode of Deity. 3. As சிதாகாசம்.

பெருவெள்ளம், *s.* Great inundation.

பெருவெள்ளை, *s.* A kind of rice, ஓர் செல்லு.

பெருவ — வாய்ப்பெருவ, *inf.* To chatter in sleep, நித்திரையிற்பிதற்ற. (*Beschi.*)

பெலக்க, *inf.* [*com. for* பலக்க, *which see.*] To become strong, mighty, &c.

•பெலம்—பெலன், *s.* Strength, power, vigor. 2. Firmness, validity, &c. See பலம். (*c.*)

பெலன்காட்ட, *inf.* To make a display of strength, powers, abilities. 2. To perform extraordinary exploits. 3. To be powerful—as medicines.

•பெலி, *s.* A sacrifice, &c. See பலி.

பெல்லி, *s.* A puny devil, an elf, பிசாசம். 2. Witchcraft, சூனியம், as பில்லி. (*vulgar usage.*) 3 [*prov.*] A short stick tied to the end of a pole forming a hook or crook, தறட்டியின்முனைமுள்.

பெள், பெட்கிறேன், பெட்டேன், பெட்பேன், பெட்க, *v. a. and v. n.* To wish, desire, விரும்ப. 2. To long for, ஆசைப்பட. (சது)

பெட்டார், *appel. n.* Friends, lovers, சிநேகிதர். (சது.)

பெறு, கிறேன், பெற்றேன், வேன், பெற, *v. a.* To obtain, attain, secure, possess, அடைய. 2. To beget, generate, செனிப்பிக்க. 3 To bring forth, to have children, பிரசவிக்க. 4. To experience, to be affected favorably or unfavorably, அனுபவிக்க. 5. To have the benefit or enjoy the privilege of, சுகிக்க. 6. *v. n.* To be worth, to bring a price, to be valid for, விலைபெற. 7. To be worthy, தக.—*Note.* In some cases this verb when preceded by another in the infinitive has much the sense of பட, as அடையப்பெறும், it may be had; சொல்லப்பெறும், it may be said; காணப்பெற்றேன், I obtained sight of.

ஆதாயத்தைப்பெற்றான். He obtained profit.

இதப்பிரயாசத்தைப்பெறாது. It is not worth the trouble.

பத்துப்பணம்பெறும். It is worth ten fanams.

அவன்பெறுமானவன். He is a worthy man.

ஒருகாசும்பெறாதவேலை. It is worth nothing.

பெற்றமனம்பித்துப்பிள்ளைமனங்கல்லு. The heart of the mother is bile [water]; the heart of the child is stone.

பெறாத, *neg. rel. part.* Insufficient, unsound, ineffectual, &c.

பெறாதசாமீ. Insufficient security.

பெறாதகாரியம். An unsound argument, or ineffectual lawsuit.

பெறாதபேச்சு. Worthless talk.

ஆற்றப்பெறாதவேதனை. Intolerable torment. (*p.*)

பெறுத்த, *inf.* [*prov. in combin. v. noun.* பெறுத்தல்.] To cause, பெறுவிக்க.

நிலைபெறுத்தலும்நீக்கலும் Establishing and removing or destroying. (இல.)

பெறுமதி, *s.* [*prov.* பெறுதி.] Worth, value. தகுதி. 2. Ability, திராணி. 3. Validity, security, உறுதி. 4. Prize, reward, வெகுமதி.

பெறுவதுகொள்வோர், *appel. n.* Prostitutes, வேசையர். (*p.*)

பெற்றகடன், *s.* Obligation which the child owes to its parent, especially the mother, for giving it birth, தாய்க்குச்செய்யுங்கடமை.

பெற்றதகப்பன், *s.* One's own father.

பெற்றதாய், *s.* One's own mother,

பெற்றபிள்ளை, *s.* One's own child.

பெற்றவயிறெரிய, *inf.* To grieve, yearn, as a mother at the death or sufferings of her child.

பெற்றவன், *appel. n.* A father. [*fem.* பெற்றவள்.] 2. [*in combin.*] One who has received, as பேர்பெற்றவன், வரம்பெற்றவன்.

பெற்றோர், *appel. n.* Parents, ஈன்றோர்.

பெற்றோர்பிறந்தார், *appel. n.* Parents, brothers, and sisters.

பெற்றுவளர்க்க, *inf.* To bring forth and bring up a child.

பெறல்—பெறுதல், *v. noun.* Obtaining, அடைதல். 2. Finding, getting, கிடைத்தல். (சது.)

பெறுதி *s.* [*prov.*] Worth, &c. See பெறுமதி, under பெறு. *v.*

பெற்றம், *s.* A bull, எருது. 2. Taurus of the Zodiac, இடபவிராசி. 3. A buffalo in common, பசுவின்பொது. 4. Wind, air, காற்று. (சது.)

பெற்றம்பெற்றவன்றன்னை. Bhîma who was begotten by the wind. (பாரதம்.)

பெற்றி-பெற்றிமை, *s.* Nature, quality, natural property, குணம். 2. Kind, character, description, manner, order, தன்மை (*p.*)

பென்னம்பெரியது, [*symb. verb.*] Very large, *used interjectively.* Compare சின்னஞ்சிறியது. (*R.*)

பே

பே. A syllabic letter formed of ப் and ஏ.

பே, (*Hind.*) No, not, இல்லை.

பேபந்து. Without order.

பேபாக்கி. No remainder.

•பே, *s.* [*contract. of* பேனம்] Foam, scum, froth, நுரை. 2. Cloud, மேகம், (*p.*)

•பேகம், *s.* A frog, தவளை. W. p. 627. B'HEKA. 2. See பேகன்.

பேகன், *s.* One of the last of the kings famed for liberality, கடைவள்ளலிலொருவன். 2. [*fem.* பேகி.] The male of frogs, ஆண்தவளை

பேசு, கிறேன், பேசினேன், வேன், பேச, *v. a.* To talk with, to converse, speak, to hold conversation, to commune, சம்பாஷிக்க. 2. To deal or bargain; to negociate a business verbally, தாதுபேச. 3. To tell, say, communicate, சொல்ல. 4. [*fig.*] To abuse, to vilify, as ஏச. (*c.*)

பேசாதே. Don't speak, don't tell.

பேசத்தெரியாதவன், *appel. n.* One who is not a good speaker, or who cannot negociate, &c.

பேசாதபேச்சு, *s.* Improper talk. 2. Indecent or obscene language.

பேசாமடந்தை, *s.* A princess who resolved not to speak, but was forced to do so by Vikramaditya.

பேசாமலிருக்க, *inf.* To be silent.

பேசிக்கொண்டிருக்க, *inf.* To be conversing socially.

பேசுவாய், *s.* A chief minister of the Tanjore kings. (*Beschi.*)

பேச்சு, *v. noun.* Speaking, பேசுதல். 2. Speech, language, பாஷை. 3 Declaration, expression, விளம்புதல். 4 Praise, புகழ். 5. Conversation, talk, subject of conversation, சம்பாஷணை. 6. Errand, message, verbal communication, report, செய்தி. 7. Rumor, வார்த்தை 8. A word, வார்த்தை. 9. Discourse, speech, harangue, பிரசங்கம். (*c.*)

பேச்சிலேகுற்றம்பிடிக்கிறது. Finding a flaw in one's speech.

உன்பேரிலேஒருபேச்சுண்டு. Many bad things are spoken of you.

இப்படிஒருபேச்சுப்பிறந்தது. There arose a rumor to this effect.

அவன்பேச்சுமூச்சில்லாமலிருக்கிறான். He is without speech or breath; i. e near death.

பேச்சிலேவிட்டுப்பார்த்தால்தெரியும். His ability is known in his addresses.

பேச்சுழிய-பேச்சுத்தப்ப, *inf.* To fail in keeping one's word, சொற்றவற.

பேச்சறுதி, *s.* Decision in bargaining, as சொல்லறுதி.

பேச்சற்றவன், *appel. n.* One who does not keep his word. 2. A silent ascetic.

பேச்சாளி, s. A good speaker. 2. An upright man, as சொல்லாளி.

பேச்சுக்காரன், s. As பேச்சாளி, 1.

பேச்சுக்கிடம், s. Liberty of speech. 2. Occasion for slander.

பேச்சுக்கொடுக்க, inf. To speak with one in order to obtain secrets.

பேச்சுத்தடுமாற, inf. To contradict one's self. 2. To be confused, puzzled or disconcerted in speaking.

பேச்சுத்தட்ட, inf. To stammer, stutter, hesitate.

பேச்சுத்தாராளம், s. Freedom or freeness of conversation. 2. Fluency of speech, eloquence. 3. Civility, politeness, in address, or discourse.

பேச்சுத்திராணி, s. Power of language, eloquence.

பேச்சுத்துணை, s. One to converse with.

பேச்சுநடக்க, inf. To go on as a speech, story or conversation. 2. To spread as a rumor.

பேச்சுநடக்கிறது. The report goes abroad.

பேச்சுப்பிடுங்க, inf. To fish out secrets from one's talk.

பேச்சுமூச்சு, s. Speech or breathing.

பேச்சுவல்லபம், s. Ability in speaking, eloquence.

பேச்சுவளர, inf. [trans. பேச்சுவளர்க்க.] To become prolonged, to grow warm, or to abuse—as in a dispute.

பேச்சுவார்த்தை, s. Speech. 2. Amicable or speaking terms.

அவர்களுக்குள்ளேபேச்சுவார்த்தையில்லை. They don't speak with each other.

பேச்சுறுதி, s. Faithfulness to one's word or promise.

பேச்சாட்டுத்துணை—பேச்சோடுதுணை, s. One to talk with. (c)

பேச்சுப்பல்லக்குதம்பிகால்நடை. His words are in a palankeen; he is on foot.

*பேச்சி, s. A female imp. See பிச்சி. W. p. 553. Pesee.

பேஜா, adj. Improper, inaccurate.

பேஷ, adj. (Pers. Beish.) Good, proper, best, நல்ல.

பேஷகஷ, s. (Pers.) A tribute, இறை.

பேஷ்கார், s. (Pers.) An officer of revenue inferior to a Tahsildar.

பேஷகி, s. (Pers.) Advance of money.

பேஷவா, s. (Mahrat.) Leader, foreman, a title formerly applied to a prime minister.

பேடர், s. [sing. பேடன்.] Hermaphrodites, அலியர்; [ex பேடு.]

பேடி, s. [pl. பேடியர்.] An hermaphrodite, inclining toward the female, அலி.

பேடிகையில்வாள்போலே. Like a sword in the hand of a hermaphrodite, *is learning to many.*

பேடியெழுத்து, s. A letter neither male nor female—that is a guttural, as ஃ.

பேடிசம், s. Imposition, deception, dissimulation, false appearance, hypocrisy, மயக்கு. (c.)

பேடிசக்காரன், s. A dissembler, a hypocrite.

பேடிசங்காட்ட—பேடிசம்பண்ண, inf. To play the hypocrite. 2. To counterfeit a work, &c.

பேடிசவித்தை, s. Dissimulation, hypocrisy.

பேடு, s. An hermaphrodite, அலி. 2. Dance of Kama, மன்மதன்கூத்து. 3. Town or village, ஊர். 4. Female of birds, the hen, பெண்பறவை. (p.)

பேடாடல், a. noun. Dance of Kama, as பேடு, 2.

பேடை, s. Female of birds, the hen, பறவைப்பெண். (p.)

பேட்டி, s. (Hind.) Access to, or waiting on, a great person. (c.)

பேட்டிகொடுக்க, inf. To give audience.

பேட்டிபண்ணிவைக்க, inf. To procure one access to a great person.

பேட்டியாச்சுது. I have had access to the governor, &c.

பேட்டு, s. [for.] A stripe or streak in general, rather broad, பட்டைக்கரை. (c.)

*பேட்டை, s. Suburb, pettah. Compare பட்டு. 2. A village near a market-town, சந்தையூர். (சது.)

*பேணகம், s. A kind of pastry, ஓர் பணிகாரம்.

பேணம், s. [prov.] Tenderness, affection, regard, esteem, மதிப்பு. 2. Care, caution, as பதனம். 3. Nurture, fostering, as பேணல்.

பேணு—பேண், கிறேன், பேணினேன், பேணுவேன், பேண, v. a. To take great care of, to treat tenderly, to pamper, பராமரிக்க. 2. To cherish, foster, nurture, tend, ஓம்ப. 3. To regard, esteem, value, appreciate, respect, honor, நன்குமதிக்க. 4. To protect, secure, காக்க. 5. To wish for, to desire greatly, ஆசைபெருக. 6. To purpose, think, கருத. 7. To mark out, indicate, குறிக்க; [from Sa. Pen'a, to embrace.]

பேணரவு, v. noun. [sometimes பேணல்.] Great desire; esteeming.

பேணார் — பேணலர், appel. n. Foes, பகைவர். (p.)

கர்த்தரைப்பேண, inf. To love and honor God.

தந்தைதாய்பேண். Honor father and mother. (Avv.)

குலஸ்திரிதன்பர்த்தாவையும், பரஸ்திரிதன்மேனியையும்பேணுவர். A married wife honors and cherishes her husband; a strange woman her own body.

பேண் — பேண்மரம், s. [prov. com. ஆதெரல்.] The two beams on which the axle of a well-sweep rests.

*பேதகம், s. Difference, disagreement, variance, discord, பேதம். W. p. 627. B'hedaka. (c.)

பேதகம்பண்ண, inf. To be insincere in friendship. 2. To be wanting in cordiality, to be disaffected. 3. To be a slack friend. 4. To sow discord.

*பேதமை, s. Ignorance, அறிவின்மை. See பேதைமை. (c.)

*பேதம், s. Difference, dissimilarity, வேற்றுமை. 2. Disagreement, variance, disaffection, பிரிவினை. 3. Diversity, variety, திரிபு. 4. Subdivision, sect, division, பகுப்பு. 5. Discord among confederates. See உபாயம். 6. Variation, modification, alteration, விகற்பம். 7. Incongruity, inconsistency, இணக்கமின்மை. W. p. 627. B'heda. 8. One of the twenty-eight Saiva Agamas. See சிவாகமம்.

பேதம், ௩. The three differences. These are: 1. சுகதபேதம், difference between the head and its ramifications, &c.; 2. சசாதிபேதம், difference in the different species, as between one tree and another; 3. விசாதிபேதம், difference in things unlike, as between trees and stones.

பேதம், ௬. A six-fold division. This is as follows: 1. சாதிபேதம், division, distinction of caste or tribe; 2. சமயபேதம், or மதபேதம், differences of religion; 3. மந்திரபேதம், varieties of incantations; 4. மனப்பேதம், difference of disposition, thought, taste, or inclination; 5. சாத்திரபேதம், difference in science, doctrine, &c.; 6. உலகபேதம், varieties of worlds. For some other differences as இடப்பேதம், காலபேதம், சொற்பேதம், பொருட்பேதம், முகபேதம், see in their places.

பேதக்காரர், s. Schismatics, heretics.

பேதசைவம், s. One of sixteen divisions of the Saiva system. See சைவம்.

பேதம்பண்ண, inf. To make a difference. 2. To sow discord, cause alienation between parties.

பேதாதிபேதம், s. Very great difference, மிகுபேதம்.

பேதாபேதம், s. Diversity, variety, multiformity, பலபேதம். 2. Similarity and dissimilarity, agreement and disagreement, வேற்றுமையும், ஒற்றுமையும். 3. The union of separate things—as of the soul and body.

பேதலி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To vary, alter; to change in form, appearance, or nature, to be estranged, வேற்றுமைப்பட. 2. To be discouraged, dismayed, மனங்குழப்ப. 3. To hesitate, சந்தேகப்பட. (c.)

நிறம்பேதலிக்கிறது. The colors differ.

பேதலிக்கப்பண்ண, inf. To discourage one.

பேதலிப்பு, v. noun. Variation, disaffection.

*பேதனம், s. Causing separation or division. See கருமம். W. p. 627. B'hedana.

பேதா, s. [Hind.] A peon, ஜவான். 2. A chess-man, சதரங்கக்காய்ப்பிலு.

பேதாணு, s. [Hind.] Quince-seed, ஒரு விதை. Ains. v. 1. p. 332.

*பேதி, s. That which divides, detaches, separates, பிரிப்பது. W. p. 627. B'hedin. 2. Variation, difference, change, as பேதம். 3. Discharge from the bowels, *being a change*; looseness; also cholera, கழிச்சல். 4. A purgative, cathartic, பேதிமருந்து. (c.) 5. Mercury, quicksilver, இரதம். 6. [in combin.] A solvent, of which there are five kinds: 1. அன்னபேதி; 2. மாமிசபேதி; 3. சொர்ணபேதி; 4. அஸ்திபேதி; 5. சகஸ்திரபேதி, or கல்பேதி, which see.

பேதிகாண, inf. To begin to purge, as in cholera.

பேதிகாரி, s. A purgative plant. See ஆற்றுத்தும்மட்டி. 2. A purgative in general, பேதிமருந்து.

பேதிக்குக்கொடுக்க, inf. To administer a cathartic.

பேதிக்குவாங்க, inf. To take a cathartic.

பேதியாக, inf. To operate as a cathartic, to purge. 2. To be attacked by cholera.

பேதி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. a.* To divide, to separate, &c., பிரிக்க. 2. To sow discord or dissension, பேதஞ்செய்ய. 3. To turn the mind from a right course, வேறுபடுத்த. 4. To excite disgust, to alienate, மனவேலைச்செய்ய. 5. To change, diversify, மாற்ற. 6. To despise, to scorn, நிந்திக்க. 7. *v. n.* To change, vary, differ, disagree, வேறுபட. 8. To degenerate, deteriorate, கெட. 9. To become estranged, to be disgusted with, மனமடிய. 10. To be relaxed in the bowels, to purge, பேதியாக. 11. To become broken, to be interrupted, frustrated, குழம்ப. (c.)

பேதித்தசமயம். A religion inconsistent with itself.

பேதித்துக்கேட்க, *inf.* To pump one.

பேதித்தல்-பேதிப்பு, *v. noun.* Separation, variance, dissatisfaction, purging.

பேது, *s.* (*Hind.*) Secrecy, secret inquiry, இரகசியம்.

•பேது, *s.* Bewilderment, confusion, consternation, intoxication, தடுமாற்றம். 2. Delirium, mental derangement, உன்மத்தம்.

பேதுற, *inf.* [*v. noun* பேதுறவு.] To be bewildered. 2. To become insane, மதிமயக்க. (*p.*)

•பேதை, *s.* A simpleton, an ignorant man, a dolt, அறிவிலான். 2. A woman, as being simple minded, பெண். (See மடம்.) 3. A girl from five to seven years old. See பருவம். (c.) 4. A hermaphrodite, பேடி. 5. A poor man, தரித்திரன். 6. Toddy, vinous liquor, கள். (சது.)

பேதைப்படுக்குமூழ். Works of former births stultifying the mind. (குறள்.)

பேதைத்தனம், *s.* Simplicity, weakness, silliness, folly, ignorance.

பேதைப்புத்தி, *s.* Weak intellect, folly, credulity, indiscretion.

பேதைமை, *s.* [*com.* பேதமை.] Simplicity, weakness, ignorance, credulousness, thoughtlessness, carelessness, as மடமை.

பேதைமையென்பதுமாதர்க்கணிகலம். Simplicity is an ornament of woman. (*Avv.*)

பேதையர், *s.* [*pl.*] The indigent, the poor, தரித்திரர். 2. The base, the vulgar, கீழ்மக்கள். 3. Women of desert tracts, பாலைநிலமகளிர். (சது.) 4. Simpletons, the ignorant, அறிவீனர். 5. Women, பெண்கள்.

பேத்தி. See பேர்த்தி.

பேத்தை, *s.* Au ugly looking kind of fish, as பொத்தை. (c.)

பேபந்து—பேபாக்கி. See பே.

•பேம், *s.* Fear, dread, terror, பயம். (சது.) See பீமம்.

பேய், *s.* A devil, goblin, fiend, as பிசாசம். 2. [*in combin.*] Wild, as plants or trees, காட்டுக்கேற்ற. 3. Evil, bad, vile, ferocious, கெட்ட. (c.)

உலகத்துக்குஞானம்பேய் ஞானிக்குலகம்பேய்..... Wisdom is a devil to the world and *vice versa*. [*prov.*]

பேய்க்குவேப்பிலைபோலே. As repugnant to one as Margosa leaves are to devils.

பேய்போலேதிரிகிறது. Going about in eager search of gain.

பேயத்தி, *s.* A species of fig-tree, Ficus dæmonum, *L.*

பேயன், *s.* [*fem.* பேய்ச்சி, பேச்சி.] A demoniac. 2. A head-strong fool, a madman, பைத்தியகாரன்.

பேயன்வாழை, *s.* A kind of plantain, a medicinal fruit.

பேயாட, *inf.* To whirl the head through possession.

பேயாடி, *appel. n.* A conjurer. 2. A fortune-teller.

பேயாட்ட, *inf.* [*appel. n.* பேயாட்டி.] To cause a person, to be possessed for the utterance of oracles.

பேயாட்டம், *v. noun.* A devil's dance, பேய்க்கூத்து. [*also* பேயாட்டு.] 2. Fiendishness, ferociousness, பேய்த்தன்மை. 3. Confusion, disorder, கலக்கம்.

பேயாமணக்கு, *s.* A wild castor-oil-plant.

பேயாவிரை, *s.* A kind of wild ஆவிரை.

பேயாழ்வார், *s.* One of the twelve Vaishnuva devotees. He composed a hundred verses of நாலாயிரப்பிரபந்தம், ஓராழ்வார்.

பேயுமிய, *inf.* [*prov.*] To suck the blood of a person—as a devil; either killing or greatly weakening him.

பேயுள்ளி, *s.* Wild onion, ஒருள்ளி.

பேயுறைந்தவீடு, *s.* A house haunted by devils.

பேயெரிக்க, *inf.* To burn out a devil by magic. See எரி, *v.*

பேயையுருவேற்ற, *inf.* [*sometimes* பேயேற்ற.] To cause a devil to possess a person.

பேயோடாடி, *appel. n.* Siva, as dancing with devils, சிவன்.

பேயோட்ட-பேய்துரத்த, *inf.* [*appel. n.* பேயோட்டி.] To exorcise.

பேயோணன், *s.* The large kind of ஓணான் lizard.

பேய்க்கண், *s.* Eyes, or looks of a demoniac. 2. Frightful eyes, அருசத்தக்கவிழி.

பேய்க்கண்டல், *s.* A tree. See கண்டல்.

பேய்க்கரும்பு, *s.* A wild and useless sugar-cane, Saccharum arundinaceum.

பேய்க்காடு — பேயுறைந்தகாடு — பேய்மேய்ந்தகாடு, *s* A jungle haunted by devils.

பேய்க்குணம், *s.* An unsociable, peevish disposition.

பேய்க்குப்படைக்க, *s.* To make offerings to devils; *also used in cant.*

பேய்க்குறை-பேய்க்கோட்டாலை, *s.* Evil, disaster, &c., resulting from the malice of an unpropitiated devil.

பேய்க்கூண்டு — பேய்ப்பள்ளி, *s.* A noted place where the black arts are said to be taught, மாயவித்தைபயிற்றுமோரிடம்.

பேய்க்கொம்மட்டி, *s.* Coloquintida or bitter apple, Cucumis colocynthis.

பேய்க்கோலம், *s.* A hideous, monstrous or diabolical appearance.

பேய்ச்சத்தம், *s.* Hideous noise of devils, said to be heard in desert places in time of epidemics.

பேய்ச்சிலை, *s.* An idol, a statue of a demon.

பேய்ச்சுரை, *s.* A bitter variety of gourd.

பேய்த்தக்காளி, *s.* A plant, Solanum Lycopersicum.

பேய்த்தண்ணீர், *s.* [*in cant.*] Ardent spirits; (*lit.*) *devil's water*, சாராயம்.

பேய்த்தனம், *s.* Fiendishness, ferociousness, &c.

பேய்த்தும்மட்டி, *s.* As பேய்க்கொம்மட்டி.

பேய்த்தும்பை, *s.* A plant. See தும்பை.

பேய்த்தேர், *s.* The mirage or vapor of the noonday-sun, said to be the chariot of devils.

பேய்நரி, *s.* A mad fox.

பேய்நாய், *s.* A mad dog.

பேய்நிலை, *s.* One of the postures of devils.

பேய்பிடிக்க, *inf.* [*appel. n.* பேய்பிடித்தவன்.] To be possessed by a devil.

பேய்ப்பசலை, *s.* A plant. See பசலை.

பேய்ப்பழக்கம், *s.* Unnatural and irregular habits.

பேய்ப்பயல், *s.* A foolish fellow.

பேய்ப்பள்ளி. See பேய்க்கூண்டு.

பேய்ப்பாகல், *s.* A creeper. See பாகல்.

பேய்ப்பாட்டு, *s.* Diabolical songs addressed to devils, &c.

பேய்ப்பார்வை, *s.* Demon-like, frightful looks.

பேய்ப்பாற்சொற்றி, *s.* A plant. See பாற்சொற்றி.

பேய்ப்பிடி, *s.* An irresistible grasp.

பேய்ப்பிள்ளை, *s.* A disobedient, intractable child.

பேய்ப்புடல், *s.* A gourd. See புடல்.

பேய்ப்புத்தி, *s.* Imprudence, folly, rashness.

பேய்ப்புல், *s.* A kind of grass. See புல்.

•மானம், s. Honor, favor, greatness, பெருந்தன்மை. 2. Pride, self-respect, dignity, பெருமை. 3. Shame, bashfulness, வெட்கம். 4. Measure in general, அளவு 5. (சந்.) Strength, வலி. 6 Fault, குற்றம். 7. Comparison, உவமை. 8 [*colloq. for* வானம்.] The heaven or sky. 9. The computation of a year, solar, lunar, or siderial—as சௌரமானம், சாந்திரமானம். W. p. 656. Mana.—*Note* The word generally takes certain prefixes, as அபி, அனு, அவ, உப, சன், &c, and differs a little in meaning according to the connection. Sometimes it is found in combination, as தண்டைமானம், பகல்மானம், &c

ஒழுக்கமுள்ளஸ்திரிமானத்தைக்காப்பாள். A gracious woman retaineth honor. (*Prov.* xi. 16.)

மானத்தைமூடு. Cover your nakedness. (c.)

சௌரமானம், s. Solar reckoning, motion of the sun in its orbit.

தேவமானம், s. The periods of time among the gods.

நரமானம், s. The period of man's life.

பிரகற்பதிமானம், s. Reckoning by Jupiter's motion in his orbit.

வெகுமானம், s. A present. See வெகு.

மானகீனம்—மானக்குறை-மானக்கேடு-மானத்தாழ்ச்சி—மானத்தாழ்வு—மானபங்கம்—மானவீனம், s. Dishonor, disgrace, ignominy.

மானக்குருடன், s. A very blind man.

மானங்காத்துக்கொள்ள, *inf.* See கா, v.

மானங்குலைய—மானங்கெட, *inf.* To be deflowered, &c. See குலை, v.

மானங்கெட்டவள், *appel. n.* A shameless woman.

மானததார்த்தம், s. Virtuous dispositions.

மானபாவன், s. A great man, as மானுபாவன்.

மானமா, s. The yak or bos grunniens, as கவரிமா. (சந)

மானம்பாடி, *appel. n.* [*improp.*] A skylark, as வானம்பாடி.

மானமரியாதை, s. Regard and politeness

மானம்பார்த்தநாடு, s. A country, without rivers, dependent upon rain.

மானயோகார்த்தம், s. Sum of the Semidiameters of either the sun and moon, or of the moon and earth's shadow.

மானவர், s. [*pl.*] Honorable people, மானமுடையோர். 2. Heroes, strong men, champions, வீரர். (சந.)

மானவேதியன், s. The venerated lord of the Vedas, வேதமுணர்போற்றுவோன்.

மானி, s. A person of honor, magnanimity. (சந.) 2. A coward. (கன்.)

•மானவம், s. A Upa-Purana. See உபபுராணம். 2. As மனு. See தருமநூல்.

•மானவர், s. [*pl.*] Men, human beings of the male sex, ஆடவர். 2. Human kind in general, மனிதர். W. p. 657. Manava. 3. See under மானம்.

மானவு, s. Intellectual clearness, தெளிவு; [*from Sa. Mana,* to investigate.] (சத)

•மானி, s. See under மானம்.

மானி, க்கிறேன். த்தேன், ப்பேன், க்க, v. a. To respect, to honor, to treat with politeness, மதிக்க; [ex மானம்.]

மானு, s. Grand-father, *also* a father, பாட்டன். (*Congu usage.*)

மானுகம், s. The gigantic crane, பெருநாரை.

மானுர், s. [*pl.*] Women, பெண்கள். (p.) 2. See மானு, v.

•மானிடம்—மானுடம்—மானுஷம்—மானுஷியம், s. Humanity, manliness, that which relates to mankind, மனுஷீகம். W. p. 659. Manusha, Manushya.

மானிடசாதி, s. Mankind.

மானிடசென்மம், s. Human birth.

மானிடச்சட்டை, s. The human form as assumed by deity.

மானிடத்தன்மன், s. An epithet of Kuvêra as having a human nature, குபேரன். (சந.)

மானிடர்—மானுடர், s. [*sing.* மானிடன்.] Men, human beings, மனிதர்.

•மானிதம், s. [*neg.* அவமானிதம்.] Pride; dignity, கனம். (*Sa. Manita.*)

•மானியம், s. Honor, respect, மரியாதை. W. p. 656. Manya. 2. (c.) Lands held on free tenure, உம்பிளிக்கை.—*Note.* In the second meaning it is often used for Enams in general.

காணிமானியம், s. Hereditary lands, free of tax.

குடிமக்கள்மானியம், s. Land given to washermen, barbers, &c, in free tenure.

மானியக்காரன், s. One who holds a *manium.*

•மானினி, s. A woman, பெண்; [ex மானம்.] W. p. 657. Manin.

மானு, கிறேன், மானினேன், or மான்றேன், வேன், மான, v. n. To be like, to resemble, be equal to, ஒக்க. 2. To be doubtful, ஐயுற. 3. To be confused, மயக்க. (p.)

மானுர், *appel. n.* [*pl.*] Enemies, foes, பகைவர். (சந.)

மானல், v. *noun.* Resembling. 2. Doubting. 3. Being confused. (சந.)

மான்றல், v. *noun.* Being doubtful, or confused, மயக்கம். (சந.)

•மானுஷம் — மானுஷியம் — மானுஷிகம், s. Human kind. See மானிடம்.

மானுஷன், s. A man, as மனுஷன்.

மானுஷியமில்லாதவன்மனுஷப்பதர். One without urbanity is human chaff.

•மானுடம், s. One of the five kinds of charity. See யாகம், இ. 2. Human kind. See மானிடம்.

மானுடயாகம், s. Giving alms in rice, &c. See யாகம்.

•மானுபாவன், s. [*contrac. of* மகானுபாவன்.] An illustrious person.

மான், *s.* A deer, hart. *(c.)* 2. Shape, figure, உருவம். 3. A woman, பெண். 4. Capricorn of the Zodiac, மகரவிராசி. 5. A sea-monster, as மகரமீன். 6. A generic term for beast, விலங்கின்பொது.—*Note.* Of deer are, கலைமான், கவரிமான், சருகுமான், புள்ளிமான், வெளிமான், which see.

மானுக்கொருபுள்ளியேறினுலென்ன குறைந்தாலென்ன. What if there be a spot more or less on the deer! [*prov.*]

மானிடத்தன்—மானிடமுடையோன்—மானிடமேந்தி, *appel. n.* An epithet of Siva, as holding a deer in one of his hands, சிவன்.

மானேறு, *s.* The male of a deer—as கலைமான். 2. The twelfth lunar mansion, உத்திரநாள்; [*ex* ஏறு.]

மான்களங்கம், *s.* Spots on the moon, considered as disease from a curse, and supposed to resemble those of the deer.

மான்கீரை, *s.* A plant. See கீரை.

மான்செவி, *s.* A plant, hart's-ear. See எருமைநாக்கி.

மான்செவிக்கள்ளி, *s.* A milky shrub. See கள்ளி.

மான்மதம், *s.* Musk, கஸ்தூரி. (*சது.*)

மான்றலை, *s.* The head of a deer. 2. (*சது.*) The fifth lunar mansion, as மிருகசீரிடம்; [*ex* தலை.]

•மான், *s.* The active agency of nature, பிரகிருதிதத்துவம்; [*from Sa. Mana*, an agent.] (Drew's Kural. *p.* 25.) 2. An affix to words both Sa and Tamil, implying possessor, as கல்விமான், a learned man; சிமான், an opulent man; மன்னுமான், the Everlasting One, &c.

•மான்மியம், *s.* Glory, மகிமை.

மி

மி. A syllabic compound of ம் and இ.

மிகு, கிறேன், ந்தேன், [*poet.* மிக்கேன்.] வேன், மிக, *v. n.* To exceed, to surpass, to become superior, அதிகரிக்க. 2. To remain, to be left, be to spare, be superfluous, *(c.)*

மிக, *inf.* [*also* மிகவும், *as adv. or adj. in the superlative.*] Very much, abundantly, பெருக.

மிகப்படல், *v. noun.* Increasing, abounding. அதிகரித்தல்.

மிகப்படச்சொல்லுகிறது. Saying too much.

மிகல். Becoming plentiful, increasing, மிகுதல். 2. Becoming great.

மிகன்மக்கள். The great. (*நீதிநெறி.*)

மிகவல்லோர், *s.* [*pl.*] Very powerful persons. அதிவீரர். 2. Those that are well skilled in any art, அறிவிலுயர்ந்தோர்.

மிகவும். Very much, abundantly.

மிகவுஞ்சந்தோஷப்பட்டான். He greatly rejoiced.

மிகவும்வருத்தமாயிருக்கிறது. It is very hard.

மிகவும்பயந்துபோனேன். I was very much afraid.

மிகவுந்தொந்திஷப்படுகிறான். He is suffering greatly.

மிகு, [*Aorist as an adj.*] Great.

மிகுகொடையாளன், *s.* Karna, as very liberal, கர்ன்னன். (*சது.*)

மிகுதம்—மிகுதி, *v. noun.* Much, abundance, profusion, redundance, அதிகம். 2. Excess, overplus, மீதி. 3. A crowd, திரட்சி. 3. Fulness, satiety, பூரிப்பு. 5. Increase, பொலிவு.

மிகுதியான, [*as an adj.*] Abundant.

மிகுதியானது. That which is abundant.

மிகுதியானபேர். The majority.

மிகுதியும். Greatly, exceedingly.

மிகுதியுஞ்சுருக்கிப்போட்டான.........He has greatly abridged, or curtailed.

மிகுந்த, [*rel. part. as adj.*] Much, great, &c.

மிகுந்தவாசனை. A strong, fragrant smell.

மிகுந்தகிரயம். An exorbitant price.

மிகுந்தவயசு Very old age.

மிகுந்திருத்தல், *v. noun.* Being too much, or in excess. 2. Being left, as மீந்திருத்தல்.

மிகை, *v. noun.* Abundance, superfluity, மிகுதி. 2. Sorrow, affliction, துன்பம். 3. Destruction, கேடு. 4. Trouble, வருத்தம். (*சது.*) 5. Fault, defect, error, குற்றம்.

மிகைபட, *inf.* To be blamed.

மிகைபடச்சொல்லேல். Don't speak injuriously. (*Avv.*)

மிகைபடக்கூறல், *v. noun.* Redundancy as a fault in composition. See தற்குற்றம், under குறறம்.

மிகைபோட—மிகைசொல்ல, *inf.* To charge one falsely. (*R.*)

மிக்க, [*rel. part. as adj.*] Overmuch, superior, &c. (*p.*)

தந்தைசொல்மிக்கமந்திரமில்லை. No precept is better than that of a father. (*Avv.*)

மிக்கசெயல், *s,* Extraordinary power; magnanimity. See ஊராண்மை.

மிக்கு, *v. noun.* Greatness, superiority, பெருமை. (*p.*)

மிக்குடைய. Possessing greatness. (*நீதிநெறி.*)

மிக்கது, *appel. n.* What is abundant, excessive.

மிக்கவன்—மிக்கான், *s.* A great or excellent person, உயர்ந்தோன்.

மிக்கவை, *s.* [*pl.*] Remains of food after a meal, மீந்தவை. 2. (*சது.*) Unjust proceedings, நியாயமற்றவை. 3. Increase, fulness, abundance, மிகுந்திருப்பவை. 4. Food, ஊண். 5. Boiled rice, சோறு.

மிக்கிளமை, *s.* Juvenility, மிகுந்தஇளமை.

மிக்கோர், *s.* [*pl.*] Men of knowledge, superior men, அறிஞர். (*சது.*)

மிகு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To augment, to make large, அதிகப்படுத்த. 2. To excel, surpass, surmount, உயர்த்த. 3. கிறது, த்தது, கும், க, *v. n.* To be increased, பெருக.

ஆஸ்திமிகுத்துப்போயிற்று. Riches are increased.

மிகை—மிக்க. See மிகு, *v. n.*

மிசல், *s.* [*Arab.*] Entry, தாக்கல். 2. Examination, பரிசோதனை.

மிசல்தீர்வை, *s.* The assessment fixed on a field with reference to the adjacent land. (*Govt. usage.*)

•மிசிரம், *s.* A mixture, mixing, கலப்பு.

மிசிரவர்ணம், *s.* A mixed class or tribe.

•மிசிரன்—மிசுரன், *s.* An affix to the name of certain brahmans, meaning a respectable person—as கங்கேஷ்மிசிரன். W. p. 662. MISRA.

மிசுக்கன், *s.* A vile or worthless person, ஈனன். Compare நசுக்கன். (*R.*)

மிசுக்கை, *s.* A trifle; a vile or worthless thing, அற்பமானது.

மிசை, *s.* Eminence, elevation, உயர்ச்சி. 2. A hill, மேடு. 3. Poverty, தரித்திரம். 4. Food, சோறு. 5. [*prep.*] On, upon, above, மேல். (*சது*) (*p.*)

மிசைத்திரள், *s.* The ankles, கரடு. (*சது.*)

மிசைவடம், *s.* A warrior's ankle-rings, வீரதண்டை. (*திவா.*)

மிசை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. a.* To eat, to take food, உண்ண. (*p.*)

மிசைதல், *v. noun.* Eating, உண்ணல்.

மிச்சம், *s.* Excess, surplus, overplus, remainder, that which is to spare, மீதி; [*ex* மிஞ்சு.] (*c.*)

குடிகளில்மிச்சமானபேர்கள். The majority of the inhabitants.

அவன்மிச்சமாயெடுத்துக்கொண்டான். He took too much.

மிச்சஞ்சொச்சம், *s.* Any thing left; that which can be spared.

•மிச்சரம், *s.* A mixture, as மிசிரம்.

மிச்சில், *s.* What is left, or remaining, after a meal, *commonly* எச்சில். 2. Any remainder, ஒழிபொருள்; [*ex* மிஞ்சு.] (*சது.*)

மிச்சை, *s.* Falsehood, a lie, பொய்; [*a corrupt. of* மித்தை.] 2. Ignorance, அஞ்ஞானம். 3. Poverty, தரித்திரம்; [*from Sa. Michcha*, to cause distress.]

மிஞிறு, *s.* [*poet. change of* ஞிமிறு.] A chafer, வண்டு. (*சது.*)

மிஞ்சி, *s.* A ring worn on the second toe of each foot.—*Note.* It is put on the feet of a bridegroom, as a marriage ceremony by the parents of the bride.

மிஞ்சு, கிறேன், மிஞ்சினேன், வேன், மிஞ்ச, *v. n.* To exceed, abound, surpass, to increase too much, மிக. 2. [*fig.*] To become proud, be elevated, பெருமைகொள்ள.

சாப்பாடுமிஞ்சிப்போனது. There was an excess of food.

காரியம்மிஞ்சிப்போயிற்று. The matter has been already settled

அவன்மிஞ்சிப்பேசலாமா. Can he speak haughtily?

அவன்மிஞ்சிமிஞ்சிவருகிறான். He is coming on furiously.

மிஞ்ச, *inf.* [*used adv.*] Excessively.
மிஞ்சவொட்டாமற்செய்வான். He will allow none to act extravagantly.
ஒருவனைமிஞ்சவொட்டாமல்நடப்பிக்கிறது...... Keeping one from exceeding due bounds.
மிஞ்சியிருக்க, *inf.* To be over and above. 2. To be arrogant.
மிஞ்சினது, *appel. n.* The remainder, any thing left as a surplus.
மிஞ்சினதகொலைமேற்கேபோகலாகாது. It is not good to take a surplus and go westward. [*prov.*]
மிஞ்சினவன், *appel. n.* A froward, unmanageable man.

மிடல், *s.* Strength, power, might, வலி; [*from Sa. Misha,* to vie.] (சது.)

மிடறு, *s.* [*gen.* மிடற்றின்.] Throat, தொண்டை. 2. Neck, கழுத்து. 3. The lower jaw, கீழ்வாய். 4. [*improp.* மிணறு.] Draught, quantity of liquid taken at once. (*c.*)
ஒருமிடறுதண்ணீர்சாப்பிட்டேன். I took a draught of water.

மிடா, *s.* A large earthen vessel, தடா. 2. A corn-measure containing sixteen வள்ளம், or marcal; *used in Mysore.* (*Beschi.*)

மிடி, *s.* Poverty, want, தரித்திரம். (சது.)
மிடிபடுதல், *v. noun.* Suffering poverty, being pained by want.

மிடி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To be poor, to be in want, to be destitute, வறுமையுற. (சது.)

மிடிமை, *s.* Poverty, வறுமை. (*p.*)
மிடியன், *s.* A poor man, தரித்திரன்.

மிடுக்கு, *s.* [*also* முடுக்கு.] Strength, stiffness, வலி. 2. Pride, மேட்டிமை.
மிடுக்கன், *s.* A strong, stout, valiant man, வலியுடையோன். 2. [*prov.*] Coarseness, பருக்கன்

மிடை, *s.* A bush, small shrub, தூறு. (சது.)

மிடை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* To be close, thick, crowded, pressed, நெருங்க. (*p.*)
மிடைதூறு. A thick group of shrubs or bushes.
மிடைபேய். Crowds of vampires.

மிட்டா, *s.* [*Hind.*] An estate, a possession, ஸ்திதிமதி. 2 A small sub-division of a Taluk, *a Mittah,* தக்கடி.
மிட்டாதார், *s.* The proprietor of a *Mittah.*

•மிட்டாயி, *s.* Sweet-meats, confectionery, பலகாரம். [*Hind. usage.*] W. p. 662. MISHT'A. (*c.*)
மிட்டாயிக்கடை, *s.* A bazaar for confectionery.
மிட்டாயிக்காரன், *s.* A confectioner.

மிணறு, *s.* [*improp. for* மிடறு.] A draught of water, ஒருமிடறுதண்ணீர்.

•மிணுமிணுக்க — மிணுமிணென, *inf.* [*also* முணுமுணுக்க, முனுமுனுக்க.] To mumble, speak with a low reiterated sound. [*corrupt. of Sa. Manmana.* W. p. 643.]
மிணுமிணுத்தல்-மிணுமிணுப்பு, *v. noun.* Mumbling.

மிண்டி, *s.* [*prov.com.* கெம்புதடி, உலுக்குமரம்.] A lever.

மிண்டு, *s.* A wilful fault, a crime, மதத்தாற்செய்பிழை. (சது.) 2. [*prov.*] A prop, a support, as முட்டு.
மிண்டன், *s.* A strong man, as கண்டன்.

மிண்டு, கிறேன், மிண்டினேன், வேன், மிண்ட, *v. n.* To be thronged, நெருங்க 2. *v. a.* [*vul* முண்டு.] To give a push, to force forward; to lift, தள்ள. (*c.*)
நீஎன்னிடத்திலாமிண்டப்பார்க்கிறாய். Will you attempt to contend with me?
மிண்டல்-மிண்டுதல், *v. noun.* Thronging. (சது.) 2. Pushing.

மித, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, *v. n.* To float, to swim on the surface of water, &c. 2. To rise high in the sky, மேலெழும்ப. 3. To be heaped, as corn in a measure, மட்டுமிஞ்ச. 4. (*fig.*) To rise in office, dignity, or wealth, மேலாக. 5. To assume a character above the reality, வெறும்பெருமைபண்ண. (*c*)
மிதப்பு, *v. noun.* Floating. 2. A float. See தூண்டில்.
தம்பிக்குக்கொஞ்சம்மிதப்பாயிருக்கிறது. He is somewhat sulky.

•மிதம், *s.* Abstinence, moderation, as மட்டு. W. p. 661. MITA. (*c.*)
மிதமாய்ச்சாப்பிடவேண்டும். You must be abstemious in food.
மிதமிஞ்சிப்பேசாதே. Be not assuming when you talk.
மிதசுரம், *s.* Middle accent, as மத்திமசுரம்.

மிதலை, *s.* Navel, கொப்பூழ். (சது.)

மிதவை, *s.* A raft of boards, as தெப்பம்; [*ex* மித, ஐ] 2 Boiled rice, சோறு; [*from Sa. Mid,* to be soft.] (சது.)

மிதி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To tread down, trample on, காலான்மிதிக்க; [*from Sa. Mruda, Mrada.*] (*c*) 2. *v. n.* To jump, குதிக்க.
மிதி, *v. noun.* Treading, மிதித்தல். 2. A tread. 3. The treadle of a weaver's loom, நெய்வார்கருவியினொன்று. 4. As மிதிமரம்.
மிதிகல், *s.* A step-stone by a well.
மிதிபலகை, *s.* A foot-stool.
மிதிபாகல், *s.* A creeping plant, Momordica muricata; *opposite to* கொம்புப்பாகல்
மிதிமரம், *s.* A step-board near a tank or well. 2. The treadle of a loom.
மிதியடி, *s.* Common shoes. 2. Wooden slippers, பாதகுறடு.
மிதியடிக்கட்டை. A worthless sandal, *spoken contemptuously.*
மிதியிட, *inf.* To make a track or impression by the foot, காலாற்குறிசெய்ய. 2. To tread under foot, மிதிக்க.
மிதிமிட்டகளிமண். Trodden clay.
நோவுக்குமிதியிடுகிறது. To mollify contracted or diseased limbs by rubbing them with oil. (*R.*)

•மிதிலை, *s.* [*com.* மிதுலை.] A city in the province of Behar, to the Northwest of Bengal, சனகாகர். 2. The country itself. See விதேகை. W. p. 66' MIT'HILA
மிதிலைநகரம், *s.* As மிதிலை, 1.

மிதுக்கை, *s.* A small kind of cucumber-creeper.
மிதுக்கங்காய், *s.* The unripe fruits of the above, used in curry
மிதுக்கங்காய்வற்றல்—மிதுக்கம்வற்றல், *s.* The dried unripe fruits of மிதுக்கை, used for food after parching.

•மிதுனம், *s.* A couple, a pair, as much again, இரட்டை. 2. Union, copulation, புணர்ச்சி. 3. Gemini of the Zodiac, மிதுனவிராசி. W. p. 661. MIT'HUNA. 4. A species of bird, ஓர்புள்.
மிதுனவிராசி, *s.* Gemini.
மிதுனவீதி, *s.* An astronomical tri-section of the Zodiac, named the Gemini course. See சூரியவீதி.

•மித்தியம்—மித்தியை, *s.* Lie, falsehood, பொய். W. p. 661. MIT'HYA.
மித்தியாவாசகம், *s.* Falsehood, a false story, பொய்மொழி.
மித்தியாவாதி, *s.* A liar, பொய்யன்.
மித்தியோத்தரம், *s.* A false reply; [*ex* உத்தரம்.]
மித்தியொபசாரம், *s.* Pretended friendly services; [*ex* உபசாரம்.]

•மித்திரம், *s.* Friendship, affection, நட்பு. W. p. 661. MITRA. 2. [*com. for* மித்தியம்.] Lying, prevarication; malicious tale-bearing, புரசி, கோள்.
மித்திரக்காரன், *s.* [*vul.*] A false or unjust accuser, கோட்காரன்.
மித்திரதுரோகி—மித்துருதுரோகி, *s.* One who betrays his friends, a traitor, சினேகத்தரோகி.
மித்திரத்துருகன், *s.* A pretending friend, a traitor, one who pretends to be a friend, வஞ்சகசினேகன். (*Sa. Mitradruha.*)
மித்திரநாள், *s.* The seventeenth lunar mansion. See அனுடநாள். (சது.)
மித்திரபேதம்—மித்துருபேதம், *s.* Sowing discord among friends. See பஞ்சதந்திரம்.
மித்திரன், *s.* A friend, an ally, adherent. [*pl.* மித்திரர்.] 2. Sun, சூரியன். (சது.)
மித்திரை, *s.* A female companion, தோழி.

•மித்துரு *s.* A friend — *oppos. to* சத்துரு, சினேகன். W. p. 661. MITRAYU.—For the compounds, see மித்திரம்.

•மித்தை, *s.* [*as* மித்தியம்.] Falsehood, illusion, appearance, பொய். (சது.)

மியா, [*an interjectional affix.*] Hearken, attend, as கேண்மியா, hear thou; சென்மியா, go thou, முன்னிலையசைச்சொல். (*p.*)

மியூலசிவி, *s.* A plant, Sow thistle-leaved Cacalea, Cacalea sonchifolia, ஓர்பூடு.

மிரட்டு, கிறேன், மிரட்டினேன், வேன், மிரட்ட, *v. a.* [*improp. for* மருட்டு, வெருட்டு] To frighten, பயமுறுத்த. 2. To infatuate, மயக்க. (*c*)

மிரதம், *s.* Snake, serpent, பாம்பு. (சது.)

மிரளு, கிறேன், மிரண்டேன், வேன், மிரள, *v. n.* [*improp. for* மருளு.] To fear, be confused, or put in mental agitation. (*c.*)

மிராசி—மிராசு, *s.* [*Arab.*] Landlordship, heritage, patrimony, right to official emoluments, உரிமை.
மிராசுதாரன்—மிராஸ்தாரன்-மிராசுதார், *s.* One who holds land or office under the above tenure.
குடிகளுடையமிராசி. Right of the inhabitants.

மிரிகை, *s.* A tuning key for the cords of a lute, as பிருடை.

மிரியல், *s.* Pepper, மிளகு. (சது.) Compare மரிசம். (*Tel. usage.*)

*மிருகண்டன் — மிருகண்டு-மிருகண்டகன், *s.* The name of a muni. W. p. 669. MRUKAN'DAKA, MRUKAN'DU.

*மிருகம், *s.* A deer, an antelope, மான். 2. An animal in general, விலங்கின்பொது. 3. A beast, a brute. W. p. 669. MRUGA. 4. A pig, a hog, பன்றி.

மிருகக்ஷீரம்—மிருகக்ஷீரம், *s.* The milk of a doe, மான்பால்; [*ex* க்ஷீரம், க்ஷீரம்.]

மிருககுணம்-மிருகத்தனம், *s.* A brutish disposition, beastliness.

மிருகசஞ்சாரம், *s.* A place frequented and infested by beasts. 2. Bestiality; beastliness in sexual intercourse; gross indecency, காணமில்லாப்புணர்ச்சி.

மிருகசண்டாளம், *s.* Extreme atrocity; gross sinfulness. See சண்டாளம்.

மிருகசாதி, *s.* The brute creation. 2. Brutish tribe of people.

மிருகசாலிகை, *s.* A net or snare by which deers are entrapped, மான்வலை.

மிருகசிரம், *s.* A mode of using the hands in dancing. See காலட்சணம்.

மிருகசீரிடம் — மிருகசீரிஷம், *s.* [*also* மார்கழி.] The fifth lunar mansion containing three stars in Orion, and figured by an antelope's head, whence its name, ஓர்நட்சத்திரம்; [*ex* சிரஷம், சிரஸ், the head.]

மிருகசீவனன்—மிருகத்திபு, *s.* A fowler, hunter, வேட்டைக்காரன்.

மிருகசைடகம், *s.* A pole-cat, wild cat, ஆண்பூனை. (*Sa. Mrugachaidaka.*)

மிருகதஞ்சகன், *s.* A dog, நாய்; [*ex Sa. Damsaka*, who bites.]

மிருகதந்தம், *s.* Horns, or teeth of hogs, பன்றிமருப்பு.

மிருகதரன், *s.* Moon, சந்திரன்; [*ex* தரம்.] See மான்களங்கம்.

மிருகதூர்த்தகன், *s.* Fox, நரி; [*ex* தூர்த்தகன், a cheat.]

மிருகநாபி, *s.* Musk-bag, கஸ்தூரி. 2. The musk-deer [cat], கஸ்தூரிப்பூனை; [*ex* நாபி, the navel, *the musk being formed in a bag near the navel.*]

மிருகநாபிசம், *s.* Musk, கஸ்தூரி; [*ex* சம், produced.]

மிருகபதி—மிருகேந்திரன், *s.* A lion, சிங்கம்; [*ex* பதி, இந்திரன், lord.] (சது.)

மிருகபந்தினி, *s.* Nets to ensnare musk-deers, மான்வலை; [*ex* பந்தனம்.]

மிருகபயம், *s.* Fear or danger of wild beasts.

மிருகபாலிகை, *s.* Musk-cat, கஸ்தூரிப்பூனை; [*ex* பாலி, to preserve.]

மிருகமதம், *s.* Musk, கஸ்தூரி; [*ex* மதம், *the secretion being considered analogous to that from the temples of elephants in rut.*] (சது.)

மிருகராசன், *s.* A lion, சிங்கம். (சது.) 2. A species of tiger, வேங்கைப்புலி.

மிருகவாகனன், *s.* God of the wind, the wind, வாயு.

மிருகவ்வியம், *s.* Hunting, fowling, வேட்டை.

மிருகாங்கம், *s.* Wind, காற்று. 2. Moon, சந்திரன்; [*ex* அங்கம்.]

மிருகாங்கன், *s.* The moon, சந்திரன். 2. Siva, as holding a deer, சிவன். (சது.)

மிருகாண்டி, *s.* [*in combin. com.* மிராண்டி, *vul.* முரண்டி.] As காட்மிருகாண்டி.

மிருகாதனம், *s.* A lion, சிங்கம். 2. A hyæna, புலி. 3. A leopard, சிவிங்கி; [*ex Sa. Adana*, eating.]

மிருகாதி, *s.* A tiger, புலி. (*Sa. Mrugad.*)

மிருகாயினம், *s.* The skin of a deer, மான்தோல்.

மிருகாரசிங்கி, *s.* A kind of arsenic, ஓர்பாஷாணம்.

மிருகாரி, *s.* A lion, சிங்கம். 2. A tiger, புலி. 3. A dog, a hound, நாய்; [*ex* அரி, enemy.]

*மிருசம், *s.* Sight, perception by the eye, காட்சி; [*from Sa. Mrusa*, to see.]

*மிருடங்கணம், *s.* Child, பிள்ளை. W. p. 670. MRUD'ANKAN'A.

*மிருடன், *s.* A name of Siva as delighted, சிவன். W. p. 670. MRUD'A.

*மிருடாலகம் — மிருஷாலகம், *s.* Mango-tree, மாமரம். W. p. 672. MRUSHALAKA.

*மிருடோத்தயம், *s.* Lie, falsehood, பொய். W. p. 672. MRUSHOD'HYA.

*மிருதகம், *s.* A dead body, a corpse, பிரேதம். W. p. 670. MRUTAKA.

*மிருதங்கம், *s.* Drums, tabours, &c., முழவு. See சலஞானம். W. p. 671. MRUDANGA.

*மிருதம், *s.* A corpse, as மிருதகம். 2. Death, மரணம். W. p. 670. MRUTA. 3. (சது.) Battle, fight, போர்.

மிருதசஞ்சீவி — மிருதசஞ்சீவனி, *s.* A medicament said to restore the dead to life, as சஞ்சீவி.

மிருதபாஷாணம், *s.* A kind of prepared arsenic, ஓர்பாஷாணம்.

*மிருதாண்டன், *s.* The sun, சூரியன். W. p. 670. MRUTAN'DA.

*மிருதாராசிங்கி, *s.* A kind of poison prepared from lead, ஓர்வகைப்பாஷாணம். See சிங்கி.

*மிருதி, *s.* A law-book, as ஸ்மிர்தி, தருமநூல். 2. Death, as மிருதம், மரணம். (சது.)

*மிருது — மிருதுவு, *s.* [*com.* மெது, மெதுவு.] Softness, மென்மை. 2. Gentleness, mildness, leniency, சாந்தம். W. p. 671. MRUDU.

மிருதுநட்சத்திரம், *s.* [*also* இலகுநட்சத்திரம்.] A small star, giving a feeble light.

மிருதுபாடிதம்—மிருதுபாஷிதம், *s.* Soft mild conversation, affable language, மென்மொழி.

மிருதுவாதம், *s.* The soft, gentle, and refreshing south wind, சிறுதென்றல்.

மிருதூற்பலம், *s.* A blue water-lily, as நீலோற்பலம்; [*ex* உற்பலம்.]

*மிருதுன்னகம், *s.* Gold, பொன். W. p. 671. MRUDUNNAKA.

*மிருதை, *s.* Earth, பூமி. W. p. 671. MRUDA.

*மிருந்தஞ்சயன் — மிருத்தியுஞ்சயன், *s.* An epithet of Siva, as one conquering death, சிவன்; [*ex* மிருத்தியு *et* சய.]

*மிருத்திகை, *s.* Earth, soil, clay, sand, மண். W. p. 671. MRUTTIKA.

*மிருத்தியு, *s.* Death, an end of all things, மரணம். 2. Yama, இயமன். W. p. 671. MRUTYU.

*மிருத்து, *s.* Earth, பூமி. See அவமிருத்து and காலமிருத்து. W. p. 671. MRUD. 2. Death, as மிருத்தியு, மரணம்.

மிருத்துசாந்தி, *s.* A ceremony in time of sickness to appease the god of death.

மிருத்துசூதகம், *s.* Impurity from death in a house, மரணசூதகம்.

மிருத்துஞ்சயன்—மிருத்துவஞ்சனன், *s.* Siva, as மிருத்தஞ்சயன.

மிருத்துபஞ்சகம் — மிருத்துபயம், *s.* Liability to death, by contracting marriage at a certain hour, ascertained from astrological calculations, மரணபயம்.

*மிருநாளம், *s.* The stalk of a lotus, and its fibres, தாமரைக்கொடி. W. p. 670. MRUN'ALA.

மிலாந்து, கிறேன், மிலாந்தினேன், வேன், மிலாந்த, *v. n.* [*prov.*] To gaze, stare, look about—as persons looking for game; to look wild, or ghastly, as dying people, சற இறந்தப்பார்க்க. Compare எமிலாந்த.

மிலாந்தி, *appel. n.* One who stares or gazes.

மிலாரடி, *s.* The state of one in perturbation, a dilemma, மயக்கம். 2. Unfeelingness, stupor, stupefaction, as உன்மத்தம்.

மிலாறு, *s.* [*also* மலாறு, *prop.* விளார்.] Twigs, reed, tender, fibrous sticks; a switch. (*c.*)

மிலாற்றாலேமழுக்கிவிட்டான். He flogged him smartly with a switch.

*மிலேச்சம், *s.* A country to the North of the Saraswati river in the neighborhood of Delhi, சரச்சுவதியாற்றின்வடதேசம். (சது.)

மிலேச்சசாதிகள், *s.* Barbarous nations, foreigners. The tribes enumerated under this head by *Menu*, appear to be principally the inhabitants of the countries bordering on India, north and south; especially those adjacent to Bengal and Behar, and on the Southern part of the Coromandel coast, which are severally called *Paundrakas, O'dras (Uriyas)*, and Draviras; also the Cambojas; Yavanas (Greeks or Bactrians); Sakas; Paravas; Pahlavas (ancient Persians); Chinese; Kiratas, generally mountaineers; Deradas (Daradæ) and K'hasas (Scuthi). W. p. 677.—*Note* The term is now applied, more especially, to Europeans, and those from any remote country.

மிலேச்சதேசம்—மிலேச்சமண்டலம், *s.* A foreign country, a country on the borders of India.—According to Wils. any country where the black antelope is not found.

மிலேச்சத்தனம், *s.* Clownishness, barbarism.

மிலேச்சன், *s.* [*fem.* மிலேச்சி, மிலேச்சஸ்திரீ.] A barbarian, one of a foreign tribe, of a foreign religion, customs, &c., சண்டாளன்.—According to Wils. one speaking any language but Sanskrit, and not subject to the usual Hindu institutions. 2. A weak man, simpleton, dunce, dolt, பேதையன். 3. A clown, clodhopper, மடையன்.

மிலே, கிறேன், ந்தேன், வேன், ய, v. a. To put on, to dress, அணிய. 2. To put on flowers, சூட. (p.)

மிலேச்சு, கிறேன், மிலேச்சினேன், வேன், மிலேச்ச, v. a. To put on, அணிய. (p.)

மிலேச்சல்-மிலேச்சுதல்-மிலேதல், v. noun. Wearing, adorning, அணிதல். (சது.)

மிழலே, s. Prattling, lisping, &c., as மழலே. (சது.)

மிழற்று, கிறேன், மிழற்றினேன், வேன், மிழற்ற, v. a. To speak softly, to prattle as a child, மென்மையாய்ச்சொல்ல; [from Sa. Mlaksha, to speak incorrectly] (p.)

மிழற்றல், v. noun. Defective speech, திரம்பாமென்சொல். 2. Speaking, சொல்லல். 3. Inarticulate sound in speech, பேசலா லெழுமொலி. (சது.)

மிழி—முழி, s. [vul.] The eye-ball, கருவிழி; [from Sa. Mila, to wink.] Compare விழி.

மிழுங்கு, v. [vul. for விழுங்கு, which see.] To swallow, devour, eat up.

மிளகாய், s. [vul. முளகாய்.] Red pepper, chilly, goat-pepper-plant, Capsicum frutescens, ஓர்செடி. (c.)

மிளகாய்ச்சக்களத்தி, s. A kind of plant, ஓர்செடி, Vinca pusilla.

மிளகாய்ப்புள், s. A kind of gull, ஓர் குருவி.

மிளகு, s. Pepper, Piper nigrum, L.

மிளகரணே, s. A plant, Prickly toddalia, Scopolia aculeata.

மிளகாணம், s. [prov.] Pepper-broth of a thick consistence.

மிளகுசம்பா, s. A kind of rice. See சம்பா.

மிளகுசாறு — மிளகுதண்ணீர் — மிளகு நீர்—மிளகுரசம், s. [politely ரசம்.] Pepper-broth, pungent soup.

மிளகுதக்காளி, s. A plant whose fruits resemble the pepper—as மணித்தக்காளி.

மிளகுதிரி, s. A kind of small-pox. See உதிரி.

மிளகுதூள், s. Powdered pepper.

வால்மிளகு, s. A plant. See வால்.

மிளிர், s. Greatness, பெருமை. 2. Light, splendor, ஒளி. (சது.)

மிளிர், கிறேன், ந்தேன், வேன், மிளிர, v. n. To be great, பெருமையடைய. 2. To shine, ஒளிசெய்ய. (p.)

மிளிர்தல், v. noun. Shining, ஒளிசெய்தல். (சது.)

மிளிறு, s. A bear, கரடி. (சது.)

மிறல், s. Greatness, பெருமை. (சது.)

*மிறுகம், s. [improp.] A beast, as மிருகம்.

மிறை, s. Fear, அச்சம். 2. Fault, குற்றம். (சது.) 3. Trouble, perplexity. (p.)

மிறைக்கவி, s. A curiously constructed poem, as சித்திரகவி.

மிறை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To suffer, be afflicted, துன்பப்பட. 2. v. a. To inflict suffering, துன்பஞ்செய்ய. (p.)

மிறைத்தல், v. noun. Being afflicted or troubled, துன்பப்படல். (சது.)

மினக்கெடு, கிறேன், மினக்கெட்டேன், வேன், மினக்கெட, v. n. [improp.] To be interrupted from work by useless talk, &c., தடைபட. (c.)

மினக்கேடு, v. noun. [Beschi மினேக்கேடு, com. for வினைக்கேடு.] Uselessness of an action or a business; time lost by interruption of a work; labor expended to no purpose, வியர்த்தம்.

மினவு, கிறேன், மினவினேன், வேன், மினவ, v. a. [com. for வினவு.] To salute, congratulate, உபசரிக்க. (Beschi.)

மினவுதல், v. noun. Salutation.

மினுஹா, s. [Hind.] Deduction, கழிவு.

மினுன், s. A village accountant, கணக்கன். (Malabar usage.)

மினுக்கம்—மினுக்கு, s. Polish, splendor, ஒளி. 2. [fig.] Vainness, worthlessness, a thing of unreal excellency, பகட்டு.

மினுக்குப்பசை, s. A kind of varnish used by weavers, நெய்வாரிடும்பசையிலொன்று.

மினுக்குமினுக்கென, inf. To glimmer, coruscate, as fire-flies, &c., மினுமினுக்க.

மினுக்கெண்ணெய், s. A kind of oil to make one's body shine. 2. A varnish.

மினுக்கு, கிறேன், மினுக்கினேன், வேன், மினுக்க, v. a. To polish, gloss, brighten, adorn, விளக்க. See துலக்கு.

விலேமகட்கழகுதன்மேனிமினுக்குதல். The prostitute's adornment is of her body.

மினுக்கிக்கொள்ள, inf. To make one's self gay.

மினுங்கு, கிறது, மினுங்கினது,ம்,மினுங்க, v. n. To be polished, to brighten, glitter, shine, பிரகாசிக்க.

மினுமினுக்க, inf. [ex noun மினுமினுப்பு.] To glimmer, glitter, dazzle, இலங்க.

மின், s. Coruscation, lightning, glitter, மின்னல். 2. Flash, brightness, ஒளி. 3. A young woman, பெண்மகள். (சது.) 4. [vul. for முன்.] Before.

மின்னுக்கெல்லாம்பின்னுக்குமழை. Rain follows lightning. (Avv.)

மின்சாரம், s. Electricity.

மின்சாரக்கம்பி, s. An electric wire.

மின்சாரயந்திரம், s. An electric machine.

மின்மினி — மின்மினிப்பூச்சி, s. [vul. மின்னிட்டாம்பூச்சி, மின்னும்பூச்சி.] A fire-fly, glow-worm.

மின்மினிப்பிரகாசம், s. The shining of a glow-worm.

கிறிஸ்துவின் பிரசங்கத்தின்முன்னே மற்றைமதஸ்தர்களின்பிரசங்கஞ்சூரியப்பிரகாசத்தின்முன்மின்மினிப்பிரகாசம்போலிருக்கிறது. In view of the discourses of Christ, those of other religious teachers, are like the glow-worm in the light of the radiant sun.

மின்னூர், s. [pl.] Women, females, பெண்கள். (p.)

மின்னுள், s. A handsome woman. (p.)

மின்னெறி, s. The mark of lightning, as running in straight or curved lines, மின்னலின்மார்க்கம்; [ex நெறி.]

மின், மின்னுகிறது, மின்னினது, மின்னும், மின்ன, v. n. To lighten, flash, coruscate, glitter, ஒளிசெய்ய. (c.)

மின்னுகிறதெல்லாம்பொன்னுமல்ல. All is not gold that glitters.

மின்னுமலிடிவிடித்தது. It fell as a thunderbolt without flashing—spoken of false charges published on a sudden.

மின்னிமின்னியிடிக்க, inf. To thunder with incessant lightning.

மின்னியார்க்க, inf. To lighten and thunder. (p.)

மின்னல், s. Lightning, மின். (c.) 2. (Beschi) A new and bright coin.

மின்னல்மின்னுகிறது. It lightens.

மின்னற்கொடி, s. A flash of lightning.

மின்னி — மின்னிப்பயறு, s. A leguminous plant, ஓர்பயறு.

மீ

மீ, s. A syllabic letter compounded of ம் and ஈ.

மீ. [as a prefix.] Upon, above, on, over, up, மேல். 2. s. The top, the surface, மேற்புறம். 3. Height, elevation, eminence, loftiness, உயர்ச்சி. 4. Illustriousness, glory, renown, மகிமை. 5. The sky, the heaven, வானம். (p.)

மீகண். Above or over the eye, கண்ணினமேல். (p.)

மீக்கூர்தல், v. noun. An increasing, பெருகல். (சது.)

மீக்கூற, inf. [v. noun மீக்கூற்று.] To celebrate, புகழ. 2. To praise, மெய்ச்ச.

மீக்கூறுவோர், appel. n. [pl.] Panegyrists, eulogists, புகழ்வோர்.

மீக்கூற்று. Praise, புகழ். (சது.)

மீக்கோள், s. Ascent; upholding; presumption, ஏறுதல். 2. An upper garment, மேற்போர்வை. (சது.)

மீச்செலவு, v. noun. Forward behavior, presumption, கருவம். (நீதிநெறி.)

மீத்தோல்-மீந்தோல், s. [com. பீத்தோல், பீசுதோல்.] The cuticle.

மீகாமன்—மீகான், s. [also நீகாமன்.] A pilot, steersman, helmsman, the captain of a vessel, மாலுமி. (நா.)

மீகாமனில்லாமரக்கலமோடாது. The ship sails not without a master. (Avv.)

மீக்குவம், s. A tree, மருதமரம், Terminalia. (சது.)

*மீசரம்-மீசுரம், s. [Tel.] That which is superior or preferable, மேலானது. 2. Plenty, as மீசு. 3. [prov.] Speed, விரைவு.

நீஎனக்கென்னமீசரம். In what are you superior to me?

இதநத்தானியம்மீசுரமாயிருக்கின்றது. The grain is of a superior quality.

தானியமீசுரமாய்க்கிடக்கிறது. Corn is plenty.

மீசு, s. Abundance, plenty, copiousness, மிகுதி.

மீசுபொலி, s. [*prov.*] The corn first taken at the threshing floor for religious purposes.

மீசை, s. [*in the south*, வீசை, *also Tel.*] Mustachios; [*ex* மீ, over.]

மீசையைமுறுக்குதல், *v. noun.* Twisting the mustachios in anger, or defiance, before fighting.

கூழுக்குமாசைமீசைக்குமாசை. Desire mustachios and desire gruel, i. e. seek health and wealth.

புரட்டிப்புரட்டியுதைத்தாலும் மீசையிலேமண்படவில்லையென்கிருன். Though he was rolled down and kicked, yet he says that his mustachios did not touch the ground.

மீட்க, *inf.* To redeem, &c. See மீள், *v. a.*

மீட்டு, கிறேன், மீட்டினேன், வேன், மீட்ட, *v. n.* To fillip, to snap a finger from the end of the thumb, விரலைநெடிக்க. (*Tel. usage.*) 2. To strike the strings of the lute, வீணைவாசிக்க. (*c.*) 3. To extend the string of a bow, நாணேற்றிப்பிடிக்க.

மீட்டிப்பார்க்க, *inf.* To try the strings of a lute.

மீட்டல், *v. noun.* Thrumming, வீணைவாசித்தல். (சது.) 2. See மீள், *v. a.*

மீட்பர், s. A saviour.--*For this and similar compounds, see* மீள், *v. a.*

மீதி, s. [*contrac. of* மிகுதி.] Remains; that which is left, மிகுந்தது. (*c.*)

மீதியைக்கொண்டுவா. Bring what remains.

மீது. [*prep.*] On, upon, மேல். 2. Above, over, அதிகம். 3. *s.* The top, the surface, மேற்புறம் (*p.*)

என்மீதிரங்கியருளும். Have mercy on me.

மீதுண்விரும்பேல். Be not gluttonous. (*Avv.*)

மீதுரை, s. Repetition, tautology, பலகால்விளம்பல்; [*ex* உரை.] (சது.)

மீதிலே—மீதே. On, above, as மீது.

·மீதூரு—மீதூர், கிறேன், மீதூர்ந்தேன், மீதூருவேன், மீதூர, *v. n.* To be pressed, thronged, to be narrow, நெருங்க. (*p.*)

மீதூர்தல், *v. noun.* Being pressed, compressed, thronged. (சது.)

மீந்திருக்க, *inf.* [*contrac. of* மிகுந்திருக்க.] To be superfluous, to remain or be left, மிஞ்சியிருக்க.

நானொத்திரமீந்திருக்கிறேன். I only am left.

தின்றுமீந்ததைநாய்க்குப்போடு. Throw to the dog what is left after eating.

*மீமாஞ்சை, s. One of the six religious systems. See சமயம். 2. A philosophical system including the பூர்வமீமாஞ்சை, and உத்தரமீமாஞ்சை. See சாஸ்திரம். W. p. 662. Meemamsa.

மீமிசை, *prep.* Above, over, மேல். (சது.) 2. *s.* Pleonasm or the use of redundant words, ஒருபொருட்பன்மொழி. (*p.*)

மீமிசைச்சொல், s. A figure in Rhetoric —redundance of words, as இடைநடு, the middle; நாகிளங்கமுகு, a young areca; புனிற்றிளங்கன்று, a young calf.

மீரு—மீர், *v.* To remain, as மீறு. (*R.*)

மீருசாதகம், s. (*Hind.*) Equivocation.

மீளி, s. A king, அரசன். 2. A strong man, திண்ணியன். 3. A chief of a barren country, பாலைநிலத்தலைவன். 4. Great men, worthies, மேன்மக்கள். 5. Greatness, பெருமை. (சது.) 6. Strength, வலி. (*p.*)

மீளிமை, s. Valor, a heroic appearance; vaunting, வீரத்தன்மை.

மீளு—மீள், கிறேன், மீண்டேன, வேன், மீள, *v. n.* To turn, take a turn, திரும்ப. 2. To be cured, rescued, redeemed, liberated, இரட்சிக்கப்பட. (*c.*)

பாம்புகடித்ததமீளுகிறது. The bite of the snake is cured.

வியாதிமீளாது. The disease is incurable.

மீளாநரகத்திற்காளாவாய். May you go to an interminable hell; [*a curse.*]

மீண்டுவர, *inf.* To return safely.

போனால்மீண்டுவரமாட்டாய். If you go (there) you will not return in safety.

மீள—மீளவும்—மீண்டும், *adv.* Again, furthermore, மறுபடியும்.

மீளாக்கதி—மீளாமோட்சம், s. Eternal bliss, as distinguished from மீளாநரகம்.

மீட்சி—மீளல், *v. noun.* A turn, திரும்புகை. (சது.)

நரகத்திலேமீட்சியில்லை. No change in hell.

மீள், மீட்கிறேன், மீட்டேன், மீட்பேன், மீட்க, *v. a.* To liberate, extricate, release, சிறைமீட்க. 2. To ransom, redeem, bring back, restore, rescue, இரட்சிக்க. 3. To chew the cud, இரைமீட்க. 4. To bring back, திருப்ப.

நான்நகையைமீட்டுக்கொண்டேன். I have redeemed the mortgaged jewels.

மீட்டும், [*as* மீண்டும்.] Again, furthermore.

மீட்டெடுக்க, *inf.* To redeem, to rescue, to save.

மீட்டல் — மீட்பு, *v. noun.* Releasing, redeeming, saving.

மீட்பர், s. Saviour, redeemer, liberator, restorer, இரட்சகர்.

மீள்விக்க, *inf.* To cause one to be redeemed, preserved, &c.

மீறு, கிறேன், மீறினேன், வேன், மீற, *v. a.* [*sometimes* வீறு.] To break a law; to violate or infringe a right, கடக்க. 2. To go beyond, exceed, அதிகரிக்க. (*c.*) 3. *v. n.* [*southern usage.*] To be over and above, to remain, மீந்திருக்க.

நீஎன்கட்டளையைமீறிப்போனாய். You went against my order.

மீறினதுபத்துப்பணம். Ten fanams remain. (*Beschi.*)

அத்துமீறுதல், *v. noun.* Passing beyond bounds.

மீறித்திரிய — மீறிநடக்க, *inf.* To act disorderly.

மீறிப்போக, *inf.* To grow lofty as a tree. 2. [*fig.*] To become haughty.

ஆள்மீறிப்போய்விட்டான். He has grown stout.

*மீனம், s. A fish, மீன். 2. One of the signs of the Zodiac, Pisces, ஓரிராசி. W. p. 662. Meena. (*p.*)

மீனக்கொடியோன் — மீனகேதனன், s. Kama, மன்மதன். 2. An epithet of the Pandyan kings, from their having a fish-banner, பாண்டியன். (சது.)

மீனச்சனி, s. Saturn in the Pisces. See சனி.

மீனமாதம், s. The month of March, பங்குனி.

மீனராசி—மீனவிராசி, s. As மீனம், 1.

மீனாட்சி—மீனாக்ஷி, s. [*lit. fish-eyed.*] A daughter of Kuvêra, குபேரன்மகள். (*Sa. Meenakshee.*) 2. Name of the tutelary goddess at Madura, as அங்கயற்கண்ணி. 3. A Hindu proper name, பெயர்.

மீனும்பூச்சி, s. [*prov.*] A glow-worm, a fire-fly, மின்மினிப்பூச்சி.

மீன், s. A star, உடு. 2. The fourteenth lunar mansion, சித்திரைநாள்; [*ex* மின், *v.*] (சது.)

மீன்முளைத்திருக்கிறது. Stars appear [in the sky]. *Vulgar usage.*

மதியைமீன்சூழ்ந்ததுபோல. As the stars surround the moon.

மீனிலா, s. Star-light. (*R.*)

மீன்சுவை, s. As மீன், 2. (சது.)

*மீன், s. [*a contrac. of* மீனம்.] A fish, மச்சம், *commonly* மீனு. [*fig.* சலபுட்பம், சலவாழைக்காய்.] 2. A sea-monster, a shark, சுறுமீன். 3. A drum used in a village near the sea, or on a brackish soil, நெய்தற்பறை. (சது.)

மீனங்கம், s. Fish-bone, as மீன்முள்; [*ex* அங்கம்.]

மீனஞ்சு, s. [*com.* மீன்கொல்லிப்பூடு.] A plant that kills fish, Crotalaria paniculat; [*ex* நஞ்சு, poison.]

மீனம்பர், s. Ambergris, செம்மீன்வயிரம்; [*ex* அம்பர்.]

மீனவன், s. Pandya, as மீனக்கொடியோன். (சது.)

மீனாய், s. [*com.* நீர்நாய்.] Beaver. See நாய்.

மீனாலயம், s. [*lit. abode of fishes.*] The ocean, the sea, கடல்; [*ex* ஆலயம்.]

மீனேறு, s. A sea-monster, probably, the horned shark, மகரமீன். (சது.)

மீன்கண்டம்—மீன்துண்டம், s. A piece of a fish.

மீன்காரன், s. [*fem.* மீன்காரி.] One who sells fish. 2. A man of the fisher caste.

மீன்குஞ்சு, s. A very young fish, a minnow. See நீச்சப்பழக்க.

மீன்குத்தி—மீன்கொத்தி, *appel. n.* [*poet.* மீனெறி.] Kingfisher.

மீன்குழம்பு, s. [*sometimes* மீனாணம்.] A fish-sauce.

மீன்கூடு, s. A fishing enclosure.

மீன்கொடியோன், s. Pandya, as மீனக்கொடியோன்.

மீன்கொல்லி—மீன்கொல்லிப்பூடு—மீன்கொல்லி, *appel. n.* As மீனஞ்சு.

மீன்சிதள், s. Fish-scales, as மீன்செகிள்.

மீன்சிறகு, s. Fish-fins.

மீன்சினை, s. Fish-spawn.

மீன்செகிள்—மீன்செதில்— மீன்செதிள் மீன்செது, s. [*sometimes* மீன்பிரால். மீன்பிலால்.] Fish-scales.

மீன்படுதல், *v. noun.* [*prov.* மீன்பாடு.] Fishes being caught. See படு.

மீன்பறி, s. See பறி.

மீன்பிடிகாரர், *appel. n.* Fishers.

மீன்பீலி, s. A fish-shaped jewel. See கெண்டைப்பீலி.

மீன்புலால்—மீனாற்றம், s. Bad smell of fish.

மீன்முள்—மீனெலும்பு, s. Fish-bone.

மீன்வேட்டை, s. Fishing.

மீன்வேட்டையாடுகிறது. Fishing or angling.

மு

மு. A syllabic letter, compounded of ம் and உ.

மு, *num. adj.* [*contrac. of* மூ *or* மூன்று.] Three, third—used in combination. Most of the compounds may be referred to திரி.

முக்கடுகம்—முக்கடுகு, *s.* Three spices, as திரிகடுகம்.

முக்கணன்—முக்கண்ணன், *s.* [*lit. three-eyed one.*] An epithet of Siva, சிவன். 2. Vinayaga, விநாயகன். 3. Virabadra, வீரபத்திரன். (சது.)

முக்கணி—முக்கண்ணி, *s.* [*fem.*] An epithet of the sakti of Siva—as Kali, காளி, and Parvati, பார்வதி. (சது.) 2. A cocoa-nut, தேங்காய்.

முக்கரணம், *s.* The three classes of faculties, as திரிவிதகரணம். See கரணம்.

முக்கலம், *s.* Three *kalums*, or thirty-six markals.

முக்கனி, *s.* The three special fruits. See முப்பழம்.

முக்காணி, *s.* A fraction, the $\frac{3}{80}$ of a மாகாணி.

முக்காதலர், *s.* [*pl.*] The triple friends, *usually* husband, a male friend, and a son; [*ex* காதலன்.] (சது.)

முக்காதவழி, *s.* See காதம்.

முக்காலம், *s.* The three divisions of time. 2. The three tenses in grammar. These are இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம். See காலம்.

முக்காலமறிந்தவன், *appel. n.* An epithet of the Deity, as knowing the past, present, and future, கடவுள்.

முக்காலி, *s.* A three-footed stool, a tripod, as distinguished from நாற்காலி.

முக்காலும், *s.* Three times. See கால், and குளி, *v.*

முக்கால், *s.* Three fourths, $\frac{3}{4}$. See under கால்.

முக்கால்நோக்கு-முக்காநோக்கு, *v. noun.* One of the four planetary aspects. See நோக்கு.

முக்காழி, *s.* See காழி.

முக்குடுமி, *s.* A trident, சூலம். (சது.) 2. A triple lock of hair See கொப்பு, பக்கக்குடுமி.

முக்குடை, *s.* [*appel.* முக்குடைச்செல்வன்.] The three umbrellas peculiar to Argha, viz; சந்திராதித்தம், சகலபாசனம், நித்தியவிநோதம்.

முக்குணம், *s.* Three principles in nature, *Satva*, *Raja* and *Tama*. See குணம்.

முக்குலம், *s.* The three races of kings: 1. Solar, or the race of the sun; 2. Lunar or the race of the moon; 3. Agni, the race of fire.

முக்குலைச்சு, *s.* [*prov. in cant numbers.*] Three quarters, முக்கால். 2. A technical word used by certain tribes.

முக்குழிச்சட்டி, *s.* A triple-holed-pan for baking cakes. (*Madura usage.*)

முக்குளம், *s.* The name of a village 2. Three reservoirs reputed to unite the rivers Jumna, Sarasvati and Ganges. 3. The twentieth lunar mansion, பூராடம்.

முக்குற்றம், *s.* The three kinds of guilt. See under குற்றம்.

முக்குற்றங்கடிந்தோன், *appel. n.* God. Deity, கடவுள். 2. Buddha, புத்தன். (சது.)

முக்கூட்டு, *s.* The second lunar mansion. 2. Oven, hearth. See அடுப்பு.

முக்கூட்டெண்ணெய், *s.* A medicinal oil. See under கூட்டு, *v*

முக்கோணம், *s.* A triangle, as திரிகோணம். See கோணம்.

முக்கோல், *s.* The three united staves, as திரிதண்டம். 2. (சது.) The twenty-second lunar mansion. See திருவோணம்

முக்கோற்பகவர், *s.* [*pl.*] Those who carry three staves tied together. See திரிதண்டசன்னியாசி, under சன்னியாசம்.

முச்சகம், *s.* Three worlds, as திரிலோகம்.

முச்சங்கம், *s.* The three colleges of learning which existed formerly at Madura. See சங்கம்.

முச்சதுரம், *s.* Three angled or three sided figure.

முச்சத்தி, *s.* Three Saktis. See சத்தி.

முச்சந்தி, *s.* Three periods of the day. See திரிசந்திகாலம், under காலம். 2 See சந்தி.

முச்சிரம், *s.* Trident, சூலம். (*p.*)

முச்சீரடி, *s.* A metrical line of three feet, சிந்தடி.

முச்சுடர், *s.* The three lights. See சுடர்.

முச்சுழி, *s.* The three curled letter ண.

முச்செயல், *s.* Three kinds of divine actions, as முத்தொழில்.

முச்சை, *s.* [*prov.*] Three strings tied to a paper-kite, in a triangular form, to which the line is attached.

முச்சொல்லலங்காரம், *s.* A rhetorical figure, a word or phrase capable of three meanings, as மாதங்கன், a possessor of an elephant; possessor of gold; an epithet of Siva as possessor of Parvati.

முத்தண்டு, *s.* Three staves. See திரிதண்டு.

முத்தமிழ், *s.* Three different kinds of Tamil. See தமிழ்.

முத்தமிழ்முனியோன், *appel. n.* Agastya, அகத்தியன். 2. Bhairava, வைரவன். (சது)

முத்தரம், *s.* Three kinds, or degrees. 2. Three heads—as in முத்தரத்தார், three persons.

முத்தனையர், *s.* [*pl.*] Wealthy persons, செல்வர். (நாலடி.)

முத்தலை, *s.* The three points or heads of a lance, சூலம்.

முத்தலைவேலோன், *appel. n.* Bhairava, வைரவன். (சது.)

முத்தானம், *s.* The three ways of bestowing gifts. See தானம்.

முத்தீ, *s.* The three household fires. See தீ.

முத்தொகைவினா, *s.* [*in arithm.*] The rule of three, rule of proportion.

முத்தொழில், *s.* The three kinds of divine operation. See பஞ்சகிருத்தியம், under கிருத்தியம்.

முத்தொழிற்கடவுள். God—as creating, preserving and destroying.

முத்தொழிலோர், *s.* [*pl.*] Three classes of people—agriculturists, traders and herdsmen, வைசியப்பேர். (சது.)

முத்தொள்ளாயிரம், *s.* A kind of popular poetry embracing three sections of different metres, each containing nine-hundred stanzas, நூல்வகை.

முத்தோஷம், *s.* Three humors of the body. 2. Three defects in composition. See தோஷம்.

முந்நாழி, *s.* Three measures. See நாழி.

முந்நீர், *s.* The sea as containing three different kinds of water—rain, river-water, and that of the abyss; and as having three different qualities—to produce, preserve, and destroy, கடல்.

முந்நூல், *s.* The three kinds of sacred learning. See நூல். 2. A brahman's sacred thread, the *poita*, பூணூல். (*p.*)

முந்நூறு, *s.* Three-hundred.

முப்பது, *s.* Thirty; [*ex* பது=பஃது.]

முப்பகை, *s.* The three enemies. See பகை.

முப்பலம் — முப்பலை, *s.* The three medicinal fruits. See திரிபலை.

முப்பழம், *s.* The three chief kinds of fruit, வாழை, plantain; வருக்கை, jack, and மா, mango.

முப்பழமுஞ்சோறும்போடுகிறது. Serving up rice and the best fruits; i. e. treating hospitably. (*c.*)

முப்பழச்சாறு, *s.* The juice of the three kinds of fruit.

முப்பாட்டன், *s.* [*fem.* முப்பாட்டி.] A grand-father's grand-father. (*c*)

முப்பால், *s.* The three genders, as திரிலிங்கம். 2. Three kinds of subjects, as அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்.

முப்பாவினம், *s.* The three classes of poems. See பாவினம், under இனம்.

முப்பாழ், *s.* [*in Hindu Metaphysics.*] Three vacua in the human body, said to be in three different parts.

முப்பான், *s.* Thirty; [*ex* பான்.] (*p.*)

முப்பிணி, *s.* The three kinds of temperament. See பிணி.

முப்புடி, *s.* The three qualities, as திரிபுடி.

முப்புடைக்காய், *s.* Cocoa-nut, தேங்காய். (*p.*)

முப்புரம், *s.* [*also* மூவெயில்.] The three cities See திரிபுரம்.

முப்புரி, *s.* The three strands of a cord. 2. The three cities, as முப்புரம்.

முப்புரிக்கயிறு. A three stranded string, a three-fold cord. (*c.*)

முப்புரிநூல், *s.* A three-threaded-cord, brahmanical cord, பூணூல்.

முப்புரிநூலோர். Brahmans, those who wear the three-fold-cord, பார்ப்பார் (*p.*)

முப்புள்ளி, *s.* The letter ஃ, ஆய்தஎழுத்து. (சது.)

முப்பூரம், *s.* The three distinct lunar mansions, பூரட்டாதி, பூரம், and பூராடம். (*p.*)

முப்பேதம், *s.* The three differences. See பேதம்.

முப்பொருள், *s.* *Trimurti*, &c. See பொருள்.

முப்பொறி, *s.* The three organs of sense as instruments of worship. See பொறி.

மும்மடங்கு—மும்மடி, *s.* Three times over, three-fold. See மடங்கு. (*c.*)

மும்மடியாகுபெயர், *s.* A species of nouns of secondary signification, by three steps of application, as காரறுக்கப்பட்டது, the rainy season's harvest is gathered. In this கார், black—applied to clouds—is used for the rainy season; the crop gathered is of that season.

மும்மணிக்கோவை, *s.* A necklace of three strings of beads. 2. A poem of thirty stanzas, divided into three parts of ten stanzas, the verses of each ten, containing different stanzas, and in each ten, the classification is diverse from the rest. See பிரபந்தம்.

மும்மணிமாலை, *s.* A poem of thirty stanzas, of three different kinds of verse, வெண்பா, கலித்துறை, and அகவல், with the அந்தாதி termination.

மும்மண்டலம், *s.* The three parts in the human body. See மண்டலம்.

மும்மலம், *s.* The three evil passions. See மலம்.

மும்மாரி, *s.* Raining thrice. See திங்கள்.

மும்மீன், *s.* The fifth lunar mansion. See மிருகசீரிடம். (சது.)

மும்மூர்த்தி, *s.* The Hindu Triad, as திரிமூர்த்தி.

மும்மூன்று, *s.* Three times three. 2. Three by three, by threes, மூன்றுமூன்று.

மும்மை, *s.* Three different states of existence: 1. உம்மை, the former birth; 2. இம்மை, the present state, &c.; 3. அம்மை, or மறுமை, futurity; [*ex* மை] (*p.*)

மும்மொழி, *s.* Three sorts of speech. See மொழி.

முக, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, *v. a.* To draw water, &c., as மொள்ள. 2. [*for* மோக்க.] To smell. 3. To measure grain or liquids with a measure of capacity.

முகத்தல், *v. noun.* Drawing water, &c., மொள்ளல்; or baling, சொரிதல்.

முகத்தலளவு, *s.* Measurement of capacity, மொண்டளக்குமளவு.

முகத்தலளவையாகுபெயர், *s.* Metonymy, by which a measure of capacity—as a gallon—is put for the thing measured. See ஆகுபெயர்.

ஆழ வமுக்கி முகப்பினும் ஆழ்கடலில் நாழி முகவாது நானாழி. Though you sink the நாழி measure low in the deep sea, you will draw only that measure of water, i. e. you will receive only what is ordained. (முதுரை.)

முக்கவை, *s.* A ladle, அகப்பை.

முகடி, *s.* The elder-sister of Lukshmi, மூதேவி; (*lit.*) poverty, or misfortune. (சது.)

முகடு, *s.* [*gen.* முகட்டின்.] The top of a hill or mountain, மலையினுச்சி. (சது.) 2. (*c.*) The ridge of a house, வீட்டினுச்சி. 3. A long cross-beam of a house, விட்டம். 4. The zenith, உச்சி.

அண்டமுகடு, *s.* See அண்டம்.

முகடுகட்ட—முகடுதெற்ற—முகடுமூட, *inf.* [*sometimes* முகடுமுறிக்க.] To construct the ridge of an ola-roof, கூரைவீட்டின் முகடுதொடுக்க.

முகடுஉந்தல், *v. noun.* Overcoming, excelling, மேற்கொள்ளல். (இராமா.)

முகடோடி, *appel. n.* [*prov.*] A long ridge-beam of a house, to which the rafters are fastened.

முகட்டுப்பூச்சி, *s.* A bug, மூட்டைப்பூச்சி.

முகட்டுவளை, *s.* [*also* மோட்டுவளை.] A beam as a cross-tie for rafters to keep them at a proper distance.

முகட்டோடு, *s.* A ridge-tile.

முகதா — முகதாவு — முகந்தாவு, [*Arab.*] In presence of, before one's face; in person, முகத்தின்முன்.

முகதாவிலேபேசிக்கொள். Speak in person.

முகதாவிலேநின்றான். He stood in the presence [of the king, &c.].

முகப்பு, *s.* The front, forepart, porch; frontispiece, ஆசாரம்; [*ex* முகம்.] (*c.*)

முகப்பிலே. In the front.

முகமன், *s.* Civility, politeness; officiousness, உபசாரவார்த்தை. (சது) 2. Flattery, முகஸ்துதி; [*ex* முகம்.]

முகமன்சொல்லுதல்—முகமன்பேசுதல், *v. noun.* Flattering.

முகமுகெனல், *v. noun.* The humming of bees, gurgling of water, &c., ஈரடுக்கொலிக்குறிப்பு. (சது.)

•முகம், *s.* The mouth, வாய். 2. Face, countenance, visage, mien, வதனம். 3. Entrance to a house, a harbor or river, வாயில். 4. Commencement, தொடக்கம். 5. Aspect, look, appearance, தோற்றம். 6. Prospect—as the front of an army, படைமுகம். 7. Head—as of a street, or point, முனை. 8. Design, object, purpose, நோக்கம். 9. Chief, முதன்மை. W. p. 663. MUK'HA. 10. Place, இடம். 11. State or condition, as காரியம்நல்லமுகத்தைக்கொள்ளுகிறது. (*Beschi.*)

அபிமுகம். Presence.

அதோமுகம். A down-cast look.

அறிமுகம். Acquaintance.

சிரீமுகம்—ஸ்ரீமுகம்—ஸ்ரீ முகம்—திருமுகம்.... A letter from a guru.

புதுமுகம். An unknown person; (*lit.*) a new face.

என்வீட்டுமுகமாய்த்திரும்பும். Please turn towards my house.

அவர்கள்ஒருமுகமாய்நிற்கிறார்கள். They are all on one side.

காற்றுமுகத்திலேதூற்றிவிடு. Winnow [the corn] before the wind.

கிழக்குமுகமாயிரு. Sit towards the east.

முகத்துக்குமுகங்கண்ணாடி. Personal inquiry is as a perspective.

வாய்விசேஷமாய். By word of mouth.
எழுத்துவிசேஷமாய். By letter.

விசேஷக்கால், s. That which inadvertently occurs in conversation. (R.)

விசேஷதினம், s. A feast-day.

விசேஷதீட்சை, s. A special rite by a guru to confirm a disciple. See சிவதீட்சை. under தீட்சை.

விசேஷமாய். Especially, principally.

விசேஷாலங்காரம், s. As விசேஷம், 2.

•விசேஷியம் — விசேடியம், s. The thing qualified. See அன்னுவயவிலக்கணம் [Sa. Viseshya.]

விசேஷி — விசேடி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v a. To make special, to make prominent, சிறப்பிக்க. 2. To excel, to surpass, மேற்பட.

விசேஷித்தது, appel. n. That which is excellent or preferable.

விசை, s. Spring, elasticity, force, impulse, impetus. 2. Haste, speed, swiftness, துரிதம். 3. A spring-trap, பொறி. 4. Any mechanical instrument—as a lever, மிண்டி. 5. Bend, distention, வலிக்கை. 6. Change, turn, தரம். 7. A stay, a prop.

விசைதப்பிப்போயிற்று The contrivance miscarried.
விசையாய்ப்போனான். He went away in haste.
எத்தனைவிசை. How many times, how often?
ஒருவிசை. Once.
விசைமெத்தஇருந்தகயிறறுந்தபோம். The rope will break, the distention is so great.

விசைகொள்ள, inf. To be elastic, வலிக்க 2. To make haste, வேகமுற

விசைக்காற்று, s. Wind or air in motion from a person walking swiftly.

விசைத்தடி, s. A weaver's instrument. நெசவாளர்கருவியினொன்று. 2. A part of a trap.

விசையேற்ற, inf. To set up a spring or trap, to cock a gun, or to bend a bow.

அவன்வில்லைவிசையேற்றினான். He strained the bow.

விசையைத்தட்டுதல், v. noun. Springing a trap. 2. [fig.] Falling into difficulty.

விசையைவைத்துத்தூக்கல். Raising with a lever.

விசை, கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To make haste, தீவரிக்க. (சது.) 2. To become angry, கோபங்கொள்ள. (p.)

விசைப்பு, v. noun. Anger, கோபம்.

•விசையம், s. Victory. See விசயம்.

•விச்சாதரர் — வித்தியாதரர், s. A class of celestials, தேவரிலோர்வகுப்பார். (சது.)

•விச்சாதி — விசாதி, s. Difference of caste, வேற்றுச்சாதி; [ex வி et சாதி.] W. p. 764. VIJATI.

•விச்சிராமம், s. Evacuation by stool, மலங்கழிக்கை.

•விச்சிராணம், s. A purgative; purging, பேதிமருந்து.

விச்சிரிப்பு — விச்சிலுப்பை, s. A kind of pustules on the skin, as சிச்சிலுப்பான். (Beschi.)

•விச்சின்னம், s. What has been divided, parted, alienated, பிரிக்கப்பட்டது; [ex வி et சின்னம்.] W. p. 763. VICHCHINNA.

விச்சு, s. [also விஞ்சு.] A repetitious sound, அனுகரணஓசை.

விச்சுக்கொட்ட, inf. To make such a sound in contempt.

•விச்சு, s. Seed, as வித்து. 2. Abundance, மிகுதி. (R.)

•விச்சுவம், s. The universe, &c. See விசுவம்.

விச்சுவகாசிபம் — விச்சுவசாரம் — விச்சுவதருமம் — விச்சுவபோதம், s. Different systems of architecture. See சிற்பநூல்.

விச்சுவரேகை, s. Celestial equator, வானவரை.

விச்சுவர், s. A class of celestials, வானோரிலோர்வகுப்பார். 2. Artizans, artists, mechanics, workmen. சிற்பர். (சது.)

விச்சுவேசம், s. A system of architecture. See சிற்பநூல்.

விச்சுளி, s. A swift-winged bird, Alcedo, அதிவேகப்பறவை. 2. [also விச்சுளியன்.] An ingenious, quick, clever person, commonly a mere youth who takes a short course and gets before others, சாக்கிரதையுள்ளவன்.

விச்சுளிப்பாய, inf. To spring as a cat.

விச்சுளியாயிருக்க, inf. To be agile, nimble, expeditious.

விச்சை, s. Street, தெரு. (சது.)

•விச்சை, s. Science, as வித்தை.

•விச்சொரூபம், s Deformed shape, விகாரவடிவம்; [ex வி, priv. et சொரூபம்.]

விச்சோடு, s. An odd one [of a pair], inequality, ஒவ்வாதது; [ex வி. priv. et சோடு.]

•விஷமம், s. Mischief, wickedness, injury, இடக்கு. 2. That which is difficult, பிரயாசை W. p. 790. VISHAMA.
விஷமத்துக்கிறுஞ்செய்கிறான். He acts from rivalry.
விஷமத்துக்குச்சொன்னான். He spoke that maliciously.
விஷமக்கணக்கு, s. A very difficult problem.
விஷமச்சுரம், s. A malignant fever.
விஷமன், s. [fem. விஷமி.] A wicked man.

•விஷம்—விடம், s. Poison, நஞ்சு. 2. Any thing hurtful or destructive. W. p. 790. VISHA.
அப்பியாசேவிஷம்சாஸ்திரம். Want of practice is poison to all learning.
விஷந்தீண்டிச்செத்தான். He was bitten by a snake and died.
காலகூடவிஷம், s. Deadly poison. See காலகூடம்.
விஷக்கடி, s. [com. விஷகடி.] A poisonous bite.
விஷக்கடிவாய், s. The place bitten.
விஷக்கடிவேளை, s. An unfortunate time. (R.)
விஷக்கல், s. The Bezoar-stone, said to draw out poison.
விஷக்காய்ச்சல், s. A pestilential fever. See காய்ச்சல்.
விஷங்கொல்லி, appel. n. (lit. poison killer.) An herb, ஓர்பூடு.
விஷநீர், s. Malignant humors causing swelling, &c.
விஷநீரேற்றம், s. The dropsy.
விஷந்திரும்பல், v. noun. The dispelling of poison.
விஷந்தீண்டல். Being bitten by a venomous snake. See தீண்டு.
விஷபாகம், s. A sudden swelling of the body.
விஷபேதி, s. Virulent diarrhœa, cholera-morbus.
விஷப்பனி, s. Mildew, dew pernicious to health.
விஷமிறக்க, inf. To remove poison.
விஷமிறங்குதல், v. noun. The action of animal poison being subdued.
விஷமுட்டி, s. A poisonous tree, Strychnos, எட்டிமரம்.
விஷமூங்கில், s. A medicinal shrub, Crinum Asiaticum.
விஷமேறுதல், v. noun. Diffusing poison, through the system.
விஷமேற்ற, inf. To cause reduced animal poison to spread again through the system by magic. 2. [fig.] To provoke one to fury, கோபமூட்ட.
விஷவாக்கு, s. A word of bad omen, as சச்சவாக்கு.
விஷவாதகரப்பன், s. A kind of cutaneous disease.

விஷமி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To turn into poison, விஷமாக. 2. To be mischievous, விஷமம்பண்ண.
விஷமித்தவன், appel. n. A patient whose regimen and medicine disagree.

•விஷயம் — விடயம், s. That which is peculiar, characteristic or natural, உரியது. 2. Objects of sense, worldly objects, காணப்பட்டவைகள். 3. Origin, original cause, காரணம். 4. *Semen virile*, சுக்கிலம். 5. Refuge, shelter, அடைக்கலம். 6. Country, தேசம். 7. A lord, master, superior, நாயகன். W. p. 791. VISHAYA.
விஷயக்காட்சி, s. Perception of objects by the senses.
விஷயஞானம், s. Knowledge of sensible things.
விஷயபரித்தியாகம், s. Abstraction.
விஷயவஞ்ஞானம், s. Ignorance, illusion. (திவ. 23.)
விஷயவாஞ்சை, s. Sensuality.

•விஷேபம், s. Mutation, change, திரிபு.
•விஷ்ணு, s. Vishnu. See விட்டுணு.
•விஸ்தரி—வித்தரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To lay open, expand, விரிக்க. 2. To enlarge, to amplify, பெருக்க. 3. To explain, expound, விரித்துரைக்க.
கொஞ்சம்விஸ்தரித்துச்சொல்லு. Explain the subject a little.
விஸ்தரிப்பு, v. noun. Amplification, exposition.

•விஸ்தாரம்-வித்தாரம், s. Extension, diffusion, amplitude, அகலம். W. p. 794. VISTARA. 2. An order of architecture. See சிற்பநூல். 3. A kind of verse, ஓர்கவி.
விஸ்தாரமானபட்டணம். A town of great extent.
விஸ்தாரமாய்ப்பேசினான். He spoke at large.
விஸ்தாரக்காரன் — வித்தாரக்காரன், s. One who makes long speeches; a boaster.

•விஸ்தீரணம், s. Largeness, extensiveness, prolixity. [Sa. Visteern'a.]
வீடுவிஸ்தீரணமில்லை. The house is not large.
நிலம்விஸ்தீரணமாய்க்கிடக்கிறது. It is an extensive plain.

•விஞ்ஞை, s. Knowledge, கல்வி. 2. Magic. See வித்தை.
விஞ்சையர், s. A class of celestial singers, as வித்தியாதரர். 2 (சது.) As புலவர்
விஞ்சையுலகு, s. Swerga, நாகலோகம். (சது.)

•விஞ்ஞானம், s. Knowledge, science. See விக்கியானம்.
விஞ்ஞானகலர், s. The first of the three classes of souls, subject to but one மலம் free from births and deaths, and preparing for final absorption. Compare சகலர், and பிரளயாகலர்.
விஞ்ஞானப்பிரகாசம், s. Light of wisdom. (திப. 442.)
விஞ்ஞானமயம், s. The spiritual faculty with means of discernment. See கோசம்.

விடகிது, s. Flesh, ஊன். (சது.)
•விடங்கம், s. Beauty, அழகு. 2. Bravery, ability, ஆண்மை. 3. The inside of a bent arm, கொடுக்கை. 4 The projection of a beam or rafter outside the wall of a house, சுவர்ப்புறத்துநீண்டஉத்திரம். 5. Dovecotes on a pillar, புறமாடம். 6. The top of a house, முகடு. 7. A flag hoisted in a street. வீதிக்கொடி. (சது.)

விடங்கர், s. A narrow way, சிறுவழி. (சது)
•விடகுசகம், s. A bird, probably the red partridge, சகோரப்புள். (சது.)
•விடதம், s. Cloud, முகில். 2. Verdigris, தரிசு. (தீபம்.)
•விடதரம், s. A snake, a serpent, பாம்பு; [ex விடம்.] 2. As விடதம்.
விடதரன், s. Siva, as ஆலகண்டன்.
•விடதாரி — விஷதாரி, s. A doctor, a physician, வைத்தியன்; [ex விடம், poison.] (Ell. 281.)
•விடதாளம், s. A rule of keeping time in music. See தாளம், க.
விடத்தேரை-விடத்தேர், s. [improp. விடத்தலை.] A medicinal shrub, Mimosa cinerea, ஓர்செடி.
எள்ளிலுஞ்சிறியஇலையெண்ணஇலை. What leaf is smaller than the sesamum seed? Ans. விடத்தேரை.
விடந்தை, s. The name of a town, ஓரூர். (சது.)
•விடபம், s. A bull, bullock, எருது; (also இடபம்.) [corrup. of Sa. Vrushaba.] 2. A little shrub, சிறுதூறு. 3. A branch of a tree, மரக்கொம்பு. W. p. 765. VIT'APA. 4. [in anat.] Perinæum, or septum of the scrotum. 5. A vehicle and banner of Siva, வெறூர்தியுங்கொடியும். (சது.)
விடபகதி, s. The short trotting pace of the bull. See துரகதி.
•விடபி, s. A tree, மரப்பொது. [Sa. VIT'APIN.]
விடப்பு—விடம்பு, s. A fissure, கமர். (சது.)
•விடம், s. Poison. 2. Any thing hurtful. See விஷம். 3. Inflammation from a bite, sting, or prick, &c., கடுப்பு. 4. Gallantry, debauchery, விடமார்க்கம். 5. A mountain, மலை. W. p. 765. VIT'A.
விடன், s. [pl. விடர்.] A gallant, a licentious person, தூர்த்தன். (சது.)
•விடயம், s. Any object of sense. See விஷயம்.
•விடருகம், s. A cat, பூனை. [corrup. of Sa. Vid'araka.] (சது.)
விடர், s. A fissure, கமர்; [ex Sa. Vid'a.] 2. A forest, காடு. 3. A cleft of a mountain, மலைப்பிளப்பு. 4. See விடம். (சது.)
விடர்வு—விடவு, s. Cranny, chink, வெடிப்பு.
•விடலை, s. A male-child, ஆண்மகன். 2. A bride-groom, மணவாளன். 3. A man from sixteen to thirty-two, கவெயதுள்ளவன். 4. The chief of a barren district, பாலைநிலத்தலைவன். 5. A steer, இளங்காளை; [ex Sa. Vrushala.] (சது.)
விடல், s. A fault, குற்றம். 2. See விடு.
•விடவம்—விஷவம்-விஷுவம்-விஷ்வம், s. The equinox. See விசுவம்.
விடவிடென, inf. To tremble from cold, fear, &c., நடுக்கக்குறிப்பு.
குளிர்விடவிடென்றுட்டுகிறது. He is shivering with cold.

விடவு, *s.* Any fissure. See விடர்வு.

விடன். See விடம்.

•விடாணம்—விஷாணம், *s.* Horn of animals, விலங்கின்கொம்பு. W. p. 792. VISHAN'A.

•விடாந்தகன், *s.* Siva as remover of the poison at the churning of the sea, சிவன்; [*ex* விடம்.]

விடாய், *s.* Thirst, தாகம். 2. Longing, craving, ஆசை. 3 Weariness, lassitude, சோர்வு; [*ex Sa. Vishada.*] 4. (*R.*) A holiday, விடுமுறை.

எனக்குவிடாய்தீர்ந்தது. My weariness is over.

விடாயாற்றி, *appel. n.* Giving repose. 2. A ceremony within a fane after a procession—a resting, விடாயாற்றியுற்சவம்.

விடாயாற்றிவிருந்து. A scanty meal after a festival.

விடாய், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To grow thirsty, தாகங்கொள்ள. 2. To grow faint and weary, களைப்பாக.

அவன்விடாய்த்துவிழுந்தான். He fell down from weariness.

எனக்குவிடாய்க்கிறது. I feel thirsty.

விடாய்ப்பு, *v. noun.* Thirsting

•விடாலகம், *s.* A cat, பூனை. W. p. 766. VID'ALAKA.

விடி, *s.* A curtain, திரைச்சீலை. (சது.)

விடி, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To break or dawn, as the day, உதயமாக. 2. To be dissipated; to be divided as night from day; to be dispersed—as poverty, நீக்க. 3. To be full after privation, திருத்தியாக.

எழுந்திருவிடிந்துபோயிற்று It is day-break, get up.

பலபலவென்றுவிடிந்துவருகிறது. It begins to dawn.

அவனுக்கென்னவந்தாலும்விடியாது. Whatever he may obtain, it will not be enough.

நீயொருபொழுதும்விடியவேமாட்டாய். You will never prosper.

என்தரித்திரமெப்போதுவிடியும். When shall my poverty be removed?

விடிநிலா, *s.* Morning-moon.

விடியாப்பானை, *s.* (*lit.*) A vessel which cannot be filled, (*met.*) one who cannot be satisfied. (*local.*)

விடியாமூஞ்சி, *s.* A person with whom nothing prospers. (*in contempt.*)

விடியுங்காட்டிலும். Before day-break.

விடிவெள்ளி, *s.* Morning-star.

விடியல், *v. noun.* Break of day.

விடியற்காலம் — விடியற்றரம், *s.* Day-break. 2. [*as an adv.*] Early in the morning.

விடு, கிறேன், விட்டேன், வேன், விட, *v. a.* To set at liberty, to release, to despatch, அனுப்ப. 2. To emit, issue, give out, as the clouds, பரியவிட. 3. To let flow as water, வெளிப்படுத்த 4. To quit, leave, forsake, abandon, தறக்க; [*ex Sa. Vit'a,* to break.] 5. To get rid of, part with, கழிக்க. 6. To permit, let, give leave, விடைகொடுக்க. 7. To cease, discontinue, ஒழிய. 8. To split, பிளக்க.

இவ்விடத்தைவிட்டுப்போனான். He has left this place.

போய்விட்டான். He is gone.

அவன்வராவிட்டால். If he do not come.

இல்லாவிட்டால். If not.

அவனேவழிவிட்டனுப்பினான். He accompanied another a little way and took leave.

அவனைப்போகவிடாதே. Do not let him go.

வாணம்விட்டார்கள்.........They discharged rockets.

அதைவிட்டுவை. Leave it as it was.

அந்தஉத்திரம்விட்டுப்போயிற்று. The beam is broken.

சாதம்தண்ணீர்விட்டுப்போயிற்று. The boiled rice has become watery.

விடாக்காய்ச்சல் — விடாச்சுரம், *s.* A continued fever, a hectic.

விடாச்சுரத்துக்குவிஷ்ணுகரந்தை. The plant, Sphœranthus Indicus, a specific for a hectic.

விடாதகண்டன், *s.* A persevering man.

விடாதவாகுபெயர், *s.* Instrumental nouns used for the agent, as in குதிரையால்அவ்வூர்கொள்ளையிடப்பட்டது, that town was plundered by the horse [*cavalry*].

விடாப்பிடி, *s.* Taking and keeping hold of a person. 2. Tenaciousness, pertinacity. 3. Unchangeableness, ஒருகண்டசீர்.

விடாமழை, *s.* Unceasing showers, as அடைமழை.

விடுகதை, *s.* A riddle, an enigma.

விடுகதைவிடுவிக்கிறது. Solving a riddle.

விடுகாசு, *s.* Small money for change. 2. [*com.* விடுகாசுவளையல்.] A kind of glass arm-ring.

விடுகாலி, *s.* A cow at large, கட்டாமாடு. 2. A person under no restraint, a libertine, தூர்த்தன்.

விடுகுறை—விட்டகுறை, *s.* That which is left for a future time.—*oppos. to* தொடுகுறை, தொட்டகுறை. 2. As விடுதுறை.

விடுகோலெருது, *s.* A spare bullock. (*R*)

விடுதுறை, *s.* A stopping place in singing, reading, or in explaining verse.

விடுதேங்காய், *s.* Cocoa-nuts moved by magic.

விடுந்தலைப்பு, *s.* The front end of a cloth, முன்றானை. (சது.)

விடுபட, *inf.* To be left, abandoned, relinquished, விட்டுவிடப்பட.

விடுமுறை, *s.* Vacation or holidays in a school.

விட்டடி, *s.* The line just read—as விட்டடியுந்தொட்டடியுமவனுக்குத்தெரியாது, he does not know the beginning nor the end, *of a discourse.*

விட்டவர், *appel. n.* Enemies, பகைவர். 2. Ascetics, துறந்தோர். (சது.)

விட்டவாகுபெயர், *s.* A figure in which the name of a person or thing is used for its adjunct—as கல்கைக்கணிடைச்சேரி.

விடேன்தொடேனென்றுநிற்கிறது. Refusing to leave off.

விட்டிசைத்தல், *v. noun.* A diæresis, or sounding one syllable as two, பிரிந்திசைத்தல்.

விட்டுக்கொடுக்க, *inf.* To put or [forward], &c., in order to try how a [...] will go. 2. [*prov.*], To disclose [...er ...ts.] 3. To roll a cocoa-nut in the ne[...] game to be struck by a compe[...ar's] 4. To pimp.

விட்டுமாற, *inf.* To take another course; to change in principles or conduct.

விட்டுவாங்கி, *appel. n.* [*prov.*] One who lends his wife for gain.

விட்டுவிட, *inf.* To forego, to resign, to relinquish.

விடுகை—விடுதல், *v. noun.* Leaving, dispensing with; sending away; setting at liberty, casting or throwing.

விடு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To send away, to dismiss, அனுப்ப 2. To reject, தள்ள. 3. To cause to go, make to walk, நடத்த. 4. To revive, animate, உயிர்க்க 5. To separate, பிரிக்க. 6. *v. n.* To remain, தங்க.

சற்றேவிடுத்துக்காட்டு. Please open *the packet.*

விடுத்துவிடுத்துச்சொன்னாலுமவனுக்குத்தெரியவில்லை Although I explained to him again and again he did not understand.

விடுதலை, *s.* Release, liberty, deliverance, நீக்குகை. (*c.*)

விடுதலைப்பத்திரம், *s.* The *Habeas corpus,* granted to some persons.

விடுதலையாக்க, *inf.* To set at liberty.

விடுதி, *s.* Lodging place, a temporary abode, தங்குமிடம். (*c.*) 2. A separate apartment, solitariness, வேறுபாடு. 3. Leave, permission to go, உத்தரவு.

உனக்கெங்கேவிடுதி. Where is your lodging?

இரண்டுஞ்சோடியல்ல, விடுதி. Two things not mated—*as shoes.*

விடுதிமாடு, *s.* A spare bullock.

விடுதியாள், *s.* Any one to be spared. 2. A single man.

விடுதிவிட, *inf.* To give one a lodging. 2. To lodge.

விடுது, *s.* [*in seaman's language.*] A sounding line, as விழுது:

விடுதெவிட்டுப்பார்க்கிறது. Sounding with the lead.

விடுத்தம், *s.* [*Madura usage,* கடுத்தம்.] Change, turn, times, as நாலுவிடுத்தம், four times, தடவை. (*Beschi.*)

விடுப்பு, *s.* Inquisitiveness, ஆராயுங்குணம். 2. A show, curiosity, விநோதம்.

விடுப்புக்காட்ட, *inf.* To show a curious sight.

•விடுவம், *s.* The equinox. See விசுவம்.

விடுவாய்ச்செய்ய, *inf.* To cut off, அறுக்க. (சது.)

விடுவி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To liberate, to set free, விடுதலைசெய்ய. 2. To explain, interpret, to solve a riddle, விரித்துரைக்க. (*c.*)

அவனை விடுவித்துக்கொண்டேன். I set him at liberty.

நானுனக்குவிடுவித்துச்சொல்லவேணுமா. Must I explain to you?

அவனதைவிடுவித்துப்போட்டான். He solved the riddle.

விடேசி, *s.* An arrow, அம்பு. (ஞானவாசி.)

விடேலெனல், *s.* The repetition of a natural sound, அநுகரணவோசை. (சது.)

விடை, s. Answer, reply, உத்தரம். 2. Liberty, leave, license, permission, விடைை; [ex விடு, 2.] (சது.) 3. [com. விடைக்கோழி.] A pullet.
விடைகொடுக்க, inf. To give an answer. 2. To give leave.

•விடை, s. A bull, எருது. 2. The sign Taurus, இடபவிராசி. W p. 802. VRUSHA.
விடைகாலெறிதல், v. noun. Struggling, twiching the legs—as a beast or person in dying. 2. Bending the legs backward. (c.)
விடைதழாஅல். Grappling and subduing a wild bull—as a test of bravery by a suitor; [ex தழுவு.] (p.)
விடையோன், s. An epithet of Siva as having a bull, சிவன். (சது.)

விடை, கிறேன், ந்தேன், வேன், ய, v. n. To be angry, கோபங்கொள்ள. 2. To become disjointed, to split, பிரிய. (சது.)

விடை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To frown, reprove, கோபிக்க. 2. To reveal secrets, வெளிப்படுத்த. (சது.)
காதைவிடைத்துக்கொண்டோடிற்று. It ran off twisting its ears.
விடைப்பு, v. noun. Manifesting anger. 2. Calumniating.

•விட்கம்பம்-விஷ்கம்பம், s. An astrological yoga. See யோகம் 2. Diameter. W. p. 792. VISHKAMBA.

•விட்சேபம், s. Celestial latitude. See விக்ஷேபம்.
விட்சேபசத்தி, s. Elasticity. (உபநி.)

•விட்டம், s. A cross beam, உத்திரம். (சது.) 2. Any thing put across. 3. Diameter; [ex Sa. Visht'a, penetrated.]
குருட்டுப்பூனைவிட்டத்திற்பாய்ந்தாற்போல. As a blind cat jumped at the beam. Prov.
விட்டக்கோல், s. As விட்டம், 3. (R.)
விட்டார்த்தம், s. Semi-diameter, பாதி விட்டம்.

•விடாரம், s. A seat of ascetics of Kusa grass, தவத்தோர்பீடம். 2. A tree, மரம். W. p. 792. VISHT'ARA. 3. (சது.) A receptacle, கொள்கலம்.

விட்டாற்றி, s. Rest, repose, as இளைப்பாற்றி; [ex விடு et ஆற்றி.]

விட்டி-விஷ்டி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To evacuate the stomach, மலங்கழிக்க; [ex விட்டை.]

விட்டில், s. A locust, வெட்டுக்கிளி. 2. [com. விட்டி.] A small winged insect, destructive to rice; a grass hopper, விட்டிப்பூச்சி. 3. (சது.) A tree, பிராயமரம், Trophis.

•விட்டுணு—விட்ணு—விஷ்ணு, s. Vishnu one of the Hindu Triad.
விட்டுணுகரந்தை, s. A plant. See கரந்தை.
விட்டுணுகாந்தி, s. A medicinal plant, Evolvulus Alsinoides. 2. [for விட்ணு.] A law-book. See தருமநூல்.
விட்டுணுபதம், s. The milk-sea, பாற்கடல். 2. See வைகுந்தம். 3. The highest heaven, பரமபதம். [Sa. Vishnupata]
விட்டுணுபுராணம், s. The Vishnu Puranas. See புராணம், and வைணவம்
விட்டுணுவல்லபை, s. Lukshmi, இலக்குமி; [ex வல்லபை, wife.]

விட்டேறு—விட்டேறரணம், s. Any missile weapon, வேல். (சது.) [ex விடு et எறி.]

•விட்டை—விஷ்டை, s. The dung of apes, dogs and some other animals, இலத்தி. W. p. 792. VISHT'A.

விட்டோசை, s. Separating letters in speaking, as விட்டிசை.

விணிகை, s. A bodice for women's breasts, முலைக்கச்சு. (சது.)

விண், s. Air, atmosphere, sky, as ஆகாயம். 2. Cloud, மேகம். 3. Youthfulness, tenderness, இளமை. (சது.)
விண்டலம், s. The etherial space, ஆகாயம்; [ex தலம்.] (சது)
விண்ணவன், s. A celestial being, தேவன். 2. Argha, அருகன். (சது.)
விண்ணுலகம், s. The world of the celestials.
விண்ணுளார்—விண்ணோர், s. [pl.] The celestials.
விண்ணேறு, s. Thunder-bolt. See ஏறு.
விண்மணி, s. The sun. See நபோமணி.
விண்மண், s. Heaven and earth.
விண்மீன், s. A star. See மீன்.
விண்முழுதாளி, appel. n. Indra as ruler of the sky, இந்திரன். (சது.)
விண்வீழுங்கொள்ளி, s. A meteor.

விண்டல், s. The bambu, மூங்கில். (சது.) 2 See விசு for similar compounds.

விண்டு, s. Wind, காற்று. 2. A cloud, மேகம். 3. A name of Vishnu, விஷ்ணு. 4. A hill or mountain, மலை. 5. The bambu, மூங்கில். (சது) 6. A plant, தகரை, Cassia Tora. 7. Another plant, as விஷ்ணுகாந்தி.
விண்டுநதி, s. The celestial Ganges, as ஆகாயகங்கை. (சது.)
விண்டுபதம், s. [lit. the abode of wind.] The etherial region, ஆகாயம். (சது.)

விண்ணப்பம், s. A petition, மன்றாட்டு.
விண்ணப்பக்காரன், s. Petitioner.
விண்ணப்பஞ்செய்ய, inf. To petition.
விண்ணப்பபத்திரம், s. A written petition; an application.

விஞ்ஞாணம், s. Knowledge, wisdom, as விஞ்ஞானம். 2. Pretended speech, habit, &c., artfulness, சாதுரியம். 3. Fashion, taste, assumed qualities of a high character, நாகரீகம். (Colloq.)
விஞ்ஞாணக்காரன், s. An ostentatious person, one ludicrously witty.

விண்விண்ணென, inf. To sound tinklingly—as the strings of a lute, lyre, &c., இசைக்குறிப்பு. 2. [fig.] To pain accutely as a boil, குத்தலெடுக்க.
விரற்சுற்றுவிண்விண்ணென்றுதெறிக்கிறது. The whitlow is very painful.

வி[illegible]க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, v. a. [illegible]ake special mention of, to indicate s[illegible]thing to be noticed, விசேஷித்துரைக்க. 2. [illegible]nhance, to distinguish, மிகுக்க.

விதப்பு—விதப்பம், v. noun. Abundance, மிகுதி. (சது.)
விதப்புக்கிளவி, s. [in gram.] A qualifying term.

•விதண்டை, s. [improp. விதண்டா.] Disputation, controversy; investigation, வாசகுவாதம் (உபநி.) W. p. 766. VITAN'DA. 2. Hostility, பகை. (c.)
விதண்டாவாதம், s. A perverse dispute, wrangle.
விதண்டைக்காரன், s. An adversary.
விதண்டைக்குச்சொல்லுகிறது. Speaking invidiously.

விதப்பு, s. Haste, சீக்கிரம். 2. Cornice of a wall, மதிலுறுப்பு. (சது.) 3. See விதை, v.

•விதம், s. Form, manner, method, மாதிரி. 2. Kind, sort, இனம். 3. Way, rule, சூத்திரம். W. p. 770. VID'HA.
விதவிதப்பாயிருக்கிறது ......Being of various forms (R.)
விதந்தகறிசொருகறி. A curry of each kind.
அந்தவிதமாய்ச்செய். Follow that method.
பலவிதத்திலுமெனக்குத்தொந்தரவு..........I am troubled on all sides.
அதற்கொருவிதம்பண்ணு. Devise some expedient.

•விதரணம், s. A gift, donation, இகை. W. p. 766. VITARAN'A. 2. Capacity, cleverness, விவேகம்.
விதரணன், s. [com. விதரணபுருஷன்.] A generous man. 2 An eloquent man.

•விதரணை, s. Cleverness, eloquence, as விதரணம்.

•விதர்க்கம், s. Reasoning, discussion; doubt, conjecture; [ex வி et தர்க்கம்.] (Sa. Vitarka.)

•விதர்ப்பம், s. A district and city to the south-west of Bengal, the modern Baru-Nagpur, said to be the country of Bhima the father of தமயந்தி wife of Nala-Raja, ஓர்தேசம். W. p. 467. VIDARB'HA. —Note. The name is said to be given to this country because it produces no தர்ப்பை grass, in consequence of the curse of a Rishi whose son had died of a wound from a blade of the grass.

விதர்ப்பு, s. Fear, அச்சம். [also விதிர்ப்பு.] 2. Crowdiness, closeness, நெருக்கம். 3. Battle, fight, போர். 4. Victory, வெற்றி. (சது.)

•விதலம், s. A division of the lower world, the next below the earth. See கீழுலகு under உலகம் [Sa. Vitala.]

விதலை, s. Trembling, shivering, நடுக்கம். (சது.)
விதலையினேன். I who am trembling. (திருவா.)

விதவிதென, inf. To be luke-warm. See வெதவெதென.

•விதவை, s. A widow, அமங்கலி; [ex வி priv. et தவன், husband.] W. p. 770. VID'HAVA.
விதவாகாமி, s. One who has intercourse with a widow.

விதறு, v. [prop. பதறு.] To be overhasty. (R.)

•விதனம், s. Chagrin, sorrow, grief, வேதனை, 2. Repentance, compunction, தக்கதாபம். [Sa Vyathana, Vyad'hana.]—For the compounds, see விசனம்.

•விதாதா, s. A name of Brahma, பிரமா. 2. Argha, அருகன்; [ex வி et தாதா.] (சது.)

•விதாரணம், s. A rent, breach, cleft, பிளப்பு. W. p. 768. VIDARAN'A. 2. [in anat.] Fissures.

•விதானம், s. Manner, way, விதம். 2. Means, expedient, உபாயம். 3. A crowd, கூட்டம். W. p. 770. VID'HANA. 4. An awning, a canopy, மேற்கட்டி.

விதானி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To canopy, to spread cloths beneath the roof of a building, or the covering of a marriage saloon, for ornament.

விதானை, s. [prov.] A village officer; used in Jaffna.

•விதி, s. Fate, destiny, ஊழ். 2. Brahma, பிரமன். 3. Institute, precept, text, வேதவிதி. 4. Rule, principle, law, சூத்திரவிதி. 5. Felicity, prosperity, செல்வம். 6. Determination, decision, நியமனம். 7. Truth, உண்மை. 8. Knowledge, அறிவு 9. An act, an action, செய்தொழில். 10. A proposition, குணம். (சது.) W. p. 770. VIDHI.

விதிப்படி. According to the prescribed rule.

விதியர், s. Writers, accountants, கணக்கர். 2. Military men, தந்திரிகள். 3. Kings, ministers, மந்திரிகள். (சது.)

விதிவசம், s. Fate, destiny.

என்விதிவசமப்படியிருந்தது. It was my fate.

விழலுக்கிறைத்தநீரையிட்டிறைத்தேனென்விதிவசமே. It was my destiny I watered the beds [in vain]. (p.)

விதிவிலக்கு, v. noun. Law enjoining and law forbiding, செய்வதும்தவிர்வதும்.

தலையில்விதி, s. Fate [written] in the head. See under தலை.

விதி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To appoint, institute, enact, enjoin, நியமிக்க. 2. To make, create, உண்டாக்க. 3. To do, to act, to transact, செய்ய. 4. To say, to utter, to lay down rules, சொல்ல.

அவனுக்குமரணாக்கினைவிதிக்கப்பட்டது. He was condemned to death.

விதித்தோன், appel. n. God the Creator, கடவுள். 2. Brahma, பிரமன்.

விதிப்பு, v. noun. Act of instituting; appointment, நியமிக்கை

•விதிக்கு, s. A corner-region, கோணத்திசை; [ex வி, priv. et திக்கு] (சது)

•விதிதம், s. That which is known, manifest, clear, வெளிப்படை. W. p. 768. VIDITA.

•விதிபாதம், s. An astrological yoga. See யோகம்.

விதிப்பாள், s. Daughter, மகள். (சது.)

•விதியர், s. Writers, &c. See விதி.

விதியுளி, s. A burnt offering of the Hindus, ஓமம். 2. A messenger, தூதன். 3. Matrimony, விவாகம். (சது.)

•விதியை, s. The second phasis of the moon. See திதி. (சது.)

விதிர், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To fear, அஞ்ச. 2. To tremble, to quiver, நடுங்க; [ex Sa. Vyat'ha] 3. v. a. (கீதி.) To brandish—as a sword, வாள்வீச.

கைவிதிர்க்கிறது. Swinging the hands.

விதிர்ப்பு, v. noun. Trembling, shivering, நடுக்கம். 2. Tremor, fear. அச்சம்.

விதிர்விதிர்க்க, inf. To throb, to flutter, to quiver with intensity of feeling, to be tremulous, துடிதுடிக்க; [ex விதிர் reiterated.]

•விது, s. The moon, சந்திரன். 2. A name of Vishnu, விஷ்ணு. W. p. 770. VID'HU.

விதுக்கு, கிறேன், விதுக்கினேன், வேன், விதுக்க, v. n. To use obscene words. 2. To be in haste. 3. To be lascivious. (R.)

விதுக்குவிதுக்கெனல், v. noun. Fearing, apprehending an assault, or seizure; feeling the heart beat, பதைபதைப்பு.

விதுப்பு, v. noun. Haste, சீக்கிரம். 2. Desire, lust, ஆசை. (சது.) 3. Being sensually inclined, காமித்தல்.

•விதுடி—விதுஷி, s. [mas. and fem.] A learned person, அறிவாளி.

•விதுதமுகம், s. A gesture of the head and face expressive of disgust. See முகம், ம்

விதும்பு, கிறேன், விதும்பினேன், வேன், விதும்ப, v. n. To desire, to long for, hanker after. ஆசைப்பட. (குறள். 369.)

விதும்பல், v. noun. Longing, desiring.

•விதுரன், s. A learned man, அறிஞன். 2. The younger brother of Dhrutarashtra and counsellor of Duryodhana, திரிதராட்டிரன்தம்பி. W. p. 768. VIDURA. 3. A valiant man, திண்ணியன். 4. A widower, பெண்சாதி சாகக்கொடுத்தோன்; [ex Sa. Vidhura.]

•விதேகம், s. Emancipation from the body, either real or imaginary—as in trances, and ecstacies, தேகவிமோசனம்; [ex வி, priv. et தேகம், body.] 2. As விதேகை.

விதேகமுத்தி, s. Being delivered from bodies and births; attaining union with the deity. See முத்தி. (உபநி.)

•விதேகை, s. A district in the province of Behar, the ancient Mithila or modern Tirhut. See மிதிலை.

•விதேயன், s. One who is compliant, obedient, governable, சொற்படிகேட்போன். W. p. 771. VID'HEYA.

விதை, s. Seed of plants, வித்து. (c.) 2. Greatness, பெருமை. (சது.)

விதைகட்ட, inf. To lay up corn for seed. (தி. 528.)

விதைநெல்லெறிய, inf. To sow seed [grain].

விதைப்புனம், s. A spot of ground newly cultivated, as இதை. (சது.)

விதைமணி, s. Seed-corn.

விதை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To sow seed, வித்திட. 2. [fig.] To make public.

விதைப்பு, v. noun. Sowing.

விதைப்புக்காலம். The time of sowing.

•வித்தகம், s. Knowledge, ஞானம்.

வித்தகர், s. Artificers, கம்மாளர். 2. Messengers, தூதர். (சது.)

வித்தகன், s. A knowing one, ஞானி. 2. B'hairava, வைரவன். (சது.)

•வித்தம், s. Wealth, gold, பொன். 2. Wisdom, ஞானம். W. p. 767. VITTA.

வித்தன், s. A learned man, வித்துவான்.

வித்தரி, v. To expand. See விஸ்தரி.

•வித்தாரம், s. A kind of verse. See கவி. 2. An order of architecture. 3. Extension, &c. See விஸ்தாரம்.

வித்தாரக்காரன், s. A boaster.

வித்தாரம்பேச, inf. To make long speeches.

•வித்தியர், s. Artificers—as mechanics, goldsmiths, &c., கம்மாளர்; [ex வித்தை.]

•வித்தியாசம், s. [contrac. of வியத்தியாசம்.] Difference, contrariety, வேறுபாடு. (c.)

அதற்கிதுவித்தியாசம். This differs from that.

வித்தியாசமானவார்த்தைகள். Abusive language.

•வித்தியாதத்துவம், s. A department of knowledge. For this and other similar compounds, see under வித்தை.

•வித்தீரணம, s. Extensiveness, &c. See விஸ்தீரணம்.

வித்து, s. Seed, விதை. 2. Semen virile, விந்து. 3. Race, lineage, வமிசவழி. 4. [fig.] A cause. See under சம்பிரதாயம்.

வித்துப்பிரியமோ. Is grain scarce?

வித்திட, inf. To sow seed. (p.)

வித்துத்தெளிக்க, inf. To scatter seed.

வித்து, கிறேன், வித்தினேன், வேன், வித்த, v. a. To sow, விதைக்க. (p.)

•வித்துரு, s. Lightning, மின்னல். W. p. 769. VIDYUT.

•வித்துருமம், s. Coral, பவளம். W. p. 769. VIDRUMA.

•வித்துவான், s. A learned man. See under வித்தை.

•வித்துவேஷணம்—வித்துவேடணை, s. Excitement to enmity. See கருமம் and கலைஞானம்.

•வித்துவேஷம் — வித்துவேடம், s. Enmity, hatred, பகை; [ex வி et த்வேஷம்.] (சது.)

•வித்தை, s. [St. வித்யா.] Science, learning, sacred or profane, a branch of learning. கல்வி. W. p. 768. VIDYA. 2. Skill, ingenuity, dexterity. சாமர்த்தியம். 3. Arts displaying skill, சித்திரத்தொழில். 4. Magic, jugglery, கரடிவித்தை.—It retains its Sans. pronunciation in most of the compounds.

வித்தியாசாலை, s. A college.

வித்தியாதத்துவம், s. A department of knowledge, one of the தத்துவத்திரயம். According to the Saivas, it includes; 1. காலம், time; 2. நியதி, fate; 3. கலை, science; 4. வித்தை, arts; 5. இராகம், desire; 6. புருடன் or ஆன்மா, soul; 7. மாயை, matter.

வித்தியாதரர், s. [pl.] Demigods of a certain class. See பதினெண்கணம் under கணம்.

வித்தியாதரிசிகள், s. Inspectors of schools.

வித்தியாதானம், s. Charitable instruction of the ignorant, கல்விகற்பிக்கை

வித்தியாதேகம், s. Embodiment of knowledge.

வித்தியாபாரகன், s. One who has studied the arts and sciences.

வித்தியாப்பியாசம், s. Practice in science, experimental science, கல்விப்பயிற்சி. (Beschi.)

வித்தியாரம்பம், s. Beginning of knowledge. (சா.அ.)

வித்தியார்த்தி, s. A scholar, a student, கற்போன்.

வித்தியாலட்சுமி, s. See அஷ்டலட்சுமி.

வித்தியாவந்தன், s. A learned man.

வித்தியேசுரர்-வித்தீசுரர், s. [pl.] Lords of learning, learned men, poets, வித்தையாளர்.

வித்துவசிரோமணி, s. One trancendently eminent for learning.

வித்துவாமிசன் — வித்துவான், s. [pl. வித்துவாமிசர்கள் — வித்துவாங்கிசர்கள்.] A bard, a poet, a learned man, புலவன். 2. (St.) A sage, a theologian.

வித்துவானுக்கேதுபரதேசம். The learned man belongs to all countries.

வித்தைகள், மச. Fourteen branches of sacred science. These are the four Vedas, நாலுவேதம்; the six *Vadangos*, ஆறங்கம்; the *Mimamsa*, or theology, மீமாஞ்சை; the *Nyaya*, or logic, தருக்கம்; the *Puranas*, புராணம்; the *Smritis* or law, தருமநூல்.

வித்தைகற்பிக்க, inf. To teach an art or profession.

வித்தைகற்றுக்கொள்ள, inf. To learn an art.

வித்தைக்கவி, s. An artificially constructed poem.

வித்தைக்காரன், s. A juggler.

வித்தையாட, inf. [appel. n. வித்தையாடி.] To practise legerdemain.

வித்தைவிரும்பு. Desire science. (Avv.)

• விநதை, s. The mother of *Garuda*, கருடன்தாய். W. p. 771. VINATA. 2. A city, so called, விநதைநகர். See கோலம்.

• விநயம், s. Modesty, affability, humility, mildness, மரியாதை 2. Obeisance, decorum, deceney, வணக்கம். (சது.)

அத்தியந்தவிநயம். Extreme veneration.

விநயபயபக்தி, s. Reverential piety.

• விநாசம், s. Murder, கொலை. 2. Entire destruction; [ex வி et நாசம்] (சது)

விநாசகாலேவிபரீதபுத்தி. Bent on his own destruction by a strange fatality.

விநாசன், s. A murderer, a destroyer, அழிப்போன். (சது.)

• விநாடி, s. A minute portion of time, the sixtieth part of an Indian hour, காலநுட்பம்; [ex வி, priv. et நாடி.] [apocope of Sa. Vinad'ika. W. p. 772.]

• விநாயகன், s. Ganesa, விக்கினேசுரன். 2. Budd'ha, புத்தன். 3. Argha, அருகன். W. p. 772. VINAYAKA.

விநாயகசஷ்டி, s. The last day of Reading the history of Pulliar, being the sixth phasis of the moon in her increase in December. (Jaff.)

• விநீதன், s. One who has been chastised, punished, தண்டிக்கப்பட்டவன். 2. A humble, modest person, விநயமுள்ளவன். W. p. 773. VINEETA.

• விநோதம், s. Pastime, diversion, play, sport, பொழுதுபோக்கு. 2. Beauty, handsomeness, pomp, அழகு. [Sa Vinod'ha.]

அதுமெத்தவிநோதம். It is very handsome.

விநோதமாய்ச்செய்கிறவன், appel. n. One who makes curious things.

விநோதம்பண்ண, inf. To make a shew.

விநோதவித்தை, s. A magical art. (R.)

விநோதன்—விநோதி, s. One engaged in pastime.

• விந்தம், s. The *Vind'hya* mountains, as விந்தியம். 2. The lotus, as அரவிந்தம். 3. A number, ஓர்எண். (சது)

• விந்தர், s. Shepherds, cowherds, இடையர். (சது.)

• விந்தியம் — விந்தியகிரி, s. The mountainous range across India from Behar nearly to Guzerat dividing Hindustan proper from the Deccan, ஓர்கிரி. —*Note.* Until reduced by Agastya, it is said to have obstructed the course of the sun. [Sa. Vind'hya.]

• விந்து, s. A dot, point, புள்ளி. 2. A drop of water, நீர்த்துளி. W. p. 773. VINDU. 3. (c) Semen, சுக்கிலம். 4. [in astron.] The twenty-fourth part of a quadrant, *the tabular unit.* 5. One of the nine forms of Siva. See நவபேதம்.

விந்துவிழுகிறது. Semen emittere.

விந்தாக்கினி, s. The fire of sexual appetite, as one of the three-fold classes of elementary fire in the system. See தீ and அக்கினி.

விந்துநாதம், s. Male and female semen; union of male and female energies. (ஞானவா.)

விந்துவழி. By birth.

• விந்தை, s. Admiration, astonishment, ஆச்சரியம். 2. Spectacle, show, pomp, வேடிக்கை. 3. [Sa. Vid'hya.] A name of Durga, துர்க்கை. (சது.)

விந்தைவிந்தைவருணமாயிருக்கிறது. It is decorated with various colors.

விந்தைக்காரன், s. An artist. (R.)

விந்தையடிக்க, inf. To do wonderful things.

விந்தையாயிருக்க, inf. To be elegant, curious

விந்தைவிந்தையாய்ப்பாட, inf. To sing melodiously.

விபகரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. [also விவகரி] To litigate, to carry on a lawsuit, வழக்குப்பேச.

• விபகலனம் — விபகலிதம், s. [also விவகலிதம்.] Subtraction, கழிப்பு.

• விபகாரம், s. A lawsuit. 2. Usage, &c. See விவகாரம். (நி. 150.)

• விபக்கம்—விபட்சம், s. [in log.] An unnatural simile, a negative proposition. 2. The opposite side or party. See பக்கம். [Sa. Vipaksha.]

நீபட்சமோவிபட்சமோ. Are you for or against the cause?

விபக்கன்—விபட்சன், s. An adversary, an enemy, பகைவன். (சது)

• விபசாரம், s. [contrac. of வியபிசாரம்.] Incontinence, unchastity, fornication, adultery, வேசித்தனம். (c.)

விபசாரக்கள்ளன் — விபசாரன், s. An adulterer.

விபசாரம்பண்ண, inf. To commit adultery.

விபசாரி, s. [fem.] An adulteress.

• விபஞ்சி—விபஞ்சிகம், s. A lute, வீணை. W. p. 774. VIPANJI, VIPANJIKA.

• விபணி, s. A shop, கடை. 2. A market-street, a place where things are sold, கடைவீதி. [Sa. Vipan'i]

• விபதம், s. A bad road, கெடுவழி; [ex வி et பதம்.] W. p. 774. VIPAT'HA.

• விபத்தம், s. Scarcity, famine, பஞ்சம்; [ex விபத்து.] (சது.)

• விபத்தன், s. One who is separated, வேறுபட்டோன்; [ex Sa. Vib'hakta, separated.]

• விபத்தி, s. Case in grammar, declension, வேற்றுமை. W. p. 777. VIB'HAKTI. 2. Affliction, distress, as விபத்து. 3. A fault, குற்றம். (சது.)

• விபத்து, s. Affliction, suffering, calamity, adversity, misfortune, ஆபத்து. W. p. 774. VIPAD.

விபத்துக்காலம், s. Time of scarcity, distress, a crisis, dilemma.

• விபரம், s. Amplification, narration, &c. See விவரம்.

• விபரீதம், s. Strangeness, uncommonness, excessiveness, அதிசயம். 2. Discordance, contrariety, perversity, வேறுபாடு. (தத்.) [Sa Viparíta.]

விபரீதம்பிறந்தது. An adverse event has arisen.

விபரீதஅர்த்தம், s. A strange meaning.

விபரீதகாலம், s. An adverse time.

விபரீதபுத்தி, s. Incongruity, hetrogeniousness.

• விபலம், s. Fruitlessness, unprofitableness, பயனின்மை; [ex வி, priv. et பலம்]

• விபவ, s. The second year of the Hindu cycle as A. D. 1868, ஓர்வருஷம்.

• விபவம், s. Happiness, prosperity, வாழ்வு. 2. Riches, wealth, செல்வம். 3. Majesty, highness, மகத்துவம். W. p. 777. VIB'HAVA.

• விபன்னன், s. A man in adversity, மெலிந்தோன்; [ex Sa. Vipanna, misfortune.]

• விபாகம், s. Felicity, செல்வம்; [ex வி et பாகம்.] 2. Opportunity, பக்குவம். 3. Diversity, change, வேறுபாடு. [Sa. Vipaka.]

விபாகரன் — விபாவசன், s. The sun, சூரியன். 2. Fire, the god of fire, தீக்கடவுள். W. p. 777. VIB'HAKARA, VIBAVASU.

• விபாதம், s. Dawn, day-break, உதயகாலம். [So. Vib'hata.]

• விபாவரி, s. Night, இராத்திரி. W. p. 777. VIB'HAVAREE.

• விபாவனை, s. Examination, ஆராய்வு. 2. A figure in rhetoric. See அலங்காரம். [Sa. Vib'hávana.]

• விபினம், s. Wilderness, jungle, desert, காடு. W. p. 775. VIPINA.

• விபீஷணன்—விபீடணன், s. [lit. one exciting fear.] A younger brother of Ravana, இராவணன்தம்பி.

•விபீதகம், s. A tree, Terminalia Belerica, தான்றிமரம். [Sa. Vibhitaka.]

•விபு, s. The Supreme Being as omnipresent and eternal, கடவுள். 2. A lord, a master, எசமானன். W. p. 777. Vib'hu.

விபுத்துவம், s. Illimitable bulkiness as distinct from அணுத்துவம்.

•விபுணன், s. One who excels, நிபுணன்.

•விபுதர், s. Learned men, அறிஞர். 2. Sages, men of great wisdom, மிக்கற்றோர். 3. Celestials, வானோர்; [ex வி et புதர்.] [Sa. Vibhud'ha.]

•விபுலம், s. Breadth, expanse, width, அகலம். 2. Wide, expanded space, விரிவு; [ex Sa. Vipula.] 3. Earth, பூமி. 4. Greatness, eminence, பெருமை. (சது.)

•விபுலை, s. The earth, as விபுலம், பூமி.

•விபூஷணம்—விபூடணம், s. Ornament, decoration, ஆபரணம்; [ex வி et பூஷணம்.] (சது.)

•விபூதி, s. Ashes of cow-dung smeared by Saivas, திருநீறு. (c.) 2. Superhuman power, consisting of eight faculties attributed to Siva, அணிமாமுதலியஅஷ்டசித்தி. [See சித்தி.] 3. Fault, குற்றம். 4. Violence, கொடுமை. 5. Felicity, prosperity, செல்வம்; [ex வி et பூதி.] 6. Greatness, பெருமை. W. p. 778. Vib'huti.

விபூதிகுழைக்க, inf. To mix sacred ashes. See குழை, v.

விபூதிப்போட, inf. To throw sacred ashes upon a possessed person.

விபூதிமந்திரிக்க—விபூதியோத, inf. To consecrate sacred ashes, by incantations, for the expulsion of disease, of a demon, &c.

விபூதியிட — விபூதிபூச, inf. To rub one's self with sacred ashes.

அவனெற்றியிலேவிபூதியிட்டான். He put sacred ashes on his forehead, i. e. deceived him—used by the Vishnuvas.

•விப்பிரமம், s. Playfulness of lovers, மோகலீலை. 2. Love quarrels, மோகப்பிணக்கு. 3. Giddiness, confusion, as பிரமை. [Sa. Vib'hrama]

•விப்பிரயோகம், s. Separation, absence, separation of lovers, தலைவன்றலைவிப்பிரிவு. 2. One of the பஞ்சபாணவஸ்தை; [ex வி, priv. et பிர and யோகம், union.] W. p. 776. Viprayoga.

•விப்பிரலம்பம், s. Separation of lovers, as விப்பிரயோகம். [Sa. Vipralamb'ha.]

•விப்பிரன், s. Brahman, பிராமணன். [Sa. Vipra.]

விப்பிரபுத்திமெபுத்தி. The wit of a brahman comes afterwards.

•விப்பிலவம், s. Irregular war, rapine, calamities of a country. See நாட்டெக்குற்றம். [Sa. Viplava.]

•விப்புருதி, s. An eating sore, a cancer, carcinoma, an abscess, commonly விப்புருதிக்கட்டி.—It is of four kinds, ஓடுவிப்புருதி, a running cancer; கல்விப்புருதி, a hard stone-like-sore; கர்ப்பவிப்புருதி, a disease in the womb, causing sterility; சந்துவிப்புருதி, a cancer on the hips.

•விமதன், s. An enemy, an adversary, பகைவன்; [ex வி, priv. et மதம், consent.] W. p. 778. Vimata.

•விமரிசம்— விமரிசனம்-விமரிசை, s. Inquiry, investigation, proving by inquiry or experiment, ஆராய்வு. W. p. 778. Vimarsa. 2. The task of a scholar after கேள்வி; and this being completed he must begin with பாவனை. [நன்னூல் பாயி.] 3. Genius, wit; cleverness, நுட்பம். (p.)

•விமர்த்தனம், s. Grinding, or triturating perfumes, அரைக்கை; [ex வி et மர்த்தனம்.] (சது.)

•விமலம், s. Holiness, absence of impurity, பரிசுத்தம்; [ex வி, priv. et மலம், dirt.] 2. One of the Saiva Agamas. See சிவாகமம்.

விமலன், s. An epithet of deity, applied especially to Argha and Siva, கடவுள். [Sa. Vimala.]

விமலாகாசம், s. Etherial space. See சிதாகாசம். (உபநி.)

விமலி, s. Sarasvati, சரசுவதி. (சது.)

விமலை, s. Parvati, பார்வதி. 2. Durga, துர்க்கை. 3. Lukshmi, இலக்குமி. (சது.)

•விமார்க்கம், s. A bad course, ill-behavior, immorality, துன்னடை; [ex வி, priv. et மார்க்கம்.] 2. Broom, broom-stick, விளக்குமாறு. W. p. 779. Vimarga.

•விமார்த்தம், s. Half the duration of a lunar eclipse.

•விமானம், s. A self-moving chariot, or car, of the gods, திவ்வியரதம். 2 A shrine, தேவர்கோயில். 3. The world of the celestials, தேவலோகம். 4. The fourth lunar mansion, உரோகிணிநாள். 5. A house seven stories in height, எழுகெழுமெத்தை. (சது.)

•விமோசனம், s. Relinquishment, expiation, abandonment. See மோசனம்; [ex வி et மோசனம்.]

பாவவிமோசனம்பண்ணுகிறது........Blotting out sins.

•விம்ஸகம், s. Twenty collectively, or an aggregate of twenty, இருபதுகூடியது. W. p. 758. Vimsaka.

சட்விம்ஸகம், s. An aggregate of twenty-six, இருபத்தாறு.

சதுர்விம்ஸகம், s. An aggregate of twenty-four, இருபத்திநாலு.

சதுர்விம்ஸகஸ்துலதேகம். The visible body which has twenty-four properties.

பஞ்சவிம்ஸகம், s. An aggregate of twenty-five, இருபத்தைந்து.

பஞ்சவிம்ஸகன், s. The life, சீவன்.

•விம்ஸதி, s. Twenty, a score.

•விம்பம், s. Form, figure, image, shape, உருவம். 2. Light, splendor, ஒளி. 3. [also பிம்பம்.] The disk of the sun and moon, சந்திரசூரியவிம்பம். 4. Shadow, reflection, பிரதிவிம்பம். W. p. 779. Vimba. 5. A plant, Bryonia grandis, L., its stalk and fruit, கொவ்வைக்கொடி. 6. A kind of arsenic, சாலக்பாஷாணம் and பலண்டுரெகபாஷாணம். 7. One of the Saiva Agamas. See சிவாகமம்.

•விம்பிகை, s. A plant or creeper, called கொவ்வைக்கொடி. (சது)

விம்பி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To be reflected, as an image, சாயைதோன்ற. (உபநி.)

விம்மிதம், s. The body, உடல். 2. Fear, அச்சம். 3. Admiration, அதிசயம். (சது.)

விம்மு, கிறேன், விம்மினேன், வேன், விம்ம, v. n. To swell, grow hard, enlarge—as a limb compressed with a ligature, இறுகிப்பூரிக்க. 2. To cry, to sob, as a child, தேம்பியழ. 3. To extend, to expand, increase, அதிகரிக்க. 4. To sound, ஒலிக்க. 5. To rejoice, சந்தோஷிக்க. (உபநி-ராமா.)

விம்மியஸ்தனம். A breast full of milk.

விம்மினபூ, s. An opening flower.

விம்மல், v. noun. Weeping. 2. Sounding. 3. Being puffed up.

•விய, s. The twentieth year of the Hindu cycle corresponding to A. D. 1886, ஓர்வருஷம்.

•வியக்கம், s. Greatness, பெருமை; [ex வியம்.] (சது.)

விய, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, v. n. and v. a. To esteem, நன்குமதிக்க. 2. To show wonder, to be captivated or delighted with, அதிசயிக்க. (சீவ.) 3. To praise, to extol, துதிக்க. 4. To exaggerate, to color, to make fair or plausible, பாராட்ட.

வியப்பு, v. noun. Admiration, amazement, surprize, அதிசயம்.

•வியங்கம், s. A natural fault or spot. 2. The stain of birth, பிறவிமறு. W. p. 813. Vyanga.

•வியங்கியம், s. [com. வெங்கியம்.] Irony, sarcasm, குற்றவார்த்தை.

•வியங்குலம், s. The sixtieth part of an inch. [Sa. Vyangula]

வியங்கோள், s. That part of a verb which answers to the Optative Mood, a respectful mode—as கற்க்கசடற, may you learn without defect, ஐம்பான்மூவிடத்தும்வருமேவல்; [ex வியம் et கோள்.]

•வியஞ்சகம், s. Pantomime in dancing, அபிநயம், [ex Vyanjaka.]

•வியஞ்சனம், s. A sign, a mark, a signal, அடையாளம். 2. A consonant, ஒற்றெழுத்து. 3. [com. வெஞ்சனம்.] Sauce, condiment, any thing to give a relish to food. [Sa. Vyanjana.]

•வியட்டி — வியஷ்டி, s. [in philo.] Separation, development—oppos. to சமட்டி.

வியட்டிரூபம், s. The visible form of things in nature, ஸ்தூலரூபம்.

•வியதிரேகம், s. [also வெதிரேகம்.] Difference, விகற்பம். 2. A figure in Rhetoric. W. p. 814. Vyatireka. 3. The negative form of expression, எதிர்மறை.

•வியத்தம்—வியக்தம், s. [neg. அவ்வியத்தம்.] That which is manifest, வெளிப்படை. (p.)

•வியத்திகை, s. Greatness, excellence, பெருமை. (சது.)

•வியத்தியாசம், s. Difference, commonly, வித்தியாசம். 2. Removing from one place to another. W. p. 814. Vyatyasa.

•வியந்தரம், s. Devil, பிசாசம். (சது.)

•வியபிசாரம், s. [com. விபசாரம்.] Doing what is prohibited, *hence* adultery, fornication. W. p. 815. VYAB'HICHARA.

வியபிசாரி, s. A prostitute, as விபசாரி. (பஞ்.)

வியப்பிக்க, inf. To cause admiration, to fascinate, to captivate, அதிசயிப்பிக்க. (தி.)

வியம், s. The imperative, ஏவல். (p.)

•வியம், s. Greatness, பெருமை. 2. Breadth, அகலம் 3. A body, உடல். 4. A bird, பறவை. (சது.)

வியநெறி, s. The main street, the highway, பெரும்பாதை. (p.)

வியர், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To sweat, to perspire. *commonly,* வேர்க்க. 2. To be angry or provoked, சினங்கொள்ள.

வியர்ப்பு, v. noun. Anger, கோபம். 2. wrath, சினம். 3. As வேர்வை. (சது.)

வியர்வு—வியர்வை, v. noun. [com. வேர்வை.] Sweat, perspiration.

•வியர்த்தம், s. Uselessness, vanity, வீண்; [ex வி, priv, et அர்த்தம்.] W. p. 815. VYART'HA.

வியர்த்தமாய்ப்போயிற்று. It became useless.

வியர்த்தமானவேலை. A useless business.

•வியலிகை, s. Greatness, பெருமை. (சது)

வியல், s. Breadth, அகலம். 2. Forest, jungle, காடு. 3. Greatness, பெருமை. 4. Expansion, extension, விரிவு. (சது.)

வியலிடம், s. Breadth, அகலிடம். (p.)

•வியவகாரம், s. [com. விவகாரம்.] Municipal law, jurisprudence, முறைமை. 2. A law-suit, வழக்கு. W. p. 816. VYAVAHARA.

வியவன், s. A traveller, வழிச்செல்வோன். 2. A valiant man, திண்ணியன். 3. One in authority, a commander, ஏவுவான்; [ex வியம், body and greatness.] (சது.)

வியன், s. Vastness, greatness, expansion, பெருமை. [poet. form of வியம்.] (சது.) 2. Oddness, ஒற்றை. (சங்.) 3. [vul. வேன்.] Excess, abundance, அதிகம்.

வியனுலகம், s. The celestial world, தேவலோகம். (சது.)

வியன்கோல், s. A heavy club.

வியன்சங்கலிதம், s. The sum of odd terms in any series—For வியன்சமன்சங்கலிதம்—வியன்வியன்சங்கலிதம், see சங்கலிதம்.

வியன்சமன், s. Comparison of things, தாரதம்மியம்.

வியன்சமன்பார்க்கிறது......Examining the properties of persons or things, looking after equalities and inequalities.

•வியாகரணம், s. Grammar, philology, one of the sixty-four கலைஞானம், இலக்கணசாத்திரம். W. p. 817. VYAKARAN'A.

வியாகன், s. [prov.] A name of Subraman'ya, சுப்பிரமணியன்.

•வியாகாதம், s. Impediment, obstacle, hindrance, இடையூறு. 2. Destruction, அழிவு. 3. An astronomical yoga. See யோகம். W. p 818. VYAG'HATA.

•வியாகாரம், s. Ungracefulness, deformity, அவலட்சணம்; [ex வி, priv. et ஆகாரம், form.] 2. Sound, சத்தம்.

•வியாகிருதி, s. A mystical phrase. See மகாவியாகிருதி. W. p 820. VYAHRUTI.

•வியாகுலம், s. [also ஆகுலம்.] Confusion, derangement, கலக்கம். 2. Sorrow, sadness, grief, துக்கம். (c.) W. p. 818. VYAKULA.

வியாகுலி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To be sorry, grieved, துக்கப்பட. (பஞ்.)

•வியாக்கியாதா, s. As வியாக்கியானன்.

•வியாக்கியானம், s. Commentary, exposition, annotation, உரை. 2. [fig.] Contradiction. [Sa. Vyak'hyana.]

என்சொல்லுக்கெதிராகவியாக்கியானஞ்சொல்லாதே..... Contradict me not. (Beschi.)

வியாக்கியானம்பண்ண, inf. To explain, interpret, expound.

வியாக்கியானன்—வியாக்கியானி—வியாக்கியாதா, s. Commentator, an expositor.

•வியாக்கிரம், s. A tiger, புலி. 2. [in combin.] Best, excellent, சிறந்த. 3. Superiority, மேன்மை. W. p. 818. VYAGHRA.

வியாக்கிராசனம், s. A tiger's skin for a seat, புலித்தோலாசனம்.

•வியாசம், s. Extension, diffusion, விரிவு. 2. Alledged cause, நிமித்தம். 3. Discrimination, பகுத்தறிவு. 4. Comparison, simile, உவமை. 5. A work on Hindu law by *Vyasa.* See தருமநூல். 6. Tricks, treachery, artifice, தந்திரம். 7. (colloq.) On account of, sake, முகாந்தரம்.

வியாசன், s. [com. வேதவியாசன்.] The sage *Vyasa,* compiler of the Vedas, and founder of the Vedantic philosophy, வாதராயணன். W. p. 820. VYASA.

•வியாச்சியம், s. A dispute, difference, strife, law-suit, discord, வழக்கு. (c.)

வியாச்சியக்காரன், s. A claimant.

வியாச்சியந்தொடுக்க, inf. To prosecute

வியாச்சியப்பட்டுக்கொள்ள, inf. To dispute about some claim.

•வியாதம், s. Change, alteration, வேறுபாடு. (சது.)

•வியாதன், s. Vyasa, as வியாசன். 2. A famous hunter, துர்வேடன். W. p. 818. VYAD'HA.

•வியாதாகாரம், s. Alleviating grief. See தயாவிருத்தி.

•வியாதி, s. Disease, malady, sickness, distemper, நோய். (c.) [Sa. Vyad'hi]

பாதிமுற்றினால்வியாதி. Too much thought brings disease.

வியாதிக்காரன்—வியாதிஸ்தன்—வியாதியஸ்தன், s. A sick man.

வியாதிசாந்தி, s. A propitiatory ceremony for the removal of disease. 2. See under சாந்தி.

வியாதிபரீட்சை, s. Ascertaining diseases.

